Sept & Oct 1984

Tamil Arasu

தமிழரசு

Y211mN84
N84.9
85 456


-9-1984 75 காசு.
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி - ஆவணி 1
துணை ஆணையர், (தொழில்
2 I செப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

இந்த இதழுடன்
இலவச இணைப்பு

**எல்லாரும் எல்லாம் பெற...**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் விடுதலைநாள் விழாவில்
ஆற்றிய உரை




அரசு ஊழியர்கள் ஒய்வு பெறும்போதோ அல்லது பணிக்காலத்தில் இறந்துவிட்டாலோ ரூ. 10,000/- அளிக்கப்படுவது போன்று, வவசாயிகள், கட்டடத் தொழிலாளர்கள், சுமை தூக்குவோர், வண்டி இழுப்போர், சலவைத் தொழிலாளர், முடி திருத்துவோர் போன்ற தொழிலாளர்களிடமிருந்து மாதச் சந்தா பெற்று ரூ. 10,000/- உதவித் தொகை அளிக்கப்படும்.

தற்போது காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைத்து முதியோருக்கும் ஏழை விதவைத் தாய்மார்களுக்கும் உடல் ஊனமுற்றோருக்கும் ஒய்வூதியம் வழங்கப்படும்.

தாய், தந்தையர் இல்லாத ஏழைக் குழந்தைகளைப் பேணுவதற்கு ஆங்காங்கு பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்படும்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள அனைத்து மக்களுக்கும் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும்.

கிராமங்களில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குடிநீர்த் திட்டத்தின்கீழ் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படும்.

இந்த ஆண்டு 50,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

தற்போது கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் இதுவரை 1.59 லட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இனி அவை மேலும் விரிவாக்கப்படும்.

தற்போது குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் மாதம் ரூ. 2.50 வீதம் மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இனி இணைப்புத் தரும் முன்பாக ஆரம்பக் கட்டணமாகிய ரூ. 10/- மட்டும் செலுத்தினால் போதும். மாதாந்தரக் கட்டணம் வசூலிக்கப்படாமல் இலவசமாக மின்சாரம் வழங்கப்படும். மேலும் இத்திட்டம் எல்லாக் குடிசைகளுக்கும் விரிவாக்கப்படும்.

ஏற்கெனவே நிலுவையிலுள்ள சிறு விவசாயிகளினுடைய கூட்டுறவுக் கடன்களை அரசு தள்ளுபடி செய்துள்ளது. இனி அனைத்து விவசாயிகள் செலுத்தவேண்டிய நீண்டகாலக் கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.




இனி, 1000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக்கடை என்ற முறையில் கூடுதலாக நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும்.

கிராம மக்களுக்குப் பயன்படும் வகையில் இனி எல்லாக் கிராமங்களுக்கும் ரூ. 3.33 கோடி செலவில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

**15.8.1984 அன்று சென்னை கோட்டையில் கொடியேற்று விழாவின்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகள்.**

# காடுகள் இல்லையேல் வாழ்வு இல்லை

வளரும் தமிழகம்

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்
திரு இராம. வீரப்பன்



காடுகள் இல்லையேல் வாழ்வு இல்லை.. ஆம். . நம் வாழ்வுக்குக் காடுகள் இன்றியமையாத தேவை.

மனித உடலுக்கு அங்கங்கள் இருப்பதைப் போலவே ஒவ்வொரு நாட்டிற்கும் சில முக்கியமான அங்கங்கள் உள்ளன. அவைகளில் படை, மக்கள், உணவு, அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு உறுப்புகளையும் பெற்றிருப்பவன் நாட்டை ஆளும் அரசர்களுள் தலைவனாகக் கருதப்படுவான் என்னும் கருத்தில்,

> ''படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண்
> உடையான் அரசருள் ஏறு'' [ஆறும்

என்று பொதுமறை தந்த திருவள்ளுவர் கூறுகிறார். அவற்றில் அரண் என்பதற்கு விளக்கம் கூறும்போது

> ''மணிநீரும் மண்ணும் மலையும் அணி
> காடும் உடையது அரண்'' [நிழல்

என்று திருவள்ளுவப் பெருந்தகை தெளிவாக்குகிறார்..அதாவது, நீலமணி போன்ற தெளிந்த நீரும், மண்ணும், மலையும் அழகுற அமைந்து நிழல் தரும் அடர்ந்த காடும், நாட்டின் அரணாக அமையவேண்டும் என்பதாகும். இதில் காடுகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, தனியாக 'காடு' என்று மட்டும் குறிப்பிடாமல் அணி நிழல் காடு' என்று கூறுகிறார். காடு என்று பெயரளவில் புதர்கள் போல் இருந்தால் போதாது, நிழல்தரும் மரங்கள் அடர்ந்த காடுகளே ஒரு நாட்டிற்கு அரணாக விளங்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றார்.

இந்தக் குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள், 'பாதுகாவல்' என்பதைப் பகைநாட்டு அரசனிடமிருந்து வரும்போர் ஆபத்திலிருந்து காப்பவை என்று மட்டுமே பொருள் கூறுகிறார்கள். உண்மையில், பாதுகாவல் என்பது ஒரு நாட்டிற்கு எதிராக நடத்தப்படும் போரிலிருந்து காப்பது மட்டுமின்றி இன்றும், வெள்ளம், வறட்சி, புயல், பஞ்சம், நோய் போன்ற பெரும் சேதங்களை விளைவிக்கின்ற இயற்கையின் தாக்குதல்களில் இருந்தும் மக்களைப் பாதுகாப்பதற்கும் 'பாதுகாவல்' என்றும் பொருள் கொள்ள வேண்டும். இதிலிருந்து அடர்ந்த மரங்களைக் கொண்ட காடுகள் ஒரு நாட்டின் இன்றியமையாத பாதுகாப்பு என்பதை நாம் எல்லோரும் உணர வேண்டும் என்பதை வள்ளுவப் பெருந்தகை எடுத்துக் காட்டுகிறார்.

இதை உணர்ந்து தான் நமது முன்னோர்கள் மரங்களை வணக்கத்திற்குரிய சிறந்த பொருளாக மதித்துக் காப்பாற்றினார்கள். தற்காலத்தில் பேசப்படும் தன்மையில் விஞ்ஞான வியாக்கியானங்களைப் பேசினார்களா என்பது நமக்குத்தெரியவில்லை. ஆனால் நடைமுறையில் அவர்கள் விஞ்ஞான அறிவுடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதனால்தான் எவை எவை உடலுக்கு நல்லது, எவை எவை பண்பாட்டிற்கு உரியது, எவை எவை நாட்டிற்கும் மக்கள் சமுதாயத்திற்கும் நன்மை பயக்கும் அடித்தளமானவை என்பதை அறிவியல் பூர்வமாகக் கண்டறிவதிலும், உணர்ந்து கொள்வதிலும் அவர்கள் சிறந்து விளங்கி இருக்கிறார்கள்.

காடுகளை அழிப்பதை, மரங்களை வெட்டிச் சாய்ப்பதை மிகவும் ஒழுக்கக் கேடான செய்கை என்று சங்க இலக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன; காடுகளில் விறகுகளைத் திருடும் மனிதர்களை மக்கள்




என்று சொல்லாமல் 'மாக்கள்' அதாவது 'விலங்குகள்' என்றே கூறுகின்றன. 'விறகு ஒய் மாக்கள்' என்று புறநானூற்றுப் பாடல் ஒன்று அவர்களைக் குறிப்பிடுகிறது. மேலும், காடுகள் அதாவது மரங்களை உயிருடைய ஜீவனாக உணர்ந்து, காட்டை அழிக்கும் செயலை 'காடு கொன்று' என்று குறிப்பிடுகின்றார்கள். ''கொன்று'' என்ற சொல்லைப்பயன்படுத்துவதிலிருந்து பண்டைத் தமிழ்ச் சமுதாயம் மனிதர்களைப் போன்று மரங்களும் உயிர் உள்ளவை என்ற விஞ்ஞான அறிவைப் பெற்று, மனிதர்களையும், மரங்களையும் சமமாகக் கருதிய அறிவார்ந்த அடிப்படையையும் நம்மால் உணர முடிகிறது.

காடுகளைத் தங்கள் வாழ்வுடன் இணைத்துப் போற்றி வாழ்ந்த நம் மக்கள், இன்று காடுகளை ஏதோ அறுவடைக்குரிய வயல்கள் என்பதாகக் கருதிக் கொண்டு விறகிற்காகவும், மரத்திற்காகவும், தனி நபர்களின் கொள்ளை லாபத்திற்காகவும் வெட்டி அழிக்கின்ற கொடுஞ்செயலைப் புரிகின்றனர். தம் வீட்டுக் கூரையைப் பிடுங்கி அடுப்பெரிப்பது போல் இந்தக் கொடுமைகள் நடத்தப்படுகின்றன.

இத்துடன் மக்கட் தொகைப் பெருக்கத்தினால் மரங்களின் பல்வேறு வகைத் தேவைகளால் காடுகளுக்குப் பெரும் அழிவுகள் ஏற்பட்டுவிட்டன. புதிய புதிய தொழிற்சாலைகள் காடுகளை நம்பி ஏற்படத் தொடங்கியுள்ளன. பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் காடுகளை அண்டி இருக்குமாறு வகுக்கப்பட்டன. மரங்களை மூலப்பொருளாகக் கொண்ட தொழிற்சாலைகள், நீர்-மின்சாரத் திட்டங்கள், அணைக்கட்டுகள் போன்றவை காடுகளின் பாதிப்பிற்குக் காரணமாக விளங்கின. இத்திட்டங்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அவசியமாகி விட்டன. என்றாலும் காடுகளும் வேண்டும், பொருளாதார முன்னேற்றமும் வேண்டும் என்னும் இக்கட்டான நிலைமை நமக்கு ஏற்பட்டுள்ளது. ஆடு, புலி, புல் மூன்றையும் ஒன்றாக எடுத்துச் செல்ல வேண்டும், ஆனால் அவை ஒன்றை ஒன்று அழிக்காதவாறு தடுத்துக் கொள்ளவும் வேண்டும் என்பது போன்ற ஒரு சிக்கலான நிலை இன்று நமக்கு ஏற்பட்டுள்ளது. நமது தமிழ்நாட்டில் உள்ள பிரச்சினை இன்னும் சிக்கலானது.

ஒரு நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதி காடுகளாக இருக்க வேண்டும் என்பது இயற்கை கூறும் நியதி. இந்த நியதியை, இந்தியாவைப் போன்ற வெப்ப மண்டல நிலப் பகுதியில் உள்ள நாடுகள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் நில வல்லுநர்கள் கூறுகிறார்கள். இந்தியாவில், காடுகள் இருக்கின்ற நில விகிதம் 23.4.% ஆகும். ஆனால், தமிழ்நாட்டில் இருக்கின்ற காடுகளின் நிலப் பரப்போ மிகக் குறைவாக - பதினாறே (16) சதவிகிதமாகத்தான் இருக்கின்றது. குறைந்த அளவிலான இந்த 16 சதவிகிதமும் நிழல் தரும் மரங்கள் அடர்ந்த காடுகள்ன் பரப்பு என்றும் கூற இயலாது.

இவ்வளவு குறைந்த நிலப்பரப்பாகக் காடு இருப்பதால் நாம் நமது காடுகளை முழுக்க முழுக்கப் பாதுகாவல் காடுகளாகவே நிர்வகிக்க வேண்டும். எனவே தான் இந்த நிலைமையைக் கருதி, தமிழக அரசு காடுகளின் பாதுகாப்புக்கு முதலிடம் தந்து, அந்தப் பாதுகாப்புக்கு ஊறு விளையாத வகையில் குறைந்த அளவில் மட்டுமே வனச் செல்வங்களைப் பெற்று மக்களுக்கு வழங்கி வருகிறது.



தமிழகத்தைப் பொறுத்த வரையில், வனச் செல்வத்தைப் பெருக்கவும், பாதுகாக்கவுமான பணிகளில் கடந்த ஆண்டு செய்த செலவு 26 கோடி ரூபாயாகும். ஆனால் பெறப்பட்ட வருவாய்,ரூபாய் 18 கோடிதான். தமிழகக் காடுகளைப் பாதுகாக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள தமிழக அரசு தமிழ்நாட்டில் அமலில் இருந்து வரும் 1882ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டம் போன்ற பல்வேறு சட்டங்களுக்குத் தீவிரமான சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு, கடுமையாகக் காடுகளைப் பாதுகாக்க வழி செய்தது. அரசின் இந்த வனப்பாதுகாவல் கொள்கைக்கு எதிரான வழக்குகளாயினும் நடவடிக்கைகளாயினும், அவை எங்கிருந்து தோன்றினாலும், எவ்வளவு சக்தி படைத்திருந்தாலும், அவைகள் யாவையும் எதிர்கொண்டு காடுகளைப் பாதுகாக்க அரசு உறுதி பூண்டிருக்கிறது.

காடுகள் இயற்கைத்தாய் மனித குலத்திற்கு வழங்கிய அழியாத செல்வங்கள்...அந்தச் செல்வங்கள் எல்லாத் தலைமுறைகட்கும் உரிமையானவை...அழியாத இந்த மூலதனச் செல்வத்தை அழித்து இந்தத் தலைமுறைக்கு மட்டும் வருவாய் சேர்க்கும் போக்கை நமது அரசு ஏற்கவில்லை. உதாரணமாக 1976-77ல், 37,665 கனமீட்டர் மரங்கள் விற்பனைக்காகக் காட்டிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டன. தமிழக அரசின் சீரிய வனப்பாதுகாவல் கொள்கையினால் கடந்த ஆண்டு வெறும் 6400 கனமீட்டர் மரங்கள் மட்டுமே காட்டிலிருந்து பெறப்பட்டன. இந்த மரங்கள் கூட, வன வளர்ச்சித்திட்டப் பணிகளின்போதும்இயற்கையாகவே கிடைத்த மரங்களே ஆகும். மேலும் விறகுகளுக்காகக் காடுகளைஅழிக்கும் கொடிய நடைமுறை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் முழுவதுமாக நிறுத்தப்பட்டது. வனச்செல்வத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்க்கும் இந்தச் சீரிய பணியில் நமது அரசு லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பதில்லை. மேலெழுந்த வாரியாகக் காணப்படும் நஷ்டம் என்பது கூட, நெடுங்கால மதிப்பீட்டின்படி,சமுதாயத்திற்கு வரக்கூடியமாபெரும் ஆதாயம் என்பதை உணர்ந்து தமிழக அரசு செயல்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள தமிழக அரசு பதவி ஏற்பதற்கு முன்,ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 11.98 கோடி மட்டுமே வன வளர்ச்சிக்காகச் செலவிடப்பட்டது. ஆனால், இந்த அரசில், 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ரூ. 59.45 கோடியாக உயர்த்தப்பட்டது. வருகின்ற 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, ஏறக்குறைய ரூ. 125 கோடி அளவில் மாபெரும் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது என்பதிலிருந்து இந்த அரசின் சீரிய வனப் பாதுகாவல் கொள்கை நன்கு புலப்படும்.

வனச் செல்வப் பெருக்கத்திற்கு, தற்போதுள்ள அரசுக் காடுகள் மட்டும் போதாது என்பதைக் கருதி, ஊர்ப்புறங்களிலுள்ள புறம்போக்கு, தரிசு நிலங்களையும் பயன்படுத்திக்கொண்டு சுமார் ரூ. 106 கோடி மதிப்பில் சமுதாயக் காடுகள் திட்டம் ஒன்றை இந்த அரசு தயாரித்தது.

இத்திட்டத்தின் முதற் படியாக ,ஐந்தாண்டு அளவில் செயல்படுத்துவதற்கு, ஸ்வீடன் நாட்டு உதவியோடு, சுமார் ரூ. 45 கோடி மதிப்பீட்டில் ஒரு மாபெரும் வனத் திட்டத்தை 1981ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தினால் தமிழ்நாட்டின் கிராமங்கள் யாவும் பயன்பெறும் வகையில் செயல்முறைகள் வகுக்கப் பட்டிருக்கின்றன; கிராமங்களில் ஏழைகளும், நலிந்தோரும், கூடுதலான பயன் பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இதுகாறும், ஊர்ப்புறங்களில் உருவாக்கப்பட்டிருக்கும் மரத்தோட்டங்களின் பரப்பு 2 லட்சத்து 30 ஆயிரம் ஹெக்டேராகும். மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில், 'சமுதாயக் காடுகள்' திட்டத்தின் கீழ் 4 கோடியே 18 லட்சம் மரக்கன்றுகள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அவற்றில் 1 கோடியே 17 லட்சம் மரக்கன்றுகள் இலவசமாகவே எளிய மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற சிறப்புப் பணிகளின் பயன்களை கிராமப்புறத்து ஏழை,எளிய, பொருளாதாரத்தில் நலிந்த மக்களிடம் சென்று அடையுமாறு திட்டம் செயல்படுகிறது.

மேலும், தமிழக அரசு நிர்வாகத் துறையிலும் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து வனத்துறை நிர்வாகத்திற்கு வலுவூட்டிக் கொண்டிருக்கிறது.

1977-ல் 5880 ஆக இருந்த வனப்பணியாளர்களின் எண்ணிக்கை 1984ல் கணக்கிடும் போது 8,485ஆக உயர்ந்து, வனத்துறைக்கு வலிமையை ஊட்டியுள்ளது தெளிவாகும்.

இந்தப் பணிகளை மக்களின் வாழ்க்கைக்குச் செய்கின்ற காலங்காலமாகப் பயன்படப் போகின்ற ஒரு நீண்டகால சேவை எனக் கருதிக்கொண்டு தமிழக அரசு ஒரு புதிய வனக் கொள்கையை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது. அரசின் பணி மட்டும் போதுமானதாகாது. மக்கள் ஒவ்வொருவரும் காடுகளைக் காப்பதிலும், போற்றி வளர்ப்பதிலும் தமது மனத்தை ஈடுபடுத்த வேண்டும். இந்த மனப் போக்கு ஒரு தேசிய சேவையாகக் கருதப்பட வேண்டும். வருங்கால சந்ததிகளுக்காக இக்காலமக்கள் ஆற்ற வேண்டிய கடமையாகக் கொள்ளப்பட வேண்டும்.

மனித சமுதாய வாழ்க்கை, காடுகளின் வலிமையை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த - வாழ்க்கைக்கு ஆதாரமான - காடுகளை என்றென்றும் போற்றிக் காப்போமாக!

**[19-8-84-ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரை]**





# சென்னை மாநகரில் விடுதலை நாள் விழா

விடுதலை நாள்விழா சிறப்பு நிகழ்ச்சி சென்னை-கலைவாணர் அரங்கத்தில் 15.8.'84 புதனன்று மாலை 6 மணியளவில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

விடுதலை நாள் விழா காரணமாகக் கலைவாணர் அரங்கம் வண்ணவிளக்குச் சரங்களால் வகையுற அழகுபடுத்தப்பட்டிருந்



தது. பாலசுப்பிரமணியம் குழுவினரின் நாயன இசையோடு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

மக்கள் தொடர்பு அதிகாரி திரு கோவிந்தராஜன் முன்மொழிய, உதவி மக்கள் தொடர்பதிகாரி திரு சச்சிதானந்தம் வழிமொழிய மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி விழாத் தலைமை ஏற்றார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார். அவர் தமது உரையில், ''இன்று இந்த முப்பத்தெட்டாவது விடுதலை நாள் விழா தமிழ்நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்திய விடுதலைக்காகத் தியாகம் செய்தவர்களை - போராட்டங்களிலே ஈடுபட்டுப் பெருமை கொண்டவர்களை நினைவு கூரும் வகை



யிலேயே அவர்களுக்கெல்லாம் மரியாதை செலுத்தும் வகையிலேயே இந்த விழா தமிழக அரசால் எடுக்கப்படுகிறது'' என்றார்.

விழாத் தலைமையேற்று மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டு நின்ற இந்த பாரததேசந் தன்னை வாழ்விக்க வந்தவர்



காந்தியடிகள். மூத்த தலைவர்களெல்லாம் அவர் தலைமையின் கீழ் ஒன்றுபட்டுப் போராடியதாலேயே இந்தியா விடுதலை பெற்றது.

''உண்ண உணவு, இருக்க இடம், உடுத்த உடை இந்த நாட்டு மக்களுக்கெல்லாம் கிடைக்க மிகவும் பாடுபட்டார் மகாத்மா காந்தியடிகள். அவரது அந்தக்குறிக்கோளை நிறைவேற்ற அரும்பாடு பட்டு வருகிறார் நமது முதல்வர் புரட்சித் தலைவர். அத்தகைய உயரிய நோக்கத்தோடு தமிழக அரசு தீட்டும் சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், முதியோர்க்கு உணவு வழங்கும் திட்டம் போன்றவை மற்ற மாநிலங்களாலும் மத்திய அரசாலும் போற்றிப்புகழப்பட்டு வருகின்றன. பெற்ற சுதந்தரத்தைப் பேணிக் காப்போம்''

—இவ்வாறு மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் பேசினார்.

அதன்பின் - அண்ணா நகர் கீழ்ப்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள பெயின் மேநிலைப்பள்ளி,



அரசினர் தோட்டத்திலுள்ள ஜவகர் பால பவன் பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினர்.

இதைத் தொடர்ந்து திரு டி கே. எஸ்.கலைவாணன் குழுவினர் நடத்திய இசை நிகழ்ச்சியில் தேசியகவி பாரதியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் பாடல்கள் பாங்குறப் பாடப்பட்டன.

விழா முடிவில் செய்தித்துறை துணை இயக்குநர் திரு-வெ.நாமதேவன் நன்றியுரையாற்றினார். அவர் பேசுகையில் செய்தித்துறை நடத்திடும்இந்தவிழா நிகழ்ச்சிகள் சிறப்புற அமைய வருகைதந்த, ஒத்துழைத்த அனைவர்க்கும் நன்றி தெரிவித்ததோடு-''காந்தியார் விரும்பிச் செய்த கதர் இயக்கம் இந்த அரசில் மேம்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது'' என்றும் கூறினார். **—பீ. எல். ஆர்.**




**உங்கள் இல்லத்தில் குடும்பத்தாருடன் கண்டுகளிக்க இவற்றிற்காகும் செலவோ 90 பைசாதான். நம்பமுடியவில்லையோ? ஆனால் இது உண்மை!**

உங்கள் வீட்டில் நல்லதொரு டிவியிருந்தால் போதும். பொழுதுபோக்கிற்கு அதை விட சிறந்த, சிக்கனமான வழி ஏதுமில்லை. ஒரு 60 வாட் பல்பிற்கு ஆகும் மின்சாரச் செலவும், டிவிக்கு ஆகும் மின்சாரச் செலவும் கிட்டத்தட்ட ஒன்றே. நீங்கள் தினமும் எல்லா நிகழ்ச்சிகளையும் பார்த்தாலும் அதற்கான மின்சார செலவு வாரத்திற்கு 90 பைசாதான். விஞ்ஞானம் நமக்களித்துள்ள சிறந்த அன்பளிப்பு தொலைக்காட்சி. இன்றே உங்கள் குடும்பத்திற்கு ஒரு டிவியை வாங்குங்கள்.

இப்போது, நீங்கள் எந்த டிவியையும் வாங்கும் முன், அது நம்பகமானதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள். அதில் தெள்ளத்தெளிவான படத்தோற்றத்திற்கு நீங்கள் தனி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட அதில் துல்லியமாகத் தெரிய வேண்டும். அதாவது சாலிடெரில் தெரிவதுபோல்! அணுகிடுவீர் சாலிடெர் வைத்திருப்போரை. அறிந்திடுவீர் அதன் தம் சிறப்பம்சங்களை. அப்போது தெரியும் உங்களுக்கு எதனால் சாலிடெரே அனைவராலும் விரும்பப்படும் டிவி என்று! சாலிடெர் எகானமி மாடெல்களிலும் கூட டீலக்ஸ் அம்சங்களான விசிஆர் (VCR) மற்றும் பிக்அப் கனெக்ஷன்கள் அமைந்துள்ளன.

விற்பனைக்கு விடுப்போர்:
டிஜிவிஷன் எலக்ட்ரானிக்ஸ் (பி) லிட்.,
44, சி.பி. ராமசாமி ஐயர் சாலை
அபிராமபுரம், சென்னை 600 018.




**சாலிடெர்**
-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

ஆலைகள் வைப்போம்
கல்விச்சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம், தலை
சாயுதல் செய்யோம்'







சம் கைத்தறிகள் உள்ளன. இக் கைத்தறிகளில் இதுவரை ஏறத்தாழ இரண்டு இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

கைத்தறியாளர்களுக்கெனத் தமிழ்நாடு அரசு வழங்கிவரும் பல்வேறு வளர்ச்சித்திட்டங்களின் மூலம் 1985ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஏறத்தாழ 4 இலட்சம்

**திட்டமும் செலவும்:**

ஊத்தங்கரையில் நிறுவப்பட்டு வரும் தருமபுரி மாவட்ட கூட்-டுறவு நூற்பாலை மொத்தம் 25,520 கதிர்களுடன் இயங்கிடும் வகையில் உருவாக்கப்பட்டு வருகின்றது.

ாவட்டக் கூட்டுறவு
நிறுவப்படுவதற்குத்
ரூ. 730 இலட்
மதிப்பிடப்பட்டுள்
விவரம் பின்

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| மேம் ...கள் | 4.00 |
| | 93.00 |
| ...ற்றும் ...ங்கள் | 450.00 |
| | 97.00 |
| ...னைடிச் | 35.00 |
| ...தைத் ... வரம்புத் தொகை | 35.00 |
| இதர செலவினங்கள் | 16.00 |
| ஆக மொத்தம் | 730.00 |

மேற்கூறிய திட்ட மதிப்பீட்டுக்கான தொகை கீழ்க்கண்ட வகையில் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக ரூ. 365 இலட்சங்கள் கடனாக அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் ரூ. 300- இலட்சங்களுக்கு 12.5 சதவிகித வட்டியும் எஞ்சியுள்ள ரூ. 65 இலட்சங்களுக்கு 14 சதவிகித வட்டியும் இந்த நிறுவனத்திற்கு நூற்பாலை வழங்கும். மேற்கூறிய கடன் தொகையை 1986ஆம் ஆண்டிலிருந்து 16 அரையாண்டுத் தவணைகளாக நூற்பாலை, கடன் வழங்கிய நிறுவனத்திற்குத் திருப்பி வழங்கும்.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மாநில அரசுக்குத் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பங்குகள் எடுத்துக் கொள்வதற்காக ரூ. 151.35 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டு பங்குத்தொகையாக நூற்பாலையில் பெறப்பட்டுள்ளது.

மாநில அரசின் பங்குத்தொகையாக ரூ. 159 இலட்சங்கள் நூற்பாலையில் பெறப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ. 33.75 இலட்சங்கள் 225 ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கான சிறப்புத் திட்டத்தின் அடிப்படையிலும் மற்றும் ரூ. 33.75 இலட்சங்கள் 225 தாயகம் திரும்பிய இலங்கை அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் சிறப்புத்திட்டத்தின் அடிப்படையிலும் பெறப்பட்டுள்ளது.

பின் தங்கிய பகுதிகளில் நூற்பாலை நிறுவப்படுவதால் கிப்காட் மானியமாக ரூ. 15 இலட்சங்கள் நூற்பாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

திட்டத்திற்கான எஞ்சியுள்ள தொகை கூட்டுறவு இயக்கத்தில் உள்ள பல்வேறு சங்கங்களின் மூலம் பங்குத் தொகையாகப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**[illegible] :**

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் பெருமுயிலுள்ள நானே செயலால் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையின் பெருந்தலைவராகவும் உள்ளேன். நிர்வாகக் குழுவில் கைத்தறி மற்றும்



துணி நூல் துறை இயக்குநர், மறுவாழ்வுத்துறை இயக்குநர், தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தனி அலுவலர், தருமபுரி கூட்டுறவு மத்திய வங்கியின் தனி அலுவலர், சேலம் கூட்டுறவு நூற்பாலையின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரும் கைத்தறித்துணி நூல் துறையைச் சார்ந்த துணை இயக்குநர் மேலாண்மை இயக்குநராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட 'பணிக்குழு' (Works Committee) மற்றும்' இயந்திரங்கள் கொள்முதல் குழு (Central Machinery Purchase Committee) ஆகிய இரண்டு குழுக்களும் ஆலைக் கட்டடத் தொடர்பான ஒப்பந்தக்காரர்களைத் தேர்வு செய்விதிலும் தரமான இயந்திரங்களைக் கொள்முதல் செய்வதிலும் நிர்வாகக் குழுவினருக்கு உறுதுணையாக இருந்து வருகின்றன.

இந்தியாவிலேயே உருவாக்கப்படும் இயந்திரங்களையே பெரும்பாலும் நூற்பாலை கொள்முதல் செய்வதெனத் திட்டமிடப்பட்டு இயந்திரங்கள் காலதாமதமின்றி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும், இயந்திரங்கள் பொருத்தும் பணிகளும் அல்லும்பகலும் நடைபெற்று வருகின்றன.

**மின்சாரம்:**

நூற்பாலைக்குத் தற்காலிகமின் இணைப்புப் பெறப்பட்டுள்ளது. நூற்பாலைக்குத் தேவையான 1000 கே.வி.ஏ. உயர் அழுத்த மின் இணைப்பிற்கு அனுமதி பெறப்பட்டு அத் தொடர்பான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மின்சாரப் பற்றாக்குறைக் காலங்களில் உற்பத்தி பாதிக்கபடாமலிருக்க 310, 320 625 கே.வி.ஏ. உற்பத்தித் திற[illegible] உற்பத்தி இயந்திரங்களும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

ஆலைக்கட்டடம், பருத்திக் கிடங்கு, தொழிலாளர் ஓய்வுக் கூடம், நிர்வாக அலுவலகம்,



சிற்றுண்டிச்சாலை இன்னபிற கட்டடப்பணிகளைப் பொதுப் பணித்துறையைச் சார்ந்த ஓர் உதவி செயற்பொறியாளரும், நூற்பாலையில் நியமனம் செய்யப்பட்டுள்ள 3 கட்டட வேலை உதவியாளர்களும் கட்டட நிர்மாணப்பணிகளை மேற்பார்வையிட்டு வருகின்றனர். இவற்றில், ஆலைக்கட்டடம், பருத்திக் கிடங்கு, தொழிலாளர் ஓய்வுக் கூடம் ஆகிய பணிகள் முடிவுற்றுள்ளன. நிர்வாக அலுவலகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றின் கட்டுமானப்பணிகள் முடிவடையும் தருவாயிலுள்ளன.

ஆலைக்காக, ஊத்தங்கரையில் அரசினர் நிர்ணயித்த விலையில் 26.21 ஏக்கர் பட்டா நிலமும் அதை அடுத்துள்ள 8 ஏக்கர் புறம்போக்கு நிலமும் பெறப்பட்டுள்ளன.

நூற்பாலை முழு உற்பத்தித் திறனை அடையும்போது நாள் ஒன்றுக்கு 65,000 லிட்டர்கள் நீர் ஆலைக்குத் தேவைப்படுகின்றது.

ஆலை நிலத்தில் தோண்டப்பட்டுள்ள ஒரு குழாய்க்கிணற்றில் நாள் ஒன்றுக்கு 32,650 லிட்டர் நீர் கிடைக்கின்றது. இதைத் தவிர ஆலைக்கு அருகில் நாள் ஒன்றுக்கு 1,18,778 லிட்டர் நீர் வழங்கும் ஆழ்குழாய்க்கிணறு ஒன்றும் அமைக்கப்படவிருக்கின்றது.

**வேலைவாய்ப்பு:**

ஆலையில் 704 தொழிலாளர்களுக்கும், 35 தொழில் நுட்ப மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கும் நேரடி வேலை வாய்ப்பு அளிக்க வாய்ப்புள்ளது. மேலும், இவ்வாலையின் மூலம் மறைமுகமாக 1300 பேருக்கு வேலை கிடைக்கவும் வாய்ப்புள்ளது.

704 தொழிலாளர்களில் 225 தாயகம் திரும்பிய இலங்கை அகதிகளும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வரும் 225 ஆதிதிராவிடர்களும் சிறப்புத் திட்டத்தின்கீழ் வேலையில் அமர்த்தப்பட உள்ளனர். எஞ்சியுள்ள தொழிலாளர்கள் தருமபுரி மாவட்ட வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பிற வகுப்பினரிடையே தேர்வு செய்யப்படுகின்றனர்.

அனுமதிக்கப்பட்ட 58 பிரேம்கள் அடங்கிய 25.520 கதிர்களை நிறுவுகின்ற பணியில் முதற்கட்ட வெள்ளோட்டமாக 10 பிரேம்கள் அடங்கிய 4,400 கதிர்கள் இங்கே இயக்கப்படவிருக்கின்றன. எஞ்சியுள்ள இயந்திரங்கள் 1984-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதிக்குள் முழுமையாக நிறுவப்பட்டு இந்த ஆண்டு நூற்பாலை வணிக ரீதியான உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த மாதத்திலிருந்து சேலம் கூட்டுறவு நூற்பாலையில், தாயகம் திரும்பிய 75 இலங்கை அகதிகள் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைப் பணிக்கெனத் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர். தருமபுரி மாவட்ட வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் முதற்கட்டமாக வறுமைக் கோட்டின்கீழ் வாழும் 165 ஆதிதிராவிடர்களும் 70 பிற வகுப்பினரும் தேர்வுக் குழுவினரால் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி பெற நூற்பாலையில் பணியில் சேர்ந்துள்ளனர். 1984 ஆகஸ்டு 15 ஆம் தேதிக்குள் சிறப்புத் திட்டத்தின்கீழ் எஞ்சியுள்ள 150 தாயகம் திரும்பிய இலங்கை அகதிகள் பயிற்சிக்கான பணியில் சேர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாலை முழுத்திறனில், செயல்படத் துவங்கும்பொழுது தருமபுரி, மாவட்டத்தின் சுமார் 13,000 ஏக்கர்களில் விளையும் மொத்தப் பருத்தியையும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு உள்ளதால், பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு இவ்வாலை ஒரு வரப்பிரசாதமே!

எனவே, வேலைவாய்ப்பு மற்றும் பருத்தி விவசாயிகளுக்கு ஓர் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்க இருக்கின்ற இக்கூட்டுறவு நூற்பாலை பின்தங்கிய ஆனால் 'வளர்ந்து வரும் தருமபுரிக்கு வளம் சேர்க்க வருகிறது' என்பதில் ஐயமில்லை!

# கோதுமையின் பெருமை கூறும் கோலமிகு கண்காட்சி

ஆகஸ்ட் மாதம் 10, 11, 12 ஆகிய மூன்று நாட்களிலும் சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள ராஜாஜி மண்டபத்தை நோக்கி ஆடவரும் பெண்டிரும், குழந்தைகளும் ஆவலுடன் சென்று கொண்டிருந்தார்கள். கோதுமை உணவுப் பொருள் கண்காட்சிதான் அத்தனைபேரையும் ஈர்த்துக் கொண்டிருந்தது.

Eat Wheat - 84 என்னும் வாசகம் பொறிக்கப்பெற்ற பேனர் - ஒரு பர்லாங்குக்கு அப்பால் இருந்து பார்ப்பவர்க்கும் தெளிவாகத் தெரிந்தது.

மண்டபத்தின் நாற்புறத்திலுமுள்ள வெளிச் சுற்றுப் பகுதிகளில் பல்வேறு அரங்குகள் பாங்குற அமைந்திருந்தன. ரொட்டி தயாரிப்பு நிறுவனங்கள், மைதா, ஆட்டா மாவு, சேமியா, நூடில் தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவை அரங்குகளை அமைந்திருந்தன.

கோதுமையினால் உருவாக்கப்படும் உணவுப் பொருள்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தவும் அவற்றை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தவும் - மத்திய அரசு-மாநில அரசுகளுடன் - உருளை மாவு ஆலைகள், உணவுவிடுதிகள் சங்கம், பேக்கரி சங்கம் போன்ற பல்வேறு அமைப்புகள் இணைந்து அந்தக் கண்காட்சியை ஏற்படுத்தியிருந்தன.

ஓர் அரங்கைச் சுற்றி மக்கள் கூட்டம் ஏராளமாக இருந்தது. காரணம் அங்கே ஒரு ரூபாய் விலையில் கோதுமைத் தோசை விற்கப்பட்டது. கோதுமை உப்புமாவும், கோதுமைப் பாயசமும் கிடைத்தது. ஒவ்வொன்றின் விலையும் ஒரு ரூபாய்தான்.

விதவிதமான பிஸ்கோத்துகள் கிரீம் பிஸ்கோத்துகள் - அருட் பிஸ்கோத்துக்கள், வகை வகையான கேக்குகள் - பிளம் கேக்குகள் இப்படிப் பலப்பல ஆயத்த உணவுப் பொருள்கள் ஒரு ரூபாய் முதல் பத்து ரூபாய் விலை வரை விற்பனை செய்யப்பட்டன.

இரண்டு அண்டுகள் கொண்ட ஒரு ரொட்டிப் பொட்டலம் 50 காசுக்குக் கிடைத்தது. ஒரு குடும்பத்தின் உறுப்பினர் அனைவருக்குமே பயன்படும் குடும்ப சைஸ் ரொட்டி - 800 கிராம் எடையுள்ளது - 3 ரூபாய் 70 காசுக்குக் கிடைத்தது.

—தமிழ்ப்பித்தன்

அரை கிலோ மைதா ரூ.1.25க்கும் ஒரு கிலோ சூஜி ரூ.2.50க்கும், ஒரு கிலோ ஆட்டா ரூ.2க்கும் கிடைத்தன. ஓர் அரங்கில் இந்த மூன்று பொருள்களையும் வாங்குபவர்களுக்கு இலவசமாக ஒரு துணிப்பையும் வழங்கப்பட்டது.

கோதுமையிலிருந்து, மைதா, ஆட்டா மாவுகள் எப்படித் தயாரிக்கப்படுகின்றன என்பதை மாதிரி இயந்திரத்தின் மூலம் ஓர் அரங்கில் விளக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஓர் அரங்கில் அமிர்தரசஸ் பொற்கோயில் காட்சி தந்தது. மற்றோர் அரங்கில் பகவான் கிருஷ்ணர் பார்த்தசாரதியாக அமர்ந்து கீதையை உபதேசித்துக் கொண்டிருந்தார். மற்றோர் அரங்கில் ஜீப் ஒன்று உலாச் செல்வதற்குத் தயாராக இருந்தது.

மற்றோர் அரங்கில் பீரங்கி ஒன்று யுத்தகளம் நோக்கிப் புறப்படுவதற்குத் துடித்துக்கொண்டிருந்தது. ரெடிமேட் சட்டை ஒன்று ஓர் அரங்கில் அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. வயலின், சிதார் போன்ற இசைக்கருவிகள் ஓர் அரங்கில் அழகாகக் கொலுவீற்றிருந்தன. மற்றோர் அரங்கில் படகுவீடு ஒன்று காட்சி அளித்தது.

இவை எல்லாம் கண்காட்சியில் எப்படி வந்தன என்ற சந்தேகம் தோன்றுகிறதல்லவா? இவை எல்லாம் மைதா மாவினாலும் - சர்க்கரை, யீஸ்ட் ஆகியவற்றினாலும் உருவாக்கப்பட்ட மாதிரி வடிவங்கள் ஆகும்.

கண்காட்சி நடைபெற்ற ராஜாஜி மண்டபத்தின் மாதிரி



தொடக்க விழா



நிறைவு விழா



வடிவத்தில் உருவாக்கப்பட்டிருந்த கேக் ஒன்றும் ஓர் அரங்கில் கம்பீரமாகக் காட்சி தந்தது.

மனிதர்களுக்கு மட்டுமல்ல, -நன்றியுள்ள பிராணி என்று புகழ்மாலை சூட்டப்படும் நாய் இனத்திற்குரிய பிஸ்கோத்துகளும் ஓர் அரங்கில் விற்கப்பட்டன. 200 கிராம், ரூ.6க்குக் கிடைத்தது..

சேமியா தயாரிப்பு நிறுவனத்தினர் தமது தயாரிப்பான சேமியாவைக் கொண்டு பாயசம் தயாரிப்பதை அவ்வப்போது செய்முறையாகக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள்.

கோதுமையின் பயன்களைப் பற்றியும் அதன் சிறப்புப் பற்றியும் குறிக்கப்பெற்ற பல்வேறு அட்டைகள் ஆங்காங்கே காட்சி அளித்தன. அவற்றைப் படித்து, மக்கள் வியப்படைந்தனர்;கோதுமையின் பெருமையை உணர்ந்து தங்களுக்குள் கலந்துரையாடல் நடத்திக் கொண்டனர்.

கில்டு ஆப் சர்வீஸ் என்னும் மகளிர் சேவை நிறுவனத்தார் பூரி-சப்பாத்தி-பான்பூரி ஆகியவற்றை உடனுக்குடன் தயாரித்து விற்பனை செய்து கொண்டிருந்தனர். அந்த இடத்தில் ஆடவரும் பெண்டிரும் பூரியை வாங்கிச் சாப்பிடுவதற்குக் கியூவில் நின்றது கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.

கண்காட்சி மட்டுமல்ல, கருத்தரங்கமும் நடைபெற்றது. கோதுமையின் பயன்கள் குறித்து கருத்தரங்கில் பேசப்பட்டது.

கோதுமை 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே உலகத்தில் பயிரிடப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவிலும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ருஷ்யா ஆகிய நாடுகளிலும் நமது இந்தியத் திருநாட்டில் பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் கோதுமை பயன்படுத்தப்படுகிறது.

கோதுமை தேக ஆரோக்கியம் அளிக்கும் தானியம் என்பதை மக்கள் வெகுகாலத்திற்கு முன்பே உணர்ந்திருந்தார்கள். தமிழகத்தைப் பொறுத்த அளவில் கோதுமை நீரிழிவு வியாதி உள்ளவர்கள் சாப்பிடுவதற்குரியது என்ற தவறான மனப்பான்மை ஏற்பட்டுள்ளது.

100 கிராம் கோதுமை மாவு 350 கிலோ கலோரி சக்தியினைத் தருகிறது. அரிசியில் கிடைக்கும் புரதச் சத்தைவிட கோதுமையில் உள்ள புரதச் சத்து அதிகம்.

அதுமட்டுமல்ல அரிசியை விட மலிவான விலையில் கோதுமை கிடைக்கிறது. 1970ஆம் ஆண்டில் இந்தியாவில் 23.3 மில்லியன் டன் கோதுமை தான் உற்பத்தியாகியது. 1984ல் 44.8 மில்லியன் டன்னாக அது உயர்ந்துள்ளது.

கோதுமை மாவில் 72 சதவிகிதம் மாவுச் சத்து உள்ளது. இரும்புச் சத்து- பாஸ்பரஸ் சத்தும் இதில் உள்ளன. கோதுமை - மைதா ஆகியவற்றில் செய்யப்படும் பிஸ்கோத்துக்கள் ஆறு மாதம் ஆனாலும் கெடுவதில்லை.

கோதுமை முதலில் கை அரைவை மூலம் அரைக்கப்பட்டு வந்தது. பின்னர் தண்ணீரால் இயங்கும் ஆலை மூலம் அரைக்கப்பட்டது. 19வது நூற்றாண்டின மத்தியில் உருளை ஆலை மூலம் அரைக்கப்பட்டது. இன்று நவீனமயமான உருளை ஆலைகளின் மூலம் பல்வேறு பகுதிகளாக அரைக்கப்படுகிறது. இதன் மூலம் மைதா, ஆட்டா போன்ற மாவுப் பொருள்கள் கிடைக்கின்றன.

வளர்ந்து வரும் நாட்டில் - நாகரிகமும் பழக்க வழக்கங்களும் எவ்வளவோ மாறிவருகின்றன. பருத்தி ஆடையை விட்டு விட்டு, டெரிகாட், டெர்லின் போன்ற ஆடைகளை அணியத் தொடங்கியுள்ளோம். இதே போலத்தான் உணவுப் பழக்கத்திலும் அரிசியையே நம்பிக் கொண்டிருக்காமல் கோதுமையையும் உண்ணப் பழகிக் கொள்ள வேண்டும்.

பல்லாண்டுகளுக்கு முன்னர், (1951) கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் தாம் நடத்திய 'ஐம்பதும் அறுபதும்' என்னும் நாடகத்தில் - உணவுப் பழக்கத்தை மாற்ற வேண்டும் என்பதை ஒரு காட்சியின் மூலம் எடுத்துரைத்ததை இங்கு நினைவு கூரலாம்.

அந்தக் காட்சி வருமாறு:

''நாடு சுதந்தரம் பெற்ற பின்னர்-சுபிட்சம் ஏற்படவில்லை என்பதைக், குடும்பத் தலைவி ஒருத்தி, காந்தி இயக்கத்தைச் சேர்ந்த பேச்சாளரான - தன் கணவரிடம் (என்.எஸ்.கே) சொல்வாள்.

''பாருங்க! இந்த ரேஷன் அரிசியிலெ எவ்வளவு கல்லு கெடக்குது தெரியுமா?''—குடும்பத் தலைவி கொதிப்புடன் கேட்பாள்.

''இந்தா பாரு! இட்டிலி தோசை - புட்டு, இடியாப்பம், கொழுக்கட்டை - உப்புமா, ஆப்பம், சீடை இப்படி எல்லாமே அரிசியிலேயே செய்து சாப்பிட்டுக்கிட்டிருந்தா அரிசியிலெ கல்லு என்ன, பாறையே வந்து விழும்'' என்று சொல்லி, 'உணவுக்கு அரிசியை மட்டும் நம்பிக் கொண்டிருக்கக் கூடாது; வேறு தானியத்தையும் ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும்,' என்பதை வலியுறுத்துவார்.

ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கோதுமை உணவுப் பொருள் கண்காட்சியைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களித்தனர். அவர்களில் நூற்றுக் கணக்கானவர்களாவது - கோதுமையின் பயனை உணர்ந்திருப்பார்கள் என்பது திண்ணம்.

ஆகஸ்ட் 10ஆம் நாளன்று-இந்தக் கண்காட்சியைத் தொடங்கி வைத்த மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர். திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள்,

"நாள்தோறும் மூன்று முறை அரிசி உணவையே உண்டு வருகிறோம். ஒரு முறையாவது கோதுமை உணவை உண்ணப் பழகிக் கொள்ள வேண்டும்.

''இது தேசியப் பிரச்சினை என்று கூடச் சொல்லலாம். ஏன் என்றால் சில நேரங்களில் வெள்ளம் வரலாம். அப்போது மாநிலத்

தில் விளையும் நெற்பயிருக்கு ஆபத்து வரலாம். அப்படிப்பட்ட சமயத்தில் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு மத்திய ,மாநில அரசுகளுக்கு உள்ளது. நாட்டின் பொருளாதார நிலையைச் சமாளிப்பதற்கு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பது போல-உணவுப் பிரச்சினையைச் சமாளிக்க - கோதுமையை உற்பத்தி செய்யவேண்டியுள்ளது.

''கோதுமை - விலை குறைவு, புரதச்சத்து நிறைந்தது-சங்கடம் வரும்போது சமாளிக்க உதவுவது.

''நமது நாட்டு மக்கள் மதக் கோட்பாடுகளில் நம்பிக்கை உடையவர்கள். முன்பெல்லாம் கிராமங்களில் குடுமிதான் வைத்திருப்பார்கள். தற்போது கிராப் வைக்கத் தொடங்கிவிட்டார்கள். வசதிக்கேற்ப - தேவைக்கேற்ப மாற்றிக் கொள்கிறார்கள். அது போல உணவு விஷயத்திலும் மாற்றிக் கொள்ள வேண்டும் மக்கள்! அந்தக் கருத்தை வலியுறுத்தும் பணியை நாம் செய்ய வேண்டும்'! என்று குறிப்பிட்டார்:

தொடக்க விழாவில், உணவுத் துறைச் செயலர் திரு யு.எஸ். நடராஜன், இ.ஆ.ப. நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் - நிர்வாக இயக்குநர் திரு என். கிருஷ்ணமூர்த்தி இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஆகஸ்ட் 12 மாலை 5 மணி அளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் பங்குபெற்ற மாண்புமிகு நிதி மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கோதுமையின் பயன்பாடு குறித்தும் பேருரை ஆற்றினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

''உணவை மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். உணவை எப்படிச் சாப்பிடவேண்டும் என்று விளக்கிக் காட்ட வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம்.

''குழந்தை - பிறந்த உடனே அதற்கு நாம் உணவு கொடுத்து விட முடியாது. 4 மாதம் 5 மாதத்தில் அதற்குப் பால் தந்து - எது பிடிக்கும், எது பிடிக்கவில்லை என்பதைஉணர்ந்து தாய், அதற்கு ஊட்டுவாள். குழந்தையின் 1½ வயதில் தான் அதற்கு விருப்பமானது எது என்பதைத் தாய் கண்டு பிடிப்பாள். அதைப் போல் நாட்டு மக்களுக்கு எது பிடிக்கும் என்பதைக் கண்டறிந்து செயலாற்ற வேண்டியது அரசின் கடமையாக உள்ளது.

"கோதுமையின் சிறப்பம்சங்கள் குறித்து, பெண்களிடம் அதிகம் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. நமது நாட்டில் சமையலறைப் பணிகள் முழுதும் பெண்களின் தலையில்தான் விழுந்துள்ளன. ஆகவே அவர்களிடம்தான் உணவுப் பழக்க மாறுதல் குறித்து நாம் வலியுறுத்திக் கூற வேண்டியுள்ளது.

"மகளிர் மன்றங்களில் பெண்கள் வீண் அரட்டையடிக்காமல் - கோதுமை உணவுத் தயாரிப்புக் குறித்துப் பேசலாம். செய்முறைகள் கூடக் காண்பிக்கலாம். செய்முறையின் திறமையில் தான் வெற்றியே கிட்டுகிறது.

''வெள்ளைக்காரன் ஆட்சியில் நமக்குபர்மாவில் இருந்தெல்லாம் அரிசி ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டது. இப்போது நாம் சுயதேவைப் பூர்த்தியை எய்தியுள்ளோம்.

''அரிசியையே நம்பிக்கொண்டிருக்காமல் - கோதுமையையும் பயன்படுத்தப் பழக வேண்டும். நான் கடந்த 25 ஆண்டுகளாகக் கோதுமை சாப்பிட்டு வருகிறேன் அதைச் சாப்பிடுவது சிரமமாக இல்லை. கோதுமைச் சோற்றில் சாம்பார் ஊற்றிக் கொள்ளலாம்; ரசம் ஊற்றிச் சாப்பிடலாம்; மோரைச் சேர்த்து உண்ணலாம். சுவையாகத்தான் இருக்கும்"!

நிறைவு விழாவில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு அ. பால்ராஜ் இ.ஆ.ப. பங்கேற்றார்.

"இந்தக் கண்காட்சியின் ஓர் அங்கமாக கோதுமை உணவுப் பொருள்கள் தயாரிப்புப் போட்டியும் நடத்தப்பட்டது. இல்லத்தரசிகள், கலந்து கொண்டனர். பிஸ்கோத்து தயாரிப்பு நிறுவனங்களும் பங்கு பெற்றன. அவர்களுக்குரிய பரிசுகளை மாண்புமிகு நாவலர் வழங்கினார். சிறந்த அரங்குகளுக்கும் பரிசுகள் வழங்கப் பெற்றன.

கோதுமை - நோயாளிக்குரிய உணவுப் பொருள் அல்ல! நோய் வராமல் பாதுகாப்பதற்குரிய உணவுக் கவசம்! ஆதிகச் சத்தில்லாத அரிசியை ஆசைக்காகவும் நாச்சுவைக்காகவும் பயன்படுத்துவதைவிட, சத்துமிக்க கோதுமையை உடல் நலத்துக்காகவும் - வளத்துக்காகவும் மன நிறைவுடன் பயன்படுத்தலாம் என்பதை Eat Wheat 84 கண்காட்சி-அனைவருக்கும் எடுத்துரைத்தது, போதித்தது என்று சொல்லலாம்.



...ந்தப் பெண்மணி மகப்பேறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

தாய் ஒவ்வொரு வினாடியும் குழந்தை பிறப்பதை ஆவலுடன் எதிர்பார்த்து வெளியில் காத்திருக்கிறார்.

மருத்துவர், செவிலியர் பரபரப்புடன் செயல்படுகின்றனர்.

ஒவ்வொருவர் முகத்தையும் அந்தத் தாய் ஏக்கப் பெருமூச்சுடன் பார்க்கிறார்.

உள்ளே இருந்து மருத்துவர் வெளியே வருகிறார். அவர் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. எப்படிச் சொல்வது என்று தயங்கித் தயங்கி..

பெண்ணுக்கும் ஏற்பட வேண்டாம். அவள் நினைவாக ஒரு மகப்பேறு மருத்துவமனை கட்ட வேண்டும். அதற்கு அவள் பெயர் இடவேண்டும். ஒவ்வொரு பெண்ணும் சுகப்பிரசவத்துடன் இல்லம் திரும்ப வேண்டும்''.

அந்த எண்ணம் செயல்வடிவம் பெற்றது. மருத்துவமனை உருவாயிற்று!

ஆம், சென்னை கீழ்ப்பாக்கத்தின் மேடவாக்கம் டேங்க் சாலையில் உள்ள ஏ.கே.சாமி நகரில் 4,700 சதுர அடி பரப்பில் இந்த மகப்பேறு மருத்துவமனைக் கட்டடம் கம்பீரமாகக் காட்சி தருகிறது. பெயர்: "அம்பாள் மகப்பேறு மற்றும் குழந்தை நல விடுதி''

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர்.சவுந்தரராசன் அவர்கள் மருத்துவமனையைத் திறந்து வைக்கிறார். அப்போது அவர் திருமதி பத்மாவதி அம்மையாரின் கொடை உள்ளத்துக்குப் புகழாரம் சூட்டுகிறார். சமுதாயத்தில் நிதி வசதி மிகுந்தவர் இதுபோல் நல்ல காரியங்கள் செய்ய முன்வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறார். அவர் பேசும்போது மேலும் தெரிவித்தார்:

''துப்புரவு செய்தல், சாலை போடுதல், மலேரியா ஒழிப்புப் பணி போன்றவற்றில் 13,000 பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு மாதச் சம்பளமே. தவிர, அரசு ஊழியர்களுக்குப்போல் சலுகைகள் இல்லை. ஆனால் தமி...

# மகள் நினைவாக ஒரு மருத்துவமனை



''என்னம்மா, என் மகளுக்குக் குழந்தை '' தாய் ஏக்கத்துடன் கேட்கிறார்.

''உங்கள் மகள் இறந்து விட்டாங்க!'' கவலையுடன் கூறிய மருத்துவர், சுதறித் துடித்து அழும் அன்னைக்கு ஆறுதல் கூறுகிறார். மற்றவர்களும் ஆறுதல்கள் சொல்கிறார்கள்.

ஒரே மகளின் பிரிவு,... உலகமே சூன்யமாகிவிட்ட உணர்வு.

அன்றே தன் டைரியில் அந்த அம்மையார் எழுதினார். அதாவது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு. . . .

''என் மகளுக்கு ஏற்பட்ட இந்த நிலைமை வேறு எந்தப்

திருமதி கே.பத்மாவதி அம்மாள் அவர்கள் இந்த மருத்துவமனையை, சென்னை மாநகராட்சிக்கு அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார். அவரது அருமை மகள்தான் மகப்பேற்றின்போது மரணமடைந்த திருமதி அம்பாள்.

இந்த மருத்துவமனையின் தொடக்க விழா 10:8.84 அன்று கோலாகலமாக நடந்தது. தன் மகளின் பிரிவு ஒரு பக்கம், மகள் பெயரில் மருத்துவமனை கட்டியாகிவிட்டது- ஏழைத் தாய்மார்கள் இதனால் பயன்பெறப் போகிறார்கள் என்ற மகிழ்ச்சி ஒரு பக்கம். இரு உணர்வுகளும் முகத்தில் கொப்பளிக்க மேடையில் அமர்ந்திருக்கிறார் திருமதி பத்மாவதி அம்மையார்.

ழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், அரசு அலுவலர்க்குரிய ஓய்வூதியம் போன்ற தகுதியைத் தந்துள்ளார்கள். இனி எல்லோருக்கும் கிடைக்கிற சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்கும்.''

சென்னை மாநகராட்சி ஆணையாளர் திருமதி சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப. சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. கி.சந்திரசூடன், இ.ஆ.ப. ஆகியோர் பேசுகையில், இந்த மருத்துவமனை மாநகராட்சியின் 42-வது மருத்துவமனையென்றும், எட்டுப் படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனை ரூ. 8 இலட்சம் மதிப்புடையது என்றும், கொசுத் தொல்லையைப் போக்க

மாநகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் தெரிவித்தனர்.

இந்த மகப்பேறு மருத்துவமனை மூலம் 38,39,40,41,70 மற்றும் 71-வது கோட்டங்களில் உள்ள 31 தெருக்களில் வசிக்கும் சுமார் 35 ஆயிரம் பொதுமக்கள் பயனடைவர். ஒரு மகப்பேறு மற்றும் குழந்தை நல விடுதி நடத்துவதற்காக ஆண்டு ஒன்றிற்கு மாநகராட்சி செலவிடும் தொகை சுமார் ரூ.2.10 இலட்சங்கள் ஆகும்.

முன்பேறு கால அறிவுரை வகுப்புகள் நடத்துதல், பிரசவம் பார்த்தல், பிரசவித்த தாய்மார்களின் நலன் பேணுதல், பயன்பெறுவோரின் இல்லங்களுக்குச் சென்று பார்வையிடுதல், குழந்தை நலம் பேணுதல் ஆகியவை மாநகராட்சி மகப்பேறு மற்றும் குழந்தை நல விடுதிகளின் பணிகளில் முக்கியமானவை ஆகும்.



திருமதி கே. பத்மாவதி அம்மாள்

இளம்பிள்ளைவாத நோய், சுக்குவான் இருமல், தொண்டை அடைப்பு, சளி ஆகியவை வராமல் தடுக்கும் பொருட்டு குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்தும், முத்தடுப்பு ஊசிகளும் போடப்படுகின்றன. கர்ப்பிணிப் பெண்களுக்கு ஜன்னி வராமல் தடுப்பதன் பொருட்டு டி.டி. தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன.

குழந்தை நலம் பேணுதல், சுகாதாரக் கல்வி, குடும்ப நலம் ஆகியவை குறித்து மாநகராட்சியின் மகப்பேறு மற்றும் குழந்தை நல விடுதிகளில் வகுப்புகள் நடத்தப்பெற்று, பொதுமக்கள் பயனடைந்து வருவது மற்றுமொரு முக்கியமான பணியாகும்.

பிரசவிக்கும் நிலையில் தாய்மார்களுக்கு ஏற்படுகின்ற மரணம் மற்றும் சிறு குழந்தைகள் அடையும் மரணம் ஆகியவற்றைக் குறைப்பதே மாநகராட்சியின் மகப்பேறு மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் குறிக்கோள் ஆகும். மேலும் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பொதுமக்கள் கடைப்பிடிக்கும்படிச் செய்து அவர்கள் நலமுடனும், வளமுடனும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ மாநகராட்சியின் மகப்பேறு மற்றும் குழந்தை நலத் திட்டம் உதவி புரிகிறது.

—பொ. மறைமலை

## காஞ்சியில் கண் சிகிச்சை முகாம்!



செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் கோட்டத்தைச் சார்ந்த பூவிருந்தவல்லி, குன்றத்தூர், திருப்பெரும்புதூர், வாலாசாபாத், உத்திரமேரூர், காஞ்சிபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பொதுமக்கள் பயன் பெறத்தக்க வகையில் 22.7.'84 முதல் 28.7.84 முடிய அரசு இலவச கண்சிகிச்சை முகாம் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது.

இம்முகாமில் எழும்பூர் அரசினர் கண் மருத்துவ நிபுணர் டாக்டர் குகானந்தன் தலைமையில் 7 டாக்டர்கள் கொண்ட குழுவால் 920 பேர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, 349 நபர்களுக்குப் புரை நீக்கம் செய்யப்பட்டது.

28.7.'84 அன்று காஞ்சிபுரத்தில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு பி. வெங்கடசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டி.ஆர். சீனுவாசன், ஐ.ஏ.எஸ். அவர்கள் கண் அறுவைச் சிகிச்சை பெற்ற 349 நபர்களுக்கு இலவசக் கண்ணாடி வழங்கிச் சிறப்புரையாற்றினார். காஞ்சிபுரம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திருஎஸ். டி. நடராஜா வரவேற்றுப் பேசினார்.

—ஆர். சடகோபன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
(செய்தி), காஞ்சிபுரம்.





## காற்றில் போகும் படகு

மாமல்லபுரம் அருகே 'முட்டுக்காடு', எனும் பகுதியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை நடத்தி வரும் படகுத்துறை உள்ளது. அங்கு 'காற்றில் போகும் படகு'ப் பயிற்சி முகாமை 5.8.84 அன்று தலைமைச் செயலர் திரு கு.சொக்கலிங்கம்,இ.ஆ.ப. அவர்கள்தொடங்கி வைத்து, படகுத்துறைப் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். அப்பொழுது அவர் பேசுகையில், ''பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் இங்கு வந்து செல்லப் படகுத்துறை ஊக்கப்படுத்தப்படுகிறது. இதில் ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் ஆயிரம் ரூபாயும் மற்ற நாட்களில் 4300 ரூபாயும் தினசரி வருமானம் கிடைக்கிறது.

''இந்தப் பயிற்சி முகாமில் பயிற்சி பெறுகிறவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற வேண்டும். முட்டுக்காட்டிற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் தேவையை முன்னிட்டு, தங்குவதற்கு இடவசதியும், சிற்றுண்டி, கழிவறை போன்ற வசதிகளும் ரூ. 2 இலட்சம் செலவில் விரைவில் செய்துதரப்படும்'' என்றார்.

விழாவிற்கு, சுற்றுலாத்துறை நிர்வாக இயக்குநர் திரு என்.கோவிந்தன்,இ.ஆ.ப. தலைமை தாங்கினார். கலிபோர்னியாவைச் சேர்ந்த திரு அன்டர்சன் சிறப்புரையாற்றினார். விளையாட்டுத்துறை இயக்குநர் திரு பிரிஜ்வர்சிங் இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார் இறுதியில் திரு ரிக்கி நன்றி கூறினார்.

சென்னையில் உள்ள கல்லூரி மாணவர்கள் 12 பேருக்கு இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி ஆசிரியர்கள் மூவர் இந்தப் பயிற்சியை அளிக்கிறார்கள்.



## வெறி நாய் நோயைத் தடுப்பது எப்படி?





மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் வெறி நாய் கடிப்பதால் ஏற்படும் வெறி நோயைத் தடுப்பது எப்படி என்பது பற்றிய கருத்தரங்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி அரங்கில் 9-8-84 அன்று நடைபெற்றது.

கருத்தரங்கை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக ஆயிரம் பேர்கள் வெறி நோயால் இயற்கை எய்தி விடுகிறார்கள். "கிராமங்களிலும், நகரங்களிலும் தெருவில் திரியும் நாய்களை ஒழிப்பதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

"மாநகராட்சிகள். நகராட்சிகள், பஞ்சாயத்துக்களில் வெறி நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்ட நாய்களுக்கு மட்டுமே லைசென்ஸ் வழங்க வேண்டுமென்ற முறை கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும். இது சம்பந்தமாக மருத்துவர்கள், கால்நடை மருத்துவர்கள், நகராட்சி அலுவலர்கள், அரசுச் செயலர்கள் ஆகியோரை அழைத்துப் பேசி இத்திட்டத்தைச் செயல்படுத்த உள்ளேன்.

"வெறி நோயைப் போக்குவதற்குத் தேவையான தடுப்பு மருந்துகளைக் கூடுதலாக உற்பத்தி செய்யவும் இது சம்பந்தமான ஆராய்ச்சி நிலையங்களை மண்டல வாரியாக அமைப்பதற்கும் அரசு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும்."

இக்கருத்தரங்கிற்கு கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் டாக்டர் எஸ். ரங்கராஜ் தலைமை வகித்தார். கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி. கோதண்டராமன் வரவேற்புரையாற்றினார்.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நோய்த் தடுப்புத் துறை பேராசிரியர் டாக்டர் என். ராகவன் நன்றி கூறினார்.

—அ. மருது




# சூரிய ஒளி அடுப்பு

சூரிய ஒளி காற்றில்பட்டு பரவலாக நிலத்தை அடைகிறது. இவ்வொளிக் கற்றைகள் குறுகிய அலைவரிசையைச் சேர்ந்தவை. குறுகிய அலைவரிசை ஒளிக் கதிர்கள் கண்ணாடியை ஊடுருவிச்செல்லும் செயல்திறம் பெற்றவையாகும்.

சூரிய அடுப்பிலுள்ள இரு கண்ணாடிச் சுவர் மூடியை ஊடுருவிச் சென்று உள் அறையை அடைந்தவுடன் இவ்வொளிக் கதிர்கள் நீண்ட அலைவரிசை கொண்ட வெப்பக் கதிர்களாக மாறுகின்றன. நீண்ட அலைவரிசை கதிர்கள் கண்ணாடிச் சுவர்களை தாண்டிச் செல்லும் தன்மையை இழந்துவிடுகின்றன. ஆதலின் வெப்பக் கதிர்கள் அறையின் காற்றையும், பாத்திரங்களையும் சூடாக்க உதவுகிறது. பாத்திரங்களில் கறுப்பு வண்ணம் பூசினால் ஒளிச் சிதறலைத்தடுக்கலாம். அலுமினியப் பாத்திரங்களும் தாம்பாளமும் வெப்பத்தை விரைவில் கிரகிக்கும் தன்மையுடையவை. வெப்பம் வெளிச்செல்லாதிருக்க 'கிளாஸ்வல்' தடுப்புச் சுவர் உதவுகிறது. இரு கண்ணாடி பொருந்திய மேல்மூடி காற்றிடத்தை இடையே கொண்டது. காற்று வெப்பத்தை மிகச் சிறிதளவே வெளிச் செல்ல விடும் செயல் கொண்டது. இச்சூரிய அடுப்பில் அரைமணியில் 135° லிருந்து 140° செண்டிகிரேட் வெப்பம் அடையமுடியும்.

சூரிய ஒளிச் சமையல் நிதானமாகவும் ஒரே சீராகவும் நடைபெறுகிறது. சூரிய ஒளி; பாத்திரங்கள் மேல்பட்டு உணவுப் பொருட்களைச் சூடாக்கி, சமையலாகிறது.

சூரிய ஒளிச்சமையலை நான்கு பிரிவுகளில் பிரிக்கலாம்:

**1. கடின உணவுப் பொருட்கள்**

பருப்பு வகைகள் கடினப் பொருட்களாகும். நீர் வேண்டிய அளவே சேர்த்து சூரிய அடுப்பில் வைக்க வேண்டும். கூடுதல் நீர், சமையல் செய்யும் நேரத்தை அதிகப்படுத்தும். பருப்பு வகைகளைச் சமைக்கு முன் 2 அல்லது 3 மணி முன்னதாக ஊற வைத்தால் பருப்பை $1\frac{1}{2}$ மணிக்குள் வேக வைத்துவிடலாம். இப்பதார்த்தங்கள் நீரை உறிஞ்சும் தன்மையுடையவை. ஆதலின் ஊற வைப்பது சமையல் நேரத்தைக்குறைக்கிறது.

**2. நீர்ச்சத்துக் கொண்ட உணவுகள்:**

பூசணிக்காய், கத்தரிக்காய், தக்காளி போன்ற பொருட்கள் சமைக்க குறுகிய நேரத்தில் அதிக வெப்பம் வேண்டும். இவை சமைக்க சூரியன் தலைக்கு மேல் இருக்கும்போது அதிக வெப்பம் கிடைக்கும்.

**3. நிதான வெப்பத்துடன் நீண்ட நேரம் சமைக்கப்படும் உணவுகள்:**

பாயசம், பிரியாணி போன்ற உணவுகள் நிதான வெப்பத்தை அதிக நேரம் கொடுத்தால் அவை செவ்வையாக வெந்து மிகுந்த சுவையுடன் சமைக்கப்படும். சூரிய அடுப்பு இவ்வகை உணவுகளுக்கு மிகச் சிறந்த கருவி.

**4. வறுக்கும் உணவுகள்:**

கிழங்கு வகைகளை மிகச் சிறப்பாக வறுக்கலாம். தக்காளி, உருளைக் கிழங்கு, வேர்க்கடலை போன்றவைகளை நீரில்லாமல் வறுக்கலாம். வேர்க்கடலையை அரைமணி சூரிய அடுப்பில் போட்டு வைத்தால் மிகச் சுவையுடன் சமைக்கப்படும். முட்டையை நீரில்லாமல் வேக வைக்கலாம்.

மிளகாயும் பட்டை வகைகளும் வேண்டுமளவு சேர்த்து சமையலை முடிக்கலாம். ஊறுகாய்களை தூசியேபடாமல் தயாரிக்கலாம். இவை செய்ய மிகக் குறைந்தநேரமே பிடிக்கும். டீ, காபி தயாரிக்கவும் சூரிய அடுப்பு உதவும்.

சூரிய ஒளிச் சமையல் ஒரு புதிய முறையைக் கொண்டது. சூரிய அடுப்போடு பழகி சமையல் திறமையுண்டாக வேண்டும். சமையலைக் கலையாகவும் விஞ்ஞானமாகவும் கருதினால் தனித் திறமையடைய – பழகப் பழக முடியும். இல்லத்தரசிகளின் கைருசி சிலருக்கே கைவந்தகலை. ஆதலின் விஞ்ஞான முறை கண்டு கொள்ளவே உதவுகிறது.

**சூரிய அடுப்பில் சமைக்க நேரம் கண்டுபிடிக்கும் முறை:**

சூரிய அடுப்பில் சமைப்பதில் நேரத்தைக் கட்டுப்படுத்த நான்கு காரணங்களைக் கவனிக்கவேண்டும். அவை: (1) பருவநிலை (2) பகல் நேரம் (3) உணவு வகை (4) பாத்திரத்திலுள்ள உணவின் உயரம்.

உதாரணம்: சமையல் செய்யும் பொருள் பருப்பு 4 செ. மீ. உயரமுடையது. இது ஒரு கடினப் பொருள். 9 மணியளவில் கோடைக் காலத்தில் சமைக்க வேண்டும்.

சூரிய அடுப்பு - இது அலுமினியத் தகடு, கண்ணாடி போன்ற உலோகங்களைப் பயன்படுத்தி எளிமையாகச் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் 240 நாட்களில் இருந்து 300 நாட்கள் வரை இதைப் பயன்படுத்தி சூரிய ஒளியில் உணவு சமைக்கலாம்.

**சமையல் செய்யும் முறை:**

முதலில் சூரிய அடுப்பைத் திறந்த வெளியில் சூரியனை நோக்கித் திறந்து வைக்க வேண்டும்.

பிறகு அதிலுள்ள எதிரொளிக்கும் பகுதியில் இருந்துஎதிரொளிக்கும் சூரிய ஒளிக்கதிர்கள் அந்தச் சூரிய அடுப்புக்குள் விழுமாறு அதை அதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள தாங்கியில் பொருத்தி வைக்க வேண்டும்.

சூரியனுடைய ஒளிக்கதிர்கள் எதிரொளிக்கும் கண்ணாடியில் பட்டு நேராகக் கீழே உள்ள இரட்டைக் கண்ணாடி வழியே சென்று கறுப்பு வர்ணம் அடித்த பெட்டிக்குள் சென்றடையும். மேலும், சூரிய அடுப்புக்குப் பக்கத்திலோ எதிரிலோ அப்பெட்டியின் நிழல் தோன்றாதவாறு சரி செய்ய வேண்டும்.

கொடுக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் சமையல் செய்ய வேண்டிய பொருளை வைத்துக் கண்ணாடியைத் தூக்கி அதற்குள் வைக்க வேண்டும்.

கறுப்பு வர்ணம் அடித்த பாத்

திரத்தில் மட்டுமே உணவை இவ்வடுப்பில் சமைக்க வேண்டும்.

உணவு சமைக்க வேண்டிய பாத்திரத்தை உள்ளே வைத்து கண்ணாடிக் கதவை மூடி குறிப்பிட்டுள்ள நேரம் வரை வைக்க வேண்டும்.

கோடைக் காலங்களில் சமையல் செய்ய ஏற்ற நேரம் காலை 9 மணி முதல் 3 மணி வரை.

குளிர்காலத்தில் 11 மணி முதல் 2 மணி வரை.

**இதனால் என்ன நன்மை?**

இதற்கு நெருப்போ, எவ்வித எரிபொருளோ தேவையில்லை; இதற்கு எந்தவித தனிக்கவனமும் செலுத்த வேண்டியதில்லை; இதில் உணவு பொங்கி வழிவது கிடையாது; எவ்வித அபாயமும் அற்றது. சிறு பெண்கள் கூட இதில் உணவு எளிதாகச் சமைக்கலாம். நெடுங்காலம் உழைக்க வல்லது; பாதுகாப்பானது; இதில் சமைக்கப்படும் உணவின் சுவை அதிகமாகிறது. மேலும் த் சத்துக்கள் வெளியில் செல்வதில்லை. இவ்வுணவில் புகையோ அல்லது தூசியோ ஏற்படுவது இல்லை. சுத்தமாகவும் சுகாதாரமாகவும் சமைக்கப்படுகிறது.

**நாம் கவனிக்க வேண்டியவை:**

இதைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும், கல்லிலோ அல்லது சுவற்றிலோ மோதினால் அதிலுள்ள கண்ணாடி உடைய நேரிடும்.

சூரிய அடுப்பை மழையில் நனையாதவாறு வைக்க வேண்டும்; சமைத்த உணவை வெளியே எடுக்கும்போது அதிலுள்ள அதிக வெப்பத்தால் சமைத்த உணவை வெளியில் எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு முறையும் பயன்படுத்தும் முன் கண்ணாடியையும், பெட்டியையும் நன்றாகத் துணியால் துடைக்க வேண்டும்.

கொடுத்துள்ளபடி உணவைச் சமைக்க நீரையும் மற்றவற்றையும் குறிப்பிட்ட அளவில் சேர்க்க வேண்டும்.

இதிலுள்ள கறுப்பு வர்ணம் அதிகமாகப் போய்விட்டால் ஓராண்டு அல்லது 2 ஆண்டிற்கு ஒருமுறை தேவைப்பட்டால் சிறிது வர்ணம் பூசலாம்.

**சாதம் தயாரித்தல்:**

கொடுத்துள்ள பாத்திரம் ஒன்றில் சமைக்க வேண்டிய




அரிசியை எடுத்துக் கொண்டு அதற்கு இருமடங்கு நீரைச் சேர்க்க வேண்டும். உதாரணமாக 2 டம்ளர் அரிசி என்றால் 4 டம்ளர் நீர் ஊற்றிப் பாத்திரத்தை மூடி பெட்டிக்குள் வைக்க வேண்டும். கண்ணாடியை இறுக்கமாக மூடி வெயிலில் 1 மணி நேரம் வைக்க வேண்டும். 1 மணி நேரம் கழித்து எடுத்தால் உணவு சமைக்கப்பட்டிருக்கும்.

**பருப்பு வேக வைத்தல்:**

வேக வைக்க வேண்டிய பருப்பைப் பாத்திரத்தில் போட்டு அதே அளவு நீரைச் சேர்த்து 1 மணி நேரம் ஊற வையுங்கள். ஊறிய பருப்பைச் சாதத்திற்கு வைத்தவாறு இதையும் பெட்டிக்குள் வைத்து 1¼ மணி நேரம் கழித்து எடுத்தால் பருப்பு வேக வைக்கப்பட்டிருக்கும்.

**தேநீர்:**

பாலைப் பாத்திரத்திற்குள் ஊற்றி அதற்குத் தேவையான அளவு டீ தூளைப்போட்டு கலக்கி மூடி 20 நிமிடம் முன்பு கூறியவாறு பெட்டிக்குள் வைத்தால் டீ தயாராகி விடும். பிறகு டீ தூளை வடிகட்டி சர்க்கரை சேர்த்துப் பருகலாம்.

**தக்காளி:**

வெங்காயம், தக்காளி...

மாக, சிறு சிறு துண்டுகளாக நறுக்கவும், பிறகு அதைப் பாத்திரத்தில் போட்டு அத்துடன் சிறிது கிராம்பு, ஏலக்காய், பட்டைத்துண்டு, பச்சை மிளகாய், சீரகம், ஆகியவற்றைச் சேர்க்கவும். தேவையான அளவு நீரைச் சேர்த்து பெட்டிக்குள் வைத்துவிட வேண்டும். 45 நிமிடம் கழித்து அதை வெளியில் எடுத்து சிறிது டால்டாவையும் பாலையும் தேவையான அளவு உப்பையும் சேர்த்துப் பருகலாம்.

**பாயசம்:**

முதலில் சவ்வரிசியைக் குறிப்பிட்ட அளவு பாத்திரத்தில் போட்டு, அதற்கு மேல் சிறிது நீர் அதிகமாக இருக்கும்படி ஊற்றி மூடி வைத்து விடவும். பிறகு மற்றொரு பாத்திரத்தில் தேவையான அளவு சர்க்கரை, பால் ஊற்றி முந்திரிப்பருப்பு, திராட்சை ஆகியவற்றைச் சேர்த்து மூடி வைத்து விட வேண்டும். 1 மணி நேரம் கழித்து சவ்வரிசியை வெளியில் எடுத்து சர்க்கரை, பாலைக் கலந்து தேங்காய் துருவி சிறிது ...த்துப் பருகலாம்.

**சாம்பார்:**

... காய்கறிகளைச் சிறிதாக நறுக்கிப் பா... ...தில்






போட்டுக் கொள்ளவும் அதில் பாதியளவு நீரைச் சேர்த்து வேக வைக்கவும். மற்றொரு பாத்திரத்தில் பருப்பை வேக வைத்துக் கடைந்து கொள்ளவும். பிறகு காய்கறிகளையும் பருப்பையும் ஒன்றாகச் சேர்த்து சிறிது எண்ணெய் ஊற்றித் தாளித்தால் சாம்பார் தயாராகி விடும்.

**கறிக்குழம்பு:**

ஆட்டுக்கறியையோ அல்லது கோழிக்கறியையோ அல்லது கருவாட்டையோ சிறிதாக நறுக்கி

அதில தேவையான அளவு உப்பு, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், வெங்காயம், தக்காளி ஆகியவற்றைச் சேர்த்து சிறிது எண்ணெய் ஊற்றிக் கலந்து தேவையான அளவு நீர் ஊற்றிப் பெட்டியின் உள்ளே வைக்க வேண்டும். 1 மணி நேரம் கழித்து எடுத்தால் கறிக் குழம்பு தயாராகிவிடும்.

**ரசம்:**

முதலில் புளியையும், உப்பையும் சேர்த்து தேவையான அளவு நீர் சேர்த்து கரைத்துத் தனியே எடுத்துக் கொள்ளவும், பிறகு ரசத்திற்குத் தேவையானவற்றை சேர்த்து சிறிது எண்ணெய் ஊற்றி கரைத்து வைத்த நீருடன் கலந்து. சூரிய அடுப்பில் 10 நிமிடம் வைத்தால் ரசம் ரெடியாகிவிடும்.

**பொங்கல்:**

தேவையான அளவு பச்சரிசி, பச்சைப் பருப்பு ஆகியவற்றைக் கலந்து கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு வீட்டில் கடுகு, மிளகாய், நெய், முந்திரி, திராட்சை போன்றவற்றைத் தாளித்து இத்துடன் கலந்து பாத்திரத்திற்குள் வைத்து 2,5 பங்கு நீர் சேர்த்து 1 மணிநேரம் சூரிய அடுப்பில் வைத்தால் பொங்கல் தயாராகிவிடும்.

**கூழ்:**

கேப்பைக் கூழ் அல்லதுசோளக் கூழ் தயாரிக்கத் தேவையான மாவை சிறிது நீருடன் பாத்திரத்தில் சேர்த்து அடுப்பில் வைக்க 1¼ மணியில் கூழ் தயாராகி விடும். உழவர் தம் வேலைகளைச் செய்யும்போது வரப்பில் சூரிய அடுப்பில் சுடச்சுடச் சமையல் ஆகிவிடும்.



# திருச்சி தொழில் மையத்தின் பணிகள்

அ. பெரியசாமி,
தலைமைத் தகவல் அலுவலர்,
தொழில் நுட்பத் தகவல் மையம்,
சென்னை.

மத்திய-மாநில அரசின் ஒருங்கிணைந்த திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில் வளர்ச்சி அடையவும்-குறிப்பாக கிராமப் புறங்களிலே புதிதாகத் தொழில் தொடங்கி அதன் மூலம் வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் தொழில் முனைவோருக்கு எந்தவிதச் சிரமமும் இல்லாமல் தொழிலைக் கூடிய விரைவில் ஆரம்பிக்க வழி வகுத்துக் கொடுக்கவும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளை ஒரே அமைப்பின் கீழ் அளிக்கவும் **மாவட்டத் தொழில் மையம்** இயங்கி வருகிறது.

திருச்சி மாவட்டத்தில் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல், மாவட்டத் தொழில் மையம் தமிழக அரசினால் துவக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. இம் மாவட்டத் தொழில் மையம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை தொழில் வளர்ச்சிக்கு ஆற்றியிருக்கும் பணிகளையும் ஆற்ற இருக்கும் செயல் திட்டங்களையும் விளக்குவதே இந்தக் கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

மாவட்டத் தொழில் மையம் தொடங்கிய பிறகு புதிய தொழில்கள் தொடங்க ஊக்கமளிக்கும் வகையில் ஊக்குவிப்பு முகாம் முதலியவற்றிற்கும் சிறுதொழில் முனைவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குப் புதிதாகத் தொழில் தொடங்கத் தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏறத்தாழ 5,400 வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்ட தற்காலிகச் சிறுதொழில் சான்றிதழ்களை அடிப்படையாகக்கொண்டு தான் சிறு தொழில்களுக்கு வங்கி மூலம் கடன்களும் அரசு வாரியங்களின் மூலம் தொழிற் கட்டடமும், இயந்திரக் கடன் பெறவும் இறக்குமதி இயந்திரச் சாதனங்கள், கச்சாப் பொருள் இறக்குமதி மூலம் வெளிநாட்டிலிருந்து பெறவும், தொழிற்கூடம் கட்ட சிமெண்ட், கட்டடத்திற்கு வேண்டிய இரும்பு சம்பந்தமாகக் கச்சாப்பொருள்களையும் பெறவும், கிராமப்புறக் கடன் திட்டத்தின்கீழ் முன்பணமாகக் கடன் குறைந்த வட்டியில் மற்றைய **தொழில் உரிமங்கள் பெறவும் சான்றிதழ் மிக்க இன்றியமையாததொன்றாகும். மற்ற பிற தொழில் துவங்குவதற்கான உதவிகளும் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.**

தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ் பெற்றவர்கள் எல்லாவித அடிப்படைத் தேவைகளைப் பெற்று உற்பத்தி தொடங்கும் நிலையை அடைந்தவர்களுக்கு நிரந்தரச் சிறுதொழில் சான்றிதழையும் வழங்குகிறது.

இவ்வாறு வழங்கப்பட்ட நிரந்தரச் சிறுதொழில் சான்றிதழ் மூலம் தொழிலகங்கள் பல்வேறு உத்திகளைப் பெற்று வருகின்றது.

1. அரிதாகக் கிடைக்கும் மூலப் பொருட்கள், 2. மின் மானியம், 3. இறக்குமதி செய்யக் கூடிய பொருட்கள், 4. அரசு கொள்முதல் திட்டத்தில் சேர்தல் 5. தொழிலின் பின் தங்கிய பகுதிகளில் சலுகை பெற மூலதன மானியம். 6. தொலைபேசி இணைப்பு முன்னுரிமை 7. படித்த பட்டதாரிகளுக்கு வட்டிச் சலுகை 8. ஒதுக்கிய விற்பனை வரி வட்டியில்லாக் கடன்.

இன்னும் பல சலுகைகள் அதாவது அரசு அளிக்கும் பல சலுகைகள் அனைத்தும் பெற எல்லா மாவட்டத் தொழில் மையம் நிரந்தர சிறுதொழில் சான்றிதழ்கள் 1,543 (கடந்த ஐந்து ஆண்டுகளில்) வழங்கியுள்ளது.

கிராமப்புறத்தில் உள்ள ஏழை எளிய பிற்பட்ட வகுப்பு மக்களை அவர்கள் சார்ந்துள்ள அவர்கள் செய்துவரும் கிராமக் குடிசைத் தொழில்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்கள் வங்கிகளில் கடன் பெறும் பொருட்டு கைவினைச் சான்றிதழ்கள் 1,799 பேருக்குக் கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏறக்தாழ 15,000பேர் நிரந்தரச் சிறுதொழில் சான்றிதழ் மற்றும் கைவினைச் சான்றிதழ் வழங்கப்பட்டதன் வாயிலாகப் பயன்பெற்றுள்ளனர்.

சிறுதொழில்கள், கைவினைத் தொழில்கள் ஆகியவைகள் புதிதாகத் தொடங்கப்படவும் - ஏற்கெனவே இயங்கி வரும் தொழில்கள் மேலும் வளர்ச்சியடையவும் இம்மாவட்டத் தொழில் மையம் வாயிலாக முறையான பங்கு என்ற முறையில் எல்லாவித உதவிகளையும், தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு மேலும் வளர்ச்சிக்கும் உதவி செய்கிறது. மேலும் இம்மாவட்டத் தொழில் மையமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவைகளும் நிதியுதவி அளித்து வருகின்றன.



தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் கடந்த நான்கு ஆண்டுகளில் 706 நிறுவனங்களுக்கு ரூபாய் ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் வழங்கியுள்ளது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் சிறுதொழில்களுக்கும் கிராமக் கைவினைஞர்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது. இதனால் 800 நிறுவனங்கள் பயன்பெற்றன.

மாவட்டத் தொழில் மையம் நேரிடையாக ஊரக வளர்ச்சிக் கடன் திட்டத்தின் கீழ் 238 நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

சிறுதொழில் புதிதாகத் தொடங்க விரும்புகிறவர்களுக்கு அவர்களுக்குத் தேவையான உரிமங்களை விரைவில் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து பெற்றுத்தரவும் ஏற்கெனவே தொழில் நடத்துபவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களையவும், உரிமங்கள் பெறுவதில் தாமதத்தைத் தவிர்க்கவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒவ்வொரு மாதக் கடைசி வாரம் புதன் கிழமைகளில் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆணைப்படி குழுக் கூட்டம் தொடங்கித் தீர்த்து வைக்கிறது. கூட்டம் நடத்தி நேரில் சம்பந்தப்பட்ட அனைவருடன் விவாதித்துத் தீர்வுகாணவும் இம்மாவட்டத் தொழில் மையம் பணிபுரிகிறது.

ஒவ்வொரு மாதமும் இவ்வாறு கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இக் கூட்டங்கள், சிறு தொழில் நடத்துவோருக்கு மிக உதவி அளிப்பவையாக இருந்து வருகிறது.



தேசிய சிறுதொழில் நிறுவனத்தின் தவணை கொள்முதல் திட்டத்தின் கீழ் இயந்திரங்கள் வாங்க கடன் உதவி மாவட்டத்தொழில் மையம் சிபாரிசு செய்கிறது. இதன் பயனாகப் பதினைந்து நிறுவனங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் பயன் பெற்றுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிக்கோளின்படி, 78இல் ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழிலகங்களுக்கு ஆண்டிற்கு ரூ.4,000க்கு மேல் விற்பனை வரி செலுத்துபவருக்குத் தமிழக அரசின்கீழ் மாவட்டத் தொழில் மையம் மனுவைப் பரிசீலித்து 'சிட்கோ' நிறுவனம் சென்னைக்கு விற்பனை வரி கடன் வழங்க சிபாரிசு செய்கின்றது. இதுவரை உதவி அளிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும்.



1.1.1980க்குப்பிறகு உற்பத்தி தொடங்கிய சிறு தொழில் நிறுவனங்களுக்கு மின்மானியம் வழங்குவதற்கு மின் மானியத் தகுதிச் சான்றிதழ் இம்மாவட்டத் தொழில் மையம் மூலம் வழங்கப்படுகிறது. இதுவரை உதவி மின் மானியச் சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 88 ஆகும்.

நலிவுற்ற சிறுதொழில் நிறுவனங்களைக் கண்டறிந்து அவை மீண்டும் செயல்படத் தக்க வகையில், தேவையான வகையில், எந்த வகையில் இத் தொழிலகம் நலிவுற்றுள்ளது என அறிந்து, அதன் அடிப்படையில் 1981-82ஆம் ஆண்டில் 3 நிறுவனங்களுக்கும், 1982-83ஆம் ஆண்டில் 5 நிறுவனங்களுக்கும் உதவி செய்ய தொழில் நுட்ப அறிக்கை தயார் செய்யப்பட்டு, சிறுதொழில் சேவை நிலையம் சென்னைக்கு அனுப்பப்பட்டன.

கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சியை அதிகரிக்கவும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் தொழில் முனைபவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 'தொழில் ஊக்குவிப்பு முகாம்கள்' ஊராட்சி ஒன்றியங்களில் இம்மாவட்டத்தொழில்



மையம் நடத்தி அவர்களுக்குப் புதிதாகத் தொழில் துவங்க தக்க ஆலோசனைகளையும் அளிக்கும். புதிய திட்டங்கள் பற்றியும் மாவட்ட தொழில் மைய அலுவலர்களால் விரிவாக எடுத்து உரைக்கப்படுகிறது.

1983-84ஆம் ஆண்டில் இம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

1981-82ஆம் நிதியாண்டில் சிறு தொழில் சேவை நிலையம் சென்னையுடன் ஒருங்கிணைந்து மற்ற சம்பந்தப்பட்ட துறைகளையும் ஒன்றுசேர்த்து 'சிறப்புத்தொழில் ஊக்குவிப்பு முகாம்கள்' திருச்சி, முசிறி, கரூர் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டு தொழில் முனைவோருக்குத் தக்க ஆலோசனைகள் நேரிடையாக வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குறிக்கோள் படியும் மாவட்டங்கள் தோறும் தொழில்கள் வளர வேண்டும் என்ற அவர்களின் விருப்பப் படியும் தமிழ்நாடு இந்தியாவில் தொழில்களின் முதன்மை பெற வேண்டும் என்ற அவர்களின் ஆசைப்படியும், குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று அவர்கள் தீர்க்க தரிசன நல்லெண்ணத்தின் அமைப்புப்படியும் தமிழக அரசு தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு தொழிலில் பின் தங்கிய பகுதிகளான அரியலூர், முசிறி ஆகிய வட்டங்களுக்கு மூலதனமாகிய உதவியும், பொறியாளர் தொழில்முனைவர்களுக்கு ஊக்குவிக்க 'வட்டி மானியத் திட்டம்' மற்றும் பல தொழில்களில் பயிற்சி அளித்து அதன் மூலம் 'சுய வேலைவாய்ப்பு'ப் பெறவும், வழிவகைகள் செய்கின்றன.

# தமிழ்நாட்டில் பட்டு வளர்ச்சி முன்னேற்றம்



பட்டு வளர்ச்சித்துறை 1979 ஆம் ஆண்டு செயல்படத்துவங்கிய சமயத்தில் தர்மபுரி, வடஆர்க்காடு, சேலம், கோவை மாவட்டங்களிலுமாகச் சேர்த்து சுமார் 20,000 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே முசுக்கட்டைச் செடி சாகுபடியில் இருந்தது.

பட்டு வளர்ச்சித்துறை தனியாகப் பிரிக்கப்பட்டுச் செயல்படத் துவங்கியபின் நாளது வரை அதிகப்படியான 24,000 ஏக்கர் பரப்பளவில் முசுக்கட்டைச் செடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சுமார் 83,000 குடும்பங்கள் இத்தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. அதன் மூலம் சுமார் 3 லட்சம் பேர் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

புதிதாக மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, தென்ஆர்க்காடு மற்றும் செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களிலும் இத்தொழில் வளர்ச்சி அடையத் துவங்கியுள்ளது. புதிதாக முசுக்கட்டை சாகுபடியில் ஈடுபடும் ஒவ்வொரு பட்டு விவசாயிக்கும் இத்துறையில் 2 மாதகாலப் பட்டு வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு விவசாயிக்கும் உதவித் தொகையாக மாதம் ரூ. 100- வழங்கப்படுகிறது. பயிற்சி பெற்ற விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.400 மதிப்புள்ள புழுவளர்ப்புச் சாதனங்கள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகின்றன. புதியதாக 1 ஏக்கரில் முசுக்கட்டைச் செடி நடவு செய்யும் விவசாயிக்கு ரூ. 100 அரசு மானியமாக அளிக்கப்படுகிறது.

அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் ஒவ்வொரு பட்டு விவசாயிக்கும் புழுவளர்ப்பு மனை கட்டிக்கொள்ள ரூ.3000, புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க ரூ. 2000 கடனுதவிகள் அளிக்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றிற்கும் 25 விழுக்காடுகள் அரசு மானியம் அளிக்கப்படுகிறது.

இத்துறையின் களப்பணியாளர்களின் பதவிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஓசூரில் செயல்பட்டு வரும் அரசினர் பட்டு வளர்ச்சிப்பயிற்சிப் பள்ளி மூலம் 500 பட்டதாரி அல்லாதவர்களுக்குப்பயிற்சி அளிக்கப்படுகிறது. அப்பள்ளி மூலம் இதுவரை 400 பேர் பயிற்சி முடித்து இத்துறையில் களப்பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

இத்துறையின் ஒத்துழைப்புடன் கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தில் பட்டதாரிகளுக்கென 11 மாதகால முதுகலை பட்டப்படிப்பு என்னும் பட்டு வளர்ச்சிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு மாணவருக்கும் பிரதி மாதமும் ரூ. 150 வீதம் அரசு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் 39 முதுகலைப் பட்டப் படிப்பு முடித்தவர்கள், இத்துறையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

1980க்கு முன்னர் இருந்ததை விட 5 மடங்கு அதிகமான அளவு அதாவது 1.10 லட்சம் முட்டைத் தொகுதிகள் உற்பத்தி அளவினை இத்துறை அடைந்துள்ளது. பல ஆண்டுக்காலமாக கர்நாடகா மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டிற்கென நாட்டின வித்துக்கூடுகள் வாங்கிவந்த நிலை இன்று முற்றிலுமாக மாறி அத்தகைய வித்துக்கூடுகளைத் தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய சுய தேவைப் பூர்த்தி என்னும் எல்லையை இத்துறை எட்டியுள்ளது. இதற்கெனத் தனியாக நாட்டின் வித்துப்பகுதி ஒன்று தேன்கனிக் கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்று சுமார் 5000 பட்டு விவசாயிகள் இப்பகுதியில் நாட்டினவித்துக் கூடுகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் உற்பத்தியாகும் வித்துக்கூடுகள் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பட்டு வித்தகங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு கலப்பின முட்டைகள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

பழங்குடியினர் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி, ஐவ்வாது மற்றும் அம்ருதி மலைப் பகுதிகள், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலைப்பகுதி, சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லி மலை, கல்ராயன் மலையின் ஒரு பகுதி ஆகிய மலைப் பிரதேசங்களிலுமாகச் சேர்ந்து சுமார் 1500 பழங்குடி குடும்பத்தினர்கள் பட்டு வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். இரு சுழற்சி இன முட்டைத் தொகுதிகள் தயாரிக்க அனைத்து வித்தகங்களுக்கும் தேவைப்படும் 4 கோடி இரு சுழற்சி இனக்கூடுகளில் 60 சதவீத உற்பத்திமட்டும் மேற்கண்ட மலைப் பகுதிகளிலுள்ள விவசாயிகளால் செய்யப்படுகின்றன. எனவே அனைத்து வித்துப் பகுதிகளின் மூலமும் நாட்டின மற்றும் அயலின வித்துக்கூடுகள் உற்பத்தி செய்யப்படத் தக்க ஒரு நிலையான அடித்தளத்தை இந்நான்கு ஆண்டுக் கால அளவிற்குள் ஏற்படுத்த முடிந்தது ஒரு சாதனையாகும்.

விவசாயிகள் தரமான கூடுகள் உற்பத்தி செய்ய உதவியாக இத்துறையின் மூலம் இளம் பருவத்தில் 8 தினங்கள்வரை சுகாதாரமான முறையில் இளம் புழு வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.





தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கிராமப்புறப் பகுதிகளில் துவங்கப்பட்ட 98 இளம் புழு வளர்ப்பு மையங்களின் மூலம் இளம்புழுக்கள் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் அனைத்து இடங்களிலும் இத்துறையினால் தொடங்கப்பெற்ற 34 தொழில்நுட்ப சேவை மையங்களின் மூலம் விவசாயிகளின் முசுக்கொட்டைத் தோட்டங்களைப் பார்வையிட்டு விவசாயிகளுக்குத் தேவையான அறிவுரைகள் வழங்குதல் மற்றும் இத்துறை சம்பந்தப்பட்ட அனைத்துத் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் ஆகிய பணிகள் விவசாயிகளுக்கெனச் செய்யப்படுகின்றன. மேலும் 10 மருந்தடிப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களின் முக்கியப் பணிகள் விவசாயிகளின் புழு வளர்ப்பு மனைகளைப் பார்வையிட்டு புழுப் பரிசோதனை செய்தல், கூடுகள் அறுவடைக்குப்பின் புழு வளர்ப்பு மனைகளை மருந்தடிப்பு செய்தல் ஆகியவைகளாகும்.

விவசாயிகள் அறுவடை செய்யும் கூடுகளை விற்பனை செய்ய வசதியாக மாவட்டத்தின் கிராமப் புறங்களில் பட்டுக்கூடு அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழ்நாடு பூராவும் 29 அரசு பட்டுக்கூடு அங்காடிகள் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளை நூற்பு செய்வதற்கெனத் தனியார் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தமிழ்நாட்டில் மொத்தம் 2397 பட்டு நூற்பு ஏனங்கள் கொண்ட பட்டு நூற்புக்கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன.



அரசுத் துறையில் 140 ஏனங்கள் நிறுவப்பட்டுள்ளன. அரசு தனியார் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டு அனைத்தும் இத்துறையால் ஏற்படுத்தப்பட்டு காஞ்சிபுரத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பட்டு உற்பத்தித் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது.

கச்சாப்பட்டின் தரத்தை உயர்த்த வேண்டி அதற்கெனப் பரிசோதனைக்கூடம் ஒன்றை மேற்படி இணையத்தில் அமைக்கவும் இத்துறை முயற்சிகள் எடுத்து வருகிறது. கச்சாப்பட்டாகவும், வார்ப்பாகவுமாக சுமார் 1 லட்சம் அளவுள்ள கச்சாப்பட்டினை ஆண்டுதோறும் இவ்விணையம் கொள்முதல் செய்து அவற்றினைக் கைத்தறி மற்றும் நெசவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்து வருகிறது.

—அ. ம

# சிறிய குடும்பங்கள் ஒரு மகிழ்ச்சிகரமான நாட்டை உருவாக்குகின்றன



உங்களுக்குத் தெரியுமா?

∴ குடும்பக் கட்டுப்பாடு என்றால் குழந்தைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல.

∴ மகிழ்ச்சியும் உல்லாசமும் நிறைந்த மண வாழ்க்கை அதன் லட்சியம்.

∴ நீங்கள் குழந்தையற்ற தம்பதியாக இருந்தால், அருகிலுள்ள குடும்ப நல கேந்திரத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

∴ நீங்கள் விரும்பும்போதுமட்டும் குழந்தை பெற வேண்டுமென்றால், ஒத்திப்போடும் முறைகளைப் நீங்கள் பின்பற்றலாம்.

∴ இரண்டு குழந்தைகளைப் பெற்று உங்கள் குடும்பம் முழுமையடையும்போது, நிரந்தர கருத்தடை முறையினை பின்பற்றலாம்.

ஒத்திப்போடும் முறைகள்:

நிரோத்

தம்பதிகள் குறிப்பாக புதிதாக திருமணமானவர்கள் கருத்தரிப்பைத் தவிர்ப்பதற்கும், ஒருகுழந்தையுள்ள தம்பதிகள் இரண்டாவது கருத்தரிப்பை ஒத்திப் போடுவதற்கும் எளியதும் மிகச் சிறந்ததுமான சாதனம் நிரோத். இது மலிவானது; எளிதில் கிடைக்கிறது; எந்தவிதத்திலும் தம்பதிகளின் உடல்நலத்துக்கு ஊறு விளைவிக்காது.

டயாஃப்ரம்

இதை சரியானபடி தெரிந்தெடுத்து, சரியானபடி பொருத்தினால் மிகவும் பயனுள்ள முறையாக இருக்கும் சரியான அளவு எது என்பதை மருத்துவர் முடிவு செய்வார். பிறகு பயன்படுத்துபவரே அதைப் பொருத்திக் கொள்ளலாம்.

செப்பு "T"

இந்த 'T" உருவத்திலான, கருப்பையுள் வைக்கும் சாதனத்தை, பயிற்சிபெற்ற டாக்டர் அல்லது மருத்துவ துணையாளர் பொருத்தி விடுவார் மூன்று, நான்கு வருடங்கள் இது பொருத்தப்பட்ட நிலையில் இருக்கும். இதை பொருத்திக் கொண்டவர்களுக்கு அது இருக்கும் உணர்வு ஏற்படாது. சகஜமாக வாழ்க்கை நடத்தலாம். இதை ஏற்போருக்கு பண உதவியும் கொடுக்கப்படுகிறது.

உட்கொள்ளும் மாத்திரை

28 மாத்திரைகள் கொண்டது ஒரு பாக்கெட். ஒரு நாளைக்கு ஒரு மாத்திரை வீதம் மாதவிடாய் கால முதல் தினந்தோறும் உட்கொள்ள வேண்டும். இன்னொரு குழந்தை வேண்டும் என்று விரும்பும்வரை மாதர் இதைத் தொடர்ந்து உட்கொள்ளலாம். உடலுறவுக்கு மாத்திரை தடையாக இருக்காது. பக்க விளைவுகள் சாதாரணமாக ஏற்படுவதில்லை. அப்போதைக்கப்போது அவசியம் மருத்துவரிடம் காட்டிக்கொள்ள வேண்டும்.

நிரந்தர கருத்தடை முறைகள்:

வாஸெக்டமி

அநுபவசாலி மருத்துவர்கள் மூலம் ஆண்கள் செய்துகொள்ளும் ஓர் எளிய, பயனுள்ள ஆபத்தில்லாத அறுவை சிகிச்சை. நிரந்தரமானதொரு முறை. உடலுறவைப் பாதிக்காது. வேண்டுமெனில் பழைய நிலையை திரும்பவும் மீட்டுக் கொள்ளலாம். ஏற்போருக்கு பண உதவி கிடைக்கும்.

ட்யூபெக்டமி

அநுபவம் வாய்ந்த மருத்துவர்கள் பெண்களுக்குச் செய்யும் அறுவை சிகிச்சை. சில நாட்கள் மருத்துவ சாலையில் இருக்கத் தேவைப்படும். இதுவும் நிரந்தரமான முறை. அன்றாட நடவடிக்கைகளை பாதிக்காது. ஏற்றுக் கொள்கிறவர்களுக்குப் பண உதவி கிடைக்கும்.

லேபரஸ்கோபி

பெண்களுக்கான மிகவும் புதிய, எளிய கருத்தடை அறுவை சிகிச்சை. பல நகரங்களிலும், பட்டணங்களிலும் வசதிகள் இருக்கின்றன. மருத்துவச்சாலையில் இருப்பதற்கு தேவையில்லை. எதிர் விளைவுகள் எதுவும் இல்லை.

**உங்களுக்குத் தகுந்த எந்த முறையையும் நீங்கள் தாராளமாகத் தெரிந்தெடுக்கலாம்**

davp 84/16


**த**மிழ்நாடு வனத்துறைப் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன, மற்றும் கடன் வழங்கும் சங்க' முதலாண்டு நிறைவு விழாவும், 'ஆவின்' விற்பனையகத் துவக்க விழாவும் சிறப்புற நடைபெற்றது.

சென்னை - தேனாம்பேட்டையிலுள்ள அரசு அலுவலகங்கள் வளைவில் (26.7.'84) நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு செய்தி-அறநிலையம் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. இராம.வீரப்பன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வனத்துறைத் தலைவர் திரு. சீ. கொண்டாஸ் இ.வ.ப., தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சங்கத் துணைத் தலைவர் திரு. நா. கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையாற்றினார்.

வனத்துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு. சீ. ஆ. சுப்பிரமணி, இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் நிர்வாக இயக்குநர் (ஆணையர் மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை) திரு ஏ.எம். சுவாமிநாதன் இ.ஆ.ப ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஆவின் பாலகத்தின் விற்பனையைத் துவக்கிவைத்துப் பேசுகையில், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி பேசியதாவது:

"கூட்டுறவுச் சங்க அமைப்பிலேயே இந்தப் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்க அமைப்பே கடந்த பல ஆண்டுகளாக வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே மற்றவர்களெல்லாம் பாராட்டும்படி இயங்கும் முன்மாதிரியான அமைப்பு இது.

"மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த நான்காண்டுகளில் சமுதாய நலம் கருதிப் பல்வேறு துறைகளின் மூலம் ஆற்றிவரும் நற்பணிகளில், ஆவின் பால் வழங்கும் திட்டமும் ஒன்று. இது இலாபம் கருதி நடத்தப்படும் நிறுவனமல்ல; மக்கள் நலமொன்றே இதன் குறிக்கோள். அதன் காரணமாகவே, வாங்கிய விலையைவிட மிகவும் குறைவாக —வெளியே ஒரு லிட்டர் நாலரை ரூபாய்க்கு வாங்கும் பால், இந்த அமைப்பின் மூலம் மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு குறைவாகத் தரப்படுகிறது. நட்டத்தை ஈடுசெய்ய அரசு மானியம் தருகிறது. இப்படி, சென்னை நகரிலே மட்டும் பத்து லட்சம் பேருக்குப் பால் விநியோகிக்கப்படுகிறது."

ஆவின் பாலகத்தைத் திறந்து வைத்தும் அலுவலக வளாகத்தில் மரக் கன்றுகளை நட்டும் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"வனத்துறை, அரசின் ஓர் அங்கமாக இருப்பதே வெளியே தெரியாமலிருந்த காலம் ஒன்றிருந்தது. அந்த நிலை இன்று மாறிவிட்டது.

"கடந்த ஆண்டு மேமாதம் தொடங்கப் பட்ட இந்தக் கூட்டுறவுச் சங்கம், இந்த ஓராண்டில் பெரிய வளர்ச்சியை அடையாவிட்டாலும்-நிலையான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. சென்னையிலே மட்டுமின்றி, வெளி மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். இச்சங்கத்தில், சென்ற ஆண்டில் நான் செலுத்திய ஆயிரம் ரூபாய்க்கான வட்டியாகவோ பங்குத்தொகையாகவோ என்னிடம் இன்று ரூ.120 தரப்பட்டது. வனக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களில் முதலிடம் பெறுவோருக்கான பங்குத் தொகையாக இதைவைக்க அளிக்கிறேன். இச்சங்கத்தின் மூலம் சேமித்தவர்களை சேமிக்க வேண்டுமென்று கருதிய அவர்களுடைய நல்ல உணர்வுகளை நான் பாராட்டுகிறேன்.

"சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்திலும், காடுகளைப் பராமரிப்பதிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடம் பெற்றுத் திகழ்கிறது."

—இவ்வாறு செய்தி - அறநிலையம் மற்றும் வனத்துறை அமைச்சர் உரையாற்றினார்.

விளையாட்டுப் போட்டிகளில் வென்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் பரிசுகள் வழங்கினார்.

விழா முடிவில் சங்கச் செயலர் திரு. ஏ. ஜீவா நன்றி கூறினார்.

—ராஜு





# அறிவுச் சுடர்

நம்மைப் பற்றி நாமே தெரிந்து கொள்ள இதோ சில அறிவியல் உண்மைகள்....!

1. மனித உடம்பில் மொத்தம் 30 இலட்சம் வியர்வைச் சுரப்பிகள் இருக்கின்றன.

2. சாதாரணமாக ஒரு மனிதனின் உடலிலுள்ள எலும்புகளின் மொத்த எடை 9 கி. கிராம் ஆகும்.

3. மனிதனது உடலில் 200க்கும் மேற்பட்ட தசைகள் கூட்டாகத் தொழில் புரிகின்றன. ஒருவர் அசையாமல் அமர்ந்திருக்கும் போதுகூட 12 தசைகள் செயல் புரிகின்றன.

4. மனிதனின் மூளையானது ஏறத்தாழ 1000கோடி உயிரணுக்களால் ஆக்கப்பட்டது. அவற்றின் ஒரு பகுதியே ஞாபகச் சக்திக்குப் பொறுப்பானது.

5. மனித இருதயம் ஒவ்வொரு மணி நேரத்திலும் சுமார் 36,000 லிட்டர் இரத்தத்தை 12,000 மைல்கள் தூரமுள்ள இரத்த நாளங்கள் வழியாகப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறது.

6. நமது இருதயம் சுருங்கும் போது தான் வேலை செய்கிறது. விரியும்போது ஓய்வு பெறுகிறது.

7. நாம் ஒரு வார்த்தை பேசும் போது மட்டும் நம் முகத்தில் 72 தசைகள் அசைகின்றன.

8. மனித உடலின் மொத்த எலும்புகள் 206. மொத்த மூட்டுகள் 230.

9. மனிதன் தலையிலுள்ள எலும்புகள் 22.

10. மனித உடலில் நீளமான எலும்பு, தொடை எலும்பு, சிறிய எலும்பு, காது எலும்பு.

11. ஒருவன தன் வாழ்நாளில் 2டன் எடையளவு தண்ணீர் அருந்துகிறான்.

12. நம் கை ஒரு கரண்டி உணவை நம் வாயருகே கொண்டு செல்ல மட்டும் சுமார் 30 தசை நார்கள் வேலை செய்கின்றன.

—நன்றி 'பூக்கூடை'



## விளையும் பயிர்

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் பி.காம்., இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் திரு. ச. இராமசுப்பிரமணியன். இவர் கதை கட்டுரை கவிதைகள் எழுதி வருகிறார். நாடகப் போட்டிகளிலும் பங்கு பெற்றுள்ளார். மாவட்ட அளவில் நடந்த மேற்கண்ட போட்டிகளில் பரிசும், பாராட்டுகளும் பெற்றுள்ளார்.

## குழந்தைகளே நடத்தும் தொலைக்காட்சி!

தொலைக் காட்சியில் 'சிறுவர் பகுதி' இடம் பெற்றிருப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், சிறுவர்களே முழுப் பொறுப்பேற்று நடத்தும் தொலைக்காட்சி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோமா?

அமெரிக்கத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை அங்கே மிகப்பெரிய அளவில் கிளை நிலையங்களுடன் இயங்கி வருவது மூன்று தொலைக்காட்சி அமைப்புகள்.

தொலைக்காட்சியைக் கண்டு களிப்போரில் மூன்றில் ஒரு பங்கினர் - அதாவது ஏறத்தாழ 55 லட்சம் பேர் 12லிருந்து 18 வயதுக்குட்பட்டவர்கள். இவர்களது ஈடுபாட்டிற்குத் தகுந்த நிகழ்ச்சிகள் ஏதும் இல்லையே என்று நான்கு ஆண்டுகளுக்கு முன் ஏங்கினார் கிம்பர்லி மெஹர் என்ற சிறுமி.

வெறுமனே ஏங்கி நில்லாது செயலிலும் இறங்கினார் மெஹர். அப்படிப் பிறந்ததுதான் ''வாஷிங்டன் நியூஸ் கிட்ஸ்டைல்'' என்ற தொலைக் காட்சி அமைப்பு.

சிறுவர் சிறுமியர் தமக்காகத் தாமே வழங்கும் பல்சுவை நிகழ்ச்சிகளில் போர் ஆயுதங்கள், டால்ஃபின் என்ற கடற் பிராணிகள் முதலியன உட்பட நாட்டு நடப்புகளும் மற்றும் உலகச் செய்திகளும் அடக்கம்.

முதல் அமெரிக்க சிறுவர் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என்ற பெருமையைப் பெறுபவர் கிம்பர்லி மெஹர். அவருக்கு வயது எத்தனை தெரியுமா? பதினான்கு!

# கம்ப்யூட்டர் தகவல்களைத் தொலைபேசியில் அனுப்பலாம்!



அறிவியல் வேகமாக வளர வளரப் பல விந்தைமிகு நிகழ்ச்சிகள் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன.

இதோ அவற்றுள் ஒன்று:

கம்ப்யூட்டர் சாதனம் அளிக்கின்ற புள்ளி விவரத் தகவல்களைத் தொலைபேசி மூலமாகத் தொலைவில் உள்ள இடங்களுக்கு அனுப்பும் நவீன தொழில் நுட்ப வசதியை அஞ்சல் தந்தித்துறை அமல் செய்து உள்ளது.

எஸ்.டி.டி. வசதியுள்ள நகரங்களுக்கிடையே ஆரம்பத்தில் இந்த வசதி இணைக்கப்பட்டிருக்கும். இது எப்படி இயங்குகிறது என்பது குறித்து சென்னையிலும் திருச்சியிலும் சந்தாதாரர்களுக்கு விளக்கிக் காட்டப்பட்டது.

ஒரு கம்ப்யூட்டரையோ அல்லது புள்ளித் தகவல்களை மின்அதிர்வு சமிக்ஞைகள் மூலம் அனுப்பக் கூடிய தனிப்பட்ட சாதனத்தையோ தொலைபேசியில் இணைத்துவிடலாம்.

வளருகின்ற ஒரு நாட்டில் தகவல்கள் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு மிக வேகமாகச் செல்ல வேண்டிய தேவை மிகவும் அதிகம். இதற்கு இந்தப் புதிய வசதி பெரிதும் உதவியாக இருக்கும்.

இப்போது புழக்கத்தில் உள்ள 'டெலக்ஸ்' மூலம் 50 மின் அதிர்வுப் புள்ளிகள் அனுப்புகிற அதே நேரத்தில் இந்தப் புதிய வசதியின் மூலம் 1200 மின் அதிர்வுப் புள்ளிகளை அனுப்ப இயலும்.

கம்ப்யூட்டரையோ அல்லது புள்ளிகளை அனுப்புகிற சாதனத்தையோ தொலைபேசியில் இணைப்பதற்கு முன்பாக, தொலைபேசி எண்களைச் சுழற்றி நாம் யாருக்குப் புள்ளிகளை அனுப்புகிறோமோ அவரை அழைத்து, தொடர்பு கிடைத்ததும் இணைத்துவிட வேண்டும்.

இந்த நவீன உயர் தொழில் நுட்ப வசதியைப் பயன்படுத்திக் கொள்ள ஆண்டு ஒன்றுக்கு ரூ 6 ஆயிரம் சந்தா செலுத்த வேண்டும். பதிவு செய்த மின் அதிர்வு சமிக்ஞைகளை அனுப்புவதற்கான சாதனத்தைச் சொந்தத்தில் வைத்திருப்பவர்கள் ரூ 3 ஆயிரம் சந்தா செலுத்தினால் போதும்.

# சேமிப்பு

— எழிற்கோவன் —

வரவுக்கேற்ற செலவைச் செய்தால்
வாழ்க்கை உயருமே! — அந்த
வரவில் கொஞ்சம் சேர்த்து வைத்தால்
வளமை மலருமே!

எறும்பு இனங்கள் உணவைச் சேர்க்க
எங்கும் உலவுமே—அந்த
இனிய உணவை எடுத்து உண்டு
என்றும் குலவுமே!

நாமும் வாழ்வில் சேர்க்கக் கற்றால்
நன்மை வளருமே—நாடும்
நாட்டின் பன்மைச் செல்வம் பொங்கி
நாளும் பெருகுமே!

வானமழையின் துளிகள் பொங்கி
வளர்க்கும் வெள்ளமே—வையம்
வாழ்த்தும் நீரின் கோலம் தந்து
வளமை அள்ளுமே!

சின்னஞ்சிறு செல்வங் கூட
சேர்க்க நிறையுமே—என்றும்
சிக்கனத்தை யாளும் மாந்தர்
சிறக்க இயலுமே!





## விண்வெளியில் நடந்த முதல் பெண்மணி!

விண்வெளியில் நடந்த முதல் பெண்மணியாக, ரஷ்ய விண்வெளி வீராங்கனையான ஸ்வெத்லானா சவித்ஸ்கயா விளங்குகிறார். 25.7.'84 அன்று அவர் இச்சாதனையைப் புரிந்தார்.

அவருடன் விண்வெளி வீரர் விளாடிமிர் தஷானிபெகோவும் விண்வெளியில் நடந்தார்.

ஸ்வெத்லானா சவித்ஸ்கயா, தஷானி பெகோவ், இகோர் வொல்க் ஆகிய 3 பேரும் சோயுட்-டி-2 விண்கலத்தில் விண்வெளிப் பயணம் மேற்கொண்டனர்.

கடந்த 167 நாட்களுக்குமேல் விண்வெளியில் ஆராய்ச்சி செய்து வரும் எல்ரோனிப் கிஜிம், விளாடிமிர் சொலோல்கேவ், ஒலக் அகசோவ் ஆகியோர் தங்கியுள்ள 'சல்யூட்' விண்வெளிக் கூடத்துக்குள் அவர்கள் சென்றனர்.

பின்னர் அங்கிருந்து ஸ்வெத்லானா சவித்ஸ்கயா, விளாடிமிர் தஷானி பெகோவ் இருவரும் வெளியே ,வந்து விண்வெளியில் நடந்தனர்.

ஸ்வெத்லானா தற்போது 2-வது முறையாக விண்வெளிப் பயணம் செய்கிறார். ஏற்கெனவே 1982 ஆகஸ்ட் மாதம் 'சல்யூட்-7' விண்வெளிக் கூடத்தில் 9 நாட்கள் அவர் தங்கியிருந்தார்.

## சோழர் காலத்தில் "கெஜட்டட் ஆபீசர்கள்!"

ஆட்சித் திறமைக்குப் பெயர் பெற்றிருந்த சோழர் காலத்தில், அரசனுடைய ஆணையை ஓலையில் திருமந்திர ஓலை என்பவர் எழுதுவார். இவர்களுக்குத் தலைமையாக இருந்தவர் திருமந்திர ஓலை நாயகம். இவர்கள் அனுப்பும் அரசாணை ஓலைகள்தான் அக்காலத்தின் கெஜட்!

அரசனது கட்டளையைக் கீழுள்ளவர்களுக்கு அறிவித்து, அவர்கள் தரும் பதிலை மேலிடத்திற்குச் சேர்ப்பவர், விடையிலதிகாரி.

இவர்களுக்குக் கீழே இரு பிரிவினர் பணியாற்றினார்கள். அவர்கள் பெருந்தனம் அல்லது பெருதரம், சிறு தனம் அல்லது சிறுதரம் எனப்பட்டனர். இவர்களில் பெருந்தனக்காரர்கள் சோழர் காலத்தில் 'கெஜட்டட் ஆபீசர்கள்'

16 ஆம் நூற்றாண்டில் வெனிநாட்டில் வழங்கி வந்த ஒரு செப்புக் காசுக்குக் கெஜட் என்று பெயர். அந்த நாட்டில் முதன் முதல் வெளியான செய்தித்தாள் கெஜட் என்ற நாணயத்திற்கு விற்கப்பட்டதால், அது கெஜட் என்று பெயர் பெற்றுவிட்டது காற்றில் பறந்து வந்து காதில் விழுந்த செய்திகளே இதில் ஆரம்ப காலத்தில் இடம் பெற்றன.

கெஜட் என்ற இந்த வார்த்தை ஃபிரஞ்சு மொழிக்கும் போயிற்று அங்கிருந்து ஆங்கிலத்திற்குத் தாவியது. இங்கிலாந்தில் வெளிவந்த கெஜட்டில், மாய மந்திரம், கொலை கொள்ளை, ஆதாரமில்லாத அரசியல் பற்றிய செய்திகளே அதிகமாக இடம் பெற்றதால் மக்கள் மத்தியில் இதற்கு மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டது.

பிறகு இது அரசாங்கமே வெளியிடும் அரசிதழாக மாறியது. கெஜட் என்றாலே செய்தித்தாள் என்று பொருள் கொண்ட காலமும் இருந்தது. ஸ்பெயின் நாட்டிலும் கெஜட்டா என்ற பெயரில் நாணயம் இருக்கிறது.

ஆதாரம்: சதாசிவ பண்டாரத்தாரின் சோழர் வரலாறு.

தகவல்: —மலையமான்

□□□□□□□□□□□□□□□□□□□□

### செல் அரிக்காத மரம்

செல், கரையான் முதலியவைகளால் பாதிக்கப்படாத மரம் ஒன்றை ஜப்பானின் பெரிய பைபர் போர்டு தயாரிக்கும் கம்பெனி இப்போது தயாரிக்கும் வழியைக் கண்டுபிடித்துள்ளது. கியோடோ பல்கலைக்கழக ஆராய்ச்சி நிபுணர்கள் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படும் இம்மரங்கள் 1985 முதல் விற்பனைக்கு வரும்.

## பல்நோயை இல்லாமல் வாழலாம்



வணக்கத்திற்குரிய
காஞ்சி மாமுனிவர்
**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்**
அவர்களின் அருள் ஆசி.

பயிரிடுவோர்க்கே நிலம் சொந்தம் என்று இந்திய குடியரசு கொள்கையாதலால், நிலங்களின் வருமானத்தை நம்பியிருந்த ஆலயங்கள், தர்ம ஸ்தாபனங்கள் தர்மங்களை நடத்துவது கஷ்டமான நிலையில் உள்ளது. இதை மனதில் கொண்டு தமிழ்நாடு அரசு உபரி வருமானம் உள்ள சில கோயில்களின் நிரந்தர நிதியிலிருந்து ஏழு கோடி ரூபாய் ஒதுக்கி இந்த தர்மங்களைகோயில்களில் ஒரு கால பூஜையாவது நடக்க, நிரந்தரமாக நடக்க ஏற்பாடு செய்துள்ளது. இந்த தர்மத்திற்கு மேலும் ஏழு கோடி ரூபாய் வரை நிலங்களை பயிரிடும் விவசாயிகளும், தொழில்,வியாபாரம் செய்யும் தர்மசிந்தனை உள்ளவர்களும் உதவி செய்ய கேட்டுக் கொள்கிறோம். ஏழைகளின் நிதியும் இதில் சேர வேண்டுமென்பது எங்கள் ஆசை. கிராம தேவதைகள் கோயில்களிலும், பஜனை கோயில்களிலும் ஒருகால் பூஜையும், உற்சவமும் நடத்த ஏற்பாடு செய்தல் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.



## அறநிலையத் துறையின் ஆக்கப்பணிகள்



தென்னிந்திய கலைச் செல்வங்களாக விளங்கும், தமிழகத் திருக்கோவில்களின் திருவாகத்தினைக் கண்காணிக்கும் பொறுப்பினை தமிழ்நாடு அரசு,ஏற்று கடந்த சில ஆண்டுகளாக சட்ட திருத்தங்கள் மூலமாகவும். ஆணைகள் மூலமாகவும்' திருவாக சீர்திருத்தங்கள் பல உண்டாக்கி திருக்கோவில்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வருகிறது.

இத்துறையின் ஆளுகையின் கீழ் ஆண்டுவருமானம் ரூ. 10,000க்கு கீழ்பட்டு 32659 நிறுவனங்களும் ரூ. 10,000/-க்கு மேல் ரூபாய் ஒரு லட்சத்திற்குட்பட்டு 1375 நிறுவனங்களும். ஒரு லட்சத்திற்கு மேற்பட்டு 196 நிறுவனங்களும் ஆக மொத்தம் 34230 நிறுவனங்கள் உள்ளன.

இவற்றில்2572 நிறுவனங்கள்1977ம்ஆண்டிற்கு பின் இத்துறையின் ஆளுகைக்குள் கொணடு வரப் பட்டவையாகும்.மொத்த நிறுவனங்களில் 34230ல் நிர்வாகச் செலவுக்காக உதவித் தொகை மற்றும் தணிக்கை கட்டணம் வசூல் செய்யப்படுபவை 25930. எஞ்சியுள்ள 8300 நிறுவனங்கள் ஆண்டு வருமானம் ரூ. 200க்கு உட்பட்ட சிறிய கோவில்களாகும்.

### அசையாச் சொத்துக்கள் மற்றும் வருமானம்:

திருக்கோவில்களுக்குச் சொந்தமாக உள்ள நஞ்சை புன்செய் வகையறா நிலங்கள் 5·25 லட்சம் ஏக்கரிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு எதிர்பார்க்கப் படும் வருமானம் ரூ. 7 கோடி ஆகும். சாகுபடிதாரர்கள் பாதுகாப்புச்சட்டம் கடன் ஆகியவற்றின் காரணமாக மேற்கண்ட நிலங்களிலிருந்து 1392ம் பசலிமுடிய வரவேண்டிய குத்தகை பாக்கி ரூ. 31·5 கோடியை உடனடியாக வசூலிக்க இயலாத நிலையில் உள்ளது. திருக்கோவில்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள், மனைகள் ஆகியவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஆண்டு வருமானம் சுமார் ரூ. 1·75 கோடியாகும். இவ்வினத்தில் 1392ம் பசலி முடிய வரவேண்டிய பாக்கி ரூ. 3.25 கோடியாகும்.

### முதலீடுகள்:

கடந்த ஆறு ஆண்டுகளுக்குமுன் ரூ. 4·69 கோடியாக இருந்த கோவில் உபரிநிதி முதலீடுகள் 1984இல் ரூ. 26.22 கோடியாக உயர்ந்துள்ளது

### திருப்பணிகள் மற்றும் கட்டுமானப்பணிகள்:

கடந்த ஆறு ஆண்டுகளில் ரூ. 10 கோடி மதிப்புள்ள 704 திருப்பணி வேலைகளுக்கான மதிப்பீடுகளும் ரூ. 8 கோடி மதிப்புள்ள 843 இதர கட்டுமானப் பணிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### குடமுழுக்கு விவரங்கள்:

தமிழ்நாட்டில் திருக்கோவில்களில் ஆறுஆண்டுகளில் அதாவது 1978முதல் 1984ம்ஆண்டுவரை மொத்தம் 455திருக்கோவில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன.

### ஆபரணங்கள் மற்றும் விலைமதிப்புள்ளவை:

திருக்கோவில்களுக்குச் சொந்தமான பொன், வெள்ளி நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களின் தற்போதைய நிலவரப்படி மொத்த மதிப்பு ரூ 49 கோடியாகும்

தமிழகத்தில் 9 திருக்கோவில்களில் தங்கத்தேர்கள் உள்ளன

### உற்சவர் சிலைகள் பாதுகாப்பு:

திருமேனிகள் தொல்பொருள் முக்கியத்துவம் ,கலைச்சிறப்பு ஆகியவற்றை கருத்தில்கொண்டு இவற்றை அடையாள பதிவு செய்ய 'எக்ஸ்ரே மற்றும் காமா ரே'' சாதனங்கள் வாங்கவும் வழிபாட்டில் இல்லாத இத்தகைய திருமேனிகளை ஒன்று சேர்த்து நவீன பாதுகாப்பாக வைக்கவும் தஞ்சை மாவட்டத்தில் சுமார் ரூ. 85 லட்சம் மதிப்பீட்டில ஆய்வு மற்றும் பாதுகாப்புக்கூடம் அமைக்க மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன இந்த வகைக்கு 1983-84 நிதி ஆண்டில் ரூ. 10 இலட்சம் அரசுநிதியுதவி வழங்கப்பட்டுள்ளது

### சமூகநலப்பணிகள்:

தமிழ்நாட்டுத் திருக்கோவில்கள் சார்பில் 6 கல்லூரிகள், 10 மேல்நிலைப்பள்ளிகள், 2 தொழிற்பயிற்சிப் பள்ளிகள், 9 நடுநிலை ஆரம்ப மற்றும் மெட்ரிக் பள்ளிகள், 13 ஆகம பாடசாலைகள், 3 நாதஸ்வரப் பள்ளிகள். 22 மருத்துவமனைகள், ஒரு ஊமையர் செவிடர் பள்ளி, 37 அன்பு இல்லங்கள், 3 முதியோர் இல்லங்கள், 202 நூலகங்கள் மற்றும் 106 கல்யாண மண்டபங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

வழிபடுவோர் வசதிக்காக முக்கிய திருக்கோவில்களில் சகல வசதிகளையும் கொண்ட நூற்றுக்கணக்கான அறைகள், குடில்கள் மற்றும் இலவச விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

### கம்பர் கோட்டம்:

இத்துறையின் சார்பில் தஞ்சை மாவட்டம் தேரெழுந்தூரில் 17—3—84 மற்றும் 18—3—84 தேதிகளில் மிகச் சிறப்பான முறையில் கம்பர் விழா நடத்தப்பட்டது. இதே போன்று இனிதொடர்ந்துஆண்டுதோறும் பங்குனிஉத்திரம் நாளன்று கம்பர்விழா தேரெழுந்தூரில் நடத்த அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வகைக்கு ரூபாய் 2·5 லட்சம் அளவில் ஒரு நிலையான வைப்புநிதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கம்பர் பிறந்தவூரான தேரெழுந்தூரில் ரூபாய்20லட்சம் மதிப்பீட்டில் 'கம்பர்கோட்டம்' அமைப்புப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்த வகைக்கு அரசுமான்யம் ரூ. 8 லட்சமும் ஆலயங்களில் உபரி நிதியிலிருந்து ரூ. 12 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

### வெளிநாடு மற்றும் பிறமாநிலங்களுக்கு நிதிஉதவி:

தமிழ்நாட்டில் திருக்கோவில்களின் உபரிநிதியிலிருந்து இலங்கை அருள்மிகு திருக்கேதீஸ்வரர் திருக்கோவில் திருப்பணிக்கு ரூ. 1.25 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது

இதுதவிர தற்சமயம் கலிபோர்னியா சான்பிரான்ஸிஸ் கோவில் கட்டப்பட்டுவரும் இந்து கோவில்களுக்கு ரூ. 3,21,370 மதிப்புள்ள கற்சிலைகள், வெண்கல சிலைகள், செப்பு கலசங்கள் மற்றும் கோடா உபகார சாமான்கள் ஆகியவைகளை வழங்க ஏற்பாடாகிவருகிறது

பாரதத்தின் இதரமாநிலங்களில் கட்டப்பட்டுவரும் திருக்கோவில்களுக்குதமிழகத்திலுள்ளதிருக்கோவில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 3,55,000/- நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.

## தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

பழனி.



பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தனது உபரிநிதியிலிருந்து ரூபாய் இரண்டு கோடி கீழ்க்கண்ட திட்டங்களுக்காக அளிக்கிறது.

∴ திருக்கோயில்களில் மாதச் சம்பளம் ரூ.100/-க்கு குறைவாக பெறும்அர்ச்சகர், ஓதுவார்மற்றும் நாதஸ்வரவித்வான்களுக்குஉதவி செய்யும் திட்டம்,

∴ கிராமப்புறங்களில் போற்றத் தக்க புகழ்வாய்ந்த திருக்கோயில்களை கட்டவும், புதுப்பிக்கவும், நிதிஉதவி செய்ய தமிழக அரசு உருவாக்கியுள்ள திட்டம்.

# திருக்கோயில்கள் பராமரிப்பிற்கு ரூ.ஏழு கோடி நிதியமைப்பு

கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப.
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை.

இந்தியத் திருநாட்டிலுள்ள மாநிலங்களில் தமிழகத்தில்தான் மிக அதிக திருக்கோயில்கள் உள்ளன. அவைகளில் ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியவர்களால் பாடல் பெற்ற புனிதமான திருக்கோயில்கள் பெருமளவில் உள்ளன. இம்மாதிரி பெரிய இறை உறையும் பதிகளைக் கட்டி முடித்த மாமன்னர்களும், குறுநிலத்தலைவர்களும் மிக அதிக அளவில் சொத்துக்களை, அவைகளின் பராமரிப்புக்காக அளித்துச் சென்றனர். காலப்போக்கில் இந்த சொத்துக்களிலிருந்து வரக்கூடிய வருமானம் குறைந்துவிட்டது, மேலும் சமுக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களினால் இத்திருக்கோயில்களைச் சீரிய முறையில் பராமரிக்க இயலாது போயிற்று.

சில திருக்கோவில்களில் விளக்கேற்றி அன்றாட

வழிபாடு செய்தல் மற்றும் அர்ச்சகர், ஓதுவார் மற்றும் முக்கியப் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சொற்ப சம்பளம் கொடுத்தல் போன்றவற்றிற்குக் கூட தேவை யான நிதி வசதி இல்லாமல் இருக்க, பல திருக்கோயில்கள் மிகவும் பழுதுற்ற நிலையில் உள்ளன. இவைகளைப் பராமரிக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும் இந்த சூழ்நிலையில் புனிதமான இந்தத் திருக்கோயில்களில் குறைந்தது தினமும் ஒரு நேர வழிபாடாகிலும் நடத்துவதற்கும் அர்ச்சகர்கள் ஓதுவார்கள் போன்ற குறைந்த ஊதியம் பெறும் பணியாளர் நலன் காப்பதற்கும் வசதியாக நிதி ஏற்படுத்தத் திட்டம் ஒன்றினை தமிழக அரசு தீட்டியுள்ளது. மேலும் கிராமப் புறங்களில் போற்றத்தக்கதாவும், புகழ் வாய்ந்ததாகவும் உள்ள கிராமத் திருக்கோயில்களைக் கட்டவும், புதுப்பிக்கவும் ஊரகங்களில் கோரிக்கைகள் எழுகின்றன. தமிழக சட்டப் பேரவையில், வரவு செலவுத் திட்ட கூட்டுத் தொடரில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பற்றிய 1984-85-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தின் போது அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.இராம. வீரப்பன் அவர்கள் திருக்கோயில்களின் முன்னேற்றத்திற்காகவும் பணியாளர்களின் உதவிக்காகவும் மூன்று தனித் தனி நிதி அமைப்பது பற்றி அறிவித்தார்கள்.

இந்த மூன்று வகை நிதிகளுள் ஒன்று தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து மாற்றம் செய்யப்படவுள்ள ரூ.5 கோடியினைக் கொண்டதாகும். மூலதனம் கரையாது கட்டாக பேணப்படும். அதன் பேரில் வரப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு தொன்மையான, நலிந்து நிற்கும் திருக்கோயில் சன்னதிகளில் விளக்கேற்றி ஒரு கால வழிபாடாகிலும் முறைப்படி செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும். முதல் கட்டமாக இந்த நிதியினை அமைக்கும் பொருட்டு, திருக்கோவில்களிலிருந்து இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையருக்கு ரூ. 2.5 கோடி நிதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோவில் நிதியிலிருந்து நிதி மாற்றம் செய்யப்படும் ஒரு கோடி ரூபாயினைக் கொண்டு இரண்டாவது நிதி அமைக்கப்படும். மாதம் ரூ. 100/-க்கும் குறைவாக ஊதியம் பெறும் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் மற்றும் நாதஸ்வர வித்வான்கள் போன்ற திருக்கோவில் பணியாளர்களுக்கு உதவி புரிய இந்த நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித தொகை பயன்படுத்தப்படும்.

மூன்றுவது நிதிக்கு பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூ. 1 கோடியினை ஒதுக்கி அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானம் கிராமப்புறங்களில் உள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்தல் மற்றும் பழுது பாாதலுக்காத பயன்படுத்தப்படும்.

# வங்கி நடத்திய விந்தை விழா!

ஏழை எளியவர்களுக்குக் கடன் வழங்கும் விழாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அந்தக் கடனை ஒழுங்காகத் திருப்பிக் கொடுத்த ஏழை எளியவர்களுக்கு நன்றி கூறும் விழா பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோமா?

இத்தகைய விந்தை விழா ஒன்றை, சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள கார்ப்பரேஷன் வங்கி நடத்தியது.

7-8-'84 அன்று நடந்த இந்த வங்கி விழாவுக்கான அழைப்பிதழில் இப்படி அச்சிடப்பட்டிருந்தது:

''இது கார்ப்பரேஷன் வங்கி நடத்தும் வழக்கமான 'கடன் மேளா' அல்ல! பரந்த நோக்கத்துடன் பாரதப் பிரதமர் அறிவித்த இருபது அம்சத் திட்டத்தின்கீழ், வாங்கிய கடனை, கடமையுணர்வோடும் நன்றியறிதலோடும் திருப்பிக் கொடுக்கும் நலிந்த ஏழைகளை' 'வாழ்த்தும் மேளா!'

விழாவுக்குச் செல்கிறோம். அங்கே நம்மையெல்லாம் வரவேற்பவர் இந்தவங்கிக் கிளை. மேலாளர் திரு கே. சீனிவாசன்.

''கடனைத் திருப்பிச் செலுத்தி நாங்கள் கடமையுணர்வு உள்ளவர்கள் என்பதை மெய்ப்பித்துக் காட்டியவர்கள் நீங்கள்'' என்று கூறியபோது எதிரே அமர்ந்திருந்த அந்த ஏழை எளிய மக்கள் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது.

''சமுதாயத்தில் நலிந்த பிரிவினரை ஊக்குவிக்கும் வகையில், இதுபோன்ற கடன்கள் தரப்படுகின்றன. வங்கிக் கடனால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்'' என்றும் அவர் தெரிவித்தபோது எல்லாரும் கரவொலி எழுப்பினர்.



திரு ராமசேஷன்




கிளைமேலாளர் திரு கே. சீனிவாசன் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

இந்த வங்கியில் கடன் வாங்கித் திருப்பித் தந்த சிலரைச் சந்திக்கிறோம்:

செருப்புத் தைக்கும் தொழிலாளி திரு ஜி. குருசாமி (வயது-32) கூறுகிறார்:

''முதலில் நான் ரொம்பக் கஷ்டப்பட்டேன். வருகிற பத்து ரூபாய் வருமானத்தில் இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு குடும்பத்தை நடத்த முடியவில்லை. எங்கையாவது கடன் வாங்கலாம் என்றாலோ அதிக வட்டி கொடுக்க வேண்டியிருந்தது. அந்தச் சமயத்தில்



திரு ஏ. வி. ராஜகோபால்

தான் நான் இந்த வங்கியை நாடினேன். முதலில் எனக்கு ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தார்கள். அதை ஒழுங்காகக் கட்டி விட்டேன். பிறகு மூவாயிரம் ரூபாய் கடன் கொடுத்தார்கள். அதையும் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தி வருகிறேன். முன்பு பத்து ரூபாய் வருமானம் வந்தது. இப்போது ஒரு நாளைக்கு ஐம்பது ரூபாய் கிடைக்கிறது. இதில் என் தம்பியைக்கூடப் படிக்க வைக்கிறேன்''

இதேபோல, திரு ஏ. வி. ராஜகோபால் (வயது -52) இந்த வங்கியில் கடனுதவி பெற்றவர். நான்கு குழந்தைகள் உள்ளவரும், செருப்புத் தைக்கும் தொழிலில் முதலில் கஷ்டப்பட்டவர். பிறகு இந்த வங்கியை நாடி முதலில் ரூ. 500ம் பிறகு, ரூ. 3,000மும் கடன் பெற்றவர்.

முதலில் ஒரு நாளைக்கு, ஐந்து, பத்து என்று சம்பாதித்தவர் இன்று சொந்தமாகத் தொழில் நடத்தி ஒரு நாளைக்கு ரூ. 20-க்கு மேல் சம்பாதிக்கிறார்.

இட்லிக்கடை வைத்து நடத்தும் திருமதி உண்ணாமலை அம்மாள் (வயது-60) ரூ. 500, ரூ. 1000, ரூ. 1500 என்று படிப்படியாகக் கடன் உதவி பெற்றவர். 'முன்பு சரியாக வருமானம் கிடைக்காது. ரொம்பவும் கஷ்டப்பட்டேன். ஆனால், பாங்க் கொடுத்த கடனாலே இப்ப முன்னை விட வியாபாரம் நல்லா நடக்குது' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார். இவருக்கு 3 பெண்கள் ஒரு ஆணும் உள்ளனர். கணவருக்கு வேலை இல்லை. எல்லாரும் இவரது வருமானத்தை நம்பியே வாழ்கிறார்கள். தினமும் ரூ. 20-க்கு மேல் வருமானம் வருகிறது. வாங்கிய கடனையும் ஒழுங்காகத் தவணை முறையில் திரும்பித் தருகிறார் இவர்.

பூ வியாபாரம் செய்யும் திருமதி சந்திரா (வயது-34) என்ன கூறுகிறார்?

''எனக்கு ஐந்து குழந்தைகள். எல்லாரும் படிக்கிறார்கள். முதலில் வட்டிக்குப் பணம்வாங்கி பூ வியாபாரம் தொடங்கினேன். வட்டி கட்டவே சரியாக இருந்தது. பிறகுதான் இந்தப் பாங்கை நாடி 500 ரூபாய் கடன் வாங்கினேன். தவணையை ஒழுங்காகச் செலுத்தி வருகிறேன். மேலும் கடன் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஒரு நாளைக்கு ரூ. 10-க்கு மேல் வருமானம் கிடைக்கிறது. என் கணவர் ஒரு இடத்தில் வேலை செய்கிறார். எனக்கு வரும் வருமானத்தையும் வைத்துக் கொண்டு குடும்பத்தைக் கஷ்டமில்லாமல் நடத்திச்செல்கிறேன்.''



திருமதி சந்திரா

திரு ராமசேஷன், கால் ஊனமுற்றவர். பத்திரத் தாள்கள் ( Stamp Paper ) விற்பனை செய்து வருகிறார். இவருக்கு இந்த வங்கி 10,000 ரூபாய் கடன் தந்திருக்கிறது. இதை வைத்துக்கொண்டு இவர் தொழிலை மேலும் பெருக்கிக் கொண்டுள்ளார். தட்டச்சு செய்தல், புகைப்பட நகல் எடுத்தல் போன்றவற்றுக்கான கருவிகளையும் வாங்கியுள்ளார். மாதம் ரூபாய் 3000-க்கு மேல் வருமானம் கிடைக்கிறது. இவர் ஆறு பேருக்கு வேலை வாய்ப்பும் கொடுத்திருக்கிறார்..



திரு குருசாமி

இவர்களையெல்லாம் பார்க்கும்போது நமக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அன்று நடந்தவிழாவில் பேசிய சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதிபதி திருகே.சண்முகம், இந்த வங்கியின் துணைப் பொதுமேலாளர் திரு கே. ஆர். ஷெனாய், உதவிப் பொதுமேலாளர் திரு பி. கே. ஆல்வா, மண்டல மேலாளர் திரு என். சுப்பிரமணியன் ஆகியோரும் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்து அந்த ஏழை எளிய மக்களை வாழ்த்தியதை நாம் மறக்க முடியாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, இட்லிக்கடை நடத்தும் திருமதி உண்ணாமலை அம்மாள் ஏற்புரை வழங்கியது எல்லாரையும் கவர்ந்தது மட்டுமல்ல; புதுமையாகவும் இருந்தது.

இந்த இனிய விழாவை நினைவுபடுத்தும் வகையில் என்னவோ அன்று எல்லாருக்கும் தேநீர் விருந்தும் வழங்கப்பட்டது!

—பி. வி. கிரி.



மகாகவி பாரதியாரின் தம்பி திரு விசுவநாதர் 17-7-84ல் மறைந்தார். அவரது நினைவாக வெளியிடப் பெறுகிறது இந்தக் கட்டுரை.

# பாரதியின் இளவல் விசுவநாதர்

—சீனி விசுவநாதன்

மகாகவிபாரதியார் படைப்புச் செல்வங்கள் தமிழர்களான நமக்கு மட்டுமே சொந்தமல்ல. பாரதமக்களுக்கும் - ஏன், உலக மக்களுக்குமே சொந்தம்என்பதை மெய்ப்பித்துக் காட்டியவர்கள் பற்பலர்.

பாரதியாரே தம்முடைய நூல்களில் ஒருசிலவற்றைத் தம் நண்பர்களின் உதவிபெற்றுப், பதிப்பித்து வெளியிடவே செய்தார். பாரதியால் அன்புடன் 'தம்பி' என்றழைக்கப்பட்ட பரலி சு. நெல்லையப்பர் 1917 முதல் 1919 வரை பாரதி நூல்களில் ஒருசிலவற்றைப் பதிப்பித்தார். 1918 முதல் 1920 வரை பாரதியின் மொழிபெயர்ப்பு நூல்களையும், கதை நூல் ஒன்றையும் சுதேசமித்திரன் காரியாலயத்தினர் வெளியிட்டனர்.

பாரதியாரே மீண்டும் தம் நூல்களை வெளியிடக் கருதி, 1919-20 ஆண்டுகளில் பலவித முயற்சிகளில் ஈடுபட்டார். தம்முடைய நூல் முயற்சிகளுக்கு உதவி கோரி அவர் விடுத்த அறிக்கைகள் போதிய அளவு பயன்தரவில்லை.

1921 செப்டம்பர் 11ல் பாரதியார் மரணம் அடைந்ததும், நண்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, செல்லம்மா அவர்கள் தமது சகோதரர் அப்பாத்துரை அவர்களின் உதவியுடன் ''பாரதி ஆச்ரமம்'' என்றவொரு நிறுவனத்தை அமைத்தார்

முதல் கட்டமாக, 1922ல் 'சுதேச கீதங்கள்' என்ற பெயரில் பாரதி பாடல்களின் முதலிரு தொகுதிகள் வந்தன. எதிர்பார்த்த அளவு நூல்களின் விற்பனை உற்சாகம் தரும்படியாக இல்லை. தவிர, ஏதோ மனத்தாங்கல் காரணமாகத் தமையனும் தங்கையும் பிரிந்தனர். இதனால், புத்தக வியாபாரமும் நின்று விட்டது. அப்பொழுது திருவல்லிக்கேணியில் இருந்த தட்சிண பாரத் ஹிந்தி பிரசார சபையின் காரியதரிசியான ஹரிஹரசர்மா அவர்களிடம் புத்தக விற்பனைக்கு வழி செய்யுமாறு செல்லம்மா கேட்டுக் கொண்டார். இவர் ஒரு வகையில் பாரதிக்கு உறவினர். சர்மா அவர்களும் விற்பனையாகாமல் தேங்கிக்கிடந்த நூல்களின் பிரதிகளை ஹிந்தி பிரசார சபையின் கட்டிடத்தின் ஓர் அறையில் இருப்பு வைத்துக் கொண்டு, நூல்களைச் சிறிதுசிறிதாக விற்று, கிடைத்த தொகையைப் பாரதி குடும்பத்தாரின் செலவுக்குக் கொடுத்து வந்தார்.

ஆனால், இந்தத் தொகை குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இல்லை. தவிர, தம் இளைய மகள் சகுந்தலாவுக்குத் திருமணம் செய்து வைக்கவும் செல்லம்மா விரும்பினார். இந்த நிலைமைகளை விளக்கிச் செல்லம்மா, பாரதியின் இளைய சகோதரரான சி. விசுவநாதன் அவர்களுக்கு எழுதினார்.

விசுவநாதன் அப்பொழுது மானாமதுரையில் பள்ளி ஆசிரியர் வேலை பார்த்துவந்தார். இவரும், ஹரிஹர சர்மாவும் கூடிப் பேசி யோசனை செய்து, பாரதி நூல்களை ஈடாகவைத்து, ரூ. 2000 கடன் வாங்கி மானாமதுரையில் சகுந்தலாவின் திருமணத்தை நடத்தி வைத்தனர். இது நடந்தது 1924ஆம் ஆண்டில்.

திருமணக் கடனைத் தீர்க்கவும் செல்லம்மாளின் ஜீவனத்திற்கு நிரந்தர ஏற்பாடு செய்யவும் வேண்டிய நிர்ப்பந்த நிலை; ஆனால், புத்தக விற்பனையில் எவ்வித முன்னேற்றமும் காணப்படாத சூழ்நிலை. பலவித பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் திட்டம் வகுத்தார் விசுவநாதன். ஆம்; சற்றும் எதிர்பாராத முறையில் அவர் துணிச்சலுடன் பாரதி நூல்களை வெளியீடு செய்வதற்கென்றே ''பாரதிபிரசுராலயம்'' கண்டார்; ஹரிஹரசர்மா அவர்களையும், சகுந்தலாவின் கணவர் நடராஜன் அவர்களையும் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொண்டார்.

பாரதியார் மேற்கொண்ட நூல் முயற்சிகள் பயனளிக்காத நிலையில், செல்லம்மாளின் வெளியீட்டுப் பணிகள் வெற்றியடையாத நிலையில், வேறு எவருமே துணிந்து பாரதி நூல்களை வெளியிட முன்வராத நிலையில், துணிவையே துணையாகக் கொண்டு விசுவநாதன், பாரதி நூல்கள் பதிப்புக்கென்றே 'பாரதி பிரசுராலயம்' கண்டாரே, அதற்காகத் தமிழகமே அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

விசுவநாதரும், பாரதிநூல் வெளியீட்டு முயற்சியில் துணிவோடு கூட்டாளிகளுடன் இணைந்து, செயல்படாமல் இருந்திருப்பாரேயானால், பெரும்பாலான பாரதியின் செல்வங்கள் நமக்குக் கிடைக்காமலே போய் இருக்கும்.

விசுவநாதர் அவர்களின் கூட்டுப் பொறுப்பில் அமைந்த பாரதி பிரசுராலயம் பாரதியின் நூல்களை வெளியிடும் மாபெரும் பணியை ஏற்றுக்கொண்டது முதலாக, பாரதியின் நூல்கள் முறையாகத் தொடர்ந்து வெளிவரலாயின.

அதுநாள் வரை அச்சில் வெளிவராமலும், சிதிலமான நிலையில் அச்சுப்பிரதிகளாகவும்கையெழுத்துப்பிரதிகளாகவும் இருந்தவற்றைச் சீர்செய்து, ஒழுங்குபடுத்தி நூல்வடிவம் தரத்திட்டமிடப்பட்டது; முன்னர் வெளியான நூல்களுக்கு மறுபதிப்புக்கள் வெளியிடவும் வழிவகை செய்யப்பட்டது; பாரதி நடத்திய தொடர்பு கொண்ட இதழ்கள், கைப்பிரதிகள் எங்கெங்குக் கிடைக்கும் என்பதைத் தேடவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பாரதியின் தம்பி விசுவநாதன் பள்ளியாசிரியர் - பதிப்பாசிரியர் மட்டுமல்லர்; நூலாசிரியருங்கூட. இவரே ஒரு நூலை எழுதியிருக்கிறார். பாரதியின் நூல்களைப் படித்த மக்களும் படித்து இன்புறவேண்டும் - பயனடையவேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகவே 1929இல் ''Bharathi &

his Works'' என்ற சிறிய நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். இந்த நூலுக்கு ஏ.ரெங்கசாமி ஐயங்கார் முன்னுரை எழுதியுள்ளார். இது இவர் எழுதிய முதல் நூல். இதை ஆதார நூலாகக் கொண்டே பலர் விமர்சன நூல்கள் வரைந்துள்ளனர்.

கீதை மொழிபெயர்ப்பும், அம்மொழி பெயர்ப்புக்கான முன்னுரையும் செட்டிநாடு கானாடு காத்தான் பிரமுகர் வை.சு.ஷண்முகம் அவர்களிடம் இருப்பதையறிந்து, அவருடன் தொடர்பு கொண்டு மூலப்பிரதியைப்பெற்று நூல்வடிவில் வெளியிட்டார்.

'விநாயகர் நான்மணிமாலை' என்றொரு நூல் மிகவும் சிதிலமான நிலையில் காணப்பட்டது. அதில் சில வரிகள் பாரதியாராலேயே அடிக்கப்பட்டும், எழுதாமல் விடப்பட்டும் இருந்தன. ஓரிரு இடங்களில் என்ன திருத்தம் செய்திருந்தார் என்பமுத தெரியாமலும் இருந்தன. இதற்காகவேண்டி, கையெழுத்துப்பிரதியில் விடுபட்டுப் போனவரிகளைப் பூர்த்தி செய்துதரும்படி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களையும், தவயோகி சுத்தானந்த பாரதி அவர்களையும்விசுவநாதர் கேட்டுக்கொண்டார். கவிமணியும், கவியோகியும் இவரது வேண்டுகோளை ஏற்று, திருத்தமும் செப்பமும் செய்து கொடுத்தனர். அவர்கள் அப்படித் திருத்திக்கொடுத்தவரிகளை நகவளைவுக் குறிக்குள் இட்டு, தகுந்த குறிப்புரைகளுடன் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்படி வெளியிட்டது விசுவநாதரின் நேர்மைக் குணத்தையே நமக்குக் காட்டுகிறது.

பாரதியாரின் தமிழ்ப்படைப்புக்களை மட்டுமே பதிப்பித்து வெளியிட்ட நிலையில், பாரதியின் ஆங்கில எழுத்துக்களும் நூலாக்கம் பெறவேண்டும் என்பதிலும் விசுவநாதர் துடிப்பாக இருந்தார். பாரதியார் ஆங்கிலத்திலும் சிறந்த பாண்டித்யம் கொண்டிருந்தார் என்பதையும், அம்மொழியையும் பாரதியார் தமிழைப் போலவே மிக லாவகமாகவும், இனிதாகவும் கையாண்டார் என்பதையும் மக்கள் உணர வேண்டும் என்பது இவரது ஆசை.

1914-15ஆண்டுகளின் வாக்கில் ''காமன்வீல்'' (Common Weal) ''நியூ இண்டியா'' (New India) போன்ற பத்திரிகைகளில் பாரதியின் கட்டுரைகளும், பாடல்களும் வெளிவந்திருப்பதையறிந்தார். எனவே, அந்தப் பத்திரிகைகளில் உள்ளனவற்றைச் சேகரிப்பதற்காக, இவர் சுமார் ஒருமாத காலத்தை அடையாறு நூல்நிலையத்தில் செலவிட்டார். அதைப் போலவே பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்த ''ஆர்யா'' (Arya) என்னும் பத்திரிகையில் இடம் பெற்றிருந்த பாரதியின் எழுத்துக்களைத் தவயோகி சுத்தானந்தரின் துணைகொண்டு சேகரித்தார். இப்படி சேகரிக்கப்பட்ட ஆங்கில கட்டுரைகளும், பாடல்களும், Agni & other Poems Translatory என்றும் 'Essays and other Prose Fragments என்றும் இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. இந்நூல் தொகுதிகளுக்கு டாக்டர் சி.ஆர்.ரெட்டி அவர்களும், கே.எஸ்.வெங்கட்ரமணி அவர்களும் அணிந்துரை அளித்துள்ளனர்.

ஒரு சமயத்தில், பாரதியின் பாடல்கள் அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடும் சுதந்திர வீரர்களுக்கு எழுச்சியூட்டக்கூடிய போர்ப்பரணிப் பாடல்களாக அமைந்த காரணத்தால், பிரிட்டிஷ் அரசு பாரதி நூல்களுக்குத் தடை விதித்தது. பாரதிபிரசுராலயம் பல முறை போலீஸ் சோதனைக்குட்பட்டது.

இப்படிப்பட்ட தடைகளுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில் தான் பாரதி நூல்கள் வந்தன என்பதை நினைக்கும்போதுதான் விசுவநாதர் செய்த சேவையின் அருமையும் பெருமையும் தெரிய வரும்.

பாரதியார் தம்முடைய நூல்களை ஜப்பானியத் தீப்பெட்டிகளைப் போல் மலிவான விலையில் அச்சடித்து, பொது மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டவர். பாரதியின் இந்த ஆசையை ஓரளவு பூர்த்தி செய்த சாதனைக்குரியவர் விசுவநாதர். 800 பக்கங்கள் கொண்ட கவிதைத் தொகுப்பு நூலை இவர் 2 ரூபாய் 8 அணாவுக்கு வழங்கினார்.

பாரதியார் வாழ்ந்த காலத்திலேயே பாரதி நூல்களுக்குத்



எட்டயபுரத்தில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு தொடக்க விழாவில் பாரதியின் இளவலுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் நினைவுப் பரிசு வழங்குதல்.





பாரதியின் இளவலைப் பேட்டி காண்கிறார் கட்டுரை ஆசிரியர். பாரதி நூற்றாண்டு விழாக் குழுச் சிறப்பு அலுவலர் திரு சி. என். கிருஷ்ணபாரதி உடன் உள்ளார்.

தடை விதிக்கப்பட்டது. 1911ல் பிரிட்டிஷ் அரசு பாரதியின் 'கனவு', 'ஆறில் ஒரு பங்கு' ஆகிய நூல்களுக்குப் பறிமுதல் உத்தரவு பிறப்பித்ததும் உண்மை. இவ்விரு நூல்களையும் விசுவநாதர் பதிப்பிக்கவே செய்தார்.

'கனவு' நூலை ''ஸ்வ சரிதையும் பிற பாடல்களும்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட தொகுப்பில் பதிப்பித்தார்; அதே போன்று 'ஆறில் ஒரு பங்கு' என்ற சிறுகதையைப் ''பாரதி நூல்கள்-கட்டுரை''என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட தொகுதியில் சேர்த்துப் பதிப்பித்தார்.

பாரதியார் காலத்தில் வெளியான பாடல்களில் ஒருசில அவர் பதிப்பித்து /வெளியிட்ட நூல்களில்இடம்பெறவில்லை. ஆனால் பாரதியின் தம்பியான இவரோ, பல பாடல்களைத் தேடிக்கண்டுபிடித்து, தாம் அவ்வப்போது பதிப்பித்த நூல் தொகுதிகளில் வெளியிடவே செய்தார்.

1938, 1941ஆம் ஆண்டுகளில் பாரதிபிரசுராலயத்தின் இருகூட்டாளிகள் விலகிவிடவே, 1941ஆம் ஆண்டு முதற்கொண்டு பாரதிபிரசுராலயத்தைத் தன்னந்தனியராகவே நடத்தும் பெரும் பொறுப்பை விசுவநாதர் ஏற்றுக் கொண்டார். பொறுப்பேற்றுக் கொண்ட சமயங்களில் புதிய நூல்கள் வெளிவரவில்லையென்றாலும், மறுபதிப்பு நூல்கள் படங்கள் சேர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. இரண்டாம் உலக யுத்தகாலத்தில், கடுங் காகிதப் பஞ்சம் ஏற்பட்டு, அது பாரதி நூல்களின் பதிப்புப் பணிகளையும் பெரிதும் பாதித்தது. அச்சுத்தாள் விலை ஏற்றத்தின் காரணமாக, அச்சுத் தாள்களுக்குக் கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது. இந்நிலையிலும் நூல்களை அச்சிட்டு வழங்கினார்.

இப்படிப்பட்ட இயற்கைச் சோதனைகளையும் கடந்து, 1949ஆம் ஆண்டுவரைபாரதிநூல் பதிப்பாளராகத் திகழ்ந்தார் விசுவநாதன்.

அந்தக் காலத்தில், பாரதியின் ஒருசில தோத்திரக்கவிகளே பாடநூல்களில் இடம் பெற்றிருந்தன. இதைக் கண்ட விசுவநாதர் கவியின் தேசியகீதங்களையும் பாடநூல்களில் இடம்பெறச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் என் வேண்டுகோளுக்கிணங்க, தமது பசுமை நினைவுகளை இப்படி நினைவு கூர்ந்தார்:

''நான் பாரதியாரின் உடன்பிறப்பாகத் தோன்றியது ஒருதற்செயலான சம்பவம். அதுபோல பாரதியின் நூல்களை வெளியிட நேர்ந்ததும் மற்றொரு தற்செயலான சம்பவம். சந்தர்ப்ப வசத்தால் இந்த மாபெரும் தேசியப் பணியை ஏற்க நேர்ந்தது. ஏற்றபிறகுதான் இப்பணியின் தன்மை என்ன, பரிமாணம் என்ன, இதிலுள்ள கஷ்டங்கள் எத்தனை என்பதையெல்லாம் அறிந்து கொண்டேன்.

''நான் பாரதியாரின் சகோதரன் என்ற காரணத்தாலும், பாரதி நூல்களை வெளியிட்டு வந்தவர் என்ற காரணத்தாலும் என்னை அக்காலத்து அரசு கண்காணித்து வந்தது. என் கடிதங்களை எல்லாம் போலீஸ் கமிஷனர் காரியாலயம் பார்வையிட்டு அனுப்பியது. எனக்கு அரசு நடத்தி வந்த கல்வி ஸ்தாபனங்களில் உத்தியோகம் மறுக்கப்பட்டது.

''இத்தனை இன்னல்களுக்கிடையே நான் பாரதி நூல்களை வெளியிட நேர்ந்தும், அதைப் பற்றி எனக்கு வருத்தமேயில்லை அதை ஒரு கடமையாகவே-தேச சேவையாகவே கருதி வந்தேன். தவிர, இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தற்கரிய மாபெரும் பேற்றையளித்தது. நூல்களை வெளியிடும்போதே அவற்றைப் படிக்க நேர்ந்ததால், மிகக் குறுகிய காலத்தில் பாரதி எழுதிக் குவித்த அமர காவியங்களின் பரிமாணம், தன்மை, நயம் முதலியவற்றை அனுபவிக்க முடிந்தது. அவை என்னைப் புதிய உயிராக்கி, எனக்கு ஏதும்கவலையறச் செய்து, மதி தன்னை மிகத் தெளிவு செய்து, என்றும் சந்தோஷங் கொண்டிருக்கச் செய்தன''.

அன்று என்னிடம் சொன்ன சொற்கள் இன்னமும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

1949ல் பாரதியின் நூல்களை அரசுரிமையாக்கத் தமிழக அரசு முன்வந்தபோது, தம் வருங்காலத்தையும், தம்மக்களின் எதிர்காலத்தையும் பாதிக்கும்படியான முடிவை எடுத்த தியாக சீலரே, இந்த விசுவநாதர்.

இவரது பாரதி சேவைகளைப் பாராட்டி, தமிழக அரசு 1981 பாரதி நூற்றாண்டுத் தொடக்க விழாவின்போது இவரைக் கௌரவித்தது.

பெருந்தகையாளர் -பெரியவர் சி.விசுவநாதன் அவர்களின் பெயரும் மகாகவி பாரதியின் புகழும் நிலம் பெயரளவும் பெயர் பெயராது நின்று நிலவும்.

# கிருஷ்ணா குடிநீர்த் திட்டப் பணிகள்



ஏராளமான ஆண்களும், பெண்களும் அந்தக் கடும் வெய்யிலில் கால்வாய் வெட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தமிழக எல்லையிலிருந்து பார்த்துக் கொண்டே வருகிறோம். ஒரு பக்கம் ராட்சச இயந்திரங்கள் நிலத்தைத் தோண்டும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. இன்னொரு பக்கம் ஆட்கள் மும்மரமாக ஈடுபட்டிருக்கும் காட்சி. எல்லாம் துரித கதியில் நடக்கின்றன.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது, நெடுநாட்களாக எதிர்பார்த்த, சென்னைக் குடிநீர்ப் பஞ்சத்துக்குத் தீர்வு காண, கிருஷ்ணா ஆற்று நீர் மிக விரைவில் கிடைக்கப் போகிறது என்று நம்நெஞ்சமெல்லாம் நிறைகிறது.

8.8.84 அன்று செய்தியாளர்கள் குழு ஒன்று இப்பணிகளையெல்லாம் நேரில் கண்டது. சென்னையிலிருந்து 75 கி.மீ. தூரத்தில் உள்ள தாமரைக்குப்பம் கிராமத்தை அடைகிறோம். இது தமிழக எல்லையில் உள்ள ஊத்துக்கோட்டைக்கருகில் உள்ளது. அங்கிருந்து நம் பயணத்தைத் தொடர்கிறோம். மலைசூழ்ந்த அழகிய இயற்கைக் காட்சிகள் நம்மைக் கவர்கின்றன.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் பதினைந்து டி.எம்.சி. கிருஷ்ணா நதி நீரை சென்னைக் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகக் கொண்டு வரப்படவுள்ள மிகச் சிறந்த திட்டமென நாமறிவோம்.

சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவதற்காகவும், ஆந்திர எல்லையில் பாசன வசதி ஏற்படுத்துவதற்காகவும்ஆன ஒரு இணைந்த திட்டத்தை ஆந்திர மாநிலத்தில் செயல்படுத்த ஓர் ஒப்பந்தத்தில் 18.4.83 அன்று இரு மாநில முதல்வர்களும் கையெழுத்திட்டனர்.

அந்த ஒப்பந்தத்தின்படி ஆந்திர எல்லையில் உள்ள வேலைகளை அம்மாநிலமே நிறைவேற்றும் என்றும், பணிகளை நிறைவேற்றுவதற்கும், பராமரிப்புக்கும் ஆகும் செலவினை இரு மாநிலங்களும் நீரைப் பயன்படுத்தும் அளவிற்கு ஏற்றவாறு பகிர்ந்து கொள்ளும் என்பதும் திட்டமாகும்.

இந்தத் திட்டம் ஆந்திர எல்லையில் தெலுகு-கங்கா திட்டமென அழைக்கப்படுகிறது. தெலுகு கங்கா திட்டத்தின் மதிப்பீடு ரூ. 637 கோடியாகும். அதில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.185 கோடியாக இருக்கும்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கடந்த 25.5.83 அன்று தமிழ்நாட்டில் செயல்படுத்தவிருக்கும் பணியினைத் தொடங்கி வைத்தார்.

இப் பணியைச் செயல்படுத்த ஒரு வட்டமும், இரண்டு கோட்டங்களும் ஜூன் '83ல் ஏற்படுத்தப்பட்டன. ஜனவரி 1984ல் மேலும் ஒரு கோட்டம் ஏற்படுத்தப்பட்டது.





திட்டப்பணிகளைச் செய்தியாளர்கள் பார்வையிடுகின்றனர்.

தமிழக எல்லையில் இருந்து பூண்டி வரை உள்ள ரூ. 14.30 கோடி மதிப்புள்ள கண்டலேறு-பூண்டிகால்வாய் வெட்டும்வேலை முதலில் மேற்கொள்ளப்பட்டது. கால்வாயின் மொத்த நீளம் 25.275 கி.மீ. கால்வாயின் மொத்த நீளத்திலும் உள்ள நிலங்களைக் கையகப்படுத்தும் வேலை நடைபெற்று வருகிறது. அந்நிலங்களின் சொந்தக்காரர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, கால்வாய் வெட்டும் பணி துரிதமாக்கப் பட்டுள்ளது.

கால்வாய் வெட்டும் வேலையைத் துரிதப்படுத்த கால்வாய் நீளத்தைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து ஒப்பந்தப் புள்ளி விவரம் கோரப்பட்டு பல ஒப்பந்தக்காரர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. கால்வாயின் பல பகுதிகளில் மொத்தம் சுமார் 800க்கும் மேற்பட்ட ஒப்பந்தக்காரர்கள் [illegible] செய்து வருகிறார்கள்.

[illegible]

தற்போது சுமார் 2,000 ஆட்கள் பணிபுரிகின்றார்கள். [illegible] ரூ.1000 [illegible] திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது சுற்றுப்புறங்களில் உள்ளவர்கள் தவிர, சேலம், தருமபுரி, நாகர்கோவில், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து வந்தவர்களுக்கும் வேலை வாய்ப்புத்தரப் பட்டிருக்கிறது.

கால்வாய் வெட்டும் வேலை பல இடங்களில் அடிமட்டத்தை எட்டிவிட்டது. முதல் பகுதியான 0 முதல் இரண்டு கி.மீ. வரை கால்வாயின் ஆழம் 6 முதல் 12 மீட்டர் வரை உள்ள கடினமான பகுதியாகும். இப்பகுதி ஏரியை ஒட்டியுள்ளதால் ஊற்றுப்பெருக்கும் அதிகம். இப்பகுதிக்கு ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் கோரப்பட்டு போதுமான ஒப்பந்தக்காரர்கள் முன்வரவில்லை. ஆகையால் இப்பகுதியில் வேலையைத் துரிதப் படுத்த இரண்டு புல்டோசர்கள், மற்றும் மூன்று ஸ்கிரேப்பர்களும் பயன்படுத்தி வேலை நடைபெறுகிறது. மேலும் இதேபோன்ற கடினமான பகுதிகளில் மற்றும் ஒரு யந்திரத் தொகுதியினைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

[illegible]

[illegible] நீர்க்கால்வாய் வெட்டப் பட்டிருக்கும் பிரம்மாண்டமான காட்சி. இதுபோன்று சுரங்க நீர்க் கால்வாய்கள் ஆரணியாற்றுக் குறுக்கேயும், நாட்டேரி ஏரியிலும், அல்லுக்குழியிலும் ஆக நான்கு இடங்களில் அமைக்கப் பட்டுப் பணிகள் நடந்து வருகின்றன.

இதேபோல 20 பாலங்களும் ஆங்காங்கே கட்டப்படுகின்றன. ஊத்துக்கோட்டை பேரூராட்சி எல்லையில், பெரியபாளையம், ஊத்துக்கோட்டை முக்கிய சாலையில் ஒரு பாலம் கட்டப்படுவதைப் பார்க்கிறோம்.

ஆரணியாற்றுக்கருகில் ஊத்துக் கோட்டைப் பகுதியில் காங்கிரீட் டாலான பலகைகள் தயாரிக்கும் இடத்தைப் பார்வையிடுகிறோம். இங்கு 100 பேர் இப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கு ஒரு நாளைக்கு 3000 காங்கிரீட் பலகைகள் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை 22 இலட்சம் பலகைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

[illegible] கால்வாயின் அகலம் 66.55 மீ. [illegible] காங்கிரீட் [illegible] பலகைகள் பதிக்கப்படும். இப்பணி நாள்தோறும் [illegible]



காான்கிரீட் பலகைகள் தயாராகின்றன.

சுடன் நடக்கின்றது. ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு பலதைகள் தேவைப்படும் தெரியுமா? 46000.

ஊத்துக்கோட்டையில் அலுவலர்கள் தங்குவதற்கான 9 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இதே போல் பூண்டியில் 7 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இப்போது நாம் 17 கி.மீ. தூரத்துக்கு வந்து விட்டோம். இந்த இடத்தில் ஒரு பாலம் கட்டப்படுகிறது. ஊர் தேவந்தவாக்கம். 20வது கிலோ மீட்டரிலும் ஒரு சிறிய பாலம் கட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. சாலைப் பாலங்களுக்கு மட்டும் ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. 1983-84ல் இதற்காக ஒரு கோடி ரூபாய் வரை செலவிடப்பட்டிருக்கிறது. 84-85ல் 4 கோடி ரூபாய் வரை செலவிட இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இந்தத் திட்டப் பணிகளை மூன்று வட்டாரப் பொறியாளர்கள் நேரடியாகக் கவனித்து வருகிறார்கள். இத்திட்ட மேறபார்வைப் பொறியாளரான திரு என். திருநாவுக்கரசு வேலைகளைத் துரிதப்படுத்தி வருகிறார்.

ஆந்திர எல்லையில் உள்ளஆம் பாக்கம் என்ற கிராம எல்லையில் கண்டலேவு அணையிலிருந்து தண்ணீரை ஆந்திர அரசு தந்து விடுகிறது. அங்கிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்கு 25 கிலோ மீட்டர் தூரத்துக்குக் கால்வாய் வெட்டப்படுகின்றன.

அண்மையில் பெய்த மழையின் காரணமாக, நிலத்தில் ஈரம் சேர்ந்திருப்பதால், மண் வெட்டுவதற்கு எளிதாக எள்ளது. ஒரு சிலஇடங்களில் கால்வாய் தோண்டும் வேலை அடி மட்டம் வரை போயிருக்கிறது.

தமிழக எல்லை ஆரம்பத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள பகுதியில் 18 அடி முதல் 36 அடிவரை கால்வாய் வெட்டப்பட வேண்டியுள்ளது; ஆகவே மண் வாரும் எந்திரங்களைக் கொண்டு இந்தப் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

சுமார் 20 அடி அகலத்திலும், 10 அடி ஆழத்திலும் இருக்கும் படியாக இந்தக் கால்வாய்கள் தோண்டப்படுகின்றன. ;வினாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீரை அனுப்பும் வகையில் இந்தக் கால்வாய்கள் வெட்டப்படுகின்றன.

கிருஷ்ணா நதி நீர்த் திட்டப் பணிகள் 1985 மார்ச்சுக்குள் முடிந்துவிடும் என மேற்பார்வைப் பொறியாளர் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்து, எல்லாரையும் மகிழ்ச்சியடையச் செய்தது.

— பி. வி. ஜி.

## குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யும் அரசுப் பணியாளருககு...

குடும்ப நலத்திட்டத்தில், மருத்துவமனைக்கோ, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கோ குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள விரும்புவர்களை அழைத்து வரும் அரசுப் பணியாளர்களுக்குத் தற்பொழுது பயணப்படியும், தினப்படியும், தமிழ்நாடு பயணப்படிச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தைத் தமிழக அரசு மீண்டும் பரிசீலித்து, பயணப்படி, தினப்படிக்கு மாற்றாகக் குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்கு அழைத்து வரப்படும் நபர்களின் எண்ணிக்கையுடன் இணைக்கப்பட்ட மொத்தமான தொகை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்கு, அரசுப் பணியாளர் ஒரு நபரை அழைத்து வந்தால், அந்த அரசுப் பணியாளர் பயணப்படி, தினப்படிக்கு மாற்றாக ஒட்டு மொத்தத் தொகையாக ஐம்பது ரூபாய் பெறத் தகுதி உடையவராவார்.







# ஆலயமும் அருந்தமிழும்

நிகழ்ச்சித் தொகுப்பு :
—அ. மருதவிநாயகம்

தமிழகம் முழுவதும் விடுதலைத் திருநாளையொட்டி அறநிலையத்துறை சார்பில் ஆலயங்களில் கூட்டு வழிபாடும், பொது விருந்தும், அரசு சார்பில் முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கு வேட்டிகளும், சேலைகளும் வழங்கப்பட்டன.

திருச்சி மாவட்டம் சமயபுரத்தில் 15-8-84 அன்று வழிபாடும், பொது விருந்தும் நடைபெற்றன. மாலையில் நலிந்த ஆலயங்களின் மேம்பாட்டிற்கான மறுமலர்ச்சித் திட்டத் தொடக்க விழா நடைபெற்றது.

மதுரை திரு எம். பி. என். சேதுராமன் திரு எம். பி, என். பொன்னுசாமி குழுவினரின் நாயன இசையும், கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டும் நடைபெற்றன.

விழாவிற்கு வந்திருந்தோரை இந்துசமய அறநிலைய ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''இன்று நடைபெறும் நிகழ்ச்சி வரலாற்றுச் சிறபபு மிக்க நிகழ்ச்சியாகும். ஒரு தாய் நலிந்த குழந்தையைப் பராமரிப்பது போன்று இந் நிகழ்ச்சி அமைகிறது. நிதி உதவி கொடுத்த அனைத்துக் கோயில் நிர்வாகிகளுக்கும், ஏனையோருக்கும் துறையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர் சவுந்தரராசன் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''நாடு சுதந்திரம் அடைந்த பிறகு அறநிலையத்துறை சார்பில் கோயில்களைப் பராமரித்து வாழ்க்கையில் ஒழுக்கத்தையும் ஆத்ம ஞானத்தையும் வளர்க்கக் கருதி ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய திட்டம் இதுவாகும்.

“நமது முன்னோர்கள் கட்டிய கோயில்கள் கால ஒட்டத்தில் இயற்கைச் சூழ்நிலையால் எப்படி எப்படியெல்லாமோ ஆகி விட்டன. பூசைகள் நடத்த, வழிபாடுகள் செய்ய முடியாத நலிந்த திருக்கோயில்கள் பல உண்டு. இப்படிப்பட்ட கோயில்களைக் காக்க வேண்டியது அரசின் கடமையாகும். வாழ்க்கையில்

இரு நெறிகள் உண்டு. ஒன்று சமூக நெறி, மற்றொன்று சமய நெறியாகும்.

"சமூக நெறியில் ஒழுக்கத்தைப் போதிப்பது சமயநெறியின் தத்துவங்கள்தான். மனித சமூகம் உயர்வடைய சமூக நெறியும் சமய நெறியும் இணைந்தே இருக்க வேண்டும். இந்த இணைப்பைத் தருவது தான் கோயில்கள்.

"சில திருக்கோயில்களில் ஊழியர் கட்கு ரூ. 5, ரூ. 10, ரூ. 15வுடன் சோறு மட்டும் ஊதியமாக வழங் கப்படுகிறது. இந்நிலையைமாற்றி, திருக்கோயில் ஊழியர்கட்குச் சோறும் கொடுத்து குறைந்தது ரூ. 100 ஊதியம் கிடைக்க இந்தப் புதிய திட்டம் வழி செய்யும்.

"இராஜராஜசோழன், இராஜேந் திரசோழன், பல்லவன், பாண்டி யன் ஆகியோர் அறநெறி தழைக்க கட்டிய கோயில்கள் அழிந்து போகாமல் பாதுகாக்க இந்த ஆலய மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

"பொதுமக்கள் மனம் வைத் தால் ரூ. 70 கோடியாகக் கூட உயரும். காஞ்சிப் பெரியவர் ஆசியுரை வழங்கியுள்ளார்கள். அவர்களது ஆசியுரை நிலைக்கும்"

புலவர் முனியாண்டி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"நம்முடைய இந்து சமயம் இறைவனை அப்பா அம்மா என்று போற்றும். ஔவைப் பிராட்டி கூறியது போன்று செயல்படும் இந்த அரசைப் பாராட்டுகின் றேன். எனக்கு இன்று சொர்க் கம் கிடைத்ததுபோல் உள்ளது.

"இன்று தன்னுடைய உயிரைத் துச்சமென மதித்து இதுபோன்ற நல்ல திட்டங்களைத் தீட்டி வரும் தமிழக முதல்வர் அவர் களைப் பாராட்டுகின்றேன்.

"நாட்டில் அணிகள் இருக்க வேண்டியதுதான். ஆனால் பிணிகள் இல்லாமல் இருக்க வேண்டும்"

தவத்திரு தஞ்சை வாளமர் கோட்டை காத்தைய சுவாமிகள் பேசுகையில்—

"ஏறத்தாழ ஐம்பது ஆண்டு களுக்கு மேலாகச் சிவாலயத்தை நிர்வாகம் செய்து வருகிறேன்.



நான் பிரம்மச்சாரி. கோயில் நிர்வாகம் செய்வதில் பல துன் பங்களை அனுபவித்துள்ளேன். இந்தத் திட்டம் மூலம் என்னு டைய நிர்வாகத்தில் உள்ள திருக் கோயில்களும் பயன் பெறும் என்று நம்புகிறேன்.

"இந்த ஏழு கோடி ரூபாய் நிதி எழுபது கோடி ரூபாயாக வளம் பெற வேண்டும். அரசனும் ஆண்டியும் சேர்ந்து செயல்பட வேண்டும். இதற்கு நான் ரூபாய் 10,000 நன்கொடையாக வழங்கு கின்றேன்."

கவிதமணி அ. வெ. ரா. கிருஷ்ணசாமிரெட்டியார் அவர்கள் பேசுகையில்:

"பத்து ஆண்டுகளாக நான் கண்ட கனவு இன்று நிறைவேறு கிறது. சமயபுரம் அன்று மிகவும் போர்க்களமாக இருந்தது. இந்த விழா நடக்கும் இடத்தில்தான் ராபர்ட் கிளைவ் சண்டை போட் டார்.

"தமிழர்கள் மத்தியில் கோயில் பற்றிய சிந்தனை 37 ஆண்டு களாக இல்லை. ஆலயமும் தமிழும் இரண்டு கண்களாகும். ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் பணி போல் வேறு எங்கும், ஏன் உலகத் திலேயே நடைபெறவில்லை.

"ஆலயங்கள் நிலத்திற்குக் குத் தகைதாரர் சட்டத்தில் இருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும்."

ஆலயங்களின் நிர்வாகிகள் சார் பில் திருமதி ராதா தியாகராசன் அவர்கள் பேசுகையில்:

"தமிழகத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்று இந்த

புதிய திட்டம்

இத்திட்டத்தின்படி, உபரி ... 70 கோயில் ... 7 கோடி ... வைப்பு ...

[illegible]

## ஒற்றுமை உணர்வை வளர்க்க

தமிழ்நாட்டில் உள்ள 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட திருக்கோயில்களில் சுதந்திர தினத் தன்று 10 இலட்சத்திற்கு மேற்பட்டோருக்குச் சமபந்தி விருந்து வழங்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக வறட்சி காரணமாக சமபந்தி விருந்து வழங்கப்பட வில்லை.

சமபந்தி விருந்து என்பது ஆதிதிராவிடர் கள், ஆதிதிராவிடர் அல்லாதவர்கள் சமமாக உட்கார்ந்து சாப்பிடுவதாகும். ஒற்றுமை உணர்வை வளர்க்க இது மாதிரி விருந்து நடத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 35 ஆயிரம் திருக் கோவில்கள் உள்ளன. அவற்றில் சிறு கோவில்கள் நீங்கலாக ஏறத்தாழ 5 ஆயிரம் கோவில்களில் சமபந்தி விருந்து நடைபெற்றது.

*திருச்சி மாவட்டத்தில் பொது விருந்தில் கலந்து கொண்டோர் எண்ணிக்கை 51,850.

அரசு பாடுபட்டு வருகின்றது. ஆத்மீக மறுமலர்ச்சியும் இன்று ஏற்பட்டுள்ளது.

"கோயில் ஒரு சாராருக்கு மட் டும் என்ற நிலைமை இருந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை மாறி, தங்களுடைய கோயில் என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது.

"கோயில் சொத்துக்களின் வரு மானம் முறையாகக் கிடைக்கப் பெற்றால் ரூ. 600 கோடி வரு மானம் கிடைக்கும். பழனிஆண்ட வர் கோயில் உபரி நிதியிலிருந்து ரூ. 2 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நல்லமுறையில் மேம்பாடு அடைய வாழ்த்து கிறேன்."

திரு திருமலை அய்யங்கார் பேசு கையில்:

"தமிழகத்தில் ஆலயங்களின் வருமானம் குறைவு ஏற்பட்டு விட்டது. அதை எப்படிச் செயல் படுத்துவது என்று அரசு கருதி இந்த நல்ல திட்டத்தை வகுத் துள்ளது.

"கோயில் நிலத்தில் பயிர் செய் வோர், கடைகள் வைத்திருப் போர், வீடுகளில் குடியிருப் போர் முறையாகப் பணத்தை வழங்க வேண்டும்."

முத்தமிழ்க்காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பேசுகையில்:

"இந்த ஆலயப் பணி நிதி ரூ. 7 கோடி மேலும் வளர வேண்டும். திருப்பதி கோயிலில் போடும் நிதியைத் தமிழ்நாட் டில் எந்தக் கோயிலிலாவது போடும்படி பொதுமக்களாகிய உங்களைக் கேட்டுக் கொள்கி றேன்.

"இந்த நிதி நல்ல முறையில் செலவழிக்கப்படுகின்றதா என்று கண்காணிக்க வேண்டும்.

"கிறித்தவர்கள், முஸ்லீம்கள் ஒன்றுபட்டு திருக்கோயிலில் வழி படுகிறார்கள். சிதறு காய்களை உடைப்பது போல் நாம் தெய்வ வழிபாட்டை நடத்திவருகிறோம். அந்த முறையை மாற்றி ஒற்றுமை யுடன் வழிபாடு செய்ய வேண் டும்.

"சைவ, வைணவக் கோயில் களில் ரூ. 3, ரூ. 10, ரூ. 100 என்று பல வகையாக வழிபாடுகள் செய்ய வழி உள்ளது. ஏழை வழியில் போய் தெய்வ வழிபாடு செய்வான். முஸ்லீம், கிறித்து வத்தில் இதுமாதிரி வழிபாடு இல்லை.

"இந்த ஆண்டு தமிழகத்தில் கும்பாபிஷேகம், திருப்பணிகள் அதிகம் நடந்துள்ளது பாராட் டத்தக்கது. நல்லரசு அமைந் துள்ளது. பணிகள் தொடர்ந்து நடைபெற எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்."

புலவர் கீரன் அவர்கள் உரை யாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

## கோவில்வசம் சொத்து ஒப்படைக்கப்படும்

ஆலயச் சொத்துக்கள் குறிப்பிட்ட இலட்சி யங்களுக்காகக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட இலட்சியத்திற்குப் பயன்படாமல் உள்ள ஒப்பந்தம்அதுஏற்பட்டுஎத்தனைஆண்டுகள் ஆனாலும் ரத்து செய்யப்படும். மேலும் குறிப் பிட்ட சொத்து கோவில் வசம் ஒப்படைக்கப் படும். இதற்கான சட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டு வருகிறது.

ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய்க்குமேல் வருமானம் உள்ள கோவில்கள் 78ல் இருந்து தற்போது 200ஆக உயர்ந்துள்ளன.

ஸ்ரீரங்கம் திருக்கோயில் ரூ. 20 லட்சமும், மதுரை அருள்மிகு மீனாட்சித் திருக்கோயில் ரூ. 30 லட்சமும், திருச்செந்தூர் திருக்கோயில் ரூ. 24 லட்சமும் ஆக 73 திருத்தலங்கள் நிதியாகத் தந்த ரூ. 7 கோடி வைப்பு நிதி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

*திருச்சி மாவட்டத்தில் 18,297 உதவித் தொகை பெறும் முதியோர்களுக்கு வேட்டியும், சேலையும் வழங்கப்பட்டன.

''இந்து மதத்தில் கூட்டு வழிபாடு தேவை. மாமன்னர்கள் செய்த காரியத்தை, காந்தியடிகள் செய்த காரியத்தை, இந்த அரசு இன்று செயல்படுத்தி வருகிறது.

''ஆன்மீகத்தையும் அரசியலையும் ஒன்று சேர்த்தார் காந்தி. அந்தச் செயலைப் பார்தியார் பாராட்டினார். இன்று நான் பாரதிபாராட்டியதுபோல்செய்தி அறநிலையத்துறை அமைச்சரைப் பாராட்டுகின்றேன்.



''எவ்வளவுதான் நிதி ஒதுக்கீடு செய்து மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வந்தாலும் அதைப் பொதுமக்களும் உணர்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

''குழந்தைகள் சாப்பிட வேண்டுமென்று கடவுள் விரும்புவார். ஆகையால் கோயில்நிதியிலிருந்து பணம் எடுத்து எல்லாக் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கச் செலவிட வேண்டும்.

''இந்த மேம்பாட்டுத் திட்டம் பற்றி நான் சந்திக்கும் மக்களிடம் நாள்தோறும் சொல்வேன்.''

**திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் பேசுகையில்:**

''பகிரங்கக் கண்ணால் இறைவனைக் காண முடியாது. ஞானக் கண்ணால்தான் இறைவனைக் காண முடியும். உடம்பிற்கு மெய் என்ற பெயரும் உண்டு. இந்த மனித உடம்பு பொய் உடம்பாகும். இறைவன் ஒருவன் தான் மெய்ப்பொருள்.

"இன்று எல்லோரும் உலகத்தில் வாழும் நாட்களில் வேறுபாடு கொண்டு வாழ்கிறார்கள். ஆனால் மயானம் ஒன்றுதான் ஒற்றுமை இடமாக உள்ளது.

"ஞானத்தில் இறைவன் வெளிப்படுகிறான். தெய்வத்தை நினைக்காதவன் மனிதன் அல்ல.

"ஒரு காருக்கு டயர் முக்கியத் தேவை. டயருக்கு டியூப், டியூபுக்குள் காற்று, அதேபோல் மனிதன், மனிதன் உடலுக்குள் இதயம், இதயத்துக்குள் இறைவன் (ஆத்மா) உள்ளான்.

விளக்குகள் எரியாமல் இருந்த கோயில்களுக்கு விளக்கு ஏற்றி வைத்த இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறேன். நிதி ரூ. 700 கோடியாகப் பெருக வேண்டும்.''

**வள்ளலார் கொள்கை பரப்பும் தவத்திரு வடலூர் ஊரன் அடிகள் பேசுகையில்:**

''இந்த மேடை அமைந்துள்ள இடம் 13-ஆம் நூற்றாண்டில் சிறப்புப் பெற்று இருந்தது. சமயத்தைக் காப்பாற்ற அரசு இந்த இடத்தில் விழா நடத்துவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். என்னுடைய இளமைப் பருவத்தை இந்த ஊரில்தான் கழித்தேன்.

"முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடிப்புத்துறையில் இருந்தபோது திருப்பணிக்கு உதவி இருக்கிறார்கள்.

"வேலூர் கோட்டையில் உள்ள கோயிலில் சுவாமி இல்லை. தொல்பொருள் ஆய்வுத்துறை தடுத்து வந்தது. ஆனால் இந்த அரசு காலத்தில்தான் கோயிலின் உள்ளே சுவாமி வைக்கப்பட்டது. அமைதியாக ஆன்மீகத்தில் இன்றுதான் புரட்சி ஏற்பட்டுள்ளது என்றால் மிகையாகாது.

"பண்டைய அரசர்களின் அரண்மனைகள் பெரும்பாலும் அழிந்து போயின. ஆனால் பெரும்பான்மையான கோயில்கள்நிலைத்துள்ளன. தமிழ்நாட்டுக்கே கோயில்கள் சிறப்புடையன. ஆகையினால் தான் ஞானிகள் அதிகமாக இங்குத் தோன்றினார்கள்.

"கோயில் வருமானங்கள் ஒழுங்காகக் கிடைத்தால் சத்துணவுத் திட்டத்தை எந்தவிதச் சிரமும் இல்லாமல் சிறப்பாக நடத்திடலாம்.

"நிலச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு வேண்டும். கோயில்கள் நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால் வருமானம் பெருக வேண்டும். அப்பொழுது தான் ஆட்சி நல்ல முறையில் செயல்பட முடியும்.

கோயில்களில் விற்கப்படும் விபூதிகுங்குமம், சந்தனம் முதலிய வற்றில் கலப்படம் ஏற்பட்டு விட்டது. அதை அரசே தயாரித்து விற்பனை செய்ய வேண்டும்.''

**புதுக்கோட்டை ஸ்ரீசிவசாயி மாதா பிருந்தாதேவி அவர்கள் பேசுகையில்:**

''இந்த அரசு நல்ல முறையில் கோயில் பணிகளை ஆற்றி வருகிறது. நான் வாழ்த்து மடலை இங்குப் படிக்கின்றேன்.'' என்று கூறி, வாழ்த்து மடலை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

**தவத்திரு பேரூர் ஆதீனம் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பேசுகையில:**

''ஆலயப் பணி புனிதப் பணியாகும். தமிழ்மக்கள் போற்றி வளர்த்துள்ளார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த எழுச்சி இன்று முதல்வர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் ஏற்பட்டுள்ளது. மக்களுக்கும் திருக்கோயில்களுக்கும் மேலும் தொடர்பு ஏற்படுத்தித் தர வேண்டும்.

"சமய ஈடுபாட்டிற்குத் தொண்டர்களை உருவாக்க வேண்டும். இந்த ஏழு கோடி ரூபாய் நிதி மூலம் கோயில்கள் பெருவளர்ச்சி அடைய உள்ளன.''



# புதிய மாவட்டங்களில் விடுதலை நாள் விழா

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுதந்திர தினவிழா நடந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தின் பெயரளவு "தலைநகர்" ஆக இராமநாதபுரம் இருந்து வந்தது தெரிந்ததே, என்றாலும் நாடு சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகளாகியும் இதுவரை இதுபோன்று அரசு விழா இராமநாதபுரத்தில் நடைபெறவில்லை.

குடியரசு தினம், சுதந்திரதின விழா போன்ற அரசு நிகழ்ச்சிகள் சிவகாசியில் தான் நடந்து வந்தன. இந்த மாவட்டம், 3 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு மாவட்டத்தின் தலைநகராக இராமநாதபுரம் ஆன பின்பு அரசு சார்பில் நடைபெறும் "முதல் விழா" இந்தச் சுதந்திர தினவிழாதான்!

இதன் காரணமாக, விழாகோலாகலமாக நடந்தது. பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சியுடன் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

இராமநாதபுரம் பள்ளி மாணவ-மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடந்தன. இதில் கலந்து கொண்ட மாணவ-மாணவிகளுக்கு, மாவட்ட செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த விழாவில்தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 15 பேர்களுக்கும், முதியோர் ஓய்வு ஊதியம் 5பேருக்கும் வழங்கப்பட்டன. சிறப்பாகப் பராமரிக்கப்பட்ட ஆதிதிராவிடக் கிராமங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. ராமசாமி, அவர்கள் பரிசு வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர், கூட்டுறவு ஒன்றியக் காய்கறிக் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

இதேபோன்று காமராஜர் மாவட்டத் தலைநகர் விருதுநகரில் தனி அலுவலர் திரு என். என். விஜயராகவன் இ.ஆ.ப. அவர்களும், பசும்பொன் முத்து இராமலிங்க மாவட்டத் தலைநகர் சிவகங்கையில் திரு நரேஷ்குப்தா, இ.ஆ.ப. அவர்களும் சுதந்திர தினக் கொடியினை ஏற்றி, நலிந்தோருக்கு உதவியினை வழங்கினார்கள்.

**தவத்திரு கோவை கௌமார மடம் சுந்தரசுவாமிகள் வாழ்த்துரை வழங்கிப் பேசுகையில்:**

"எத்தனையோ திருப்பணிகள் செய்ய முடியாத கோயில்களுக்கு விளக்கு ஏற்ற முடியாத கோயில்களுக்கு, நலிந்த கோயில் ஊழியர்கட்கு உதவி புரிந்திட வாரியம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி இருப்பதற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"முன்னர் நிதி வசதியுடைய கோயிலைச் சார்ந்தவர்கள், பக்கத்தில் உள்ள நிதி வசதியற்ற கோயிலுக்கு உதவி செய்வார்கள். இன்று நிதி உதவி அற்ற கோயில்களுக்கு பரவலாக நிதி உதவி செய்யப்படுகின்றது. உதாரணத்துக்குப் பழனி கோவில் ரூபாய் 2 கோடி உதவி செய்ததைக் குறிப்பிடலாம்.

"பழமையான கோயிலுக்கு அதிக அளவில் நிதி உதவி புரிந்திட வேண்டும். நிதி இருக்கின்ற கோயில்களில் இருந்து, நிதி இல்லாத கோயிலுக்கு உதவி புரிந்திடும் திட்டம் மிகவும் பாராட்டத் தக்கது. ஆண்டுதோறும் இதுபோல் விழா நடத்த வேண்டும். நிதியைச் செயல்படுத்தக் குழு அமைக்க வேண்டும்.''

**தவத்திரு மயிலம் சிவஞான பாலைய சுவாமிகள் பேசுகையில்:**

''சமுதாயம் வளர இறை அருள் இருந்தாக வேண்டும். விஞ்ஞானத்தின் மூலம் துன்பம் ஏற்படுகிறது. ஞானத்தின் மூலம் தான் அமைதியை அடைய முடியும். இந்த மாபெரும் திட்டத்திற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

**காஞ்சிபுரம் தொண்டை மண்டல அடிகள் பேசுகையில்:**

''அண்ணா வழியில் வந்த கட்சி ஆட்சி நடத்துவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். நான் காஞ்சிபுரத்திலிருந்து வந்திருப்பது குறித்தும் மகிழ்ச்சியடைகின்றேன்.

"யாருக்கு எந்த வகையில் சொன்னால் புரியுமோ அந்த வகையில் புரிய வைத்தார் அண்ணா. சமயத்தில் இருக்கிறவர்கள் என்ன செய்யவேண்டுமென நினைக்கிறார்களோ அதைச் செய்ய இந்த அரசு தயங்கவில்லை.

"அரசு புறஒழுக்கத்தையும் அகஒழுக்கத்தையும் காக்க வேண்டும். அக ஒழுக்கத்தைச் சமயம்தான் செய்ய முடியும். இதைக்காக்கும் அரசுதான் சரித்திரத்தில் நிலைத்து நிற்கும். அதை இந்த அரசு இந்நிகழ்ச்சி மூலம் செய்துள்ளது.''

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசுகையில்**

''சமயம் என்றால் தமிழ், தமிழ் என்றால் சமயம். தென்குமரியில் பெரிய பெரிய கோயில்கள் இருந்துஇருக்கின்றன. பிரஞ்சு அறிஞர்கள் கடல் ஆராய்ச்சியில் இதனைக் கண்டு பிடித்துள்ளார்கள். தமிழகத்தின் வளமே திருக்கோயில்களின் உள்ளேதான் இருந்துள்ளது.

"தமிழ், சமயமறுமலர்ச்சி விழாவாக இராஜராஜன் விழாவை அரசு நடத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். சிற்பக்கலையை இராஜராஜன் மிகவும் சிறப்பாகப் போற்றி வந்தான்.

## கோடைக்கானல் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம்

# இந்தியாவிலேயே அதிக சக்தி வாய்ந்தது!

சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, மற்ற மாவட்டத்தில் உள்ள வர்களும் பார்க்க இயலுமா?'

'இயலும்!' என்ற செய்தி அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

தமிழ்நாட்டில் தற்போது திருச்சி, வேலூர், ஏர்க்காடு, கொடைக்கானல் ஆகிய இடங்களில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் தொடங்கி வைக்கப் பட்டுள்ளன.

1984 ஆகஸ்டுத் திங்கள 15ஆம் நாள கொடைக்கானலில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத் தொடக்கவிழா கோலாகலமாக நடந்தது.

கொடைக்கானல், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி அரங்கில் நடந்த இத்தொடக்க விழாவோடு, செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் விடுதலைத் திருநாள் விழாவும் இணைந்து நடந்தது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

மாண்புமிகு மத்திய அரசு செய்தி ஒலிபரப்புத் துறைத் துணை அமைச்சர் திரு குலாம் நபி ஆசாத் அவர்கள் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்ட கருத்துக்களாவன:

**நம் நாட்டு விஞ்ஞானிகள்**

"விஞ்ஞானத்துறையில் நாம் முன்னேறி உள்ளோம். குறைந்த பட்சத் தேவையை வைத்துக் கொண்டு, அனைத்து மக்களுக்கும் வசதியைச் செய்து கொடுக்க பிரதமர் அவர்கள் முயற்சி செய்து வருகிறார். இந்தப் பரந்த நாட்டில எல்லா இடங்களிலும் தொலைக்காட்சிகளைக் காட்டுவது மிகவும் கடினம். ஆனாலும் 70 சதவிகித மக்கள் தொலைக்காட்சி பார்க்கிற அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"நமது நாட்டு விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்ட கருவிகளை வைத்தே தொலைக்காட்சி நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

**சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

"ஒரு கிலோவாட் சக்தி கொண்ட இந்தத் தொலைகாட்சி



அஞ்சல் நிலையம் இந்த ஆண்டு இறுதிக்குள் 10 கிலோவாட் சக்தி கொண்ட நிலையமாக உயர்த்தப் படும்.

"இப்போது 175 கிலோமீட்டர் தூரம் வரை உள்ள மக்கள் இந்தத் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் மூலம் பயனடையலாம் 10 கிலோவாட் சக்தி கொண்ட நிலையமாக. உயர்த்தப்படும் போது, 230 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ள மக்களும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியும்.

'சென்னைத் தொலைக்காட்சி நிலைய நிகழச்சிகளை''மைக்ரோ வேவ்' மூலம் இணைத்து, கொடைக்கானல் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் மூலம் ஒளிபரப்பப்படும். அஞ்சல-தந்தித் துறையிடம் இது பற்றிப் பேசி ஏற்பாடு செய்யப்படும். அடுத்த மாதம் கும்பகோணம், கோவை, நெய்வேலி ஆகிய இடங்களில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் திறக்கப்படும்.

"சென்னையில் உள்ள 20 கிலோவாட் சக்த கொண்ட வானொலி நிலையம் 200 கிலோவாட் சக்தி கொண்ட நிலையமாக உயர்த்தப்படுகிறது. இதற்காக 2 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. 1985ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்த வேலை முடியும்.

"நாகர்கோவிலில் புதிய வானொலி நிலையம் அடுத்த மாதம் தொடங்ககப்படும். இந்த நிகழ்ச்சி தமிழக அரசுடன் இணைந்து நடைபெறுகிறது. இந்த இணைந்த சக்தி மூலம் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்போம் என்று உறுதி கூறிக் கொள்கிறேன்."

**தமிழில் ஒளிபரப்பு....**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தமது தலைமை உரையில்—

"சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இங்கே உள்ளவர்களும் காண விரைவில் ஆவன செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளில் தமிழில் ஒளிபரப்ப விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

கொடைக்கானல் குளுமை போல் அன்றைய விழா நிகழ்ச்சிகள் மனத்துக்குக் குளிர்ச்சியைத் தந்தன.

**பி. வி. கிரி.**



கொடைக்கானல் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம், இந்தியாவிலேயே மிகவும் சக்தி வாய்ந்த அஞ்சல் நிலையமாக இருக்கும்.

இந்த ஆண்டின் இறுதியில கொடைக்கானல் தொலைக்காட்சி 21.5 கோடி ருபாய் செலவில் 410 கிலோவாட் சக்தி உடையதாக ஆக்கப்படும். இதனால் 3 கோடிப் பேர் பயனடைவார்கள்.

6-வது ஐந்தாண்டு திட்டத்தில் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்துடன் கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் உயர் சக்தி நுண் அலையின் மூலம் இணைக்கப்படுகிறது. அதன் பிறகு சென்னைத் தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளையும் எல்லோரும் பார்க்க முடியும்.

இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திற்குப் பிறகு நாட்டின் மொத்தப் பரப்பளவில் 88 சதவிதம் தொலைக்காட்சி வசதிகளைப் பெறும்.

சென்னை வானொலி நிலையத்தின் ஒலிபரப்பு சக்தி 200 கிலோவாட்டாக இவ்வாண்டு இறுதிக்குள் உயர்த்தப்படும். இதனால் தஞ்சாவூர், திருச்சி, சேலம், தர்மபுரி மாவட்டங்கள் பயன்பெறும்.

மதுரையில் 10 கிலோவாட் சக்தியுடைய வானொலி நிலையம் 84 – 85ஆம் ஆண்டில் அமைக்கப்படும். திருநெல்வேலி வானொலி நிலையத்தில் ஸ்டூடியோ ஒன்று நிறுவப்படும். இதனால் 97 சதவித பரப்பளவு வானொலி வசதி பெறும்.

[சென்னையில் செய்தியாளர்களிடம், மாண்புமிகு மத்திய ஒலிபரப்புத்துறை துணை அமைச்சர் திரு குலாம் நபி ஆசாத் அவர்கள் தெரிவித்த கருத்துக்களிலிருந்து.]






## மாநிலத் தலைமை கணக்காயர், தமிழ்நாடு
## 261, அண்ணா சாலை,
## சென்னை-600018.

### அரசு ஊழியர் வருங்கால வைப்புநிதி 1983-84ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகள்

மாநிலத்தலைமைக் கணக்காயர், (தமிழ்நாடு), அவர்கள். மாநில அரசு ஊழியர்கள் அனைவருடைய பொது வருங்கால வைப்பு நிதியின் (ஜி.பி.எப்.) 1983-84-ஆம் ஆண்டுக் கான கணக்கு அறிக்கைகளை (அக்கௌண்ட் சிலிப்) அனுப்பத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த அறிக்கைகள், அரசு ஊழியர்கள் 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணி புரிந்தார்களோ, அந்தந்த அலுவலக நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஆகவே, தமிழக அரசு ஊழியர்கள் அனைவரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, தத்தம் கணக்கு அறிக்கைகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்தக்கணக்கு அறிக்கைகளில் ஏதாவது குறைகள் காணப்படுமேயானால், அந்தக்குறைகளை நிவர்த்திக்க, சம்பளப்பட்டியல் விவரங்களுடன், கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதும்படி கோரப்படுகிறார்கள். கணக்கு அறிக்கைகள் கிடைக்கா விட்டாலும் கீழ்க்கண்ட முகவரிக்கு உடனே எழுதவும்.

"திரு க. விசுவநாதன்"
கணக்கு அலுவலர் (எப். எம். 1 பிரிவு)
மாநிலத்தலைமைக்கணக்காயர் அலுவலகம்
261, அண்ணா சாலை
சென்னை-600 018

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



Licence No: TN/MS(C)/PP-23 பதிவு எண். M. 8676














[illegible]

[illegible]



## [illegible]

[illegible]

—முதறிஞர் இராஜாஜி



மாண்புமிக்க [illegible]
அண்ணாதுரை [illegible]
அறிவுயர்வும், பேனாவின் [illegible]
திறனும், நாவன்மையின் இனிய [illegible]
சிறப்பும் படைத்திருப்பதோடு [illegible]
[illegible] பண்பாட்டிலும் அருமை
மிக்க மேம்பாட்டைப் பெற்றவராய் விளங்கி
[illegible].

—காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப்.




# தமிழரசு

மலர் : [illegible] [illegible] : [illegible]

16-9-1984

திருவள்ளுவர் ஆண்டு 2015

[illegible] - ஆவணி 31


## பேரறிஞர் அண்ணா பவள விழாச் சிறப்பிதழ்



# பேரறிஞர் அண்ணா கண்ட அன்புத்தத்துவம்

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்

நம்முடைய வாழ்வில் நாம் கண்ட தனிப் பெருந்தலைவர், மனித சமுதாயத்தின் ஒப்புயர்வற்ற வழிகாட்டி, நற்பண்புகளைக் காவல் செய்யும் 'காவல்காரர்' அறிஞர் அண்ணா அவர்கள் என்று கூறும்போதே என் அகமும் புறமும் மலர்கின்றன.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தாம் வகுத்த இலக்கணங்களுக்குத் தாமே இலக்கியமாக வாழ்ந்து காட்டினார்கள்.

அண்ணா அவர்களால் அப்படி நடந்து காட்ட முடிந்தது எதனால்? அவருடைய அகமும் புறமும் ஒன்றுபோல் ஒரு பாதையில், ஒரே குறிக்கோளை நோக்கிச் செயற்பட்டதே அதற்குக் காரணம்.

அவ்வாறு அகமும் புறமும் ஒன்றுபட்டு இயங்கப் பகுத்தறியும் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் அதைப் பயன்படுத்தத் தவறுவதனாலேயே மக்களிடையே மாறுபட்ட தன்மைகள் இடம் பெறுகின்றன.

ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நாம் போகவேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப் போவதற்கு ஏற்ற பாதை வேண்டுமல்லவா?

பாதையே இல்லாத பகுதியில் அடியெடுத்து வைத்து, அல்லற்பட்டு நடந்து மற்ற இடத்தை அடையவும் கூடும்.

ஏன், மலைமேலே ஏறி இறங்கிப் போகலாம்!

காட்டு வெளிகளில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து செல்லலாம்!

தண்ணீரில் நீந்தியும் செல்லலாம்! ஆனால் இப்படிப் போய்ச் சேருவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் பாதைகள் ஒழுங்கற்றவைகளாக இருப்பதால், பாதசாரிகளுக்கு அந்தப் பாதைகள் தொல்லைகளையும் இடர்ப்பாடுகளையும் உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையைத் தவிர்க்க எண்ணி, பாதையே இல்லாதிருந்த இடத்தில், ஓர் ஒழுங்கான பாதையை உருவாக்கி, ''இந்த வழியாகப் போனால் அங்கே போய்ச் சேரலாம்'' என்பதையும் குறிப்பிட்டுப் பாதசாரிகளுக்கு உதவி செய்யும் வகையில் ஒரு வசதி ஏற்படுத்தித் தரப்படுமானால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பார்களா?

தேவையை உணர்ந்து அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு, இடையில் குறுக்கிட்டு, ''நமது முன்னோர் இந்தப் பாதையில் தான் சென்றார்களா? நாம் ஏன் செல்லவேண்டும்?'' என்று கேட்பார்களேயானால் அது சிந்தித்து விடையிறுக்கப்பட வேண்டிய ஒரு கேள்வியாகும்.

அதேபோல், "முன்னோரின் பாதையில்லாப் பாதையில்தான் போய்க் கொண்டிருக்க வேண்டுமா? சரியான பாதையில் போகக் கூடாதா?'' என்ற கேள்விக்கும் முறையாக பதிலை அளிக்கவும் நியாயமான முடிவைக் காணவும் நாம் முயலவேண்டும்.

மக்கள் வாழ்வின் தேவைகளைப் பெருக்கவும், உயிர்களைக் காக்கவும் கருதிப் பாதையில் தரிசாகக் கிடக்கும் நிலத்தைத் திருத்திச் செப்பனிட்டுப் பயிர் விளையும் நிலமாக மாற்றினால், ''எங்கள் மூதாதையர் இப்படியெல்லாம் செய்யவில்லை; இந்த நன்செய் நிலத்தின் வழியாகத்தான் போக்குவரத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள். இடையே வகுக்கப்பட்ட பாதையில் செல்ல மாட்டோம். பயிர்கள் விளைந்திருந்தாலும், அந்த நிலத்தின் வழியாகப் பயிர்களை மிதித்துப் பாழ்படுத்தி, அந்த வழியாகத்தான் போவோம்'' என்றால் அது நியாயமா என்பதைச்சிந்திக்கத்தானே வேண்டும்!

அந்த இடம் பொது இடம் தான். தன் மனிதர்கள் அனைவருக்கும் சொந்தமான இடம் தான். ஆனால் அந்த இடம் இப்போது தரிசாக இல்லை; பயிர் விளையும் நிலமாக ஆக்கப்பட்டு விட்டது. அந்தப் பயிர்களோ மக்களுக்காக வளர்க்கப்பட்டவை பக்கத்திலோ நேரான பாதை இருக்கிறது. அந்தப் பாதையில் மேடுபள்ளங்கள் இல்லை; போதிய வெளிச்சமும் இருக்கிறது என்றால் அதை விட்டுவிட்டு, விளை நிலத்தைச் சிதைத்துக் கொண்டு செல்வது எப்படி முறையாகும்?

விதவைத் திருமணத்திற்கும், விவாக விலக்கிற்கும், கலப்பு மணத்திற்கும், வாழ்க்கை ஒப்பந்தம் ,பதிவுத் திருமணம் ஆகியவைகளுக்கும் மக்களிடையே ஆதரவு பிறந்ததே, அது எப்படி? இவை யாவும் முன்னோர் பின்பற்றிய நெறிகளா? இல்லையே! அறிவு வளர்ச்சியின் விளைவுகளேயல்லவா?

ஆணும் பெண்ணும் சரிநிகராக வாழும் அடிப்படை உரிமை வழங்கப்பட்டு, ஒருவருக்கு மற்றவர் அடிமையில்லை என்ற உறுதிப்பாடு தரப்பட்டிருக்கிறதே! இதுவும் அறிவு வளர்ச்சியின் பயன்தானே!

இவை யாவும் பழக்கவழக்கத்தால் ஏற்பட்டதென்றாலும், பின்னால் ஏற்பட்ட சட்டமுறைப்படி உருவானவை என்றாலும், இவை அனைத்துமே வாழ்க்கை வசதிக்கு வேண்டிய அடிப்படை உரிமையை எடுத்துக்காட்டுகின்றன.



ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமைதேவை; மகிழ்ச்சி தேவை; இந்தத் தேவைகளுக்கு அடிப்படை-வளரவும் வாழவும் தடையில்லாமலிருப்பதுதான்.

சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக அமையவேண்டும். புறத்தில் உள்ளது வேறு, அகத்தில் உள்ளது வேறு என்று இருந்தால் எந்தச் சமூகக் கட்டுப்பாடோ, அல்லது சட்டமோ இலட்சியத்தில் வெற்றி காண முடியாது.



ஒரு பாதையை வகுக்க பழக்கவழக்கங்கள்தாம் வழி காண்பிக்கும். அறிவு வளர்ச்சியை ஒட்டிப் புதிய கருத்துக்கள் உருவாகும் போது பழமையில் உள்ள நல்ல கருத்துக்கள் அழிந்து போய் விடாதவாறு பாதுகாக்கப்படவும் வேண்டும்.

தன்னலம் தேவைதான். அது பொது நலமாகப் பரிணமிக்க வேண்டும்.

ஒரு பெண்ணை ஒருவன் விரும்புகிறான் என்றும், அவளோ அவனை விரும்பவில்லை என்றும் வைத்துக் கொள்வோம். அவனுடைய அகம் அவளை நாடுகிறது. ஆனால், புறச் சூழ்நிலையில் அவனால் அவளை அடைய முடியாத

நிலை இருக்குமானால்? புறத்தில் உள்ள நிலைமைக்கேற்பத்தானே அகத்தில் ஆசை அரும்பவேண்டும்! இயலாத ஒன்றை மனம் விரும்பினால் விளைவது ஏமாற்றமாகத்தான் இருக்கும்.

உணவிலும்கூட ஒருவன் எதை எந்த அளவுக்கு உட்கொண்டால் நலம் வருமோ, அவ்வகையில் உட்கொள்வது தானே முறை? இயற்கை அவனுக்கென்று ஒருவித அளவில், தரத்தில் ஆற்றலைக் கொடுத்திருக்கிறது. அவனுடைய உடற்கூறுபாடுகளுக்கு ஏற்றாற்போல் அவன் வாழ்வை அமைத்துக் கொள்ளாமல் மாறுபட்டால் ஏற்படுவது அழிவைத் தவிர வேறெதுவாக இருக்க முடியும்?

இதில், தான் மட்டுமா அழிகின்றான்? தன்னுடைய எண்ணம் செயல் இவைகளால் எங்கெல்லாம், யார் யார் எல்லாம் தாக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கெல்லாம் அழிவுண்டாக்கி விடுகிறான்.

இதனால்தான் அகமும் புறமும் மாறுபடக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் அவசியம் பிறக்கிறது. அதற்கு உறுதுணையாக உள்ளதுதான் பகுத்தறிவு. அந்தப் பகுத்தறிவு வளர்க்கும் பணியில் தன்னகரற்று விளங்கியதோடு, அமைதியான முறையில் மெள்ள மெள்ள மறு மலர்ச்சியை உண்டாக்கியவர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்களின் மறு மலர்ச்சிக் கருத்துக்கள் திடீரென்று மக்களிடையே பரவிவிடவில்லை. திடீரென்று ஒருநாள் மக்கள் எல்லோரும், ''இதுதான் நமக்கு ஏற்றது'' என்று முடிவெடுத்துவிடவில்லை.

முதலில் அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆசை கொண்டார்கள். அதன் பின், ''அவர் பேசுவதிலும் சில நியாயங்கள் இருக்கத்தானே செய்கின்றன'' என்றார்கள். பிறகு ''அவர் கூறுவது தான் உண்மை'' என்று எண்ணத் தொடங்கினார்கள். இதன் பிறகு பல நேரங்களில், பற்பல சூழ்நிலைகளில் அவரவரும் தங்களின் அநுபவ வாயிலாக அறிந்து, சிந்தித்துப் பிறகு, இதுதான் ஏற்றது என்ற முடிவுக்கு வந்து, அப்போதும் எதிர்ப்பட்ட பல எதிர்ப்புக்களைச் சமாளித்துப் பிறகுதான் அண்ணா அவர்களின் எண்ணத்தோடு கலந்தார்கள்.



அறிவு என்கிற வழி காட்டி

பகுத்தறிவுஎன்கிறஒளிவிளக்கு

தன்னம்பிக்கை என்கிறநடை

மனப்பக்குவம் என்கிறவலிமை

இவைகளைக் கொண்டுதான் மனிதன் தனது வாழ்க்கையைக் கடக்க வேண்டியவனாகிறான்.

ஆகவே, ஒவ்வொரு மனிதனும் எதை விரும்பவேண்டும் என்பது அவனுடைய அகத்திற்கும் புறத்திற்கும் ஒத்ததாக இருக்க வேண்டும். ஒரு பெரிய ஆற்றை நீந்திக் கடக்க வேண்டும் என்ற ஆசை உள்ளத்திலே எழுந்தால் மட்டும் போதுமா? உடலிலே வலிமையும் உறுப்புக்களுக்குப் பழக்கமும் வேண்டும் அல்லவா, அதுபோலத் தான் வாழ்க்கையும்.!

பொருளாதாரத்தையும், சமூக அமைப்பையும், சமூக நாகரிக வளர்ச்சிக்காக ஏற்படும் மாற்றங்களையும் அனைத்தையுமே 'மக்கள் வாழ்வுக்காக' என்று சிந்திக்க வேண்டுமே தவிர, ''எனக்காக, என் ஒருவனுக்காக, என் ஒருவனுக்காகவே'' என்று சிந்திக்கக் கூடாது என்ற முடிவைத்தான், அண்ணா அவர்களின் தத்துவக் கருத்துக்களைத் துணையாய்க் கொண்டு நான் சிந்தித்துப் பார்த்த அளவில் மிகவும் ஏற்புடையதாக கருதலானேன்.

உலகில் பூசலும் போராட்டமும் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன? தகுதியுடையவன் தன் தேவையைப் பெறாத போது விடுகின்ற கண்ணீர்த் துளிகள் கனலாக மாறுகின்றன.

ஏராளமான பொருள்களுக்குரிய ஒருவர், தன் கண் எதிரில் கஞ்சிக்குப் போராடும் எளிய உருவங்களைக் காணும்போது இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டுமென்று யாரும் எதிர் பார்க்கவில்லை. ஏன் அ... ...ள் அந்த நிலையிலும், நா... ...த நிலையிலும் இருக்கிறோம் என்பதையாவது சிறிதளவு யோசிக்க வேண்டுமல்லவா?

அந்த யோசனை அவருக்கு உண்டாக வேண்டுமானால், இயற்கையான அன்பின் உயிரோட்டப் பண்பு அவரிடம் உண்டாக வேண்டும். அனுபவத்தால் அது எந்த அளவிற்கு வெற்றி பெறும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. அதனால் தான் நாட்டில் வேறு வேறுபட்ட நிலைகள் காலம் காலமாக வளர்ந்து வருகின்றன.

முந்தைய தலைமுறையில் செயற்பட்டவைகள் எல்லாம் தொடர்ந்து வரவேண்டும் என்று முடிவு செய்தால், நாட்டில் மக்களின் வாழ்க்கை அமைப்பும் பொருளாதார நெறியும் ஒரு கோணத்திலேயே நடை போட்டுக் கொண்டிருக்கும். மேம்பட்டவர்கள் மேலும் மேம்படவும், தாழ்ந்தவர்கள் மென் மேலும் தாழவும் தான் நேரும்.

மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் எல்லோருக்கும் நடு நிலையான வாழ்க்கை வசதி அளிக்கப்பட்டாக வேண்டும் என்ற பிரச்சனை எழுந்து பல்லாண்டுகள் ஆகிவிட்டன.

இந்தப் பிரச்சினைக்குச் சரியான முடிவு பிறக்க அண்ணா அவர்களின் அன்புத்தத்துவம் அதற்கு ஏற்றதொரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. மக்கள் அதை உள்ளும் புறமும் ஒருமைப்பாட்டுடன் ஏற்பதில் தான்வெற்றி அடங்கியிருக்கிறது.

குழந்தைக்குத் தேவையான உணவைத் தாய் அளிப்பதுபோல, மாணவனுக்குத் தேவையான கல்வியை ஆசிரியர் அளிப்பதுபோல, இல்லாதவர்களுக்குத் தே... ...வயானதை இருப்பவர்கள் அளிக்க முன்வரவேண்டும் என்... அண்ணா அவர் ...ளின் அந்த அ... புத் தத்துவம். இதைக் கடை... ...ல் பிரச்சினையைச் சமா... ...பபதற்கான உதயம்தென்படும்!

**பே**ரறிஞர் அண்ணா அவர்களுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது, 1936ஆம் ஆண்டிலாகும். அப்போது, நான் காங்கிரசிலிருந்தேன். அவர், பெரியாரின் தலைமையைப் பெற்றிருந்த சுயமரியாதை இயக்கத்திலிருந்தார். எங்கள் முதல் சந்திப்பு, ஜஸ்டிஸ் கட்சியின் நாளேடாக வந்து கொண்டிருந்த ''திராவிடன்'' அலுவலகத்தில் நிகழ்ந்தது. அப்போது அண்ணா அதன் துணை ஆசிரியராக இருந்தார்.

அதன்பின், தொடர்ந்து தொழிற்சங்க மேடைகளில் அடிக்கடி நாங்கள் சந்தித்து வந்தோம். காங்கிரசுக்கும் சுயமரியாதை இயக்கத்திற்குமிடையே கடுமையான கருத்து வேற்றுமையிருந்து வந்த காலம் அது. அப்படியிருந்தும், மன ஒருமைப்பாடுடைய நண்பர்களாகவே நாங்கள் பழகி வந்தோம்.

1946ல், நான் ''தமிழ் முரசு'' என்னும் பெயரிலே மாத இதழ் ஒன்றை நடத்தத் தொடங்கிய பின், எங்களுக்குள் முதன் முதலாகக் கருத்து வேற்றுமை வெளிப்படலானது. இந்திய ஒருமைப்பாட்டுக்குட்பட்ட தமிழரசா? இந்தியாவிலிருந்து பிரிந்து வாழும் திராவிடத் தனி நாடா — என்னும் ரீதியில் எங்கள் கருத்துவேற்றுமை அமைந்தது.

என் கொள்கைகளிலே அவருக்கு முழு அளவில் உடன்பாடு இருந்தது. ''இவற்றிலே நாம் சேர்ந்து பணியாற்ற வேண்டும்'' என்றும் அவர் கூறுவார். ஆனால் இந்தியாவிலிருந்து பிரிந்த தனித் திராவிட நாட்டுக் கோரிக்கையையும் அவர் வலியுறுத்தினார்.

இருப்பினும், ஒரு காலத்தில் மாநில சுயாட்சிக் கொள்கையைத் தாமும் ஏற்க வேண்டி வரும் என்ற எண்ணம் அவருடைய இதயத்தில் அப்போதே இருந்ததென்று நான் நம்புகிறேன்.

சுதந்திர திராவிட நாடு அவர் சார்ந்திருந்த திராவிடர் கழகத்தின் கொள்கையாக இருந்ததால், எனது மாநில சுயாட்சிக் கோரிக்கையைக் குறைந்தபட்ச லட்சியமாகக் கருதி, இதிலே உடன்பாடு தெரிவிக்க அவரால் முடிந்தது. சுயாட்சித் தமிழகமா? சுதந்திர திராவிட நாடா என்னும் அரசியல் பிரச்சனைகளிலே, ''தமிழ் முரசு'' இதழில் நானும் ''திராவிட நாடு'' இதழிலே அண்ணாவும் கருத்துப் போர் நிகழ்த்திய காலத்திலே, ஔவை தி. க. சண்முகம் அவர்கள் அண்ணாவுக்கு ஒரு கடிதம் எழுதினார், அதிலே,

நாங்கள் இருவரும் பத்திரிகை மூலம் பரஸ்பரம் சண்டையிடுவதில் தமக்குள்ள விருப்பமின்மையை வெளிப்படுத்தி, நாங்கள் ஒன்றுபட்டுத் தமிழினத்தாருக்கு வழிகாட்ட வேண்டும் — என்று கேட்டுக்கொண்டார்.



# அண்ணா விரும்பிய அதிகாரப் பரவல்




மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர்
**டாக்டர் ம. பொ. சிவஞானம்**


அரசியல் விஷயத்திலே எங்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டிருந்த காலத்திலும், நாங்கள் அடிக்கடி சந்தித்து வந்தோம். குறிப்பாக, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் குடும்பத்தில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளிலே நாங்கள் கலந்துகொண்டு, மனம் விட்டுப் பேசி, பழகி வந்தோம். 3.9.48ல் திருச்சி வானொலி நிலையத்தில், பத்திரிகைத் தொழில் பொதுச் சேவையா? சொந்தத் தொழிலா? என்னும் தலைப்பில் விவாதம் நடத்தியதும் இன்னும் எனது நினைவில் பசுமையாக இருக்கிறது.

'தமிழ் முரசு' இதழைத் தொடங்கிய பின், அதன் தொடக்க இதழ்களிலே நான் எழுதி வந்த அரசியல் கட்டுரைகள் பற்றித் தாம் நடத்தி வந்த ''திராவிட நாடு'' வார இதழிலே அண்ணா அவர்கள் அடிக்கடி விமர்சனம் எழுதிவந்தார். ''தமிழகத்தில் தமிழரசு காண வேண்டும்; தமிழர் வாழ்வில் தமிழ் மொழியே தலைமை பெற வேண்டும்'' என்ற

அவருக்கு அண்ணா எழுதிய பதில் கடிதத்திலே, ''நாங்கள் சண்டை போடுவது போல உங்களுக்குத் தோன்றினாலும், உண்மையில் அது சண்டையல்ல'' என்று குறிப்பிட்டிருந்தார். இது, எங்களிருவருடைய நட்பிற்கு அடித்தளமிருந்ததைக் காட்டியது.

''மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு வெற்றி தேட ஒன்றுபட்டுச் செயலாற்றுவதற்காகத் திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கூட தற்காலிகமாக ஒத்தி வைக்க நான் தயார்'' என்றுகூட, ஒரு சந்தர்ப்பத்தில் அண்ணா அறிவித்தார். ஆனால், பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடாதவரை நாங்கள் அரசியல் ரீதியில் ஒன்றுபட்டுப் பணியாற்றுவது சாத்தியமில்லையென்று அவருக்கு நான் பதிலளித்தேன்.

மற்றொரு சமயத்தில "மாநிலங்கள் விரும்பாதபோது பிரிந்துபோக அரசியல் சட்டத்தில் விதி ஏற்படுத்தினால் எனது கழகம் பிரிவினைக் கோரிக்கையை வற்புறுத்தாது'' என்று அண்ணா அறிவித்தார். அதிலேயும் என் மனம் திருப்தியடையவில்லை. ஆனால் பிரிவினையை அடியோடு கைவிட்டு, மாநில சுயாட்சிக் கோரிக்கையை அண்ணா ஏற்கவும், அது காரணமாக நாங்கள் ஒரே அணியில் நின்று பணியாற்றவும் சந்தர்ப்பம் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு அப்போதே இருக்கத்தான் செய்தது.

சரியான ஒரு சந்தர்ப்பத்திலே அண்ணா அவர்கள் பிரிவினைக் கோரிக்கையைத் தற்காலிகமாகக் கைவிட நேர்ந்தது. அது, இந்தியாவின்மீது சீனா படையெடுத்த நேரத்திலாகும். அதனை மகிழ்ச்சியோடு நான் வரவேற்றேன்.

அதையடுத்து தி. மு. கழகப் பொதுக் குழுவிலேயும், பிரிவினைக் கோரிக்கையை அடியோடு கைவிடுவதாகத் தீர்மானம் போடப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்திலே அண்ணாவைக் கேலி செய்து ''வெற்றி விழா'' கொண்டாடியவர்களும் உண்டு. அரசியல் ரீதியில் அண்ணா வெளிப்படுத்திய மனமாற்றத்தை நான் மகிழ்ச்சியோடு வரவேற்று அறிக்கை விடுத்தேன்.

பிரிவினையைக் கைவிட்ட பின்னும் மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஏற்காத நிலையில் ஒரு சிறிய அளவில் இடைக்காலம் ஏற்பட்டது. அந்தக் காலத்திலே, மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஏற்க வேண்டும்—என்று நான் அண்ணாவைக் கேட்டுக் கொண்டு அறிக்கை வெளியிட்டேன்.

பின்னர், "மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டும்'' என்ற அளவில் மாநில சுயாட்சிக் கோரிக்கையின் அருகில் அண்ணா நெருங்கி வந்தார். தமது கழகத்தின் அமைப்பு விதியிலேயும் 'மாநிலங்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குக் கூடுதல் அதிகாரங்கள் பெறுவது' என்ற வாசகத்தைச் சேர்த்தார்.

தம் வாழ்நாளின் கடைசிக் கட்டத்தில் தம்முடைய ''காஞ்சி'' என்னும் வார இதழிலே - 'தம்பி'க்கு எழுதிய கடிதத்திலே' கூடுதல் அதிகாரங்களையே அண்ணா வற்புறுத்தியிருக்கிறார். அதைத்தான் அவர் எழுதி வைத்த 'உயில்' (மரண சாசனம்) என்று சட்டப் பேரவைப் பேச்சு ஒன்றில் கூட நான் குறிப்பிட்டேன்.

[illegible]



அண்ணாதுரை இம் மதிப்புமிக்க மாமன்றத்தின் மேலவையில் உறுப்பினராய் இருந்தார். மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று விலகிச் சென்று தமிழ்நாட்டின் முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே இருந்த உறவு முறையில் அவர் நடுநிலையோடு நடந்து கொண்டார். மாறுபட்ட அரசியல் கட்சியில் இருப்பினும்கூட அதை அவர் வெளிக் காட்டவில்லை. அண்ணா துரை உண்மையான ராஜதந்திரி. புகழ்வாய்ந்த இந்தியர்.

—மாண்புமிகு
பிரதமர் திருமதி இந்திராகாந்தி

''மாநில சுயாட்சி'' என்று அண்ணா அவர்கள் என்றுமே சொல்லவில்லை என்று ஒரு கருத்து நிலவி வருவதை நான் அறிவேன். அதனை மறுக்க எனக்கும் சான்று கிடைக்கவில்லை. ஆனால் மாநில சுயாட்சியை எதிர்த்து அண்ணா பேசியதோ, எழுதியதோ இல்லை.

1968ல் சென்னை ''ஆபட்ஸ்பரி''யில் தமிழரசுக் கழகம் நடத்திய மாநில சுயாட்சி மாநாடு ஒன்றிலே, அண்ணா கலந்துகொண்டு பேசினார். அப்பொழுதும் அவர் வலியுறுத்தியது, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டுமென்பதுதான்.

''அதிகாரப் பரவல்'' என்பதற்கும், ''மாநில சுயாட்சி'' என்பதற்கும் வேற்றுமை உண்டு. ''அதிகாரப் பரவல்'' என்பது, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமான நிர்வாகப் பிரச்சினைதான். ''மாநில சுயாட்சி'' என்பது மாநிலங்களின் சுதந்திர அந்தஸ்தையும் வற்புறுத்துவதாகும்.

என்னைப் பொறுத்தவரையில், கூடுதல் அதிகாரங்கள் கோருவதைக் குறைந்த பட்ச லட்சியமாகக் கருதியே அதற்கு ஆதரவளித்து வருகிறேன். நாளைக்குக் கிடைக்கும் பால் சோற்றைவிட உடனடியாகக் கிடைக்கும் பழஞ்சோறு வரவேற்கத்தக்கதுதானே!

இது எப்படியிருப்பினும், எங்கள் இருவரையும் அரசியல் ரீதியில் ஒரே அணிக்குக் கொண்டு வந்தது, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் கோரும் உணர்ச்சிதான். அதிலே நாங்கள் ஒன்றுபட்ட கருத்துடன் இருந்தோம்.

அண்ணாவின் அதிகாரப் பரவல் கோரிக்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், தனது லட்சியமாகக் கொண்டிருப்பது, அதனோடு தமிழரசுக் கழகம் உறவுகொள்ளக் காரணமாகியிருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. அரசும், அதிகாரப் பரவல் முறை கோரிக்கையை உறுதியாக வலியுறுத்துகிறது. மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வேண்டும் என்போருக்கும், உடனடியாகக் கூடுதல் அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்போருக்கும் அடிப்படையில் வேற்றுமை இருக்கவில்லை; அணுகுமுறையில்தான் வேற்றுமை!



அண்ணா உருவப்படத்தைக் கலைவாணர் திறந்து வைக்கிறார்; அண்ணாவும் உடன் இருக்கிறார்.



கலைவாணர் உருவப்படத்தை அண்ணா திறந்து வைக்கிறார்.

அதிகாரங்களை மத்தியில் குவித்திருப்பது, தேசம் பிரிவினையான காலத்தில் தவிர்க்க முடியாததாக இருந்திருக்கலாம். தேசம் சுதந்திரம் பெற்ற ஆரம்ப காலத்திலே நவ பாரதத்தைப் படைக்க மத்திய அரசு கூடுதல் அதிகாரங்களுடன் இருப்பது அவசியம் என்று கருதியவர்கள் குற்றவாளிகள் அல்லர். அதனால் தீய விளைவுகளும் ஏற்பட்டுவிட்டன என்பதனை அசாமிலும், பஞ்சாபிலும் கண்டு வருகிறோம்.

மத்திய அரசை நடத்துபவர்கள் அதிகாரச் சுமையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அந்தத் திணறலை மறைக்கவும் முயல்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணாவின் பவள விழாவிலே, அதிகாரங்களைப் பரவலாக்குவதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தும் பிரசாரமும் நடைபெற வேண்டும். ஆனால், அரசியல் கட்சிகளின் ஒற்றுமையின்றி இதைச் சாதிக்க முடியாது. இது, ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிகளுக்குமான பலப் பரீட்சைக்குரிய விஷயமல்ல. அப்படிக் கருதுவதோ செய்வதோ, அதிகாரப் பரவல் லட்சியத்தின் வெற்றியையே தடுத்து விடுவதாகும். கட்சி வேற்றுமைக்கும் விரோதங்களுக்கும் அப்பாற்பட்ட தேசியப் பிரச்சினையாகவே அறிஞர் அண்ணா அதைக் கருதினார்.

மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் கோரி, மத்திய அரசுடன் மோத வேண்டும் என்னும் போக்கிலே, கேரளத்தின் முதல்வர் பொறுப்பிலிருந்தபோது திரு நம்பூதிரிபாத் தமிழக முதல்வர் அண்ணாவின் ஒத்துழைப்பைக் கோரினார். அப்போது அத்தகைய மோதல் வெற்றிக்கு வழி வகுக்காது - என்று அண்ணா திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மாநில-மத்திய அரசுளிடையே மோதலை வளர்ப்பது தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கும்; தேசப் பாதுகாப்பைக் கெடுக்கும்- என்பதை அண்ணா தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார். ஆனால், இதனை எதிர்க் கட்சிகள் மட்டுமன்றி, மத்தியிலுள்ள ஆளுங் கட்சியும் உணர வேண்டும்.

மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்களைக் குறைப்பது வேறு; அதன் பலத்தையே குறைத்து பலவீனப்படுத்துவது வேறு. அதிகாரப் பரவல் கோரிக்கைக்காக, மாநில-மத்திய அரசுகளிடையேயான உறவைக் கெடுப்பது அண்ணாவின் வழியல்ல!

பவள விழாவின் நாயகராகிய அறிஞர் அண்ணாவுக்கு என் இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்துகிறேன். அவரது ஆன்மாவும் மாநில-மத்திய அரசுகளிடையில் நல்லுறவை வளர்க்கும் முயற்சிக்குத் துணைபுரியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

வாழ்க பேரறிஞர் அண்ணாவின் புகழ்!

# ஆட்சித்துறையில் அண்ணா பதித்த முத்திரை



மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி

**பொ**து வாழ்வில் ஈடுபட்டு, க்களின் கட்டளைகளை ஏற்று ட்சிபீடம் ஏறுகிறவர்களைப் ார்த்து, வழக்கமாகக் கேட்கப் டும் கேள்வி, 'இவருக்கு ஆட்சி டத்தி அனுபவம் இருக்கிறதா' ன்பதுதான்.

அந்த அளவுகோலின்படி ார்த்தால் மக்களால் அளிக்கப் டும் பதவிகளில் அமருகிறவர் ள் யாருக்குமே முன் அனுபவம் )ருப்பதற்கு வாய்ப்பு இல்லை.

பரம்பரையாக ஆட்சி நடத் ும் மன்னர் ஆட்சி முறையில், ௭த்தோரின் வழிமுறைகளை ாரிசுகள் தெரிந்து கொள்ள ாய்ப்பு இருக்கும்.

மக்களாட்சியில், முன்பு ஆண்டவர்கள் விட்டுச் சென்ற சீரிய மரபுகளே வழிகாட்டிகள்.

ஜனநாயகம் என்பது ஒரு வகையில் திறமையானவர்களை மட்டும் தேர்ந்தெடுக்கும் முறையல்ல. மக்களிடம் சொல்லுகிற கொள்கைகளைச் செயல் வடிவில் காட்டுவதற்குத் தகுதியானவர்களைத்தான், அரசியல் கட்சிகளின் தலைவர்களைத்தான் மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

அவ்வகையில் சில பல கொள்கைகளின் அடிப்படையில் மக்கள் கட்டளைப்படி ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தார் பேரறிஞர் அண்ணா.

அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றது காலத்தின் கட்டாயத்தால் நிகழ்ந்தது. முன்பிருந்த ஆட்சி அகற்றப்பட்டு வேறு ஒரு புது அரசு வந்தது என்று மட்டும் அதற்குப் பொருள் கொண்டு விட இயலாது.

ஜனநாயகத்திற்குப் புதியதொரு அர்த்தம் எழுதப்பட வேண்டும் என்று மக்கள் விரும்பினர். அந்த அபிலாஷைகள், ஆர்வங்கள், ஆவேசங்கள் ஆகியவற்றின் வடிவமாகவே பேரறிஞர் அண்ணா அவர்கள் திகழ்ந்தார்கள். எனவே அண்ணா அவர்களின் ஆட்சி அனுபவம் சற்று வித்தியாசமானதாகும்.

நமதுநாட்டில் நடைமுறையில் இருக்கிற முறைப்படி ஆளும் கட்சி மாற்றத்தையொட்டி நிர்வாக யந்திரம் மாறுதலுக்கு ஆளாவதில்லை. அரசின் கொள்கையை வகுக்கும் அமைச்சரவையும் சட்ட மன்ற அவைகளும் அரசியல் கட்சிகளின் பெரும்பான்மை பலத்திற்கேற்ப இயங்குகின்றன.

அண்ணா முதல்வர் பொறுப்பை ஏற்கிறார். அந்நாளைய தலைமைச் செயலர் திரு சி. ஏ. இராமகிருஷ்ணன் ஐ.சி.எஸ். அருகில் உள்ளார்.





படி அரிசித் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார் பேரறிஞர் அண்ணா.

கொள்கையை வகுத்துச் சட்ட மன்றத்தின் ஒப்புதலைப்பெற்றுத் தீட்டப்படும் திட்டங்கள், முடிவுகள் இவற்றை நிர்வாக யந்திரத்தின் வாயிலாகத்தான் நிறைவேற்ற இயலும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இதை நன்கு உணர்ந்து இருந்தார். அதனால்தான் நிர்வாக இயந்திரத்தின் இயக்கும் சக்தியாக உள்ள அரசு ஊழியர்களை முதல் காரியமாகத் தன்வயப் படுத்திக் கொண்டார்.

அதுவரை வரலாற்றில் இல்லாத வகையில், பொறுப்பேற்ற அன்றே கோட்டை மைதானத்தில் அரசு ஊழியர்கள் கூட்டத்தில் மனம் விட்டுப் பேசினார். இந்த மரபுதான் பிற்காலத்திலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது.

அரசு ஊழியர்களின் ஆதரவை அவர் நாடியபோது 'நான் முதலமைச்சர் என்ற முறையில் அல்ல, உங்கள் இல்லங்களில் உள்ள கஷ்டங்களை நன்கு தெரிந்த முதல் பிள்ளை! என்று கருதி ஒத்துழைப்புத் தாருங்கள்' என்று வேண்டுகோள் விடுத்தார்.

இந்த அணுகுமுறை-அரசு ஊழியர் மனங்களில் இருந்திருக்கக் கூடிய சந்தேகங்களைத் தகர்த்து எறிந்தது. பாசப் பிணைப்பும் அன்புப் பாலமும் எழுந்தன.

அண்ணா தாம் பதவி யேற்கு முன்பு இருந்த ஆட்சிக் காலத்தை குற்றம் சாட்டவில்லை-மாறாக 'முன்பு இருந்ததை மேம்படுத்தவே வந்துள்ளேன்'' என்றார்.

''நிர்வாக யந்திரத்தின் சக்கரம் சரியாகத்தான் இருக்கிறது. அதற்கு கொஞ்சம் எண்ணெய் விடவேண்டும்'' என்று நிலவரத்தை அண்ணா மிக அருமையாக வர்ணித்தார்.

''நிர்வாக யந்திரம் மக்கள் நலனுக்காக இயங்கும் வகையில் முடுக்கிவிடப்படவேண்டும். மக்களின் நாடித் துடிப்பை நிர்வாக யந்திரம் உணருமாறு செய்யப் படவேண்டும்" என்றார், அண்ணா. அதற்கேற்ப நிர்வாக யந்திரத்தின் முழு ஒத்துழைப்பையும் அவர் பெற முடிந்தது.

அவர் பொறுப்பேற்ற போது இருந்த உணவு நிலைமை பயங்கரமானது. அதைச் சீர்படுத்த அரும்பாடுபட்டார். உணவுக் கையிருப்பைப் பெருக்கினார். கொள்முதலை ஊக்குவித்தார். கடத்தலைத் தடுத்தார். பதுக்கலைக் கண்டு பிடித்தார். சில மாதங்களுக்குள்ளாகப் பற்றாக்குறை மாநிலமான கேரளத்துக்குத் தமிழ்நாடு அரிசி அனுப்பியது. படி அரிசித் திட்டம் மலர்ந்தது.

இது அவருடைய முன்னுரிமை முயற்சிக்கு எடுத்துக்காட்டு!

மக்களுடைய மன எழுச்சி தான் பேரறிஞர் அண்ணாவின் பொது வாழ்விற்கு அடிப்படை. அதற்கேற்பச் செயல்பட வேண்டிய கட்டாயம் மக்களை நம்பும் அரசியல்வாதிக்கு இயல்பான ஒன்று. காலமெல்லாம் மக்களிடம் கூறி வந்த இலட்சிய அடிப்படையில்

**'தமிழ்நாடு என்று பெயர்சூட்டவும், சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டு வரவும் தமிழ், ஆங்கிலம் எனும் இருமொழித் திட்டத்தைக் கட்டாயமாக்கவும் பேரறிஞர் அண்ணா அவர்கள் விரைவாக நடவடிக்கை எடுத்தார்.**



முதல்வர் அண்ணா நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கிறார்.

இத்திட்டங்கள் அண்ணாவின் இலட்சிய நோக்கத்தை எடுத்துக் காட்டுவதாகவும் மக்களின் மன எழுச்சிக்கு விருந்தாகவும் அமைந்திருந்தன. ஜனநாயகத்தில் ஆட்சியாளர்கள் வெறும் வசதிகளைப் பெருக்கினால் மட்டும் போதாது, மக்கள் உணர்வுகளின் துடிப்பிற்கு வடிவம் தரவேண்டியதும் அவசியம் என்பதை அண்ணா செயலில் காட்டினார்.

நமது அடிப்படையான தொழிலான வேளாண்மை சிறக்கவும், நெசவுத் தொழில் தழைக்கவும் அவற்றை நவீன முறையில் அமைக்க அவர் ஆர்வம் காட்டினார்.

தொழில் உற்பத்தி பெருக - தொழிலாளர் உறவு முறையில் வேலை நிறுத்தம் வன்முறை இரண்டும் கூடாது என்பதே அண்ணாவின் அணுகுமுறை. அவர் காலத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க உதவினார்.

இன்றைய அரசியல் சட்ட அடிப்படையில் மத்திய அரசும் திட்டக் குழு, நிதிக்குழு போன்றவையும் மாநிலங்களுக்கு மேம்பட்ட அதிகாரம் படைத்தவையாக உள்ளன.

மத்திய அரசிடமும் அல்லது திட்டக் குழு போன்ற அமைப்புக்களிடமும் மாநிலத் தேவைகளை வலியுறுத்த நேர்ந்த போதெல்லாம் கோரிக்கையின் நியாயங்களே அவருக்குப் பலமாக அமைந்திருந்தன. அவற்றை வலியுறுத்த நட்புரிமையுடன் கூடிய பாங்கினை அவர் கையாண்டார்.

குறுகிய அரசியல் கண்ணோட்டங்கள் மற்றும் பேதங்களை வைத்து மத்திய அரசோடு அவர் மோதிக் கொண்டதில்லை.

மத்திய அமைப்புக்களின் போக்கைப் பாரபட்சம் என்றோ ஆதிக்க வெறி என்றோ வர்ணித்து அரசியல் வாண வேடிக்கை நடத்தியதில்லை.

மாறாக, மாற்றாரும் "புகழும்படி நடந்துகொண்டார். ஒவ்வொரு கூட்டத்திலும் எங்களுக்கு ஆக்கபூர்வமான ஆதரவை அளித்தார். எங்களைப் புரிந்து கொண்டார்" என்றே அனைத்து அரசுத் தலைவர்களும் அண்ணா அவர்களைப் பற்றிக் கூறினர்.

'இது அறிஞர் அண்ணா அவர்கள் கடைப்பிடித்த அற்புதமான வழியாகும்'.

அண்ணா அவர்கள் மிகக் குறுகிய காலமே பதவியில் இருக்க முடிந்தது.

'நான் சாமான்யர்களின் பிரதிநிதி' என்று தன்னைக் கூறிக்கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தச் சாமானியர்களுக்கு என்ன செய்வது என்ற கவலையிலேயே தன்னை அணு அணுவாக அர்ப்பணித்துக்கொண்டார். அவரது அரிய பாதைகளையும் செயல் முறைகளையும் முழுமையாகத் தெரிந்து கொள்ள பிற்காலத் தலைமுறைக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது அரசின் தலைமைச் செயலாளராக இருந்த திரு சி. ஏ. ராமகிருஷ்ணன், ஐ.சி.எஸ். அவர்கள் முதல்வர் அண்ணா அவர்களின் பின்வரும் குணாதிசயங்களைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

**—பொறுமை**

**—பிறர் நலனில் காட்டும் அக்கறை**

**—அதிகாரிகளிடம் யோசனை கேட்கும் பண்பு**

**—தவறு நிகழ்ந்துவிடக்கூடாதே என்பதில் விழிப்பு**

**—தண்டிக்க நேரும்போது நீதியின் கடுமையை இரக்கத்தால் குறைத்துவிடுதல்**

இவற்றுடன் கூடிய அண்ணா அவர்கள் நிர்வாகி என்ற முறையில் தனித்தன்மை படைத்தவர், என்றெல்லாம் அவர் எழுதியுள்ளார். பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி அனுபவத் திறனுக்கு இதைக்காட்டிலும் பொருத்தமான பாராட்டு இருக்க முடியாது.

**ஆட்சித்துறையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெற்ற அனுபவம் என்பது ஒரு சீரிய வரலாறு.**

அந்த வரலாற்றின் தொடர்ச்சி இடையில் சிலகாலம் அறுபட்டிருந்தாலும், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக, பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி அனுபவங்களே திகழ்கின்றன.

இது நம் அனைவருக்கும் பெருமிதமூட்டும் உண்மையாகும்.



# அண்ணாவின் போர்க் கருவி



## மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து

"மாந்தன், தனது சுற்றுப் புறத்தினால், உருவாக்கப்படுவானானால், அவனது சுற்றுப்புறம் மாந்தன்மை உடையதாக மாற்றப்பட வேண்டும்"-என்பது மார்க்ஸ் கோட்பாடு.

மனிதனின் சுற்றுப்புறம், அவநம்பிக்கை கொண்டதாக இருக்கிறது. அதனை மனிதாபிமானம் என்னும் மருந்தால் ஓட்டிட வேண்டும். மனிதன் மீது அபிமானம் என்பது தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதே! ஒரு மனிதனுக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவது வாழ்க்கை உத்தரவாதம் கிடைக்கும் நிலையிலேயே சாத்தியம் ஆகும்.

"தன்னம்பிக்கையை வழங்கி, அவநம்பிக்கையை (சாதி, சமய கடவுள், சாஸ்திரம் முதலிய நம்பிக்கைகள்) திரும்பப் பெற்று, மனித வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும்" - என்பதே விஞ்ஞானப் பகுத்தறிவுத் தன்மான இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

மனித வாழ்வினை இருட்டறையில் வைத்திருக்கும் அவநம்பிக்கையான - மூடநம்பிக்கைகளான-சாதி, சமய, கடவுள், சாஸ்திரம், சுரண்டல் முதலியவற்றை, எதிர்த்து அவற்றை முற்றிலும் சமூக வாழ்விலிருந்து அறுத்தெறிந்திட உதவிடும், போர்க்கருவிகளில், "கலை-இலக்கியம்", சிறந்த பங்குவகிக்கிறது.

"தமிழ்க் குலத்தை அழிக்கும் வேர்ப்புழுக்களை அழித்தாலன்றித் தமிழகம் தழைக்குமாறில்லை. வாழ்வினையே பேசி, ஆள்வினை அற்றிருக்குமளவும், நாம் உய்யுமாறில்லை என்று கருதுகின்றவர் அண்ணா"-என்னும் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளையின்கருத்து, பேரறிஞர் அண்ணாவின் இலட்சிய வெறியை விளக்குகிறது.

தமிழ்க் குலத்தை அழிக்கும் வேர்ப்புழுக்களான சமூகப்பொருளியல் வேறுபாடுகளை, இல்லாது ஒழிக்க, போர்க்குணத்தை இளமையிலேயே பெற்ற அண்ணா அவர்கள், சுயநலமே பெரிதென அரசுப்பணிசெய்ய மன ஒப்புதலின்றி, பெரியார் பின்னால் சமூகப் பணி செய்ய தன்னையே அர்ப்பணித்தார். நெருஞ்சிமுள் நிறைந்த பாதையில் நெடும்பயணம் மேற்கொண்டார்.

சுயமரியாதை இயக்கத்தின் மூலம் வெளிவந்த ஏடுகளில், அறிவு விளக்கக் கட்டுரைகளே இடம் பெற்றிருந்தன; சிங்காரவேலர், மருதாசலன், லட்சுமிரதன் பாரதி, குருசாமி போன்றோரால் விஞ்ஞானப் பகுத்தறிவுச் சமதர்மப் புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட்டன. பெரியார் ஈ.வெ.ரா, கைவல்யசாமியார், புலவர் குழந்தை, சந்திரசேகரப் பாவலர், பாரதிதாசன் ஆகியோரது கட்டுரைகளும் கவிதைகளுமே வெளியாயின. இவைகளை அனைவரும் விரும்பினாலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் புரட்சிக்கருத்துக்கள் போய்ச்சேரச், சீர்திருத்தக் கதைகள் தேவைப்பட்டன. "தாசிகளின் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்" - என்னும் ஒரு புதினத்தை மூவலூர் இராமாமிர்தத் தம்மையார் எழுதினார். தன்மான இயக்கத்தினைச் சேர்ந்த எவரும் கதை இலக்கியத் துறையில் முத்திரை பதிக்கவில்லை. அண்ணா அவர்கள், கதைசொல்லும் முறையில், கருத்துக்களை லாவகமாக மக்களிடம் பரப்பினார்-புகுத்தினார்.



பேரறிஞர் அண்ணா அவர்கள் கலை இலக்கியத்தைக் கைவேலத்தி, புதுக் கவிதைகள் 50, தம்பிக்கு எழுதிய கடிதங்கள் 261, நாடகங்கள் 45, சிறுகதைகள் 89, குறும் புதினங்கள் 9, புதினங்கள் 6 முதலியவற்றின் மூலமாக சமூக சீர்கேடுகள் மீது தாக்குதல்கள் நடத்தினார்.

மேற்சொன்ன கலை-இலக்கியப்படைப்புகளான போர்க்கருவிகள் மூலம், சமூகப் பொறுப்பேற்றுக் கொண்டு, அவநம்பிக்கைகள் மீதும், அவலங்கள் மீதும் கடும் போர் புரிந்தார் அண்ணா அவர்கள்.

ஏழை என்றால் எவருக்கும் எளிது-ஏழை சொல் அம்பலம் ஏறுமா?-என்னும் பழமொழிகளுக்குச் சொந்தமான, முதலாளித்துவ அமைப்பின் மீதும், சுரண்டல்காரர்கள் மீதும், கலை-இலக்கியக் கருவியைக் கொண்டு போர் தொடுக்கிறார்.

"ஏழை என்றால் எவருக்கும் எளியவரல்லர்-ஏழைசொல் அம்பலம் ஏறும் - ஏறாவிட்டால் ஏற்றிக் காட்டுவோம்"-என்னும் சிந்தனைகளை, தம் கலை இலக்கியப் படைப்புகளில் ஓடவிடுகிறார் அண்ணா.

அண்ணா, தம் கலை - இலக்கியப் படைப்புகளான புதினங்கள்-சிறுகதைகள் - நாடகங்கள்- உரைநடைகளில் வரும் எடுத்துக்காட்டுச் சிறுகதைகள் முதலியவைகளில் வரும் கதை உறுப்பினர்களில், ஏழை-எளியவர்கள் விரக்தி



அடைவதைத் தவிர்த்து, அவர்கள் வாழ்க்கையில் வெற்றிமேல் வெற்றி பெறுவதைக் காட்டி, அவர்கள் வாழ்வில் தன்னம்பிக்கை யூட்டுவதில் அக்கறைகாட்டியுள் ளார் என்பதை அறிகிறோம்.

அண்ணா தம் கலை-இலக்கியப் போர்க்கருவியினைக் கையில் ஏந்தி, தாழ்த்தப்பட்டோர், அடக்கப்பட்டோர், ஒடுக்கப்பட் டோர், புறக்கணிக்கப்பட்டோர் தம் எதிரொலியாக மட்டுமில்லா மல், அவர்களைத் தம் நிலையி லிருந்து விடுதலை பெற்று, உரிமை வாழ்வில் உயர்த்திக் காட்ட யுத்தம் தொடுக்கிறார். அவைகளில் வெற்றியும் அமைத் துக் காட்டுகிறார்.

அண்ணா, தம் கலை-இலக்கியப் படைப்புகளில் ,சமூகப் பிரச்னை களை மட்டும் காட்டிவிட்டு பொறுப்பில்லாமல் போய்விடுவ தில்லை. அச் சமூகப் பிரச்சனை களைத் தீர்க்கும் மாற்று வழியையும் காட்டிச் செல் கிறார். இதனால்தான், அண்ணாவின் கலை-இலக்கியப் படைப்புகள், அழியாத புகழைப் பெறுகின்றன. அண்ணா தோன் றிய சமூகத்தில் என்ன என்ன பிரச்சனைகள் தலை தூக்கின- அவைகளை எப்படி, எதன் மூலம் மாற்றுவது என்பதைக் கீழே சுட்டிக்காட்டுகிறேன்.

**சிக்கல்களும், பரிகாரங்களும்;**

பெண்ணடிமை — கலப்புமணம். விதவைமணம், பெண் சொத் துரிமை.

சாதி—கலப்புமணம், சுரண் டல் ஒழிப்பு.

சமயம் - கடவுள் - சாஸ்திரங் கள் —விஞ்ஞான - பகுத்தறிவு உண்மைகள்.

ஏழை - பணக்காரர்வேறுபாடு —சுரண்டலற்ற பொதுவுடைமைச் சமுதாயம்.

ஆட்சிமொழிச் சிக்கல்— இரு மொழிக்கொள்கை.

மத்தியப் பேரரசு ஆதிக்கம்— மாநிலத் தன்னாட்சி.

மேற்குறிப்பிட்ட சமூகப் பிரச் சனைகளும், அவற்றைத் தீர்ப்ப தற்கான பரிகாரங்களும் எல்லோ ராலும் எடுத்துக்காட்டப்பட் டன. ஆனால் அண்ணா அவர்கள் இதைக் கலை-இலக்கியமாக்கிக் காட்டுகிறார். அதில் வெற்றியும் பெற்றுள்ளார் என்பதை அறிகி றோம். இதனால்தான் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் அண்ணாவை,'மதிநலம் வாய்ந்த மருத்துவர்' என்று பாராட்டு கிறார்.

கலை-இலக்கியத்தின் மீது அண்ணா கொண்டநம்பிக்கையை யும் அதன் மூலம் அவர் கண்ட புரட்சியையும் காட்ட நல்ல உதாரணம் நமக்குக் கிடைத் துள்ளது.

1949ல், அண்ணா, தி.மு.கழ கம் ஆரம்பித்த நேரத்தில், அர சாங்கம், பாரதிதாசனின் ''இர ணியன் அல்லது இணையற்ற வீரன்'' என்னும் நாடகத்துக்குத் தடை விதித்திருந்தது.

இதை உணர்ந்த அண்ணா அவர்கள், தம் கழகத் தோழர் களுக்கு அன்புக் கட்டளையிட்டு, தடையைமீறி நாடெங்கும், இர ணியன் நாடகத்தை நடத்தும்படி வேண்டினார். அதுபோல் தடையைமீறி நடத்தி, பலர் கைதியாகச் சிறைத்தண்டனை யும் பெற்றார்கள் என்பதை உணர்கிறோம்.

அதையொட்டி அண்ணா அவர் கள், தாமே புதிய புதிய நாடகங் களை எழுதி, அவரே அந்நாடகங் கள்ல் கதா பாத்திரங்களை ஏற்று கலை ஆர்வத்தோடு நடிக்கவும் செய்தார். தம் கழகத் தோழர்கள் பலரையும் நாடக நடிகர்களாக்கி, நடிக்கவும் வைத் தார்.

அண்ணா அவர்கள், நீதிதேவன் மயக்கம் - ஓர் இரவு-வேலைக் காரி - சொர்க்கவாசல் முதலிய நாடகங்களை நாடெங்கும் நடத் திக்காட்டி, தானும் அதே நாட கங்களில் நடித்தார். ஓர் இரவு- வேலைக்காரி - சொர்க்கவாசல் முதலியவை திரைப்படங்களாக வும் ஆக்கம் பெற்றுள்ளன.



அண்ணா அவர்கள், கலை- இலக்கியத்தை, சமயங்களை வளர்க்கப் பயன்படுத்திய நிலை மையில், மாற்றங் காண வேண்டு மென்று கருதி, சமூக மறுமலர்ச் சிக்கு கலை - இலக்கியத்தை போர்த்தளவாடங்களாகப் பயன் படுத்துகின்றார்.

சமணம் வளர்த்த தமிழ் இலக்கியம்.

கிறித்துவம் வளர்த்த தமிழ் இலக்கியம்.

பௌத்தம் வளர்த்த தமிழ் இலக்கியம்.

சைவம் வளர்த்த தமிழ் இலக்கியம் என்று இலக்கிய வர லாறுகள் எழுதப்பட்டுள்ளன. அதுபோல், அண்ணா வளர்த்த தமிழ்இலக்கியம் என்னும் தலைப் பில் ஆராய்ச்சிகூட மேற்கொள் வது, அண்ணாவுக்குப் பெருமை சேர்க்கும் என்பதைவிட தமிழ் இலக்கியத்துக்குப் பெருமை சேர்க்கும் என்றால் அது மிகை யாகாது.

அண்ணாவின் புதினங்கள் - குறும் புதினங்கள் - நாடகங்கள்- சிறுகதைகள் முதலியவற்றில், நாடகக் கலையையே மக்கள் அதி கம் விரும்பினர். நாடகக் கலை தற்காலத்தில் திரைப்படக் கலை யாகப் பரிணமித்து, மக்களிடம் நல்ல செல்வாக்கும் பெற்றிருக் கிறது.

நாடகக்கலையில், இயல், இசை நாடகம் ஆகிய முத்தமிழுமே இடம் பெற்றுவிடுகின்றன.

புதினங்கள் - குறும்புதினங்கள் -சிறுகதைகள் எழுத்து வடிவம் பெற்றால், படித்தவர்கள் மட் டுமே படித்துச் சுவைத்து திருந்த முடியும். ஆனால் நாடகங்கள் எழுத்துவடிவம் பெற்ற நூற்க ளாக மக்களிடம் செல்லும்போது ஏற்படுத்தும் விளைவுகளைவிட, நாடகங்களாக மேடைகளில்

(தொடர்ச்சி 53-ஆம் பக்கம்)



# அறிஞர் அண்ணாவும் நானும்

முன்னாள் முதல்வர்
பெரியவர்
**திரு எம். பக்தவத்சலம்**

அறிஞர் அண்ணா அவர்களை நான் முதன் முதலில் சந்தித்தது ஒரு பொதுக்கூட்டத்தில். அது சென்னை, எஸ்பிளனேட்டில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. கட்டடத் தில் நடந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் சட்டசபைக்குப் போவதாகக்கூட முடிவு செய்யவில்லை. அந்தக் கூட்டத்துக்கு நான் தலைமை வகிக்கவும், அவர் பேசவும் ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது. கூட் டத்தில் அநேகமாக மாணவர்கள் ஏராளமாகக் கூடியிருந்தார்கள்.

அவர் பேசுவதைப் பற்றி நான் விமர்சனம் செய்ய வேண்டுமா என்ற கவலை எனக்கு இருந்தது. சாதாரண மாக நான் ஒரே கூட்டத்தில் சர்ச்சைகளை விரும்புவதில்லை.



விருத்தி விஷயமாகவும் நானும் அவரும் சேர்ந்து ஒரே மேடையில் பேசியிருக்கிறோம். அப்போதும் கருத்து வேற்றுமை ஏற்பட்ட தில்லை.

அவர் சட்டமன்ற உறுப்பின ரான பிறகு அவர் எதிர்க்கட்சி யில் இருந்தபோதும் எனக்கும் அவருக்கும் எப்பொழுதும் சுமுக மான உறவு, தொடர்ந்து இருந்து வந்தது.

நாங்கள் மதுவிலக்குத் திட் டத்தைக் கொண்டு வந்திருந் தோம். அது வெற்றிகரமாக நடைபெறுவதிலே அண்ணா அவர்களுக்கும் அக்கறை உண்டு.

அதுபற்றிக் கிராமங்களில் நான் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யும் போதெல்லாம் தனக்கும்

இதுவரையில் நான் பேசுகின்ற எந்தக் கூட்டத்திலும் அத்தகைய சங்கடம் ஏற்பட்டதில்லை என்பது என்னுடைய பேரதிர்ஷ்ட மாகும். ஆனால் அண்ணா அவர்கள் நான் ஒப்புக்கொள்ளாத சில விஷயங்களைப் பற்றிப் பேசி னால் நான் அதற்கு விடையளித் துத்தான் ஆகவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. நான் அதற்கு விடையளிக்க அவசியம் இருக்குமா என்றுகூட நினைத்தேன். ஆனால். அந்தக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் மாறுபட்ட கருத்து ஒன்றும் தெரி விக்கவில்லை. நான் அவர் பேச்சைப்பற்றி விமர்சனம் செய்ய வேண்டிய அவசியம் இல் லாமலும் போய்விட்டது.

பின்னால் காஞ்சிபுரத்திலுள்ள பச்சையப்பன் கல்லூரி அபி அழைப்பு அனுப்பினால் வந்து கலந்து கொள்வதாகச் சொல்லி அவரும் கலந்து கொண்டார்.

அவர் முதல்வரான பிறகும் கூட ஒருமுறை திட்டவட்டமாக அறிவித்தார் —

மதுவிலக்குத் திட்டம் சரிவர நடைபெறவில்லை என்றாலும் அதனால் ஏற்படக்கூடிய நஷ் டத்தை ஈடுசெய்வதற்கு மத்திய





அரசு உதவி செய்யவில்லை என்றாலும், மதுவிலக்குத் திட்டத்தினால் அரசு வருமானம் குறையும் என்றாலும் அந்த நிலையிலும் நான் மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிடமாட்டேன் என்று உறுதியாகக் கூறினார்.

முதுகுளத்தூர் கலவரம் நடந்தபோது, அதை நான் சமாளிக்க வேண்டியிருந்தது. அதுபற்றி சட்டசபையில் எதிர்க்கட்சி விவாதம் நடத்தியது. ஆதிதிராவிடர்களுக்கு எதிராக நடைபெற்ற அந்தக் கலகத்தை, வன்முறைச் செயலை நான் எடுத்துக் கூறி விளக்கினேன். ஆனால் எதிர்க்கட்சி என்கிற முறையில் அவர்கள் அதைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தார்கள். அண்ணா அவர்கள் அதுபற்றி உருக்கமாகப் பேசி நான் அவருடைய ஒரு பிள்ளையைப் போல் பாவித்து, அவர் சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார். நான் அதை ஏற்று அவர் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசை ஒருபக்கம் எனக்கு உண்டு என்றாலும் மற்றொரு பக்கத்தில் கடமை உணர்ச்சி ஏற்பட்டு ஒத்துக்கொள்ள முடியவில்லையே என்று கூறினேன்.

அதேமாதிரி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போதும் மாணவர்கள் அதில் கலந்து கொண்டார்கள். சமூக விரோதச் சக்திகளுக்குத் தங்கள் கட்சி பொறுப்பு இல்லை என்று அண்ணா தெரிவித்தார். அண்ணா அவர்களின் ஆதரவு வன்முறைச் செயல்களுக்கு இல்லை.

அரசியலைப் பொறுத்தமட்டில் தேர்தலில் அண்ணா அவர்கள் காஞ்சியில் நின்றபோது நான் எதிர்த்துப் பேச வேண்டியிருந்தது. ஆனால் எப்போதும் அவர் என்னிடத்தில் சகஜமாகவே பழகி வந்தார்.

அண்ணா அவர்கள் ஆட்சி செய்தபோது, அவர்க்கிருந்த முக்கியமான கவலை, தவறு ஒன்றும் நேரக்கூடாது என்பது.

சட்டமன்றத்துக்குள் நுழைவதற்கு முன்பு, அவர் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிர்ப்பாக இருந்தபோதிலும், சட்டமன்றத்தில் கலந்துகொள்ள முடிவு செய்த பிறகு அந்தப் போக்கை அடியோடு கைவிட்டு விட்டார்கள்.

ராஜ்யசபையில் உறுப்பினராக இருந்தபோது அமைச்சர்களிடத்திலும், உறுப்பினர்களிடத்திலும் அறிஞர் அண்ணா அவர்கள் நல்ல முறையில் பழகிப் பெயர்பெற்று வந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்படாமல், இன்னும் கொஞ்சகாலம் பதவியில் நீடித்திருந்தால், அது நாட்டிற்கு நலனை விளைவிப்பதாக இருந்திருக்கும்.

''அறிஞர் அண்ணா பிறந்த நாள்'' விழா மலராக "தமிழரசு" இதழ் வெளிவருவதறிந்து மிக்க மகிழ்ச்சி. ''தமிழரசு'' வாசகர்களுக்கு என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


R. C. No. 517158 Phone No. 83 (Karungal)

**வண்ணான்போற்றவிளை கைத்தறி நேசவாளர் உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்கம் லிமிடெட்**

V.P.Tex

**நிர். 3130. பள்ளியாடி P. O.**

H.O. பள்ளியாடி

B.O. மீனாட்சிபுரம், நாகர்கோவில்

எங்களிடம் எல்லாவிதமான கைத்தறி வேஷ்டி தினுசுகளும், பிரின்டட் சாரிகள், ஓரிழை ஈரிழை துவர்த்துகள், டவல்கள், தேரியல்கள், லுங்கிகள், பெட்சீட்டுகள், கலர் பீஸ், காடா பீஸ் தினுசுகளும் அரசாங்க சலுகையுடன் விற்பனை செய்து வருகிறோம்.

தாங்கள் வருகைதந்து எங்கள் கைத்தறித்துணிகளை வாங்கி ஏழை கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்குமாறு அன்பாய் கேட்டுக் கொள்கிறோம்.

திரு எம். வேதமாணிக்கம், காரியதரிசி.

திரு பி. அலங்காமணி, தலைவர் பொறுப்பு.

* கூட்டுறவே நாட்டுயர்வு *




# தமிழின, மொழிப் போராட்டத் தானைத் தலைவர்


பன்மொழிப் புலவர்
டாக்டர் கா. அப்பாத்துரை


**மொ**ழியின் பழமை மனித இனத்தின் பழமையைவிடக் குறைந்ததன்று. உண்மையில் மொழியும், மொழியின் பிறப்புக்கும் மலர்ச்சி, தளர்ச்சிகளுக்கும் அடித்தளங்களான குடும்ப, குழுகாய, இனவாழ்வுகளும் உயிரின மலர்ச்சி ( Evolution of living beings ) தோன்றியபோதே தோன்றி, அதன் மலர்ச்சியுடனே தளர்ச்சிகளுடனே தாமும் மலர்ச்சி தளர்ச்சிகளடைந்து வருபவை ஆகும். கிளியின் காதலிசைக் குரலிலும் மயிலின் ஆட்டத்திலும், குரங்குக் கூட்டத்தின் கூக்குரலிலும், பாம்பின் சீறலிலும், இனங்காக்கும் யானை அணிவகுப்பின் பிளிறலிலும் நாம் மனித இன மொழியின் குழந்தைப் பருவத்தைக் காணலாம்.

எல்லையற்ற இயற்கைப் பரப்பில் இனப்போராட்டங்களும் மொழிப்போராட்டங்களும் மிகப் படுகின்ற ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையேயாகும். முன்னதில் தடமற்று அல்லது தடங்களுடன் மாண்ட உயிரின வகைகள் எண்ணற்றவை. பின்னதிலோ, மாண்ட மனித இன நாகரிகங்களும் அவற்றுடன் நம்மால் அறியப்பட்டும், அறியப்படாமலும் மாண்ட மனித இன நாகரிகங்களும், அவற்றின் மாண்ட தலைமுறைகளும், மாண்ட நாகரிக இன மொழிகளும் அவற்றின் மாண்ட தலைமுறைகளும் எண்ணற்றவை. உலக மொழி வரலாறும் இந்திய மொழி வரலாறும் இதனைக் காட்டவல்லன. ஏனெனில், மனித உலகில் மாண்ட நாகரிக இனங்கள், மொழிகள், மொழித் தலைமுறைகள் எத்



தனையோ, அவற்றில் குறைந்ததன்று இந்தியாவில் மாண்ட நாகரிக இனங்கள், மொழிகள், மொழித் தலைமுறைகள், இலக்கியங்கள்!

இந்த மனித உலகில், அதன் நடுவண்மை யாகிய இந்தியாவில், ஒவ்வொரு மாண்ட நாகரிக இனத்தின் வரலாற்றுப் பின்னணியிலும், ஒவ்வொரு மாண்ட மொழியின், மொழித் தலைமுறையின் பின்னணியிலும் ஒவ்வோர் இனப்போராட்டத்தின், மொழிப் போராட்டத்தின்வரலாறு மறைந்தே கிடக்கின்றது.

மாண்ட மனித இன நாகரிகத் தலைமுறைகள், மாண்ட மனித இன, இந்திய மொழி இலக்கியத் தலைமுறைகள் ஆகியவற்றின் சாவா மூவாச் சின்னமாக நம் இன்றைய மனித உலகில், இந்தியாவில் இன்னும் வாழ்ந்து வளர்ந்து வருகிற ஒரே மனித இனமொழி, ஒரே இந்திய இன மொழி தமிழ்! அது கண்ட, கண்டு வருகிற போராட்டங்கள் பல. ஆனால் என்றோ, எப்போதோ இம்மொழி சாவா வாழ்வு, மூப்பிலாது என்றும் இளமையுடன் வாழும் வாழ்வு, பிணியிலா நலவாழ்வு ஆகியவற்றின் மறைதிறவைக் கண்டு பிடித்திருக்க வேண்டும் என்னலாம். ஏனெனில் அது ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக, ஆயிரக் கணக்கான போராட்டங்களில் செத்துப் பிழைத்திருக்கிறது; வென்று இன்றும் வாழ்ந்து வளர்ந்தே வருகிறது!

பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டே, தொல்காப்பியத்துக்கும் முற்பட்டே, 16,000 நூற்பாக்களால் முத்தமிழுக்கும் ஓர் இலக்கண வரம்பு கண்டு, மொழி காத்துத் தமிழுக்குப் புத்துயிர் ஊட்டிய அகத்தியர் என்ற குறுமுனிவர் ஒருவரைப் பற்றித் தமிழ் மரபு கூறுகிறது. அதுபோல நம் நாட்களிலேயே, தமிழ் மொழி காக்க எழுந்த மூன்று போராட்டங்களுக்கும் உரிய மும்மைத் தலைவராக, . மும்முனைப் போராட்டத் தளபதியாக விளங்கியவர் வான்புகழ் அறிஞர் அண்ணா! மெய்யோ, பொய்யோ என ஆராய்ச்சியாளர் ஐயுறுமளவுக்குத் தமிழர் கனவாகி விட்ட முந்தைய அகத்தியரின் மெய்யான நனவு[illegible] புதிய அகத்தியராக அறிஞர் அண்ணா தமிழின வரலாற்றில் வண்ண ஒளி வீசுகிறார்.

தமிழ்காக்கும் மூன்[illegible] போராட்டங்கள் சொற்காப்[illegible] போராட்டம், இசைகாப்புப் [illegible]ாட்ட[illegible]




**பார்த்து அறிய வேண்டிய விஷயங்கள்**
**பல இருக்கையில் படித்தால் மட்டும் போதுமா?**

ஆய்ந்து நோக்குங்கள் வெகு விரைவில் உங்கள் செல்வன் டாக்டர், இன்ஜினியர், ஐஏஎஸ், வங்கி போன்ற பணிகளுக்கான நுழைவுத் தேர்வுகளை எழுத நேரிடும் அதற்கு அவன் பொது அறிவுப் புத்தகங்களைப் படித்தால் மட்டும் போதாது. ஏனெனில், நாளுக்குநாள் நூதனமடைந்து வரும் இவ்வுலகில் உங்கள் செல்வன் மட்டும் பின்தங்கி விடக் கூடாது. அவனுடைய பொது அறிவும காலத்திற்கேற்ற வாறு வளரவேண்டும் அதற்கு தொலைகாட்சியே மிகச் சிறந்த வழியாகும். அதனால்தானே இக்காலத்து சிறுவர்கள் அக்காலத்து சிறுவர்களை விட நன்கு விவரமறிந்தவர்களாக விளங்குகிறார்கள்? இவற்றை நோக்கும்போது தொலைகாட்சி மிக அத்யாவசியமே!

இப்போது, நீங்கள் எந்த டிவியையும் வாங்கும் முன், அது நம்பகமானதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள். அதில் தெள்ளத்தெளிவான படத்தோற்றத்திற்கு நீங்கள் தனி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட அதில் துல்லியமாகத் தெரிய வேண்டும். அதாவது சாலிடெரில் தெரிவதுபோல்! அணுகிடுவீர் சாலிடெர் வைத்திருப்போரை, அறிந்திடுவீர் அதன் தம் சிறப்பம்சங்களை. அப்போது தெரியும் உங்களுக்கு எதனால் சாலிடெரே அனைவராலும் விரும்பப் படும் டிவி என்று! சாலிடெர் எகானமி மாடெல்களிலும் கூட டிலக்ஸ் அம்சங்களான விசிஆர் (VCR) மற்றும் பிக்அப் கனெக்ஷன்கள் அமைந்துள்ளன.

விற்பனைக்கு விடுப்போர்:
டிஜிவிஷன் எலக்ட்ரானிக்ஸ் (பி) லிட்,
44, சி.பி. ராமசாமி ஐயர் சாலை
அபிராமபுரம், சென்னை 600 018.




**சாலிடெர்**
-தொல்லையில்லாத் தொலைக்காட்சி
DE/982A

மொழியாட்சிக் காப்புப் போராட்டம் ஆகியவையே. முதலது இந்நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தே பரிதிமால் கலைஞர், தவத்திரு மறைமலையடிகளார், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் ஆகியோரால் தமிழ் மரபு கண்டு புதுப்பித்து வளர்க்கப் பட்ட போராட்ட இயக்கம் ஆகும்.

இரண்டாவது, அரசு வயவர் அண்ணாமலைச் செட்டியாரால் தோற்றுவிக்கப்பட்டு, இராசாசி, கவிமணி, அரசு வயவர் முத்தையாச் செட்டியார் ஆகியோரால் வளர்க்கப்பட்டு வந்துள்ள இசை காப்புப் போராட்ட இயக்கம் ஆகும்.

மூன்றாவதோ நாவலர் சோம சுந்தரபாரதியார், ஆசிரியர் மறைமலையடிகளார், தமிழகத் தந்தை பெரியார் ஈ.வே.ரா. ஆகியோரின் தலைமைகளிலும் இராசாசி அவர்களின் துணையுடனும் புதிய தமிழகத்தின் புத்தெழுச்சிக்குரியதாக இந்தி எதிர்ப்புப் போராட்ட இயக்கம் என்ற பெயருடன் தோன்றிய தாய்மொழிகளின் தன்னாட்சியுரிமைக் காப்புப் போராட்ட இயக்கம் ஆகும்.

இந்த மூன்று போராட்டங்களையும் ஒருங்கிணைத்து ஒரே தமிழின உரிமை இயக்கமாக்கிய மும்மைமொழிப் போராட்டத் தனிநாயகத் தளபதியாக விளங்கிய பெருமை அறிஞர் அண்ணா ஒருவருக்கே உரியதென்னல் தகும்.

இந்தியாவின் அரசியல் விடுதலை இயக்கப் போராட்டத்தில் காந்தியடிகளுடனும் தலைவர் பெருந்தகை சுபாசு சந்திரபோசுடனும் ஒப்பிடத்தக்க தென்னகத் தலைவர் தந்தை பெரியார்.

அரசியல் விடுதலைத் தன்னுரிமையுடன் சமய சமுதாயத் தன்னுரிமையாகிய சமதரும

## தனித் தமிழ்க் கனல்

தோழர் அண்ணாதுரை தனித் தமிழ்க் கனல்; திட்ப நுட்பமான சொல்லாளர்; வீறுமிக்க செயலாளர். அவர் உள்ளம் தமிழர் உள்ளம், உணர்ச்சி வெள்ளம். அவர் உரைகள் தமிழர் மதிப்பையும், அம்மதிப்பைக் காக்கும் கொதிப்பையும் உண்டாக்கும் தீப்பொறிகள்.

--சுத்தானந்தபாரதி



நெறியையும் ஒருங்கிணைத்த திராவிட இயக்கத்தைத் தோற்றுவித்தவர் அவர். ஆனால் அப்பேரியக்கத்தை மொழியுரிமை, சிறப்பாகத் தமிழர், தமிழின, மரபுரிமை இயக்கத்தையும் இணைத்து அதனை உலகின் ஒப்பற்ற முழு தேசிய இயக்கமாக்கியவர் அறிஞர் அண்ணாவேயாவர்!

அறிஞர் அண்ணாவின் இந்த ஒருங்கிணைப்புப் பேராற்றல் செயல்படாமலிருந்திருக்குமேயானால், தந்தை பெரியாரின் இயக்கம் வெறும் பகுத்தறிவியக்கமாக அரசியல் சமய சமுதாயப் பேரியக்கமாக மட்டுமே அமைந்திருக்கும்; இன்று அமைந்துள்ளதுபோல, அது மொழிமரபுரிமையை அடிப்படையாகக் கொண்ட முழுமனித இனஉரிமை இயக்கமாக மிளிர்ந்திருக்க முடியாது என்று கூற இடமுண்டு.

மலையாள நாடோ, கன்னட நாடோ, தெலுங்கு நாடோ தமிழகத்திலிருந்து பிரிந்துவிடாத பழைய சென்னை மாநிலத்தில் 1939-ல் முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பேரறிஞர் அண்ணா அதன் செயல் துறைப் பெரும்படையின் முன்னணித் தளபதியாக மட்டுமன்றி அதன் உள்ளுயிர் ஆற்றல் உருவாகவும் விளங்கினார்.

அந்நாளைய முதல்வர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாருக்கு அனுப்பப்பட்ட இந்தி எதிர்ப்பாளர் அல்லது தமிழ்ப் பாதுகாப்புக்கழகத்தாரின் திறந்த மடலை உருவாக்குவதில் தமிழ்ப் பெரியார்களுடன் தமிழகப் பெரியாரை ஒருங்கிணைத்து வைத்து அதற்கு ஒருமுகக்குரல் தந்தவர் அறிஞர் அண்ணா அவர்களேயாவர். இதனை உணர்ந்த தந்தை பெரியார் 1946-ல் தொடங்கப் பெற்ற திராவிடர் கழக இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் அறிஞர் அண்ணா அவர்களையே முழுப் பொறுப்பு வாய்ந்த பொது நிலைத் தளபதியாக்கி மகிழ்ந்தார்.

மடல் உருவாக்கும் பணியில் நானும், இரண்டாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத் தொண்டர் படையில் என் துணைவியாரும் இடம் பெற்று, அறிஞர் அண்ணாவின் பேரொளியை அருகுநின்று காணும் அரும் பெறற் பேற்றினை அடைந்திருந்தோம்.

மும்மைத் தமிழ்காப்புப் போராட்டங்களின் அடிப்படை ஒற்றுமையையும் தமிழ்மொழி ஒன்றுக்கேயன்றி தாய்மொழிகள் எல்லாவற்றுக்குமே யுரிய அதன் அகல் விரிவையும் கண்டவர், கண்டு சுட்டிக் காட்டியவர் அறிஞர் அண்ணா அவர்களே! மூன்று போராட்டங்களும் உண்மையில் தமிழ்மொழி மீது அல்லது தாய்மொழிகளின் மீது அரசியல் அல்லது சமய அல்லது சமுதாய அல்லது பொருளியல் மேலாட்சி காரணமாக அடக்கு முறைகளையும் தாக்குதல் முறைகளையும் எதிர்த்த போராட்டங்களேயாகும் என்பதை அவர் ஆய்ந்து தெளிந்து விளக்கினார்.

செக்கோசிலவேக்கிய நாட்டின் தலைவரான டாக்டர் மசாரிக் போன்ற — உலகில் மொழிப் போராட்டப் பெருந்தலைவர்களிடையே அறிஞர் அண்ணா ஒரு தனிச் சிறப்புக்குரிய இடம் பெறத்தக்கவர் ஆவர்.



## இதல்லவா சொற்பொழிவு!

திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். "சொற்பொழிவு என்றால் இதுவல்லவா சொற்பொழிவு! தட்டுத் தடுமாறி சொற்களுக்குத் திண்டாடி நிற்பதையெல்லாம் சொற்பொழிவு என்கிறோமே!" என்று எண்ணத் தோன்றும்.

—ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி)

ஸ்தாபிதம் : 1919 போன் : 50

## திருச்செந்தூர் கூட்டுறவு நகர வங்கி லிட் A. 442

மைலப்பபுரம் தெரு, திருச்செந்தூர்–628 215

(முழுவதும் இன்ஷுர் செய்யப்பட்ட A வகுப்பு வங்கி)

நெல்லை மாவட்டத்திலேயே தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அங்கத்தினர்களுக்கு 15 சதவிகித டிவிடெண்ட் வழங்கும் ஒரே வங்கி!

S முத்துச்சாமி, காரியதரிசி. T. A. சேதுராமகிருஷ்ணய்யர், உபதலைவர்.

இயக்குனர்கள்

| | |
|---|---|
| C. E. N. கிருஷ்ணசர்மா | R. சரவணன, |
| சு. கந்தசாமி நாடார் | வ. ப. மாடசாமிக் கோனார் |
| K. S. ராமசாமி அய்யர் | வே. ஞானசம்பந்த ஓதுவார். |


# பெண்கள் பேசும் புறாக்களல்லர்!

திருமதி சத்தியவாணிமுத்து



தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளைத் தாங்கி சுயமரியாதை இயக்கத்தில் எங்கள் பயணத்தைத் துவங்கிய நாங்கள் இரவு பகலாக பல்வேறு எதிர்ப்புக்களின் மத்தியில் செயல்படுத்த முயன்றோம். தந்தை அவர்கள் சுட்டிக் காட்டிய பெண்களை அடிமையாக்கும் வைதீகத் திருமணம், பொருந்தாத் திருமணம், கட்டாயத் திருமணம், பால்ய திருமணம் ஆகியவற்றை ஒழித்து காதல் திருமணம், கலப்புத் திருமணம், விதவைத் திருமணம், சீர்திருத்தத் திருமணம் போன்றவற்றை ஊக்குவிப்பதின் மூலம் பெண்களுக்கு சமுதாயத்தில் சம உரிமை அளிக்கப் பாடுபட்டோம்.

வைதீகத் திருமணத்தினால் பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்தி, வாழவிடாமல் தொல்லைகள் தருவதைப் பெண்களும் உணரும்படிச் செய்து அவைகளை நீக்க சுயமரியாதைத் திருமணம் தான் ஒரேவழி என்பதை மக்கள் மத்தியில் பரவச் செய்தோம். கற்புத் தவறினால் கல்லாக்கப் படுவாள் என்றும், கற்புநெறியோடு நின்றால் அருந்ததியாக ஒளி வீசுவாள் என்றும் கூறி, திருமணச் சடங்குகளில் அம்மியை மிதித்துப் பட்டப்பகலிலே அருந்ததி எனும் நட்சத்திரத்தைக் காட்டி பயமுறுத்தி, பெண்களை ஆண்களுக்கு அடிமைப்பண்டங்களாக வைத்திருந்ததை மாற்றப் பாடுபட்டோம்.

எங்களது பகுத்தறிவுப் பிரச்சாரம் முதலில் கேலிக்குரியதானாலும் காலப்போக்கில் வெற்றியே தந்தது. தாலி பெண்களுக்கு வேலி என்று பெண்மைக்கு வேலிபோட்டு ஆண்களின் ஆணவத்தைக்கட்டவிழ்த்துவிட்டு வந்த பழக்கத்தை மாற்றிப் பெண்களுக்குத் தாலி கட்ட வேண்டுமென்றால் ஆண்களுக்கும் தாலி கட்ட வேண்டும் என்றும், பெணகளுக்குத் தாலி திருமணமான அடையாளச் சின்னமென்றால் ஆண்களுக்கு அந்தச் சின்னம் வேண்டாமோ என்றும் உரிமைக் குரல் எழுப்பினோம். பெண்களுக்குச் சொத்துரிமை, கட்டாயக் கல்வி, வரதட்சணைக் கொடுமை இவைகளையெல்லாம் மக்கள் மத்தியில் சிந்திக்குமாறு பிரச்சாரங்கள் செய்தும், எழுதியும், எழுச்சியை அண்ணா அவர்கள் உருவாக்கினார்கள்.

'பெண்கள் இந்த நாட்டின் கண்கள்', 'பெண்கள் ஆண்களுக்கு எந்த வகையிலும் குறைந்



தவர்கள் அல்லர்', 'பொறுமையுடன் நிர்வாகம் செய்வதில் பெண்கள் வல்லவர்கள்' என்றெல்லாம் கூறுவார். பெண்களின் முன்னேற்றம்தான் ஒரு நாட்டின் முன்னேற்றத்தின் அளவுகோல் என்று பேசுவார். பெண்கள் சங்கங்கள் வெறும் பொழுதுபோக்குச் சங்கங்களாயிருப்பதை அண்ணா விரும்பவில்லை. அண்ணா அவர்கள் நடத்திவந்த திராவிட நாடு இதழில் ''அந்திக்கலம்பம்'' என்ற பகுதியைப் பெண்கள் பகுதியாக வைத்து, மாலைநேரத்தில் பெண்கள் வம்புகள் பேசி, அரட்டை அடிப்பதை நீக்கி உலக நடப்புகளைப் பேச - விவேகத்தை வளர்க்க-பல அரிய கட்டுரைகள் எழுதி வந்தார். **பெண்கள் பேசும் புறாக்களல்ல; போராடும் புலிகள் என்று வர்ணித்தார்.**

எனவேதான் அவர் முதலமைச்சர் ஆனவுடன் முதல் முதலாக பெண்களுக்குச் சமவாழ்வு தரும் சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாக்கச் சட்டமியற்றினார். மூடப்பழக்க வழக்கத்தை முறியடித்து, பெண்களுக்குச் சமஉரிமை அளிக்க இது வகை செய்துள்ளது. ''ரங்கோன் ராதா'' ''வேலைக்காரி'' போன்ற கருத்தோவியங்கள் மூலமாக அதிகார போதையினால் ஆண்கள் எப்படியெல்லாம் பெண்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று சித்திரித்துக்காட்டி அவைகளிலிருந்து விடுபடப் பெண்களுக்கு சமத்துவமும், கல்வியறிவும் எவ்வளவு அவசியமானது என்பதை வலியுறுத்தினார். பின்னர் அந்த இரண்டு எழுத்தோவியங்களும் திரைப்படமாக வெளிவந்தன.

ரங்கோன் ராதாவில் கணவனின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் ரங்கம் என்னும் பெண் இறுதியில் வீட்டைவிட்டே வெளியேறி, சாமியாராகப்போய் விடுகிறாள். அப்படி ஒரு புதுமைப் பெண்ணை சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னாள், மக்கள் மத்தியில் நினைவு கொள்ளச் செய்தார்.

சாதி ஏற்றத்தாழ்வுகளை நீக்கப் பெண்கள் முன்வர வேண்டுமென்று கூறுவார். காரணம் பெண்களுக்கு ஜாதிகள் கிடை



ஊட்டி மலைவாழ் மக்களுடன் அண்ணா; கட்டுரை ஆசிரியர் உடன் உள்ளார்

யாது. ஆண்களின் பெயரின் பின்னால் ஜாதிப் பெயரைப் போடுவதைப்போல் பெண்கள் ஜாதிப் பெயரைப் போட்டுக் கொள்வது கிடையாது. லட்சுமி முதலியார் என்றோ, காமாட்சி ஐயர் என்றோ ஜாதிப் பெயரைப் போடமாட்டார்கள். கணவன் பெயரைத்தான் போட்டுக் கொள்வார்கள். எந்தப் புதிய நாகரீகமானாலும் பெண்கள் உடனே அதனை ஏற்றுக்கொள்வார்கள். நகை அலங்காரமோ, சிகை அலங்காரமோ, உடை அலங்காரமோ எதுவாகயிருந்தாலும் பழமையை உதறித் தள்ளிவிட்டுப் புதுமையை வெகு விரைவில் ஏற்றுக்கொள்வார்கள்.

அப்படிப்பட்டபெண்கள் பழமையான ஜாதிப்பழக்கத்தை ஒழித்து பெண் இனம் முன்னேற, கலப்புத் திருமணம் அவசியம் என்பதை உணர்ந்த அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கட்குத் தங்கப் பதக்கம் பரிசாக அரசுச் சார்பில் அளிக்கத் திட்டம் கொண்டு வந்தார்கள். பல பெண்கள் வேற்று ஜாதி ஆண்களைக் காதலித்து, பிறகு ஜாதி வித்தியாசம் காரணமாக மணம் செய்ய முடியாமல் வாழ்வைக் கெடுத்துக் கொள்கிறார்கள். வேற்று ஜாதியில் மணம் செய்வது சமுதாய அநீதியாகக் கருதப்பட்டு வந்தது. அண்ணா அவர்களின் இந்தத் திட்டத்தினால் அந்தப் பழமையான எண்ணம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு, சமுதாயத்தில் அனைவரும் ஏற்றுப் பாராட்டக் கூடிய திட்டமாக அது அமைந்துள்ளது.

இதுபோல பல உரிமைகளை அண்ணா அவர்கள் பெண்களுக்கு வழங்கி வந்தார்கள்.

துரதிர்ஷ்டவசமாக, ஆட்சிப் பொறுப்பைஏற்று இரண்டாண்டு முடிவதற்குள் அண்ணா அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள்.

ஆனால் அண்ணா அவர்களின் கொள்கைகளை அறிந்து அந்த வழியில் ஆட்சி செய்யும் புரட்சித் தலைவர் அவர்கள் இன்று பெண்களுக்கு வேலைவாய்ப்புகளில் 50 சதவிகிதம் ஒதுக்கியுள்ளார். ஊராட்சித் தேர்தல்களில் பத்து சதவிகிதம் ஒதுக்கியுள்ளார். பல பெண்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களாக நியமித்துள்ளார். பெண்களின் நிர்வாகத் திறமையை அறிந்து அவர்களுக்குப் பல பொறுப்புகளை அளித்தும் அவர்கள் பணியினைப் பெரிதும் பாராட்டிச் செயல்பட்டு வருகிறார். இந்தச் செயல், பெண்ணுரிமை பேணிக் காத்து வந்த அண்ணா அவர்கள் நம்மை விட்டுப் பிரியவில்லை- புரட்சித் தலைவரின் வடிவிலே நம்முடனேயே இருந்து வருகிறார் என்பதை நிரூபிக்கிறது.

## தலைமுறைக்கு வாய்த்த தலைவர்

குலமுறை "அண்ணா" என்னும்
கொடிநிழல் "தலைவா" என்னும்

கலைமனம் "அறிவே" என்னும்
கவிக்குரல் "புலவா" என்னும்

அலைதமிழ் "உயிரே" என்னும்
அவனியே "புனிதா" என்னும்

தலைமுறைக் கிவரல் லாது
தலைவரென் றொருவர் இல்லை!



—கவிஞர் கண்ணதாசன்.

# காஞ்சித் தலைவன்



முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்

55 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி தேவர் மன்றத்தில் நீதிக் கட்சி மகாநாடு ஒன்றைப் பெரிய அளவில் நடத்திக் கொண்டிருந்தேன். மாநாட்டின் தலைவர் சர் ஏ. இராமசாமி முதலியார் தன் பேச்சை மொழி பெயர்க்க ஒருவர் தேவை என்று கோரினார். வந்திருந்த வழக்கறிஞர்கள் பலரை அண்டினேன். அனைவரும் மறுத்துவிட்டனர். இவ்வளவு பெரிய மகாநாட்டில் மொழி பெயர்ப்பாளர் ஒருவரும் இல்லையே என்று வருந்தினேன். வெட்கப்பட்டேன்.

### பேச்சுடன் கண்டேன்

இந்நிலையில் ஒருவர் என்னிடம் வந்து இவர் கல்லூரி மாணவர், மொழி பெயர்ப்பார் எனக்கூறினார். இதைக் கேட்டதும் எனக்கு அதிகக் கோபம் வந்தது. பெரிய தலைவர்களின் அரசியல் பேச்சுக்களைப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைக் கொண்டு மொழிபெயர்ப்பதை விட ஆங்கிலப் பேச்சு ஒன்றே மாநாட்டைச் சிறப்பிக்கும் என நம்பிச் சும்மா இருந்துவிட்டேன். இந்த நிலையில் மொழி பெயர்க்க ஆள் வந்துவிட்டதா என்று முதலியாரிடமிருந்து செய்தி வந்தது. நான் வேறு வழியில்லாமல் அதே மாணவரிடம் சென்று 'தம்பி உன் பேர் என்ன' என்றேன். 'அண்ணாதுரை' என்றார்; ஊர் எது என்றேன். காஞ்சிபுரம் என்றார். என்ன செய்கிறாய் என்றேன். எம்.ஏ. படித்துவிட்டு சும்மாயிருக்கிறேன் என்றார். நன்றாக மொழி பெயர்ப்பாயா என்றேன். ஏதோ கொஞ்சம் தெரியும் என்றார்.

### சன்னப்பொடி

பேச்சுக்குப் பேச்சு மொழி பெயர்ப்பு மிகச் சிறப்பாக நடைபெற்றது. நானே வெற்றி பெற்றதாக மகிழ்ந்தேன். வழக்கறிஞர்களிடம் சென்று மறுத்துவிட்டீர்களே, பார்த்தீர்களா? என்று பெருமிதத்தோடு வினவினேன். நாங்கள் மறுத்ததினால்தான் ஒரு நல்ல மொழி பெயர்ப்பாளர் கிடைத்தார் என்று கூறிச் சிரித்தார்கள். சர்.ஏ.இராமசாமி முதலியாரிடம் சென்று மொழி பெயர்ப்பு எப்படி என வினவினேன். அதில் சிறிது சன்னப் பொடியும் கலந்திருந்தது எனக் கூறிப் புன்னகை புரிந்தார்.

இந்த வகையில் நண்பர் சி. என்.அண்ணாதுரை எனக்கு அறிமுகமானார். வாழ்த்தினேன். தமிழகத்தின் எதிர்கால நலனுக்கு இத்தகைய கல்லூரி மாணவர்கள் பலர் தேவை என எண்ணினேன். என் எண்ணம் இன்றும் வீணாகவில்லை. என்றும் வீணாகப்போவதும் இல்லை.

### பொது வாழ்வு

கல்லூரியில் வருந்திக் கற்று எம்.ஏ.பட்டமும் பெற்று தொழில் துறையில் புகாமல் பொது வாழ்வுத்துறையில் புகுந்தவர் தமிழ் நாட்டில் முதன்முதலாக அன்பர் அண்ணாதுரை ஒருவரே. சுருக்கமாகக் கூறவேண்டுமானால் தமிழ் மக்களின் வாழ்வுக்காகத் தன் வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டவர் எனக் கூறிவிடலாம்.

### முதல் சிறை

1938ல் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போர் மிகப் பெரிய அளவில் நடைபெற்றது. அதைத் தமிழகமே ஒன்று சேர்ந்து நடத்தியது. திருச்சியில் நடைபெற்ற

**With the Best Compliments From**

# The Coimbatore Film Distributors' Association,

No. 30, Gopalapuram 3rd Street,
Coimbatore.

தமிழர் மகாநாட்டின் பொருட்டாக அப்போரை நடத்தும் பெரும் பொறுப்புகள் என் மீதே விழுந்தன. அப்பொழுதெல்லாம் அண்ணாதுரையும் அவர் போன்ற பலருடைய ஒத்துழைப்பும், தொண்டும் இல்லாதிருந்திருக்குமானால் நான் அதை வெற்றிகரமாக நடத்தியிருக்க முடியாது. இந்தியை எதிர்த்தும் அரசாங்கத்தின் கொள்கைகளைத் தாக்கியும் பேசிய குற்றத்திற்காக அவர் 6 மாதம் சிறைத் தண்டனையைப் பெற்றார். அப்போது தான் தமிழ்நாட்டு மக்கள் பலருக்கு அவரை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.



அண்ணாவுக்குப் பொன்னாடை போர்த்துகிறார் தந்தை பெரியார்.

**மொழிப்பற்று**

ஆங்கிலம் கற்றவர்களில் பலர் அம்மொழியிலேயே ஆழ்ந்து விடுகின்றனர். இரண்டொருவர் கரையேறினாலும் அவர்கள் ஏறியது தமிழ்நாட்டுக் கரையாக இருப்பதில்லை. ஆங்கிலக்கடல் நீந்தித் தமிழ்க்கரையேறிய அறிஞர்களில் அன்பர் அண்ணாதுரையும் ஒருவா.

**விடுதலை**

பெரியார் ஈ.வெ.ரா அவர்களுடன் நெருங்கிப் பழகிய அன்பர்களெல்லாம் வெளியேறிக் கொண்டேயிருப்பது ஒரு வழக்கம். அப்போதெல்லாம் நான் பெரியாரை ஆதரித்தும் பிரிந்தவர்களை வெறுத்தும் வந்தவன். நான் நெருங்கிப் பழகியதால் என்னுடைய முறையும் வந்துவிட்டது. காலியான என் இடமும் உடனே பெரியாரால் நிரப்பப் பெற்றது. என்னுடைய பணிகளில் காரியதரிசி பதவிக்கு அண்ணாதுரையும் பொருள் வசூலிக்க பொன்னம்பலனாரும் கொள்கைகளை விளக்க சுவாமி சிதம்பரனாரும் அமர்த்தப்பட்டவர். பின்னர் அவர்கள் மூவரும் நெருங்கிப் பழக ஆரம்பித்ததால் வழக்கப்படி அவர்கள் வெளியேறும் முறையும் வந்துவிட்டது. ஒரே அறிக்கையில் அவர்கள் மூவரும் கையெழுத்திட்டுப் பெரியாரிடத்திலிருந்தும் விடுதலையிலிருந்தும் விடுதலை பெற்றனர்.

**தமிழ்நாடு**

*1941* இறுதியில் அன்பர் அண்ணாதுரை திராவிடநாடு என ஒரு இதழைத் தொடங்கப் போவதாக எழுதியிருந்தார். நான் அதைத்தமிழ்நாடு எனத் தொடங்கும்படி எழுதினேன். பல முன்னேற்பாடுகள் நடைபெற்று விட்டதனால் இனிமேல் எதுவும் செய்வதற்கில்லையென அறிவிக்கப்பெற்றேன்.

**இளைஞர் மாநாடு**

*1942* தொடக்கத்தில் சென்னை மாகாண ஜஸ்டிஸ் இளைஞர் மகாநாடு ஒன்றைச் சென்னையில் கூட்ட, அன்பர் அண்ணாதுரை வரவேற்பு குழு தலைவராக இருந்து என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்டிருந்தார்.

**விட்ட இடத்திலிருந்து**

*1942* மார்ச் *15* ஆம் நாளில் சென்னை செயின்ட். மேரிஸ் மண்டபத்தில் சென்னை மாகாண ஜஸ்டிஸ் இளைஞர் மகாநாடு மிகப்பெரிய அளவில் நடைபெற்றது. வரவேற்புக்குழுத் தலைவர் அன்பர் அண்ணாதுரை இயக்கத்தின் வேலைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டுமெனக் குறிப்பிட்டார். இயக்கத்தின் வேலைகள் தடைப்பட்டு 2 ஆண்டுகள் பாழாய்ப் போயினவே இப்போது என் செய்வது என என் தலைமை உரையில் கூறினேன். இதை அன்பர் அண்ணாதுரை அவர்கள் மனத்தில் வைத்துக் கொண்டேயிருந்து நன்றி கூறும் பொழுது விட்ட இடத்திலிருந்து வேலையைத் தொடங்குங்கள் எனக்குறித்துக் கூறினார். இது அனைவராலும் கைதட்டி வரவேற்கப் பெற்றது.

*1944*ல் ஈரோட்டில் 2 வது நாடகக் கலைமகாநாடு சர்.ஆர்.கே.சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெரியாரைப் பின்பற்றுவோருக்கும், சர் சண்முகத்தைப் பின்பற்றுவோருக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்து வந்ததினால் மாநாட்டில் கலவரம் ஏற்படும் என்ற வதந்தி அதிகமாக உலவியது. பேசுவதற்காக நாங்கள் சென்றிருந்தோம். அன்பர் அண்ணாதுரை சென்று ''தலைவர் எங்கள் மீது வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால் தயவு செய்து அவர் அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். கம்பராமாயணத்தைக்கொளுத்த வேண்டும் என்று நாங்கள் கூறுவதெல்லாம் அந்த நூலின் மீது நாங்கள் கொண்டுள்ள வெறுப்பைக் சாட்டுவதற்கேயொழிய உள்ளபடியே கம்பராமாயணத்தைத் தீ வைக்கும் கயவர்கள் நாங்கள் அல்ல'' என ஒரு விளக்கப்போடு போட்டார்.

தலைவர் சர்.ஆர்.கே. சண்முகம் அவர்கள் சி...த்து மகிழ்ந்தார்.

With the best compliments from :

# Chandrika Products

(Manufacturers of Chandrika Ayurvedic Toilet Soap)

Head Office :
**COIMBATORE**

Branch .
**MADRAS**

**சொற்போர்:**

பேராசிரியர் ஆர்.பி. சேதுப் பிள்ளை அவர்களுடன் ஒருமுறையும், பேராசிரியர் ச.சோமசுந்தர பாரதியார் அவர்களுடன் ஒரு முறையும் கம்பராமாயணம் பற்றிய சொற்போர்கள் சென்னையிலும், சேலத்திலும் நடைபெற்றன. இந்த இரண்டிலும் யார் வெற்றி பெற்றார்கள் என்பது கேள்வியே அல்ல. அவர்கள் இருவரும் சொற்போர் நிகழ்த்தஒப்புக்கொண்டதே அண்ணாதுரைக்கு ஒரு வெற்றியாக அமைந்துவிட்டது.

**பெரும்பங்கு:**

தமிழ்நாட்டில் படிப்பில்லாத மக்களில் பெரும்பான்மையோரைப்பேச்சின் மூலம் தட்டி எழுப்பிய பெருமையில் பெரியாருக்குப் பெரும்பங்கு உண்டு. அதுபோலவே படித்து முடித்த இளைஞர்களில் பெரும்பான்மையோரைப் பேச்சின் மூலம் தட்டி எழுப்பிய பெரும்பங்கு அன்பர் அண்ணாதுரைக்கு உண்டு என உறுதியாகக் கூறிவிடலாம்.

**பேச்சாளர்:-**

அன்பர் அண்ணாதுரை ஆங்கிலத்திலும் நன்றாகப் பேசும் ஆற்றல் படைத்தவர். இக்காலத்திய மேடைப்பேச்சுக்களில் பயனிலையை முன்னே வைத்து, செயப்படு பொருளை பின்னே வைத்து பேசப்படுகிறது. அது ''தூது அனுப்பினார், பதில் வந்தது'' என்றிராமல் ''அனுப்பினார் தூது, வந்தது பதில்'' என்றிருக்கும். இம்முறையை நம்நாட்டில் மேடைப்பேச்சுக்களில் முதலில் புகுத்தியவர் அன்பர் அண்ணாதுரையே ஆவார்.

**தொண்டு:**

அன்பர் சி.எ‌ன்.அண்ணாதுரை அவர்கள் முதலில் மாணவர், பின் தொண்டர். அவர் ஒரு சிறந்த அறிஞர், நல்ல எழுத்தாளர், உயர்ந்த பேச்சாளர், முனைந்த உழைப்பாளர், சிறந்த செயலாளர், மிகுந்த சீர்த்திருத்தவாதி, பத்திரிகை ஆசிரியர்,நூலாசிரியர், நாடக ஆசிரியர், நடிகர், அரசியல்வாதி, முதல்அமைச்சர் எனப் பல துறைகளிலும் இருந்து அருந்தொண்டும், பெரும் பணியும் புரிந்தவர்.



பேரறிஞருடன் முத்தமிழ்க் காவலர்

கிராம மக்களுக்கு உலக அறிவு ஊட்டக் கண் காட்சி நடத்தப்பட வேண்டும்.
கிராம மக்களுக்கு உலக அறிவை ஊட்ட வில்லையென்றால் அது நாட்டை வாழ வைக்காது;

•

ஜனநாயகம் பின்னோக்கிச் செல்லும் நிலை கூடாது;
சிறந்த ஜனநாயகச் சூழ்நிலை வளர அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்!

•

மனத்தில் மாசு, மதவெறி, சாதி, சுய நலம், ஆணவம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்;
அப்போதுதான் நம்நாடு முன்னேறும்!

—பேரறிஞர் அண்ணா

**இரண்டாம் உலகத் தமிழ் மகாநாடு:**

1968ல் தீவுத்திடலில் நடந்த 2ஆம் உலகத் தமிழ் மகாநாட்டை யார் நடத்துவது என்ற கேள்வி எழுப்பப் பெற்று இறுதியாக அம்மாநாட்டை நானே நடத்த வேண்டும் என்று அன்பர் அண்ணாதுரை விரும்பி இப்போதுள்ள தலைமைச் செயலர் கே. சொக்கலிங்கம். இ.ஆ.ப. அவர்கள் மூலம் இக்கட்டளை எனக்கு வந்தது. அவரது அன்புக்கட்டளையை மீற முடியாமல் ஏற்று சில மாதங்கள் சென்னையில் தலைமைச் செயலகத்திலேயே தங்கியிருந்து நடத்தி மகிழ்ந்தேன். இது அவர் என்மீது கொண்டுள்ள அன்பு எவ்வளவு என்பதை எனக்கு விளக்கிக் காட்டியது.

**முடிவுரை:**

அன்பர் அண்ணாதுரை அவர்களுடைய உள்ளம் தூய்மையானது. விருப்பு வெறுப்பற்றது. இதனாலேயே பலருடைய அன்புக்கும் அவர் பாத்திரமானார். அடுத்து இளைஞர்களின் தலைவர் ஆனார். பின் கழகத் தலைவன் ஆனார், அடுத்து தி.மு.க. தலைவர் ஆனார், முதலமைச்சரும் ஆனார். பின் டெல்லி பாராளுமன்றத்தில் பேசி இந்தியாவின் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். இன்னும் இரண்டு ஆண்டுகள் இருந்திருந்தால், உலகத் தலைவர்களில் ஒருவராக விளங்கியிருப்பார். என்ன செய்வது? தமிழும், தமிழரும், தமிழகமும் பெற்ற பேறு அவ்வளவுதான்!

உங்களுடைய வாழ்வில் ஸ்ரீ லக்ஷ்மி நிலைபெறவும்
உங்களுடைய இல்லத்தில் ஸ்ரீ லக்ஷ்மி குடிகொள்ளவும்
உங்களுடைய நினைவில் என்றும் ஸ்ரீ லக்ஷ்மி நிறைந்திடவும்

**எங்களுடைய ஸ்ரீ லக்ஷ்மி ஜுவெல்லரியின்**
**ஆபரணங்களை அணிந்திடுவீர் !**

தந்தி: "அணிகலன்"



**ஸ்ரீ லக்ஷ்மி ஜுவல்லரி**

(REGISTERED)

- 292, பெரிய கடை வீதி A/C போன் : 33665
- 309, ராஜ வீதி A/C போன் : 24483
- 73, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம் A/C போன் : 36751
- 300, பெரிய கடை வீதி

**ஸ்ரீ லக்ஷ்மி டைமண்ட்ஸ்**
340, பெரிய கடை வீதி போன் : 36752

**ஸ்ரீ லக்ஷ்மி வாட்ஜ்**
311, ராஜ வீதி GRAMS : "SRI LAKME"
PHONE : 33487 33488 33489

**ஸ்ரீ லக்ஷ்மி காம்ப்ளக்ஸ்**
73 கிராஸ்கட் ரோடு காந்திபுரம்
**கோயமுத்தூர்**

செந்தில்




# மறக்க முடியாத மாமனிதர் அண்ணா

அறிஞர் அண்ணாவின் பவள விழா எங்கள் பொன்மனம் ஏற்கும் விழா மக்கள் மன மகிழ கூடும் விழா இதயக் கனியாலே காணும் விழா தமிழர் எந்நாளும் போற்றும் விழா
எங்கள் அண்ணாவின் பவள விழா.

அறிஞர் அண்ணா அவர்களின் பவள விழாவைக் கொண்டாடும் தமிழக முதல்வர் அவர்கள் நாட்டின் நலனே தனது நலனாக கருதி இல்லாமையை ஒழித்து எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழகத்தைப் பொற்காலத்திற்கு கொண்டு செல்ல அயராது பாடுபடுகிறார். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் ஆட்சியில் அறிஞர் அண்ணா அவர்களின் பவள விழா நடைபெறுவது கண்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன் நான். இன்றைக்கு பொன்மனச் செம்மலின் ஆட்சியில் தமிழகமே மகிழ்ச்சிக்கடலில் நீந்திக் கொண்டிருக்கிறது என்றே கூறலாம்.

25 ஆண்டுகளாக பாசமிக்க உடன் பிறவாப் பிறவியாகிய


**திருமதி**
**கே. ஆர். ஆர். கல்யாணி**
**தலைவர், தமிழ்நாடு கோழி இன வளர்ச்சிக் கழகம்.**


அன்பே உருவான அண்ணா அவர்களோடு நடந்து வந்த பாதையில்- கல்லும் முள்ளும் நிறைந்தபாதையில்-நடந்த ஆரம்ப காலத்தையும் அண்ணா அவர்களின் அறிவுத்திறனால் நிகழ்ந்த பலனையும் எண்ணிப் பார்க்கிறேன் நான். அதை உங்களோடும் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் சுதந்தர எழுச்சிக்கு வித்தூன்றிய கலைஞர்களைக்கூட இந்த சமுதாயம் கூத்தாடிகள் என்ற இழிவான பெயரைச்சூட்டி தலைகுனிய வைத்தது. கூத்து என்று சொல்லப்பட்ட நாடகம் ஒரு காலத்தில் இழிவாகப் பேசப்பட்டு, மக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்டிருந்தது. இத்தகைய இழிவான நிலையை மாற்றி, கூத்தும் நாட்டின் சொத்துதான்-நற்றமிழ் காக்கும் வித்து - என்றெல்லாம் நாட்டு மக்களை உணரவைத்து



கலைஞர்கள் என்ற புதுப்பெருமையையும் தேடிக் கொடுத்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

கலைஞனும் மனிதன்தான் அவனுக்கும் அரசியலில் பங்குண்டு என்பது எடுத்துக்காட்டப்பட்ட நாடக உலகின் பொற்காலம் தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா காலத்தில்தான் உருவானது. முத்தமிழில் மூத்த தமிழாக விளங்கிய நாடகத் தமிழ் செழித்துத் தழைக்க அண்ணா அவர்கள் ஆற்றிய தொண்டு அளவிட முடியாதது.

நாடகமேடையில் அவர் அடியெடுத்து வைப்பதற்கு முன்னால் நாடகம் மூடக் கொள்கைகளின் பாசறையாக விளங்கியது. இக்காட்சியைக் கண்ட அண்ணா வேதனை அடைந்து நாடகத்தின் வாயிலாக அவர் கொடுத்த விளக்கம் நாட்டின் நலிவு போக்க- எதிர்கால இளைஞர்களுக்கு தெளிவூட்ட-உண்மையை நிலை நாட்ட- இழிவை அகற்றி மடமைகளை ஒழிக்க - அறிவோடும் கற்பனையோடும் நாடகம் மூலம் இனிமையாகத் தந்து மக்கள் மன்றத்தின் சிந்தனைக் கதவுகளைத் திறந்து நாட்டு மக்களின் அகக் கண்களையும் திறந்தார் அண்ணா. இதற்கு நாடகத்தை ஒரு மாமருந்தாகப் பயன்படுத்தினார். சமுதாய கேடுகளைக் களைய அதனைக் கேடயமாக்கினார். சமுதாயத்திலுள்ள நச்சுக் கருத்துக்களை நாட்டிற்கு அம்பலப்படுத்தினார். அந்த நஞ்சினை நீக்கும் வழியையும் நாடக வழியாகக் காட்டினார் அண்ணா. முதன் முதலாக நடிகர்களைப் பாராட்டி எழுதிய அரசியல் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான்.

இருபதாம் நூற்றாண்டு நாடகத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டு விளைவு கண்ட [illegible] யாகும். வடக்கே திரு [illegible] ராஜ் கபூர் நாடாளுமன்ற [illegible]



'சந்திரமோகன்' நாடகத்தில் அண்ணா, ஈ. வி. கே. சம்பத், கே. ஆர். ராமசாமி.

பினரானார். பழம்பெரும் நாடகக் கலைஞர் கே. பி. சுந்தராம்பாள் தமிழக சட்ட மன்ற மேலவை உறுப்பினரானார். அத்தகைய கௌரவத்தை இந்திய அரசு துணிந்து கொடுத்தது என்றால் அதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் தமிழகத்தின் ஈடு இணையற்ற மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான்.

நம்ப இயலாதவற்றை நாடகமாக்குவதைவிட அன்றாட சிக்கல்களை எழுதி நடிப்பதுதான் இப்போது தேவை. நாடக ஆசிரியர்களே. பகுத்தறிவு என்பது அலங்காரச் சொல் அல்ல துணிந்து எழுதுங்கள் என்றார் அண்ணா. ஆயிரம் கூட்டங்கள் நடத்தி சீர்திருத்தக் கருத்துக்களை மக்களின் மனதில் பதியவைப்பதைவிட ஒரு நாடகம் உருவாக்குவதன் மூலம் எளிதில் மக்கள் மனதில் பதியவைக்க முடியும் என்றார் அண்ணா.

அன்றைக்கும் நிறைய நாடகக் குழுக்கள் இருந்தாலும் மக்களின் அறியாமையை நம்பித்தான் நாடகம் நடந்து வந்தது. நாட்டின் நலிவு போக்க நாடக மன்றங்கள் எப்படி இயங்க வேண்டுமென்பதையும் மக்களை மகிழ்விப்பதோடு நில்லாமல் அவர்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் வழி காட்டுவதன் மூலம் நாட்டைச் சீர்திருத்த முயன்றார். சமுதாயம் இருக்கும் நிலையைச் சீர்படுத்தி அமைத்தால் பயன்தரக்கூடிய நிலை ஏற்படும் என்ற நம்பிக்கையில் இந்தச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளத் தயங்கும் நாடகங்களை எழுதி, காலத்தோடு ஒட்டியும் காலத்தின் அலங்கோலங்களை விளக்கியும் மக்களுக்கு உணர்வு ஏற்படும் வகையில் நாடகங்களைத் தீட்டினார். அதில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டு நாடகங்களில் நடித்தும் மக்களுக்கு உண்மைகளை உணர்த்திக் காட்டினார் அண்ணா.

இதற்கு என் கணவர் திரு. கே. ஆர். இராமசாமி அவர்களின் ஒத்துழைப்பு அறிஞர் அண்ணா அவர்களுக்கு இன்றியமையாத வரப்பிரசாதமாக அமைந்தது. அன்றைக்கு சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்ட நாடகங்களை நடத்த யாரும் முன்வராத நேரத்தில் – அதை ஏற்று நடத்த தைரியமில்லாத காலத்தில் கே. ஆர். ஆர். அவர்கள் தான் ஒரு தீவிரவாதியாக செயலில் இறங்கி வெற்றியோ தோல்வியோ எது வந்தாலும் சரி என்று கரை புரண்டோடும் காட்டாற்று வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டு கரை சேர்ந்தாற் போல் அண்ணா அவர்களின் கொள்கைகளை சிரமேற்கொண்டு பல எதிர்ப்புகளுக்கிடையேயும் கேலிப் பேச்சுக்களையும் கிண்டல் பார்வைகளையும் துச்சமாக எண்ணி அரும்பாடுபட்டு அண்ணா அவர்களின் புரட்சிப் படைப்புகளுக்கு உயிரூட்டம் தந்து குன்றின் மேலிட்ட விளக்காய் கோபுரத்தின் கலசமாய் ஒளி காட்ட ஒரு மெழுகுவத்தியாய்- அண்ணா அவர்களுக்கு துணை நின்றவர் கே. ஆர். ஆர். அவர்கள்.

கலை கலைக்காக என்று அக்காலத்தில் சிலர் சொல்லிக் கொண்டு சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தார்கள். அந்த நாடகக் கலையால் ஒரு நாட்டையே சீர்திருத்திக் காட்டினார் அண்ணா.

கலை உலகின் மூலம் அவர் காட்டிய வழியால் சீர்திருத்தக் கருத்துக்கள் என்ற தென்றல் காற்று நாடெங்கும் வீசி புதுமைக் கருத்துக்கள் நாளுக்கு நாள் மலர்ந்து கொண்டே இருந்தன.

மேலும் தமிழக அரசியலிலே இளைஞர்களுக்கும் மதிப்புக்குரிய ஒரு இடத்தைத் தேடிக்கொடுத்த முதல் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான். அவர் அரசியலிலே புகுந்தபின் மாணவர் சமுதாயம் தனக்கென ஒரு வழி காட்டியைப் பெற்றது. அண்ணா அரசியலிலே இருந்த நேரம் தமிழக இளைஞர்களிடையே ஏற்பட்ட மறுமலர்ச்சி தந்தை பெரியார் அவர்களையே வியக்கச் செய்தது என்றே கூறலாம்.

அண்ணாவின் சொல்லழகில் கண்ணனின் குழலோசை கேட்ட மாந்தர்களைப் போல் மாணவர் உலகமும் கட்டுண்டு கிடந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்படி தமிழக மக்களின் உள்ளங்களிளெல்லாம் இடம் பெற்றார் அறிஞர் அண்ணா அவர்கள். தாய் எட்டடி தாண்டினால் குட்டி 16 அடி தாண்டும் என்பதைப் போல இன்றைக்கு அண்ணா அவர்களுக்குப் பின் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் ஆட்சியில் தந்தை பெரியார் அறிஞர் அண்ணா அவர்கள் எண்ணிய எண்ணங்களை கொண்ட கொள்கைகளை எல்லாம் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தி மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாகவும் தமிழகத்திற்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் பெருமைகளைக் குவித்துக் கொண்டிருக்கிறார் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள்.

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித் தலைவரின் தொண்டு!!






வெளிநாட்டுப்
பிரமுகர்களுடன்


இந்தியத்
தலைவர்களுடன்


வாழ்வளிக்கும்
திட்டங்களின்
வழிகாட்டி



# பாசத்திற்கு ஓர் அண்ணா!


திருமதி ஈ. வெ. கி.
சுலோசனா சம்பத்
தலைவர்,
குடிசை மாற்று வாரியம்.




**பா**சத்தின் வடிவம் தான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

ஒரு குடும்பத்தார் தங்களுக்குள் பாசம் காட்டுவது இயற்கை இயல்பு! ஆனால் தாம் தோற்றுவித்த மாபெரும் அரசியல் இயக்கத்தையே குடும்பமாக்கி, லட்சோப லட்சம் குடும்பங்களை இணைத்த கழகப் பாசறையை ஒரே குடும்பப் பாச உணர்வோடு வளர்த்து, அனைவரிடமும் அண்ணன்-தம்பி, தங்கையர் எனும் பாச அருவியைக்கொட்டி வளர்த்தவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

உலகிலே எத்தனையோ இயக்கங்கள் உண்டு; தலைவர்கள் - தொண்டர்கள் என்ற நிலைதான் இருக்கும். ஆனால் அண்ணா அவர்கள் உருவாக்கி வளர்த்த இயக்கம்தான் அனைவரும் அண்ணன் - தம்பி, அக்காள் - தங்கை எனும் குடும்பப் பாச உணர்வோடு கட்டப்பட்டதாகும்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு எத்தனையோ சிறப்புக்கள் உண்டு; அவர் அறிஞராக, மேதையாக, அரசியல் உலகில் மதிக்கப்பட்டார். எழுத்து, பேச்சு -நடிப்பு கவிதை - நிர்வாகம் ஆகிய பல கலைகளில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர்; ஆனாலும் அவருக்குள்ள சிறப்புக்களுக்கெல்லாம் தலையாய சிறப்பு-அன்பு, பாசம், இரக்கம், மனிதாபிமானம் இத்தனைக்கும் மொத்த வடிவமாக அவர் திகழ்ந்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலில் எங்கள் குடும்ப நண்பர்; எனது துணைவர் சொல்லின் செல்வர் சம்பத் அவர்களுக்கு, அவரது 14 வயது முதலே உடன் பிறவா அண்ணனாகவே ஒன்றி இணைந்து 22 ஆண்டுகள் ஒரு குடும்ப உணர்வோடு வாழ்ந்த வாழ்க்கைச் சம்பவங்களை எல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது, பேரறிஞர் பெருந்தகை எங்கள் குடும்பத்தார் மீது காட்டிய அன்பு, பாசம் அத்தனையும் இன்றும் இனிய நினைவுகளாக ஆட்சி செய்கின்றன.

''அண்ணா'' என்றதுமே எனது நினைவுகள் நாற்பதாண்டுகள் பின்னோக்கிச் செல்கின்றன.

எனக்கு ஆறு அல்லது ஏழு வயதிருக்கும். வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் எங்கள் இல்லத்திற்கு அண்ணா அவர்கள் அடிக்கடி வருவார்கள். விருந்துண்டு மகிழ்ந்து தங்கிச் செல்வார்கள்.

எனது தந்தையார் திரு சாமி (நாயுடு) அவர்கள் நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய காலம் அது. தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் இயக்கத் தலைவர்களும் அந்தப் பகுதியில்



அண்ணா, தமது வீட்டு வாசலில் நண்பர்களுடன் அமர்ந்தவாறு உரையாடுதல்.

எங்கே நிகழ்ச்சிகள் இருந்தாலும் தங்குவதற்கு எங்கள் இல்லத்திற்கு வருகை தருவார்கள்.

அப்போதெல்லாம் தந்தை பெரியாரிடமும், பேரறிஞர் அண்ணா அவர்களிடமும் சிறுமியாக நான் வேடிக்கையாகப் பேசுவதுண்டு. அவர்கள் என்மீது மிகவும் அன்பும் பாசமும் காட்டுவார்கள். அவர்கள் பேசுகிற விஷயங்களை ஆர்வத்தோடு கேட்பேன்; அவர்களது புதுமையான கருத்துக்கள் மிக இளமைக் காலத்திலேயே என்னை ஈர்த்தன; சுயமரியாதைக் கருத்துக்கள் அக்காலத்தில் மிகவும் புதுமையானவை; புரட்சியானவை; கடும் எதிர்ப்புக்கிடையில் பரப்பப்பட்ட காலம்; அதிலும் தந்தை பெரியார் அவர்கள் அக்கருத்துக்களைக் கரடு-முரடாக கண்டிப்புடன் கூறுவார். எதிரிகளுக்கு மேலும் ஆத்திரம் வரும். ஆனால் அண்ணா அவர்களோ கசப்பு மருந்தைத் தேனில் குழைத்துத் தருவது போல் இனிமையாக எடுத்துரைப்பார். மாற்றாரும் மகுடி கேட்டு மயங்கும் பாம்பு போல் மயங்கி நிற்பார்கள்; பிறகுதான் அந்தக் கருத்துக்களின் அர்த்தம் புரிந்து ஆத்திரப்படுவார்கள். ஆனாலும் அண்ணா நன்றாகத்தான் பேசுகிறார் என்று மனதிற்குள்ளேனும் பாராட்டுவார்கள். இப்படிக் கசப்பான கருத்துக்களையும் இனிமையாக எடுத்துக் கூறி, மாற்றாரையும் கண்ணியத்தோடு நேசித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் திருப்பத்தூரில் எங்கள் இல்லத்திற்கு வருகிறபோது, அவருடன் திரு சம்பத் அவர்களும் வருவார்கள். அப்போது அவர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம்.

திரு சம்பத் அவர்களும் நானும் ஒருவரை ஒருவர் விரும்பி நேசித்தோம். திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தோம். எங்களது முடிவை முதன் முதலில் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் தான் சொன்னோம். அவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு அதனை வரவேற்று தந்தை பெரியார் அவர்களிடம் அண்ணா தான் சம்மதத்தைப் பெற்றுத் தந்தார்; அது மட்டுமல்ல; எங்கள் திருமணத்தையே அண்ணா அவர்கள்தான் தமது இல்லத் திருமணத்தைப் போன்று முன்னின்று நடத்தி வைத்தார்.



வண்டியில் இருப்பவர் யார்? இழுப்பவர் யார்?
விடை 60-ஆம் பக்கம் காண்க.

அண்ணா அவர்கள் எங்கள் திருமணத்தில் மாப்பிள்ளைத் தோழனாகவே விளங்கினார் என்று மற்றவர்கள் கூறிப் பாராட்டினர்.

பெரியார் அவர்களின் மருமகளாகி நான் ஈரோட்டில் இல்லறம் தொடங்கினேன்; தந்தை பெரியார் அவர்கள் இல்லம் தான் தமிழகத்து அரசியலுக்கே ஆதாரப் பீடமாக விளங்கியது. ஈரோட்டிலிருந்து பெரியார் 'குடியரசு' 'விடுதலை' ஏடுகளின் ஆசிரியர் பொறுப்பேற்று, அண்ணா அவர்கள் தமது எழுத்து வன்மையால் தமிழகத்தையே தட்டியெழுப்பினார். அக்காலந்தொட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களை நிழல் போல் தொடர்ந்தார் எனது துணைவர் திரு சம்பத் அவர்கள்.

ஒன்றாகவே உண்டு, ஒன்றாகவே உரையாடி, இணைபிரியாச் சகோதரர்களாக அவர்கள் வாழ்ந்த அக்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பு ஒரு அருமையான அத்தியாயமாகும்; பாசத்திற்கும் நேசத்திற்கும் விளக்கமாக அந்நாட்கள் அமைந்தன.

திரு சம்பத் அவர்களை நாடாளுமன்ற உறுப்பினராக்கி, அன்றையப் பிரதமர் பண்டித நேரு அவர்களின் முன், கழகத்தின் கருத்துக்களை எடுத்துக் கூறி, தமது கருத்துக்கள் அகில இந்திய அரசியலில் புயலைக் கிளப்புவதைக் கண்டு பெருமிதம் கொண்டார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்களோடு உரையாடி மகிழ்வதே ஒரு இலக்கிய நூலைக் கற்றதாகும். தமது தம்பிமார்களோடு இரவெல்லாம் பேசி மகிழ்வார் அண்ணா.

கவியரசர் கண்ணதாசன், ஒரு முறை இதுபற்றி அழகாகக் குறிப்பிட்டார்.

''தமிழுக்குள்ள முழு இனிமையையும் சுவைக்க வேண்டுமானால் அண்ணா அவர்களையும் சம்பத் அவர்களையும் உரையாட விட்டுக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்''.

கவியரசரின் இந்த வார்த்தைகள் முழுக்க முழுக்க உண்மை. அவர்களது உரையாடல் அந்த அளவு இனிமை மிகுந்தவையாகும்.

தந்தை பெரியார் அவர்கள் மணியம்மையாரைத் திருமணம் செய்வதாக முடிவெடுத்தபோது அதனை எதிர்த்து அண்ணாவும் தம்பிமார்களும் வெளியேற வேண்டிய ஒரு துயர நிலை ஏற்பட்டது.



அப்போது சம்பத் அவர்கள் 'விடுதலை' நிர்வாகப் பொறுப்பினைக் கவனித்து வந்தார்; சென்னை மீரான் சாகிப் தெருவிலுள்ள பெரியார் இல்லத்தில் குடியிருந்த நாங்கள், பெரியார் அவர்களின் அத்தனை தொடர்புகளையும், பாசத்தையும் அறுத்துக்கொண்டு எங்களது கைக்குழந்தை நாகம்மாவுடன் பெரியார் இல்லத்திலிருந்து வெளியேறினோம்.

கொள்கை ரீதியாக எடுத்த முடிவு வரவேற்கத் தக்கது என்றாலும் சம்பத் அவர்கள் தமது குடும்பத்துடன் பெரியார் இல்லத்தைத் துறந்து வெளியேறிய காட்சியை அண்ணா அவர்களால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. தந்தை-மகன் பாசத்தை இழக்க வேண்டாம்; வெளியே அரசியலை நடத்துவோம்; இல்லத்திற்குள் பிளவு வேண்டாம் என்று எவ்வளவோ அண்ணா அவர்கள் சொல்லிப் பார்த்தார்கள். எனது துணைவர் கேட்கவில்லை. பொது வாழ்க்கையில் தனி வாழ்க்கை முக்கியமில்லை என்று கூறி வெளியேறி வந்தோம்.

''நாம் நமது தந்தை பெரியார் அவர்களைப் பிரித்து கண்ணீரோடு வெளியேறுகிறோம்; அதோ! தம்பி சம்பத் தனது இல்லத்தையே துறந்து வெளியேறுகிறான். அவனது துணைவி-என் சகோதரி-சுலோசனா கைக்குழந்தையோடு வீட்டை விட்டு வெளியேறி வருகிற காட்சி என் இதயத்தைப் பிளப்பது போலல்லவா இருக்கிறது'' என்று அண்ணா அவர்கள் உருக்கத்தோடு எழுதிய வாசகங்களை இன்று நினைத்தாலும் கண்ணீர் பெருக்கெடுக்கும்.

தந்தைப் பாசத்தைவிட, அண்ணன் மீதான பாசத்தையே எனது துணைவர் பெரிதாகக் கருதினார். குடும்பத்தைவிட பொது வாழ்க்கை நியாயங்கள் அவரை உந்தச் செய்தன.

அண்ணா அவர்களோடு நெருங்கிப் பழகிய யாரும் அண்ணா அவர்களிடம் மேலோங்கியிருந்த அன்பை, பாசத்தை மறக்கவே முடியாது. காலச் சூழ்நிலையில் எனது துணைவர் சம்பத் அவர்கள் 'திராவிடநாடு' பிரிவினைக் கொள்கையில் மாறுபட்டு, அண்ணாவை விட்டே விலகி விடுவார் என்ற ஐயுறப்பட்டது.

அந்த நேரத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் எழுதிய ஒரு கட்டுரையில் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

'தம்பி சம்பத் என்னை விட்டுப் பிரிவதாக முடிவெடுத்தால், அவன் தனது இல்லத்திற்குச் செல்கிற நேரத்தில், என் சகோதரி சுலோசனா அவனுக்குச் சாப்பாடு கூடத் தரமாட்டார். காரணம் சுலோசனா என் கட்சி'

இந்த அளவு பேரறிஞர் அண்ணா அவர்கள் என்மீது கொண்டிருந்த நம்பிக்கையை நினைத்து இன்றும் நெஞ்சம் நெகிழ்கிறேன்.

அது போலவே சம்பத் அவர்கள் கழகத்தை விட்டுப் பிரிய நேர்ந்தபோது, அதனைத் தடுக்க



அண்ணா அவர்கள் தொடர்நது ஆறு மாத காலம் 'திராவிடநாடு' இதழில் "குற்றம் பார்க்கின் சுற்றமில்லை'' என்றும், 'இதயம் இருக்கிறதே தம்பி' என்றும் தொடர்ந்து எழுதினாலும், அப்படியும் பிளவு தவிர்க்க முடியாததாகிவிட்டது. சம்பத் விலகிவிட்டார் என்ற சேதி கேட்டு அண்ணா அவர்கள் மூன்று நாட்கள் உணவு கொள்ளாமலும், தூக்கமின்றியும் அவதிப்பட்டார். கோபதாபங்களிலும் கூட அண்ணா பாசத்தை இழக்கவில்லை.

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றும் சென்னை வந்து மிகவும் நலிவுற்ற நிலையில் அண்ணா அவர்கள் அடையாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அந்த இறுதி நாட்களில் பெருந்தலைவர் காமராசரும் சம்பத் அவர்களும் அடையாறு மருத்துவமனையில் சென்று, சந்தித்தனர். பெருந்தலைவர் காமராசரோடு சம்பத் அவர்களைப் பார்த்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ''நம்மோடு இல்லாமல் காமராசரோடு போய்விட்டரே என்றாலும் சரியான இடத்தில் தான் இருக்கிறார்'' என்ற மன ஆறுதலோடு-முக மலர்ச்சியோடு அண்ணா அவர்கள் சம்பத் அவர்களையே பார்த்தபடி இருந்தார்.

சில நாட்களில் அண்ணா அவர்கள் உடல் நிலை மிகவும் மோசமுற்ற போது அருகிலிருந்த பிரமுகர் ஒருவரிடம் அண்ணா அவர்கள் ''சம்பத்தை வரச்சொல்! பார்க்க வேண்டும்!' என்று பணித்தார்; ஆனால் அந்தப் பிரமுகர் ஏனோ அதனை மறைத்துவிட்டார். தெரிவிக்கவே இல்லை. அன்று அந்தச் சந்திப்பு நடந்திருந்தால்....?

அது போலவே பேரறிஞர் அண்ணா அவர்கள் உடல் நலமின்றி நலிவுற்று அமெரிக்காவிற்கு மருத்துவச் சிகிச்சைக்குச் செல்லப் புறப்படும் முன் எனது துணைவர் சம்பத் அவர்களும் நானும் அண்ணா அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினோம். 1961-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிளவிற்குப் பிறகு . எட்டு ஆண்டுகள் கழித்து அதுவே முதல் சந்திப்பு; பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தச் சந்திப்பில் மிகவும் மனம் நெகிழ்ந்தார்கள். 'அமெரிக்கா சென்று நலத்துடன் திரும்புவீர்கள்' என்று சம்பத் அவர்கள் ஆறுதல் சொன்னார். ''திரும்பி வந்து சந்திக்கலாம்'' என்றார் அண்ணா அவர்கள்.

குடும்பப் பாச உணர்வோடு அரசியல் இயக்கத்தை நடாத்தி, லட்சோப லட்சம் தமிழ்க் குடும்பங்களை ஒரு குடும்ப உணர்வோடு இணைத்து வளர்த்து, இயக்கம் கண்டு, ஆட்சியையும் பிடித்து, அவர் காலத்திற்குப் பிறகு தனது அரசியலை -அதே குடும்பப் பாச உணர்வோடு நடத்திச் செல்ல அண்ணாவின் இதயக் கனியான அண்ணன் புரட்சித்தலைவர் அவர்களையும் நமக்கு - நாட்டுக்கு அளித்து அடையாளம் காட்டிச் சென்ற அண்ணா அவர்களை நாடு, யுக யுகாந்திரங்களுக்கு மறவாது!

பாசமிகு அண்ணனை -இன்று புரட்சித்தலைவர் வடிவத்திலே காண்கிறோம். அண்ணா மறையவில்லை; அவர் புரட்சித்தலைவரின் உருவிலே நம்மோடு வாழ்கிறார்; அண்ணா கண்ட இயக்கம் துவளாது நடைபோட அண்ணன் புரட்சித் தலைவர் வழியிலே நடைபோடுவோம்!.



## கே. ஜி. குரூப் கம்பெனிகள்
### ஒன்று சேர்ந்ததன் வலிமையையும் தத்தம் தனித்தன்மைகளையும் ஒருங்கே கொண்டவை.

ஸ்ரீ கண்ணபிரான் மில்ஸ் லிட்
தி கதிரி மில்ஸ் (கோவை) லிட்
பருத்தி மற்றும் பிளன்டெட் நூல் உற்பத்தியாளர்கள்.

கோயமுத்தூர் பிரிமியர் கார்ப்பரேசன் (பி) லிட்
'சிபிசி பிரிமியர்' மோட்டார் மற்றும் பம்புசெட் தயாரிப்பாளர்கள்.

கே. ஜி. ஆர்ட்ஸ் சென்டர் (பி) லிட்
நான்கு ஏர்கண்டிஷன்ட் சினிமா தியேட்டர்களைக் கொண்ட காம்ப்ளக்ஸ்

கே. கோவிந்தசாமி நாயுடு & சன்ஸ் அன்னூர்
பஞ்சு வியாபாரிகள்.

கதிரி::பேப்ஸ்
துணி தயாரிப்பாளர்கள்.

KG கே. ஜி. குரூப் கம்பெனிகள்
86, ஆர்ட்ஸ் காலேஜ் ரோடு, கோயமுத்தூர்-641018.

OBM/8195-TM


# அண்ணாவின் மனிதநேயம்



**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**



பேரறிஞர் அண்ணா அவர்கள் மனித நேயத்தைத் தமது பிறவிக் குணமாகக் கொண்டவர். மனித நேயம் என்பது யார் மாட்டும் அன்பு காட்டுதல்; எல்லாரையும் மதித்தல்; கண்ணியப்படுத்துதல்; அனைவருடைய உரிமைகளையும் பேணிப் பாதுகாத்தல். இந்த இனிய பண்புகள் அறிஞர் அண்ணா அவர்களிடம் இயல்பாகவே அமைந்திருந்தன.

அறிஞர் அண்ணா அவர்கள் 'கடவுள் உண்டு'-என்ற அணியைச் சேர்ந்தவருமல்லர்; 'கடவுள் இல்லை என்ற அணியைச் சேர்ந்தவருமல்லர். அறிஞர் அண்ணா அவர்களே இதுபற்றிக் கூறியதாவது:

''இவ்விரு கொள்கைகளைப் பற்றி நான் அலட்டிக் கொள்ளாமல் மனித சமுதாயத்தைப் பற்றியே நினைக்கிறேன். அவர்களுக்குச் சேவை செய்யவே விரும்புகிறேன்; ஏழைகளின் சிரிப்பிலேயே இறைவனைக் காண முயல்கிறேன்.''-

இந்தச் சொற்றொடர் அறிஞர் அவர்கள் மனிதநேயத்தின்பால் கொண்டிருந்த விருப்பத்தைத் தெளிவாக நமக்குக் காட்டுகிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலம். மருத்துவர்கள் அவரை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்திய காலம். அறிஞர் அண்ணா அவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ள விரும்பாமல் தொண்டு செய்யவே விரும்புகிறார். தொண்டுக் களத்திலேயே சாவை அணைத்துக் கொள்ளவிரும்புகிறார். தொண்டு செய்ய அனுமதிக்காது ஓய்வு எடுத்துக் கொள்ள வற்புறுத்தியவர்களை நோக்கி அறிஞர் அண்ணா அவர்கள் தமக்கே உரிய எளிமையும் நகைச்சுவையும் நிறைந்த உவமை மூலம் கேட்ட வினா ''காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் திருவுலாவின் முன்பு கையில் நாதசுரம் ஏந்திக் கொண்டு ஊதாமலே வரும் நாதசுரக்காரர்களைப் போல வாழச் சொல்கிறீர்களா?'' - என்பது, இந்த வினா தமது நோயையும் பொருட்படுத்தாமல் மனிதகுலத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அறிஞர் அண்ணா அவர்களிடம் இருந்ததைப் புலப்படுத்துகிறது.

அயனாவரம் இ.எஸ்.ஐ. மருத்துவ மனையைத் திறந்து வைத்து, அங்குள்ள நோயாளிகளைச் சந்தித்து நலம் விசாரிக்கிறார் அண்ணா!





சட்டமன்றத்திலும், ராஜாஜி மண்டபத்திலும் வைப்பதற்காக அண்ணாவின் உருவப்படங்களை மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்தார். (1969)

அடுத்து, மனித உறவுகள் என்றால் கருத்து வேற்றுமைகள் வாராதிருக்காது. ஆனால், அவ்வழி பகை கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. மனித நேயமில்லாதவர் பகை கொள்வர், தமக்கு மாற்றாராக இருப்பவர்களை அடுதலிலும் அழித்தலும் முனைந்திடுவர், ஆனால் அறிஞர் அண்ணா அவர்களுக்குக் கோபம் வந்தால் மௌனமே சாதனம். பிறர் சொல்லும் பழிகளைத் தாங்கி நிற்போர் துறவிகளிலும் தூயவர் என்பார் திருவள்ளுவர். அறிஞர் அண்ணா அவர்கள் தாங்கிக் கொண்ட இழிசொற்களும் பழிச் சொற்களும் அளப்பில.

தம்மைச் சார்ந்தவர் யாராவது மற்றவர்களைப் பழித்துக் கூறிவிட்டால் அண்ணா பதறிப் போவார். உடனே அவர் பழித்துக் கூறப்பட்டவர்களிடம் தாம் மன்னிப்புக் கோருவார். இது அறிஞர் அண்ணா அவர்களிடமிருந்த உயரிய பண்பு. ஏன்? தம்மை முற்றாகப் பகைவமயாக எண்ணிய தலைவர் பெரியார் அவர்களிடத்திற்கூட அறிஞர் அண்ணா அவர்கள் பகை கொள்ளாதது மட்டுமல்ல, பெருகிய அன்பை என்றும் கொண்டிருந்தார். அண்ணா அவர்களின் மனித நேயத்திலிருந்து பிறந்த உயரிய பழமொழி ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு'' என்பது, மனிதநேயம் உள்ள அளவும் இந்தப் பழமொழி நிலவும்; அண்ணா அவர்களின் புகழும் நிலவும்.

அறிஞர் அண்ணா அவர்களிடமிருந்து சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் பிரியும் காலம். பிரிவதற்கு முன்னோடியாக திரு. சம்பத் உண்ணா நோன்பிருக்கிறார். உண்ணா நோன்பிருந்த இடத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் நேரில் சென்று சம்பத் அவர்களைச் சமாதானப்படுத்த முயல்கிறார். திரு. சம்பத் உடன்பாட்டுக்கு வரவில்லை.

தமிழ்நாட்டின் தென்கோடியிலிருந்து அன்று இரவு 11 மணிக்கு காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா வீட்டிற்குத் தொலைபேசியில் அழைப்பு! ஆம் அறிஞர் அண்ணா அவர்களுக்கே அழைப்பு; அழைத்தவர் கேட்கிறார்—''சம்பத்துடன் பேசிய சமாதானமுயற்சி என்ன ஆயிற்று'' என்று! அறிஞர் அண்ணா அவர்களின் பதில்; ''தம்பி சம்பத் ஒத்துவரவில்லை'' என்பது. இரவு 11-மணி! இருபாலும் வேறு யாருமில்லை! தனிமையில் தொலைபேசியில் உரையாடல் கேட்கிறது! அந்த நேரத்திலும் கூட 'தம்பி சம்பத்' என்ற இனிய பண்பு நிறைந்த சொற்களையே கூறினார். இதுவன்றோ மனித நேயம்!

மேலும் திரு. சம்பத் பிரிந்து சென்றது தொடர்பாகப் பத்திரிகைகளுக்குக் கொடுத்த செய்தியில் ''எங்கிருந்தாலும் வாழ்க!'' என்றே கூறினார். மனித நேயம்மிக்கவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் வாழ்த்துவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்டார். ஏற்றுக் கொண்ட நாளன்று கோட்டையில் அரசின் அனைத்து அலுவலர்களையும் கூட்டி, ஓர் அரிய உரை நிகழ்த்தினார்.

இந்த உரை வரலாற்றுச் சிறப்புமிக்க உரை. அந்த உரையில் அரசு அலுவலர்களை அண்ணா அவர்கள் கேட்டுக் கொண்டார். ''கோப்புகளைத் தேக்கி வைக்காதீர்கள்! கோப்புகளைத் தேங்க அனுமதிக்காதீர்கள்! நீங்கள் கையாண்டு இயக்குவது வெறும் கோப்புகள் மட்டுமல்ல. ஒவ்வொரு கோப்பிலும் மனித உயிர்களின் வாழ்க்கை ஏதோ ஒருவகையில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை அன்பு கூர்ந்து மறந்து விடாதீர்கள். ஒவ்வொரு கோப்பின் பின்னணியிலும் ஓர் உயிரின் வாழ்க்கை இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்!'' என்று கூறினார்.

ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தலைவரின் உரை இது. அறிஞர் அண்ணா அவர்களின் மனித நேயத்திற்கு இதனினும் சான்று வேண்டுமோ?



# கலையுலகின் காவல் தெய்வம்



ஆயிரம்தான் குயில்நான் — பாடி
அமுத இசை தரினும்
தாயகத்தின் தலைவன் — அண்ணாவின்
தமிழ்போல இனித்திடுமோ!

அஞ்சுகோடி மலராம் — தமிழரை
ஆரம் எனத் தொடுத்து
வெஞ்சிறை மீண்டவளாம் — அன்னையின்
வெற்றிக்குத் தந்தவராம்!

ஓர் இரவினிலே — சமூகக்
காரிருளை எல்லாம்
வேரறு படவே — நாடக
விந்தை புரிந்தவராம்

உட்கார்ந்தெழுந்து விட்டால் — நாடகம்
ஒன்று முடிந்திடுமே!
நிற்கும் மேடையெல்லாம் — பல்கலை
நிலையம் தோன்றிடுமே!

மூடத் தனங்களுக்கே — மேடையில்
மொத்தவிலை கொடுக்கும்
வாடிக்கைப் பேதைகளை — அண்ணா வந்து
வள்ளிசாய்த் தீர்த்து விட்டார்!

'என்னைச்சொல், சொல்க', என்றே — தமிழின்
இனிய சொல் எல்லாம்
தன்னை அண்ணா எழுத — வேண்டியே
தவங்கள் செய்ததம்மா...!

புராணக்கதை முடித்தார் — அழியாப்
புதியகலை கொணர்ந்தார்!
கிராதக ராயிருந்தோர் — தலையைக்
கிறுகிறுக்க வைத்தார்!

கலையுலகமெல்லாம் — வணங்கும்
காவல் தெய்வத்தையே

உலக வானத்திலே — குயில்தான்
உரக்கப் பாடுவனோ...!
பசுந்தமிழினிலே — சொற்களை
பாலாறு ஓடவிட்டு,
இசைப் படகினிலே — அண்ணனை
ஏற்றி மகிழேனோ...!
பேச அறியானை — காளி நீ
பெருங்கவி ஆக்கினையாம்!
ஆசைக்குயில் என்னையும் — அப்படி
ஆக்கிட மாட்டாயோ...!

(வேறு)

அன்பினில் சிறுகுழந்தை —
அறிவில் இமயமலை!
பண்பிலே திருக்குறளாம்! — அண்ணா
பாசத்தின் இன்னுருவாம்!

பார்க்கப் பத்தாயிரம் பேர்!
பழகப் பத்துலட்சம் பேர்!
பாதையில் எண்ணற்றபேர் — அவர்க்கு
பகையிடமும் நல்லபேர்!

நின்ற இடம் தமிழ்மணக்கும்!
சென்ற இடம் கலைமணக்கும்!

அன்று அவர் வாழ்ந்த சிறையே — ஒருநாள்
ஆகிடும் ஆலயமே!

'அண்ணா வாழ்க!' — என்றுரைக்கும்
ஆறெழுத்துக் குள்ளேதான்
தமிழர்கள் வாழ்விருக்கு — இதுதான்
பவள விழாக் கருத்து!

வேண்டும் தமிழகமே
மீண்டும் அண்ணா பிறக்க
வேண்டும் என்றே வேண்டினேன் - அண்ணனோ
மறுப்பது போல் சிரித்தார்!

எப்படி மீண்டும் வர?
இங்கேதான் வாழ்கிறேன்...!
'அற்புத தெய்வ மனம் — 'பொன்மனம்'
அங்கு வாழ்கின்றேன்' என்றார்!

இனிய நினைவிருக்கு!
இதயக் கனியிருக்கு!
இனியும் பயம்எதற்கு? — தாயின்
இதயம் துணையிருக்கு!

(கவிஞர், தம்மை ஒரு குயிலாக உருவகித்துக் கொண்டு பேரறிஞர் அண்ணாவின் புகழையும், திறமையையும் எடுத்துக்கூறுகிறார்.)

**கவிஞர் சுப்பு ஆறுமுகம்.**

# காட்சியில் எளியர் மாட்சியில் பெரியர்

தன்னையவர் எப்போதும் வியக்க வில்லை!
தலைக்கனத்தில் ஒருநாளும் மிதக்க வில்லை!
அன்னையவர்; அன்பையவர் மறக்க வில்லை!
அண்ணனவர்; குறையையவர் நினைக்க வில்லை!
தென்னையவர்; பயனையவர் நிறுத்த வில்லை!
தென்றலவர்; திசையையவர் மாற்ற வில்லை!
தன்னையவர் தனக்காக வளர்க்க வில்லை!
தலைமையிலே எளிமையினை வளர்த்து வந்தார்!

கண்கண்ட தலைவர்களில் அண்ணா வைப்போல்
காட்சிக்கு எளியவரைக் கண்ட தில்லை!
மண்கண்ட மனிதர்களில் அண்ணா வைப்போல்
மாணிக்க மனிதரிங்கே பிறக்க வில்லை!
விண்கண்ட கதிரவனும், அண்ணா வைப்போல்
விழித்திருந்து இரவுபகல் உழைக்க வில்லை!
முன்கண்ட வரலாற்றில், அண்ணா வைப்போல்
முழுத்தகுதி பெற்றிருந்தோர் தெரிய வில்லை!

"மாற்றாரின் தோட்டத்து மல்லி கைக்கும்
மணமுண்டு!" எனவுரைத்தார் அண்ணா; தம்மைப்
போற்றாரின் தூற்றல், 'பூத் தூறல்' என்றார்!
புரியாதோர் தூற்றிவந்தார்; பொறுத்துக் கொண்டார்!

வேற்றாரின் சொல்லுக்கோ மதிப்ப ளித்தார்;
வெகுளாமல் விடையளித்தார்! நாட்டில் தம்மை
ஏற்றார்க்கோ ஏற்றதொரு தலைவ ரானார்!
இனிமையதன் மறுபெயரே அறிஞர் அண்ணா!

'மனம்பெரிது தமக்கெ'ன்றார்; தமிழர்க் கெல்லாம்
'மானம்பெரி தாகுமென்'றார்; வாழ்நாள் எல்லாம்
'இனம்பெரிது தமிழ்பெரிது' என்றே சொன்னார்.
'இவையன்றி எவைபெரிது?' என்றே கேட்டார்.
'தனம்பெரிது' என்றெண்ணி வாழ்ந்தா ரில்லை;
தன்மானம் பெரிதென்றே வாழ்ந்து வந்தார்.
மனம்பெரிதேல் மாட்சிபெரி தாகும் அன்றோ?
மாட்சியிலே பெரியவராம் அறிஞர் அண்ணா!

அலைகளென்றும் ஓய்வதில்லை; அறிஞர் அண்ணா
அலையுமிங்கே தமிழ்நாட்டில் ஓய்தல் இல்லை!
கலைகளென்றும் ஓய்வதில்லை; அதுபோல் அண்ணா
கருத்தலைகள் தமிழகத்தில் ஓய்தல் இல்லை!
உலைகளென்றும் ஓய்வதில்லை; அண்ணா இங்கே
ஊட்டியதோர் உணர்ச்சிக்கும் ஓய்வே இல்லை!
மலைகளென்றும் இருப்பதேபோல் இருப்பார் அண்ணா!
மாட்சிக்கும் எளிமைக்கும் அவரே சாட்சி!



பொடிமூக்கு: பொத்தான்போ டாத சட்டை!
புன்சிரிப்பு; வெற்றிலையை மெல்லும் பற்கள்!
கடிகாரம் கட்டியும்கட் டாத கைகள்!
கலைந்தமுடி; பரந்ததலை; விரிந்த நெற்றி!
சுடர்உமிழும் பெருங்கண்கள்; நறுக்கு மீசை!
சுறுசுறுப்பு; குறுகுறுத்து ஓடும் கால்கள்!
அடக்கத்தின் அடையாளம்; குட்டை மேனி!
அசையாத மாமேரு; அவரே அண்ணா!






# சீர்திருத்தச் செம்மல் அண்ணா

திரு. ஏ. கே. வேலன்

காஞ்சி என்றால் காமகோடி
பீடம்
காஞ்சி என்றால் கருட சேவை
காஞ்சி என்றால் பட்டுச்சேலை

என்ற நினைவுகளைக் கடந்து, காஞ்சி என்றால் அண்ணா என்றதொரு உணர்வு திரண்டெழுந்தது சரித்திரத்தில் முந்நூறு ஆண்டுக் காலம், இலக்கியத்தில் அறுநூறு ஆண்டுக்காலம். சமயத்தில் சமணம், பவுத்தம், சைவம், வைணவம் என்று ஒரு பத்து நூற்றாண்டுகள் தலைநிமிர்நது நின்ற காஞ்சியில், சமுதாயத்தில் வீழ்ச்சியுற்று சாதி, சாவியாய்ச் சிதைந்து வரலாறு படைத்த இனம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ் விழந்த சூழ்நிலையில், அண்ணா என்றதொரு அறிவின் கொழுந்து சுடர்விட்டெழுந்தது தமிழன்-தொடையிலே தமிழ்ப் பகைவர்கள் கயிறு திரித்துக் கொண்டிருந்த நேரத்தில் தமிழனைத் தமிழால் தட்டி எழுப்பிய விழிப்புணர்ச்சிதான் அண்ணா!

அரசியல் சதுரங்கத்தில் பகடை பன்னிரெண்டு போடத் தெரிந்த சகுனிகள் மிகுந்து விட்ட காலத்தில், பாவத்தை பகவான் பேரால் செய்து அந்த பாவத்தின் சம்பளத்தை பகவானுக்கே அர்ப்பணிக்கும் பரந்தாமர்கள் மிகுந்து விட்ட நேரத்தில், பாசத்தை விற்று நேசத்தை ஏலங்கூறும் எத்தர்களுக்கிடையில் அண்ணா என்றதொரு பெரு வெள்ளம் பெருக்கெடுத்தது - தறிகெட்டுப் போன - தமிழினம் ஒருநிலைப் பட்டு, தன்னை உணரத் தலைப் பட்டது. தன்மானப்படை திரண்டு அண்ணாவைத் தளபதியாக ஏற்றுக் கொண்டது. தமிழனை, தான் ஒரு தமிழன் என்று உணரவைத்தார். கல்லுக்குள் ஈரமாக இருந்த வீரத்தை கனலாக விழிகளிலே பொங்க வைத்தார். அரிசி விலை தெரியாதவனுக்கும் அரசியல் வலை வீசக் கற்றுத் தந்தார். ஆளுதற்கென்றோர் இனம், வாழுவதற்கென்றோர் இனம், அவர்கள் அடிதாங்க தாழ்வதற்கென்றோர் இனம் என்ற நிலையை உழுது புரட்டி, கீழ்மேலாக மாற்றி அமைத்தார்.

கரிபால்டி. ரூசோ, இங்கர்சால் போன்ற மேலைநாட்டு அறிஞர்களைப் பற்றிப் படித்திருப்போம்; அவர்களோடு பழகவும் -அவர்கள் வாழ்ந்த நிலையை நேரடியாகப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பில்லாத நமக்கு, கண்கூடாக, நம் காலத்தில் - வாழ்ந்து, நமக்கு வழிகாட்டிய சரித்திர நாயகன் அண்ணா. எளிமையும் இனிமையும் அவருக்குப் பிறவிக்குணம்; சிந்தனையே அவருக்குத்தொழில்; சீர்திருத்தமே அவருக்கு லட்சியம். தமிழகம் ஏன் தாழ்ந்தது என்ற காரணத்தை எடுத்துரைத்தார்.

தமிழ்மொழியிலே ஊடுருவல்: தமிழன் கலையிலே கலப்படம், தமிழன் பண்பாட்டிலே சரிவு; தமிழன் உள்ளத்திலே அடிமைத் தனம், உணர்விலே ஊமைநிலை என்கின்ற உண்மைகளைக் கண்டார். சமுதாயத்தில் மலிந்து விட்ட கேடுகளை மையமாக வைத்து, தான் கண்ட நாட்டின் நிலைமைகளை நாடகமாக்கினார். ஒருசிலர் தர்மவான்கள் பெயர் எடுப்பதற்குப்பலர் தரித்திரவான்களாகத்தான் வாழ வேண்டுமா? என்னதான் மிட்டா மிராசு பெருந்தனக்காரன் ஆனாலும் அவனென்ன வைரத்திலே வறுவலும், வைடூரியத்தில் பொரியலும், கோமேதகத்திலே கூட்டுமா செய்து சாப்பிடுகிறான்? இரும்புப் பெட்டிக்கும் இருதயத்துக்கும் ஏன் சஸ்வரன் சம்பந்தம் வைக்கவில்லை - என்பது போன்ற கேள்விகளை எழுப்பினார். தேவைக்கு அதிகம் திரட்டி வைப்பவனே திருடர்களை உற்பத்தி செய்கிறான். பணத்திமிரும் உடல் திமிரும் கொண்டவர்களே விபசாரிகளை உருவாக்குகிறார்கள் என்கிற உண்மைகளை நாடகக்காட்சிகளாக்கிக் காட்டினார். முடை நாற்றம் வீசுகின்ற மூடப்பழக்கங்களை முறியடித்தாலன்றி இந்த நாடு முன்னேறாது என்பதைத் தெளிவு படுத்தினார். ஆதிக்கம் என்பது அந்நியர் -நம்மேல் கொண்டுள்ள அதிகாரம் மட்டுமல்ல. பொருளாதாரத்தில், பலர் உழைக்க, சிலர் கொழுப்பதும், வைதிகத்திலும் வழிபாட்டிலும் கூட சிலர் எஜமானர்களாய், பலர் ஏவலர்களாய் இருப்பதும், வீதிகளில் சில புனிதமானது பல தாழ்த்தப்பட்டது என்று வேற்றுமைப்படுத்தப்பட்டிருப்பதும் ஆதிக்கமே என்பதை எடுத்துக் காட்டினார்.

ஆதிதிராவிடன் சமுதாயத்தின் அடிமட்டத்திலே, மீதி திராவிடன் மேல் மட்டத்திலே உலவுவதைத் சேலம் மாநாட்டில் அனைவருக்குமே திராவிடர் என்ற வரலாற்றுப் பெயரை விலாசமாக்கினார். இன்று திராவிடர் என்ற சொல்-நமக்குரியதாகி உள்ளது.

ஒன்றே குலம்ஒருவனே தேவன் என்பதே அண்ணா அவர்களின் கொள்கை. அதை உறுதிப்படுத்தவே விரும்பினார். ஆனால் அதற்குத் தடங்கலாக மெய்ஞ்ஞான விளக்கங்களும், அஞ்ஞான சம்பிரதாயங்களும் இங்கே நடந்து கொண்டிருந்தன. அவற்றைச் சாடினார். மேலைநாட்டில் நாளும் மெத்த வளர்ந்து கொண்டிருந்த விஞ்ஞான சாதனைகளை எடுத்து விளக்கினார். வரலாற்றிலே புகழ்ச்சி கொண்டிருந்த இனம் வாழ்க்கையிலே வறட்சியுற்றதேன் என்பதைத் தெளிவுபடுத்தினார். குற்றாலத்து அருவியாகக் கொட்டிக் கொண்டிருந்த தமிழ் இலக்கியம் கூவம் நதியாகிவிட்ட கொடுமைக்கு நாணினார். மேம்பட்டிருந்த தமிழ்ப் பண்பாடு புண்பட்டுப் போன நிலையைச் சுட்டிக் காட்டினார்.

இந்த நாடு சீர்திருந்த இந்த நாட்டில் மலிந்துவிட்ட கீழான ஏடுகள் சீர்திருந்த வேண்டும். இல்லை, அவற்றைத் திருத்த வேண்டும் என்று அறைகூவினார். பழையன கழித்து புதியன தாருங்கள் என்று ஒரு புதிய பரம்பரையை எழுப்பிவிட்டார்.

இளைய பரம்பரையில் அறிவிலே புரட்சி, எளிய சமுதாயத்தின் வாழ்விலே ஒருவித மறுமலர்ச்சி இன்று தென்படுகிறதென்றால் அதற்கு நம்மைச் செம்மைப்படுத்தியவர் சீர்திருத்தச்செம்மல் அண்ணா என்பேன்.

# திரையுலகில் அண்ணா செய்த திருப்பம்



திரைப்பட இயக்குநர்
திரு.ஏ.எஸ்.ஏ. சாமி

''கத்தியைத் தீட்டாதே, உன் புத்தியைத் தீட்டு''.

''வேலைக்காரி'' திரைப்படத்தில் வருகின்ற உரையாடல் இது. இதை, அந்தப் படம் வெளியான போது, தமிழ் பேசும் வாய்களெல்லாம் பேசிப் பேசி மகிழ்ந்தன. அந்தப் படத்தில் உள்ள அனைத்து உரையாடல்களுமே அன்றாட நடைமுறைச் சொற்களாயின. அந்தக் கருத்து நிறை உரையாடல்களைப் பேசி மக்கள் குதூகலமடைந்தனர். அதனால் நல்ல பல கருத்துக்கள் நாட்டிலே பரவின. மக்கள், சாதாரணமாகப் பேசுகின்ற பாணியிலே கூட ஒரு புதுமையான, இனிமையான அழகு தோன்றியது.

''வேலைக்காரி'' படத்திலும் மற்ற திரைப்படங்களிலும் அண்ணா அவர்கள் எழுதிய உரையாடல்கள் அவர்களது அறிவுப் பெருங்கடலிலிருந்து தெறித்த விலை மதிக்க இயலாத முத்துக்கள். அவை திரைப்பட உலகிலே ஒரு திருப்பம்... ஒரு புத்தம் புதிய ராஜபாட்டை.

''வேலைக்காரி'' ''ஓரிரவு'' போன்ற திரைப்படங்கள் வருவதற்கு முன்பு ஒரு காட்சியிலே தோன்றும் கதாபாத்திரங்கள் காட்சிக்குத் தேவையான கதையை ஒட்டிச் செல்லும் வகையில் ஒருவரோடு ஒருவர் வசனம் பேசிக் கொள்வர். தொடக்க காலத்தில் திரைப்பட உரையாடல்கள் நாடகப் பாணியிலே அமைந்திருந்தன. புராண, வரலாற்றுப் படங்களிலும் இலக்கிய நயத்தோடு எழுதினார்கள். பின்னரே, சமூகப் படங்களின் நடைமுறைப் பாணியில் வசனங்கள் எழுதப்பட்டன. எனினும், ஆங்காங்கே நாடக உரையாடலின் வாடை வீசுவதுண்டு. இயற்கைக்கு விலகிய ஒரு புறம்பான தன்மை அவற்றில் இருந்தன.

அல்லாமலும், காட்சிகளையும், காட்சித் தொடர்புக்கான கதையையும் சொல்லிச் செல்லும் முறையில்தான் உரையாடல்கள் இருந்தன.

இந்த நிலைமையில்தான் அண்ணா அவர்களின் உரையாடல்கள் ஒரு மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தின.



என்றும், எங்கும் நாம் தினசரி வாழ்க்கையிலே கேட்கின்ற சாதாரணப் பேச்சு வழக்கில் அண்ணா அவர்கள் எழுதினார்கள். அந்தப் பேச்சு வழக்கினை அழகு நிரம்பிய மொழியாக்கி அலங்காரச் சொல்தொடர்களினால் மாபெரும் தத்துவங்களை, சமூகத்தின் வேறுபாடுகளை, சாதிபேத விபரீதங்களை, பணம் படைத்தோர் பஞ்சைப் பாரரிகளின் வேறுபாடுகளை அலசிக் காட்டினார்கள். நாம் அன்றாடம் கண்முன்னே காணும் நிகழ்ச்சிகளை அடித்தளமாகக் கொண்டு உபமான, உபமேயங்களைப் பொழிந்தார்கள். இந்தக் காரணங்களால், அண்ணா அவர்களின் உரையாடலில் மலர்ந்த திரைப்படத்தைப் பார்க்கின்ற போது, ஒரு படத்தைப் பார்க்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் ஓரிடத்தில் நடக்கின்ற உண்மையான நிகழ்ச்சியினைக் காண்கின்றோம் என்ற உணர்வு ஏற்படுகிறது.

'வேலைக்காரி' திரைப்படத்தில் மணி என்றொரு பாத்திரம். ''மணி,'' அனுபவப் பள்ளியில் படித்து வாழ்க்கை என்னும் தேர்விலே எம்.ஏ.பட்டம் பெற்றவர்'' (இது அண்ணா அவர்களின் உரையாடலிலிருந்த வார்த்தைகள்) உலகின் போக்குகளைக் கண்டறிந்த தத்துவஞானி

''சுந்தரி'' - அவள் மணியின் ஆசை நாயகி. தான் விலைக்கு வாங்கி வந்திருந்த ஒரு பட்டுத் துணியினை மணியிடம் கொடுத்துக் கேட்கிறாள், "இது என்ன விலை இருக்கும்., சொல்லுங்கள்!"

கேள்விக்கான பதில் மணியிடமிருந்து பட்டென்று வருகிறது: "இதை ஒரு பணக்காரப் பெண் சட்டை தைத்துக் கொண்டால் அந்தச் சட்டையின் மதிப்பு ரூபாய் 60...! ஒரு நடுத்தரக் குடும்பப் பெண் தைத்துக் கொண்டால் ரூபாய்...6...! ஒரு ஏழைப் பெண் தைத்துக் கொண்டால் 'யாரோ இலவசமாகக் கொடுத்திருப்பார்கள்' என்று சொல்வார்கள். எந்தப் பொருளுக்கும் அது இருக்கும் இடத்தைப் பொறுத்துத்தான் மதிப்பு..!''

இன்றைய உலக இயல்புகளை சமூகக் கணிப்புகளை, கண்ணோட்டங்களை இத்தனை எளியதோர் உபமானத்தோடு கருத்துக்களைச் சொல்கின்ற பாத்திரத்துடன் ஒன்றிப் பொதிய வைத்து ஆழப்பதிய எழுதுவதிலேதான் அண்ணா அவர்களின் தனிச்சிறப்பு அமைந்துள்ளது.



'வேலைக்காரி'யில்
கே. ஆர். ராமசாமி

இந்த விதமான கருத்துக் குவியல்கள்தான் அண்ணா அவர்களின் திரை ஓவியங்களில் நீக்கமற நிரவியிருக்கும். மக்களுக்குத் தேவையான, அவர்கள் உணர்ந்திட வேண்டிய கருத்துக்களை, கதையோடு ஒட்டி ஒன்றிய வகையிலே கதாபாத்திரங்களின் மொழியாடல்களில், நயமாக மென்மையாகக் கலந்து ஆணித்தரமாகவும், பொருத்தமாகவும் தருவனதான் அண்ணா அவர்களின் வசனங்கள்.

''சட்டம் ஒரு இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு'' — இது சாதாரணமான ஒரு வசனம்தான். ஆனால் அதனோடு ''அந்த விளக்கை ஏழையால் பெற முடியாது'' என்ற கருத்துச் சேரும்போது அது அண்ணா அவர்களின் தன்னிகரில்லாத வசனமாகிறது. அதுதான் அண்ணா!

தமிழ்ப்படங்கள் சிலவற்றில் பழமொழிகள் மழையெனப் பொழிவதுண்டு. ஆனால் அவை வெறும் பழமொழிகளாக மட்டுமே இருக்கும். அண்ணா அவர்கள் பழமொழிகளைக் கையாண்ட முறையே தனியானதொரு முத்திரைச் சிறப்புடையது.

'மூர்த்தி' வேலைக்காரி படத்தில் இன்னொரு பாத்திரம். இவன் அனுபவப் பள்ளயில் பயிலாத ஒரு சாது. பகுத்தறிவு வாதியாக மாறிவிட்ட ஆனந்தனோடு இவன் மோத நேரிடுகிறது கதாநாயகி அமிர்தத்தைப் பற்றி.

மூர்த்தி: கிட்டாதாயின் வெட்டென மற.

ஆனந்தன்: அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

மூர்த்தி: அவள் உன்னை ஒரு துரும்பென மதிக்கிறாள்.

ஆனந்தன்: சிறு துரும்பும் பல் குத்த உதவுமென அவளிடம் சொல்லிவை.

இங்கே ஒரு கதாபாத்திரம் பேசும் பேச்சும் அதற்கு எதிரிடையாக மற்றொரு கதாபாத்திரம் பேசும்பேச்சும் அந்த அந்தப் பாத்திரங்களின் தன்மையோடு ஒருங்கிணைந்து நிற்கின்றன.

வேலைக்காரி படத்தின் உச்சக் கட்டம். பணப்பேய் பிடித்து வந்து அதனால் ஈவிரக்கமில்லாமல் பல கொடுமைகளைப் புரிந்து, ஏழை எளியோரை வாட்டி வதக்கிப் பெருஞ்செல்வம் சேர்த்த பணப் பெருச்சாளியாம் வேதாசலத்தை-பல மன வெதும்பல்களையும் வேதனைகளையும் அனுபவிக்கச் செய்த ஆனந்தன், அவன் அவரால் பல துன்பங்களுக்கு ஆளானவன், கேட்கிறான் இப்படி.

''இரக்கம் சிறிதுமின்றி பலரைக் கொடுமைப் படுத்தி பண மூட்டைகளைச் சேர்த்தாயே, நீ என்ன முத்துக்களை அரிசியாகச் சமைத்து, செம்பிலே மோர்க் குழம்பு செய்து, வைர வைடூரியங்களைக் கூட்டாகவும், பொரியலாகவும் செய்தா சாப்பிட்டாய்? மற்றவர்களைப் போலத்தானே நீயும் சாப்பிட்டாய்!''.

ஆனந்தனின் மனத்துயரும், பட்ட வேதனைகளும் கொதித்தெழுந்து, இங்கே வார்த்தைகள் எரிமலையென வெடிக்கின்றன. ஆனால் அந்த வார்த்தைகள் சாதாரண வார்த்தைகளா? பொது உடைமை என்ற பெரும் தத்துவத்தை அடித்தளமாகக் கொண்டவை

பழமொழிகளைப் பயன்படுத்திய புதுமுறை போலவே, வேலைக்சாரி படத்தில் மற்றொரு புதுமையான உத்தியினையும் அண்ணா அவர்கள் கையாண்டார்கள்.

ஒரு பாத்திரத்தின் எண்ணங்களுக்கு எதிரான, மாறான எண்ணத்தைச் சொல்ல வேண்டுமானால், அந்தப் பாத்திரத்தின் மனசாட்சி பேசுவது போலச் சித்திரிப்பது திரைப்படங்களில் ஒரு வழக்கமாக இருந்தது; இருக்கிறது. ஆனால் அண்ணா அவர்கள் ஒரு பாத்திரத்தின் மனச்சாட்சியையே இன்னொரு கதாபாத்திரமாக ஆக்கிவிட்டார்கள். தன் தந்தை



'சொர்க்க வாசல்'



'ஓர் இரவு' திரைப்படத்தில் ஒரு காட்சி

தூக்கிலே தொங்குவதற்குக் காரணமாக இருந்த வேதாசலத்தைப் பழி வாங்குவது ஆனந்தனின் திட்டம். ஆனால் அவனோ அப்பாவித்தனமானவன், இளகிய மனம் படைத்தவன். அவ்வப்போது தன் திட்டம் தோல்வி கண்டு விடுமோ என்ற விதத்தில் அவனது மனம் பேதலிக்கும். அந்த வேளைகளில் அவனது மற்றொரு மனமாக, மனச்சாட்சியாக, உலக ஞானம் படைத்தோனாக உருப்பெற்ற பாத்திரம் மணி என்னும் கதாபாத்திரம், அந்தப்பாத்திரம் ஆனந்தன்ன் தயக்கத்தை மிக உறுதி படைத்த வாதங்களால் திடப்படுத்தும். வேலைக்காரி படத்திலே மணியின் பாத்திரப் படைப்பு படத்திற்குச் சிறப்புத் தந்தவற்றில் மிகச் சிறந்ததொரு அமைப்பாகும்.

இப்படி அண்ணா அவர்களின் கதை அமைப்பிலே, கருத்துக்களிலே அன்றாடம் நாம் கண் முன்னே காணுகின்ற கதாபாத்திரங்கள் உருப்பெற்றதனால் மக்களுக்கு, அண்ணா அவர்கள், நினைத்தவற்றைத் தர முடிந்தது. மக்கள் விழிப்புற்று, பகுத்தறிவுக் கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவர்களின் லட்சியத்தைப் படம்பார்ப்போரின் உள்ளங்களில் ஆழமாக, அழுத்தமாக அழகாக, எளிதாக, எடுப்பாக, ஏற்ற வகையில் பதிய வைக்க முடிந்தது.

சமூகப் படங்களிலே மட்டுமல்ல அண்ணா அவர்கள் இம்முறையைக் கையாண்டது. வரலாற்றிலே வரும் சிவாஜியாகட்டும், கம்பனின் இராவணனாகட்டும் அல்லது கற்பனையில் உருப்பெற்ற அறம் உணர்த்திடும் மத குருவாகட்டும் (சொர்க்கவாசல்) கதாபாத்திரங்கள் எல்லாம் கருத்தோவியங்களாக அமைந்ததாகவே இருக்கும். அண்ணா அவர்களின் கருத்துக்களை சாதாரண மக்களும் எளிதில் புரிந்து கொண்டார்கள். மக்கள் அன்றாடம் பேசும்பேச்சிலும், எண்ணும் எண்ணங்களிலும் ஒரு புது மலர்ச்சி உருவானதைக் கண்டு நாடே பிரமித்தது.

'அடுக்குச் சொல் அண்ணா' என்று அண்ணா அவர்களை அன்புடன் பலர் அழைத்ததை நாடே அறியும். அந்த அடுக்குச் சொற்கள் குற்றாலத்து அருவி போல் எப்படி, எத்தனை வேகத்தில் கொட்டின என்று அருகிலிருந்து பார்க்கும் பாக்கியம் பெற்றவர்களின் நானும் ஒருவன்.



உரையாடல் எழுதுவதற்கென்று அண்ணா அவர்கள் அமர்ந்து, எழுதுகோலைக் கையிலெடுத்து எழுதத் தொடங்கினால் எதுகையும் மோனையும் அடுக்குச் சொற்களும் போட்டியிட்டுக் கொண்டு வெற்றெடுக்கும். அவர்கள் வேகமாகவே எழுதுவார்கள். அவர்கள் எழுதுகின்ற வேகத்திற்கு ஈடு கொடுத்து கருத்துக்களும் சொற்றொடர்களும் பொழிந்து கொண்டே இருக்கும்.

ஒய்யாரமான ஓட்டல்களின் சொகுசும், சுமுகமான சூழ்நிலைகளும் அவர்களுக்குத் தேவைப்பட்டதில்லை. அந்த அதி அற்புதமான உரையாடல்களை எழுதுவதற்கு மடியிலே ஒரு தலையணைதான் மேஜை; மையிலே தொட்டுத் தொட்டு எழுதும் சாதாரணப் பேனா ஒன்று. அவ்வளவுதான்.

அன்புத் தம்பியர் புடை சூழ இரவு 10 மணியளவில் எழுதுவதற்கு அமர்ந்தார்களேயானால் 2 அல்லது 3 மணி வரை மிக மிக வேகமாக பேனா பக்கங்களைப் பூர்த்தி செய்து கொண்டே இருக்கும். எங்கேயும், சற்றேனும் சிந்திப்பதற்காக எழுதுவதை நிறுத்தி நான் கண்டதில்லை. மக்கள்பால் அவர்கள் கொண்டிருந்த, கொஞ்சமும் வற்றாத நெஞ்சம் நிறைந்த அக்கறை, அவர்களது





நலன்களைப் பெருக்கிட வேண்டும் என்ற அணையாத ஆர்வம், பஞ்சைப்பராரிகள் நிலையினை உயர்த்திட வேண்டும் என்ற ஓயாத அவர்களின் எண்ணத் துடிப்பு, பக்கம் பக்கமாக, கதாபாத்திரங்களாக, அந்தக் கதாபாத்திரங்கள் பேசிடும் உரையாடல்களாக - காகிதத்தில் குவிந்து கொண்டே இருக்கும்.

''வேலைக்காரி'' படத்திற்காக அண்ணா அவர்கள் எழுதிய உரையாடல்கள் திரைப்பட உலகிலே ஒரு திருப்பு முனையாக அமைந்தவை அந்த உயர்ந்த உன்னதமான, ஒப்பற்ற, அமரத்துவமான படைப்பை அண்ணா அவர்கள் ஐந்தே நாட்களில் உருவாக்கினார்கள் என்றால் மக்கள் நலனில் அவர்கள் கொண்டிருந்த வேகம் எத்தகையது என்பனத வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது.

திரைப்படங்கள் மக்களுக்கு எந்தவகையில் பயன்படுதல் வேண்டும் என்பதுபற்றி வேறுபாடான கருத்துக்கள் உண்டு.

நாள் முழுவதும் உழைத்து உடலும் உள்ளமும் சோர்வடைந்திருப்பவர்களுக்கு அந்தச் சோர்வைப் போக்கும் வண்ணம் உற்சாகமும், உல்லாசமும் ஊட்டுகின்ற ஆடல்களும், பாடல்களும், சண்டைகளும், சிந்தனையைக் கிளறாத வேடிக்கை வினோதமான நிகழ்ச்சிகளும் ஒரு படத்தில் முக்கியம் பெற வேண்டுமா? இல்லை, மக்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய பிரச்சினைகளைக் கொண்ட, அறிவைப் பெருக்குகின்ற சாதனமாகத் திரைப்படங்கள் இருக்க வேண்டுமா?





முன்னதை முக்கியமாகக் கருதுபவர்கள் பற்பல லட்சங்களைச் செலவிட்டு, கேளிக்கைக் காட்சிகளையும், விசித்திரமான இயற்கைக்கு ஒட்டாத நிகழ்ச்சிகளையும், நகைச்சுவையையும் மக்களைக் கவருகின்ற விதத்தில் பிரமாண்டமாக உருவாக்கி - மக்களின் ஆதரவிற்கு வலை வீசுகின்னர்.

அண்ணா அவர்கள் கதை, வசனம் எழுதிய ''வேலைக்காரி'' ஓர் இரவு'' ''சொர்க்கவாசல்'' போன்ற படங்கள் மகத்தான வியக்கத்தக்க வெற்றி அடைந்தன என்றால், பற்பல லட்சங்கள் செலவிட்டு உருவாக்கும் கேளிக்கை மற்றும் கருத்தில்லாத-பொழுதுபோக்குக் காட்சிகளிலே இருக்கும் கவர்ச்சியும் மக்களை ஈர்க்கும் வல்லமையும் அண்ணா அவர்களின் எழுத்திற்கும், கருத்திற்கும் இருக்கின்றன என்பதுதானே பொருள்! இந்தச் சாதனைக்குத்திரைப்பட உலகிலே ஈடும் கிடையாது, இணையுமில்லை.

வரலாறு கண்டும் கேட்டுமறியாத மற்றுமொரு சாதனை ஒன்றினை அண்ணா அவர்கள் சாதித்துள்ளார்கள். அதாவது எந்த நாட்டிலும், எந்தத் திரைப்பட எழுத்தாளர்களும் தேடாத பெருஞ்செல்வத்தை அண்ணா அவர்கள் திரட்டினார்கள். எல்லை காண இயலாத அளவிற்கு நிலபுலன்களையோ, ஏழடுக்கு மாளிகைகளையோ அவர்கள் சம்பாதிக்கவில்லை. மாறாக, விழிப்புற்ற, தம்மை உணர்ந்திட்ட, பகுத்தறிவுப் பாதையிலே ஏறுநடை போடுகின்ற கோடானுகோடி தமிழ் இதயங்களைத் தமதாக்கிக் கொண்டார்கள்.

குறிப்பு: கட்டுரையின் சில கருத்துக்களை உதாரணத்துடன் எடுத்துக்காட்ட வேண்டி சில உரையாடல்களைக் குறிப்பிட்டுள்ளேன். எல்லாம் நினைவிலிருந்து எழுதியவை. நூற்றுக்கு நூறு திரைப்பட வசனங்களை அப்படியே கொடுத்திருக்கிறேன் என்று கூற முடியாது. எனினும் அண்ணா அவர்களின் கருத்துக்கள் சிதையாமல் எழுதப்பட்டுள்ளன என்பது உறுதி.

எங்கள்
உளங்கனிந்த
நல் வாழ்த்துக்கள்

சாந்தி தியேட்டர்,
7/21, ஸ்டேட் பேங்க் ரோடு,
கோயமுத்தூர்-18.

With Best Compliments Of

*

Tamil Nadu
Exhibitors' Association,

(Coimbatore, Periyar, & Nilgiri Districts)

"SAI NILAYAM"
36, Krishnaswamy Mudaliar Road,
COIMBATORE-641 001

PRESIDENT: Shri K. Murughesa Gounder

# அண்ணா என் ஆசான்



**திரைப்பட நடிகர் திரு செந்தாமரை**

எனது இளம் வயதிலேயே எனக்கென்று கொள்கைகளை வரையறுத்துக் கொள்வதற்குக் கர்ரணமாக இருந்தவர், "எனது ஆசான் அண்ணா அவர்கள்" அவர் பிறந்த ஊரிலே, அதுவும் அதே தெருவிலே வசிக்கும் வாய்ப்பைப் பெற்றவன் நான்.

என்னுடைய 15வது வயதாக இருக்கலாம். கலைவாணர் என். எஸ்.கே.யுடன் அண்ணா அவர்களும் கலந்து கொண்ட திருமண நிகழ்ச்சி-அதிலே அண்ணா அவர்கள் "ஒரு மனிதன்-பொய் சொல்லாமலும், சபலப்படாமலும், பேராசை இல்லாமலும், பொறாமைப்படாமலும், முடிந்தால் உதவுவதும் முடியவில்லை என்றால் இரக்கப்படுதலும், கொண்டவனாக இருந்துவிட்டால் போதும்-கடவுளைப் பற்றி நினைக்காமலே -உண்டா? இல்லையா? என்ற வாதத்திற்குப் போகாமலே வாழலாம்" என்று குறிப்பிட்டார்.

அந்தச் சொல்லோவியம் என் மனத்தில் ஆழப் பதிந்ததால் அன்றிலிருந்து இன்றுவரை அந்தப் பண்பினின்று மாறாமல் வாழுகிறேன், வாழ்வேன்.

என்னை ஒரு கொள்கை வழி வாழ வழிகாட்டியவரும் அவர் தான்! என் வாழ்வுக்கு -ஒரு தொழில் - வேலை - புகழ்மணக்கும் கலை உலகம் என வழி காட்டியவரும் என் "ஆசான்" அண்ணா அவர்கள்தான்.

**வாழ வைக்க ஒரு தீர்மானம்:**

சேற்றிலே கிடந்த இந்தச் செந்தாமரைக்கு நீரும், ஒளியும், மணமும், வண்ணமும் தந்தவர். திக்கெட்டும் வாழும் செந்தமிழ் பேசும் மக்களின் தலைவராக இருந்தவர் - புகழ்க்கோபுரத்தின் உச்சியில் இருக்கும்போது நம்மை விட்டுப் பிரிந்தவர்.

தமிழ் மொழிக்கு உயிர் கொடுத்த தந்தை - அதைத் தன் நாவசைவால்-எழுதுகோலால் தாலாட்டுப் பாடிய தாய் - அவரால் வளர்ந்தவர்க்கு அண்ணன்-அவரை வைத்து வாழ்பவர்க்கு ஆசான். எனக்கும் அவரே ஆசான்...

மாணவனைத் தேர்ந்தெடுக்கும் ஆசான்கள் ஆயிரம் வகையினர்-

என் ஆசானோ மாணாக்கனின் முகம் பார்த்துத் தேர்ந்தெடுப்பதைவிட அவனது அகம் பார்ப்பதிலே "சக்கரவர்த்தி" - ஆம். அப்படித் தேர்ந்தெடுத்த விதை களிலே இன்று மரம் ஆகித் தழைத்து வாழ்வோர், ஆயிரக் கணக்கானவர் ஆவர். அதிலே, நான் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை வித்தியாசமானது.

சுற்றத்தை எதிர்த்து அவர் தலைமையிலே திருமணம்-எனக்கு அதுவும் காஞ்சியிலே - அவரது வீட்டுக்கு அடுத்த வீட்டிலேயே!

அவரேகூட "உனக்குப் பெண் கொடுக்க முன் வந்தது யார்?" என வேடிக்கையும் வினயமுமாக கேட்டார்

"அவ்வளவு விரும்பத்தக்கவன் நான்", அந்த நாளில்! மணம் முடிந்தது. குழந்தை பிறந்தது. நான் ஒரு தொழிலும் செய்யா



மலே! அவருக்கே ஒரு சங்கடம். மணம் முடித்து வைத்த தாமே, வாழவும் வைக்க வேண்டும் என்று சிந்தித்திருப்பாரோ என்னவோ!

ஒருநாள் மதியம் - திண்ணையிலே உறங்கிக் கிடந்த எனக்கு அழைப்பு வந்தது, சென்றேன்- நின்றேன்.

''மேற்கொண்டு என்ன செய்யப்போகிறாய்?'' - கேள்வி இல்லை தீர்மானம்.

''சந்திரோதயம்'' அவர் எழுதி நடித்து வந்த நாடகம். அதன் பிரதியை என்னிடம் கொடுத்து, ''இதில் உள்ள ... பாத்திரங்களின் வசன ... யும் மனப்பாடம் செய்து ..., போ!'' என்றார்.

நாட்கள் நகர்ந்தன. சென்னைக்கு அவருடன் வந்தேன். அறிவகத்திலே தங்கினேன்.

ஒருநாள் (மறைந்த பெரியவர்) திரு மதியழகன் அவர்களுக்கு மடாதிபதி பாத்திரத்திற்கான ஒத்திகை - எதிரே அண்ணா அவர்கள்-நான் மதி அவர்களுக்கு பாடம் சொல்லித் தர வேண்டும். என் ஆசான் என்னைத் தயார் செய்த முறை இதுதான்.

அப்போது அந்த நாடகத்தில் சி.வி.எம். அண்ணாமலை, போளூர் சுப்ரமணியம், சி.வி. ராசகோபால், மத்தியிலே பாலமுருகன், கண்ணபிரான், என்.வி.என். இப்படிப் பலர்.

வழக்கமான வரதன் என்ற ஒரு வில்லன் பாத்திரத்தில் தில்லை வில்லாளன் அவர்கள் நடித்து வந்தார். திருவண்ணாமலையில் நாடகம்! வில்லாளன் தன்னால் வர இயலவில்லை என்பதை முந்திய நாளில்தான் சொன்னார்.

அண்ணா அவர்கள், ''டேய் செந்தா- (மிக நெருங்கியவர்கள் என்னை இப்படித்தான் சுருக்கி அழைப்பர்) நீதான் நாளைக்கு வரதன்'' என்று சொல்லிவிட்டார்கள்.

நானும் பக்கா பாடம் செய்திருந்தேன். ஆனால் மேடையில் நடந்ததோ! அண்ணா அவர்களை திட்டிப் பேசும் வசனம் வரதன் பாத்திரத்திற்கு! - 'வரதா..?' என்று நிமிர்ந்தார் அண்ணா. நான் வாயடைத்து, வியர்த்து,



அசைவற்று நின்றதைப் பார்த்து விட்ட அந்த மேதை - என் வசனத்தையும் சேர்த்துப் பேசிக் காட்சியை முடித்துவிட்டு உள்ளே வந்தார்கள்.

பயந்து நின்றிருந்த என்னை அழைத்து - ''எதிரே இருப்பவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் பாத்திரமாக நினைத்து இனி மேல் நடி. எப்போதும் எதிலும் பயம் இருக்கக்கூடாது'' என்றார்கள். அதேபோல் அந்தப் பாத்திரத்தை மதுரை தமுக்கம் மைதானத்தில் செய்தபோது பாராட்டுகள் பெற்றேன்.

ஒருமுறை காஞ்சி பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர்கள் சேர்ந்து நடிக்கும் நாடகம். நாடகத்தன்று கதாநாயக ஆசிரியருக்குக் கடுமையான காய்ச்சல்.

பகல் 3 மணிக்கு என்னை அழைத்து 200 பக்கத்துக்கு மேல் வசனமுள்ள புத்தகத்தைத் தந்து ''இரவு பனப்பாக்கம் கிராமத்தில் நாடகம்-ஒழுங்காக வந்து சேர்'' என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். வேகமாக மனப்பாடம் செய்து கொண்டு தயாராகவே சென்றேன்.

அந்த நாடகத்திற்கு அண்ணா தலைமை ஏற்றார். இன்றைய முதல்வர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலை வகித்தார்.. ஒரே ஒரு இடத்தில் கதாநாயகியின் பெயரை மாற்றிச் சொல்லிவிட்டேன். மக்கள் மன்றத்திலே சலசலப்பு. நாடகம் முடிந்ததும் அண்ணா அவர்கள் சிரித்துக் கொண்டே மக்கள் திலகம் அவர்களிடம் அன்று நடந்த வேடிக்கையை (அதாவது 3 மணிக்குப் பாடம் கொடுத்ததை) சொல்லி என்னை அறிமுகப்படுத்தினார்கள்.

**ஞாபகசக்திக்கு - சபாஷ்**

ஒருமுறை திடீர் எனத் தோன்றிய ஒரு புதுப்பாத்திரத்தைப் (நாடகத்தில் இல்லாததை) பற்றி என்னிடம் சொல்லி 'எங்காவது நினைவுபடுத்து' என்று கூறி இருந்தார் அண்ணா.

திருச்சி தேவர் ஹாலில் நாடகம். இரவு மணி 12. இன்னும் அண்ணா அவர்கள் வரவில்லை. கொட்டகையில் உள்ள மக்களோ ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

திடீர் எனக் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மேடைக்கு வந்தார்கள். (1956- டிசம்பர்) பொறுப்பாளராக இருந்த என்னிடம் அறிமுகம் செய்துகொண்டு நடிப்பதற்குத் தயாரானார்.

எனக்கு அந்தப் புதுப் பாத்திரம் நினைவுவர மேக்கப் போட வைத்து - திரு அன்பில், திருராபி ஆகியோரிடம் சொல்லி கதர் வேட்டி, சட்டை, தொப்பி தயார் செய்து வைக்கவும், அண்ணா அவர்கள் வரவும் சரியாக இருந்தது.

கவிஞரைப் பார்த்த அண்ணா அவர்கள்- என்னை ஒருமுறை திரும்பிப் பார்த்து ஒரு மென்முறுவல் பூத்தார். அந்த முறுவலிலேயே எனக்கு ஒரு சபாஷ்குட்டு.

வசனம் எழுதித் தயாரிக்காத அந்தப் பாத்திரத்தில் அன்று கவிஞர் மாட்டிக்கொண்டு முழித்தது, சமாளித்தது இன்னும் என் நினைவை விட்டு மறையாத காட்சி.

என்னுடைய கலை உலக வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் ''என் ஆசான்'' அவர்கள் எனக்குக் கூறிய (எனக்கு மட்டும் பயன்படக்கூடியதல்ல அனைவருக்கும்) அறிவுரை,

**''ஒரு கலைஞன் தான் பார்க்கும், கேட்கும், ரசிக்கும், துன்பப்படும், ஆனந்தப் படும், அனுபவிக்கும் நிகழ்ச்சிகள், விஷயங்கள் அனைத்தையும் தன் மனத்திலே (அதற்கென்று தனியாக ஒரு மனத்தை உருவாக்கி) வைத்துக் கொள்ள வேண்டும். அது அவரவர்கள் கலைவாழ்க்கையில் என்றேனும் தேவைப்படும்-ஒரு தனி மனித முலதனம்.''**

ஆசான் அன்று சொன்ன அறிவுரையை இன்றும் நான் கடைப்பிடித்து வருகிறேன். இது அனைவருக்குமே பொருந்தும் என்பது என்னுடைய அனுமானம்.



(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரங்கேற்றிக் காட்டப்படும் பொழுது, அவைகள் மக்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுத்து செவிக்கும் நல்லுணவாக ஆகிறது.

பெண்ணடிமைத்தனம் நீங்க வேண்டுமென்று பேரியக்கம் கண்ட பெரியாரின் தாக்கத்தால், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெண்ணுரிமைக்கு எதிராக வரும் எதிர்ப்புகளை ஒடுக்கிவைக்க- அடக்கிவைக்க - திருத்திவைக்க கலை-இலக்கியப் போர்க்கருவியைப் பயன்படுத்தினார். அண்ணாவின் இப்பாணி, எந்த நாடக ஆசிரியருக்கும் வந்ததில்லை.

பெண் பாத்திரங்களைப் பீரங்கி போல் முழங்க வைக்கிறார்.

பாவையின் பயணம்— நாடகத்தில்— வனஜா...

காதல் ஜோதி – நாடகத்தில் – பொற்கொடி...

ஓர் இரவு —நாடகத்தில்— சொர்ணம்...

வேலைக்காரி-நாடகத்தில்— அமிர்தம்

சந்திரோதயம்— நாடகத்தில் —சந்திரா...

மேற்கண்ட பெண்பாத்திரப் படைப்புகள், பெண்ணினத்தை அடிமைப்படுத்தும் முதலாளித்துவத்துக்கு எதிராக - செருக்கு நிறைந்த செல்வர்களுக்கு எதிராக-ஆடம்பரமான ஆண் ஆதிக்க வெறியரின் கொடுமைகளுக்கு எதிராகப் போர் முழக்கம் இடுகின்றன. பெண் பாத்திரப் படைப்புகளின் வழியாக, பெரும்புரட்சிக்கு அண்ணா கலை - இலக்கியப் பாணியைப் போர்க் கருவியாகப் பயன்படுத்தி இருக்கிறார் என்பதை அறியலாம்.

அடுத்ததாக, செல்வச் செருக்கும், தகுதித் தருக்கும் மிக்கோரை, அண்ணா அவர்கள், கதாப் பாத்திரங்கள் ஆக்கியுள்ளார். இவர்கள் சுரண்டும் வகுப்பினர்கள் ஆவார்கள். சமூகக் கேடுகளை சலிக்காமல் விளைவித்து, வீண்வம்பு செய்து ஏழைகள் மீது கேடுகளைத் திணிப்பார்கள். அத்தகைய பாத்திரங்களாக நாடகங்களில் அண்ணா காட்டியுள்ளதை இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

பாவையின் பயணம் நாடகத்தில்— நெப்போலியன்..

சந்திரோதயம் நாடகத்தில் —சிங்காரவேலர்..

ஓர் இரவு நாடகத்தில்— ஜெகவீரர் கருணாகரத்தேவர்..

வேலைக்காரி நாடகத்தில் —வேதாச்சல முதலியார்..

கண்ணாயிரத்தின் உலகம் நாடகத்தில்—சிங்கார வேலர்..

மேற்கண்ட கதாப்பாத்திரங்களே சமூகச் சிக்கலை உருவாக்குபவர்கள். ஊருக்குப் பெரியவராய் உயரத்தில் அமர்ந்துகொண்டு, ஊருக்கு இளைத்தவர்களின் உழைப்பையும் - உயிரையும் உறிஞ்சிக்கொழுக்கும் அட்டைகள் போன்றவர்கள். சமூக முன்னேற்றத்துக்குத்தடைக்கற்களாக இருப்பவர்கள். இத் தடைக்கற்களை அண்ணா அவர்கள், தம் கலை-, இலக்கியப் போர்க்கருவி கொண்டு உடைத்து நொறுக்கி ஒன்றுமில்லாமல் செய்யாது, அவற்றை அடித்துத்திருத்தி, படிக்கற்களாக மாற்றி அமைக்கிறார். அப் படிக்கற்களில், சுரண்டப்பட்ட ஏழை- எளிய - பாமரப் பாட்டாளிகளை முன்னேற்றபுரிக்கு ஏறிச்செல்ல வழிவகுக்கிறார்.

சமூகத்தில் சுரண்டும் வகுப்பாருக்கும் - சுரண்டப்படும் வகுப்பாருக்கும் இடையிலிருப்போர்களில் ஒருசாரார் சுரண்டுவோருக்கு துணைநிற்பார்கள். மற்றொரு சாரார் 'எவன் ஆண்டால் நமக்கென்ன?' என்னும் மனநிலையிலிருப்பவர்கள். இதில் சுரண்டுவோர்க்குத் துணைநிற்கும் அடியாள் கூட்டம், முதலாளிகள் மூச்சுவிசும் முன்பே, முந்திக் கொண்டு தும்மலைப் போடுபவர்களாவர். அத்தகைய குணங் கொண்ட பாத்திரங்களாக கீழ் வருபவர்கள் அமைகிறார்கள்.

இன்ப ஒளி நாடகத்தில் — திருமுடியார்...

பாவையின் பயணம் நாடகத்தில் —போதனாச்சாரியார்...



சந்திரமோகன் நாடகத்தில் —காகபட்டர்...

வேலைக்காரி நாடகத்தில் —சுந்தரகோஷ்...

சந்திரோதயம் நாடகத்தில் —வாஞ்சிநாத சாஸ்திரி...

மேற்கண்ட பாத்திரங்கள் மூலம், பேரறிஞர் அண்ணா அவர்கள், சமுதாயத்தில் வாழும் சூழ்ச்சிக்காரர்களையும், வஞ்சகக் குணங்கொண்டவர்களையும், கெடுதல் செய்து கெட்டிக்காரராக மாறுவோரையும், படம்பிடித்துக் காட்டியுள்ளார். இவர்கள் எடுப்பார் கைப்பிள்ளைகள் போன்றோர். வீண்வம்பு செய்து விழலுக்கிறைத்த நீராகும் வில்லன்களான புல்லரையெல்லாம், மக்கள் நலனை மையமாக வைத்துக் கொண்டு, அண்ணா அவர்கள் கலை - இலக்கியப் போர்வாள் கொண்டு எதிர்க்கிறார். இவர்களைச் சூழ்ச்சியின் வடிவங்கள் தன்னலத்தின் சின்னங்கள்- ஏழைகளை வஞ்சிக்கும் புல்லுருவிகள்- கொடுமைக்குத் துணை செய்யும் கொத்தடிமைகள் என்று சொல்லலாம்.

அண்ணாவின் ஓயாத அரசியல் பணி, பல இலக்கியப் படைப்புகளை முடிவடையச் செய்யாமல் விடுபட வைத்திருக்கிறது. தசாவதாரம், வீங்கிய உதடு, இன்ப ஒளி ஆகிய புதினங்களை முடிவுக்குக் கொண்டுவர இயலவில்லை என்று அறிகிறோம்.

அண்ணாவின் புதினங்களும் - குறும் புதினங்களும் இன்ப முடிவைக் கொண்டு முடிகின்றன. அவரது சிறுகதைகளில் பாதிக்கு மேற்பட்டவை இன்பவியல் முடிவைக் கொண்டிருக்கின்றன என்பதையும் அறிகிறோம்.

எனவே அண்ணா அவர்கள் தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளை, மக்களிடம் பிரச்சாரம் செய்தார். அதற்குக் கலை-இலக்கியப் பாணியை ஒரு போர்க் கருவியாகச் செயல்படுத்தினார். அண்ணா அவர்கள் தம் கலை-இலக்கியப் படைப்புகளைக் கொள்கை பரப்பும் போர்முரசாகவே பயன்படுத்தியுள்ளார்.

சமூகப் புரட்சிக்கு, மக்களை சார்ந்த அண்ணா, கலை இலக்கியப் போர்க்கருவியே தனக்குத் துணைப் பலமாகக் கொண்டிருந்தார் என்று அறிகிறோம்.





# தலைவர் அண்ணா

**சர். ஏ. ராமசாமி முதலியார்**

எனது வாழ்நாளிலேயே மிகவும் மகிழ்ச்சி தரத் தக்க ஒரு நிகழ்ச்சியை இது போது நடத்தி வைக்கிறேன்.

மக்களுக்காக வாதாடுகின்ற மக்கள் தொண்டன் இம்மாநிலத்தையும் இதனை அடுத்துள்ள (தென்னக) மாநிலங்களிலும் பிறர் கண்டு மதிக்கும்படி அவற்றைத் தலை நிமிரச் செய்த ஒருவரது சிலையை இப்போது நான் திறந்து வைக்கிறேன்.

தமிழ்ப் பேச்சாற்றலில் அவர் எலலோரையும் மீறியவர்; ஆங்கிலத்திலும் அவருக்கிணையானவர் உலகில் இல்லை. நாநலம் வாய்ந்த பேச்சாளர் அவர். நாநலம் மட்டும் சிலரிடம் இருக்கக்கூடும். ஆனால் கருத்தாழத்தோடு கூடிய நாநலம் காண்ப தரிது. அண்ணாவின் சொற்பொழிவிலெல்லாம் கருத்துக்கள் குவிந்திருக்கும். இதுவே ஒருவரை மற்ற மனிதர்க்கெல்லாம் தலைவராக்குகின்றது.

இன்று அவர் எல்லா மக்களின் உற்சாகமிக்க நல்லாதரவினையும் பெருமதிப்பினையும் பெற்றுத் திகழ்கிறார். அண்ணா என்று அழைக்கப்படுகின்ற அவர் ஓர் சர்வாதிகாரியல்ல என்பதால் எல்லோரும் அவரை அண்ணா என்றழைக்கும்போது அவர்கள் உள்ளத்திலெல்லாம் இழையோடுவது பிரிக்க முடியாத சாகோதர பாசம்.

அண்ணாவின் பாதை கடுமையானதாக இருந்தது. சோதனைமிக்க நாட்களை அவர் கடந்து வந்தார். எல்லாவற்றையும் விட்டுத் தனிமையில் ஒதுங்கி விட அவர் எண்ணியதுண்டு. ஆனாலும் தனது விடாமுயற்சி காரணமாக இன்றைய உயர்நிலையை அவர் அடைந்துள்ளார். ஆபிரகாம் லிங்கன் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும்போது மரக்குடிலிலிருந்து வெள்ளை மாளிகைக்குச் சென்றார் என்பார்கள். அதுபோல அண்ணா வாழ்க்கையும் அமைந்துள்ளது.

மொழி குறித்து அண்ணாவும் அவரது அமைச்சரவையினரும் காட்டிவருகிற உறுதிக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். சர்வாதிகாரியாக அல்லாமல் அன்பு அண்ணனாக இருக்கும் முதலமைச்சருக்கு ஆதரவாக அவர் பக்கம் நின்று அவர் காட்டும் வழியில் தமிழ் மொழியின் புகழுக்கு-தமிழ்ச் சமுதாயத்தின் புகழுக்கு-உழைத்திடுவோம்.

இயற்கையின் அருளால் அண்ணா தலைமையில் இயங்குகிற ஒரு நல்ல அரசாங்கத்தை இங்கே பெற்றிருக்கிறோம். இல்லாவிட்டால் நம்மால் அழிவைத் தவிர்க்க முடியாது. அவர் எது சொன்ன போதிலும் அது குறித்தெல்லாம் கவலைப்படாது மேல்நோக்கிச் செல்வோம். காலத்தின் தேவையை நிறைவு செய்ய வந்த தலைவர் அண்ணா.

நம் தலைவர்—ஆமாம் அண்ணா உங்களுக்கு மட்டுமில்லை எனக்கும் தலைவரே—அவருக்கு விதிக்கப்பட்டுள்ள அந்த உயர்நிலையை அடைந்திட வேண்டும். இந்தியா முழுவதற்கும் தலைமைப் பொறுப்பை அண்ணா ஏற்றிடும் அந் நாளைக் காண நான் ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.

**[2ஆம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி (1.1.1968) சென்னை அண்ணாசாலையில் பேரறிஞர் அண்ணாவின் சிலையைத் திறந்துவைத்து ஆற்றிய உரையிலிருந்து.]**

## தமிழ்நாடு அரசின் புதிய அமைச்சர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

**மாண்புமிகு உணவமைச்சர் திரு. தா. வீராசாமி**

திரு தாண்டவ மூர்த்தி வீராசாமி, தஞ்சை மாவட்டம் வெள்ளூர் கிராமத்தில் 1938-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ம் தேதி பிறந்தார். ஒரத்தநாடு அரசு உயர்நிலைப் பள்ளியிலும், தஞ்சை இராஜா சரபோஜி அரசுக் கல்லூரியிலும், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்றார். விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர். 1980-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு தொகுதியில் இருந்து தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 5.9.84 அன்று உணவுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.





**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.கே எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்**

திரு. கோபாலபுரம் கந்தசாமி ரெட்டியார் சுப்பா ரெட்டியார், சுப்பா ரெட்டியார் ரெங்காரத ரெட்டியார் ராமச்சந்திரன் அவர்கள், காமராசர் மாவட்டம் விருதுநரில் 1949-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ஆம் தேதி பிறந்தார். விருதுநகர் எஸ். எஸ். சுப்பையா நாடார் உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்புவரை படித்தார்.

அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டுப் பலமுறை சிறைக்குச் சென்றார். கால்பந்து, ஹாக்கி போன்ற விளையாட்டுக்களில் ஆர்வம் உள்ளவர். 1977, 1980 ஆண்டுகளில் சாத்தூர்த் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கூட்டுறவுத்துறை அமைச்சராக 5.9.84 அன்று பொறுப்பேற்றுள்ளார்.

# முத்தமிழ் வித்தகர் அண்ணா

கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்



ஈடற்ற பேரறிஞர் அண்ணா முன்னாள்
"ஏ தாழ்ந்த தமிழகமே" எனமு ழங்கிச்
சூடேற்றித் துடிப்பூட்டி "நாடும் ஏடும்"
துள்ளிஎழ வழிவகுத்தார் "நல்ல தீர்ப்பு"
மேடையிலே பலநூறு முழக்கத் தாலே
வீறுகொண்ட வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
நாடெங்கும் தமிழ்இயக்கம் பரவச் செய்தார்
நற்புகழால் இயற்றமிழின் பயனைப் பெய்தார்.

தனக்கென்றே தனிப்பாணி வகுத்த அண்ணா
தமிழுக்கே புதியநடை தந்தார் அன்றோ?
கனக்கின்ற அரசியலும் சீர்த்தி ருத்தக்
கருத்துக்கள் அத்தனையும் கரும்பைப் போலே
இனிக்கின்ற எழுத்தோவி யங்கள் ஆக்கி
எழுச்சிகண்ட மேதையவர் பொருளா தாரம்
மணக்கின்ற 'பணத்தோட்டம்' படைத்தார்; என்றும்
வாடாத கருத்துமலர்ச் சோலை யன்றோ?

கலைமேதை 'திராவிடநா டெ'ன்னும் ஏட்டில்
கைவண்ணம் தமிழ்வண்ணம் அனைத்தும் காட்டித்
தலையங்கம் ஒவ்வொன்றும் எழுத்து விந்தை
தழைக்கின்ற சிந்தனையின் ஊற்றாய்த் தந்தார்
அலைமோதும் சமுதாய உணர்வை ஊட்டி
அன்புகொஞ்சத் தம்பிக்கு மடலாய்த் தீட்டி
நிலையான பயன்கண்டார் இலக்கி யத்தின்
நேர்த்தியெலாம் எழுத்தாக வார்த்தார் அன்றோ?

இசைத்தேனில் நனைத்தெடுத்த சுலைகள் போலே
இனிக்கின்ற சொல்லடுக்கி எழுதிப் பேசி
இசைஇயக்கத் தமிழ்த்தலைவர் எனமுன் வந்தார்
இசைவாணர் தமிழ்பாட ஊக்கம் தந்தார்.
இசைமரபுப் பல்லவிபோல் "எதையும் தாங்கும்
இதயம்" போல் எத்தனையோ தொடர்க ளாலே
இசைகொண்ட அண்ணாவின் ஆற்றல் எல்லாம்
என்றென்றும் மறவாமல் போற்று வோமே!

சீர்திருத்த நாடகமாம் "சந்திர மோகன்"
சிந்தனைக்கு விருந்தாகப் படைத்தார் அண்ணா;
பேர்மிகுந்த "நீதிதே வன்ம யக்கம்"
பேரறிஞர் உரையாடல் பெருமை பேசும்;
ஆர்வமுடன் பாத்திரங்கள் ஏற்று மேடை
அரிதாரம் பூசிடவும் தயங்கி டாமல்
மார்புயர்த்தி மக்களது கவனம் ஈர்த்த
மாநடிகர் அண்ணாவின் மகிமை என்னே!

உவமையிலாப் புகழ்பெற்ற "வேலைக் காரி"
"ஓர் இரவு", உணர்ச்சிதுள்ளும்" காதல் ஜோதி"
நவரசநா டகம்படைத்த அறிஞர் அண்ணா
நம்நாட்டின் பெர்னாட்ஷா என்றார் கல்கி
அவைதவிர "நல்லதம்பி", "சொர்க்க வாசல்"
அத்தனையும் திரைப்படமாய் மக்கள் நெஞ்சைக்
கவர்கின்ற உரையாடல் கருத்தின் வேகம்
கதைப்பின்னல் உத்திகளும் கண்டார் அண்ணா.

இத்தகைய பலசிறப்புப் படைப்பி னாலே
இயல்இசைநா டகப்பெருமை ஏற்ற அண்ணா
முத்தமிழில் வித்தகராய்த் திரைப்ப டத்தும்
முத்திரையைப் பதித்தகலை முனைவ ராக
எத்திசையும் புகழ்மணக்கத் தமிழ கத்தின்
இணையில்லா முதல்வரென எழுச்சி பெற்றார்
உத்தமரின் சாதனைகள் அனைத்தும் வெல்லும்
உலகவர லாற்றினிலே நிலைபெற் றோங்கும்!



# பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத் திறப்பு விழா

## -சில நினைவுகள்-

''காஞ்சிபுரத்தில் இந்தச் சிறிய வீட்டில் வாழ்ந்த ஒரு சாதாரண மனிதர் இந்நாட்டின் முதலமைச்சராக உயர்கிறார் என்றால் ஜன நாயகம் தழைத்தோங்குவதையே அது காட்டும். நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவனில்லை என்றாலும்-நல்லவர்களைப் பற்றி -இந்த நாட்டுக்கு உழைத்த வல்லவர்களைப் பற்றி நான் பாராட்டத் தவறியதில்லை''.

பேரறிஞர் அண்ணாவின் திருஉருவச் சிலையைத் திறந்து வைத்த மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி குறிப்பிட்டார்:

''வலிமையும் நாட்டு மக்களை அணி திரளச் செய்யும் பெரும் சக்தியும் கொண்டு தென்னிந்தியாவிலேயே குறிப்பிட்டுச் சொல்லத் தக்க தலைவராகத் திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா. உண்மை வழியில் நடப்பதிலும் அகிம்சை வாதியாகத் திகழ்வதிலும் அவர் காந்திய வழி முறைகளைக் கடைப்பிடித்தார். தலை முதல் கால் வரை அவர் பொதுநல வாதியாகவும் பெருந்தன்மையாளராகவும் விளங்கினார்.''

பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சியில் வசித்து வந்த இல்லத்தை 16.9.1980 அன்று நினைவு இல்லமாக்கியது தமிழக அரசு.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு என். சஞ்சீவரெட்டி அவர்கள், நினைவு இல்லத்தைத் திறந்து வைத்தார். பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திறந்து வைத்தார். அண்ணா அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவற்றை எடுத்துக்கூறும் வகையில் புகைப்படக் கண்காட்சி ஒன்றும் நினைவு இல்லத்தில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ளது. (சுற்றுலாச் செல்லும் பயணிகள் - கண்டு வியப்புக் கொள்ளும் வகையில் பல்வேறு அரிய புகைப் படங்களின் தொகுப்பாக இது திகழ்கிறது.)

நினைவு இல்லத் திறப்பு விழாவுக்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றுப் பேசிய மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள்,

''பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து, வாழ்ந்த இந்த இல்லத்தை, நாட்டு மக்கள் வணங்கத்தக்க வகையிலே நாட்டுடைமை ஆக்கப் போவதாக, நமது தளநாயகராம் முதல்வர் புரட்சித் தலைவர் கடந்த ஆண்டிலே அறிவித்தார்கள்'' என்று குறிப்பிட்டார்.

தலைமை வகித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள்,

''அண்ணா அவர்களை நான் என் அண்ணனாக-ஆசானாக-தந்தையாக-தாயாக-என் இன்று தெய்வமாகவே ஏற்றுக் கொள்கிறேன்! அவரைப் போன்ற கண்ணியம் நிறைந்த ஒரு தலைவரை நாம் கண்டதில்லை. உலகம் கண்டிருக்காது'' என்று குறிப்பிட்டார்.

நினைவு இல்லத்தைத் திறந்து வைத்த மேதகு குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள் குறிப்பிட்டதாவது:



அனைத்துக் கட்சியைச் சார்ந்த தலைவர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய நிகழ்ச்சி, நினைவை விட்டு அகலாத அளவுக்குப் பெருமை படைத்ததாகும். முதுபெரும் எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் அவர்களுக்கு இந்த விழாவில் சிறந்த எழுத்தாளருக்குரிய திரு.வி.க. விருது வழங்கப் பெற்ற நிகழ்ச்சியும் பசுமை மாறாததாகும்.






# அண்ணன் பொழிந்த அன்பு மழை!




## தில்லை வில்லாளனுக்கு அண்ணா எழுதிய மடல்







# பத்திரிகையாளர்களைக் கவர்ந்த பேரறிஞர்

பேரறிஞர் அண்ணா தன்னை ஒரு பத்திரிகையாளர் என்று சொல்லிக் கொள்வதில் மிகுந்த பெருமை அடைந்து வந்தார். பல்வேறு பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்த அவர், பத்திரிகையாளர்களிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.

சில பத்திரிகை நிருபர்களின் பார்வையில் அண்ணா எப்படிக் காட்சி தந்தார் என்ற செய்தி சில நிகழ்ச்சிகளின் வாயிலாகத் தொகுக்கப் பெற்றுள்ளது.

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' இதழின் நிருபர் திரு என். எஸ். ஜகந்நாதன் ஒரு முறை அண்ணாவைக் குறித்து எழுதியது வருமாறு:

''சென்னையில் ஒருமுறை அவரைச் சந்தித்தேன். காத்திருந்து காத்திருந்து கடைசியில் இரவு பதினொன்றரை மணிக்குத் தான் பார்த்தேன்.

''இப்படி ஓய்வில்லாமல் வேலை செய்தால் எப்படி? ஓர் ஒழுங்கு முறையுடன் வேலைகளைப் பார்க்கக் கூடாதா?'' என்று கேட்டேன்.

''அதெல்லாம் முடிகிற காரியமில்லை. பொது வாழ்வில் வந்துவிட்ட பிறகு, எப்படி முடியும்'' என்றார்.

மாணவர் கிளர்ச்சி, தொழிற்சாலைகள் வேலை நிறுத்தம் ஆகியவைகளைப் பற்றிக் கேட்டேன்.

''மாணவர்களில் சிலர் இப்போது உங்களைத் தாக்கிப் பேசுகிறார்களே...''

''இதெல்லாம் சகஜம். அரசியலில் அப்படித்தான். இன்றைக்கு இகழ்வார்கள்; நாளைக்கு "ஓகோ'' என்று புகழ்வார்கள்".

''ஸின்ஸியர்டி'' என்பதற்குத் தமிழ் வார்த்தை எனக்குத் தெரியாது. ஆனால் அவ்வார்த்தை யாருக்கு மிகக் கச்சிதமாகப் பொருந்தும் என்று தெரியும். அவர் அண்ணா.

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' இதழின் மற்றொரு நிருபரான திரு கே. என். ராமானுஜம் குறிப்பிடுகிறார்:

"ஜனவரி 25, 1968, இரவு 11 மணி இருக்கும். சென்னை வந்திருந்த பிரபல சினிமா பத்திரிகை 'பிலிம்பேர்' ஆசிரியர் திரு பி. கே. கரஞ்சியா அண்ணாவைச் சந்திக்க விரும்பினார்.

மறுநாள் காலை 8.30-க்கு அண்ணா இல்லத்திற்குப் போனோம். அப்போது குடியரசு தின விழாவில் கலந்து கொண்டு விட்டுக் களைப்புடன் இருந்தார்.

இருந்தும் எங்களுக்குத் தயங்காமல் பேட்டி கொடுத்தார். பத்திரிகையாளரிடம் அவருக்கு அவ்வளவு பரிவு.

பதட்டப்படாத குணம்; பண்பு மிகுந்த உபசரிப்பு; அவசரப்படாத சூழ்நிலை. ஒளிவு மறைவு இல்லாத பதில்கள்...பொது வாழ்வில்


பத்திரிகையாளர்களுடன் அண்ணா

முழுமையாக ஈடுபட்டிருக்கும்—பெரும் பதவி யிலிருக்கும் அரசியல் தலைவரிடம் இவை அமைவது எளிதல்ல.

அண்ணா இரண்டு ஆண்டுகள் கூட முதல்வராகப் புணியாற்றவில்லை. முடிந்த வரை மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து, பணியாற்ற முற்பட்டாரென்றே நான் உறுதி யாகக் கூறுவேன். அரசாங்கத்தில் பணி யாற்றும் பல பெரிய அதிகாரிகளும் அண்ணாவைப் பற்றிய இந்த அபிப்பிராயமே கொண்டிருந்தனர். "**நிறைகுடம் தளும்பாது**" **என்கிற வாக்குப்படி நடந்த தலைவர் அண்ணா.**

'**மெ**யில்' ஏட்டின் நிருபர் திரு பெர்னாண்டிக்ஸ் அண்ணாவைக் குறித்து எழுதியுள்ளது வருமாறு:

அண்ணாவுடன் பல சமயங்களில் தனித்து உரையாடியிருக்கிறேன்; பத்திரிகை யாளர்களுடன் அவர் பேசும்போது இருந் திருக்கிறேன். அவரிடம் உள்ள சிறப்பான திறமை இதுதான்: எந்தக் கருத்தையும் பத்திரிகையாளர்களிடம் திணிக்கமாட்டார்; மாறாக, எண்ணங்களை அவர்கள் முன் எடுத்துக்கூறி விவாதிப்பார். இது பத்திரிகை யாளர்களைக் கவர்ந்த ஒரு முறையாகும்.

இந்தி எதிர்ப்புப் பிரச்சனை பற்றியும் பிரிவினைக் கொள்கை பற்றியும் அவரைக் கேள்விகள் கேட்டுத் திணற அடிக்கும் வேலையில் இறங்கினர் வட இந்தியப் பத்திரிகையாளர்கள். ஆனால், அவரோ முதன்முதலாகப் புதுடில்லியில் நடத்திய அந்தப் பத்திரிகையாளர் கூட்டத்தில் இருந்த வடக்கத்திய நிருபர்களை வாய்பேசவிடாமல் செய்துவிட்டார். 'நான் பிரிவினைவாதி அல்ல; இந்தி எதிர்ப்புவாதியுமல்ல; எதற்குமே நான் எதிரியுமல்ல; ஒன்றுபட்ட பலம் வாய்ந்த இந்தியா என்பதுதான் எனது குறிக்கோள். எல்லா தேசிய மொழிகளும் வேண்டும். ஒன்று மற்றொன்றுக்குப் போட்டியாக இருக் கக்கூடாதென்பதுதான் எனது கருத்து. எல்லா தேசிய மொழிகளும் வளர விடப் படட்டும். அதில் மக்களாகப் பார்த்துத் தங்கள் விருப்பத்தைத் தெளிவு செய்து கொள்ளட்டும்' என்றார் அவர்.

கடைசியாக ஒன்று: வடக்கே உள்ள வர்கள் அண்ணா சொல்வதை விரும்பவில்லை என்பது உண்மையாக இருக்கலாம்; **ஆனால் உணரத் தலைப்பட்டுவிட்டார்கள் என்பது உண்மையே!**

**க**லைமகள் இதழில் "டெல்லிக் கடிதம்" எழுதுபவரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபரு மான திரு தெ. சீனிவாசன் எழுதியுள்ளார்:

அண்ணா தமிழில் மடை திறந்தது போலப் பேசும் ஆற்றல் உள்ளவர் என்பதும் இதனால் தான் அவருக்கு "அடுக்குச் சொல் அண்ணா" என்ற பெயரும் கிடைத்தது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் அவர் ஆங்கிலத் தில் பேசும் அருமையை இங்கு வந்த பிறகு தான் தெரிந்து கொண்டோம். அவர் முதலில் ராஜ்ய சபையில் பேசிய போது ஊசி விழுந்தால்கூட சப்தம் கேட்கும் அளவுக்கு சபையில் நிலைமை, நிசப்தம். ஆனால் இந்தி ஆட்சி மொழியாவதைப் பற்றி அவர் பேசிய பேச்சுக்கு நிகராக அதைத் தான் சொல்லலாம். "எங்களுக்கு எந்த மொழி மேலும் துவேஷம் கிடையாது. ஆனால் எங்கள் பிள்ளைகளுக்குத் தடையாக எதிர்ப்படும் ஒரு மொழி எப்படிப் பரவ முடியும்? நாங்கள்

38ஆம் பக்கப் புதிருக்கு விடை



வேண்டுவதெல்லாம் இந்தி மொழியும் அபி விருத்தி அடைந்து ஆங்கிலத்துக்குச் சமான மாக உயர வேண்டும் என்பதே" என்றதை **இந்தி வெறியர்கள் கூட ஆரவாரிக்காமல் இருக்க முடியவில்லை.**

**டை**ம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளி தழின் சிறப்பு நிருபர் திரு சி. வி. விஸ்வநாத்தின் கருத்து வருமாறு:

மாநிலங்கள் அவையில் தங்குதடை இல்லாமல் - அருவிபோல் இழைந்து - காரண காரிய விளக்கங்களுடன் - அறிவுத் திட்பத் துடன்-அமைதியைக்காட்டி - சாந்தம் தவழ அண்ணாதுரை அவர்கள் முதன்முதலாகப் பேசியபோது எப்படி எப்படியெல்லாமோ நினைத்துக் கொண்டிருந்தவர்கள் எப்படிப் பட்ட ஆச்சரியத்தைப் பெற்றிருப்பார்கள் என்பதைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாது.

அப்போது பிரதமராக இருந்த காலஞ் சென்ற நேரு, அண்ணாதுரையின் அந்தப் பேச்சை அமைதியும் மதிப்பும் காட்டி அக்கறையுடன் கேட்டார்.

அந்த உரையின் மூலம் அண்ணாதுரை அவர்கள் மாநிலங்கள் அவையில் ஒரு முத்திரையைப் பதித்து விட்டார்கள். "வழவழப்பு கிடையாது. ஆனால் கண்டிப்பு உண்டு. பரபரப்பு இருக்காது-ஆனால் பண்பு இருக்கும். ஆரவாரம் கிடையாது. ஆனால் அமைதி இருக்கும். குழப்பம் தெரியாது- ஆனால் தெளிவு இருக்கும்" என்ற ஒரு நிலையைஅவரது பேச்சு ஏற்படுத்தியது முக்கிய சாதனையாகும்.

இனி அவரும் அவரது இயக்கமும் கவனிக்கப்பட வேண்டியவை - அலட்சியப் படுத்தவிட முடியாதவை என்பதை அவரது அந்த ஒரே உரை உலகத்தவர்களுக்கு உணர்த்தி விட்டது.

**தொகுப்பு : த. பி.**

**ஆதாரம் : திருவிளக்கு, தினமணிகதிர் ஆனந்தவிகடன்**



## பெண்ணினம் [illegible] பெருந்தகை

—திருமதி சௌந்தரா கைலாசம்



"மா தவம் செய்தே மண்ணுலகில்
மங்கைய ராகப் பிறந்தாலும்
சோதனை வாழ்வில் தொடர்ந்துவரத்
துன்பம் அடைபவர் எத்தனையோ?

ஆடவர் கையைப் பற்றியதும்
அடிமைக ளாகப் பலர்மாறி
பாடொரு கோடி படுவதுதான்
பார்தனில் நிலவும் பொதுவிதியோ?

விடிந்தும் விடியா நிலையினிலே
வீட்டில் நான்கு சுவர்களுக்குள்
ஒடிந்த மனத்தைச் சுமந்தபடி
உயிரைச் சுமப்பது தலைவிதியோ?

இருட்டுத் திரைக்குள் எப்பொழுதும்
ஏங்கிக் கிடந்து மடிவதுதான்
வருத்தும் வாழ்க்கை நியதியென
மாதர்க் கமைந்த தனிவிதியோ?

பட்டது போதும்! இனிமேலும்
பாவையர் துன்பப் படவேண்டாம்
விட்டது கவலை! எல்லோரும்
விழிப்புற் றெழுந்து வாருங்கள்!

மங்கையர் குலமே! வையத்தில்
மாண்பொடு திகழ்ந்து முன்னேறி
பொங்கிய மகிழ்வில் பூரித்துப்
புகழின் ஒளியைச் சேருங்கள்!

சிந்தனை என்ற கூர்வாளைச்
சீரிய வகையிற் கைக்கொண்டு
முந்தி நடந்து வாழ்நாளில்
மோகன கீதம் பாடுங்கள்"

பெண்மையை உலகில் இவ்வண்ணம்
பேசிட வைத்த பெருந்தகையாய்
உண்மையில் வாழ்ந்த நம்அண்ணா
உலகத் துக்கே வழிகாட்டி!

எத்தனை கதைகள் கட்டுரைகள்
இனிக்கும் உரைகள் இவைகளினால்
நித்தமும் ஒளியை உலகினிலே
நிறைத்த அண்ணா புகழ்வாழ்க!

காலக் கணக்கில் கரையாமல்
காசினி யோரின் நெஞ்சத்தில்
வேலன் அருளால் நம்அண்ணா
வெற்றி நிறைத்து வாழியவே!

# தென்னாட்டுக் காந்தி

மாண்புமிகு
செய்தி-அறநிலையத்துறை
அமைச்சர்

**திரு இராம. வீரப்பன்**

'துன்பம் பிறர்க்கு, நல் இன்பம் தமக்கெனும் துட்ட பனோ பாவம் அன்பினை மாய்க்கும்; அறங்குலைக்கும்; நல் ஆக்கம் தனைக் கெடுக்கும்' என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

தனி மனிதனுக்கு மட்டுமல்ல; இலட்சோப லட்சம் தொண்டர்களாலே — ஏற்கப்படும் தலைவனுக்கும் இது பொருந்தும். பிறருடைய துன்பங்களைத் தன் துன்பங்களாக எண்ணி ஏற்றுக் கொண்டவர்கள்தான் அண்ணல் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா. அவர் போட்டுத்தந்த அஸ்திவாரம்தான் அண்ணாயிசம். அண்ணாயிசத்திற்கு இலக்கியம் கண்டவர்தான் தமிழகத்தின் தனிநாயகர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர்.

ஊரார் தோளில் ஏறித் திருவிழா பார்ப்பது என்டார்களே அந்த வகையில் செயல்படுபவர்களையும் இன்று நாம் பார்க்கிறோம்.

அறப்போராட்டம் என்ற பெயரில் அவர்கள் சட்ட விரிக்கும் ஜாலங்களை நாட்டு மக்கள் அறியாதவர்கள் அல்ல. தன்னுடைய தலைமைக்கு வலிமை தேடிக்கொள்ள, தொண்டர்களைப் பலியிடும் குணத்தின் ரேகையைக்கூடப் பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே நாம் காண முடியாது.

1950ல் நடைபெற்ற, எடுத்துக்காட்டாக, என் தொடர்புடைய சம்பவமொன்றை இங்கே கோடிட்டுக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காலத்தின் கட்டாயத்தினாலே, பேரறிஞர் அண்ணா அவர்களால் தி.மு.கழகம் உருவாக்கப்பட்ட நேரம் அது. 'அறிவகம்', 'அன்பகம்' எல்லாம் அப்போது உருவாகாத காலம். சென்னை தங்கசாலைத் தெருவில் இருந்த 202ஆம் எண்ணுள்ள வாடகை இல்லம்தான் கழக அலுவலகமாகப் பயன்பட்டு வந்தது.



காந்தியடிகள், பேரறிஞர் அண்ணா ஆகியோர்.

உத்தமர் காந்தியடிகளார் நடத்திய போராட்டங்களெல்லாம் அன்பு வழியிலே, அற வழியிலே நடத்தப்பட்ட சாத்வீகப் போராட்டங்களாகும். நாடு விடுதலை பெறவும், நாட்டு மக்கள் நலம் பெறவும் தொடங்கிய போராட்டத்திலெல்லாம் அவர் தன்னைத் தானே வருத்திக் கொண்டாரே தவிர, தாவே பெருந்துன்ப துயரங்களை வலுவில் ஏற்றுக் கொண்டாரே தவிர தனக்காக மற்றவர்களை தொண்டர்களை பலிகொடுப்பதை அவர் ஏற்றுக் கொண்டாரில்லை. பிறர் மூட்டும் தீயில் குளிர்காய அந்தப் பெருந்தகையின் மனம் ஒரு போதும் சம்மதித்ததில்லை.

அந்த அண்ணலின் அடியொற்றி இயக்கம் நடத்திய ஏந்தல்தான்



அங்கே நடைபெற்ற செயற்குழு முடிவின்படி இணங்க சென்னைக்கு வரும் இலாகா இல்லாத மத்திய அமைச்சர் மூதறிஞர் இராஜாஜி அவர்கட்குக் கறுப்புக்கொடி காட்டுவதெனச் சென்னை மாவட்டக் கழகம் முடிவெடுத்தது.

24-10-50 அன்று காலை 9 மணியளவில் கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகே உள்ள ஒய்.எம்.சி.ஏ. மாணவர் நகரம் திறப்புவிழாவில் கலந்து கொள்ள வருகிறார் ராஜாஜி. அவர் வரும் போது கறுப்புக்கொடி காட்டத் திரண்டு நின்ற பல்லாயிரக் கணக்கான தொண்டர்களில் நானும் ஒருவன். நிமிடத்திற்கு நிமிடம் அங்கே எழுச்சி வேகம் களைகட்டலாயிற்று.

ராஜாஜி வருவதற்கு இன்னும் அரைமணி நேரம் இருக்கலாம்.



அந்தச் சமயத்தில், காவல் துறையினர் தொண்டர்களைக் கலைந்துபோகச் சொன்னார்கள். தமது சொல் எடுபடாது போகவே கூட்டத்தைக் கலைக்கக் கண்மூடித்தனமாகத் தாக்கத் தொடங்கினார்கள்.

திரண்டிருந்த மக்கள் கூட்டம் நாலாபுறமும் சிதறிட, கறுப்புக் கொடியேந்தி நின்ற எங்கள் அணியின் முன்வரிசையில் இருந்த பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள். காவல் துறை அதிகாரியின் வெறித்தனமான தாக்குதலுக்கு ஆளாகி, நடக்கக்கூட முடியாத நிலையில் கீழே சாய்ந்தார்.

இவ்வளவுக்கும் பிறகு - குறிப்பிட்ட அந்த விழாவிற்குப் போய் விட்டு ராஜாஜி திரும்பும்போது, பேரறிஞர் அண்ணாவின் அன்புக் கட்டளையை ஏற்றுச் சென்ற நாங்கள் ராஜாஜிக்குக் கறுப்புக் கொடி காட்டினோம். நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப் பட்டார்கள்.

இரத்தக்காயம் ஏற்றிருந்த பன்மொழிப்புலவர் அப்பாதுரையாரைத் தூக்கிவந்து, தங்க சாலை வீதியிலே இருந்த 202ம் இல்லத்தில் கழக அலுவலகத்தில் அண்ணா அவர்கள் முன் கிடத்தினார்கள்.

பன்மொழிப் புலவரின் நிலைமையைக் கண்ணுற்ற அண்ணா அவர்கள் கலங்கிப்போனார்; கண்கள் ஊற்றுப் பெருக்காயின. 'நீங்கள் ஏன் இங்கே போனீர்கள்? உங்களைப் போன்றவர்களை அடிபடவைத்து வளரும் நிலைமையிலா கழகத்தை நடத்துகிறேன்'? எனக் கண்ணீர் வடித்த காட்சி இன்னும் என் கண்முன் நிழலாடுகிறது.

உடனேயே அவருக்குச் சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அந்த உத்தமத் தலைவனின் அன்புள்ளத்தை, மனிதாபிமானத்தை, அற நெஞ்சத்தை இப்



போது நினைத்தாலும் மேனி சிலிர்க்கிறது எனக்கு.

அண்ணல் காந்தியடிகள் மட்டுமல்ல; அண்ணா அவர்களும் அரசியலானாலும் வேறெந்தப் பிரச்சினையானாலும், அதுபற்றி மனிதாபிமானத்துடனேயே சிந்தித்தார். அறவழியிலேயே செயல்பட்டார். யாரைப் பலி கொடுத்தும் எந்தவித லாபத்தையும் பெறும் நினைவு அண்ணா அவர்களுக்கு இருந்ததே இல்லை. டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அண்ணாயிசத்தின் அடிப்படை அந்தத் தத்துவத்தை உள்ளடக்கியது தான்.

கறுப்புக்கொடி காட்டுவதென அன்று கழகம் எடுத்த முடிவைச் செயல்படுத்தச் சென்ற எங்கள் மீது காவல்துறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அந்த நேரத்திலே கூட நாங்கள் கலவரம் செய்யவில்லை. அதுதான் அண்ணா எங்களுக்குக் கற்றுத்தந்த அறவழிப்பாடம்.

கறுப்புக்கொடி காட்டுவதானாலும் வேலை நிறுத்தமானாலும் அறவழிப் போராட்டம் என்ற பெயரில் கலவரம் செய்வதை, பேருந்துகளைச் சேதப்படுத்துவதை, பேருந்துகளிலே பயணம் போவோரின் உயிருக்கு உலை வைப்பதை, கண்ட இடத்திலும் கல்வீச்சில் இறங்குவதை, இப்படி எதைச் செய்தாவது வெற்றிபெற வேண்டுமென்பதை அண்ணா அவர்கள் விரும்பியதில்லை. யார் தலை உருண்டாலும் சரி; தம் தலையில் கிரீடம் ஏறினால் போதும் என்று ஒரு போதும் நினைத்ததில்லை. வன்முறைக்கு ஆதரவளிப்பதே நன்முறை என்று செயல்பட்டதுவில்லை.

இத்தகைய அரசியல் பண்புகளே அண்ணா அவர்களைத் தென்னாட்டுக் காந்தி என உலகு புகழ உயர்த்தியது.

அத்தகைய பண்புக்கோர் உதாரணம்தான் பன்மொழிப் புலவர் தொடர்பான அந்த நிகழ்ச்சி.

### திரு.வி.க. விருது — 1984

**1979 முதல் ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த எழுத்தாளருக்கு திரு. வி. க. விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்குரிய (1984) விருது, புகழ்பெற்ற எழுத்தாளர் திரு கோவி. மணிசேகரன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.**

அதற்கெல்லாம் மாறுபட்ட வகையிலே நடப்பதுதான் அரசியல் என வகுத்துக் கொண்டு, இன்றைக்குச் சிலர் செயல்படுவதைப் பார்க்கிறோம். மக்கள் மன்றம் அவர்களை அடையாளம் கண்டு கொள்ளாமல் இல்லை.

போராட்டத் திட்டமானாலும் கூட, மற்றவர்கள் நலம்பெறத் தன்னை வருத்திக்கொண்ட காந்தியடிகளாரின் வழியிலே- பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியிலே அறவழியில் செயல்படுவதுதான் அண்ணாயிசம். அந்த அரிய அன்புத் தத்துவத்தை நமக்களித்த பெருமை டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடையதல்லவா!

பேரறிஞர் அமரர் அண்ணா அவர்களுக்குப் பவள விழாக் காணும் இந்நாளில், இன்னும் எத்தனை யெத்தனையோ நிகழ்வுகள் என் நெஞ்சில் நிழலாடுகின்றன. 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற வகையிலே இந்த ஒன்றைச் சொல்லியிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா புகழ் வாழ்க... அவர் வழி ஆட்சி நடத்தும் டாக்டர் புரட்சித் தலைவர் புகழ் ஓங்குக! என்று கூறி வணங்குகிறேன்.

**தமிழரசு**

**1-10-84 இதழில்**

**பேரறிஞர் அண்ணாவின் துணைவியார்**

**திருமதி இராணி அண்ணாதுரை**

**அளித்த பேட்டிக் கட்டுரை**

**இடம் பெறுகிறது.**












# நாவல்பட்டு - அண்ணாநகர்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பொது மக்களுக்கு அருந்தொண்டாற்றி வருகிறது. சென்னை நகரிலும், ஏனைய மாவட்டத் தலை நகர்ங்களிலும் குடியிருப்புகளை உருவாக்கி, நடுத்தரப் பிரிவினரின் நலனுக்குப் பேருதவி புரிந்துவருகிறது.

திருச்சி மாவட்டத்தில் நாவல்பட்டுப் பகுதியில் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் 600 ஏக்கர் மொத்தப் பரப்பளவில் 117 ஏக்கரில் கட்டப்பட்டுள்ள 898 வீடுகளையும், 463 வீட்டு மனைகளையும் கொண்ட அண்ணாநகரை உருவாக்கியுள்ளது. 1982ல் பணி தொடங்கப்பட்டது. இது, திருச்சி மாவட்டத்தில் மிகப்பெரிய வீட்டுவசதித் திட்டமாகும்.

இங்குள்ள தெருக்களின் மொத்த நீளம் 21 கிலோமீட்டர்; சாக்கடைகளின் மொத்த நீளம் 17.5 கிலோமீட்டர்; இங்கு அமைக்கப்பட்டுள்ள குடிநீர்க் குழாய்களின் மொத்த நீளம் 16.5 கிலோ மீட்டர் ஆகும். இரவைப் பகலாக்கத் தெருவிளக்குகள் 120 அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள தெருக்கள் யாவும் தார் போடப்பட்டு, தூய்மையாக இருக்கின்றன.

இந்த மாபெரும் குடியிருப்பை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15-9-1984ல் திறந்து வைத்தார்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி - புரட்டாசி 15
மலர் : 15 இதழ் : 7
1-10-1984

# மும்முடிச்சோழன் முடிசூட்டு விழா



தஞ்சைத் தரணியில் தமிழ் முழக்கம்! நெஞ்சை அள்ளும் நிகழ்ச்சிகள்! கண்ணைக் கவரும் கவின்மிகு காட்சிகள்! எண்ணம் மலரும் எழில்மிகு மாட்சிகள்!

1984 செப்டம்பர் திங்கள் 16, 17-ஆம் நாள், சோழ மாமன்னன் இராசராசனின் ஆயிரமாவது ஆண்டு முடிசூட்டு விழா சீரும் சிறப்புமாகச் சிந்தையெல்லாம் கவரும் வண்ணம் நடந்தது.

விழாவினையொட்டித் தஞ்சை மாநகரே விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்குப் பார்த்தாலும் அலங்கார வளைவுகள், எப்பக்கம் திரும்பினாலும் கட்டடங்களில் கண் கவரும் மின் விளக்குகள், ஆடவர் மகளிர் குழந்தைகள் என இரவெல்லாம் கூடத் தெருக்களில் கூட்டம். ஆம். வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீதியெல்லாம்!

முதல் நாள், செப்டம்பர்த் திங்கள் 16ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை காலை, தஞ்சை விளையாட்டுத் திடலில் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல், கடலென மக்கள் வெள்ளம் கரைபுரள, சோழமாமன்னன் இராசராசனின் ஆயிரமாவதாண்டு முடிசூட்டு விழா தொடங்கியது.

திரு சேக் சின்ன மௌலானா நாயன இசை காற்றிலே கலந்து காதுக்கு இனிமை தர, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய மேடையில் மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் வீற்றிருக்க இனிய விழா தொடங்கியது.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர், "சோழப் பேரரசின் வீரத்தையும் திரத்தையும் நினைவுபடுத்த — கப்பற்படையுடன் அவன் வெற்றி கொண்டதை நினைவுபடுத்த இந்தப் பெருவிழா நடக்கிறது. அவன் சிற்பம், நாட்டியம், ஓவியக்கலையினை வளர்த்தான்; அறிவுத் திறனை, பண்பாட்டுத் திறனை நிலைநாட்டினான். அவனுக்கு-சோழமாமன்னன் இராசராசனுக்கு வீரம் விளைந்த மண்ணில் விழாக் கொண்டாடுகிறோம்" என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

"அனைவரின் பாசத்துக்கும் பெருமைக்கும் உரிய இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் இந்த விழாவைத் தொடங்கி வைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.






"மன்னர் பரம்பரையை ஒழித்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள், மன்னனாக இருந்த இராசராசனின் 1000-வது முடிசூட்டு விழாவுக்கு வருவது என்றால் அதன் ஆழ்ந்த கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

"மன்னர் பரம்பரையில் வந்த இராசராச சோழன் நிர்வாக அமைப்பில் ஜனநாயகத்தை உருவாக்கினான். தாய்க்குலத்தின் பிரதிநிதியாக-இந்தியாவில் 70 கோடி மக்களின் பிரதிநிதியாகப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் இந்த விழாவில் கலந்து கொள்வது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடியது.

"எத்தனையோ பொறுப்புகள் இருந்தும் அவர் இந்த ஒரு நிகழ்ச்சிக்காக மட்டும் வந்து பெருமைப்படுத்துவது அவர் எந்த ஒரு சாதி, மதம், கட்சிக்கு மட்டும் சொந்தம் இல்லை என்பதைக் காட்டுகிறது".

விழாவில், மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக அரசின் சார்பில் கலை வேலைப்பாடு மிக்க தஞ்சாவூர்த் தட்டினை அன்பளிப்பாக வழங்கினார்.

மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் சோழ மாமன்னன் இராசராசனின் ஆயிரமாவதாண்டு முடிசூட்டு விழாவைத் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்திய நாகரிகத்திற்குத் தென்னிந்தியாவின் பங்கு குறித்துப் பேச வேண்டுமாயின் பல மணி நேரம் தேவைப்படும். பல நூற்றாண்டுகளாக வட நாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இடையே வணிகம் மட்டுமல்லாது கருத்துப் பரிமாற்றமும், கலை, பண்பாட்டுப் பரிமாற்றமும் நடைபெற்று வந்துள்ளன.

"நாட்டிலுள்ள புனிதத் தலங்கள் ஏழில், காஞ்சிபுரமும் ஒன்றாகக் கருதப்படுகிறது. புனித நதிகளெனப் போற்றப்படும் ஆறுகள் ஏழில், காவிரியும் ஒன்றாகக்கருதப்படுகிறது. குருநானக் அவர்கள் இராமேஸ்வரத்திற்குப் புனித யாத்திரை மேற்கொண்டதாகச் சீக்கிய வரலாறு கூறுகிறது. கன்னியாகுமரியின் எழில்மிகு காட்சிகளை எடுத்துரைத்தால்தான் இந்திய வரலாறு முழுமை பெறும்.

"பண்டைய தமிழ் மன்னர்களும் அவர் வழி வந்தோரும் இந்திய நாட்டின் வரலாற்றிற்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். இவர்களில், பாண்டிய, சோழ, பல்லவ குல மன்னர்கள் குறிப்பிடத்தக்கவராவர்.

"சோழ அரசர்களிலேயே தலைசிறந்த அரசரான இராசராச சோழனின் ஆயிரமாவது ஆண்டு முடிசூட்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்காக நாம் இன்று இங்கு குழுமியுள்ளோம்.

"இராசராச சோழன் தமிழக அரசர்களிலேயே மிகவும் வீரம் மிக்கவர்; சிறந்த ஆட்சித் திறமை நிறைந்தவர். சோழ மாமன்னன் இராசராசனின் ஆட்சிப் பெருமைகளை எடுத்துக் கூறும் இந்த நல்ல நேரத்தில், சோழ மன்னர்களின் ஆட்சிக் காலம் முழுவதும் அவர்கள் ஆற்றிய அருமை பெருமைகளை நான் புகழ்ந்துரைக்க விழைகிறேன், அவர்கள் 350 ஆண்டுக் காலம் மாட்சிமையுடன் ஆட்சி நடத்தி அருஞ்செயல் புரிந்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"தமிழகப் பண்பாட்டுவரலாற்றில், சோழர் காலம் பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. இக்காலத்தில்தான், கம்ப இராமாயணம் இயற்றப்பட்டது. திருக்குறள் போன்று கம்ப இராமாயணமும் ஓர் இலக்கியக் கருவூலமாகும். சோழர் காலத்துச் சிலைகள் இந்தியக் கலை உலகிலேயே, ஏன் உலகத்தின் கலை வரலாற்றிலேயே மிகச் சிறந்தவையாகும்.

"சோழர்களின் ஆட்சி சீராக அமைந்து, வேளாண்மையும் வாணிபமும் நன்கு நடைபெற்றதால்தான் கலைகள் உன்னத

சோழனும், அவர்மகன் இராசேந்திர சோழனும் வலிமை மிக்க கடற்படை வைத்திருந்ததோடு, கடல் வாணிபத்திலும் சிறந்து விளங்கினர்.

''சோழர் காலத்தில் பொறியியல்கலை மிக உயர்ந்த நிலையில் விளங்கியது. இங்குள்ள பெரிய கோயில் தனது அழகினால் மட்டுமல்லாமல், அக்காலத்திய பொறியியல் திறனுக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அக்காலத்திய பாசனமுறை குறிப்பாக கல்லணைக் கால்வாய்த் திட்டம், நம் நாட்டின் நெற்களஞ்சியங்களுள் ஒன்றாகத் தஞ்சாவூர் மாவட்டத்தை ஆக்கியது. புதுமைகளில் ஆர்வம் காட்டிய இராசராச சோழன், விரிவான நில அளவைத் திட்டமொன்றை வகுத்து, நில அளவைப் பணியை மேற்கொண்டு, பெரிய அளவிலான வருவாய் மண்டலங்களை உருவாக்கினான். ஆனால், அதே சமயத்தில் அப்பொழுதிருந்த அதிகார அமைப்புகளை, ஓரளவு தன்னாட்சி உரிமை பெற்ற உள்ளாட்சி மன்றங்களாக உருவாக்கியது இவனது அறிவுடைமையைக் காட்டுவதாகும்.



இராசராச சோழன் தன் மரபின் பெருமையைக் கட்டிக் காப்பதில் ஆர்வம் காட்டிய போதிலும் தன் நாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து புதிய கருத்துக்கள் வருவதற்குத் தடை எதுவும் விதிக்கவில்லை. சுமத்ரா நாட்டு அரசர் சோழ நாட்டில் புத்த விகாரங்களை அமைக்க அனுமதியளித்தது மட்டுமின்றி அவற்றிற்குக் கணிசமான அளவு மானியங்களையும் அளித்தார். சோழர்கள் காட்டிய சகிப்புத் தன்மை நமக்கெல்லாம் சிறந்த பாடமாக விளங்குகிறது.

''தமிழர்கள் பெருமைமிக்க தங்களுடைய கடந்த கால வரலாற்றினும் சிறந்ததோர் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். நம் திட்டங்களும் பணிகளும் செம்மையாகச் செயல்படுத்தப்படுவதன் வாயிலாக வளமான கிராம மறுமலர்ச்சிக்கு வழி ஏற்படுவதுடன், தொழில் வளர்ச்சியும் நன்முறையில் சிறந்தோங்கி வருகிறது.



''தஞ்சை மாநகரம் இசை, கவின்கலை, கட்டடக் கலை ஆகிய துறைகளில் தனக்கெனத் தனிச்சிறப்பிடத்தைக்காலங்காலமாக வகித்து வந்துள்ளது. கருநாடக இசையின் மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகபிரும்மம் வாழ்ந்த இடம் தஞ்சையின் அருகே அமைந்துள்ளது. தஞ்சையை ஆண்ட மகாராட்டிர அரசர்கள், காண்போர் வியக்கத்தக்க நூலகம் ஒன்றை இங்கே அமைத்துள்ளனர். நூலகத்தில் தொன்மை வாய்ந்த ஓலைச் சுவடிகளும் இலக்கியச் செல்வங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

''பல்வேறு இயல்களில் வல்லுநர்களான தமிழர்கள் உலகெங்கும் பரவியுள்ளனர். அவர்களின் உழைப்பும் திறமையும் மலேசியா, மொரீஷியஸ் தீவு, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, தென்னாப்பிரிக்கா, மேற்கிந்தியத் தீவு ஆகிய நாடுகளின் உயர்வுக்கு உறுதுணையாய் அமைந்துள்ளன. அவர்கள் எங்கு சென்றாலும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நல்லுணர்வுடன் வாழ்கின்றனர்.

''பெரும்பான்மையான இடங்களில் அவர்கள் நல்ல நிலையில் நடத்தப்படுகின்றனர். உள்ளூர் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களுடன் இரண்டறக் கலந்து பணிபுரிகின்றனர். ஆயினும், சில இடங்களில் அவர்கள் சொல்லொணாத் துன்பம் அனுபவித்து வருகின்றனர். தங்கள் உற்றார் உறவினர்களையும், பிழைப்பையும் இழந்து பரிதவிக்கும் தமிழர்கள துன்பம் கண்டு நாம் இன்று வருந்துகிறோம். அவர்களுடைய துன்பத்தில் நமக்குப்பங்குண்டு. அவர்களுக்குப் பாதுகாப்பும், குடிமகனுக்குரிய 'நீதியும் வழங்கப்படவேண்டுமென்ற அவர்களின் கோரிக்கைக்கு நம்முடைய ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவிக்க விழைகிறோம்.

"இராசராச சோழன் மக்களைப் புகழேணியின் உச்சிக்கு அழைத்துச்சென்று நமது பண்பாட்டிற்கு வலிவும், பொலிவும் ஊட்டினார். அவருக்கு அஞ்சலி செலுத்துகையில் அவர் காலத்தைப் பொற்காலமாக்கிய கவிஞர்கள், ஓவியர்கள், கைவினைஞர்கள், போர் வீரர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான மக்கள் ஆகியோருக்கும் நாம் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"வளமிக்க சமுதாயத்தை உருவாக்குவதில் இந்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளில் தமிழ்நாட்டு இளைஞர்களின் பங்கைப் பெரிதும் எதிர்பார்க்கிறோம். ஒரு சமுதாயம் அல்லது மாநிலம் முன்னேற வேண்டுமானால் அது இன ஒற்றுமையை, தேசிய ஒருமைப்பாட்டு உணர்வையும் கொண்டு விளங்கிட வேண்டும் என்பதை நாம் மறந்து விடமுடியாது.

''இலங்கையில் சிறுபான்மையினரான இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இந்தக்கொடுமையை உலகம் சகித்துக்கொள்ளாது. இலங்கைத் தமிழர் பிரச்சினையால் உலகம் முழுவதும் கவலையில் ஆழ்ந்துள்ளது. இந்தப் பிரச்சினை மனித உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். ஆனால், இது சம்பந்தமாக நாம் பேசும் பேச்சும், செய்யும் செயலும் இலங்கையில் எந்தப் பகுதியிலும் வாழும் தமிழ் மக்களுக்கு அபாயங்களை ஏற்படுத்தி விடக்கூடாது.

''நாம் ஒற்றுமையாக இருந்தால்தான், வெளிநாடுகளில் தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும் உட்பட்டிருக்கும் நமது சகோதர மக்களுக்கு உதவி செய்ய முடியும். நம்முடைய



மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட விழாப் பந்தல்




திருக்கோயில் ஓதுவார்களின் திருமுறைப் பண்ணிசை.



ஊர்வலத்தின் ஒரு பகுதி



கவின்மிகு கலை நிகழ்ச்சிகள்.



அருங்காட்சியகத்தை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பார்வையிடுகிறார்.

ஒற்றுமையும், ஒருமைப்பாடும் உறுதிப்படாத நிலையில் நாம் என்ன செய்தாலும், எந்த நடவடிக்கை மேற்கொண்டாலும் அது வெற்றி அளிக்காது''.

மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் ஆங்கில உரையை, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் தமிழில் மொழி பெயர்த்தார். விழா முடிவில், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் நன்றி நவின்றார்.

விழா முடிவுக்குப் பிறகு, மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தஞ்சைப் பெரிய கோவிலுக்கு வருகை தந்தார். அங்குப் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

பெரிய கோவிலின் உள்ளே இராசராச சோழனின் ஐம்பொன் சிலை (உற்சவ மூர்த்தி) உள்ளது. அதற்குக் காஞ்சி காமகோடி பீடம் சார்பாக கர்னல் திரு ஆர். சுப்பிரமணியம் அளித்த 300 கிராம் எடையுள்ள ரூ. 60 ஆயிரம் மதிப்புள்ள தங்கக் கிரீடத்தை மாண்புமிகு பிரதமர் அவர்கள் சூட்டினார்.

## இராசராசன் அருங்காட்சியகத் திறப்பு விழா

அன்று பிற்பகல் 3 மணி அளவில், தஞ்சைக் கலைக்கூடத்தில், இராசராசன் அருங்காட்சியகத் திறப்பு விழா நடந்தது.

தொல்பொருள்துறைஇயக்குநர் (பொறுப்பு) திரு நடன காசிநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில்,''தஞ்சைப் பெருவுடையார் கோயிலை இராசராசன் ஆறு ஆண்டுகளில் கட்டி முடித்திருக்கிறான். அவன் சிறந்த சிவனேசச் செல்வனாகவும் விளங்கியிருக்கிறான்'' என்றார்.

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆர். கோவேந்தன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''காணக் கிடைக்காத பொருள்களெல்லாம் ஒன்று சேர்ந்த அருங்காட்சியகம் இது'' என்றார்.

தொல்பொருள் ஆய்வுத்துறை சார்பில் தயாரிக்கப்பட்ட நூல்களை, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் அறிமுகம் செய்து வைத்துப் பேசுகையில், '' தமிழ்நாட்டில் 30,000 கோயில்கள் உள்ளன. அவற்றில் 25,000 கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் 5000 கல்வெட்டுக்களே அச்சு முகத்தைக் கண்டுள்ளன'' என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நூல்களை வெளியிட்டார். அவற்றைப் பட அதிபர் திரு ஜி. உமாபதி பெற்றுக் கொண்டார். பிறகு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்துப் பேசினார்:

''ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழக அரசு அருங்காட்சியகம் ஏற்படுத்த முடிவு செய்துள்ளது. அந்த அடிப்படையில் தஞ்சைக் கலைக் கூடத்தில் மாமன்னன் இராசராச சோழன் பெயரில் அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டையில் உள்ள அருங்காட்சியகம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

விழாவிற்கு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு ஆளுடையபிள்ளை இ.ஆ.ப., அரும்பொருட்காட்சியக இயக்குநர் திரு அரிநாராயணா, பேராசிரியர் டாக்டர் சி. இ. இராமச்சந்திரன், திரு சோமலெ, தஞ்சை இளவரசர் திரு. இராசாராம் ராசாசாகிப் ஆகியோர் பேசினர்.

புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள இராசராச சோழன் அருங்காட்சியகத்தில் 20க்கும் மேற்பட்ட சோழர்காலக் கற்சிற்பங்களும், 15 செப்புத் திருமேனிகளும் வைக்கப்பட்டுள்ளன. எழுத்துப் பொறித்த பஞ்சமுக வாத்தியம், பறை, சங்கு முதலிய சோழர் கால இசைக் கருவிகள் இடம் பெற்றுள்ளன. இராசேந்திர சோழனால் வெளியிடப் பெற்ற திருவாலங்காட்டுச் செப்பேடுகள் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பெரியவர்கள், இளைஞர்கள் எல்லாரும் பார்த்து மகிழத்தக்க அரும் பெருங்காட்சியகமாக இது திகழ்கிறது.

## ஆய்வரங்கம்

அன்று மாலை 5 மணியளவில் தஞ்சைக்காவலர் பயிற்சித்திடலில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்டமான பந்தலில், அரசுக் கலைஞர் டாக்டர் சீர்காழி கோவிந்தராசன் குழுவினரின் இன்னிசையுடன் ஆய்வரங்கம் தொடங்கியது.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகையில், 'கல்வெட்டுக் கலையைப் படைத்துக் காட்டியவன்' என இராசராசனைப் புகழ்ந்தார்.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் முன்னிலை வகித்துப் பேசுகையில், 'கடல் கடந்தும் பல நாடுகளை வெற்றிகண்டான். நிர்வாகத் திறமையில் ஈடு இணையற்றவனாக விளங்கினான். தமிழை, சமயத்தை வளர்ப்பதிலே - ஆலயம் எழுப்புவதிலே கவனம் செலுத்தியது, மட்டுமல்லாமல், நாட்டு மக்களுடைய அன்பைப் பெற்றவனாகவும் திகழ்ந்தான்'' என்றார்.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் பேசுகையில், ''வாரியம், வாரியத்தார் என்ற சொற்களெல்லாம் சோழர்காலக் கல்வெட்டுக்களிலிருந்து வந்தவையாகும். சோழர் காலத்தில் எந்தெந்த ஊர்கள் இருந்தனவோ அவற்றின் பெயர் மாற்றம் பெற வேண்டும்; கும்பகோணம் குடமூக்காக வேண்டும்; சிதம்பரம் தில்லையாக வேண்டும்; விருத்தாசலம் முதுகுன்றமாக வேண்டும்'' என்றார்.



முத்தமிழ்க்காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் பேசுகையில், ''தமிழக வரலாறு எழுதப்பட வேண்டும். கங்கைக் கரை நாகரிகத்தைவிட, காவிரிக் கரை நாகரிகம் மிகப் பெரியது என்பதை உலகுக்கு உணர்த்திட வேண்டும்'' என்றார்.

டாக்டர் சிவகாமசுந்தரி பேசுகையில், ''இராசராசன் 27 சிறப்புப் பெயர்களையுடையவன். அவற்றிலே ஒன்று ஜனநாதன். அவன் மக்கள் தலைவனாக விளங்கினான்.'' என்றார்.

திரு தி. நா. இராமச்சந்திரன் இராசராசன் சிறப்பியல்புகளை வெகுவாகப் புகழ்ந்துரைத்தார்.

டாக்டர் கோவி. மணிசேகரன், இராசராசன் எல்லாக் கலைகளிலும் வல்லவர். அவர் ஒரு அருமையான நடிகர்'' என்றார்.

டாக்டர் க.த. திருநாவுக்கரசு பேசுகையில், ''பெரிய கோயிலுக்கு அன்றாடம் 135 வாழைப் பழம் தேவைப்பட்டது. இதற்கொரு அறக்கட்டளையே இராசராசன் அமைத்தான். அதற்கு 12 பொற்காசுகளை முதலீடாகச் செய்தான்'' என்றார்.

திரு குமரி அனந்தன் பேசுகையில் ''தியாகிகளுக்கு நிலம் கொடுத்த முதல் தமிழ்மன்னன். சிற்றூர்களே அவர் ஆட்சியின் அடித்தளம். அங்குத் தேர்தல் நடந்தது. அவன் காலத்தில் ஆலயமே வங்கியாக வேலை செய்தது'' என்றார்.

திரு திருக்குறளார் வீ. முனிசாமி பேசுகையில், ''ஒரு பெரிய வரலாறு படைத்திருக்கிறோம. இதை இளைஞர்களுக்கு உணர்த்த வேண்டும். பிற துறைகளில் உள்ளவர்களும் தமிழ் படிக்க வேண்டும்; தமிழ் உணர்ச்சி பெற வேண்டும்'' என்றார்.

திரு பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பேசுகையில், ''இராசராசன் அரும்பெருங் கலைஞன். மிகச்சிறந்த ஆன்மீகவாதி. அவன் அரண்மனையின் அடிச்சுவடுகூட இல்லை. ஆனால் அவன் வெற்றிப் பெருமிதமாக எல்லார் உள்ளத்தையும் கவரும் கோயில் கிடைத்திருக்கிறது'' என்றார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''இராசராசன் மாமன்னனாக இருந்தபோதிலும் குடிமக்களைத் தழுவி மக்களாட்சி நடத்தியவன். அதன் காரணமாகத் தன் பெயரைச் ''சனநாதன்'' என்றே அவன் பொறித்துக் கொண்டான். குடிமக்களுக்காக ஆட்சி நடத்திய மாமன்னனின் முடிசூட்டு விழாக் கொண்டாடும் நாளில் நமது நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டுள்ளது. ஜனநாயகத்திற்கு உயிர் வந்திருக்கிறது.''



திரு க.த. திருநாவுக்கரசுக்குப் பொன்னாடை போர்த்துகிறார் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் அருகில் உள்ளார்.

இராசராசன் பற்றிப் பேராசிரியர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு எழுதிய ஆங்கில நூலை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டு, நூல் ஆசிரியருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். நூலின் முதல் பிரதியை சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

விழா இறுதியில் தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு பெரியாண்டவன் நன்றி நவில, நடராஜ் சகுந்தலா குழுவினரின் நாட்டிய நாடகத்துடன் முதல் நாள் நிகழ்ச்சி இனிதே முடிந்தது.

## இரண்டாம் நாள் நிகழ்ச்சி

சோழ மாமன்னன் இராசராசனின் ஆயிரமாவதாண்டு முடிசூட்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் நடந்தது.

அன்று காலை, தஞ்சைக்காவலர் பயிற்சித் திடலில், திருவையாறு அரசுக் கல்லூரி மாணவர்களின் நாயன நல்லிசையுடன் விழா தொடங்கியது. திருக்கோயில் ஓதுவார்கள் திருமுறைப் பண்ணிசை இசைத்தார்கள். நினைவுக் கலையேந்தல் திரு இராமையா அவர்களின் திருக்குறள் பதின் கவனக நிகழ்ச்சி எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தியது.

பிறகு கவியரங்கம் நடந்தது. செய்தி - மக்கள் தொடர்புத் துறைத்துணை இயக்குநர் திரு வெ. நாமதேவன் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். ஆர். இராதா அவர்களும், இராசராசன் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டினார்கள்.

கருத்துமிகு கவியரங்கிற்கு அரசுக் கவிஞர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தலைமை வகித்தார். அருண்மொழித் தேவரின் அரும்பணிகள் என்னும் பொதுத் தலைப்பில் கவிஞர் முத்துலிங்கம் (கலைத்தொண்டு), கவிஞர் முத்துராமலிங்கம் (தமிழ்த் தொண்டு), கவிஞர் நா. காமராசன் (வெற்றிச்சிறப்பு), கவிஞர் முருகுசுந்தரம் (திருமுறைப்பணி), கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் (ஆட்சி நலம்), கவிஞர் பொன்னடியான் (சமுதாயப்பணி) கவிஞர் தங்க அன்புவல்லி (சமயத் தொண்டு), கவிஞர் அறிவுமதி (புகழ் நலம்) ஆகியோர் கருத்து

மழை பொழிந்தனர்.

அன்று மாலை திரு சிதம்பரம் செயராமன் குழுவினரின் இன்னிசை எல்லாரையும் கவர்ந்தது. பிறகு பட்டி மண்டபம் நடந்தது. தமிழ் வளர்ச்சி இயக்குநர் சிலம்பொலி திரு சு. செல்லப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், "பெரிய கோயிலில் வேதவிற்பன்னர்கள், மத்தளம் கொட்டுவோர், இசை பாடுவோர் எல்லாம் பணி புரிந்தார்கள். எல்லாருக்குமே கூலியாக நெல் கொடுக்கப்பட்டு வந்தது. குறைந்த கூலி 50 கலம் நெல், அதிகக் கூலி 200 கலம் நெல்'' என்றார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தொடக்கவுரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், ''இராசராசன் அரசனுக்கு அரசனாக விளங்கியவன். களங்கம் எதுவும் கலவாத வரலாற்றுச் சிறப்புமிக்கவன். மிகப் பெரிய பேரரசை உருவாக்கிக் காட்டியவன். திருக்குறளில் மன்னனுக்குரிய இலக்கணங்கள் என்னென்ன சொல்லப்படடிருக்கின்றனவோ அவற்றுக்கெல்லாம் இலக்கியமாகத் திகழ்ந்தவன்'' என்றார்.

பட்டி மண்டப நடுவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசுகையில், ''தமிழ்நாட்டின் மூன்று அரசுகளை இணைத்து ஒரு அரசாக நிறுவியவன் இராசராசன். அவன் மிகப் பெரிய கடல் அரசனாகத் திகழ்ந்தான். அவன் தொடாத துறையே இல்லை'' என்றார்.

மாமன்னன் இராசராசனின் புகழுக்குப் பெரிதும் காரணம் அரசியல் மாட்சியா? கலை மாட்சியா? என்னும் தலைப்பில் அரசியல் மாட்சியே என்னும் அணியில் டாக்டர் தெ. ஞானசுந்தரம், பேராசிரியர் தி. இராசகோபாலன், திரு. த. பெரியாண்டவன், திருமதி நிர்மலா சுரேஷ் ஆகியோரும், கலை மாட்சியே என்னும் அணியில் பேராசிரியர் பா. நமசிவாயம், திரு அ. அறிவொளி, திரு இராமலிங்கம், திருமதி உமையாள் முத்து ஆகியோரும் வழக்காடினர்.

பிற்பகல் பிரம்மாண்டமான ஊர்வலம் நடந்தது. ஊர்வலம் போகும் வழியெல்லாம் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.



அன்று மாலை நிறைவு விழா நடந்தது.

மாண்புமிகு இந்தியத்தலைமை அமைச்சர் அவர்களால் பொற்கிரீடம் சூட்டப் பெற்ற இராசராசன் திருவுருவச் சிலை பெரிய கோயிலிலிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, விழாப் பந்தலில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இடத்தில் வைக்கப் பட்டது. அந்த அழகிய சிலைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாலை யணிவித்தார்

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு தா. வீராசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது பெரியகோவில்' என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் ''வீழ்ச்சியுற்ற தமிழகம் மீண்டும் எழுச்சி பெற எடுத்துக்காட்டும் விழா தான் இந்த விழா'' என்று கூறி தஞ்சைப் பெரிய கோயிலில் பணியாற்றிய பணியாளர்கள் பற்றிய பட்டியலையும் சொல்லி, 'இது வரை 631 பேருக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. 157 கலைஞர்களின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 107 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது மாதம் ரூ. 150 சிறப் பூதியம் பெறும் கலைஞர்கள்

(41-ஆம் பக்கம் பார்க்க)






# டாக்டர் எம்.ஜி.ஆர். அறக் கட்டளை

டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி கலை அறக்கட்டளைத் தொடக்க விழா சென்னை கலைவாணர் அரங்கில் 7.9.84 அன்று காலையில் நாதசுர இசையுடன் தொடங்கியது.

சங்கர்-கணேஷ் இசை அமைக்கவும், அரசவைக் கவிஞர் புலமைப்பித்தன், கவிஞர் முத்துலிங்கம், எம்.எல்.சி., ஆகியோர் மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களைக் குறித்து எழுதிய ''புரட்சித்தலைவர் புகழ்மாலைப் பாடல்களை'' திரு மலேசியா வாசுதேவன், திருமதி வாணிஜெயராம் ஆகியோர் பாடினார்கள்

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க.இராசாராம் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில்,

"ஒவ்வொருஆண்டும் இந்த அறக்கட்டளை சார்பில், கல்வி, கலை, விஞ்ஞானம் பற்றிய சொற்பொழிவுகள் தாயகத்திலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தேர்வு செய்யபட்ட அறிஞர்களால் நடத்தப் படும், பட்ட மேற்படிப்பில் முதல் இடம் பெறும் மாணவ மாணவிகளுக்கு இதிலிருந்து நான்கு பேருக்குப் பரிசுகள் வழங்கப்படும், எம்.ஜி.ஆரின் கொள்கைகளைப் பரப்புவது இக் கட்டளையின் நோக்கமாகும். தமிழகத்தில் முதல்வர் எம்.ஜி. ஆர். ஆட்சியில்தான் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

"ரூபாய் 35 ஆயிரத்தில் இந்த அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது" என்று கூறினார்.

> உலக நாடுகளில் நகர வருமானத்தோடு ஒப்பிட்டால் நமதுநாடு 10-வது இடத்தில் இருக்கிறது. அதுபோல இராணுவத்தில் 3-வது இடம். விமானப் படையில் 5-வது இடம். கப்பல் படையில் 8-வது இடம். உலக வல்லரசுகளுக்கிடையே இந்தியா உயர்ந்த நிலையைப் பெற்றுள்ளது.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியதாவது:

''தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிறுவயதிலேயே கலைத் துறைக்கு வந்தவர். ஏழை எளியவர்கட்கு உதவி செய்யக்கூடிய பாத்திரங்களை ஏற்று நடித்தவர். பசி என்றால் என்ன என்பது அவருக்குத் தெரியும். அவர் முதல்வரானதும் பசிப்பிணி தீர்க்க, சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

''தேசிய ஒருமைப்பாட்டிற்கு முதல்வர் எம்.ஜி.ஆர். ஆற்றிய பணிகள் மகத்தானவை. சீனப் போரின்போது அண்ணா எந்த நிலையை ஏற்றுக் கொண்டாரோ அந்த நிலையை எம்.ஜி.ஆர்.பின் பற்றுகிறார். இந்த அறக்கட்டளை அவரது நோக்கங்களைப் பூர்த்தி செய்யும் ''

மக்கள் தலைவருக்கு மன்றத் தலைவர் விழா மலர் ஒன்றினை அண்ணாமலைப் பல்கலைக் கழக



# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!

ஆரோக்கிய மயம் லைப்பாய் நயம்--
போராடிப் பொழுதெல்லாம்
உழைத்த பின்-- ஜோராக ஆடிய
பின்-- நீராடும் இன்பம் லைப்பாய்
போல் வேறில்லை-- குளித்த
உடம்பிலே குலவக் காண்பீர்
சுத்தமே உருவான ஆரோக்கிய
மலர்ச்சி !






அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது லைப்பாய்

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 92 2317 TM




மேதகு துணைக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தமிழகத்தில் கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சியாகும் இது.

இணை வேந்தர் டாக்டர் எம்.ஏ. எம்.ராமசாமி அவர்கள் வெளியிட, முதல் பிரதியினை மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்களும் மேதகு ஆளுநர் திரு.எஸ்.எல். குரானா அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

அறக்கட்டளையைத் தொடங்கிய மேதகு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் டாக்டர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில், "தமிழ்நாட்டில் பிறந்த ஒருவரை முதன் முதலாக இப்பதவியில் கொண்டு வந்ததற்காகப் பாரதப் பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழக மக்கள் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை உங்கள் வரவேற்பில் இருந்து அறிந்தேன். தமிழ்மொழியையும், கலாச்சார மேன்மையையும் பரவச் செய்ய இந்தப் பதவி உதவியாக இருக்கும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதல்வர் "டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி, அறக்கட்டளை" என்பது இதன் பெயர்.

இதற்கான ரூ. 35 ஆயிரத்துக்கான காசோலையை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் வழங்கினார்.

"நம் தமிழ்நாட்டின் பெருமை இந்தியர்கட்குத் தெரியவில்லை. அரசியல் கருத்து வேறுபாடுகளின் காரணமாக உலகில் இந்தியா பெற்றுள்ள உயர்ந்த நிலை நமக்குத் தெரியவில்லை. மக்களுக்கு அதைத் தெரிய வைக்க வேண்டும். நான் மாணவனாக இருந்த காலத்தில் இரண்டு பல்கலைக் கழகங்கள்தான் இருந்தன. எல்லோருக்கும் பல்கலைக் கழக அறிவு கிடைக்கவில்லையே என்று அப்போது சொன்னேன். ஆனால் இன்று மாவட்டத்துக்கு ஒரு பல்கலைக் கழகம் ஏற்பட்டு இருப்பது பெருமைக்குரியதாகும். கல்வியறிவில்லாத நாடு ஜீவனற்ற நாடாகும்.

"பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகளை உருவாக்குவதற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். மேலைநாடுகளில் இது போன்ற சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

"அரசு, பல்கலைக் கழகங்களுக்கு அளிக்கும் உதவித்தொகை மட்டும் போதாது. தொழில் அதிபர்களும் உதவி அளிக்க வேண்டும். வருங்காலச் சந்ததிகள் முன்னேற்றம் அடைவதற்கான வழிகளைச் செய்யுங்கள். நாங்கள் பத்து ஆண்டு செய்த தொழில் கல்விப் பணியை ஒரே ஆண்டில் அந்தப் பணியைச் செய்ததற்குப் பெருமைப்படுகின்றேன்.

"தமிழ்நாடு, இந்தியாவில் ஒரு முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. மற்ற மாநிலங்களைவிடத் தமிழகம் பலதுறைகளில் முன்னேறியுள்ளது. தமிழக முதல்வர் சிறப்பான பணிகளைச் செய்கிறார். நான் அரசியலுக்கு அப்பாற்பட்டவன். இருந்தாலும் ஒரு நல்ல மனிதனைப் பாராட்டுவதில் தவறு இல்லை என்று கருதுகின்றேன்.

"சிறிய நாடுகள் ஏதேனும் ஒரு வல்லரசின் பின்னால் வால்போல் ஒட்டிக் கொண்டு நிற்கின்றன. நமது ஒற்றுமை குலைந்து போனால் நமக்கு இன்று உலக அரங்கில் இருக்கும் மரியாதை போய்விடும்.

"இந்தியா ஒரு மாபெரும்நாடு என்பதால்தான் உலக அரங்கில் மதிப்பும் பெருமையும் உள்ளது. ஆகவே நமது தேசிய ஒற்றுமையைக் குலைத்துவிடாதபடி அதை பலப்படுத்த வேண்டும்.

"முதல்வர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் கல்வி வளர்ச்சி சிறப்படைந்திருக்கிறது. பல்கலைக் கழகம் அதிகரித்து இருக்கிறது. தொழில் நுட்பக் கல்லூரிகள், தொழில் நுட்பக் கூடங்கள் வளர்ந்திருக்கின்றன.

"இப்பெரும் காரியங்களைச் செய்த அவர் பெயரில் அறக்கட்டளை தொடங்கி இருப்பது பொருத்தமானதாகும். இது போன்ற அறக்கட்டளைகள் விரிவாக்கப்பட எல்லா மக்களும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்."

விழா இறுதியில் மாண்புமிகு சட்டம் மற்றும், தொழில்துறை அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் நன்றி கூறிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தமிழகம் இன்று காணும் தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் என்று சொன்னால் மிகையாகாது. தொழிற் கொள்கைமேல் அதிக அக்கறையுடையவர். அவர்தம் கையால் இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டது பெரும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்."

—அ. மருதவிநாயகம்



# குடியரசுத் துணைத் தலைவருக்கு சென்னை நகரின் பாராட்டு!

தமிழ்நாட்டைச் சார்ந்த தமிழர் ஒருவர் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் பதவி பெற்றமைக்குச் சென்னை நகர மக்கள் சார்பில் பாராட்டு விழா 7.8.84 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கலைமாமணி சீர்காழி கோவிந்ராசன் அவர்கள் தேசிய கீதம் பாடினார். திரு.கே.எஸ்.நாராயணன் (இந்தியா சிமெண்ட்ஸ்) அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

முன்னாள் மைய அரசின் நிதியமைச்சர் திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள் உரையாற்றுகையில்,

''தமிழகத்தில் பலர் அமைச்சர்களாகப் பணியாற்றி இருக்கிறார்கள். இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்று இருக்கும் மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்களைப் பாராட்டுகின்றேன். யாரையும் புண்படுத்தாமல் தன் வசப்படுத்தக் கூடியவர். ராஜ்ய சபையில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கின்றேன்''. என்றார்.



நீதிபதி திரு டி.ராமபிரசாத் அவர்கள் பேசுகையில்,

''1939இல் அட்வகேட்டாக இந்தியக் குடியரசுத் துணைத் தலைவருடன் பணியாற்றினேன். மிகவும் பண்பாசப் பழகும் பாங்கைப் பெற்றவர்.'' எனக் குறிப்பிட்டார்.

திரு எஸ்.நாராயணசாமி பேசுகையில், 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்பு உண்டு என்றார்.

சென்னை ஆர்ச்பிஷப் திரு அருளப்பா அவர்கள் பேசுகையில் தமிழகத்திற்குத் தன்னால் முடிந்த தொண்டாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திரு நெ. து.சுந்தரவடிவேலு அவர்கள் பேசுகையில், 'நீண்ட அனுபவம், ஆற்றல் உடையவர். மக்களுக்காக உழைப்பவர் சிலரே. அவர்களில் இவரும் ஒருவர். மதிநுட்பம் செயல்திறன் உடையவர்' என்றார்.

திரு கே.எஸ்.ஜி.ஹாஜாசெரிப் எம்.எல்.ஏ. மற்றும் திரு எம்.வி. அருணாச்சலம் ஆகியோரும் உரையாற்றினர்.

வாழ்த்துமடலை திரு ஏ.சி. முத்தையா அவர்கள் வாசித்தார். மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமை தாங்கி இந்தியக் குடியரசுத் துணைத் தலைவருக்குப் பொன்னாடை போர்த்திப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''நெடுநாட்களாகத் தமிழக மக்கள் எதிர்பார்த்த ஒன்று இந்தியத் துணைக் கண்டத்தில் இப்போது நடந்து இருக்கிறது. தமிழர்களுக்கு இத்தகைய உயர்வான இடம்-அதிகாரத்தில்-அரசியலில் கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டு இருக்கும் கோடிக்கணக்கான தமிழக மக்களுக்கு இந்த நிலைமை நம்பிக்கை கொடுப்பதாகவும், மேலும் மேலும் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதாகவும் இருக்கிறது. பிரதமருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''துணை ஜனாதிபதி அவர்கள் பதவியைத் தேடிப் போகாதவர்கள். இங்கு பல மதங்கள், பல மொழிகள், பல நம்பிக்கைக்கு உரியவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். பல தொழிற்சாலைகள் உருவாவதற்கும், தொழிலாளர் வாழ்வு பெற வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள்-வறுமைக் கோட்டிற்கு மேலே வந்து சராசரியான ஓரளவுக்குத் தேவையான பலன் வந்து சேர, உதவி ஜனாதிபதி தன் ஆற்றலைப் பயன்படுத்துவார் என நம்புகிறேன்.

''தமிழர் வேண்டும், நல்லவர் வேண்டும், அந்த நல்லவர் கிடைத்து இருக்கிறார். அவருக்கு நீண்ட ஆயுளை, உடல் நலத்தைத் தர வேண்டும் என்று நான் வணங்குகிற தாயை வணங்கி அவர் பல்லாண்டு வாழவேண்டுமென வாழ்த்துகிறேன்.

''இந்தப் பதவியை அவர் பெறச் செய்த பிரதமருக்கு, தமிழக அரசின் சார்பில், மக்கள் சார்பில், என் சார்பில் நன்றி கூறுகின்றேன்.''

இறுதியில் மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார் —

''இங்கு என்னைப் பாராட்டிப் பேசினோர்களுக்கு நன்றி என்று சொல்வதைத்தவிர வேறு ஒன்றும் சொல்ல வரவில்லை. இங்கு என்னைப் பாராட்டிப் பேசிய வார்த்தைகள் என் மீது அவர்களுக்கு இருக்கும் நட்பின் உறவு, அன்பின் பிரதிபலிப்புத்தானே தவிர, எனது திறமைகளின் அடிப்படையில் அல்ல.

''நிர்வாகத்திறனுக்கு எடுத்துக் காட்டாக காமராஜர் விளங்கினார். தமிழக வளர்ச்சி ஒன்று தான் அவர் வாழ்க்கையில் அவருடைய நோக்கமாக இருந்தது.

''ஒரு அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப்படுவான். ஆனால் ஒரு ராஜதந்திரி அடுத்த தலைமுறையைப் பற்றிக் கவலைப்படுவான்.

''தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றி முதல்வர் அவர்கள் கூறினார்.

''நம்மைப் பலர் பலவீனநாடு, ஏழை நாடு என்று கூறுகிறார்கள். நமது திறமைகள், அறிவுநுட்பம் ஆகியவற்றை ஒன்று சேர்த்தால் மிகவும் பலம் வாய்ந்த நாடாக இருப்போம். நாம் பல மொழிகளைப் பேசினாலும், பல கலாச்சாரங்களைக் கொண்டு இருந்தாலும், ஒரு சிறந்த நாட்டைச் சார்ந்தவர்கள் என்ற ஒருமைப்பாட்டு உணர்வு இருக்க வேண்டும்.

''ஒருமைப்பாட்டு உணர்வை இந்தியாவில் உள்ள குழந்தைகளுக்கு சிறு வயது முதல் வளர்க்க வேண்டும் என்று கூறி சிறப்பான பாராட்டு அளித்தமைக்கு எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

விழா இறுதியில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில், ''நானும் துணை ஜனாதிபதி அவர்களும் ஒரே சிறையில் இருந்தோம். நானும் மேலவைத் தலைவர். அவரும் மேலவைத் தலைவர். மேலும் அவர் உயர்பதவி பெற வாழ்த்துகிறேன்'' என்றார்.

—அ. ம. விநாயகம்

## பச்சைமலையில்...

உப்பிலியாபுரம்-துறையூர் பகுதிகளுக்கு அருகே உள்ள பச்சைமலை வளர்ச்சித் திட்டத்துக்காக இதுவரை 64 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது.

மலைப் பகுதியில் 11 கிலோ மீட்டர் தூரம் புதியசாலை போடும் பணி தொடங்கி உள்ளது.

அக்டோபர் மாதத்துக்குள் இந்தப் பணி முடிந்து விட்டால், மலைக்குச் சென்று வர மினி பஸ்கள் விடப்படும்.

பச்சைமலை, திருச்சி மாவட்டத்தின் கொடைக்கானல் என்று அழைக்கப்படுகிறது. எனவே, அந்த இடத்தைச் சுற்றுலா மையம் ஆக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

துறையூர் வட்ட வைரிச்செட்டிப்பாளையம் அருகே உள்ள ஜம்பேரி ஏரியைப் பழுது பார்க்க 3 இலட்சம் ரூபாய்க்கு அரசு அனுமதி அளித்துள்ளது. பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

## புதுக்கோட்டை மாவட்ட வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெறும் பணிகள்

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பைக்குடி வட்டாரத்தில் உள்ள வெள்ளாள விடுதி அரசு பிரதம விதைப் பண்ணையில், தரமான நிலக்கடலை விதைகள் உற்பத்தி செய்யவும், அதனை பாதுகாப்பாக வைப்பதற்கும் ரூ. 11.65லட்சம் அரசு வழங்கியுள்ளது. இதன் மூலம் 2 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திடவும், அவ்வாறு அமைக்கப்பட்ட கிணற்று நீரைச் சொட்டு நீர்ப் பாசன வசதி அமைத்து அதிகப் பரப்பளவில் பாய்ச்சவும், உறபத்தி செய்யப்படும் விதைகளை நல்ல முறையில் பாதுகாக்க ஒரு விதைக் கிடங்கு கட்டவும் அரசு அனுமதியளித்துள்ளது.

திருவரங்குளம் வட்டாரத்திலுள்ள கோயிலூர். மற்றும் கொத்தமங்கலம் கிராமங்களில் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு மாதிரி முசுக்கொட்டை வளர்ப்புத் தோட்டங்கள் ஒவ்வொன்றும் 10 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்த அரசு ரூ.6.36 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இப்பணிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை, கறம்பக்குடி, கந்தர்வக்கோட்டை மற்றும் திருவரங்குளம் வட்டாரங்களில் உள்ள கிராமங்களில் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடமாடும் கால்நடை மருந்தகம் ஒன்று ரூ.2.8 லட்சம் மதிப்பில் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. குறிப்பிட்ட தேதிகளில் கால்நடை பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படும்.

# கந்த கோட்டத்தில் தங்கத் தேர்



சென்னை பூங்கா நகர் கந்த கோட்டத்திலுள்ள அருள்மிகு முத்துக்குமாரசாமி திருக்கோவிலில் 12 இலட்சம் ரூபாய் செலவில் தங்கத்தேர் செய்யப் பட்டது. இந்தத் தேரின் வெள்ளோட்ட விழா 9.9.84 அன்று சிறப்பாக நடைபெற்றது

விழாவிற்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தங்கத்தேர் வெள்ளோட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாட்டின் வரலாறும் சிறப்பும் பெருமையும் என்றும் காப்பாற்றக் காரணமாக ஆன்மிக நெறி வழிகாட்டிக் கொண்டு இருக்கிறது என்பதன் காட்சிகளாக இங்குத் தேரோட்டம் நடக்கிறது.

தமிழகத்தில் இன்று 11-வது தங்கத் தேரோட்டம் நடக்கிறது. அதைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.''

விழாவிற்கு வந்திருந்தோரை தலைமை அறங்காவலர் திரு.பி. பாலசுப்பிரமணியம் வரவேற்றார். தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு என்.வி.என்.சோமு

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் நடிகமணி டி.வி.நாராயணசாமி, முன்னாள் முதல்வர் பெரியவர் திரு எம். பக்தவத்சலம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

''தங்கத்தேர் ஒரு தடவை ஓட்டப்பட்டால் அதன் மூலம் ரூ. 1001 கிடைக்கிறது.

# 'எதிரொலி'க்கு எதிராக பத்திரிகைக் கவுன்சில் தீர்ப்பு..

21.12.1982ஆம் நாளிட்ட 'எதிரொலி'யில் ''இந்திரா காங்கிரசைத் தோற்கடிக்க ராமாராவுக்கு எம்.ஜி.ஆர். ரூ. 3 கோடி தேர்தல் நிதி'' என்ற தலைப்பில் ஒரு அவதூறான செய்தி முதலமைச்சரைப்பற்றி வெளியிட்டதற்காக அந்நாளேட்டின் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு பத்திரிகைக் கவுன்சிலுக்குப் புகார் ஒன்று 23.3.1983 அன்று கொடுத்தது. இப்புகாரை பத்திரிகைக் கவுன்சில் ஏற்றுக் கொண்டது.



புகார் குறித்த விசாரணை புதுதில்லியில் உள்ள பத்திரிகைக் கவுன்சில் அலுவலகத்தில் 8.9.1983 அன்று நடைபெற்றது. அரசு தரப்பிலும், எதிரொலியின் தரப்பிலும் தரப்பட்டுள்ள விவரங்களை வைத்து பத்திரிகைக் கவுன்சில் 12.3.1984 அன்று தனது தீர்ப்பை வெளியிட்டது. அத்தீர்ப்பின் செயற்படு பகுதி பின்வருமாறு:

''ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் ஒரு பெரும் கையூட்டைப் பெற்றிருந்திருக்கின்றார் என்றும் ஊழல் நடவடிக்கைகளிலும் மோசடியிலும் ஈடுபட்டிருந்திருக்கின்றார் என்றும் எழுதுவது, நிச்சயமாகவே மிக மிக, அவதூறானதாகும்; மற்றும், அத்தகைய ஒரு செய்தியானது உண்மை விவரங்களின் அடிப்படையில் அமைந்திருந்தாலன்றி, அதை எழுதியவர்தான் ஒரு முழுமையான அல்லது வரம்புக்குட்பட்ட சிறப்புரிமையைப் பெற்றிருக்கின்றார் என்றோ அல்லது அச் செய்திகள் உண்மையானவை என்றோ நிரூபித்துக்காட்ட முடிந்தாலன்றி, அவர், குற்றத்தின் விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

''செய்தித்தாளுக்கு, முழுமையான அல்லது வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை எதையும் கோருவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. எந்த விவரங்களின் அடிப்படையில் இச்செய்தி அமைந்துள்ளதோ அந்த விவரங்கள் உண்மையானவைதான் என்று நிரூபித்துக் காட்டுவதற்கு, எதிர்வாதிகளால் முயற்சி எதுவும் செய்யப்படவுமில்லை; அல்லது வாய்ப்பு எதுவும் நாடப்படவுமில்லை. எனவே, மேற்சொன்ன செய்தியானது ஐயத்திற்கிடமின்றித் தெளிவாகவே அவதூறானதாக இருந்ததால், அது பத்திரிகை நெறியின் முறையான தகுதித்தரங்களை மீறியுள்ளது என்று குழு முடிவு காண வேண்டியிருக்கிறது. இம்முறையீடு (புகார்) நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும், இதில் எதிர்வாதிகளுக்குக் கண்டிப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (பத்திரிகைக்) கவுன்சில், குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அதன்படியே இதை முடிவு செய்தது''





# உலகப் புகழ் அறிஞர்

## திரு. நெ.து.சுந்தரவடிவேலு

முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்

தொன்மை வாய்ந்த இந்தியாவில். மிகத் தொன்மை வாய்ந்த நகரங்கள் ஏழாகும். அந்த ஏழில் ஒன்று, காஞ்சிபுரம். அந்நகரில் எத்தனையோ பிள்ளைகள் பிறந்தன; பிறக்கின்றன; பிறக்கும்.

பலரில் ஒருவராகப் பிறந்த அண்ணா, உலகப் புகழ் அறிஞராக வளர்ந்தார்; சாதாரண குடும்பத்தில் பிறந்த அண்ணா, அசாதாரண நிலைக்கு உயர்ந்தார்; செயற்கரிய செய்தார்; வரலாற்று நாயகராக விளங்கினார்.

பல்கலைக்கழகம் அண்ணாவின் பேரறிவை அடையாளம் கண்டு 'டாக்டர்' (பேரறிஞர்) பட்டமளித்துப் பெருமை தேடிக் கொள்வதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே, தமிழ்நாட்டு மக்கள் அவரை அறிஞர் அண்ணா என்று உரிமையோடு போற்றினார்கள்.

மேதை எப்படி உருவாகிறார்? இயற்கைக்கூறு ஒரு பங்கும் முயற்சி தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது பங்கும் சேரும்போது, அறிஞன் உருவாகிறான்.

இயற்கையில் மதிநுட்பம் வாய்ந்த அண்ணா, படிப்பில் எல்லையற்ற ஆர்வம் கொண்டிருந்தார்; பாடங்களை ஒழுங்காகப் படித்துத் தேர்ச்சி பெறுவதோடு முடங்கிவிடவில்லை. பாட நூல்களுக்கு அப்பால், நிறையப் படித்தார்; தமிழ் நூல்களைப்போலவே ஆங்கில நூல்களையும் தேடிப்படித்தார். அறிஞர் அண்ணா, பொழுது போக்கிற்காக, இதையும் அதையும் புரட்டியவரல்லர். விரிந்த அறிவுக் கடலின் ஆழ்பகுதிகளில் மூழ்கி, இலக்கிய முத்துக்களையும் உலகியல் பவளங்களையும் கண்டெடுத்தார்; இந்திய வரலாறு முதல், உலக வரலாறு வரை அண்ணாவுக்கு 'அத்துபடி'.

அறிஞர் அண்ணாவின் இணையிலா முயற்சியே அவரைப் பல்கலை வல்லுநராக வளர்த்தது.

ஷேக்ஷ்பியர் முதல் ஷெல்லி வரை, ரூசோ முதல் இங்கர்சால் வரை, திருவள்ளுவர் முதல் பாரதிதாசன் வரை அண்ணாவின் கற்றிருந்த அறிவுப்புலம், புத்தம் புதிய கருத்து விதைகளை ஏற்பதற்கு ஏற்ற பக்குவத்தைப் பெற்றிருந்தது.



அண்ணாவின் இளமைப் பருவத்தில், சமத்துவச் சூறாவளி தமிழகத்தில் வீசத்தொடங்கியது. நீதிக்கட்சி தொடங்கிய தென்றல், பெரியாரின் தன்மான இயக்கத்தால், புயலென உருமாறியது.

'பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை; எல்லோரும் சமம்' என்பது தமிழர்களின் தொன்மை வாய்ந்த சிந்தனை; எனினும் பொதுமக்கள் மறந்துவிட்ட சீரிய சிந்தனை.

இருபதாம் நூற்றாண்டில், சமத்துவ உணர்ச்சி, தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெல்லாம் பரவிற்று. மாடமாளிகைகளில் புகுந்து மகிழ்வித்தது; ஓட்டைக் குடிசைகளில் நுழைந்து எழுச்சியூட்டியது. அறிஞர் அண்ணா, மனித சமத்துவத்தில் ஆழமான நம்பிக்கை வைத்திருந்தார்.

அறிந்துகொண்டவர்கள் எல்லோரும் – நம்பிக்கை கொண்டவர்கள் எல்லோரும் குறிப்பிட்ட கொள்கையை வாழ்க்கை முறையாக ஆக்கிக் கொள்வதில்லை. அறிஞர் அண்ணா சமத்துவத்தைத் தனது வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டார்; தமிழர்களின் வாழ்க்கை முறையாக்க முயன்றார்; பெரிதும் முயன்றார்; பல்லாண்டு முயன்றார்.

பல்கலை வல்ல அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள், நெடுங்கதைகள், நாடகங்கள், கட்டுரைகள் அனைத்தும் சமத்துவத்தைப் பரப்பும் குறிக்கோளை மையமாகக் கொண்டவை.

'என் வாழ்நாளில், நான் கண்டதும் கொண்டதும் ஒரே ஒரு தலைவரைத்தான். அவர்தான் பெரியார்' என்று அண்ணா அழுத்தந் திருத்தமாகக் கூறியது நினைவிற்கு வருகிறது.

அத்தகைய பெரியாரோடு இரண்டறக் கலந்து, பதினைந்து ஆண்டுக்காலம், பெரும்பணி ஆற்

றினார், அண்ணா. கேட்டார்ப் பிணிக்கும் தகவுடைய சொற்பொழிவுகளால், சுண்டியிழுக்கும் எழுத்தால், சமத்துவக் கனவை ஊட்ட வந்தார்; தமிழர் உள்ளங்களில் நிறைந்தார்; 'பெட்டிச் சாவியை அண்ணாவிடம் ஒப்படைக்கச் சித்தமாயிருக்கிறேன்' என்று தந்தை பெரியார், ஈரோட்டில் நடைபெற்ற திராவிடர் கழகச் சிறப்பு மாநாட்டில், அண்ணாவின் முன்னிலையில் அறிவித்தார். பெரியாருக்கு நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிவிட்டார்.



அவ்வளவு உயர்ந்த நிலையில் சுடர்விடும்போது, அண்ணா, பெரியாரை விட்டுப் பிரிய நேரிட்டது. பாசறைகள் வெவ்வேறானாலும் குறிக்கோள் ஒன்றே என்பதை 'இரட்டைக் குழல் துப்பாக்கி' என்னும் பொருள் நிறைந்த சொற்றொடரால் அறிவித்தார். அதை இராஜ தந்திரம் என்று எண்ணியவர்கள் ஏராளம்.

'சொற்சாலம் அல்ல; உண்மை' என்பதை மெய்ப்பிக்க, பதினெட்டு ஆண்டுகளுக்குப்பின், நல்வாய்ப்புக் கிட்டியது. பொதுத் தேர்தலில் பெரியார் கடுமையாக எதிர்த்தும் அறிஞர் அண்ணாவின் தலைமையில் தி.மு.க. பெரும்பான்மை பெற்றது; அமைச்சர் அவை அமைக்க வாய்த்தது.

வெற்றிக் களிப்பில், ஏதோ மறந்து விடக்கூடும். எதிர்த்தவர்களை மறத்தல் அரிது. அவர்களைத் தோற்கடித்தோம் என்று இறும்பூது எய்துவது இயற்கை. அறிஞர் அண்ணாவோ, தன்னேரில்லாத பண்பாளர்; நன்றி என்னும் நல்லுணர்ச்சியின் பேருருவம்.

வெற்றியை 'எக்ஸ்ரே'யால் ஊடுருவிப் பார்த்தார், தந்தை பெரியாரின் சமத்துவக் கொள்கையால், தான் 'மனிதன்' ஆனது தெள்ளெனத் தெரிந்தது, தந்தை பெரியார் முன்னின்று நடத்திய இரு இந்தி எதிப்புப் போராட்டங்களும் தமிழர்களிடையே இந்தித் திணிப்பை வெறுத்துத் தள்ளும் போக்கைப் பரவலாக்கிவிட்டன; அதுவே, தனது வெற்றிக்குக் கைகொடுத்தது என்பது நொடியில் விளங்கிற்று. தன்னை ஆளாக்கிய, தனது ஆதரவாளர்களை ஆளாக்கிய தந்தை பெரியாரைத தேடி விரைந்தார். திருச்சியில் பெரியாரைக் கண்டு வணங்கினார். அவரது வாழ்த்துதலைப் பெற்றுக்கொண்டு வந்தபிறகே, பதவியேற்றார்.

கற்போர்க்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய மாணவர் அண்ணா - படிப்பை முடிக்கும் வரையில் முனைப்பெல்லாம் படிப்பின்மேல் இருத்தலே முறை என்பதை நடந்து காட்டிய அண்ணா, நலிந்த சமுதாயத்தில் கற்றுத் தேர்ந்தோர் கடமை என்ன என்பதையும் தனது வாழ்வின் வாயிலாகப் புலப்படுத்தினார்.

எரிகிற ஒவ்வோர் விளக்கும் பிற விளக்குகளை ஏற்றி வைக்கப் பயன்படவேண்டும். கற்றுத் தெளிந்தவர், பிறருக்குத் 'தெளிவூட்ட வேண்டும். 'காலத்திற்கேற்ற சமத்துவ உணர்ச்சி பெற்ற முற்போக்காளர், 'தன் பெண்டு, தன் பிள்ளை, தன் சம்பாத்தியம்' என்று சிறுத்துப் போகக் கூடாது. பொதுத் தொண்டு ஆற்ற வேண்டும். அது தன் முனைப்பை வளர்த்துக் கொள்ளும் - தன்னை உயர்த்திக் கொள்ளும் - உபாயமாக மாறிவிடக் கூடாது என்பதைத் தனது பண்பட்ட வாழ்க்கையின் வாயிலாக உணர்த்தினார்.

எவ்வளவு பெரிய மனிதரானாலும் அவரைவிடக் கட்சி பெரிது; கட்சியைவிட, சமுதாயம் பெரிது. சமுதாயத்தின் ஒட்டுமொத்த நன்மைக்காகவே, எல்லாவகைப் பொதுத் தொண்டும்' என்பதில் உறுதியாக இருந்த அறிஞர் அண்ணா, எதிர்க்கட்சித் தலைவராக, இந்தியா முழுமைக்கும் வழிகாட்டியாக விளங்கினார்.

'ஆசிரியர்களையும் மாணவர்களையும் தீவிர அரசியலுக்கு இழுப்பதில்லை என்கிற பெரிய மனித உடன்படிக்கைக்கு, சென்னை சட்டமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் வருகின்றன' என்னும் தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் கொண்டு வந்து ஒரு மனதாக நிறைவேற்றி வைத்த பெருமை அண்ணாவுக்கு உரியதாகும்.

முதல் அமைச்சர் அண்ணா அமெரிக்காவிலுள்ள ஏல் பலைக் கழகத்தில் சிறப்புரையாற்ற, அவர்கள் அழைப்பின் பேரில் சென்றார்.

அங்குச் செய்தியாளர்கள் இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கை பற்றிக் கேட்டகேள்விக்குஅறிஞர் அண்ணா அளித்த பதில் அவர்களைத் திகைக்க வைத்தது. மூத்த, பழுத்த 'விடுதலைப் போராட்ட வீரர்போல், இந்திய அயல் உறவுக் கொள்கையை விளக்கியும் ஆதரித்தும் அண்ணா உரைத்ததைப் பாராட்டாதார் இல்லை.

'தமிழ்நாடு' பெயர் பெற்றதற்கும், 'சுயமரியாதை' சீர்திருத்தத் திருமணச் செல்லுபடி சட்டம்' கிடைத்தற்கும் தமிழர்களாகிய நாம் என்றென்றும் அறிஞர் அண்ணாவிற்குக் கடமைப்பட்டுள்ளோம்.

அண்ணாவைப்போல் காலமெல்லாம் கற்போமாக; தான் பெற்ற இன்பத்தை அனைவரும் பெற வழங்குவோமாக; சமத்துவப் பயிரை வளர்ப்போமாக; மாற்றார் தோட்டத்து மல்லிகையையும் போற்றும் பண்பைப் பெறுவோமாக. வெற்றிச் செல்வம் பெறுகையிலும் பணிவையும் நன்றியையும் நினைப்போமாக!





# உழவர்களுக்கு உதவும் உன்னதத் திட்டம்

இந்த ஆண்டு நமது மாநிலத்தின் உணவு உற்பத்தியில் 100 லட்சம் டன் இலக்கை அடைந்திட வேண்டும் என்பது தமிழக அரசின் குறிக்கோள். இதைப் போலவே வணிகப் பயிர்களிலும் புதிய சாதனைகளைப் படைத்திட வேண்டும். வேளாண்மை வளர்ச்சி சில சில பகுதிகளில் மட்டும் நடைபெற்றிடாமல் மாநிலம் முழுவதிலும் எல்லா இடங்களிலும் சீராக அமைந்திட வேண்டும். எல்லாத்தர மக்களும் வளர்ச்சியின் பலனைப் பெற்றிட வேண்டும் என்பது தமிழக அரசின் குறிக்கோள். அக்குறிக்கோள்களை அடைந்திடப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அரசு செயலாக்கிக்கொண்டு வருகின்றது. அவற்றுள் ஒரு சிலவற்றை உங்கள் முன் வைக்க விழைகின்றேன்.

மாநிலத்திற்கு உற்பத்திக் குறியீடு எவ்வளவு என்று குறிப்பிடுவதைப்போல, ஒவ்வொரு நெல் வேளாண்மை செய்பவரும் தனக்கென்று ஒரு குறிக்கோளை மனத்தில் கொண்டு செயலாற்றிட வேண்டும் என்று எண்ணி அதனைச் செயலாக்கிட ''ஹெக்டேருக்கு 5 டன்'' அல்லது ''ஏக்கருக்கு 2 டன்'' என்ற ஒரு புதிய திட்டத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளோம்.



திரு அ. வேங்கடராமன்,
இ.ஆ.ப.
செயலர், வேளாண்மைத்துறை.

ஏனைய நெல் வேளாண்மை செய்யும் நாடுகளுடன் ஒப்பிடும் போது, ஏன் பஞ்சாப்-அரியானா ஆகிய மாநிலங்களை ஒப்பிடும் பொழுதுகூட நமது நெல் விளைச்சல் மிகவும் குறைவாக உள்ளது. ஒருசில பகுதிகளில் சில விவசாயிகள் ஹெக்டேருக்கு 5 டன்னுக்கு அதிகமாக விளைச்சல் எடுத்தாலும் மாநிலத்தின் நெல் விளைச்சல் இன்னும் ஹெக்டேருக்கு3 டன் அளவைத் தாண்டவில்லை. அதிக விளைச்சல் எடுக்கும் விவசாயப் பெருமக்களும் குறிப்பிட்ட பட்டங்களில்தான் அத்தகைய விளைச்சலைப் பெறுகிறார்கள்.

குறிப்பாகச் சொன்னால் குறுவையிலும், நவரையிலும் அதிக மகசூல் கிடைக்கின்றது. சம்பாவிலும் தாளடியிலும் மகசூல் குறைவு. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இக்காரணங்களைத் தெரிந்து, விஞ்ஞானம் நமக்கு அளித்துள்ள புதிய வழிமுறைகளைத் தெரிந்தெடுத்துக் கடைப்பிடித்தால் நிச்சயமாக எல்லாப் பட்டங்களிலும் ''ஹெக்டேருக்கு 5 டன்'' என்ற உற்பத்திக் குறியீட்டை அடைந்திட முடியும். இத்தகைய வழிவகைகளை மக்கள் மத்தியில் பரப்புவதுதான் இத்திட்டத்தின் குறிக்கோள்.

நெல் வேளாண்மையில் அதிக இலாபம் பெற்றிட வேண்டுமானால் செலவைக் குறைப்பது ஒரு வழி-மகசூலைப் பெருக்குவது இன்னொரு வழி. 5 டன்னுக்குக் குறையாமல் மகசூலைப் பெருக்கி அதே சமயத்தில் எங்கு அவசியமற்றுப் பலனில்லாமல் இப்பொழுது பணம் செலவு செய்கிறோமோ அதைத் தவிர்த்தால் நெல் வேளாண்மையிலும் அதிக வருவாய் பெற்றிட முடியும். இம்முறைகளை எடுத்துச் சொல்வது தான் ''ஹெக்டேருக்கு 5 டன்'' என்ற திட்டத்தின் தலையாய பணி.

நல்ல விதைகளை எப்படித் தெரிந்தெடுப்பது, பட்டத்திற்கு ஏற்ற இரகம் என்ன, நாற்றங்கால் எவ்வளவு அமைத்திட வேண்டும், நடவு வயலைப் பண்படுத்துவது எவ்வாறு, நடவு முறை என்ன, களையைத் தவிர்ப்பது எவ்வாறு, உரம் எவ்வளவு, எப்படி இட வேண்டும், நீர்ப்பராமரிப்பில் என்னென்ன கவனம் தேவை. பூச்சி பூஞ்சாளங்களை செலவைக் குறைத்துக் கட்டுப்படுத்துவது எவ்வாறு, அறுவடையில் கவனம் ,இவை போன்ற நுணுக்கங்களை இத்திட்டத்தில்

மூலம் எடுத்துச்சொல்லி வருகின்றோம்.

இத்திட்டத்தில் அறிமுகப்படுத்தும் கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்த்து, உங்கள் நிலத்திற்கும் நீர்நிலைக்கும் ஏற்ப மாறுதல்கள் செய்து உற்பத்திக் குறிக்கோளான ''ஹெக்டேருக்கு 5 டன்'' ஐ நிச்சயம் அடைந்துவிட வேண்டும்.

இன்னொரு செயல்திட்டம் - மும்மணித் திட்டம். இந்திட்டத்தின் குறிக்கோள் ''அதிக உற்பத்தி; அதிக வருவாய் -அமோக வாழ்வு''. நாமும், நம் மக்களும் நம்மைச் சுற்றியுள்ளோரும் நலமுடன் வாழ வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டுள்ளோம். இத்தொழிலிலிருந்து நல்வாழ்வுபெற்றிட வேண்டுமானால் நமது வருவாயைப் பெருக்கிட வேண்டும். வரவைப் பெருக்குவது உற்பத்தித் திறனை அதிகரித்து அதன் மூலமாகப்பெற்ற வெற்றியாக அமைந்திட வேண்டும்-இதுதான் இத்திட்டத்தின் அடிப்படை.

வியாபாரத்திலும், ஏனைய தொழிலிலும் செயலாற்றும் பெரியவர்கள் எப்பொழுதும் ஆதாயத்தில் கண் வைக்கிறார்கள். செய் தொழிலிலிருந்து அதிக இலாபம் பெற்றிட என்ன வழிமுறைகள் உள்ளன என்பதை ஆராய்கின்றார்கள். செலவு என்ன ,வரவு எவ்வளவு என்று கணக்குப்போடுகிறார்கள். இலாப நட்டத்திற்குத் தகுந்தவாறு செயல்முறைகளை மாற்றுகிறார்கள். வெற்றி காண்கிறார்கள். இதே முறையை வேளாண்மையிலும், இயற்கையின் இடர்ப்பாடுகள் எண்ணற்றவை இருப்பினும் கடைப்பிடிக்கலாம் என்பதனை எடுத்துக்காட்டுவதே மும்மணித் திட்டத்தின் குறிக்கோள்.

ஒன்றாகச் சேர்ந்தமைந்துள்ள 40-50 ஏக்கர் நிலப் பரப்பைத் தெரிந்தெடுத்து, அப்பகுதி வேளாண் மக்கள் தற்பொழுது என்ன பயிர் சுழற்சியைக் கடைப்பிடிக்கின்றார்கள், அவர்களுக்குச் சாகுபடிச் செலவு என்ன, வரவு எவ்வளவு என்று கணக்கிட்டு, அப்பகுதியிலுள்ள மண்வாகுக்கும் நீர் வடிகால் வசதிக்கும் ஏற்ப வேறு என்ன பயிர் சுழற்சியைக் கடைப்பிடிக்கலாம், அதற்கு எவ்வளவு செலவாகும், இலாபம் எவ்வளவுஅதிகம் கிடைக்கும் என்று கணக்கிட்டு இவ்விவசாய மக்களுக்கு இப்புதிய திட்டத்தை எடுத்துச் சொல்லி அவர்களின் ஒத்தாசையுடன்இத்திட்டத்தைச் செயலாக்குகிறோம்.

நஞ்சையிலும், புஞ்சையிலும் இத்தகைய பரந்த அளவு மும்மணிச் செயல் விளக்கத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றோம். நஞ்சையில் வாய்க்கால் வடிகால் வசதிகளை எவ்வாறு கூட்டு முயற்சியினால் சீராக அமைத்துக்கொள்வது என்ற வழிமுறைகளையும், புஞ்சைப் பகுதியில் மழைநீர் ஓடி வழிந்து வீணாகாமல், நிலத்தில் ஈர்த்து வைத்துக்கொள்ள ஒருங்கிணைந்து எவ்வாறு செயலாற்றிட வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டி வருகிறோம். இலாபம் பெற்றிடச் செய்தொழிலில் நாமும் நம்மைச் சுற்றி உள்ளோரும் எவ்வாறு செயலாற்றிடல் வேண்டும் என்று எடுத்துக்காட்டும் திட்டம் இத்திட்டம். இதனை உன்னிப்பாக ஆய்ந்து உங்கள் பகுதிக்கும்விரிவுபடுத்திட வேண்டும்.

மரங்கள் வளர்ப்பதில் இப்பொழுது ஆர்வம் அதிகரித்து வருகின்றது. இது விரும்பத்தக்க மாறுதல். எங்கெல்லாம் மரங்கள் வளர்த்திட முடியுமோ அங்கெல்லாம் மரங்கள் வளர்த்திடவேண்டும். தழைக்காக, தீவனத்திற்காக, எரிபொருளுக்காக, வீட்டு உபயோகத்திற்காக, பழங்கள் பெற்றிட இவ்வாறு பல்வேறு பலன்களை மனத்தில் கொண்டு, இருக்கும் சூழ்நிலைக்கேற்ப பயன்தரும் மரங்களை நடுதல் வேண்டும்.

இம்முயற்சியை ஊக்குவிக்க இந்த ஆண்டு சுமார் 1.80 கோடி செலவில் ஒரு திட்டத்தைச் செயலாகி வருகின்றோம். இத்திட்டத்தின்கீழ் பல்வேறு மரக்கன்றுகளைத் தயார் செய்து கன்று ஒன்று 10 காசு வீதம் மிகவும் எளிய விலையில் விநியோகம் செய்கிறோம். பழமரக் கன்றுகளையும் இத்திட்டத்தில் பெற்றிடலாம். அவற்றிற்கு, கன்று ஒன்றுக்கு ரூ.1.25 தான் விலையாகப் பெறுகின்றோம். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டும்தான் இந்தச் சலுகை விலை. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இத்திட்டத்தில் ரூ. 50,000 வழங்கியுள்ளோம். எனவே இத்திட்டத்தின் பலனை முழுமையாகப் பெற்று மரங்கள் கொழிக்கச் செய்திடல் வேண்டும்.

புஞ்சை வாழ் வேளாண் மக்களுக்காகப் பல திட்டங்களைச் செயலாக்கி வருகின்றோம். அவற்றுள் ஒன்று மானாவாரி நிலக்கடலையில் ஹெக்டேருக்கு 2 டன் மகசூல் எடுக்கும் திட்டம். கோடையில் நிலத்தை உழுது, அகலப்பாத்தி ஆழ்சால் முறையைப் பின்பற்றி, வரிசையில் உயர் இரக விதைகளைச் சதுர மீட்டருக்கு 33 செடி வரும் அளவிற்கு விதைத்து, களையைக் கட்டுப்படுத்தி, சாம்பல் சத்து, ஜிப்சம் உரங்களை இட்டு, பூச்சிகளைக் கட்டுப்படுத்தினால் புஞ்சையிலும் 2 டன் மகசூல் எடுத்திடலாம் என்பதனைச் செயல் விளக்கம் செய்வது இத்திட்டத்தின் குறிக்கோள். வழிமுறை எளிது. வேண்டுவது முயற்சி.



தென்னைச் சாகுபடியை அதிகரிக்க இந்த ஆண்டு 40 இலட்சம் தென்னங்கன்றுகளை வழங்க உள்ளோம். சோயா மொச்சைப் பயிரை எண்ணெய்க்காகவும், புரதச் சத்துக்காகவும் பரந்த அளவில் கோவை, சேலம் மாவட்டங்களில் அறிமுகப்படுத்த உள்ளோம்.

காய்கறி உற்பத்தியை அதிகரிக்க 100 டன் விதைகள் வழங்கி வருகிறோம். காய்கறிகளின் உற்பத்தியைஉயர்த்திட இதற்கெனத் தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, சங்க . உறுப்பினர்களுக்கு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய இடுபொருட்களைத் தட்டின்றிக் கிடைக்கச் செய்து, புதிய வழிமுறைகளைச் செய்து காட்டி, உற்பத்தி செய்த பொருளுக்கு நல்ல விலை கிடைத்திட வழிவகை செய்துவருகின்றோம். நாளடைவில் இத்திட்டம் பால் வழங்கும் திட்டத்தைப்போல விரிவடையும் என எண்ணுகிறோம். வேளாண் மக்கள் என்ன பயிர்செய்திட்டாலும், தாங்களும் தங்களைச் சார்ந்தோரும் நல் வாழ்வு வாழ்ந்திட, அவசியமாக, பல்வேறு காய்கனிகளைப் பயிர் செய்திடல் வேண்டும்.

நீர், பொன் அனைய இடுபொருள். இதனைப் பேணிக் காத்திட ஆற்றுப் பகுதிகளில் -குறிப்பாக வைகை, பவானி, தென்பெண்ணை, காவேரி ஆற்றுப் பாசனப் பகுதிகளில் வாய்க்கால் வடிகால் வசதிகளை நவீனப்படுத்தி, நீரை மிச்சப்படுத்தி, வடிகால் வசதியைப் பெருக்கி, உற்பத்தி திறனை அதிகப்படுத்தும் திட்டத்தைப் பரந்த அளவில் செயலாக்கிக்கொண்டு வருகிறோம்.

இத்திட்டத்தில் முறைப் பாசன முறையை வேளாண் மக்களின் ஒத்துழைப்புடன் செயலாக்கிக்கொண்டு வருகின்றோம். வாய்க்கால் வடிகால் அமைக்கும் பணியைக் கடனாகவும், ஓரளவுக்கு மான்யமாகவும் செய்துவருகின்றோம். இதைப்போலவே மானாவாரி நிலத்தில் மண் அரிப்புத் திட்டத்தைப் பரந்த அளவுக்குச் செயலாற்றுவதுடன் ஆயிரக்கணக்கான கசிவுநீர்க் குட்டைகளை அமைத்து வருகின்றோம், இக்குட்டைகள் இப்பகுதிகளின் நீர்ப் பிடிப்பை அதிகரித்து வறட்சியின் கொடுமையைத் தவிர்க்க உதவும்.

புதிய இரகங்களைத் தெரிந்தெடுப்பது, விதை விநியோகம், பூச்சிக் கட்டுப்பாடு, உரங்கள் வழங்குவது, புதிய கருவிகளைத் தருவது, ஆழ்குழாய் அமைப்பது போன்ற பல்வேறு திட்டங்களையும் இந்த ஆண்டு முனைப்புடன் செயலாற்றிக்கொண்டு வருகின்றோம். இவற்றையெல்லாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்; புதிய விஞ்ஞான முறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் சூழ்நிலைக்கு ஏற்றவைகளைப் பின்பற்றிட வேண்டும், கணக்குப் பார்த்து வழிமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். பலருடன் இணைந்து நில நீர் நிர்வாக முறைகளைப் பின்பற்றிட வேண்டும். உற்பத்தியை குறிக்கோள் வகுத்து அதிகரித்திட வேண்டும். வேளாண்மையிலும் ஏனைய தொழிலைப் போலவே அதிக லாபம் பெற்றிட வேண்டும், வளமாக வாழ்ந்திட வேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.




முழுவதும் தாழ்த்தப்பட்ட ஆதி ஆந்திர மாணவர்களே படிக்கும் உயர்நிலைப் பள்ளி. முதன் முறையாகப் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கு மாணவர்களை அனுப்பிய பள்ளி, தேர்ச்சி 90 சதவிகிதம்! இந்தவிந்தைமிகு சாதனையைப் புரிந்த பள்ளியும் ஒரு மாநகராட்சி பள்ளிதான்! சென்னை ஆஞ்சநேய நகர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியின் சாதனை இது.

கடந்த ஆண்டுகளில் 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் இருமுறை 0%தேர்ச்சி. அதாவது ஒருவர் கூடத்தேர்ச்சியடையவில்லை இந்த நிலையில் இருந்த பள்ளி இந்த ஆண்டு 84 சதவீதம் தேர்ச்சி பெறுகிறது. காக்ரான் பேசின் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிதான் இந்தச் சாதனை படைத்தது.

அமைந்தகரையில் அமைந்துள்ள மாநகராட்சிப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 79 சதவிதம் தேர்ச்சி பெற்றுள்ளது. கணக்கு என்றாலே பெரும்பாலோருக்குப் பிணக்கு. மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த ஏழு மாணவர்கள் கணக்கில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் வாங்குகிறார்கள். பதினோரு மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 10 சதவீதத்திற்கு மேல் தேர்ச்சியை அதிகரித்துக் காட்டியுள்ளன.

1984 செப்டம்பர் 3ஆம்நாள் இப்பரிசளிப்பு விழா விமரிசையாக நடந்தேறியது. தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு. கு. சொக்கலிங்கம், இ. ஆ. ப., அவர்கள்பரிசளித்துப் பாராட்டுத் தெரிவித்தார். மாநகராட்சி ஆணையாளர் திருமதி. சாந்தா ஷீலா நாயர் வரவேற்புரை வழங்கினார். தமிழ்நாடு மேலவை அரசுக் கொறடா திரு. ஜேப்பியார் பத்தாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த செல்வி எஸ்.கலாவதி, செல்வன் வரதராஜப் பெருமாள் ஆகிய இருவருக்கும் தலா ரூ.1000 ரொக்கப் பரிசு வழங்னார். இதேபோன்று சிங்லி அறக்கட்டளையைச் சார்ந்த திரு சுகால் சந்து ஜெயின் அவர்கள் பத்து, பன்னிரண்டாம் வகுப்புகளைச்சேர்ந்த அதிக மதிப்பெண்கள் பெற்ற ,4 மாணவ மாணவியர்க்கு ரூ.5000 ரொக்கப் பரிசாக வழங்கினார். மாநகராட்சிமொத்தம் ரூ. 50,000 பெறுமான ரொக்கப் பரிசுகளையும் பரிசுப் பொருட்களையும் வழங்கியது.

**நி. வே. பாலு,**
**மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாநகராட்சி.**



# நலிவுற்றோர் நல்வாழ்வு பெறுகிறார்கள்

கோ. தி. மோகன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை.

**திரு ஆர். எம். அப்பு (வயது 25)**

புதுக்கோட்டை மாவட்டம் அரணமனைப் பட்டியைச் சேர்ந்தவர் திரு ஆர்.எம்.அப்பு. தனது கிராமத்தில் வேலை வாய்ப்பு இல்லாததால் சேலம் சென்றார். அங்கு டீக்கடையில் சிலகாலம் பணியாற்றினார். அங்கு டீ, காப்பி, சிற்றுண்டி தயாரிப்பினை நன்கு கற்றுக் கொண்டார்.

இரு ஆண்டுகளுக்கு முன் மீண்டும் தனது கிராமத்திற்குத் திரும்பினார். மீண்டும் வேலையின்றித் தவித்தார். வறுமை வாட்டியது. அந்த இக்கட்டான வேளையில், அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம சேவக்கின் உதவியினால், நாமத்தன் பட்டியிலுள்ள பாங்க் ஆப் மதுரை கிளையிலிருந்து ரூ.1000 கடன் பெற்றார். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும் உதவி கிடைத்தது. இந்த நிதியுடன் தனது சொந்த டீக்கடையைக் கடந்த மார்ச் மாதம் தொடங்கினார் அப்பு. தொழில் வளர்ந்தது. தற்போது நாள் ஒன்றுக்கு ரூ.60 முதல் ரூ.80 வரை விற்பனை ஆகிறது. ஒரு நாள் நிகர வருவாய் ரூ.20 முதல் 30 வரை கிடைக்கிறது.

தற்போது அவரது பொருளாதார நிலை உயர்ந்துள்ளது.

திரு அப்புவின் குடும்பம் சிறியது. தாயார் சின்னப்பிள்ளை, மனைவி சத்தாயி ஆகியோருடன் இனிய குடும்ப வாழ்க்கை நடத்துகிறார். அவர் வங்கியில் பெற்ற கடனைத் தவறாது திருப்பிச் செலுத்தியும் வருகிறார். இது வரை பெற்ற கடனில் ரூ.660 வரை திருப்பிச் செலுத்தியுள்ளார். மீண்டும் வங்கி மூலம் மேலும் நிதி உதவி பெற்று, தொழிலில் முன்னேற்றம் காணத் துடிக்கிறார் இந்த இளைஞர் அப்பு.

**திரு வி. அய்யாக்கண்ணு (வயது 40)**

புதுக்கோட்டை மாவட்டம் அரண்மனைப் பட்டியைச் சேர்ந்தவர் திரு வி. அய்யாக்கண்ணு. அந்த ஊரில் ஒரு சைக்கிள் கடையில் தனது 18 வயது முதல் குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வந்தார். சைக்கிள் ரிப்பேர் தொழிலைக் கற்றுக் கொண்டாரேயன்றி வருவாயில் திருப்திகரமான நிறைவைக் காணவில்லை.

அந்தத் தொழிலும் நெடுநாள் நிலைக்கவில்லை. கொச்சி நகருக்குச் சென்றார். அங்கு லாரி கம்பெனி ஒன்றில் சுத்தம் செய்பவராகச் சேர்ந்தார். அந்த வேலையிலும் சரியான ஊதியம் கிடைக்கப் பெறாமல், அவர் தனது குக் கிராமத்திற்குத் திரும்பினார்.





இவரது வறுமை நிலையினைக் கண்டு, சொந்தத்தில் சைக்கிள் கடை திறக்க வழிகாட்டினார், அந்தப் பகுதி கிராம சேவக். திருமயம் 'பாரத ஸ்டேட் வங்கி' அய்யாக்கண்ணுக்குக் கை கொடுத்து உதவியது. 1984 மார்ச்சுத் திங்களில் ரூ.3,400 கடன் உதவி பெற்றார். சைக்கிள் கடை தொடங்கினார்.

இன்று அவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10 முதல் ரூ.15 வரை கடையின் மூலம் வருவாய் வருகிறது. இப்போது மனைவி, இரு பையன்கள், ஒரு மகளுடன் கூடிய தனது சிறிய குடும்பத்தில் மகிழ்வான குடும்ப வாழ்க்கை நடத்துகிறார் திரு வி. அய்யாக்கண்ணு.

அவரது பொருளாதார நிலை உயர்ந்துள்ளது. அத்துடன் 4.8.84 வரை, தனது கடனில் 4 தவணை அதாவது ரூ. 500 கட்டி முடித்துள்ளார்.

**நற்சாந்துபட்டி ஆரோக்கியசாமி வங்கிக் கடனால் நன்மை அடைகிறார்.**

ஊக்கமுடைய-ஆனால் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்த இளைஞர் திரு.ஆரோக்கியசாமி தன்னுடைய உணவிற்கும், தன்னுடைய வயதான தாயின் உணவிற்கும் போராட வேண்டியிருந்தது. ஒரு சைக்கிள் கடையில் நாளொன்றுக்கு மூன்று ரூபாயிலிருந்து நான்கு ரூபாய் வரை சம்பாதித்துக் கொண்டிருந்தார். பொருளாதார இயலாமையினால் அவர் வறுமையில் வாடினார்.

அப்பொழுது ஊரக வளர்ச்சி அலுவலரின் மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூ. 5,000- பெற்று சைக்கிள் கடை கடந்த 1983 பிப்ரவரி மாதம் தொடங்கினார். அதில் கால் பங்கு உதவிப் பணமாகப் பெற்றுத் துவக்கினார். கடுமையாக உழைத்து 15 மாதங்களில் வங்கிக் கடனை அடைத்தார். ஒழுங்காகவும், குறித்தபடியும் கடனை அடைத்ததினால், மேலும் ஈர அரவை இயந்திரக் கடை அமைக்க இவருக்கு வங்கி ரூ. 5,000 கடனாக அளித்தது.

இப்பொழுது சைக்கிள் கடை மூலம் தினம் 20 ரூபாயும், ஈர அரவை இயந்திரக் கடை மூலம் தினம் 10 ரூபாயும் சம்பாதிக்கிறார். இப்பொழுது தனது கடைகளில் மாதம் எழுபத்தி ஐந்து ரூபாய் ஊதியத்தில் இரண்டு பெண்களையும் மாதம் ஐம்பது ரூபாய் ஊதியத்தில் இரண்டு சிறுவர்களையும் தனக்கு உதவியாகச் சேர்த்துள்ளார். அவரும் அவருடைய வயதான தாயாரும் தற்போது திருப்திகரமான வாழ்க்கை நடத்துகிறார்கள். மேலும், திரு. ஆரோக்கியசாமி தனது திருமணத்திற்காக, தகுந்த மணமகளைத் தேடுகிறார்.





**அரிமளம் சுப்பிரமணிய குருக்கள் வங்கிக் கடனால் அடைந்த பலன்.**

திரு. சுப்பிரமணிய குருக்கள் என்பவர் உள்ளூர் கோயிலில் பூசாரியாக மாதம் முப்பது ரூபாய் மிகக் குறைந்த வருமானம் பெறுகிறார். தன்னுடைய ஒரு ஏக்கர் நிலத்தில் வரும் குறைந்த வருமானம் மனைவிக்கும், 6 குழந்தைகளுக்கும் போதுமானதாக இல்லாமல் அவதிப்பட்டு வந்தார்.

உள்ளூர் ஊரக நல அலுவலரின் ஆலோசனையின் பேரில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வங்கியில் ரூ. 2,500 கடன் வாங்கி ஒரு கறவை மாடு கடந்த 1983 அக்டோபரில் வாங்கினார். இரண்டாவது கறவை மாடு வாங்கவும் வங்கியில் கடன் பெற்றார். இப்பொழுது இரண்டு கறவை மாடுகளுக்கும் கன்றுகள் உள்ளன. இவ்விரண்டு கறவை மாடுகளினால் பெறப்படும் பாலினால் வங்கிக் கடனை மாதம் எண்பது ரூபாய் வீதம் அவரால் திருப்பிக் கட்ட முடிகிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளில், கடனும் முடிந்து இரண்டு கன்றுகளும் வளர்ந்து, வங்கிக் கடனின் பலனை அடைய முடியும்.







## திருப்பத்தூரில் சத்துணவு விரிவாக்கத் தொடக்க விழா

பேரறிஞர் அண்ணா 76-வது பிறந்த நாள் விழாவும், முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்குச் சத்துணவு வழங்கும் தொடக்க விழாவும் 15-9-84 அன்று இராமநாதபுர மாவட்டம் திருப்பதூரில் நடைபெற்றது. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார். இவ்விழா விற்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். குருமூர்த்தி, இ. ஆ. ப. தலைமை தாங்கினார்.

இம்மாவட்டத்தில் இரண்டு வயது முதல் நான்கு வயது வரை உள்ள குழந்தைகளுக்கென 1,955 மையங்கள் இயங்கி வருகின்றன. இத னால் 1,43,000 குழந்தைகள் பயனடைந்து வரு கின்றனர். முதல்வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் பயிலும் 2,24,000 மாணவ, மாணவி யருக்கு 3,239 பள்ளி மையங்களில் சத்துணவு வழங்கப்படுகிறது,

''பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவி யருக்குப் புதிதாக 274 உயர்நிலைப்பள்ளி மையங் களில் சத்துணவு வழங்கப்படுகிறது. இதனால் 2,24,000 மாணவ, மாணவியர் அதிகப்படியாகப் பயனடைவர்.

## தென்னை மரத்திலிருந்து தவறி விழுந்தவருக்கு உதவி

சத்துணவு விரிவாக்கத் திட்டத் தொடக்க விழா 15-9-1984 அன்று புதுக்கோட்டையில் நடை பெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ. ஆ. ப. தலைமை தாங்கினார். விழாவில், தென்னை மரத்திலிருந்து தவறிவிழுந்து இறந்து போன திரு மாணிக்கம் குடும்பத்திற்கு முத லமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5,000 ரூபாயையும் அவர் வழங்கினார்.



# அண்ணலுக்கு அண்ணா சூட்டிய புகழ்மாலை



**வே**லைமாநகர் ஆட்சி மன்றத்தார், மணி மண்டபத்தில் விளங்கும் உத்தமரின் சிலையைத் திறக்கும் பணியினை எனக்களித்தார்கள். இதுபற்றிக் குறிப்பிட்ட மன்றத்தலைவர், 'வேலூர் வரலாற்றிலேயே இன்று ஒரு பொன்னாள்' எனக் குறிப்பிட்டார். என்னைப் பொறுத்தவரையிலே, என்னுடைய வாழ்க்கையில் -ஏன் தமிழ்நாட்டின் அரசியலில் இதை ஒரு முக்கியமான கட்டம் என்று கூறுவேன். காந்தியாரின் உருவச்சிலையை நான் திறக்கிறேன். இந்தச் செய்தியால், அரசியல் வட்டாரத்தில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியை நாடு அறியும்.

எனக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பு - என்னைப் பொறுத்தவரையில் முதல் முறையல்ல; இரண்டாவது தடவை. இதற்கு முன்னரே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இடைப்பாடியில் ராஜாஜி பூங்காவிலேயுள்ள காந்தியாரின் சிலையை நான் திறந்து வைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

'உத்தமர் காந்தியாரிடத்தில் எனக்கு மதிப்பு உண்டா?' இவ்விதம் சிலர் கேட்கிறார்கள். அவர்களுக்குச் சொல்வேன் - மதிப்புக் காட்டுவது என்பது இரு வகைப்படும்; எதிரில் வாயாரப் புகழ்ந்துவிட்டு, தலை மறைந்ததும் மாறாகப் பேசுவது ஒரு வகை; பழகாவிட்டாலும், கூடாரத்தில் இல்லாவிட்டாலும், பிறரின் பணியினைத் தனித்திருக்கிற நேரத்தில் எண்ணி எண்ணி மகிழ்வது இரண்டாவது வகை.

நான் இரண்டாவது வகையைச் சேர்ந்தவன். நம்முடைய உலக உத்தமர், உயிரோடிருந்த நாட்களில் - பிடிக்காதவைகளைக் கண்டித்தபோதும் - எனக்கேற்ற எண்ணங்களைப் பாராட்டிய போதும், அவருக்குள்ள சிறப்பை நான் எண்ணாமலிருந்ததில்லை.

மாற்றார் காந்தியாரைப்பற்றி எண்ணுமளவுக்கு, அவருடைய தொண்டு இருந்ததால்தான், அவர் உலகத்தின் ஒளியானார். காந்தியாரின் புகழை காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல - எல்லோரும் புகழ்கிறார்கள்! உலக மக்களெல்லாம் போற்றுகிறார்கள். அவ்விதம் பிறர்போற்றுவதுதான் ஒரு தலைவருக்குக் கிடைக்கும் தனி மரியாதையாகும்.

சுதந்தரம் கிடைத்தபின் உத்தமர் காந்தியடிகளே சொன்னார். 'சுதந்தரத்தின் ஒரு கட்டத்தைத் தான் தாண்டியிருக்கிறோம்; இந்தச் சுதந்தரம் ஏழை மக்களின் வாழ்க்கையை மாற்றக்கூடியதாக அமைய வேண்டும்' என்று.

காந்தியாரின் புகழுக்குக் காரணம், குடும்பத்திலே இருந்தவர்களால் மட்டும் உண்டானதல்ல. வெளியேயிருந்தவர்கள் அவரைக் கண்டு, அவருக்கு அஞ்சலி செய்ததால்தான் உலக ஒளியானார் அவர்.

'ஏழை - பணக்காரன் கூடாது! மதத்தின் பெயரைச் சொல்லி ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்வது கூடாது - போதுதலை உண்டாக்கக் கூடாது - ஜாதி ஆணவம் கூடாது' என்றார் அவர்.

அத்தகைய விடுதலைப் பூமியைக் காண விரும்பினார். அதனாலேயே ஒருமுறை அவரைக் கேள்வி கேட்ட பொழுது, கேட்டவருக்கு விளக்கினார்:

''வைணவன் என்றால் யார்? நெற்றிலே திருநாமமும், நெஞ்சிலே வஞ்சகமும், கழுத்திலே துளசி மாலையும், கருத்திலே கபட எண்ணங்களும் கொண்டவர்களல்ல. உண்மையான உள்ளம் கொண்டவர்கள்'' என்று.

**[3.1.1954ல் வேலூரில் ராஜாஜி பூங்காவில் காந்தியடிகள் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து]**



**நா**ட்டை மீட்க ஒரு ரணகளச் சூரரையும், நல்லாட்சி அமைக்கப் பல கலைவாணரையும், மக்களை நல்வழிப்படுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாக வேண்டும். எந்த நாட்டிலும் அனைவரும் ஏககாலத்தில் கிடைக்கமாட்டார்கள். ஒரு தலை முறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான். மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார். பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டிருந்தது. மூன்று தலைமுறைகள் மூன்று தனித்தனித் தலைவர்கள் கொள்ள வேண்டிய குணத்தை அவர் கொண்டிருந்தார். உலக வரலாற்றிலே இதற்கு வேறு சடு கிடையாது.

விடுதலை வாங்கித் தந்தவர்கள் உண்டு, போர்த்திறனால்; நல்லாட்சி நிறுவியவர்கள் உண்டு - அறிவின் மேம்பாட்டினால்; மக்களை நல்லவர்களாக்கியவர்கள் உண்டு தூய்மையினால், மூன்று அரும் பணிகளையும் ஒரு சேரச் செய்த ஒப்பற்ற சிறப்பு உத்தமர் காந்தியார் ஒருவருக்கேதான் உண்டு!

நாடு விடுதலைபெற அந்நியருடன் போராட வேண்டி இருந்தது. செய்தார்; வெற்றி பெற்று நாட்டுக்குச் சிறப்பை வாங்கித் தந்தார்.

மக்களை நல்லவர்களாக்குவதற்கு, அவர்கள் மனத்திலே உள்ள மாசுகளைப் போக்கவேண்டும். மக்கள் மனத்திலே பலகாலமாக மூண்டுபோய்க் கிடக்கும் மத வெறி அதன் கிளைகளான பேத புத்தி, வகுப்புத் துவேஷம், கொடுமை ஆகியவைகளைக் களைந்தாக வேண்டும். மக்கள் மனத்திலே குரோதத்தை-சுயநலத்தைத் தூவும் முறையிலே உள்ள போதனைகளை, ஏற்பாடுகளை, எண்ணங்களை அகற்றியாக வேண்டும் என்று அவர் எண்ணினார்.

85350

இந்துமதத்திலே ஏறிப்போய், ஊறிப்போயிருந்த கேடுகளைத் தமது பரிசுத்த வாழ்க்கையாலும் தூய்மையான உபதேசத்தாலும் புதிய விளக்க உரைகளாலும் நீக்கும் காரியத்தில் ஈடுபடலானார். அன்பு நெறிதழைக்க வேண்டும் என்றார். அவர் இந்த மதம், அவன் அந்த மதம் என்று குரோதம் கொள்ளாதீர் என்றார்; இது பெரியது, இன்னொன்று தாழ்ந்தது என்று எண்ணாதீர் என்றார்; தீண்டாமை போக வேண்டும் என்றார்; அமளிக்கிடையே நின்று படுகொலைகள் நடைபெற்ற இடத்திற்கெல்லாம் சென்று இதனைக் கூறிவந்தார்.

மிகமிக எளிய வாழ்க்கையில் இருந்துகொண்டு இன்சொல் பேசி, எந்த முறையையும், ஐதீகத்தையும் ஒரே அடியாக ஒழித்துவிடும் புரட்சித்திட்டமும் கூறாமல் மக்களை நல்லவர்களாக்குமளவுக்குப் பழைய முறைகளிலே உள்ள தூசு தட்டி, மாசு போக்கி, பயனுடைய மனித மேம்பாட்டுக்கு உதவக்கூடிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று பாடுபடலானார்.

**(1948ல் அண்ணல் மறைவெய்தியபோது வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து)**

இன்று உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள். நாடெங்கும் இந்நாள், நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது; அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தி அடிகளுக்குத் தமது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர். அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும், அவர் புகழ் பற்றிய பாடல்களை இசைத்தும், பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணி புரிந்தும், இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவார் பல்வேறு வகையினர் உளர். இவர்களில், எவருடைய பார்வையில் முழு காந்தியடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு தனி மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம்; ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும், பிறநாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும். அதற்கே இந்நாள் - அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல - அவர்-வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட-அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவையாக்கிட! மாலையின் மாண்பு, மணத்தில்; விளக்கின் பயன் ஒளியில்! விழாக்களின் பலன், நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது.

காந்தியடிகள் மறையவில்லை; நம்மோடு இருக்கிறார், நம்முள் இருக்கிறார், நம்முடன் கலந்துவிட்டார், என்று எண்ணுதல் வேண்டும். அவருடைய எண்ணங்கள் மடிந்திடவில்லை; அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்று உறுதி பிறந்திட வேண்டும்.

**(2.10.1967ல் வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து.)**



## அரிசியும் கோதுமையும்

**உலகத்தில் அரிசியை அதிக அளவில் பயன்படுத்தும் நாடுகள் சைனாவும் இந்தியாவும் தான்.**

**அரிசி உற்பத்தி பொதுவாக பற்றாக் குறையில் தான் உள்ளது. ஆனால் கோதுமை, உலகில் அதிக அளவில் இருக்கிறது.**

**ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் கூட இந்தியாவில் அரிசி பற்றாக் குறையாகத்தான் இருந்தது. அதனால் தான் பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டு வந்தது.**

**''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்'' என்று 1920ஆம் ஆண்டிலேயே கோதுமையின் பெருமையை உணர்ந்து பாடியிருக்கிறார் பாரதியார்.**

**கோதுமையில் புரதச் சத்து அதிகம். அரிசியில் கார்போஹைட்ரேட் அதிகம்.**

**அரிசியின் விலை உயர்வு; கோதுமையின் விலை குறைவு. ஒரு குவிண்டால் கோதுமையின் விலை 254 ரூபாயிலிருந்து 172 ரூபாயாகக் குறைக்கப் பட்டுள்ளது.**

**இந்தியாவில் 1964 - 65ல் 1 கோடி 20 லட்சம் டன் கோதுமை உற்பத்தியாகியது. 1975-76ல் 2கோடி 35 லட்சம் டன்னாக உயர்ந்தது. 1984-85ல் 4கோடியே 40 லட்சம் டன் உற்பத்தியாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.**

# அயல் நாட்டுத் தகவல் தொடர்பு



இந்திய அரசாங்கத்தின் அயல் நாட்டுத் தகவல் தொடர்புத் துறை 1.1.1947ஆம் ஆண்டு தோன்றியது. தனியார் நிறுவனமாக இருந்த 'இந்திய ரேடியோ மற்றும் கேபிள் தொடர்பு கம்பெனி' இந்திய அரசினால் தேசியமயமாக்கப்பட்டு, அதன் வெளிநாட்டுத் தகவல் தொடர்புகளைப் பலதுறைகளில் விரிவாக்கி, அதன் மூலம் தொடர்புகொண்டுள்ள நாடுகளின் எண்ணிக்கையையும், வெளிநாட்டுத் தொலைபேசி, டெலக்ஸ் ஆகியவற்றின் இணைப்புகளையும் மிக வேகமாக அதிகரித்துக் கொண்டுவருகிறது.

உலகெங்கும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மாறுதல்களையும், தொலைதூரத் தகவல் தொடர்பில் ஏற்பட்டு வரும், நவீன பொறியியல் நுணுக்கங்களையும் கருத்தில்கொண்டு, நமது மக்களின் வெளிநாட்டுத் தகவல் தொடர்புத் தேவைகளை நிறைவேற்றும் நோக்கத்தில், 1971ஆம் ஆண்டு பம்பாய்க்கு அருகில் ஆர்வி என்னும் இடத்தில் செயற்கைக் கோள் தகவல் தொடர்பு நிலையம் நிறுவப்பட்டது.



இந்தப் புதிய அமைப்பு மிகவும் நம்பகமான தகவல் தொடர்பினை உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் எந்தவிதத் தடையுமில்லாமல் 24 மணி நேரமும் அளித்து அதன் மூலம் நமது மக்களின் அயல்நாட்டுத்தகவல் தொடர்புத் தேவைகளும் மிக அதிகமாக அதிகரித்து, அதனால் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக டெல்லிக்கு அருகில் டேராடூனில் 1976ல் இரண்டாவது செயற்கைக்கோள் தகவல் தொடர்பு நிலையம் நிறுவப்பட்டது. இந்த நவீன வசதியினால், நமது அயல்நாட்டுத் தகவல் தொடர்புத்துறை உலகில் அநேகமாக எல்லா நாடுகளுடனுமே நேரடித்தொடர்புகொள்ள ஏதுவாயிற்று.

இப்போது நமது துறை நேரடி தொலைபேசி இணைப்புகள், நேரடி டெலக்ஸ் இணைப்புகள், நேரடித் தந்தி இணைப்புகளையும் கொண்டுள்ளது. ஏறத்தாழ மொத்த அயல்நாட்டுத் தொலைதூரத் தகவல் தேவைகளில் 99 சதவீதம் செயற்கைக் கோள் மூலமாக நிறைவேறுகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் 'டிரோபோஸ்கேட்டர்' என்னும் முறையில் தகவல் தொடர்பினை ஏற்படுத்தியது. இதனை நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் துவக்கிவைத்தார். இதன் மூலம் நமது துறை மற்றுமொரு புதிய முறையில் தகவல் தொடர்பைத் துவக்கியது.

நமது நாட்டிற்கும் மலேசியாவிற்கும் இடையில் சென்னை பினாங்கு இரண்டு இடங்களையும் இந்துமாக் கடல் கடலடி கேபிள் மூலம் இணைத்து, இதன் மூலம் பல நாடுகளையும் தொலைதூரத் தகவல் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவும், இப்போது இருந்தமுறைகளுக்கு,ஒரு மாற்று முறையாகச் செயல்படவும்,எதிர்பாராத வகையில் செயற்கைக் கோள் தொடர்பு தடைப்படும் நேரங்களில் துணைபுரியவும், இந்தக் கடலடி கேபிள் போடப்பட்டுச் செயலாற்றத் துவங்கியது. அயல்நாட்டுத்தகவல் தொடர்புத் துறையில் சென்னைப் பிரிவு

1947ல் கம்பிமூலம் தந்தி அனுப்பும் அலுவலகமாகவும், 1960ல் கம்பியில்லாமல் அதிக அதிர்வு மின் அலைகள் மூலமாக இங்கிலாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா முதலிய நாடுகளுடன் தொடர்புகொண்டிருந்தது. பிறகு நமது தேசியத் தகவல் தொடர்பு இணைப்புகள் மூலம்-செயற்கைக் கோள்மூலம் தொடர்புள்ள நாடுகளுடன் சென்னை இணைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சென்னை நகர மக்கள் டெலக்ஸ் மூலம் நேரடித் தொடர்பும், தொலைபேசி மூலம் நேரடியாக இங்கிலாந்திற்கும், சென்னைத் தொலைபேசி இயக்குநர் மூலம்



மற்ற எல்லா நாடுகளுடனும் தொடர்புகொள்ள வசதியளிக்கப்பட்டது.

கடலடி கேபிள் இணைப்பிற்குப் பின்பு, செயற்கைக் கோள் நிலையத்தின் உதவி இல்லாமலேயே பல அயல்நாடுகளுடன் தொடர்புகொள்ள ஏதுவாயிற்று. இதன் மூலம் மிகவும் நம்பகமான, நல்ல தரமான, அயல்நாட்டுத்தொடர்பு இணைப்புக்கள் தென்பிராந்திய மக்களுக்குக் கிட்டியது.

காமன்வெல்த் நாடுகளின் தொலை தூரத் தொடர்புச் சங்கத்தில் 1972ஆம் ஆண்டிலேயே



இந்தக் கடலடி இணைப்புப்பற்றி திட்டமிட்டு 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. 1977ல் பொது முதலீட்டுக்கழகம் இத்திட்டத்தை அங்கீகரித்தது. பிறகு காமன்வெல்த் நாடுகளான மலேயா, இலங்கை, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், கனடா, இந்திய நாட்டு நிர்வாகங்கள் பலமுறை கூடி, திட்டமிட்டு 1978ல் இந்தத் திட்டத்தை அமல்படுத்தத் தீர்மானித்தது. இந்தியா இத்திட்டத்தின் திட்ட அமைப்பு நாடாக நியமிக்கப்பட்டது.

கடலடி நில அளவை முதலிய முன்னேற்பாடுகளுக்குப் பின்பு இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்டாண்டர்டு டெலிபோன் கம்பெனிக்கு உலக அளவில் டெண்டர்மூலம், காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் துவக்கி ஜூலைக்குள் கடலடி கேபிள் போடப்பட்டது.

இந்த கேபிள் 5 MHZ Band Width கொள்ளளவு உடைய 480 தொலைபேசி இணைப்புகள் ஏற்படுத்த ஏதுவானது. சிறிது மாற்றம் மூலம் 640 தொலைபேசி இணைப்புக்களுக்கும் இதைப் பயன்படுத்த முடியும்.

இந்தக் கடலடி இணைப்பு, காமன்வெல்த் நாடுகளின் ஒத்துழைப்பு, தொழில் நுட்பத்திறமை இவைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

ஏப்ரல் 1981ல் பல சோதனைகளுக்குப் பிறகு இந்த கேபிள் செயல் படத்துவங்கியது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே, கிழக்கத்திய நாடுகளான மலேயா, சிங்கப்பூர், ஹாங்ஹாங், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா, முதலிய நாடுகளுக்கு ஒரு மாற்றுத் தகவல் தொடர்பு வழி ஏற்படுத்துவதே. தற்போதைய கணிப்பின்படி இன்னும் 7 அல்லது 8 ஆண்டுகளுக்கு இந்த கேபிளின் முழுத்திறனையும் பயன் படுத்தமுடியும். அதன் பின்பு தற்போது ஏற்படும் நவீன உத்திகளின் மூலம் இதன் திறனை இருமடங்கு அதிகரிக்க முடியும்.

1350 கடல் மைல்கள் தூரமுள்ள சென்னை - பினாங்கு கேபிள் (வங்க வளைகுடாவில்) தன்னுள் 173 மின் அணுப்பெருக்கிகளையும், 11 ஒலி சமன் செய்யும் பகுதிகளையும் இடை இடையே அடக்கிக் கொண்டுள்ளது. இதன் விட்டம் ஒரு அங்குலத்திற்குச் சற்றுக் குறைவே. இதற்கு 2760 டன் இரும்பு, 240 டன் தாமிரம், 190 டன் அலு





மினியம், 1980 டன் உயர் ரக பிளாஸ்டிக் தேவைப்பட்டது. இந்த கேபிள் 25 ஆண்டுகள் உத்தரவாதமாகத் 'தடையின்றிச் செயல் புரியும். சாதாரணமாக அதன் பிறகு பயனுள்ளதாகவே இருக்கும்.

38 கோடி ரூபாய் இந்திய முதலீடு செய்யப்பட்ட இத்திட்டத்தின் மொத்தச் செலவு 67 கோடி ரூபாய்கள்.

இத்திட்டத்தை முழுமையாகப் பயன் படுத்தும் நோக்குடன், சென்னையில் ஒரு தலைவாயில் (Gate way) நிலையம் துவக்கப்பட்டது. இந்த சென்னை VSB தொலைபேசி நிலையம், டெலக்ஸ் நிலையம், நிர்வாக அலுவலகங்கள், ரேடியோ புகைப்படப்பிரிவு, அதிவேக data வசதிகள், தனி நபர்களுக்குப் பிரத்தியேக டெலக்ஸ் இணைப்புகள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. 3.2 கோடி ரூபாயில் இந்தக் கட்டடம் கட்டப்பட்டது. அரசாங்க எஸ்டேட்டில் இருந்த இந்த இடத்தைத் தமிழக அரசு மனமுவந்து அளித்த பேருதவி போற்றுதற்குரியது. இந்த ஆறுமாடிக் கட்டடம் பொறியியல் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, தானியங்கி தூக்கி (Lift), குளிர்சாதன வசதி மற்றும் நவீன மின் அணுச் சாதனங்கள் தூசியற்ற சூழ் நிலையில் இயங்க வேண்டிய தேவைக்கு ஏற்பவும் எல்லாப் பகுதிகளையும் ஒன்றுக்கொன்று இணைத்துக் கட்டப்பட்டது. கட்டடக் கலையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறுகிய காலத்தில் மத்திய பொதுப்பணித்துறை இந்தக் கட்டடத்தை நிறுவியது. இங்கு தடையற்ற மின்சாரவசதிக்கு இரு மின் ஜெனரேட்டர்களும், தீத்தடுப்பு எந்திரங்களும், தொழிலாளர் வசதிக்கு மன மகிழ் மன்றம், ஓய்வு விடுதி, சிற்றுண்டிச்சாலை ஆகிய எல்லா வசதிகளையும் தன்னுள் அடக்கியுள்ளது.

1982ல் இயங்கத் தொடங்கிய கம்ப்யூட்டர் தானியங்கி தொலைபேசி நிலையம் தென் பிராந்திய மக்களுக்கு ஏறக்குறைய 150 நாடுகளுக்குத் துரிதத் தொலைபேசித் தகவல் தொடர்பு கிடைக்க வசதி செய்துள்ளது. சென்னை, டெல்லி, பம்பாய், கல்கத்தா நகரமக்கள் சிங்கப்பூர், லண்டன் பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஹாங்காங், ஜப்பான் ஆகிய நாடுகளுக்குத் தங்கள் இல்லங்களிலிருந்தே தொலைபேசியில் நேரடியாகத் தாங்களாகவே ISD முறையில் தொடர்பு கொள்ள இந்த நிலையம் வசதி செய்துள்ளது. கம்ப்யூட்டர் மூலம் இயங்கும் டெலக்ஸ் இணைப்பகமும், 1982 செப்டம்பர் மாதத்தில் செயல்படத் துவங்கி, எல்லா நாடுகளுக்கும் துரிதமாகவும், நம்பகமாகவும் சிறப்பான டெலக்ஸ் இணைப்புக்களைக் கொடுத்து வருகின்றது. மற்றும் மக்களுக்கு இன்னும் பல வசதிகளும் அளிக்கிறது.

டெலக்ஸ் இணைப்பு இல்லாத பொதுமக்கள் கொடுக்கும் தந்தி முதலியவற்றைத் துரிதமாக உடனுக்குடன் வெளிநாடுகளுக்கு அனுப்பும் வகையில் தானியங்கிச் செய்தி அனுப்பும் முறை விரைவில் செயல்படத்துவங்கும்.

இத்தகைய வசதிகளை அளித்து சென்னை தொலைவாயின் நுழைவாயில் மூலமாக, இந்த நிறுவனம் நல்ல முறையில் பணியாற்ற, தென் மாநிலங்களில் தொழில், சமூக, கலாச்சார,



பொருளாதார முன்னேற்றத்திற்குப் பேருதவி புரிந்து, நமது இந்தியநாட்டின் மேம்பாட்டுக்குச் சீரிய முறையில் பணியாற்றி வருகின்றது இந்த நிலையம்.

சென்னையில் உள்ள இந்த அயல்நாட்டுத் தொலைதூரத் தொடர்பு நிலையத்திற்கு, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அண்மையில் வருகை தந்தார். இந்த நிலையத்தின் பல்வேறு வியத்தகு நடவடிக்கைகளைக் கண்டு மகிழ்ந்தார்.

---

## வளரும்

## தேயிலை!

"தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில்" இதுவரை 2414 எக்டர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது.

இந்தக் கழகத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 2383 தொழிலாளர் குடியிருப்புகளில் (ஜூன் 1984 வரை) 2201 வீடுகள் கட்டுப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளைக் கட்டி முடிக்கத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு (1983-84) ஜூன் மாதம் வரை 1,51,78,065 கி.கி. தேயிலைக் கொழுந்து உற்பத்தி செய்யப்பட்டது. ஜூன் மாதத்தில் மட்டும் 10,55,022 கி.கி. தேயிலைக் கொழுந்து உற்பத்தி செய்யப்பட்டது.




## பல்லாவரத்தில்

பல்லவபுரம் மறைமலை அடிகள் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தாரும் பழைய மாணவர் சங்கத்தாரும் இணைந்து 10-9-1984 அன்று 'ஆசிரியர் தின விழா' வினைச் சிறப்பாகக் கொண்டாடினர். திரு கே. எம். அப்துல் ரசாக், எம்.எல்.ஏ., தலைமை தாங்கினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் சிறப்புரை ஆற்றி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.

பள்ளித் தலைமை ஆசிரியர் திரு பொ. இராதாகிருஷ்ணன், நன்றி கூறினார்.

## கப்பலோட்டிய தமிழன் பிறந்தநாள் விழா

**இரா. வீராசாமி,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், திருநெல்வேலி.**

செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 113-வது பிறந்த நாள் விழா நெல்லை மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரத்தில் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக 5.9.84 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

அன்று ஒட்டப்பிடாரமே விழாக்கோலம் பூண்டது. அன்னாருடைய சிலைக்கும், நினைவில்லத்திலுள்ள படத்திற்கும் மாலை அணிவிக்கப்பட்டது.

நெல்லை "லவ் பேர்ட்ஸ்" குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு இரா. வீராசாமி வரவேற்புரையாற்றுகையில்: "தமிழ்நாடு அரசு கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிக்கு மட்டுமின்றி மறைந்த தமிழ்த் தொண்டாற்றிய அறிஞர்கள், சுதந்தரப் போராட்ட வீரர்கள், தேசத் தலைவர்கள் அனைவருக்கும் விழா எடுத்து அன்னாரைச் சிறப்பித்து வருகின்றது" என்றார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு எம். அப்பாத்துரை வ.உ.சி. பற்றிய பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கித் தலைமையுரையாற்றுகையில்: "வ.உ.சி. சுதேசி கப்பல் விடுவதை நிறுத்தினால் ஒரு லட்சம் ரூபாயும் பல சலுகைகளும் தருவதாகக் கூறிய ஆங்கிலேயருக்கு இலட்சியம்தான் பெரிது இலட்சங்கள் அல்ல எனக் கூறிய வ.உ.சி. அவர்களின் இலட்சியத்தையும், சிறையில் அன்னார் பட்ட துயரங்களையும், பாராட்டுகின்றேன்" என்றார்.

கோவில்பட்டி துணை ஆட்சித் தலைவர் திரு சன்வந்த்ராம், புலவர் தமிழ்க்கனல், டி.எஸ். எம்.ஓ. அசன், எஸ். எம். எம். சுந்தரம் ஆகியோர் வ.உ.சி. அவர்களின் சிறப்பு பற்றியும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கப்பலோட்டிய தமிழனுக்குச் சிறப்பு செய்கின்ற வகையில் நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து வ.உ. சிதம்பரனார் மாவட்டம் என பிரிக்கப்படும் என்றமைக்கு நன்றி தெரிவித்தும் சிறப்புரையாற்றினார்.

செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகத்தின் சார்பாக அரசின் சாதனை விளக்கப் படக்காட்சி நடைபெற, விழா இனிதே முடிவுற்றது.



## சேமிப்பீர்! பயனடைவீர்!

**அ. பாஸ்கரன்**
மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர்
(ஊ.வ.) புதுக்கோட்டை.



அலைகடலும் கரையுடைத்து அழிவு செய்ய
ஆர்ப்பரிக்கும் காட்டாற்று வெள்ளமெல் லாம்
பலதுளியால் ஆன பெரு வெள்ளமென்றே
பலகாலம் நாமறிவோம் ஆயின் என்ன!
கால மழை வருமுன்னே புற்றினுக்குள்
காணுகின்ற உணவையெலாம் சேர்த்தே வைக்கும்
சிலமுடை எறும்பினது வாழ்வு தன்னைச்
சிந்தித்துப்பயனடைய வேண்டுமென்பேன்!
அறிவறிந்த மக்களென நாட்டிலுள்ள
அனைவருமே உயர்ந்திடவும் வேண்டுமென்றால்
வரவறிந்து வாழ்வதுதான் முறையேயாகும்
வருங்காலம் என்பதுவும் அவர்க்கு வுண்டு!
எப்படியும் வாழ்ந்திடலாம் என்றேயெண்ணி
இடைமுடிவு பல வழியில் செய்தே வாழும்
செப்படிதான் வித்தையினைச் செய்யு மாந்தர்
சில காலம் மானிடராய் வாழ்ந்திருப்பர்!
வருவாயில் ஒரு சிறிய பாகம் தன்னை
வகையாகசேர்த்திடுதல் முறையேயாகும்
பெருவாழ்வு வாழ்வதற்கும் அதுவே நல்ல,
பிறந்ததிரு நாட்டினுக்கும் பெருமையாகும்!





இராமநாதபுரம் மாவட்டத்தில் 1983-84ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்டத்திற்காகச் சிறப்புப் பணி ஆற்றியமைக்காக, மாவட்ட அளவில் முதல் பரிசை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களிடமிருந்து இக்கவிதை ஆசிரியர் பெறுகிறார்.



## பேச்சுக்கோரு புலவன்

பேச்சிற் கனலடிக்கும்
பெய்யுமழை காலிறங்கும்
வீச்சொன்றில் அறியாமை
வீழும் அலறித் துடிக்கும்

அளந்து வரும்சொற்கள்
ஆழ்ந்த பொருள், இருளூடே
பிறந்துவரும் மின்வெட்டுப்
பேச்சுக் கொருபுலவன்

அண்ணாவென்றே இளைஞர்
அன்போடரு கணைவார்
பண்புடைய சொல் ஒன்றாற்
பச்சையன்பு பாய்ச்சிடுவார்

சிந்தனையே மாந்தர்க்குச்
சிறப்பருள்வ தாதலினால்
சிந்தனையும் சொல்திறனும்
சேர்க்குமவர்ப் போற்றுகிறோம்.

— திருலோக சீதாராம்

### தமிழக முதலமைச்சர்
### ஸ்ரீ அண்ணாதுரையின் மறைவுக்குப் பரிதாபம்.

எந்த பத்ரிகையை யெடுத்தாலும் கண்ணீர் வெள்ளமும் கதறலுமாய்க் காண்கிற தந்தோ! அவர் பிறந்தவாறும் வளர்ந்தவாறும் காஞ்சீபுரவாசிகளுள் ஒருவனான் நான் நன்கு அறிவேன். பலகால் சந்தித்துப்பேசின பேச்சுக்களை அவர் அதிகார பதவியேற்ற மறுநாளே எனக்கு நினைவூட்டி யெழுதிய அன்புவெள்ளமான கடிதம் "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு இடிந்து உகும்" என்கிற ஆழ்வார் பாசுரத்தைச் சொல்லிச் சொல்லிக் கதறச் செய்கின்றது. நான் சமாசார பத்திரிகைகளை வாசிப்பதில்லையென்பதை யறிந்த எனது உயிர்நண்பரொருவர் சென்னையிலிருந்து 4-2-69 செவ்வாய்க்கிழமை வெளியிடான சுதேசமித்திரனைக் கொடுத்தனுப்பி இதில் சில வரிகளையாவது வாசிக்க வேணுமென்று தெரிவித்திருந்தார். ஒரு வரியையும் விடத்தோன்றாமல் முழுதும் படித்து முடித்தேன். "இன்று நீ போக என்னெஞ்சமிருபிளவாய்ப் போகாதே நிற்குமாறே" என்று தயரதன் கதறியதாகக் குலசேகரர் பாடியதைப் பாடி நின்றேன். ... (*)

காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கரம் உ. வே.
அண்ணங்கராச்சாரியார் வெளியிட்டு வந்த
"ராமாநுஜன்" என்ற மாத பத்திரிகையில்
அண்ணா அவர்களின் மறைவுக்கு அனுதாபம்
தெரிவித்து வெளியிட்ட பரங்கற் செய்தி



தகவல்: பட்டுக்குட்டி முதலியார்



# என்னைக் கவர்ந்த அண்ணா



**1944**-ஆம் ஆண்டில் அண்ணாவோடு காஞ்சியில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். "திராவிட நாடு" வார இதழ் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திராவிட நாடு பத்திரிகையில் ஒரு வாரத்திற்கான செய்திகளையும், கட்டுரைகளையும் இரண்டு மூன்று நாட்களில் எழுதித் தந்து விடுவார் அண்ணா அவர்கள். சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வெளியூர்களில் பேசுவதற்காகக் கூட்டங்களுக்குத் தேதி கொடுப்பார். எங்கு சென்றாலும் என்னையும் உடன் அழைத்துச் செல்வார்.

ஈரோட்டிலே, பொதுக்கூட்டங்களிலே கலந்து கொள்ள காஞ்சியிலிருந்து, பஸ்ஸில் வாலாஜாப் பேட்டைக்குச் சென்று அங்கிருந்து வாலாஜாப் பேட்டை ரயில்வே நிலையத்திற்குச் செல்ல குதிரை வண்டியில் இரண்டு மூன்று மைல்களுக்கு மேல் பிரயாணம் செய்து, வாலாஜா ரயில்வே சந்திப்பில் ரயிலேறி ஈரோடு சென்றோம்.

இதற்கிடையில் இரவு 7 மணிக்கு வாலாஜாப்பேட்டையில் பஸ் நிலையத்தின் அருகில் இருந்த சிறிய கூரை வேய்ந்த உணவு விடுதியில், உணவருந்தினோம். அந்த உணவு விடுதியில் மின்விளக்கில்லை - மண்ணால் செய்யப்பட்ட சட்டி விளக்கு குறைந்த அளவு வெளிச்சத்தைத் தந்து கொண்டிருக்கிறது.

காய்ந்த தையல் இலைகள் போடப்பட்டன. சமையற்கட்டிலிருந்து, ஒரு அம்மையார் வெளியே வராமல் தேய்ந்த தெலுங்குமொழியில் பத்துவயது நிரம்பிய சிறுமியிடம் - சோறும் தொடுகறியும் குழம்பும் தந்தனுப்பி எங்களுக்கு பரிமாறச் சொல்கிறார். எப்போதோ-ஆந்திரப் பகுதியிலிருந்து இங்குவந்து குடியேறியவர்களாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் பேசிய கொச்சைத் தெலுங்கிலிருந்து புரிந்து கொள்ள முடிந்தது.

எங்களுக்குப் பரிமாறிய குழந்தை பார்ப்பதற்கு அழகாக இருந்தாள். நல்ல சிவப்பு நிறம். ஆனால் வளர்ச்சியில்லாத வறுமைத் தோற்றம் - கண்களிலே ஓர் ஒளி-ஆனால் முகத்திலே, ஏழ்மையின் ரேகைகள் பதிந்திருந்தன. அந்தக் குழந்தையிடம் அண்ணா அவர்கள் தெலுங்கிலே பேசுகிறார். இந்தக் குழந்தை எவ்வளவு அழகாக இருக்கிறாள்? இல்லாக் கொடுமையால் -பிஞ்சு வயதிலே, வேலை செய்கிறாள் என்று பரிவுடன் நோக்குகிறார். அந்தக் குடும்பத்தின் நிலைமையைச் சிந்தித்தவராய் அரைகுறையாகச் சாப்பிடுகிறார்.



அந்த நேரத்தில் 'அண்ணா குழம்பு ஊசிப்போயிருக்கிறது' என்றேன் - 'பேசாமல் சாப்பிடய்யா' என்கிறார் அண்ணா. ஒருவாறு சாப்பிட்டு முடித்து விட்டுக் கை கழுவினோம். உணவிற்கான விலையைக் குறைத்துக் கொடுக்கலாம்; சாப்பாடு நன்றாக இல்லை; குழம்பெல்லாம் கெட்டிருக்கிறது என்றேன் - அண்ணா அவர்கள் சிறிது கோபத்துடன் 'பேசாமல் உள்ள பணத்தைக் கொடுத்துவிட்டு வா நாராயணசாமி!' என அன்புக் கட்டளையிடுகிறார்.

அவர்தான், அந்த ஒப்பற்ற மனிதாபிமானி தான் என்னைக் கவர்ந்த அண்ணா!

அண்ணாவின் எண்ணங்களை நிறைவேற்றும் மாபெரும் மக்கள் தலைவராக, பள்ளியில் பயிலும் மாணவச் சிறார்கள் பசியால் வாடி மெலிகின்றனரே என மனமிக வாடி, சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து பிஞ்சுக் குழந்தைகளின் நலத்தில் நாட்டங் கொண்ட பொன்மனச் செம்மலாக ஈடிணையிற் சிறந்த தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விளங்குகிறார்கள். அவர்தம் தூய தொண்டுள்ளத்தில் என்னைக் கவர்ந்த அண்ணா என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார.

நடிகமணி
டி. வி. நாராயணசாமி
செயலர்,
தமிழ்நாடு
இயல் இசை நாடக மன்றம்



# பேரறிஞர் குறித்துப் பெருமக்கள்

## கருத்துப்புரட்சிக்கோரு வீரர்

தோழர் அண்ணாதுரை கருத்துப்புரட்சி செய்து வரும் வீரர். அவர் எழுதும் தலையங் கங்களிலும் பேசும் பேச்சுக்களிலும் புரட்சி வித்துக்கள் நிறைந்துள்ளன. அவை படிப்பவர் உள்ளத்திலும் கேட்பவர் நெஞ்சத்திலும் கருத்துப் புரட்சி விதைத்து வளர்கின்றன. தோழர் அண்ணாதுரை கடல்போன்ற பெருங் கூட்டங் களில் பேசும் சொற்கொண்டல். அவருடைய சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டு கடல் ஒரே அமைதியாக இருக்கும். இடையிடையே கைதட்டும் ஆரவாரம் ஒன்றே அந்தத் தலைக் கடலிடையே கேட்கப்படும். மணிக்கணக்காகப் பேச்சு நிகழும். ஆனால், பேசுகின்றவரிடத்திலும் இரத்தக் கொதிப்பும் துடிப்பும் குறைவு. கேட் கின்றவரிடத்திலும் இரத்தக் கொதிப்பும் துடிப்பும் குறைவு. காரணம் என்ன? அவரு டைய சொற்கள் அறிவாற்றல் வாய்ந்த சொற்கள்: புரட்சிக் கருத்துக்கள் பொதிந்த சொற்கள். ஆகையால் வெறும் இரத்தக் கொதிப்பையும் துடிப்பையும் உண்டாக்கி நின்று விடுவதில்லை; அவற்றைக் கடந்து சென்று மூளையைத் தாக்குகின்றன. அந்நிலையில் அறிவு துடிக்கின்றது; எண்ணங்கள் கொதித்து எழுகின்றன. ஆகையால் அவருடைய சொற் பொழிவு கற்றோருக்கு அறிவு விருந்து ஆகின்றது. கல்லாதவருக்கும் பகுத்தறிவுத் தூண்டுகோல் ஆகின்றது; கருத்து வேறுபாடு உடையவர் களுக்கும் ஆராய்ச்சிச் சுடர்விளக்கு ஆகின்றது;

--டாக்டர் மு. வரதராசன்



## தமிழ்த் தோன்றல்

"சீரிய கூரிய தீஞ்சொல்" என்பது கம்பன் வழங்கும் அழகிய தொடர்களுள் ஒன்று. இதனை அவன் வழங்கிய இடமும் காலமும் வேறு. ஆயினும் இதன் பொருளும் கருத்தும் அவ்விடம் காலம் முதலிய இயல்பு நோக்காது உண்மையும் அது நிறைந்த உரையும் இரண்டும் செறிந்த செயலும் ஒருங்கு நிகழும் இடங்கட்கு ஏற்ற வகையில அமைந்துள்ளன. பல அறிஞர்கள் பால் உண்மையும் உரையும் செயலும் ஒளிருங் கால் சீர்மையும் கூர்மையும் இனிமையும் நிறைந்த சொற்கள் பிறந்து நல்ல பயனை விளைவிக் கின்றன. அவருள் அன்பர் திரு அண்ணா துரையும் ஒருவர், அவர்பால் சீரிய கூரிய தீஞ்சொற்கள் பெருஞ்செல்வமாக நிலவுகின்றன.



செல்வத்துப்பயன் ஈதல் என்பர். திரு. அண்ணா துரையும் பெருஞ்செல்வமாகிய இச்சொற்களை வரையாது நிரம்ப வழங்குகின்றார். தமிழினஞ் செல்வத் தோன்றல்கள் அவற்றை விரைந்து மனங் கொள்ள ஏற்றுத் தொழில் கேட்கும் தமிழ் நலம் எயதுகின்றனர். இதனைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்து வரும் என் போன்றோர் உள்ளத்தில், எதிர்காலத் தமிழகம் இனிய காட்சி வழங்கக் கண்டு இன்புறுகின்றனர். ஒரு நல்ல சுயமரியாதைக்காரராகக் காட்சி வழங்கி. தூய சுயமரியாதை வீரராய, மான மாண்புடைய கட்டிளந் தமிழ்த் தோன்றலாய் விளங்குகின்றார் திரு. அண்ணாதுரை.

--ஔவை சு. துரைசாமி

## அவரை அடைந்தது பெரும்பேறு !

அண்ணா என்ற சாதாரண வார்த்தைக்கு ஒரு மந்திர சக்தி, கவர்ச்சி, தனி அழகு இன்பம், அன்பு, ஒழுக்கம் எல்லாம் ஏற்பட்டு விடும். வயதில் குறைந்தவர்களும், மிகுந்தவர் களும், அண்ணாவென்றே நமது அண்ணாவை அழைக்கிறார்கள். திராவிடர்களிடையே "அண்ணா"என்றால் அண்ணாத்துரை அவர்கள் தான்-எல்லோருக்கும் அண்ணாவாகும் தகுதி அவருக்குண்டு.

"சிலர் தலைவர்களாகப் பிறக்கிறார்கள்;சிலர் தலைவர்களாக ஆக்கப்படுகிறார்கள்" என்று ஒரு அறிஞர் கூறியிருக்கின்றார். இதையே "சிலர் அண்ணாவாகப் பிறக்கிறார்கள்; பலர் அண்ணாவாக ஆக்கப்படுகிறார்கள்" என்று மாற்றிச் சொல்லலாமே! இந்த முறையில் தோழர் அண்ணாதுரை அண்ணாவாகவே நம்மிடையே பிறந்துவிட்டார்.

உருவத்தில் தமிழன்; உயர் குணத்தில் தமிழன்; அன்பு என்னும் பண்பில் தமிழன்; அடக்கத்தில் தமிழன்: ஆண்மையில் தமிழன் நமது அண்ணா. பரந்த நெற்றி, முறுக்கான மெல்லிய மீசை; விசாலமான முகம், கட்டு மஸ்தான உடற்கட்டு, பந்தயக் குதிரை போன்ற விறுவிறுப்பான நடை. பணிவான நடவடிக்கை, வீர உள்ளம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர் தோழர் அண்ணாதுரை.

தமிழர் சமுகத்திலே இடையே வந்து புகுந்து அல்லற்படுத்தும் மூடப்பழக்க வழக்கங்களை வேரோடு கிள்ளியெறியும் பாதையில் அண்ணா வின் எழுத்தும் பேச்சும் நிரம்ப உதவி புரிந்து வந்திருக்கின்றன.



அண்ணாவைப் பற்றி எவ்வளவோ சொல்ல லாம். ஒரே வார்த்தையில் சொல்வதாயிருந்தால் தோழர் அண்ணாதுரையை நாம் அடைந்தது தனிப்பாக்கியம்தான்.

—கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன்

## கலையறிந்தவர்

அண்ணாதுரை கலையறிந்தவர்! தமிழ் நாட்டின் பழைய நிலையறிந்தவர். "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று மார் தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்ற லாகாது; காளைகளாய்க் களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர் அவர். தமிழ்க் குலத்தை அரிக்கும் வேர்ப் புழுக்களை அழித்தாலன்றித் தமிழகம் தழைக்கு மாறில்லை; ஊழ்வினையே பேசி ஆள்வினை யற்றிருக்கு மளவும் நாம் உய்யுமாறில்லை என்று உறுதி யாகக் கருதுகின்றவர் அவர்.

—ரா. பி. சேதுப்பிள்ளை



# தமிழர்களின் பொதுச் சொத்து

அண்ணாவின் எழுத்து, தலைசிறந்த இலக்கியமாகவும், கலைக்கருவூலமாகவும், கற்பனைக் களஞ்சியமாகவும், வரலாற்றின் வடிகாலாகவும், அரசியல் ஆராய்ச்சியாகவும் புரட்சிப் பொறியாகவும், பகுத்தறிவுப் பட்டறையாகவும், சீர்திருத்தச் செல்வமாகவும், பல்சுவைப் பகுதியாகவும் விளங்கும்.

அண்ணா இத்தகுதியறியாத் தமிழ்நாட்டில் பிறந்திருக்காமல் மேல்நாட்டில் பிறந்திருப்பாரேயானால் ''நோபல் பரிசு'' பெற்றுப் பல ஆண்டுகள் ஆகி இருக்கும். சுமக்க முடியாத பல பல்கலைக் கழகங்கள் கொடுத்த பட்டங்கள் அடுக்குப் பாத்திரங்கள் போலத் தலை மேலிருந்து அழுத்திக் கொண்டிருக்கும், இன்னும் எத்தனையோ பட்டங்கள், பரிசுகள்.

அண்ணா தமிழ்நாட்டின் அண்ணா. தமிழர்களின் பொதுச்சொத்து. தமிழ் மக்களின் அறிவுக் களஞ்சியம். தமிழர்களின் முன்னேற்றப் பாதை. பகுத்தறிவுத் திறவுக்கோல். கலைக் கலங்கரை விளக்கம்.

—புலவர் குழந்தை



# இளைஞர்களைக் கவர்ந்த ஏந்தல்

சீர்யமரியாதை மாணவர்கள், இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்கு, செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும் எழுத்து வன்மையும். இளைய உள்ளங்களுக்கு ருசிததே, இதற்குக் காரணம். அண்ணாதுரையின் பேச்சிலும் எழுத்திலும், புத்துணர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்கள் சூழ்ந்தனர்.

அண்ணாதுரை, சமூக சீர்திருத்தத்திற்குப் புதிய மெருகு கொடுத்து, புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகாவிட்டால் கட்சிக்கு வளர்ச்சியிலலை, எனக் கண்டார். அதனால் புதிய அமைப்புக்குப் பூர்வாங்க வேலைகளைப் பூர்த்தி செய்தார்.

—ப. ஜீவானந்தம்



# சொற் செல்வர்

உயர்திரு அண்ணாதுரையவர்கள் என் அரிய நண்பர், அறிவுக் கடல், கற்பனைக் களஞ்சியம், கலா வல்லுநர், ஒப்புயர்வற்ற எழுத்தோவியர். இது மட்டுமா? நல்ல நடிகருங் கூட;

தமிழ்நாட்டின் முன்னேற்றம் கருதிப்பெரிதும் பாடுபட்டு வருகிறார். திரு அண்ணா உள்ளதை உள்ளவாறே எடுத்துரைக்கும் உள்ளம் படைத்தவர். கேட்பாரைப் பிணிக்கவைக்கும் சொற் செல்வர். எப்பொருளையும் அமைதியாக, ஆனால் ஆணித்தரமாக வாதமிடுவதில் இவரை மேல்நாட்டுப் புருடஸ்க்கு ஒப்பிடலாம். அத்தகைய அறிஞருக்குத் தமிழ்நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது.

—எம். கே. தியாகராஜ பாகவதர்.






# என் துணைவர் அண்ணா

திருமதி இராணி அண்ணாதுரை சந்திப்பு

'தமிழரசு' வெளியிடும் பேரறிஞர் அண்ணா பவளவிழாச் சிறப்பிதழில், அமரர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களிடம் ஒரு கட்டுரை எழுதி வாங்கிப் போடுவது சிறப்பாயிருக்குமெனக் கருதினோம். ஆனால், அவர்கள் உடல் நலிவுற்று, அண்ணா நகரிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்டிருந்ததை அறிந்தபோது அவர்களுக்காகவும், எங்கள் முயற்சி கைகூடாததற்காகவும் வருந்தினோம்.

ஆனாலும் என்ன? அவர்களைச் சந்தித்து பேசக்கூடிய சக்தியோடிருப்பார்களேயானால் ஏதேனும் புதிதாகப் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி விவரங்களைக் கேட்டறிந்து அதையேனும் வெளியிடலாமே என எண்ணினோம்; எங்கள் முயற்சி வீண்போகவில்லை.

எங்கள் கேள்விகள், அவற்றிற்கெல்லாம் புது உற்சாகம் வரப்பெற்று அவர்கள் அளித்த பதில்கள் வருமாறு:

**வினா:** பேரறிஞர் அண்ணா அவர்களை மணந்தபோது உங்கள் வயதென்ன- இப்போது என்ன வயது?

**விடை:** அப்போது பதினான்கு; இப்போது 68

**வினா:** திருமணத்திற்கு முன்னாலேயே நீங்கள் அவர்களுடைய எழுத்துக்களைப் படித்திருக்கிறீர்களா? சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறீர்களா?

**விடை:** திருமணத்துக்குப் பின்னாலேஇரண்டு வருஷம் கழிச்சுத்தான் அவங்க படிப்பு முடிஞ்சது. படித்துக்கொண்டிருந்த நேரமாகையால் அவர்கள் அப்போதெல்லாம் அதிகம் எழுதியதுமில்லை; பேசியதுமில்லை. எல்லாம் படிப்பு முடிஞ்ச பிறகுதான்.

**வினா:** தான் எழுதியதை அண்ணா உங்களிடம் கொடுத்து, 'எப்படியிருக்கிறது'



என்று கேட்டதுண்டா?

விடை: (சிரிப்போடு) அப்படியெல்லாம் கேட்டதுமில்லை; நான் ரசிக்கவேண்டுமென்று அவர்கள் எதையும் எழுதியதுமில்லை.

வினா: மற்றவர்கள் எழுதிய புத்தகங்கள் எதையாவது தந்து, 'படித்துப் பார்த்துச் சொல்' என்பார்களா?

விடை: பெரும்பாலும் சின்ன சின்ன ஆங்கிலப் புத்தகங்களைத் தந்து படிக்கச் சொல்லுவார்கள். சில புத்தகங்களை படிப்பேன். சில புத்தகங்கள் பிடிக்காது. இதை ஏன் படிக்கவில்லை என்று கேட்டால், பிடிக்கவில்லை என்பேன். உடனே அதைக் கிழித்துப் போட்டு விடுவார்கள்.



அண்ணா சதுக்கத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் மரியாதை செலுத்துதல்.

வினா: எதுபோன்ற புத்தகங்களை அண்ணா அதிகம் படிப்பார்?

விடை: இன்னது என்று கணக்கில்லை; எந்தப் புத்தகமானாலும் படிப்பார்; மருத்துவப் புத்தகங்களைக்கூட அவர் விட்டு வைத்ததில்லை.

வினா: வெளிப்பிரச்னைகளாலோ, வீட்டிலுள்ள பிரச்னைகளாலோ அண்ணாவுக்குக் கோபம் ஏற்பட்டதுண்டா?

விடை: அதைக் கோபம் என்று சொல்ல முடியாது; வருத்தம் ஏற்படும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், அவர் அமை




தியாக இருந்து விடுவார்; அல்லது சரியாகச் சாப்பிடமாட்டார். அப்படியிருந்தாலே நாங்களெல்லாம் என்னவோ ஏதோ என்று தெரிந்து கொள்ளுவோம். அவர்களிடமே அது பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவதற்குள் எங்களுக்குப் போதும் போதுமென்று ஆகிவிடும்.!

வினா: வீட்டைப் பற்றி, சொந்தங்கள் பற்றி அண்ணா அக்கறையோடு இருந்ததுண்டா?

விடை: எப்பவும் நாடு பற்றியும் நாட்டு மக்களைப் பற்றியும்தான் நினைப்பு. வீட்டைப் பற்றிக் கொஞ்சமும் அவருக்குக் கவலை இருந்ததில்லை. (துயரம் தோய்ந்த குரலில்) கடைசியா.. உடம்பு முடியாமல் படுக்கையில் விழுந்த நேரத்துலதான் அந்தக் கவலையை அவங்ககிட்ட பார்க்க முடிந்தது.

வினா: அண்ணா ,அடிக்கடி சினிமா - டிராமான்னு போவதுண்டா?

விடை: நிறைய உண்டு. ஆங்கிலப் படங்களைத்தான் அதிகம் பார்ப்பாங்க. தமிழ்ப்படம்னா...எம்.ஜி.ஆர். அவர்கள் படம்தான் நிறையப் பார்த்திருப்பாங்க.

வினா: அப்படிப் போகும்போது உங்களையும் கூட அழைத்துச் செல்வதுண்டா?

விடை: (சிரிப்போடு) நண்பர்களோட படம் பார்க்கத்தான் அவங்களுக்குப் பிடிக்கும்.முப்பத்து ஒன்பது வருஷ காலத்துல அவங்களும் நானும் சேர்ந்து நான்கைந்து படம் பார்த்திருப்போம்னு ஞாபகம். அவங்க படம் பார்த்துட்டு வந்தா, வீட்ல அது பத்திச் சொல்லுவாங்க, நல்ல படமானா நீ போய் பாருமபாங்க. நானும் மாமியும்தான் சினிமாவுக்கெல்லாம் போவோம்.





(கவலையுடன்)...இப்ப அவங்க... போயிட்டப்புறம்.. அவங்க எழுதின படங்களையெல்லாம் மறுபடி பார்க்கணும்னு எங்களுக்கெல்லாம் ரொம்பவும் ஆசை.

வினா: மாண்புமிகு முதல்வர் நடித்த படம் பற்றிக் குறிப்பிட்டீர்கள். இப்போது முதல்வர் அவர்கள் உங்களையோ, நீங்கள் அவர்களையோ பார்த்துப் பழகுவது உண்டா?

விடை: உண்டு. எப்போதாவது வீட்டுக்கு வந்து எங்களையெல்லாம் நலம் விசாரிப்பார். அடிக்கடி தொலைபேசி மூலமும் பேசுவதுண்டு. எங்கள் நலம், பிள்ளைகளின் வளர்ச்சி, பேரப்பிள்ளைகளின் படிப்பு பற்றியெல்லாம் ஆர்வத்தோடு கேட்பார்கள்.

வினா: அண்ணா அவர்கள் எப்படிப்பட்ட சாப்பாட்டை விரும்பிச் சாப்பிடுவார்கள்?

விடை: அப்படிக் குறிப்பாகச் சொல்லுவதற்கில்லை. இன்னது செய்தால் பிடிக்கும் என்ற நிலையும் இல்லை. சைவம் அசைவம் எல்லாம் உண்டு. பெரும்பாலும் கீரை வகைகளை விரும்பிச் சாப்பிடுவார்கள். சாப்பிடும்போது சின்ன குழந்தை சாப்பிடுவதுபோல் தான் சாப்பிடுவார்கள். சட்டையில் சாதமோ, கறியோ சிந்திவிட்டால் அதை நாசூக்காகத் தட்டிவிடத் தெரியாது. துடைப்பதாக நினைத்துச் சட்டை முழுவதும் இழுப்பிக் கொள்வார்கள்.

வினா: எதுபோன்ற சட்டைகள் அண்ணாவுக்குப் பிடிக்கும்?

விடை: இதிலும் தனிப்படச் சொல்ல எதுவும் இல்லை. கைத்தறிச் சட்டை தவிர வேறு எதையும் அவர்கள் கடைசி வரை அணிந்தது கிடையாது. சட்டை வேட்டி அழுக்கில்லாமல் இருக்க வேண்டும் என்பதெல்லாம் இல்லை; அழுக்காயிருக்கே என்று நாங்கள் சொன்னாலும், பரவாயில்லை என்று சொல்லிவிடுவார்கள். பித்தான்களைக் கூட மாற்றி மாற்றிப்போட்டுக் கொண்டு விடுவதும் உண்டு(சிரிப்பு).

வினா:
அவர்கள் ஆழ்ந்து படிக்கும்போதோ எழுதும்போதோ குறுக்கே நீங்கள் யாராவது பேசினால்-அல்லது குழந்தைகள் விளையாடித் தொல்லைப் படுத்தினால் கண்டிப்பார்களா?

விடை:
அதெல்லாம் கிடையாது. அவருக்கு குழந்தைகள் என்றாலே ரொம்பவும் பிடிக்கும். சிலபேரைப் போல எழுதுவதற்கென்று தனியே ஓட்டலில் அறை எடுத்துத் தங்கியதெல்லாம் கிடையாது. வீட்டில், எல்லோரும் தூங்கிவிட்ட பிறகுதான் பெரும்பாலும் எழுதுவார்கள். படிப்பார்கள். நாங்கள் எழுகிறபோது அவர் தூங்குவார். பகல் நேரத்திலும் எழுதுவதுண்டு. அவர்கள் எழுதி எழுதிக் கீழே போடும் தாள்களைப் பேத்தி கண்மணி எடுத்து அடுக்குவாள். பேரன் மலர் அவைகளைப் பக்கப்படி வரிசைப் படுத்துவான். (அந்தக் காட்சியை நினைவு கூர்வதுபோல் சிறிது நிதானித்துச் சிரித்துக் கொள்கிறார்கள்).

வினா: சினிமாவுக்கு எழுத என்று கோவைக்கெல்லாம் சென்று அண்ணா தங்கினார்களே;அப்போதெல்லாம் தனியேதான் போனார்களா?

விடை: இல்லை, நான் மாமியெல்லாம்கூட அவர்களோடு போவோம்.

அண்ணாவின் நினைவில்லத்தில் அண்ணாவின் துணைவியார்.






**வினா:** எழுதும்போது நீங்கள் எந்த விதத்திலாவது அண்ணாவுக்கு உதவுவது உண்டா?

**விடை:** நான் உதவ என்னங்க இருக்கு? அடிக்கடி டீ கேட்பார். போட்டுத் தருவோம். அதான் எங்க உதவி. அவங்களுக்கிருந்த பொடிப் பழக்கம்தான் உங்களுக்குத் தெரியும்; வேற பழக்கம் எதுவுமில்லை.

**வினா:** அண்ணா, பெரியாரிடம் இருந்தவராயிற்றே; அவரைப் போல... ஏதாவது சேர்த்து வைத்திருந்தார்களா?

**விடை:** என்னத்தைச் சேர்த்து வெச்சாங்க; அவங்க சேர்த்து வைத்திருந்ததெல்லாம் பிள்ளைங்களைத்தான். அதுங்க சம்பாத்தியம்தான் இப்ப எங்களுக்கு. எவ்வளவு பணம் வருது போவுதுங்கிற கணக்கே அவங்களுக்குத் தெரியாது. கழட்டி, துவைக்கப்போடற அழுக்குச் சட்டைங்கள்ல ஐம்பது நூறு இருக்கும். நாங்க எடுத்து வெச்சிகிட்டு வேடிக்கை காட்டுறதுண்டு. பெரியார்கிட்ட அவர் கத்துக்கிட்டது பகுத்தறிவும் சுயமரியாதையும் மட்டுமில்லே; தினசரி குளிக்காததும்தான்! (சிரிப்பு)

**வினா:** அவங்க எழுதின புத்தகங்கள் மூலம் 'ரைட்ஸ்' பணம் வருமே?

**விடை:** யாருமே சரியாய்த் தந்ததில்லை. ரெண்டு மாசத்துக்கு முன்னால ஒரு பதிப்பாளர் நூத்திப் பதிமூணு ரூபா கொடுத்தார். வித்ததா அவங்க சொல்றதுதானேங்க கணக்கு? நாங்களே அந்தப் புத்தகங்களைப் போடலாம்னு முடிவு பண்ணி சிறுகதைகள், அரசியல் கட்டுரைகள்னு ரெண்டு புத்தகம் போட்டோம். அதுக்குமேல புத்தகம் போட வசதியில்லே. அரசாங்கம் உதவினா நல்லது. சிலபேர் அவர்கிட்ட எப்பவோ வாங்கின உரிமையை வெச்சிக்கிட்டு இப்பவும் புத்தகமா போட்டு விக்கிறாங்க; அவங்க மேல நடவடிக்கை எடுக்கிற சக்தியும் எங்களுக்கு இல்லே!

**வினா:** சுயமரியாதை, பகுத்தறிவு பற்றியெல்லாம் சொன்னீர்கள், உங்கள் வீட்டில் யாருமே ஆத்திகப் பற்றோடு இல்லையா?

**விடை:** (சிரிப்போடு) மருமகள் யாராவது கோயிலுக்குப் போகக் கூடாதா என்று கேட்பதுண்டு; எனக்கு அதெல்லாம் பிடிக்காது, அதுல நம்பிக்கையும் இல்லை. உன் மனசுக்குச் சரின்னுபட்டா அதை நான் தடுக்கப் போறதில்லை என்றுதான் சொல்லுவார் அவர். கோபிக்கமாட்டார்.

**வினா;** பொதுக்கூட்டங்களில் தரப்படும் அன்பளிப்புகளை அண்ணா என்ன செய்வார்?

**விடை:** அதை வாங்கும் நேரத்தோடு சரி; அதற்கப்புறம் மறந்துவிடுவார். போடுகிற வேட்டி துண்டெல்லாம் கூட எங்கள் வீட்டுக்கு அப்படியே வந்து சேராது. யாராவது ஜரிகை வேட்டி போட்டது நினைப்பிருக்கும்; வீட்டுக்கு வந்ததும் அதை எடுத்து மகனிடம் கொடு என்பார்கள். தேடினால் அந்த வேட்டியே இருக்காது. 'சரி யாராவது எடுத்துக்கிட்டிருப்பாங்க. விட்டுடு' என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டு அடுத்த வேலைகளைப் பார்க்க ஆரம்பித்து விடுவார்.

**வினா:** அண்ணாவோடு மிகநெருங்கிய நட்புக் கொண்டிருந்தவர்கள் யாரெல்லாம் என்று சொல்ல முடியுமா?

**விடை:** சி.வி.ராஜகோபால், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர். ,கே.டி.எஸ்.மணி, நடிகமணி டி.வி.என். பேராசிரியர்கள் மா.கி.தசரதன், கந்தசாமி, வில்லாளன், கல்யாணசுந்தரம், ராஜாராம் இன்னும் எவ்வளவோ பேர்.

**வினா:** அண்ணா அவர்கள் அரசியலுக்கு வராமல் இருந்திருந்தால்?....

**விடை;** தமிழ் இலக்கிய உலகம் நிறையப் பலன் பெற்றிருக்கும்.

**வினா:** வேறு ஏதாவது சொல்ல விரும்பினால்

**விடை:** இந்தப் பவள விழா ஆண்டில், அரசு மூலம் கட்டித் திறக்கப்படும் கட்டடங்களுக்கெல்லாம் அவர்கள் பெயரே இடப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருப்பது கண்டு நாங்களெல்லாம் பெருமகிழ்ச்சிகொள்கிறோம். பெருமைப்படுகிறோம். அவர்கள் இந்த நாட்டுக்குச் செய்யக் கருதியிருந்த நற்பணிகள் இப்போது ஒவ்வொன்றாகச் செய்யப்பட்டு வருவதும் எங்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நலமோடு வாழவும், நாட்டு மக்கள் நலமெலாம் பெறவும் என் கணவர் சார்பில் 'தமிழரசு' மூலம் வாழ்த்துகிறேன்.

**சந்திப்பு : பி. எல். ராஜேந்திரன்**

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

1567 பேர்'' என்ற தகவலையும் கூறினார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில், ''இராசராசன் மிகவும் பொறுமையான அரசியல்வாதியாக இருந்தவன். சிறிய தந்தையாருக்கு ஆட்சியைத் தந்து 16 ஆண்டுகள் காத்திருந்தான். முதன் முதலில் வங்காளக் குடாக் கடலில் கப்பலை ஓட்டியவன். மிகப் பெரிய ஜனநாயகம் இந்த மண்ணில் வழிகோலுவதற்கு வழிகாட்டியவன்'' என்றார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், ''இராசராசன் பெண்களுக்குப் பெருமை தந்தான். உழைப்பாளிகளுக்கு மதிப்பளித்தான். தேவாரத்தை மீட்டுத் தந்தான்'' என்றார்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில், ''தலைக்கென வாழாத பிறர்க்குரியாளனாக வாழ்ந்தான் இராசராசன்'' என்றார்.

திரு ஐயாறு வாண்டையார் எம். எல். ஏ. விழா சிறப்பாக நடைபெற உதவிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, வெள்ளிக் கிரீடம் வழங்கினார்.

திரு ப.உ.சண்முகம் பேசுகையில், ''இராசராசனின் வீர வரலாறு சரித்திரப் பாடப்புத்தகத்திலே இடம் பெறச் செய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

திரு ஏ.ஆர். மாரிமுத்து பேசுகையில், ''உலகமே வியந்து பாராட்டும் அளவுக்குப் பெரிய கோயிலைப் படைத்தவன் இராசராசன்'' என்றார்.

திரு முகம்மது இஸ்மாயில் எம்.எல்.ஏ. பேசுகையில், ''இராசராசன் மக்களுடைய மன்னனாக விளங்கினான்'' என்றார்.

திரு பாரமலை எம்.எல்.ஏ. பேசுகையில், ''மகத்தான சாதனை படைத்தவர் இராசராசன்'' என்றார்.

திருவாரூர் திரு கே.தங்கராசு பேசுகையில், ''இராசராசனது பொறியியல் கலையை, ஆற்றலை எண்ணி உலகம் வியக்கிறது'' என்றார்.

திரு ஆர். மார்க்கபந்து பேசுகையில், இராசராசனுக்கு விழா எடுத்த தமிழக அரசைப் பாராட்டினார்.

திரு மேகநாதன் பேசுகையில் தமிழக முதல்வரைப் பாராட்டினார்.



16.10.84 'தமிழரசு' இதழில்
**இராசராச சோழன்**
பற்றிய சிறப்புக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

திரு கூத்தக்குடி சண்முகம் பேசுகையில், ''இராசராசன் வரலாறு பாடப்புத்தகத்தில் இடம் பெற வேண்டும்'' என்றார்.

திரு செய்குத்தம்பி பேசுகையில், இராசராசனுடைய மரபு உருவாக வேண்டும் என்றார்.

திரு செங்கம் ஜப்பார் பேசுகையில் தமிழகத்தின் பெருமைகளை உயர்த்தும் வகையில் பணியாற்றி வருகிறார் முதல்வர் என்றார்.

திருவாளர்கள் பிரான்சிஸ் ராயன், சக்திதாசன், கிளமெண்ட், தனுஷ்கோடி ராஜா ஆகியோர் இராசராசனுக்கு விழா எடுத்த முதல்வரைப் பாராட்டினார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தஞ்சாவூர்த்தட்டு ஒன்றை வழங்கினார்.

17.9.84 முதல் அரசுக் கலைஞர்களாக நியமிக்கப்பட்ட 12 பேர் இவ்விழாவில் சிறப்பிக்கப்பட்டனர். அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்து தஞ்சாவூர்த் தட்டுகளை வழங்கினார்.

விழாவுக்குச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்த வருவாய் நிர்வாக ஆணையர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சோசம்மா இ.ஆ.ப. ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சாவூர்த் தட்டினை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் நிறைவு விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்—

''இங்கு மேடையில் வைக்கப்பட்டிருக்கும் சிலை கோவிலுக்குள் இருக்கும் ராஜராஜன் சிலைதான். இது புதிய சிலை அல்ல. இராஜராஜனின் புதிய சிலை 6 அடி உயரத்தில் உலோகத்தில் செய்து அடுத்த ஆண்டு கோவிலுக்குள் வைக்கப்படும். அரசு கலைஞர்களாகச் சிலரைத் தேர்ந்தெடுத்து கவுரவப்படுத்தி உள்ளோம்.

''பத்மா சுப்பிரமணியம் பரத நாட்டியத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். இவர் பரிசு பெறும் போது, பரத நாட்டியத்தில் 108 வர்ணம் உண்டு. இங்கு (கோவிலுக்குள்) 21 வர்ணம் தான் சிலையாக வடிக்கப்பட்டுள்ளது. மீதி வர்ணங்களைக் கொண்ட சிலைகளைச் சிற்பமாக அமைக்க வேண்டுமென்றார். முடிந்தால் அவைகளும் சிலையாக, ஓவியமாக அமைக்கப்படும்.

''ராஜராஜனின் வாழ்க்கை வரலாற்றுச் சிறப்புக்களைப் பாடப்புத்தகத்தில் குறிப்பிட வேண்டுமென்று ப.உ.ச. குறிப்பிட்டார். இராஜராஜன் வரலாறு, தனித்தன்மை ஆகியவை பாடப் புத்தகத்தில் இடம் பெற அரசு ஏற்பாடு செய்யும்.

'''பொன்னியின் செல்வன்' கதையைத் திரைப்படமாக எடுக்க நான் திட்டமிட்டு அதற்காக 'ஸ்கிரிப்ட்' எல்லாம் எழுதி வைத்திருக்கிறேன். நான் பொறுப்பில் இருப்பதால் நடிக்க முடியாது. 2 ஆண்டில் எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் அதைப் படமாக எடுக்கும்; வேறு சிலர் நடிப்பார்கள்.

''இராஜராஜன் சிலையைக் கோவிலுக்குள் வைக்க அனுமதி தந்ததற்காகப் பிரதமருக்கு இந்த சமயத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதுள்ள சிலை வரலாற்றுச் சிறப்போடு ஒட்டி இல்லை. வேறு சிலைதான் செய்ய வேண்டும். இதைச் சிலர் அரசியலாக்க முனைகிறார்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

''சரஸ்வதி மகாலில் பாலி மொழியில் உள்ள நூல்களை மொழிபெயர்க்க, பாலிமொழி தெரிந்த அறிஞர்கள் முன்வர வேண்டும். அதற்காகும் செலவை அரசு ஏற்கத் தயார்.''

விழா முடிவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சோசம்மா இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மும்முடிச்சோழன் முடிசூட்டுவிழா எல்லார் இல்லங்களிலும் உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்று விட்டது என்றால் அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!

**நிகழ்ச்சித் தொகுப்பு :**
**—பி. வி. கிரி**




## வேளாங்கண்ணியில் புதிய பேருந்து நிலையம்

தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வேளாங்கண்ணியில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் ஒரு லட்சம் செலவில் கட்டி முடிக்கப் பட்ட புதிய பேருந்து நிலையத்தின் தொடக்க விழா 29-8-84 அன்று நடந்தது. நாகப்பட்டினம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு ச. கதிரேசன் தலைமை வகிக்கவும், தஞ்சாவூர் திட்ட அலுவலர் திரு எம். பிரான்சிஸ் முன்னிலை வகிக்கவும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஒ. பி. சோசம்மா, இ.ஆ.ப. பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்தார். நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு எம். அமிர்தகணேசன் அனைவரையும் வர வேற்றார்.

ஆண்டுதோறும் ஆகஸ்டு திங்கள் 29-ம் தேதி முதல் செப்டம்பர்7-ஆம் தேதிவரை 10 நாட்கள் நடைபெறும் அன்னை ஆரோக்கிய மாதா திருவிழாவிற்கு வருகைதரும் லட்சக் கணக்கான மக்களுக்கு, வேளாங்கண்ணியில் பேருந்து நிலைய வசதியில்லாமலிருந்த குறை பாடு, இப்புதிய பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டதன் மூலம் நீங்கியது.

## சாதிக் கலவரத்தில் மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதல்வர் உதவி

மதுரை மாவட்டம், நிலக் கோட்டை வட்டத்தைச் சார்ந்த மாணிக்கம்பட்டி கிராமத்தில், கடந்த 17-1-1983 அன்று ஆதி திராவிடர்களுக்கும், ஆதி திரா விடர் அல்லாதோருக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தில், திரு காட்டுராஜா (ஆதி திரா விடர்) என்பவர் கொல்லப்பட் டார். மரணமடைந்த மேற் கண்ட திரு காட்டுராஜாவின் குடும்பத்தினரது ஆதரவற்ற நிலையைக் கருதி, திரு காட்டு ராஜாவின் தகப்பனார் திரு பழனியாண்டிக்கு, முதலமைச்ச ரின் பொது நிவாரண நிதியி லிருந்து ரூ. 3000/- வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## கரடி விபத்தில் பாதிக்கப் பட்டவருக்கு நிதி உதவி

வட ஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டத்தைச் சார்ந்த பேரணாம்பட்டு கிராமத் தில் வசிக்கும் திரு கிருஷ்ண மூர்த்திக்குக் கரடி தாக்கியதால் வலது கண்பார்வை பாதிக்கப் பட்டது.

முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 500 திரு கிருஷ்ணமூர்த்தி தாயார் திருமதி செயம்மாள் அவர்களிடம் வழங்கப்பட்டது.





## சேலத்தில் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்க்கையை நடத்திவரும் குடும் பத்தைச் சார்ந்த இளைஞர்களுக் கும், பெண்களுக்கும், சுயமாகத் தொழில் தொடங்க ஊரக வளர்ச் சித் திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. படித்த இளைஞர்கள் அரசுத்துறை உத்தி யோகத்தையே நம்பியிராமல், தாமாகவே ஒரு தொழிலைச் செய்ய வேண்டும் என்ற அடிப் படையிலும் அதன் மூலம் வாழ்க் கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற நோக் கத்திலும் சுயவேலைவாய்ப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வரு கிறது.

இத்திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றி யத்திற்கு 40 நபர் வீதம் மொத் தம் 1,400 நபர்களுக்கு நடப் பாண்டில் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதுடன் பயிற்சி முடிந்த பின்னர் சுயமாக தொழில் தொடங்க ரூ. 10,000 வரை கடனும் மானியத்துடன் கிடைக்க ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம் ஏற்பாடு செய்து தரு கிறது.

சேலம் ஊராட்சி ஒன்றியத்தில் இத்திட்டத்தின் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட 30 பெண்கள்

**ம. அரிகிருட்டிணன்,**
**உதவிமக்கள் தொடர்பு அலுவலர், சேலம்.**

சேலம் - செவ்வாய்ப்பேட்டை மகளிர் சங்கம் சமூக நல வாரி யத்தின் மூலம் நடத்திவரும் அச் சகத்தில் ஆறு மாத காலப் பயிற் சியைப் பெற்றுச் சென்றுள்ளனர். இவர்களுக்குப் பயிற்சிக்காலத்தில் மாதம் ரூ. 125- உதவித்தொகை யாகவும், பயிற்சி அளிக்கும் நிறு வனத்திற்கு மாதம் ரூ. 50 வீத மும் வழங்கப்படுகிறது. ஆறுமாத காலத்திற்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது.

சுயவேலைவாய்ப்புத் திட்டத் தில் பயிற்சி பெற்று, செவ்வாய்ப் பேட்டை சங்க அச்சகத்திலேயே பணி அமர்த்தப்பட்டுள்ள செல்வி அ. சந்திரா கூறியதாவது:

''சேலம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு வரை படித்தேன். குடும்பத்தில் போதிய வருமானம் இல்லாததால் மேல் படிப்பைத்தொடர முடியவில்லை.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித் திட்டத்தின் மூலம் அச்சுக் கோத்தல், அச்சடித்தல், பைண் டிங் செய்தல் ஆகிய பயிற்சியை ஆறுமாத காலம் பெற்றேன். பயிற்சி முடிந்ததும் உடனடி யாக எனக்கு இந்த அச்சகத்தில் வேலை கிடைத்தது. மாதம் ரூ. 200 சம்பளம் கிடைக்கிறது. தற்போது எங்கள் குடும்பம் மகிழ்ச்சியாக உள்ளது.''

இந்த அச்சகத்தில் பணிபுரியும் திருமதி எம். திலகவதி, சுய வேலை வாய்ப்புப் பயிற்சியை இரண்டு மாத காலத்திற்கு முன் னர்தான் முடித்ததாகவும், பயிற்சி முடிந்ததும் மாதர் சங்க அச்சகத்தில் பணி அமர்த்தப்பட்டு ரூ. 150 தற்போது மாத வரு மானம் பெறுவதாகவும் மகிழ் வுடன் கூறுகிறார்.

சேலம் ஊராட்சி ஒன்றியத்தில் சுயவேலை வாய்ப்புத் திட்டத் தில் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள 10 பெண்கள், ஆன்ட்ஸ் இண்டஸ்ட்ரியல் பயிற்சி நிலை யத்தில் பயிற்சி பெறுகின்றனர். இவர்கள் பள்ளியிறுதி வகுப்பு மற்றும்12ஆம்வகுப்பு படித்தவர் கள். வானொலி மற்றும்தொலைக் காட்சி பழுது செய்வதற்கான ஆறுமாத கால உதவித் தொகை யாக நபருக்கு மாதம் ரூ. 150 வீதமும் பயிற்சியளிக்கும் நிறு வனத்திற்கு நபருக்கு மாதம் ரூ. 50 வீதமும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.



சுயவேலைவாய்ப்புத் திட்டம், வறுமையில் உள்ள பல குடும்பங் களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவி வருகிறது என்ப தில் சிறிதும் ஐயமில்லை



# இருக்கின்றார் அண்ணா..

நகரங்களுள் சிறந்தது காஞ்சி. அங்குப் பிறந்த அறிவுலக மேதை அண்ணா மனிதர்களில் சிறந்தவர்.

பேரறிஞர் அண்ணாவுக்குப் பிறந்த நாள் விழா. அதுவும் பவளவிழா. அவரது இதயக்கனி நடத்தும் இன்பவிழா, இனிய விழா. எழுச்சிக்குக் கேட்க வேண்டுமா!

திருச்சி திக்குமுக்காடியது. திமிலோகப்பட்டது. தெருவெல்லாம் மக்கள் வெள்ளம். அகமும் முகமும் மலர அவர்தம் அணிவகுப்பு!

வரவேற்பு வளைவுகள். தோரணங்கள். வண்ணச் சுவரொட்டிகள். வாழ்த்து முழக்கங்கள். ஊர் சிறுத்தது. உவகை பெருத்தது.

15.9.84 காலை 9 மணிக்கு, நாயன இசையுடன் தியாகராச பாகவதர் மன்றத்தில் விழா தொடங்கியது.

தனித்தும், கூட்டமாகவும் மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். அதோ அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூன்றும் ஓர் அழகுருக் கொண்டதுபோல் அமைதியாக மாண்புமிகு முதல்வர் உள்ளே நுழைகிறார். அவருக்குப் பின்னால்—

சாரை சாரையாக மக்கள்!
வந்தார் முதல்வர், வழிந்தது
மன்றம்!

''வரலாற்றுச் சிறப்புமிக்க இம் மாபெரும் விழாவிற்கு'' வருகை தந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றார், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வ. விசுவநாதன்; இ.ஆ.ப.

''பவளச் செவ்வாயில் உதிர்த்த வார்த்தை முத்துக்களால் தமிழகத்தை ஒளிபெறச் செய்த தங்கத் தலைவன்'' அறிஞர் அண்ணாவின் அருமை பெருமைகளை ''விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்'' என்று நெஞ்சையள்ளும் இலக்கியஉரையாற்றி விழாவைத் தொடங்கி வைத்தார், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்டாக்டர் கா.காளிமுத்து அவர்கள்.

''பல்கலைக் கொண்டலாய், பண்பாட்டுப் பெட்டகமாய்''ப் பேரறிஞர் அண்ணா மிளிர்வதை, ''கைச் செம்பில் கடலைமொண்டு காட்டுவதுபோல்'' மிக்க கலை நயத்துடன் காட்டி அவையோரின் சுவையை அதிகமாக்கினார்.

''ஏழை எளிய மக்கள் அரசியலில் ஏற்றம் பெற வைத்தவர்கள் இருவர். ஒருவர் காந்தி, இன்னொருவர் அண்ணா. பல நூற்றாண்டுகளில் பல அறிஞர்கள் செய்யக்கூடிய சமுதாய மாற்றத்தை, ஒரே நூற்றாண்டில் இரவைப் பகலாக்கிக்கொண்டு செய்தார் அண்ணா'' என்றார்.

அண்ணா புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிட்டார்:

''அண்ணா ஆற்றிய அளப்பரிய தொண்டுகளால் அனைத்துத் துறைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஏறத்தாழ 33 ஆண்டுகள் பொதுப்பணியாற்றி ஒவ்வொரு துறையிலும் ஒரு தனி வழி கண்டார் அண்ணா. மோதுதலைத் தவிர்த்து, எதிரிகளையும் நட்பாக மாற்றும் அற்புத ஆற்றலைப் பெற்றிருந்தார். மாற்றாரை மதிக்கின்ற இயல்பு அவரிடம் குடிகொண்டிருந்தது.''

பேரறிஞர் அண்ணா பற்றிய கருத்தரங்கத்திற்குத் தலைமை வகித்த, அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி முழங்கினார்:

''அண்ணா ஈடு இணையற்ற எழுத்தாளர். ஒப்பற்ற சீர்திருத்தவாதி. அண்ணாவின் மரண ஊர்வலத்தில் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் சென்னையில் கூடினார்கள். உலக வரலாற்றில் வேறு யாருக்கும் இவ்வளவுபேர் வரவில்லை என்று கின்னஸ் புத்தகத்தில் வந்துள்ளது.







பேரறிஞர் அண்ணா புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

''தமிழ் உரைநடையில் புதிய சகாப்தத்தை உண்டாக்கியவர் அண்ணா. அதை மக்களுக்குஅவர் மொழியாக அல்லாமல், ஊனோடும் உடலோடும் கலந்ததாக ஊட்டிவிட்டார். கட்சி வேறுபாடு காழ்ப்பு இல்லாமல் நடந்து கொண்டார். மார்க்சுக்கு லெனின் அமைந்ததுபோல, புத்தனுக்கு அசோகன் போல, பெரியாருக்கு அண்ணா வாய்த்தார்.''

டாக்டர் கி.ஆ.பெ.விசுவநாதம்: ''மனத்தைப் பெரிதாக்கிக் கொண்டவர் அண்ணா. பெரிய உள்ளம்... மாறுபட்ட கருத்துள்ளவர்களை மதிக்கிற உள்ளம்.

காந்தி செத்தபோது ஒருவர் இறந்தார். நேரு பிரிந்தபோது இருவர். அண்ணா மறைந்த போது 42 பேர். இப்படிப்பட்ட சாவு நமக்கு வருமா என ஏங்கியவர்கள் பல லட்சக்கணக்கான பேர். அவர்களில் நான் ஒருவன்.

அண்ணா தமிழ்நாட்டுத்தலைவரானார். பிறகு இந்தியத் தலைவரானார். உலகத்தலைவராகு முன் பிரிந்துவிட்டார்.''

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: ''அவர் விட்டுச் சென்ற பணிகளை நினைவுகூரக் கூடியுள்ளோம். அவர் வகையாக வாழ்ந்தார். அவர் இல்லையே என்ற ஏக்கம் வரும் பொழுதெல்லாம் அவரது பெருமை நினைவுக்கு வருகிறது. தமிழின ஒருமைப்பாட்டுக்காகத்தொடர்ந்து வாழ்ந்தார்.

பேரறிஞர் அண்ணா நிதானமாக எதையும் அணுகியவர். ஆவேசத்தை அடியோடுவிட்டார்.

திருக்குறளுக்கு 13 பேர் உரை எழுதியிருக்கிறார்கள். ஆனால் குறளுக்கு வாழ்க்கையாலேயே உரை எழுதிய ஒரேஒரு மனிதர் அண்ணா''

திரு வலம்புரிஜான், எம்.பி.: ''சிங்க நடையாலும் சிங்கார நடையாலும் செந்தமிழர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் பேரறிஞர் அண்ணா. பூந்தாதுவாரிவரும்பொதிகைமலைத் தென்றலாக உலவியவர். மக்களாட்சியின் மனித வடிவம் யார் என்று கேட்டால், அகராதியைப் புரட்டாமல் அடித்துச் சொல்லலாம் அறிஞர் அண்ணா என்று''.

பேராசிரியர் திரு சோ.சத்தியசீலன்: ''அரசியலில் அண்ணன் தம்பி உறவை உண்டாக்கி ஏழை எளியவரிடம் அரசியலைக் கொண்டு சென்றவர் அண்ணா. அமைதி அழியாது பாதுகாக்க, அண்ணாவின் சொற்களை நனவாக்கும் திட்டங்களுக்கு அரசு இன்று தொடக்கம் செய்கிறது''.

திரு தில்லைவில்லாளன்: ''அண்ணாவை எழுதவைத்து மற்றவர்களைப் படிக்க வைத்த பேறு எனக்கு இருந்தது.

தம்பிமார்கள் எல்லோருக்கும் என் இடத்தில் இடம் உண்டு என்று சொன்னவர் அண்ணா. ஒரு தாய் வயிற்றில் இத்தனைப் பிள்ளைகள் பிறக்க முடியாது என்பதால் வெவ்வேறு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் என்றார்.''

அண்ணா எப்போதுமே ஒரு சிறந்த நகைச்சுவையாளராக வாழ்ந்தார். என்று சொல்லி, பல நிகழ்ச்சிகளை விவரித்து அவையோரைச் சிரிப்புக்கடலில் ஆழ்த்தினார்.

இறுதியில் திருக்குறளார் திரு முனிசாமி உரை நிகழ்த்தினார்: ''அண்ணா இன்னும் வாழ்ந்திருந்தால் மிகப்பெரியகருவூலங்களைக் கொடுத்திருப்பார். தமிழ்நாட்டை அண்ணாவின் தம்பிகள்தான் ஆட்சி செய்ய முடியும் என்பதை நிருபித்துவிட்டுச் சென்றுள்ளார்.

'பேச்சில் பரம்பரையை உண்டாக்கியவர் பேரறிஞர் அண்ணா. அவரது இராஜதந்திர கலையைக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பாடமாக வைக்க வேண்டும்''.

செய்தி-மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு





எழுத்தாளர் கோவி மணிசேகரன் அவர்களுக்குத் திரு.வி.க. விருதினையும், கவிஞர் புலமைப்பித்தன் அவர்களுக்கு அரசுக் கவிஞர் விருதினையும் அளித்தார் மாண்புமிகு முதல்வர்.

வி.டி.வீரப்பன் நன்று நவின்றார்.

நண்பகல் உணவுக்குப்பின் மாலை 3 மணிக்குக் 'கவியரங்கம் தமிழ்நாடு திட்டக்குழுத்துணைத் தலைவர் பாவலர் திரு மா.முத்து சாமி அவர்கள் தலைமையில் தொடங்கியது. செய்தி-மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு வி. டி. வீரப்பன் அனைவரையும் வரவேற்றார்.

''வரும்படிக்குப் பாடாமல், வாராதாரும் 'வரும்படிக்குப் பாடிடுவோர்'' எனக் கவிஞர் களை அறிமுகம் செய்த பாவலர், கொஞ்சு கவியரங்கினிலே, கொஞ் சம் பா தெரிந்தவன்'' என்று தன்னை அவையடக்கமாகச் சொல்லிக்கொண்டு, ''பவள விழாக் காணும் என்னருமை அண் ணாவை எவ்வளவுதான் புகழ்ந் தாலும் என்னாசை தீராது'' என்று அற்புதமான தலைமைக் கவிதையைத் தந்தார்.

அவரைத் தொடர்ந்து கவிஞர் கள் அண்ணாவுக்குப் பாமாலை கள் சூட்டினர்.

''வார்த்தைகளை உருவாக்கிய வன் அல்ல
வாழ்க்கையை உருவாக்கியவன்''
—கவிஞர் நா. காமராசன்.

''அண்ணா என்ற சொல்லே அனிச்சத்தின் மென்மை காட் டும்''-கவிஞர் நிர்மலாசுரேஷ்.

''எதுகையும் மோனையும் உன் எழுத்தில் எடுபிடி வேலை செய் யும்''-கவிஞர் முத்துராமலிங்கம்.

''புதைத்துவிட்டாலும் புதை யலைப் போன்றவன் இறந்துவிட் டாலும் இறைவனைப் போன்ற வன்'' - கவிஞர் இளந்தேவன்.

கவிஞர் மரியதாசு, கவிஞர் டாக்டர் த.அமிர்தலிங்கம் ஆகி யோரும் காலத்தை வென்ற பேரறிஞருக்குக் கவிதாஞ்சலி செலுத்தினார்கள்.

தமிழரசு ஆங்கில இதழ் இணை யாசிரியர் திரு சி.நல்லரசு நன்றி நவின்றார்.

மாலை 5 மணியளவில் வெஸ்ட்ரி பள்ளித்திடலில் சிறப்புக்கூட்டம் ஆரம்பமானது. திரு ஏ.கே.சி. நடராசன் குழுவினர் 'கிளாரி னட்' இசை மக்கள் காதுகளில் இன்பத் தேன் பாய்ச்சியது.

இந்த மகத்தான விழாவுக்கு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமை தாங்கினார்.

அவர் தமது தலைமையுரை யில், பேரறிஞர் அண்ணாவுக் கும் திருச்சிக்கும் உள்ள நெருங் கிய உறவை நினைவுகூர்ந்தார். ''இயக்க முடிவுகள் பல இங்கு எடுக்கப்பட்டன. அவை பல வகைகளில் திருப்புமுனைகளாக அமைந்தன. அண்ணா அவர்கள் முதல்வர் பொறுப்பேற்றவுடன் திருச்சிக்கு வந்து தந்தை பெரியார் அவர்களைச் சந்தித் தது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி யாகும். இது பேரறிஞர் அண்ணாவின் பெருமையை உயர்த்திக் காட்டுகிறது.''

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் அனை வரையும் வரவேற்றுப் பேசுகை யில், ''பேரறிஞர் அண்ணா சாதி வேறுபாடுகளை நீக்கப் பாடுபட்டார். இதனால் எல் லோராலும் பாராட்டப்பட் டார். அண்ணா வழியில் மாண்பு மிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பல நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல் படுத்தி வருகிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.

பேரறிஞர் அண்ணா திருவுரு வப் படத்தை மாண்புமிகு நிதி யமைச்சர் டாக்டர் நாவலர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.

''பேரறிஞர் அண்ணா அவர் களின் பிறந்தநாள் விழா பட்டி தொட்டியெல்லாம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

''வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சி பெறச் செய்தவர் அண்ணா. அவ ருக்குப் பரம்பரை எதுவும் கிடை யாது. மிகமிகச் சாதாரணமான வர். பேனாவும் நாவன்மையும் கொண்டு அறிவுத்திறனை, ஆற் றல் திறனை நிலைநாட்டியவர். கொள்கை வலுவை வைத்து நாட்டை வென்றவர்'' என்று புகழ்மாலை சூட்டினார் நாவலர்.



தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு ஏ. செல்லையாத் தேவர் அவர்கள் வீட்டுவசதித் திட்டங்களை விளக்கிச் சொன் னார்.

அனைத்துக் கட்சியினரையும் அணைத்துச் சென்றவர் அல்லவா அண்ணா? அவர்களது பாராட்டு களில் ஒரு சில பதச்சோறுகள்:

திரு வை.பாலசுந்தரம்: ''அறி வாலும் ஆற்றலாலும் உயர்ந் திருந்த அண்ணா அடக்கத்துக்கும் பேர் போனவர். தமிழர்கள் வாழும் காலமெல்லாம் அண்ணா வின் புகழைப் பாடுவார்கள். அடித் தள மக்களின் ஆனந்த வாழ்வுக் குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.''

திரு தனுஷ்கோடி ராஜா: அண்ணா விழா எடுக்கும் தமிழக அரசுக்கு நன்றி செலுத்திக் கொண்டார்.

திருகிளமெண்ட்: ''அண்ணா வின் கனவுகளை நனவாக்கி வரு கிற இந்த நல்லரசு மாநிலங்களின் உரிமைகளைக் கோரிப் பெற வேண்டும்''.

திரு பிரான்சிஸ்ராயன்: ''பேரறிஞர் அண்ணா சிறந்த நிர்வாகி, நகைச்சுவையாளர். அவரது பிறந்த நாளில் தமிழக அரசு ஏழை எளிய மக்களுக்கு நல் வாழ்வுகிடைக்கும் திட்டங்களைப் புரட்சித் தலைவர் தலைமையில் தொடங்கி வைக்கிறது.''

திரு சக்திதாசன்: ''இந்த அரசு நல்ல திட்டங்களைத் தொடங்குகிறது. மக்களை வாழ வைக்கும் திட்டங்களைப் போடு கிறவர்களை வாழ்த்துகிறேன்''

திரு செங்கம் ஜப்பார்: ''அண்ணா தொண்டில் நிகரற்ற வர். காரிருள் நீக்க வந்த கதிர வன். தமிழ்நாட்டின் தலை விதியை மாற்றியமைத்தவர்''

திரு செய்குத்தம்பி: ''அண்ணா ஒரு மனிதாபிமானி. அண்ணா வின் இதயக்கனி ஆட்சியில் அண் ணாவின் எண்ணங்கள் நிறைவேற் றப்படுகின்றன. வக்ஃபுபோர்டுக்கு இதுவரை யாரும் 3 லட்சத்துக்கு மேல் கொடுத்தது இல்லை. கேர ளத்தில் முகமது கோயாவோ, காஷ்மீரத்தில் பரூக் அப்துல் லாவோ செய்யாததை, புரட்சித் தலைவர் செய்திருக்கிறார். ஒரு கோடி ரூபாய் உலமாக்களுக்கு மானியம் அளித்த தமிழக அரசை தமிழக மக்கள் பாராட்டவேண் டாமா!''

திரு கூத்தக்குடி சண்முகம்: ''தமிழ்த்தேசிய இனத்தின் தலை வர் என்ற முதல் அந்தஸ்தைப் பெற்றவர் பேரறிஞர் அண்ணா''

திரு ஆர்.மார்க்கபந்து: ''பேரறி ஞர் அண்ணாவின் பெருமை நாட்டு மக்களுக்குத் தெரிந்த ஒன்று. அவரது பேச்சால் ஈர்க்கப் பட்டவர்களுள் நானும் ஒருவன்.''

திருவாரூர் திரு கே தங்கராசு: ''அண்ணா தனது கட்சியைத் தேர்தலில் ஈடுபடும் அரசியல் கட்சியாக மாற்றிய இடம் திருச்சி. பெரியார் தலைநகராகக் கொண்ட இடம் திருச்சி''.

திரு குமரிஅனந்தன், எம்.எல்.ஏ, ''தேன் தமிழைத் தமிழகத்தில் தவழவிட்டவரின் பவள விழா. நாவாடுகிறவர் நாடாள முடியும் என்று நிரூபித்தவர் அண்ணா. நல்லவன் வாழ்வான் என்ற அண் ணாவின் படத்தில் முதல்வர் நடித்திருக்கிறார். இன்று அண்ணா இருந்தால், படத்தின் பெயரை நல்லவன் ஆள்வான் என மாற்றி யிருப்பார்.''

திரு பாரமலை, எம் எல்.ஏ: ''அண்ணா தன் பேச்சால், எழுத் தால் தமிழ் மக்களைப் பாலித்த வர். அண்ணாவின் வழி வாழ்ந்த அரசு இது என்பதைச் சொல்லிக் கொள்வதில் பெருமையடைகி றேன். 90 லட்சம் தாழ்த்தப் பட்ட மக்களின் சார்பில் புரட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.''

திரு எஸ். ஆண்டித் தேவர், எம். எல். ஏ.: ''அண்ணா நினைத் ததை அண்ணாவின் இதயக்கனி நிறைவேற்றி வருகிறார். இன்று முதல் 15 வயது உள்ளவர்களுக்கும் உணவு போடுகிறார். அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன்.''

திரு ஏ.ஆர். மாரிமுத்து: ''அண்ணா எதையும் ஆழ்ந்து சிந்தித்து அறிவு பூர்வமாக முடிவு எடுப்பார். மக்களின் நலன்கருதி அவசரப்படாமல் ஆத்திரப்படா மல் செயலாற்றிய தலைவர்''.

திரு.ப.உ.சண்முகம்: ''அண் ணாவைப் பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்கள் பேசியதைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.



இளைஞர்கள் புரட்சித் தலைவரின் பேச்சைக் கேட்க ஆவலாக இருக்கிறார்கள். அதனால் என் உரையைச்சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன்''.

மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ஒய்.எஸ்.எம். யூசுப் அவர்கள்; ''பள்ளிவாசல்களுக்கு ஒரு கோடி ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ரூ 5,000 ஆக இருந்த மானியம் ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது''.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 20 கிலோ அரிசிவழங்கும் திட்டம், நாவல்பட்டு வீட்டு வசதித்திட்டம், காவலர் குடியிருப்புத் திட்டம் தொடக்கவிழா, அண்ணா பவளவிழா நினைவு மத்திய மாவட்ட நூலகக் கட்டடத் திறப்புவிழா - வக்ஃப் போர்டு நிறுவனங்களுக்கு உதவி வழங்குதல், திரு.வி.க. விருது வழங்குதல், அரசுக் கவிஞர் விருது வழங்குதல், விழா நிறைவுப் பேருரையாற்றும்பொழுது குறிப்பிட்ட கருத்துக்களிலிருந்து:

''முதல்வர் என்று வந்துவிட்டால் நல்லது எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

''என்.ஜி.ஓக்களுக்கு 25 முறை அகவிலைப்படி உயர்வு கொடுத்துள்ளோம். மத்திய அரசு இப்பொழுது 4 அகவிலைப்படி உயர்வு அறிவித்திருக்கிறது. அதேபோல தமிழக அரசும் 1.5.84 முதல் ஒரு அகவிலைப்படி உயர்வும், 1.6.84 முதல் ஒரு அகவிலைப்படி உயர்வும், 1.8.84 முதல் ஒரு அகவிலைப்படி உயர்வும், 1.10.84 முதல் ஒரு அகவிலைப்படி உயர்வும் ஆக நான்கு அகவிலைப்படி உயர்வை இந்த விழாவில் அண்ணா பவள விழாப் பரிசாக அறிவிக்கிறேன்.

இந்த அகவிலைப்படி உயர்வு மூலம் அரசுக்கு ரூ48 கோடி கூடுதல் செலவாகிறது. அதைப்பற்றிக் கவலை இல்லை. நல்லதைச்செய்கிறோம். தொடர்ந்து செய்வோம்.

நான் எதைச் செய்தாலும் இந்த முடிவு அண்ணாவின் முடிவு என்று செய்கிறேன்

இதெல்லாம் இன்று நேற்று எனக்குத் தோன்றியது அல்ல. நான் நடிகனாக இருந்தபோது எதையெல்லாம் சொன்னேனோ அதைச் செய்துகாட்டக் கூடிய நிலையில் நீங்கள் என்னை ஆளாக் விட்டாதால் இதைச் செய்கிறேன்.

நாடோடி மன்னன் படத்தில் சொல்லப்பட்ட கருத்துகள் என்னுடைய கொள்கைகள் என்று அண்ணாவால் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றன.

அண்ணா ஆட்சிக்கு வந்த போது எப்படி இருந்தாரோ இறந்தபோதும் அப்படியே இருந்தார்

இங்கு சிறுவிவசாயிகளுக்கு இலவச மின்சாரம், 20 கிலோ அரிசி போன்ற திட்டங்களை அறிவித்தபோது அனைத்துக் கட்சியினரும் பாராட்டினார்கள்.

எதைச் சொன்னோமோ அதைச் செய்தோம். சொல்லாததையும் செய்கிறோம்.

என் பணம் மக்களுக்குத்தான் செலவிடப்பட வேண்டும். என் லட்சியம் அதுதான். எனக்குப் பிறகு என் சொத்து அனைத்தும் அநாதைக் குழந்தைகளுக்குத் தான் பயன்பட வேண்டும் என்று எழுதிவைத்திருக்கிறேன்.''

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. நன்றியுரையாற்றுகையில், அண்ணாவின் மேதைத் தன்மையையும், எளிமையாக வாழ்ந்து மக்களுக்கு உயர்ந்த தொண்டுகளை ஆற்றிய தன்மையையும் எடுத்துரைத்தார்,

இரவு, செல்வி சுவர்ணமுகி நாட்டிய நிகழ்ச்சியும், கரிக்கோல் ராஜ் குழுவினர் வழங்கும் பேரறிஞர் அண்ணாவின் ''நீதிதேவன் மயக்கம்'' நாடகமும் நடைபெற்றன.

அண்ணா பவள விழா அனைவரின் உள்ளத்திலும் நிலைத்துவிட்ட பசுமையான விழாவாகப் பாங்குடன் நடந்து முடிந்ததைப் பாராட்டாதவர் இல்லை.

**மு. முத்துக்காளத்தி**

## அட்டைப்பட விளக்கம்

### முதல் அட்டையில்

**தஞ்சாவூரில், சோழ மாமன்னன் இராசராச சோழன் ஆயிரமாவதாண்டு முடிசூட்டு விழாவன்று (16.9.84) அலங்கரிக்கப்பட்டிருந்த இராசராச சோழன் திருவுருவச் சிலையும்—அவ்விழாவில் பங்கேற்ற மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும்.**

### இரண்டாவது அட்டையில்

**பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, திருச்சியில் உள்ள அண்ணா சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 15-9-84ல் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துதல்.**

### நான்காவது அட்டையில்

**பேரறிஞர் அண்ணா பிறந்தநாளிலிருந்து, முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் பத்து வயது முதல் பதினைந்து வயதுவரையுள்ள பத்தாம் வகுப்புப் படிக்கும் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. இதை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருச்சி மாவட்டம் சமயபுரத்தில் (15-9-84) தொடங்கிவைத்தார்.**


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





# தமிழரசு

16-10-1984 75 காசு



என்று துவங்கும் பாடலை இயற்றினார். அந்தப் பாடலைத்தான் தமிழகத்தில் காந்தியின் தொண்டர்கள் யாவரும் வழிநடைப் பாட்டாகப் பாடிப் பல இடங்களில் உப்புக் காய்ச்சும் இயக்கத்தை நடத்தினர். 'கத்தியின்றி ரத்தமின்றி' என்று துவங்கும் அந்தப் பாடல்தான் என் தந்தையவர்களைப் பாரதிக்குப் பின் மற்றொரு தேசியக் கவிஞர் இருக்கிறார் என்று தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தியது.

அதன்பின் மகாத்மா காந்தியின் வழியிலே நின்று, அவர் துவக்கிய எல்லா இயக்கங்களுக்காகவும் என் தந்தை கவிதைகள் இயற்றத் தொடங்கினார்.

**''என்ன உறக்கமடா உனக்கு என்ன**
**மயக்கமடா!**
**அன்னை படும் துயர் இன்னும் அறிந்திலை**
**பின்னை**
**அவளுன்னைப் பெற்றுப் பயன்என்ன?" என்றும்**

**''நல்ல சமயமடா இதை நழுவ விடுவாயோ?**
**காந்தியைப் போல் தலைவர் எந்தக்**
**காலத்தில் கிட்டுமடா**
**வாய்ந்த தருணமிதை நீ வழுவி இழப்பாயோ!"**

என்று தமிழ் மக்களை விளித்துப் பாடினார்.

காந்தியடிகள் ''இந்த நாடு உயர்ந்திட முதலில் தீண்டாமை எனும் கொடுமையான பழக்கம் ஒழிக்கப்பட வேண்டும்'' என்று கூறிய போது,

**தீண்டாமை என்ற தீய வழக்கம்**
**தீர்த் தொலைந்திட நாணாச்சு**
**ஆண்டவன் பொதுவென்று நம்பின யாரும்**
**அந்தப் பழியை அகற்றிட வாரும்!**

என்றும் பாடிய என் தந்தை, 1930ஆம்ஆண்டு கள்ளுக்கடை மறியல் போராட்டத்தை நடத்த நாட்டு மக்களுக்கு மகாத்மா கட்டளையிட்ட போது,

**" மறியல் செய்ய வாருங்கள்**
**அரிய காந்தி சொற்படி "**
**"குடிப்பதைத் தடுப்பதே கோடி கோடி புண்ணியம்**
**அடிப்பினும் பொறுத்துநாம் அன்புகொண்டு**
**வெல்லுவோம்"**

என்று கள்ளுக்கடை மறியலுக்கான போராட்டப் பாடல்களைப் பாடியதுடன் நில்லாது நாமக்கல்லில் நடந்த மறியல் போராட்டத்தில் தாமே தலைமை தாங்கி தான் இயற்றிய பாடலைப் பாடிக் கொண்டு தொண்டர்களுடன் சென்று வெள்ளையன் ஆட்சியிலே ஓர் ஆண்டு சிறைத்தண்டனையும் அனுபவித்தார்.

இந்தியாவில் காந்தியடிகளைப் பின் பற்றியும் அவர் ஆரம்பித்த இயக்கங்களை ஆதரித்தும் பல மொழிகளில் பல கவிஞர்கள் பாடியுள்ளனர். ஆனால் பாடல் பாடியதுடன் நில்லாமல் போராட்டத்திலும் கலந்து சிறை சென்ற கவிஞர் வேறு யாராவது இருப்பார்களா என்பது ஐயத்திற்குரியதே.

1945ஆம் ஆண்டு மகாத்மா அவர்கள் சென்னையில் உள்ள இந்திப் பிரச்சார சபாவின் வெள்ளி விழாவில் கலந்து கொள்ளச் சென்னை வந்து சில நாட்கள் தியாகராய நகரில் தங்கியிருந்தார்.

அந்தச் சமயம் நாமக்கல்லிலிருந்து காந்தியைத் தரிசிக்க என் தந்தை சென்னைக்குக் குடும்ப சகிதமாக வந்தார். அப்போது தியாகராய நகரில் இருந்த திரு சின்ன அண்ணாமலையின் இல்லத்தில் தங்கினார். காந்தியடிகள் கலந்து கொண்ட பல நிகழ்ச்சிகளுக்கும் என் தந்தையும் சென்றார். அவர்

நாமக்கல் கவிஞர் அரசவைக் கவிஞராகப் பெற்று ஆளுநர் பவ்நகர் மகாராஜா அவர்களால் பொன்னாடை போர்த்தப் பெறுதல்.





பாரதி சங்கத்தார் நடத்திய பாராட்டு விழாவில் நாமக்கல் கவிஞர் தம்பதிகளுடன் திரு கல்கி, தமிழ்த் தென்றல் திரு.வி.க., திரு சின்ன அண்ணாமலை ஆகியோர்.

தினசரி நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் அருகிலேயே அமர்ந்து பிரார்த்தனைச் சொற்பொழிவைக் கேட்டு வந்தார்.

சென்னையில் நிகழ்ச்சிகள் முடிந்து வார்தாவிற்குத் திரும்ப ஆயத்தமானார் காந்தியடிகள். அப்போது அவரை நேரில் சந்தித்துப் பேச வேண்டும் என்ற தன் ஆசையை திரு சின்ன அண்ணாமலை மூலம் காந்தியடிகளின் நிகழ்ச்சி நிரல்களைக் கவனித்து நடத்தி வந்த திரு ராஜாஜியிடம் சொல்லி அனுப்பினார். (ஏற்கனவே காந்தியடிகளைப் பல ஆண்டுகளுக்கு முன் சென்னையிலே சந்தித்த நிகழ்ச்சியை 'என் கதையில்' எழுதியுள்ளார்).

மகாத்மா சென்னையிலிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் காலை, காந்தியடிகளை என் தந்தை சந்திக்க ராஜாஜி ஏற்பாடு செய்தார். என் தந்தை காந்தியடிகளைக் காணச் சென்றபோது என் அன்னையும் நானும் என் உடன் பிறப்புகள் அனைவரும் உடன் சென்றோம். அப்போது நேரம் காலை சுமார் 10 மணி இருக்கும். நாங்கள் அங்கு சென்றபோது திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி தம்புராவை மாத்திரம் மீட்டிக் கொண்டு காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்த பாடலான 'வைஷ்ணவ ஜனதோ தேனேகஹியே!' என்ற பாடலை உணர்ச்சி ததும்ப இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தார். அவர், நிகழ்ச்சி முடிந்ததும் ராஜாஜி என் தந்தையை அருகில் அழைத்துக் காந்தியடிகளிடம் அறிமுகம் செய்தார்.

''தாங்கள் ஆரம்பித்த சத்யாக்ரகப் போராட்டங்கள் அனைத்துக்கும் பாடல்களை இயற்றித் தமிழ் மக்களுக்கு ஊக்கம் கொடுத்துவரும் கவிஞர் இவர். சத்யாக்ரகப் போராட்டத்தில் சிறைத் தண்டனையும் பெற்றவர். இவர் எழுதிய நூல்கள் அனைத்திலுமே தங்களது கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுதான் எழுதியுள்ளார்'' என்று என் தந்தையைக் குறித்து காந்தியடிகளிடம் தெரிவித்தார். உடனே என் தந்தையவர்கள் காந்தியடிகளின் பாதங்களில் விழுந்து வணங்கி

தாம் இயற்றி அதுவரை வெளிவந்துள்ள புத்தகங்கள் அனைத்தையும் ஒரு வெள்ளித் தட்டில் வைத்து 'எனது காணிக்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று கூறி காந்தியடிகளிடம் அளித்தார். அவற்றை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்ட காந்தியடிகள், ஒவ்வொரு புத்தகமாகப் பிரித்துப் பார்த்தார்.

''இவை அனைத்துமே தமிழில் எழுதியிருக்கிறீர்கள். எனக்குத் தமிழ் படிக்கத் தெரியாது. ஆதலால் என்னுடைய ஆசிரமத்திற்குத் தாங்கள் வந்து சில நாட்கள் தங்கியிருந்து தாங்கள் எழுதியதை எனக்கு விளக்கிக் கூற வேண்டும்'' என்று என் தந்தையிடம் கேட்டுக் கொண்டார் காந்தியடிகள்.

''நான் கண்டிப்பாகத் தங்களது அழைப்புக் கிணங்க வருகிறேன். இதைவிடப் பெரிய பேறு எனக்கு வேறு உண்டா?'' என்று கூறி என் தந்தை அண்ணல் காந்தியிடமிருந்து பிரியா விடை பெற்றுத் திரும்பினார்.

1947-ஆம் ஆண்டு சென்னை மாநில அரசு என் தந்தையவர்களைத் தமிழகத்தின் அரசவைக் கவிஞராக நியமனம் செய்தது. அப்போது திரு குமாரசாமி ராஜா சென்னை மாநில முதல்வராக இருந்தார். கேரளம், கர்நாடகம், ஆந்திரம் என்று பிரிக்கப்படாத மாநிலமாக - சென்னை மாநிலம் ஒன்றாக இருந்த காலம் அது. மலையாள மொழிக்கு புகழ்வாய்ந்த மகாகவி வள்ளத்தோலை அரசவைக் கவிஞராக நியமித்தது. கன்னட மொழிக்கும், தெலுங்கு மொழிக்கும் இரண்டு அரசவைக் கவிஞர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

அப்படி நியமிக்கப்பட்ட கவிஞர்களை அரசு, சென்னைக்கு வரவழைத்து விழா ஒன்றை ராஜாஜி மண்டபத்தில் நடத்தியது. மாநில முதல்வர் திரு குமாரசாமி ராஜா விழாவிற்குத் தலைமை தாங்க, மாநில கவர்னராக அப்போது இருந்த திரு பவநகர் மகா



குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் நேரு ஆகியோருடன் நாமக்கல் கவிஞர்.

ராஜா அரசவைக் கவிஞர்களுக்குப் பொன்னாடை போர்த்தித் தங்கப் பதக்கங்களை அணிவித்து, ஒரு தொகையினைக் காசோலையாகவும் வழங்கினார்.

பின்னர் ஒவ்வொரு மொழிக் கவிஞரும் சிறிது நேரம் நன்றியுரை ஆற்றினர். அப்போது பேசிய என் தந்தை, ''இந்த நிகழ்ச்சி தமிழகத்தில் சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் இருந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த அரசவைக் கவிஞர்களை என் நினைவுக்குக் கொண்டு வருகிறது. நம்நாடு சுதந்திரம்பெற்றதால் தானே இந்தப் பெருமை கிடைத்திருக்கிறது! இந்த நேரத்தில் எனக்கு வழிகாட்டியாக விளங்கிய மகாகவி சுப்ரமணிய பாரதியை நினைக்கிறேன். அவரைப் பின்பற்றி காந்தியடிகளின் இயக்கங்களுக்காகப் பாடினேன். இந்தச் சிறப்பு, மகாகவி பாரதிக்குக் கிடைத்ததாகவே எண்ணி மகிழ்கிறேன்'' என்று உணர்ச்சி ததும்பப் பேசிச் சென்னை அரசின் முதல்வருக்கும் கவர்னருக்கும் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சி முடிந்த சில நாட்களில் தியாகராய நகரில் ஸ்ரீராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் என் தந்தை அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி, பாரதி சங்கத்தார் ஒரு விழா நடத்தினார்கள்.

அந்தவிழாவில்தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களை அழைத்து, அவரைக் கொண்டு என் தந்தைக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தார்கள். அந்த விழாவை திரு கல்கியும், திரு சின்ன அண்ணாமலையும் முன்னின்று நடத்தினார்கள்.

டெல்லியில் இந்திய மொழிகளின் வளர்ச்சிக்காக 'சாகித்ய அகாடமி' என்ற ஓர் அமைப்பை மத்திய அரசு அமைத்தது. அதற்குத் தலைவராக ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களும் துணைத் தலைவராகப் பாரதப் பிரதமர் நேருவும் இருந்தார்கள். அந்த அகாடெமிக்கு ஒவ்வொரு இந்திய மொழிக்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தார்கள். தமிழ்மொழிக்கு உறுப்பினராக என் தந்தையைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அந்த அகாடெமியின் முதல் கூட்டம் டெல்லியில் நடந்தபோது அதற்கான அழைப்பு என் தந்தைக்கு வந்தது. நானும் பேராசிரியர் திரு அனுமந்தன் அவர்களும் (என் தந்தையின் மூத்த மருமகன்) என் தம்பிகள் பாலுவும் ராஜாவும் என் தந்தையுடன் டெல்லிக்குச் சென்றோம். டெல்லியில் மத்திய அரசில்





ஒரு நிகழ்ச்சியின்போது நாமக்கல் கவிஞர் தம்பதிகள், மக்கள் திலகம் திரு எம்.ஜி.ஆர்., ஏ.வி.எம். மற்றும் பிரமுகர்கள்.

பெரிய பதவியில் இருந்த என் தந்தையின் நெருங்கிய நண்பரான திரு ராகவாச்சாரி என்பவரின் இல்லத்தில் தங்கினோம். பாராளுமன்றத்தில் ஓர் அறையில் நடந்த சாகித்ய அகாடமியின் கூட்டத்திற்கு என் தந்தை மற்றும் உறுப்பினர் தவிர வேறுயாரும் அனுமதிக்கப்படவில்லை.

அந்தக் கூட்டம் நடந்த அன்று இரவு பாரதப் பிரதமர் நேரு அவர்கள் சாகித்ய அகாடமியின் உறுப்பினர்கள் அனைவர்க்கும் தமது இல்லத்தில் உள்ள புல்வெளி மைதானத்தில் விருந்து ஒன்று அளித்தார். அந்த விருந்திற்கு டெல்லியில் உள்ள வேறு சில முக்கிய பிரமுகர்களும் வந்திருந்தனர். அந்த விருந்தில் கலந்து மகிழத் தந்தையார் அவர்களுடன் சென்றிருந்த எங்களுக்கும் வாய்ப்புக்கிடைத்தது. விருந்து முடிந்ததும் ஒவ்வொரு மொழிக்கான உறுப்பினரையும் அழைத்து ஜனாதிபதி அவர்கள் நேருவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஜனாதிபதி அவர்கள் என் தந்தையை அழைத்துப் பிரதமர் நேருவுக்கு அறிமுகம் செய்வித்தார்.

''தமிழ்நாட்டில் மகாகவி பாரதிக்குப்பின் தேசிய இயக்கங்களை வளர்ப்பதற்குப் பாடிய கவிஞர் இவர். காந்தியடிகளைப் பற்றியும் அவரது கொள்கைகளைப் பற்றியும் இந்திய மொழிகளிலே வேறு எந்தக் கவிஞரும் இந்த அளவிற்கு எழுதவில்லை'' என்றும் பாராட்டிக் கூறினார். உடன் நேரு அவர்கள் மிக்க மகிழ்ச்சிதெரிவித்து என் தந்தையின் கையைக் குலுக்கினார். ஜனாதிபதி உடனே அருகே இருந்த புகைப்படம் எடுப்பவரை அழைத்து நேருவை ஒருபுறமும் என் தந்தையை ஒரு புறமும் நிற்கச் செய்து புகைப்படம் எடுக்கச் செய்தார்.

என் கடைசித் தம்பி ராஜா பொறியியற் கல்லூரியில் படித்து மிகச் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று 1963-ஆம் ஆண்டில் பட்டமும் பெற்றான்.

பின்னர் கிண்டியில் உள்ள பொறியியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணி புரிந்தான். வேலையில் சேர்ந்த சில மாதங்களிலேயே மேற்படிப்புக்காக அமெரிக்கா செல்ல விரும்பி அதற்கான முயற்சிகள் அனைத்தும் மேற்கொண்டான். அமெரிக்காவில் உள்ள பல்கலைக் கழகத்தில் சேர அனுமதியும் பெற்று 'பாஸ்போர்ட்' 'விசா' முதலிய அனைத்தும் பெற்று நேரே நாமக்கல் வந்து 'மேற்படிப்புக்காக நான் அமெரிக்கா செல்ல விரும்புகிறேன்' என்று தந்தையிடம் கூறினான். என் தநதைக்கு அது மகிழ்ச்சியே தந்தது, என்றாலும் பாசம் நிறைந்த கடைசி மகனான அவனைப் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இடத்திற்கு அனுப்ப மனமின்றி ''ஏன் அமெரிக்கா செல்ல வேண்டும்? அந்த மேற்படிப்பை இந்தியாவிலேயே படிக்க முடியாதா'' என்று வினவினார்.

''படிக்கலாம். ஆனால் அங்கு சென்று பட்டம் பெற்றால் என் எதிர்காலம் சிறப்பாக இருக்கும்'' என்று என் தம்பி கூறினான். விமான டிக்கட்டு வாங்குவதற்கும் அமெரிக்கப் பல்கலைக் கழகத்திற்குக் கட்ட வேண்டிய

கட்டணமும் சேர்த்து சுமார் 15 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது என்று கூறினான். அச்சமயம் என் தந்தையிடம் அவ்வளவு பெரிய தொகை இல்லை. இதனை மகனிடம் கூறாமல், ''சரி. நீ சென்னை செல்! அமெரிக்காவுக்குப் புறப்பட வேண்டிய ஏற்பாடுகளைச் செய். விரைவில் அந்தத் தொகையை உனக்கு அனுப்புகிறேன்'' என்று கூறி அவனைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

பின்னர் என் தந்தைக்கு அவசியமான சமயங்களில் எல்லாம் உதவி செய்து வந்த ஏ. வி. எம். ஸ்டூடியோ நிறுவனர் திரு ஏவி. மெய்யப்ப செட்டியாருக்கும், பொள்ளாச்சித் தொழில் அதிபர் திரு என் மகாலிங்கத்திற்கும் நிலைமையைக் கூறி உதவி கேட்டுக் கடிதம் எழுதினார். இருவரும் ஒரு பெருந்தொகையை உடன் என் தந்தைக்கு அனுப்பினர். அவர்கள் அனுப்பிய தொகையுடன் தன்னிடம் பாங்கில் உள்ள தொகையையும் சேர்த்தாலும் ரூ. 15 ஆயிரம் சேரவில்லை. இதனை அறிந்த என் இளைய சகோதரன் பாலு என் தந்தையிடம் அன்பு கொண்ட புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களையும், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களையும் சந்தித்து 'என் இளைய சகோதரன் ராஜா மேற்படிப்புக்காக அமெரிக்கா செல்லவிருக்கிறான்; அதற்கு உங்களது உதவி தேவை' என்று கூறினான். புரட்சித் தலைவரும், நடிகர் திலகமும், பெரும் தொகைகளை என் தம்பி பாலுவிடம் கொடுத்து அனுப்பினர் குறிப்பாகப் புரட்சித் தலைவர் அவர்கள் யாரும் எதிர்பார்க்காத அளவு பெரும் தொகையை அளித்தார்.

என் தந்தையின் அரசியல் வாழ்வும் இலக்கியத்தொண்டும் அவருக்குப் பல்வேறு பெரு மக்களிடமிருந்தும் உதவிகளும் பாராட்டும் கிடைப்பதற்கு வழி வகுத்திருக்கின்றன.

இறுதி வரை காந்தியத்தைப் போற்றியும் தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழ் மக்களின் மேன்மைக்காகவும் பாடல்களை - கவிதைகளை எழுதி வந்த என் தந்தையை நினைவு கூரும்போது மெய்சிலிர்க்கிறது. 'புகழ் வாய்ந்த மகனைப் பெறுவதற்கு இந்தத் தந்தை என்ன புண்ணியம் செய்தானோ' என்று திருக்குறள் கூறுகிறதே, அதுபோல இப்படிப்பட்ட தந்தையை அடைய இந்த மகன் என்ன புண்ணியம் செய்திருக்கிறானோ என்றும் கூறலாமல்லவா? நானும் புண்ணியம் செய்திருக்கிறேன் என்றுதான் சொல்லவேண்டும். அதனால்தான் புவி புகழும் தந்தை எனக்குக் கிடைத்திருந்தார்!

**நாமக்கல் கவிஞர் அவர்கள் எழுதிய கடைசிக் கவிதை இது. தமிழரசு 16.8.1972 இதழில் வெளியிடப்பட்டது. கவிஞரின் கைப்பட எழுதிய கவிதைப் பிரதி இங்கே இடம் பெறுகிறது.**

PADMA BHUSHAN V. Ramalingam Pillai, M.L.C.X
Poet Laureate

NAMAKKAL.
(SALEM DT.)
22-7-1972

வணக்கம்

தாங்கள் கடிதம் வந்தது. சுதந்திர தின வெள்ளிவிழா 'தமிழரசு' மலருக்கு அடியிலுள்ள கவியை ஏற்றுக் கொள்ளுங்கள்.

விருத்தம்

அடிமை வாழ்வை நீக்கிநாம் அரசாள நாள் இது
அன்னியர்க்கு அஞ்சிவாழ்ந்த அவதி விட்ட நாள் இது
கடமையோடு கண்ணியம் கட்டுப்பாடு மூன்றையும்
கண்ணைப்போலக் காப்பொமென்று கையடித்த நாள் இது
விடுதலைநாள் கொண்டாடும் வெள்ளிவிழா நாளிதில்
வியப்பு மிக்க சாந்த சத்திய விரதம் பூண்ட வேள்வியில்
கருமையான தவமியற்றிக் கட்டவிழ்த்து விட்ட நம்
காந்தியண்ணல் நினைவுகொண்டு கைகுவித்து வணங்கு-
-வோம்.

வெ. இராமலிங்கன்



# பிற்படுத்தப் பட்டோர் நலம் பெற....

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் சிறப்பான வழக்கறிஞர்களிடம் மூன்று ஆண்டுகள் பயிற்சிகள் பெறுவதற்கு தமிழக அரசே உதவி செய்கிறது.

ஆண்டுக்கு 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்வீதம் 3 ஆண்டுகளுக்கு 20 பிற்படுத்தப்பட்ட வழக்கறிஞர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சி பெறும் வழக்கறிஞர்கள் குடும்ப வருமானம் ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாயாக இருக்க வேண்டும். அந்தக் குடும்பத்தில் அவர் தான் முதல் வழக்கறிஞர் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும். அந்த 20 பேரைத் தேர்ந்தெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது.

**வேலைவாய்ப்பு**

இதேபோல் பிற்படுத்தப்பட்டவர்கள் வேலை வாய்ப்புப் பயிற்சி பெறுவதற்காக 600 பேருக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி கொடுக்கப்படும். கம்ப்யூட்டர் பயிற்சி, ஸ்கிரீன் பிரிண்டிங் வேலை, அழகுக்கலை, ஆடை தைத்தல், நவீன ஆடை உருவாக்குதல் உள்பட 8 வேலைகளில் 3 மாதக் காலம் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இ.ஆ.ப. தேர்வில் (கலெக்டர் தேர்வுப் பரீட்சை) கலந்துகொள்ளும் பிற்படுத்தப்பட்ட மக்களில் வெற்றி பெறுகிறவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. சென்னையில் மட்டும் 50 பேர் பயிற்சி பெறுகிறார்கள்.

இதுதவிர டெல்லியிலுள்ள டாக்டர் ராவ் பயிற்சிக்கூடத்தில் இந்தப் போட்டி பரீட்சைக்காக 10 பேருக்குப் பயிற்சி கொடுக்கத் திட்டமிட்டு இருக்கிறோம். இதற்காக ஆண்டுக்கு ரூபாய் 1 இலட்சம் செலவிடப்படும்.

இவர்களைத் தேர்ந்தெடுக்க அலுவலர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக டெல்லிக்குப் போய் டாக்டர் ராவின் பயிற்சிக்கூடத்தைப் பார்வையிடுகிறேன்.

**விவசாயிகள்**

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சிறு விவசாயிகள் 5 ஆயிரம் பேருக்குப் பால் மாடு வாங்கி முன்னேறுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்டத்திற்கு 15 வீதம் மொத்தம் 225 சங்கங்கள் ஏற்படுத்தப்படும்.

இதற்காகப் பிற்படுத்தப்பட்ட நலவாரியத்தில் இருந்து ரூபாய் 96 இலட்சம் பாங்குகள் மூலமும் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூபாய் 96 லட்சமும், ஆக ரூ. 3 கோடி இதற்காகச் செலவிடப்படும்.

**தொழிற்சங்கம்**

பிற்படுத்தப்பட்ட மக்கள் கூட்டுறவுத் தொழில்பேட்டை ஏற்படுத்திக்கொள்ள ஆட்டோ ரிக்ஷா சங்கம், கயிறு திரிப்புத் தொழில் சங்கம் போன்று 20 சங்கங்கள் தொடங்க அரசு ஏற்பாடு செய்கிறது.

இதற்காக 58 இலட்சம் ரூபாய் செலவாகும். இதில் 5ல் ஒரு பங்கை மாநில அரசு கொடுக்கிறது. அந்த வகையில் இதுவரை ரூ. 2 இலட்சம் வரையில் கொடுக்கப்பட்டு விட்டது. இதன்மூலம் 3 ஆயிரத்து 186 குடும்பங்கள் பயன் அடையும்.

(மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆர் கோவேந்தன் கோட்டையில் செய்தியாளர்களுக்கு 22.9.84 அன்று அளித்த பேட்டியின்போது கூறியவை.)

மாண்புமிகு மத்திய அரசு கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. வீரேந்திர பாட்டில் அவர்களை 25-9-1984 அன்று புதுடில்லியில் மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கோவேந்தன் அவர்கள் சந்தித்தார்.





# தொழிலாளர் பென்சன்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக, குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக மூன்றாண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 50 கோடி வீதம் மூன்றாண்டுகளில் ரூபாய் 150 கோடி இதற்காகச் செலவிடப்படும்.

இம் மூன்றாண்டுத் திட்டத்தின் மூலம் பழங்குடியினர் சமவெளிப் பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு அளிக்கும் உதவித்தொகையை உயர்த்தி, அத்தொகை முழுவதையும் மானியமாக அளிக்க முடிவு செய்யப்பட்டது.

இப்போது சமவெளிப் பகுதிகளில் வீடு கட்டிக் கொள்வதற்கு ரூபாய் 4,000 வழங்கப்படுகிறது. இது ரூபாய் 6,000 ஆக உயர்த்தப்படும். இதில் ரூ. 750ஐ உடல் உழைப்பு மூலம் அவர்கள் செலுத்த வேண்டும் என்று இருந்ததை மாற்றி, முழு மானியத் தொகையாக வழங்கப்படும்.

மலைப் பகுதிகளில் வீடு கட்டிக் கொள்ள உதவித் தொகை ரூ. 6,000 என்றிருப்பது ரூ. 9,000 ஆக உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டில் 1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஆதிதிராவிட மக்கள் 90 லட்சம் பேரும், மலைவாழ் மக்கள் 5¼ இலட்சம் பேரும் இருக்கிறார்கள். இவர்களில் 80 சதவிகிதப்பேர் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். நகரில் 20 சதவிகிதம் பேர் வசித்து வருகிறார்கள்.

1963ஆம் ஆண்டு தமிழக அரசு தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்குக் கடன் உதவி அளித்தது. இவ்வாறு கடன் பெற்றவர்களில் 356 பேர் தங்களது கடன்களைக் கட்டவில்லை. கடன் தொகை ரூபாய் 5 இலட்சத்து 7 ஆயிரத்தை வறுமை நிலைமையைக் கருதி அரசு ரத்து செய்து விட்டது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சுதந்திர தினவிழாவின் போது கிராமப்புறத்தில் இருக்கிற நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், கிராம கைவினைஞர்கள், விபத்துக்குள்ளாகி இறந்தாலோ, காயம் அடைந்தாலோ, அவர்கட்கு உதவிப்பணம் வழங்கப்படும் என்று அறிவித்து இருந்தார்கள். ரூபாய் 3,000-த்திலிருந்து




ரூபாய் 5,000 வரை வழங்கப்படும். முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 கோடி ஒதுக்கப்பட்டு வழங்கப்படும். விருப்பம் உள்ள தொழிலாளர்கள் "சேட்டுறுதித் திட்டத்தில்" சேருவதற்கும் அரசு உதவி செய்கிறது. 18 வயதில் இருந்து 58 வயதுக்கு உட்பட்டவர்கள் மாதம் 10 வீதம் கட்டினால் அவர்கள் இடையில் இறந்துவிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 5,000 கொடுக்கப்படும். 58 வயது முடிந்த பிறகு அவர் கொடுத்த பணம் வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்படும்.

தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்திற்காகத் தனிநபர் சமூக நலச் சங்கங்களுக்கு (இந்திய பெண்கள் சொசைட்டி, சேவை நிலையம் போன்றவற்றிற்கு) அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரும் உதவியாக இருப்பார்கள்.

தமிழகத்தில் 104 கிராமங்களுக்குத் தீண்டாமை ஒழிப்பு இத்தகைய தீவிரப் பிரச்சாரம் மூலம் செய்ய வேண்டியிருக்கிறது. இராமநாதபுர மாவட்டத்தில் இத்தகைய கிராமங்கள் அதிக அளவில் உள்ளன.

[தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் 22.9.1984 அன்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து.]








# நாட்டு மக்களுக்கு வீட்டு வசதி

'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்கிற உயரிய குறிக்கோள் இந்த அரசினுடையது; அதற்கேற்ப விரைந்து செயலாற்றி வருவது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். இந்த அமைப்பின் சிறந்த நடவடிக்கைகள், குறிப்பிடத்தக்க திட்டங்கள், பாராட்டத்தக்க பணிகள் ஆகியவை பற்றி நாட்டுக்குத் தெரிவிக்க, வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு ஏ. செல்லையாத் தேவர் அவர்களைச் சந்தித்து விவரம் கேட்டோம். அந்தச்சந்திப்பின்போது நாங்கள் எழுப்பிய வினாக்களும், அவர் அளித்த விளக்கங்களும் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

வினா : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் எப்போது துவக்கப்பட்டது?

விடை : 1947-ஆம் ஆண்டில், நகர்ப்புற விரிவாக்க அறக்கட்டளைச் சட்டப் பிரிவின் கீழ் ( City Improvement Trust ) துவக்கப்பட்டது இந்த அமைப்பு. பிறகு, 1961-ல், தனிச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 'வீட்டு வசதி வாரியம்' என்ற பெயரோடு, தமிழ்நாடு அரசின் தனி நிறுவனமாக மாறியது.

வினா : இதுவரையில், இந்த வாரியத்தின் மூலம் தமிழ்நாடெங்கும் எத்தனைக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன?

விடை : இன்றுவரை ஒரு லட்சத்து ஐயாயிரத்து நாற்பத்திரண்டு குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் ஒரு இலட்சம் தரப்பட்டிருக்கின்றன.

வினா : கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் மட்டும் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

விடை : மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மட்டும், அதாவது இந்த ஏழாண்டுக் காலத்தில் அறுபத்து ஆறாயிரம் வீடுகள் எங்கள் வாரியத்தின் மூலம் கட்டித் தரப்பட்டுள்ளன. அதற்கு முந்திய பதினாறாண்டுக் காலத்தில், தேவை அதிகமிருந்தும்கூட முப்பத்து ஏழாயிரம் வீடுகளே இந்த வாரியத்தின் மூலம் முன்பிருந்த ஆட்சியாளர்களால் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. இதிலிருந்தே, வீட்டு வசதி வாரியப் பணி இன்றைய அரசால் எந்த அளவுக்கு வேகமாக முடுக்கிவிடப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் உணரலாம் (கம்பீரமாக நிமிர்கிறார்).

—சந்திப்பு : பி. எல். ராஜேந்திரன்



வினா : வீட்டு வசதி வாரியப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள்....

விடை : அதுகூட இந்த அரசு அமைந்த பிறகுதான் அதிகம். வீட்டு வசதி

[illegible] முதல் பது வாறாண்டுக் காலத்தில் 84 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப் பட்டுள்ளது; கழக அரசு அமைந்த இந்த எட்டாண்டுக் காலத்திலோ 193 கோடி ரூபாய் இந்த நற்பணிக் கெனச் செலவிட்டிருக்கிறோம்.

வினா : உங்கள் வாரிய நெறிமுறைப்படி அரசு ஊழியர்களுக்காக எவ்வளவு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன?

விடை : வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகளில், அரசு ஊழி யர்களுக்குப் பதினெட்டரைச் சத வீத வீடுகளை ஒதுக்குகிறோம். கழக அரசு அமைந்த பிறகுதான், 1979-ல் இருந்து இப்படி விகிதாச்சார முறைப் படி வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. இதற்கு முன்னாலெல்லாம், மேலே இருந்தவர்கள் விருப்பப்படிதான் வீடுகள் மற்றவர்களுக்குத் தரப்பட்டி ருக்கின்றன. வீடுகள் தருவதை வரை முறைப் படுத்தியதே நாங்கள்தான் (மார் தட்டுகிறார்).

வினா : விகிதாச்சாரம், வரைமுறை என்பதை யெல்லாம் கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்களேன்?

விடை : தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்காகப் பதினெட்டரை சதவீதம்; ஆதிதிரா விடர்கள் - பழங்குடி மக்களுக்காகப் பதினெட்டு சதவீதம்; மத்திய அரசு ஊழியர்களுக்குப் பதினோரு சத வீதம்; இராணுவத்தார்க்கு ஏழரை சதவீதம்; முடிதிருத்துவோருக் காக ஐந்து சதவீதம்; பத்திரிகை நிருபர்களுக்காக மூன்று சதவீதம்; நாடகத் திரைப்படக் கலைஞர்களுக் கென்று ஒரு சதவீதம்; ஊனமுற் றோர்க்கு ஒரு சதவீதம் என்ற விகிதாச்சாரப்படியே வீட்டு வசதி வாரிய வீடுகள் அளிக்கப்படுகின்றன. வாரியத் தொழில் நுணுக்க வல்லுநர் களுக்கு இரண்டு சதவீதம் எடுத்துக் கொள்கிறோம்.

வினா : காவல்துறையினருக்குத் தனி கார்ப் பொரேஷன் அமைத்து வீடுகள் கட்டித் தருவதுபோல், அரசு ஊழி யர்களுக்காகத் தனி அமைப்பு ஏற் படுத்தப்படுமா?

விடை: வீட்டு வசதி வாரியம் கட்டும் வீடு களிலேயே அதிக அளவு வீடுகள் - பதினெட்டரை சதவீதம் வீடுகள் அரசு ஊழியர்களுக்காகத் தருகிறோம். இந்த நிலையில் தனி கார்ப்பொரே ஷன் அமைக்க வேண்டியது அவசியம் தானா?

(பெரிதாகச் சிரிக்கிறார்).

வினா : பத்திரிகையாளர்களுக்குத் தனியாக்ச் சென்னை மாநகரிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் தனிக் குடியிருப்புகள் கட்டித்தரும் உத் தேசம் உண்டா?

விடை: மக்களை விட்டுத் தனியே பத்திரிகை யாளர்களைப் பிரித்தால் அவர் களுக்குப் பொதுவான பிரச்னைகள் தெரியாமல் போய்விடுமே(சிரித்தல்). இதுவரை அப்படிக் கட்டித்தரும் உத் தேசமில்லை; கேட்டால் கட்டித் தரப் படும்.

வினா : கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது?

விடை: பத்திரிகையாளர்களெல்லாம் ஒன்று பட்டு, ஒரு சொசைடி அமைத்து அதன்மூலம் வாரியத்தை இதற்காக அணுகலாம். அவர்களே நிலத்தை வாங்கி, ஒவ்வொரு வீட்டிற்குமான மொத்தச் செலவில் நான்கில் ஒரு பங்கு பணத்தை வாரியத்தில் கட்டத் தயாரென்றால், வீட்டுவசதி வாரியம், அவர்களுக்குத் தனியே வீடு கட்டித் தரத்த யார். இந்த அடிப்படையிலே தான் யூனியன் கார்பைடைச் சேர்ந் தவர்களுக்கும், ஆசிரியப் பெருமக் களுக்கும், மின் துறையினருக்கும் வேறு பலருக்கும்கூட நாங்கள் தனித்





தனி குடியிருப்புகள் கட்டித் தந்திருக் கிறோம். இந்த முறைப்படி கட்டுவது தான் எங்களுக்கும் எளிதாக இருக் கும்.

வினா : குலுக்கல் முறை மூலம் வீடுகள் தரப் படுவதில் தவறு நடக்கச் சாத்தியம் உண்டா?

விடை: (மேஜையில் தட்டி) கிடையவே கிடையாது. 1979 முதல் நாங்கள் தான் இந்த முறையை அமல்படுத்தி னோம். 15 நாட்களுக்கு முன்பே, மனுச்செய்தவர்களுக்கு இதுபற்றித் தெரிவிக்கிறோம். பொது இடத்தில் தான் குலுக்கல் நடக்கிறது. பார்க்க வரும் பொதுமக்கள் மூலம்தான் சீட்டே எடுக்கப்படுகிறது. தவறு எப் படி நடக்கும்?

வினா: காவல் துறையினருக்கு எவ்வளவு வீடு கள் கட்டித் தந்திருக்கிறீர்கள்? வேறு யாருக்கெல்லாம் வீட்டு வசதி வாரி யம் மூலம் வீடு கட்டித் தரப்படுகிறது?

விடை: காவல்துறையினருக்குப் பத்துகோடி ரூபாய் மதிப்பீட்டில் இதுவரை மூவாயிரம் வாடகை வீடுகள் கட்டித் தந்திருக்கிறோம். இதுதவிர தாசில் தார், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர், வரு வாய்த்துறை அதிகாரிகள், தொழி லாளர் நலத்துறை அலுவலர்கள், நீதித் துறையினருக்கெல்லாம் கூட நாங்கள் எங்கள் வாரியத்தின் மூலம் வீடு கட்டித் தருகிறோம்.

வினா : நீங்கள் ஒதுக்குகிற வீட்டைக் குறிப் பிட்ட காலத்தில் அத்ற்குரியோர் பெற்றுக்கொள்ளாவிட்டால் என்ன செய்கிறீர்கள்?

விடை: ஒதுக்கப்பட்ட 21 நாட்களுக்குள்,



அவர்கள் பெற்றுக் கொள்ள வேண் டும் என்பது வாரிய விதிமுறை. அப்ப டிப் பெற்றுக்கொள்ளாவிட்டால், அந்த வீடு வெயிட்டிங் லிஸ்ட்டில் அதற் கடுத்த இடத்தில் இருப்பவருக்கு அளிக்கப்பட்டு விடும்.

வினா : வாரிய வீடுகள் யாருக்கெல்லாம் தரப் பட மாட்டாது?

விடை: ஒருவர் எங்கள் மூலம் தன் பெயரில் ஒரு வீடு பெற முடியும். சொந்த வீடு வைத்திருப்போருக்கு வாரிய வீடுகள் பெறத்தகுதி மறுக்கப் படுகிறது.

வினா : வாரியத்தின் வீடுகளைச் சீர்செய்தல், வெள்ளையடித்தல் போன்ற பணி களை வாரியமே செய்து தருமா?

விடை: சொந்தத்தில் வீடு பெறுகிறவர்கள், அவர்களாகவே எல்லாம் செய்து கொள்ள வேண்டும். வாடகைக்குத் தரப்படுகிற வீடுகளில் மூன்றாண் டுக்கு ஒருமுறை நாங்களே வெளியே மட்டும் வெள்ளையடித்துத் தருகி றோம். உள்ளே அவர்களாகத்தான் செய்து கொள்ள வேண்டும். வீட் டைக் காலி செய்கிறபோது, வெள் ளையடித்துத்தான் எங்களிடம் அவர் கள் வீட்டை ஒப்படைக்க வேண்டும்.

வினா : வீட்டு வசதி வாரியம் கட்டும் வீடு கள் எத்தனை வகையாகப் பிரிக்கப் படுகின்றன? அவை ஒவ்வொன்றின் அமைப்பு முறை என்ன?

விடை: உயர்வருவாய் பெறுவோர் வீடு (Higher income group), குறைந்த வரு வாய் பெறுவோர் வீடு (Low income group ), நடுத்தரவருவாய் பெறு வோர் வீடு ( Middle income group), பொருளாதாரத்தில் பின்தங்கியவர் களுக்கான வீடு ( Ecconamicaly Weaker Section) எனப் பிரித்து வீடு களைக் கட்டுகிறோம். இரண்டு படுக்கை அறைகள், ஒரு வரவேற்பு அறை, இரு குளியல் அறைகள், ஒரு சமையல் அறை, ஒரு வராண்டா இருப் பது எச்.ஐ.ஜி. வீடு; ஒரு படுக்கை அறை, குளியல் அறை, ஒரு சமையல் அறை, வராண்டா உள்ளது. எம். ஐ ஜி. வீடு; ஒரு வரவேற்பறை, ஒரு சமை யல் அறை, குளியல் அறை இருப்பது எல். ஐ. ஜி. வீடு; ஒரு கூடம், ஒரு சமை யல் அறை, குளியல் அறை, உடை

யது ச.டபிள்யூ.ஜி. வீடு.

**வினா :** வாடகைக்குத் தரும் எல்லா வீடுகளிலேயும் மின்வசதி செய்து தருகிறீர்களா?

**விடை:** ஆமாம்; தனி மீட்டர் போட்டே தருகிறோம். மின் விசிறி சில வீடுகளில் மட்டுமே போட முடிந்தது; மற்றவைகளை அவரவர்களே செய்து கொள்ள வேண்டும்.

**வினா :** சென்னை நகரில் மட்டும் இதுவரை வீட்டு வசதி வாரியத்தின் மூலம் எவ்வளவு வீடுகள் கட்டியிருக்கிறீர்கள்?

**விடை:** ஐம்பத்து இரண்டாயிரம் வீடுகள்.

**வினா :** குடியிருப்புகள் தோறும் பள்ளி, மருத்துவமனை, நூலகம், சமூகக் கூடம் மகளிர் மன்றம் எல்லாம் உண்டா? இல்லையெனில் அவைகளுக்காக இடம் ஒதுக்கும் உத்தேசம் உண்டா?

**விடை:** இதெல்லாம் எல்லாக் குடியிருப்புகளிலும் இருக்கின்றன. அந்தந்தக் குடியிருப்பு மக்கள் தொகைக்கேற்ப ஆரம்பப் பள்ளி, மேநிலைப் பள்ளியெல்லாம் கூட கட்டித் தந்திருக்கிறோம். அண்ணா நகரில் ஒரு கல்லூரிக்கே இடம் கொடுத்திருக்கிறோம். எல்லோரும் கல்வி பெற வேண்டும் என்ற மாண்புமிகு புரட்சித் தலைவரின் குறிக்கோளை எங்களால் முடிந்த வரை நாங்கள் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைவேற்றி வருகிறோம். (குரலில் புதுத் தெம்பு தொனிக்கிறது).

**வினா :** பிளாட் சிஸ்டம் வீடு வாங்குகிறவர்கள், எவ்வளவு காலத்திற்குப் பிறகு அதை விற்கும் உரிமை பெறுகிறார்கள்?

**விடை:** கடைசித் தவணைப் பணம் கட்டிய ஐந்தாண்டுகளுக்குப் பிறகே அவர்கள் அதை விற்க முடியும். அபிவிருத்தி செய்யப்பட்ட மனை வாங்குகிறவர்கள், அதில் ஐந்தாண்டுகளுக்குள்ளாக வீடு கட்டியாக வேண்டும். வீடு கட்டி முடிக்கப்பட்டுவிட்டாலே அதை விற்க அவர்களுக்கு உரிமை தரப்பட்டுவிடும். அப்படியில்லாமல் ஓரளவுக்கு வீட்டைக் கட்டி விட்டு, மேலே பணி தொடரப் பணமில்லாமல் தொல்லைப்படுவார்களானால், அந்த வீட்டின் பெயரில் கடன் வாங்க அவர்களுக்கு நாங்கள் அனுமதியளிக்கிறோம்.

**வினா :** அரசு அலுவலகமாகக் கட்டித் தரப்படும் கட்டடங்களின் தேவைக்கேற்ப அரசு நிதி உதவி தட்டுப்பாடின்றிக் கிடைக்கிறதா?

**விடை:** (உரத்த குரலில்) நிச்சயமாக. அப்படியில்லாவிட்டால் நாங்கள் அந்தவகையிலும் விரைந்து செயல்படமுடியுமா? 1976க்கு முன்பெல்லாம் இந்த வாரியத்திற்கென ஒரு கோடி ரூபாய் ஒன்றரைக்கோடி ரூபாய்தான் அரசு மூலம் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு, இந்த ஆண்டுக்கு மட்டும் ஆறரைக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! இந்த 84-85ல் 2139 வீடுகள் நாங்கள் கட்டி முடிக்கவிருக்கிறோமென்றால், அது, நிதி ஆதாரத் தட்டுப்பாடு இல்லாத காரணத்தால் தான்!

இன்னொரு முக்கிய விஷயம்; வீட்டு வசதி வாரியத்தில் தொழில் வல்லுநர் சுமார் 2,500 பேர் உட்பட மொத்தம் 4,500 பேர் பணியாற்றுகிறார்கள். வாரியத்தின் வருமானத்திலேயே இவர்கள் எல்லோருக்கும் சம்பளம் தருகிறோம். வாரியத்திற்குள்ள பணத்தேவையை வாரியப் பணிகள் மூலமே நாங்கள் சரிக்கட்டிக் கொள்கிறோம். இதுமட்டுமல்ல; எங்கள் வாரியப் பணிகளின் மூலம் ஆண்டொன்றுக்கு இரண்டரை இலட்சம் பேருக்குமேல் வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். அரசின் அரவணைப்பு இருப்பதால்தான் எங்கள் வீட்டுவசதி வாரியப் பணி, அடுத்த மாநிலத்தாரும், மத்திய அரசினரும் மட்டுமல்லாமல் இங்கே வரும் வேற்று நாட்டுப் பிரமுகர்களும்கூட கண்டுவியக்கும்படி அமைகிறது.

**வினா :** கட்டடக் கட்டுமானத்தில் நீங்கள் புதுமுறைகளைக் கையாளுகிறீர்களா?

**விடை:** உறுதி குறையாமல் கவனித்து, கட்டுமானச் செலவு குறையும்படியான வழிமுறைகளை நாங்கள் கையாளுகிறோம். புதுப்புது முறைகளைக் கண்டுபிடித்துச் செயல்படுத்தியும் வருகிறோம். (சுமார் அரைமணிநேரம் வீட்டு வசதி வாரிய வீடுகள் கட்டுவதில் எப்படிப்பட்ட முறைகளெல்லாம் நூதனமாகக் கையாளப்படுகின்றன என்பதை நுணுக்கமாக விவரிக்கிறார்.) இதனால்தான் இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் இல்லாத பேரும் புகழும் எங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குக் கிடைக்கிறது.

**வினா :** வாரியத்தின் மூலம் ஏதேனும் புதிய சாதனை புரிய இருக்கிறீர்களா?

**விடை:** ஆம்; எங்களுக்கென ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். அதன்படி இந்த ஐந்தாண்டில் தமிழ்நாடு முழுமையிலுமாக நாலரை லட்சம் வீடுகளைக் கட்டி முடிக்கவிருக்கிறோம். உணவு, உடை, வீடு போன்றவற்றில் மக்களுக்குக் குறை இருக்கக்கூடாது என்ற மாண்புமிகு புரட்சித் தலைவரின் குறிக்கோளை நிறைவேற்றுவதில், எங்கள் பங்கை நாங்கள் எந்தக் குறையும் இல்லாமல் செய்து முடிப்போம் என்பது உறுதி.



# தஞ்சையில் சுய வேலைவாய்ப்பு




**வை. புண்ணிய மூர்த்தி**
உதவிமக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர்.


தஞ்சை மாவட்டத் தொழில் மையத்தின் சிபாரிசு அடிப்படையில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 2,066 பேர்கள் வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று தொழில்கள் துவங்கி உள்ளனர். இதில் 2 விதவைகள் உள்பட 274 பெண்கள் தொழில்களைத் துவக்கி உள்ளனர். அவர்களில் சிலரை நேரில் சந்தித்துச் சுயவேலை வாய்ப்புத் திட்டம் பற்றிய கருத்துக்களையும், அவர்கள் அடைந்த பலன்களையும் கேட்டறிந்தோம்.

கும்பகோணம் துவரங்குறிச்சியைச் சேர்ந்த 29 வயது பட்டதாரியான திருமதி. எஸ்.பி.உஷா கூறியதாவது:

"எனது கணவர் வக்கீல் தொழில் செய்து வருகிறார். குடும்பம் நடத்துவதற்கு அவருக்குப் போதிய வருமானம் வந்தாலும், இன்றைய நிலையில் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துக் கொண்டே போவதால், நாமும் உத்தியோகத்திற்குச் சென்று சம்பாதித்தால் சரியாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டிருக்கையில், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெண்களும் கடனுதவி பெற்று தொழில்கள் செய்யலாம் என்கிற தகவலை பத்திரிகைகள் மூலம் தெரிந்து கொண்டேன்.

"குடும்ப வேலைகளையும் பார்த்துக் கொண்டு தொழிலில் ஈடுபடக்கூடிய அளவில் சூட வில்லைகள் தயாரிப்பு தொழில் செய்யலாமென்கிற கருத்தை எனது கணவரிடம் கூறினேன். அவரும் ஒப்புதல் அளித்தார். மாவட்ட தொழில் மையத்திற்கு விண்ணப்பித்தேன். 15 ஆயிரம் ரூபாய் பாங்க் கடனுதவி கிடைத்தது. விஷ்ணு மார்க் சூடவில்லைகள் என்கிற பெயரால், நான் தயாரிக்கும் சூடம் மாதம் எப்படியும் 7,500 ரூபாய்க்குக் குறையாமல் விற்பனை யாகிறது. தயாரிப்புக்கான மூலப் பொருள்கள், பேக்கிங் செலவுகள் ஆகியவைகளில் 6,700 ரூபாய் ஆகிவிடுகிறது. மீதம் 800 ரூபாய் குறைந்த பட்சலாபம் கிடைக்கிறது.

பாங்க் கடனை சுலபமாகக் கட்டி வருகிறேன். தமிழக அரசு இத்திட்டத்தைச் சிறப்பாக அமுலாக்குவதால், என்போன்ற குடும்பப் பெண்கள் நல்ல பயனைப் பெற முடிந்தது. மத்திய் மாநில அரசுகளுக்கு நன்றியோடு கூடிய பாராட்டுக்களையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்."

கும்பகோணம் காவேரிக்கரை செல்வி உமா மகேஸ்வரி கூறியதாவது:

"நான் ரேடியோ என்ஜினியரிங் பட்டப் படிப்பு பெற்றுள்ள

தால், சுயமாகத் தொழிலில் சடுபட விரும்பி மாவட்டத்தொழில் மையத்திற்கு விண்ணப்பம் செய்தேன். 10 ஆயிரம் ரூபாய் ஐ.ஓ.பி வங்கி கடனுதவி கிடைத்தது. டிரான்சிஸ்டருக்குத் தேவையான எலிமினேட்டர் என்கிற உபகருவியைத் தயாரித்து வருகிறேன். மாதம் 500 ரூபாய்க்குக் குறையாமல் லாபம் கிடைப்பதால், பெற்றோர்களுக்குச் சிரமம் தராமல் சுதந்திரமாக இளம்பெண்கள் வாழ, சுயவேலை வாய்ப்புத்திட்டம் நல்ல வரப்பிரசாதம் என்பது எனது கருத்தாகும்''

35 வயது இளம் விதவையான திருமதி குமார் பிரகன்நாயகி கூறுகிறார்:—

## மேலும் 40 மேல்நிலைப் பள்ளிகள்

தமிழ்நாட்டில் உயர் கல்விக்கான வசதிகளை அதிகப்படுத்த வேண்டிய தேவையினைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு இவ்வாண்டு மொத்தம் 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த முடிவுசெய்துள்ளது. மேற்குறிப்பிட்ட 40 மேல்நிலைப் பள்ளிகளில், 14 மேல்நிலைப் பள்ளிகள் அரசுப் பள்ளிகள், 25 தனியார் மற்றும் 1 நகராட்சிப் பள்ளியாகும்.

மேற்குறிப்பிட்ட 40 மேல்நிலைப் பள்ளிகளில் மகளிருக்கெனத் துவக்கப்படும் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்.



''திரைப்படத் தொழில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தை நடத்தி வந்த என் கணவர் இறந்ததும், இளம்வயதினளான நான் அநாதையாகிவிடாமல் சுயவேலை வாய்ப்புத் திட்டம் கைகொடுத்ததை என்னால் மறக்கவே முடியாது. பிராமண வகுப்பைச் சேர்ந்த நான் கடனைப் பெற முடியுமோ என்று எண்ணியதும் உண்டு. எலக்ட்ரானிக் டிப்ளோமா பெற்றுள்ள எனது தகுதியையும் திறமையையும் நன்கு அறிந்து மாவட்டத் தொழில் மைய அதிகாரிகள் ஸ்டேட பாங்கிற்கு சிபாரிசு செய்தார்கள். 25 ஆயிரம் ரூபாய் கடனாகக் கிடைத்தது.

எலெக்ட்ரானிக் தொடர்புடைய கருவிகள், ரேடியோ போன்றவற்றை ரிப்பேர் செய்யும் நிறுவனம் ஒன்றை நிறுவியுள்ளேன். ரேடியோ ரிப்பேரிங்கிற்குத் தேவையான கருவியை தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். இப்போதைக்கு எனது மாத வருமானம் ரூ. 750 இருந்தாலும், நாளாக மேலும் வருமானம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கௌரவமாகத் தொழில் செய்து மானத்தோடு வாழ்வதற்கு என் போன்ற இளம் விதவைகளுக்கு ஜாதி வித்தியாசம் பார்க்காமல் தமிழக அரசு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தை அமலாக்கி வருவதற்கு எத்தனை பாராட்டினாலும் தகும். மத்திய அரசு உருவாக்கிய இத்திட்டம் தஞ்சை மாவட்ட அளவில் எந்த வித குறைபாடில்லாமல் செயலாக்கப்படுகிறது என்பதற்கு நானே சாட்சியாகும்.''

மேலக்கோட்டையூரில் திரு. எல்.சந்திரசேகரன் கூறியதாவது:

''பி.ஏ., பட்டதாரியான பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவனாக இருந்தாலும் உத்தியோகம் ஏதும் கிடைக்காமல் சிரமப்பட்டு வந்தேன். எப்படியாவது உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்கிற கருத்தில் சூட்கேஸ் தயாரிக்கும் தொழிலில் சடுபட விரும்பினேன். தொழிலைக் கற்றுக் கொள்ள தயாரிப்பு நிறுவனம் ஒன்றில் சேர்ந்து பயிற்சி பெற்றேன். அதே நிறுவனத்தில், தினக்கூலி வேலை செய்தும் வந்தேன். சுயவேலை வாய்ப்புத் திட்டப்படி ரூ.18 ஆயிரம் கடனை இந்தியன் வங்கி மூலம் கிடைக்கப் பெற்றேன். சூட்கேஸ், பிரிப்கேஸ் தயாரித்து விற்று வருகிறேன்.



மாதம் 1,500 ரூபாய் வருமானமும் கிடைக்கிறது''

தஞ்சை மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர் திரு. ஆர்.கிருஷ்ணமாச்சாரிகூறுகையில், ஏறத்தாழ 5 ஆயிரம் பேர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டம், பிற பல்வேறு திட்டங்கள் மூலம் 620 லட்ச ரூபாய் அளவுக்குத் தஞ்சை மாவட்டம் தொழில் முன்னேற்றம் பெறவும், வேலையற்றவர்கள் பயன்பெறவும் கடனுதவிகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.





# காலத்தை வென்ற கலைவாணர்

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் நினைவுநாள் 30.8.'84 அன்று மாலை சென்னை சிவகாமி நாடக மன்றத்தைச் சேர்ந்த திரு தங்கராஜ் குழுவினரின் வில்லிசையுடன் தொடங்கியது.

அதன் பின்னர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் திரு டி.வி.நாராயணசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''கலைவாணர் கலை உலகில் திருப்பங்களைச் செய்து - பொதுமக்களுக்கு நல்லறிவு புகட்டினார்'' என்று குறிப்பிட்டார்.

தலைமை வகித்த இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு பு.ரா. கோகுலகிருஷ்ணன் தமது உரையில் தெரிவித்தார்:

''கலைவாணர் மக்களைச் சிரிக்க வைத்து அவர்களின் சிந்தனையைத் தூண்டி வந்தார். அரசியல் கருத்தாயினும் சரி, சமுதாயத்தைப் பற்றிய செய்தியாயினும் சரி, சனாதனங்களைப் பற்றிய விஷயமாயினும் சரி எதை எடுத்துச் சொன்னாலும், பிறரது மனம் புண்படாத வகையில் அவர் சொல்லிச் சென்றார்.

''அவர் கருணையுள்ளம் கொண்டவர். பலரை வாழ்வித்திருக்கிறார். அதனால் தான் ஜன சமுதாயம் அவரை மறக்காமல் அவரது நினைவை இன்றும் போற்றிக் கொண்டிருக்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் சீரிய பண்பாட்டுக்கு அவர் எடுத்துக்காட்டாக விளங்கினார்.''



தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''தமிழ் உலகில் எத்தனையோ மூதாட்டிகள் இருந்திருக்கிறார்கள்-இருந்து வருகிறார்கள். என்றாலும் தமிழ் மூதாட்டி என்று சொன்னால், அது ஔவையாரைத்தான் குறிக்கும். அதைப்போலவே கலை உலகத்தில் எத்தனையோ கலைஞர்கள் இருந்தாலும் கலைவாணர் என்றால், அது என்.எஸ். கிருஷ்ணன் அவர்களைத்தான் சுட்டும்.

"கலை உலகத்தினர் ஒடுக்கமாக-ஒதுக்கமாக இருந்த காலம் உண்டு. என்.எஸ்.கே. தான் முதன், முதலாக, கலை உலகத்திலிருந்து இலக்கியம், தொழில், அரசியல் உலகம் எனப் பங்கு பெற்று, அனைவருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

''நகைச்சுவைக்கு வெற்றி தேடித்தந்த பெருமை கலைவாணரைத்தான் சாரும். அவரது வாழ்வில் நகைச்சுவை இழையோடியது.

''நாம் மேடைகளில் ஆரவாரமாகச் சொல்லுகின்ற கருத்துக்

## இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்க்கு மறுவாழ்வுத் திட்டம்

களை எல்லாம் அவர் மிக எளி தாகச் சொல்லி, மக்கள் மனத் தில் பதிய வைத்து விடுவார்.

''சிரிப்புடன் சிந்தனையையும் கலந்து வழங்கிய கலைவாணர், கலை உலகில் நிலைத்த வாண ராகத் திகழ்ந்தார். சிரிப்புக்குப் பொருள் உண்டு என்பதனை விளக்கிய நெறியாளர் அவர். சிரிப்பு என்றால் உதட்டின் விசிப்பு அல்ல, வெள்ளை உள்ளம் காட் டும் கருத்து என்பதை எடுத்துக் காட்டி, சிரிப்புக்கு இலக்கணம் வகுத்தவர் கலைவாணர்''.

அடுத்து உரையாற்றிய திரு. வெ.நாராயணன் குறிப்பிட்ட தாவது:

''கலைவாணரின் 27-வது நினைவுநாள் இது. அவர் தமது 11வது வயதில் நாடகத்தில் நடிக் கத் தொடங்கினார். பின்னர் 38 வருடங்களில் பாதிக்காலம் நாட கத்திலும் பாதிக்காலம் திரையுல கிலும் பணிபுரிந்தார். இவற்றில் 2½ வருடம் சிறையிலிருந்தார்.

''கலைவாணரின் மறைவின் போது மூதறிஞர் ராஜாஜி அவர் கள், மதுரம் அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில்,' உங்கள் கண வர் கிருஷ்ணன் கலைஉலகில் விட்டுச் சென்ற இடத்தை எவ ராலும் நிரப்ப முடியாது. அது காலியாகத்தான் இருக்கும்' என்று குறிப்பிட்டார். அது உண்மைதான். அவரது இடத்தை பூர்த்தி செய்ய இன்னும் எவரும் வரவில்லை''

அடுத்து உரையாற்றிய திரு எஸ்.வி.சகஸ்ரநாமம் குறிப்பிட் டார்:

''கலைவாணருடன் நாடகங் களில் சிறுபிராயத்திலிருந்தே நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் பகலில் தூங்கு வதே கிடையாது. எப்போதும் சுறுசுறுப்பின் வடிவமாகக் காட்சி தருவார். ஒரு நொடியைக் கூட அவர் வீணாக்கியதில்லை. வாழ்ந்த 49 வருடமும் உழைத் தார். அதனால்தான் சேலம், கோவை, சென்னை என்று பல ஊர்களில் உள்ள ஸ்டுடியோக் களுக்கும் சென்று, பம்பரம்போல் அவரால் பணியாற்ற முடிந் தது''.

விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றிய மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தெரிவித் தார்:

''அரசியல் தலைவர்களிடம் பழகும்போது ஏற்றத் தாழ் வின்றிப் பழகுவார் கலைவாணர்.

''அவர் தொழிலுக்காகச் சிரிக்க வில்லை. சிரிப்பை வாழ்க்கையா கவே கொண்டிருந்தார். அவர் சிரிப்பை ஊட்டும்போது, பிறர் மனம் புண்படாது.

''எதிர்மறை நிலையிலிருந்து தமது கருத்தைக் கூறும் திறம் பெற்றிருந்தார். அவர் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் அவரது சொந்தக் கருத்து, அது அவரது சொத்து''.

அடுத்து கலைமாமணி எஸ். எஸ்.சிவசூரியன் குழுவினர் பங்கு பெற்ற 'எனக்குத் தெரிந்தவரை' என்னும் நகைச்சுவை நாடகம் நடைபெற்றது. இந்த நாடகத் தில் கலைவாணர், நாடகத்திலும் திரைப் படத்திலும் தெரிவித்த சிந்தனைமிக்க கருத்துக்கள் சேர்க் கப்பட்டிருந்தன. இன்றைய தலைமுறையினருக்கு ஆக்காட்சி கள் இனிய விருந்தை வழங்கின என்று சொன்னால் அது மிகை யாகாது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
சுந்தர்





# பல் பரிசோதனை



இந்தியப்பல் வைத்தியக் கழக மும் கோல்கேட் பாமோலிவ் நிறு வனமும் இணைந்து ஏற்பாடு செய்த **'பல் மருத்துவச் சுகாதார வார விழா** 29.8.84 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் தொடங்கியது.

விழாவிற்கு வந்திருந்தோரை டாக்டர் என். ஞானசுந்தரம் (இந்திய பல் வைத்திய சங்கத்தின் சென்னைக் கிளைத் தலைவர்) வரவேற்றார்.

நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கி சென்னை பல் மருத்துவக் கல் லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன் உரையாற்று கையில் குறிப்பிட்டதாவது:

''வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பல் மருத்துவர் களின் எண்ணிக்கை அதிகரிக்கப் படும். எம்.பி.பி.எஸ். படித்த பட்டதாரிகளுக்குப் பல் வைத்தி யத்தில் குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படும். பல் மருத்துவ விதிகளின்படி பல் வைத்தியர் ஒவ்வொருவரும் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இதன் மூலம் முறையான பயிற்சி பெறாதவர்களின் எண்ணிக்கை யைக் குறைத்துச் சமுதாயத்திற்கு உதவ முடியும்.

''மலைவாழ் மக்கள் பல் சிதை வுக்கும் பல் நோய்க்கும் ஆளாகா மல் இருக்கிறார்கள். அவர்கள் நம்மைப் போன்று சாக்லெட், நவீன உணவு வகைகளைச் சாப் பிடுவது கிடையாது. இதுதான் அதற்குக் காரணம்.

''பள்ளி மாணவர்கள் ப்ளோ ரைடு கலந்த நீரால் வாயைக் கொப்பளித்துப் பற்களைச் சொத்தை, சிதைவு உள்ளிட்ட பாதிப்புகளிலிருந்து காப்பாற்றுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

''தமிழக அரசு அறிமுகப்படுத் தியுள்ள இலவசப் பற்பொடித் திட்டம் பல்லை நல்ல முறையில் பாதுகாக்க உதவுகிறது. கிராமப் புறங்களில் இது நல்ல பயனை ஏற்படுத்தி உள்ளது'.'

இலவசப் பல் பரிசோதனை முகாம், பல் சம்பந்தமான கண் காட்சி, பல்மருத்துவச் சுகாதார வார விழா ஆகியவைகளைத் தொடங்கி வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச் சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் பேசுகையில் கூறியதா வது:



வளர்ந்த நாடுகளில் பல்வைத் தியத்துக்குக்கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறைகள் வளர்ந்து வரும் நாடான இந்தியாவில் அப்படியே பொருந்தி வராது. நம்முடைய நிலைமைகளுக்கு ஏற்ப இந்தச் சிகிச்சை முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். மேல்நாட்டு புத்தகங்களைப் படித்துவிட்டு அவற்றில் கூறப்பட்டுள்ளதை அப்படியே இங்கு நடைமுறைப் படுத்திவிடலாம் என்று நினைப் பது சரியல்ல.

நம் நாட்டு உணவு, சூழ்நிலை இவற்றைக் கவனத்தில் கொண்டு வைத்தியச் சிகிச்சைகளைச் செய்யவேண்டும். **பொதுவாகப் பெற்றோர்களின் கவனக்குறை வாலும், அக்கறையற்ற தன்மை யாலும் குழந்தைகளின் பற்கள் சிதைவு அடைகின்றன.**

குழந்தைகளின் பெற்றோர் கட்கு பல்நோய் தடுப்பது பற்றி யும் பல்பாதுகாப்பும் பற்றியும் நல்ல முறையில் விளக்கிக் கூற வேண்டும். அப்போதுதான் குழந் தைகளின் பல்லைப் பாதுகாக்க முடியும்.

பல்நோய்க்குக் குடிதண்ணீரும் ஒரு காரணமாக இருக்கிறது. ஆகவே குடிதண்ணீரில் போது மான அளவு 'ப்ளோரைடு' கலந்து சரியான அளவில் இருப்பதன் மூலம் பற்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் 1985 ஆம் ஆண்டு இறுதிக்குள் பல் பரி சோதனை நடத்தி உரிய சிகிச்சை அளிக்கப்படும். சமூக சேவை நிறுவனங்களின் சேவை யையும் பயன்படுத்திக் கொள் வோம்.

''எல்லாப் பள்ளிகளின் ஆசிரியர் களுக்கும் பல்பாதுகாப்புக்குறித்த விளக்கப் புத்தகங்களை வழங்கி, முதலில் அவர்கட்கு விளக்கிச்



சொல்லப்படும். பள்ளி மாணவர்கள் தங்கள் ஆசிரியர்கள் மூலம் பல்பாதுகாப்பைப் பற்றித் தெளிவாக அறிய முடியும். இதனால் பல் நோய் தடுக்கப்படும்'' என்றார்.

கோல்கேட் பாமோலிவ் நிறுவனத்தலைவர் திரு பி.கே.கோஷ் பற்களின் பாதுகாப்புக் குறித்துப் பேசினார்.

மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் பள்ளி மாணவர்களுக்கான பல்பாதுகாப்பு ஆலோசனை என்ற புத்தகத்தை வெளியிட்டுப் பேசுகையில், ''பள்ளி மாணவர்களுக்குப் பல்பாதுகாப்புக் குறித்து விளக்குவதற்காக ஆசிரியர்கட்கு உரிய ஆலோசனை மற்றும் பயிற்சி அளிக்கப்படும்'' என்றார்.

இந்திய பல் வைத்தியச் சங்கத்தின் சென்னைக் கிளைச் செயலாளர் டாக்டர் ஆர்.ராஜகோபால் நன்றி கூறினார்.

நாட்டில் பல்நலம் பெருகப் பத்திரிகையாளரின் கடமை என்ற நிகழ்ச்சிக்கு செய்தித்துறை இயக்குநர் திரு சி.என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கிப் பேசுகையில், 'பல் சுத்தமாக இல்லையென்றால் ஆரோக்கியமாக வாழமுடியாது' என்றார்.

தினமலர் செய்தியாளர் திரு வி.ராமமூர்த்தி பேசுகையில், 'நம்முடைய மக்கள் தொகைக்கு ஏற்றவாறு பல் மருத்துவர்கள் இல்லை' என்றார். தமிழரசு ஆங்கில இதழ் இணையாசிரியர் திரு சி.நல்லரசு பேசுகையில், ''கையேடுகள் மூலம் பற்பசை பற்றி விளம்பரங்கள் செய்ய வேண்டும். அக்மார்க் முத்திரை பற்பொடி, பற்பசைகளுக்குக் குத்த வேண்டும்'' என்றார்.



பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி.ராஜன் அவர்கள் விளக்க உரையாற்றிப் பேசுகையில், ''பத்திரிகையாளர்கள் தெரிவித்த கருத்துக்கள் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும். எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்பிலேயே பல்பற்றிச் சொல்லித் தரவேண்டும். பொம்மைகள், படங்கள், ஓவியங்கள் மூலம் பல்பாதுகாப்பு பற்றி விளக்கப்படும்'' என்றார்.

இறுதியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு கே.நடராஜன் நன்றி கூறினார்.

நாட்டின் பல்நலம் பெருக - அன்னையர்களின் கடமை என்ற நிகழ்ச்சிக்குச் சென்னை நகரசெரீப் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'பல்தூக்கி இருப்பதால் பல பெண்களின் திருமணம் பாதிக்கப்படுகிறது. ஆனால் இன்று நவீன மருத்துவம் மூலம் சரி செய்யப் படுகிறது'' என்றார்.

மகளிர் கருத்தரங்கிற்கு திருமதி அரசுமணிமேகலை தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''நகரமக்கள் பல்லைப் பற்றிச் சரியாகக் கவனிப்பது இல்லை. பல வியாதிகளுக்கு மூலகாரணம் பல்தான். பல்வேறு துறையில் பணியாற்றுபவர்களை அழைத்து இதுமாதிரிக் கருத்தரங்கை நடத்தியதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

அன்னையர்களின் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்து மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் பேசியதாவது: 'கிராமங்களில் கல்வி அறிவற்ற ஏழைப் பெண்கள், தங்களது குழந்தைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருப்பதில்லை. சமுதாயத்தைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றார்கள். குழந்தைகளுக்குப் பல் துலக்காமல்கூட உணவு முதலியவற்றைக் கொடுத்து விடுவார்கள்.

''இதுபோன்ற கருத்தரங்கில் கிராமப் பெண்களை அழைத்து ஈடுபடச் செய்திட வேண்டும்.

''கிராமங்களில் வயதான பாட்டிமார்கள், கிராம வைத்தியன்களைச் சொல்வார்கள். சூடத்தை, புகையிலையை பல் வலிக்கு அமுக்கினால் சரியாகப் போய்விடும் என்பார்கள். இன்றைய விஞ்ஞான உலகில் அவ்வாறு செய்யக்கூடாது. மருத்துவமனையிலோ, பல் மருத்துவரிடமோ காட்டிச் சிகிச்சைபெற வேண்டும்.

''சாம்பல், மண், செங்கற்பொடி ஆகியவற்றைக் கொண்டு பல் தேய்க்காமல் மருத்துவர் அறிவுரைப்படித் தூய்மைப்படுத்த வேண்டும்.

''பல் வியாதி எப்படி வருகிறது, பல்லை எப்படிப் பாதுகாப்பது என்பது பற்றி எல்லாம் கிராம மக்களுக்குச் செய்திப்படம் மூலம் விளக்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.'

மகளிர் கருத்தரங்கில் திருமதி ஒய்.ஜி.பார்த்தசாரதி, செல்வி, கலாவதி; டாக்டர் எஸ். ஞானசௌந்தரி, டாக்டர் டி.ஆர்.சரஸ்வதி, டாக்டர் பிரம்மலிங்கஞானப்பிரகாசம் மற்றும் பலரும், '3-5 வயது முதல் குழந்தைகளுக்குப் பல்பாதுகாப்பு பற்றியும், கர்ப்பிணி வயிற்றில் குழந்தை வளரும்



போதே கால்சியம் எந்த அளவிற்கும் பெறுகிறதோ அந்த அளவில் பல்வளர்ச்சி பெறுகிறதென்றும், பல்வளர்ச்சி பெற 1½ வயதில் முறுக்குத் துண்டு கொடுக்கலாம் என்றும், பல்வேறு விவரங்களை மகளிருக்கு எடுத்துக் கூறினார்கள்.

இறுதியில் சிறப்புரை ஆற்றிய பல்மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''பல்நோயைத் தடுப்பது எப்படி என்ற மகளிர் கருத்தரங்கு மூலம் பல நல்ல கருத்துக்களைத் தெரிந்து கொண்டோம்.

''ஆஸ்பத்திரிக்குப் பல்நோயாளிகள் கடைசி நேரத்தில் வருகிறார்கள். முதலிலேயே பல்நோய் இருக்கிறதா என்று சாதாரணமாக அறிந்துகொண்டால் நல்லது.

''பள்ளி மாணவ மாணவிகளுக்கு எழுதிய புத்தகத்தில் மறுபதிப்பு வெளியிட உள்ளோம். மகளிர் அரங்கில் கூறிய கருத்துக்கள் அவற்றில் சேர்த்துக்கொள்ளப் படும். ஆங்கிலத்திலும் புத்தகம் வெளியிடப்படும்.

''கி.பி. இரண்டாயிரத்தில் பல் வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கக்கூடாது என்று இம் மாதிரிப் பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன.''

டாக்டர் என்.ஞானசுந்தரம் நன்றி கூறினார்.

நாட்டின் பல்நலம் பெருக இளைஞர்களின் கடமை என்ற நிகழ்ச்சிக்குத் தமிழ்நாடு திட்டக் குழு உறுப்பினர் டாக்டர் எஸ். ஞானதேசிகன் தலைமை வகித்தார். டாக்டர் பி.பி.ராஜன் அவர்கள் வரவேற்புரையாற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''பல்பற்றித் தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் சிதம்பரத்தில் பல் மருத்துவ மாணவர்கள் உதயமாக இருக்கிறார்கள்.''

டாக்டர் சீனுவாசன், டாக்டர் ஜான் செபாஸ்டியன், திரு.செந்தில்நாதன் சிவா, செல்வி ஓ.எஸ் ரேவதி, செல்வி.சாந்தி, திரு.குருபிரசாத் ராமநாதன் ஆகியோர் பல்நலம் பேணிக்காக்க 24 மணி நேரமும் பல் மருத்துவ வசதி செய்திட வேண்டுமென்றும், பல் பற்றிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு என்றும், இன்றைய மாணவர்கள் தாங்கள் அறிந்தவற்றைத் தைரியமாக மக்களுக்கு எடுத்துக் கூறி சமுதாயத் தொண்டாற்றி சிறந்த மருத்துவர்கள் என்று சிறப்புப் பெற வேண்டுமென்று கருத்தைத் தெரிவித்தார்கள்.



'நாட்டின் பல் நலம் பெருக ஆசிரியர்களின் கடமை' என்ற நிகழ்ச்சிக்குச் சென்னைப்பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''ஏறத்தாழ இருபது ஆண்டுகள் கழித்து இதுமாதிரி விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியர்கட்குப் பொறுப்பு அதிகம். ஆசிரியர்கட்கு மக்கள் தொடர்பு உண்டு. ஆகவே இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டு சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டும்.''

டாக்டர் ராணிகந்தசாமி, திரு.பி.கே. கோபால்ராஜ், திரு எஸ்.ஜி. நாராயணன், திருமதி வசந்தா, திருமதி. புனிதசபாபதி ஆகியோர் கருத்துரை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது; பாட்டாளிகள் பணிபுரியும் இடங்களில் பல் முகாம்கள் நடத்தப்பட வேண்டும். சமுதாயத்தின் நடுத்தரத்தில் இருப்பவர்கள் பல் பற்றி அறிவார்கள். அடிமட்டத்தில் உள்ளவர்கட்குப் பல்பற்றிச் சொல்லித்தர வேண்டும். சமுதாயத்தில் டாக்டர்கள், ஆசிரியர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். உரையாடல்கள் மூலமும் கதைகள் மூலமும் பல் பற்றிச் சொல்லித் தரவேண்டும்.

குழந்தைகள் பள்ளிக்கு வந்தவுடன் பல விஷயங்கள் பற்றிக் கேட்கிறோம். பல் தேய்த்தாயா என்று கேட்கவேண்டும். பள்ளிக்கு வரும் குழந்தைகள் பற்கள் நன்றாக இல்லை என்றால் தாய் தந்தையரை அழைத்துச் சொல்லலாம்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் பல் நல வாரத்தின் நிறைவு விழாச் சொற்பொழிவையாற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பல் நலம் பற்றிய செய்திகளை அதிக அளவில் பிரச்சாரம் செய்ய வேண்டும். கல்வி முறையிலும் மாற்றம் செய்ய வேண்டும்.

''மாணவர்கள் உடல் நலத்தில் பல்நலம் அடிப்படையாகும். கடந்த வாரத்தில் இங்கு நடைபெற்ற பல் நல வாரத்தில் 20,000 பேர் பார்த்துச் சென்றிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

வளரும் குழந்தைகளுக்கு பல் நலம் பற்றிய அறிவை ஆசிரியப் பெருமக்களும் புகட்டவேண்டும்.

மேல்நாடுகளில் பல் மருத்துவர்களை நிறையப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சைபீரியாவில் இதுபோன்ற முகாம்களை நடத்தி அதில் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தி, பல் மருத்துவம் பற்றியும் சேர்த்திருக்கிறார்கள்.

சென்னை மட்டும் அல்லாமல் பல நகரங்களிலும் இதுபோன்ற மருத்துவக் கருத்தரங்குகளும் கண்காட்சிகளும் நடத்தப்பட வேண்டும். பள்ளி மாணவிகளுக்கு இது மிகவும் பயன்படும்.




பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி.ராஜன் தலைமை வகித்தார்.

மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு.ஆர்.சண்முகம் இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு போட்டிகளில் பரிசுபெற்ற மாணவ மாணவியர்கட்குப் பரிசுகள் வழங்கினார். டாக்டர் ஆர். ராஜகோபால் நன்றி கூறினார்.

29,8.84 முதல் 2.9.84 வரை காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை பல் பரிசோதனைகளைப் பல் மருத்துவர்கள் செய்தனர்.

மக்களைக்கவரும் வகையிலும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் சிறப்பான பொருட்காட்சியையும் அமைத்திருந்தனர்.

பல்நல வார நிகழ்ச்சிகள் நடத்தியவர்களுக்குப் பொதுமக்கள் பாராட்டுக்களைக் குவித்துச் சென்றனர் என்றால்அது மிகையாகாது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**அ. மருதவிநாயகம்**

## பல்லைக் குறித்துப் பல செய்திகள்

தொகுப்பு : மாலா

* காடிக்கு கடினமான பற்கள் உண்டு.
* நொறுங்கத் தின்றால் நூறு வயது.
* ஆலும் வேலும் பல்லுக்குறுதி.
* சிதைந்த பல் வளராது. ஆனால் சிறப்பாகச் சீர் திருத்த முடியும்.
* பல் இழந்தோர் சொல் இழந்தோராவர்.
* பற்பசையில் 90 சதவிகிதம் 'சோப்' உள்ளது, குளிப்பதற்குக்கூட எப்பொழுதாவது பயன்படுத்தலாம்.
* விளையாட்டாகத் தாத்தா, பாட்டி, மாமா, அப்பா, அம்மா என்று குழந்தைகளுக்கு நாம் சொல்லும் போது பல்தேய்ப்பது எப்படி என்று குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால் நல்லது.
* கரும்பை நன்றாகக் கடித்து மென்று தின்றால் பல்லுக்கு நல்லது.
* உப்பைத் தண்ணீரில் கரைத்து வாய் கொப்பளித்தால் பல்லுக்கு நல்லது.



* கர்ப்பிணித்தாய் நல்ல ஊட்டச்சத்து சாப்பிட வேண்டும். அப்பொழுதுதான் பல் நல்லமுறையில் தாயின் கருப்பையில் வளரும்.
* தேங்காய் சில்லைக் கடித்துச் சாப்பிடலாம். பல்லுக்கு நல்லது.
* கிராமப்புற மக்களுக்குப் பல் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும், பற்களைப் பேணி பாதுகாப்பதன் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்திட வேண்டும் என்ற அடிப்படையில் பல் மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் நூறு மணி நேரம் கிராமப்புற சேவை செய்தாக வேண்டும் என்ற விதி தற்போது நடைமுறைப் படுத்தப்படுகிறது.

மேற்படி விதியின்படி இவ்வாண்டு அக்டோபர் மாதம் தேர்வெழுதவேண்டிய பல் மருத்துவக் கல்லூரி மாணவ மாணவிகள் இந்த ஏற்பாட்டின்கீழ் கிராமப்புறங்களிலோ மருத்துவமனைக்கு வெளியிலோ சென்று பள்ளிகளில் மருத்துவ முகாம்களை நடத்த உள்ளனர்.

* பனங்கிழங்கு, முருங்கைக்காய் போன்றவற்றை வாயில் போட்டு அரைத்துச் சாப்பிடுவது நல்லது.
* பல் நலனுக்கு உகந்த ஆப்பிளுக்குப் பதிலாகப் பேரிக்காய் சாப்பிடலாம்.
* குறிப்பிட்ட அளவில் ஃப்ளோரைடு உள்ள இளநீர் அருந்தினால் பல்லுக்கு நல்லது.
* வேப்பங்குச்சி, மாவிலை போன்றவற்றில் பச்சையம் (குளோரபின்) உள்ளது. பச்சையத்தைப் பதினைந்து நாட்களுக்கு மேல் பாதுகாப்பாக வைக்க முடியாது.
* பச்சையத்திற்குப் பற்சிதைவையும், வாய் துர்நாற்றத்தையும் தடுக்கும் சக்தி உண்டு.
* தமிழ்நாடு,ஆந்திரம்,கேரளம், போன்ற மாநிலங்களில் வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் பேர் உள்ளனர். இதற்குக் காரணம் வெற்றிலை, புகையிலை உபயோகிப்பதுதான்.



* பற்களுக்குள்ளே இருக்கும் பற்கூழ் பாகத்தில் ஏற்படும் கட்டி விரிவடையும்போது நரம்புகளை அழுத்துவதால் தான் வலி ஏற்படுகிறது. இந்த வலியை கிராம்புத் தைலம் கொண்டு குணப்படுத்தலாம். இதன் மூலம் பல்லை எடுக்காமலேயே பல் வலியைப் போக்க முடியும்.
* குழந்தைகள் ஆரம்பப் பள்ளிகளுக்குச் செல்லும்போதே விளையாட்டுச் சாதனங்களுடன் பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதன் அவசியத்தை விளக்கும் வகையிலான உபகரணங்களையும் அளிக்கும் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்தவேண்டும்.
* உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு, பற்களுக்கு வரும் நோயைத் தடுக்கும் முறைகள் குறித்து விளக்கப்பட வேண்டும் என்று அரசுக்கு மருத்துவத்துறை ஆலோசனை கூறியுள்ளது.
* முதல் கடினப் பொருள்—வைரம். மூன்றாவது கடினப் பொருள்—பல்.
* பல் துலக்கும்போது குச்சியைக் கடித்து பிரஷ் மாதிரி மென்று பல் துலக்க வேண்டும். இல்லாவிடில் குச்சி குத்தி ஈறு கெட்டுவிடும்.
* பத்திரிகை அலுவலகத்தில் ஈயத்தினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கட்கு ஈறு பாதிக்கப்பட்டு, 'ஈயப் பாசனம்' ஏற்படும். பல் மருத்துவர்களிடம் காண்பித்துச் சரி செய்து கொள்ளாவிடில் இரத்தம் பாதிக்கும்.
* இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் இரண்டு கோடி பேர் பல் பரிசோதனை செய்துகொள்கின்றனர்.

## எதிரொலி மீது பத்திரிகைக் கவுன்சில் தீர்ப்பு

**29.3.1982** 'எதிரொலி'யில் 'என்னதான் நடக்கிறது சர்வீஸ்கமிஷனில்' என்ற தலைப்பில் தமிழ்நாடு தேர்வு ஆணைக் குழுவைப் பற்றிச்சில தவறான செய்திகளை வெளியிட்டதாலும் 11.4.1982 நாளிட்ட 'எதிரொலி' யில் "குடிசைத் தொழில் சிறு தொழில் செய்வோருக்குச் சிமெண்ட் ஒதுக்க 5 கோடி ரூபாய் எம்.ஜி.ஆர். பேரம்" என்ற தலைப்பில் உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டதற்காகவும், எதிரொலியின் ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்குமாறு 5.11.1982 நாளிட்ட அரசின் கடிதத்தில் பத்திரிகைக் கவுன்சிலுக்குப் புகார் கொடுக்கப் பட்டது.

மேற்படி செய்திகள் குறித்து எதிரொலியின் தரப்பிலிருந்து வரப்பெற்ற அறிக்கையின் நகலைப் பத்திரிகைக் கவுன்சில் இந்த அரசுக்கு அனுப்பி, அதன் மீது அரசின் பதிலைக் கேட்டது. மேற்படி அறிக்கைக்கு அரசின் பதில் 3.5.1983 நாளிட்ட கடிதத்தில் பத்திரிகைக் கவுன்சிலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 28.7.1983, 8.9.1983 ஆகிய நாட்களில் பத்திரிகைக் கவுன்சில் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. 8.9.1983 அன்று நடந்த விசாரணையில் விவாதங்களை எழுத்து மூலமாக அனுப்புமாறு பத்திரிகைக் கவுன்சில் எதிரொலியைக் கேட்டது.

எதிரொலியின் எழுத்து மூலமான அறிக்கையை, 19.10.1983 அன்று பத்திரிகைக் கவுன்சில் அரசுக்கு அனுப்பி,அதன்மீது அரசின் பதில் அறிக்கையைக் கேட்டது. இதற்கான பதில் அறிக்கை 29.11.1983 அன்று பத்திரிகைக்கவுன்சிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட அறிக்கைகளின் மீது பத்திரிகைக் கவுன்சில் விசாரணை நடத்தி பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது:

"இக்குழு, ஆவணங்களைப் பார்வையிட்டதற்குப் பிறகு, உண்மை விவரங்களின் அடிப்படையில் பொது நலனுக்குரிய ஒரு பொருளைப்பற்றி நியாயமான கருத்துரைப்பது என்பது அவதூறு சட்டத்தின்கீழ் அனுமதிக்கத்தக்கது என்று கருத்துக்கொண்டது. ஆனால் உண்மையானதல்லாத ஒரு அவதூறு செய்தியை வெளியிடுவதில் ஈடுபட்ட ஒரு பத்திரிகையாளர், அதன் விளைவுகளுக்குப் பொறுப்புடையவராவார். அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்டு; "அவர் எம்.ஜி. சக்ரபாணிக்கும் எம்.ஜி.ஆருக்கும் மிகவும் நெருங்கிய உறவினர்; அதனால்தான் அவர் அதன் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கின்றார்..." என்றும், தமிழ்நாடு முதலமைச்சரைப் பற்றி, "அவர் பெருந்தொகையைக் கையூட்டாகப் (லஞ்சமாக) பெற்றுக் கொண்டிருக்கின்றார்; இவ்வாறு ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார் என்று பழி சுமத்தியும் கூறியிருப்பதே அவதூறானவையாகும். சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளும் பழிச்சாட்டுகளும் உண்மையானவையா என்பதை நிரூபித்துக் காட்ட எந்த முயற்சியும் செய்யப்படவுமில்லை; அதற்கு வாய்ப்பு எதுவும் கோரப்படவுமில்லை; அதே போன்று பார்த்த அளவிலேயே அவதூறு தன்மை வாய்ந்ததாக உள்ள ஒரு பொருளை வெளியிட்டது பற்றிப் பத்திரிகை ஆசிரியர் எதிர்வாதம் புரிகிறபோது, அந்த எதிர்வாதத்திற்கு உதவக் கூடியதாகவுள்ள ஆதாரம் எதுவுங் கூட எங்கள் முன் வைக்கப் படவும் இல்லை. எனவே, எதிர்த்துப் புகார் செய்யப் பட்டுள்ள செய்திகள், பத்திரிகை தர்ம (ஒழுக்கநெறி) தரங்களை மீறியுள்ளன என்று இந்தக் கவுன்சில் கருத்துக் கொண்டது. அதன்படியே, இப்புகார் சரியானதென்று நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும், இந்த விஷயத்தில் எதிர்வாதிகளுக்கு (பிரதிவாதிகளுக்கு) கண்டனம்(admonition) வழங்கப்படவேண்டும் என்றும் அது (பத்திரிகைக் கவுன்சில்) தீர்ப்பு வழங்கியது."

# சிவாவின் செந்தமிழ்ப் பற்று

குடும்பத்தையே மறந்தும், துறந்தும் பாரத தேசத்தின் விடுதலைக்காக உயிர் உள்ளளவும் உழைத்த உத்தமர் சுப்பிரமணிய சிவா என்பதை யாவரும் அறிவர். தமக்கென வாழாத அப்பெருந்தகையாளர், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், வாழ்வுக்காகவும் தொண்டாற்றியவர் என்பதை ஒருசிலரே அறிவர்.

நம்மவர்களைத் தனித் தமிழில் எழுதும்படி தூண்ட வேண்டி, சிவா தமது "ஞான பாநு" இதழில் சில விளம்பரங்களை வெளியிடவே செய்தார். அந்நிய மொழியின் சொற்களில் ஒன்றும் கலப்பின்றித் தனித்தமிழில் எழுதுவோருக்கு இனாம் கொடுப்பதாக அறிவித்தார்.

தமிழ்மொழி தனித்தியங்கும் செம்மொழி என்பதை நிலைநாட்ட ஆசை கொண்ட தூய தமிழ் நெஞ்சம் வெளியிட்ட விளம்பரங்கள் இவை:

இனாம்: இனாம் !!

ஐந்து ரூபாய்!

உங்களால் தனித்தமிழ் எழுதமுடியுமா? முடியுமானால் முன் வருங்கள். சமஸ்கிருதம் முதலிய அந்நிய பாஷைச் சொற்களில் ஒன்றும் கலவாத தனித்தமிழில் நமது "ஞானபாநு" வில் எட்டுப் பக்கத்திற்குக் குறையாது வரும்படியாக தமிழ்ப்பாஷையின் சிறப்பைப்பற்றி யாவது திருவள்ளுவ நாயனாரின் சரித்திரத்தைப் பற்றி யாவது எழுதுவோருக்கு ரூபா ஐந்து இனாமளிப்பதாகத் தமிழ்ப் பாஷாபிமானி யொருவர் முன்வந்திருக்கிறார். சமஸ்கிருதச் சொல்லை யெடுத்தும் திரித்து தமிழில் நயம் என்று இருப்பது போன்ற திரிபுச் சொற்களும் உபயோகப்படுத்தலாகாது. சுருக்கத்தில், எந்தப் பாஷையின் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித்தமிழ்ச் சொற்களே உபயோகிக்கப்பட வேண்டும். வியாசங்கள் வருகின்ற ஆவணி 15-ம் தேதிக்குள் நமது "ஞானபாநு" காரியஸ்தருக்கு அனுப்பிக்கொடுக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது. வெகுமதிக் குரித்தாகிய வியாசமானது நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். வெகுமதி பெற்றோரின் பெயர் எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படும். இவ்விஷயத்தைப் பற்றி மற்ற விவரங்கள் ஏதேனும் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்க.

காரியஸ்தர்,
"ஞானபாநு"
மைலாப்பூர், சென்னை.



தோற்றம் : 4-10-1884
மறைவு : 23-7-1925

தியாகி சுப்பிரமணிய சிவாவின் நூற்றாண்டை ஒட்டி இந்தச் செய்திகள் வெளியிடப் பெறுகின்றன.

## இனாம் ஐந்து ரூபாய்.

நாம் செய்திருந்த விளம்பரப்படி "தமிழை"ப்பற்றி நான்கு கட்டுரைகளும் "திருவள்ளுவ"ரைப்பற்றி இரண்டு கட்டுரைகளும் நமக்கு வந்தன. அவற்றில் வடமொழியில்லாத கட்டுரை ஒன்றேனுமில்லை. அதனால் அவற்றை எழுதியனுப்பிய நண்பர்களில் எவருக்கும் நாம் குறித்த பரிசிலை அளிக்க முடியாமற் போனதைப்பற்றி நாம் மிகவும் வருந்துகின்றோம். நண்பர்கள் எழுதியனுப்பிய கட்டுரைகளிலுள்ள வடமொழிகளுக்குக்கீழ் கோடிட்டுள்ளோம். அவற்றை அவர்கள் வேண்டுவார்களாயின் அனுப்பக் காத்துக்கொண்டிருக்கின்றோம்.

நம் தமிழ்மக்கள் தனித்தமிழ் எழுதப்பழக வேண்டுமென விரும்பியும் தனித்தமிழில் கட்டுரைகள் எழுதுவதன் அருமையைக் கருதியும் அடுத்த மார்கழிக்குள் "தமிழைப்" பற்றியாவது "திருவள்ளுவ"ரைப் பற்றியாவது தனித்தமிழில் எட்டுப்புறங்களுக்குக் குறையாத கட்டுரை எழுதி நமக்கு அனுப்புவோர்க்கு முன்பு நாம் கூறிய பரிசிலோடு இன்னும் வெண்காசு ஐந்து சேர்த்த மொத்தம் வெண்காசு பத்து அளிப்பதாக முடிவு செய்துள்ளோம். இது முன் கட்டுரை எழுதியனுப்பிய நண்பர்களும் இன்னமும் கட்டுரை எழுதியனுப்பலாம். ஆனால் அவர்கள் முன் எழுதிய பொருளைவிட்டு மற்றொரு பொருளைப்பற்றி எழுதியனுப்புதல் வேண்டும்.

இனாம்! ரூபாபத்து. இனாம்!!

உங்களால் தனித்தமிழ் எழுத முடியுமா? முடியுமானால் முந்துங்கள். சமஸ்கிருதம் முதலிய அந்நியபாஷாச் சொற்களில் ஒன்றும்கலவாது தனித்தமிழில் இப்பத்திரிகையில் எட்டுப்பக்கங்கட்குக்குறையாது வரும்படியாகத் தமிழ்ப்பாஷையின் சிறப்பைப் பற்றியாவது திருவள்ளுவநாயனாரின் சரித்திரத்தையாவது எழுதுவோருக்கு ரூபாபத்து இனாம் கொடுக்கப்படும். முந்திய விளம்பரத்தின்படி நமக்குவந்த வியாசங்களில் ஒன்றும் அந்நியபாஷாச் சொற்கள் கலவாத தனித்தமிழில் எழுதப்படவில்லையாகையால், அதற்கென்று அப்பொழுது ஏற்படுத்தியிருந்த பரிசில் ரூபா ஐந்தை இப்பொழுது ரூபாபத்து ஆகமாற்றியிருக்கிறோம். சமஸ்கிருதச்சொல்லாகிய கஜம் திரிந்து கயம் என்றாயிருப்பதுபோன்ற திரிபுச்சொற்களையும் உபயோகப்படுத்தலாகாது. சுருக்கத்தில் எந்தப்பாஷையின் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித்தமிழ்ச் சொற்களே உபயோகிக்கப் படவேண்டும். வியாசங்கள் இம்மாதம் (மார்கழியீ) 30-ந் தேதிக்குள் நமக்கு அனுப்பிக்கொடுக்கப்பட வேண்டும். வெகுமதிக்குரித்தாகிய வியாசமானது "ஞானபாநு" வில் பிரசுரிக்கப்படும். வெகுமதி பெற்றோரின்பெயர் எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படும்.

காரியஸ்தர் "ஞானபாநு"
மைலாப்பூர், சென்னை.

## இனாம் ரூபாபத்து.

தனித்தமிழில் திருவள்ளுவ நாயனாருடைய சரித்திரத்தையாவது தமிழ்ப்பாஷையின் சிறப்பைப்பற்றியாவது எழுதுவோருக்கு இனாம் ரூபாபத்து கொடுப்பதாக நாம் விளம்பரம் செய்ததற்கிணங்க, ஏழுவியாசங்கள் நமக்கு வந்தன. ஆறு வியாசங்களில் வடமொழிச்சொற்கள் ஏராளமாகவும் தாராளமாகவும் கலக்கப்பட்டிருக்கின்றன. மிகுதி ஒன்றிலும் ஓரேயொரு சொல் வடமொழிச்சொல்லின் திரிபுச்சொல் என்று நாம் அபிப்பிராயப்படுவதினால், இச்சந்தேகத்தை நிவிர்த்திசெய்து கொள்ளுமாறு நாம் இப்பதத்தைச் சில தமிழ்ப்புலவர்களுக்குத் தெரிவித்து அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறோம். ஆதலால் அவ்வியாசம் தவிர, மற்ற வியாசங்களெல்லாம் வியாசகர்த்தாக்களுக்குத் திருப்பியனுப்பப்படும். இவ்வொரு வியாசத்தைப்பற்றிய தீர்மானம் நமது அடுத்த பத்திரிகையில் தெரிவிக்கப்படும்.

தகவல் : சீனி விசுவநாதன்

# சிவம் சிவமானார்

## திரு. வி. க.



சுப்பிரமணியசிவம் சிவமான செய்தி கேட்டுத் துயரக் கடலில் ஆழ்ந்தோம். ஏறு நடைக்கும் அரிமா நோக்குக்கும் வீர முழக்குக்கும் அழிவு நேர்ந்ததோ என்று கண்ணீருகுத்தோம். இத் தென்னாட்டுக்குப் புத்துயிரளித்த ஓர் உயிரோ இவ்வுலகை விட்டு நீத்தது என்று ஏங்கினோம்.

தென்னிந்தியா உரிமை வேட்கையின்றி இருட்குழியில் வீழ்ந்து கிடந்தபோது, அதை வீரப் பேச்சால், சிங்க கர்ச்சனையால் தட்டி எழுப்பினவர் நமது சுப்பிரமணியம். தேசபக்தர் தொகை அருமையாயிருந்த போது, தேசத்தில் தேசபக்தி யூட்டி வந்தவர் நமது சிவம். மிதவாதிகள் செறிந்த அந்நாளில் தேசத்தின் பொருட்டுச் சிறை புகுந்தவர் நமது சுப்பிரமணிய சிவம். அந்நாளைய சிறைத் துன்பம் ஆ! ஆ! சொல்லமுடியாது.

அக்கொடுஞ் சிறையில் ஐந்தாண்டு உறைந்து, அத் துன்பத்தால் தொழுநோயெனும் வெந்நோய் தொடரப் பெற்றார் நமது தேச பக்தர். அக்கொடு நோயால் பீடிக்கப் பெற்றும், பொருள் முடையால் தாக்குற்றும், அவர் சலிப்புறாது தம்மால் இயன்ற அளவு தேசத்தொண்டு செய்து வந்தார். அவர் உழைப்பு முற்றும் சுயராஜ்ய தாகத்தை எழுப்புவதிலேயே சுழன்று கொண்டிருந்ததை அறியாதார் யாவர்?

சுப்பிரமணியசிவம் தேசத் தொண்டு செய்து வந்ததோடு தேசத்துக்கு உயிர் போன்றதாய வேதாந்த உண்மைகளைப் பரப்பி வந்தார். விவேகாநந்தர் சொற்பொழிவுகள் பல அவரால் மொழி பெயர்க்கப்பட்டன. பல விவேகாநந்தர் நாட்டில் பிறந்து நாட்டுக்கு உழைக்க வேண்டுமென்பது சிவத்தின் கோரிக்கை.

"ஞானபாநு" என்னும் பத்திரிகையையும் அவர் நடத்தி வந்தார்; அவ்வப்போது பத்திரிகைகளுக்கு கட்டுரைகளும் வரைந்து வந்தார். அவரெழுத்தில் சுதந்தர உணர்வும் வீர எழுச்சியும் மிடைந்து நிற்கும்.

எச்செல்வருதவியுமின்றி, எவ்வமைப்புத் துணையுமின்றி, நோய்த்துன்பத்தோடு வேறுபல துன்பத்திடை மூழ்கியும் 'தேசம்' 'சுதந்தரம்' 'சுயராஜ்யம்' என்றே நினைந்து பேசி உழைத்து உயிர் துறந்த பெருமை சுப்பிரமணிய சிவம் ஒருவருக்கே உண்டு. அத்தகைய சிவம் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தது சுதந்தர தாகமுடையோர் உள்ளத்தை எவ்வாறு புண்படுத்துமென்று சொல்ல வேண்டுவதில்லை. சுப்பிரமணிய சிவனாரை விடுத்து ஒரு நொடிப்பொழுதும் பிரியாது உடன் சூழ்ந்து கொண்டிருந்த இளைஞர்கள் உள்ளம், அனலிடைபட்ட மெழுகென உருகியுருகி யிளகும். அவ்விளைஞர்கள் தளர்ச்சியுறாது சிவத்தின் தொண்டில் ஈடுபட்டுத் தேசபக்த சமாஜத்தை வளர்த்து வருவார்களென நம்புகிறோம். சுப்பிரமணிய சிவத்தின் ஆத்மா சிவத்தில் சாந்தநிலை எய்துவதாக!

ஆதாரம் : நவசக்தி (24-7-1925)

# புத்தகப் பரிசோதனை

தியாகசீலர் சுப்பிரமணிய சிவா அவர்கள் தாம் சிறையினின்றும் வெளிவந்த பிறகு சென்னையிலிருந்து கொண்டு, "ஞானபாநு" என்ற மாத இதழைத் தம் மனைவி பெயரால் பதிவு செய்து 1913 ஏப்ரல் மாத முதல் வெளியிட்டு வந்தார். அவர் 'புத்தகப் பரிசோதனை' என்ற பகுதியில் பல நூல்கள் பற்றி மதிப்புரை எழுதியிருப்பினும், தம் நண்பர்களால் எழுதப்பட்ட நூல்களுக்கு எழுதிய மதிப்புரைகள் சிறப்புத் தன்மை கொண்டனவாய் அமைந்தன. தேசியப் போராட்டங்களில் பங்கு பெற்ற கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்களின் **அகமேபுறம்** என்ற நூலுக்கும், கவியரசர் பாரதியின் **பாஞ்சாலி சபதம்** என்ற நூலுக்கும் சிவா எழுதிய மதிப்புரைகள் இங்கே இடம் பெறுகின்றன. தம் நண்பர்கள்பால் சிவா கொண்டிருந்த அன்பை இவ்விமர்சனப் பகுதிகள் தெள்ளத்தெளிய விளக்குகின்றன.

## அகமே புறம்

இப்பெயர் கொண்ட புத்தகம் ஒன்று ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டுள்ளது. இவர் ராஜ நிந்தனைக் குற்றம் சாட்டப்பட்டுச் சிலகாலம் சிறைவாசம் செய்தவர் என்றும், உத்தம தேசாபிமானியென்றும் இந்தியர்களில் அறியாதார் எவரும் இரார். இவர் தமிழ் பாஷையில் அதிக பாண்டித்தியமுள்ளவர் என்பதையும் எவரும் அறிவார். இவர் சிறைவாச காலத்தில் ஜேம்ஸ் ஆலன் என்னும் ஆங்கிலேய மனோதத்துவ சாஸ்திரியினுடைய நூல் ஒன்றை மொழி பெயர்த்து 'மனம்போல வாழ்வு' என்ற பெயருடன் வெளிப்படுத்தினார். இப்பொழுது வெளிவந்திருக்கும் 'அகமே புறம்' என்னும் இப்புத்தகமும் மேற்சொன்ன ஜேம்ஸ் ஆலன் என்பவருடைய ஒரு புத்தகத்தின் மொழிபெயர்ப்பு என்றும், இஃதும் சிறைவாச காலத்தில் எழுதப்பட்டதேயென்றும் அறிகிறோம்.

ஜேம்ஸ் ஆலன் என்னும் மனோதத்துவ சாஸ்திரி உள்ளினின்றுமே உலகம் விரிகின்றது என்னும் உண்மையை எவ்வளவு சுலபமாயும் சாதாரணமாயும் போதிக்க முடியுமோ அவ்வளவு சுலபமாயும் சாதாரணமாயும் போதித்துள்ளார். ஆதலால் இப்பொழுது தம் பார்வைக்கு வந்திருக்கும் நூலினது சிறப்பு எவரும் எடுத்துக் கூறாமலே விளங்கும்.

இப்புத்தகத்தில் அடங்கிய சில விஷயங்கள் நமது பத்திரிகையில் சென்ற வருஷத்தில் வெளிவந்துள்ளனவாம். சுலபமான செந்தமிழில் எழுதப்பெற்று, ஜீவிதகால மர்மத்தை வெளிப்படுத்துகின்றது இந்நூல். துக்கமற்று வாழ விரும்பும் ஒவ்



வொருவரும் படிக்க வேண்டிய புஸ்தகம் இது. மனிதன் சுகத்தை அடைய விரும்பினால், தன்னகத்தைத் தானே சீர்தூக்கிப் பார்த்து சீர்திருத்திச் சுகமடைய வேண்டுமேயொழிய, தன்னகத்தைத் தவிர பிறவற்றைச் சீர்திருத்துவதனால் ஒருபொழுதும் சுகம் அடையவே முடியாது என்று வெகு தெளிவாகக் கூறுகின்ற இந்நூலை வாசிப்பவர்கள், தாம் அநுபவிக்கும் சுகதுக்கங்கட்குத் தாமே காரணம் என்று அறிந்து கொள்வார்கள்.

உயர்ந்த சாகிதத்தில் அழகாய் அச்சிடப்பெற்று டபுள் கிரௌன் சைஸ் அளவில் 66பக்கங்களுடன், காகிதம், கட்டடம் முதலியன வெல்லாம் சுதேசியமாகவே கொண்டு வெளிவந்திருக்கும் இந்நூலின் விலை அணா எட்டு. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் நமது ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

## பாஞ்சாலி சபதம்

இது மிக அழகிய வர்ணனைகள் நிறைந்த ஒரு காவியம். பிரஹ்ம ஸ்ரீ. ஸி. சுப்பிரமணிய பாரதியவர்களால் இயற்றப் பெற்றது. ஆரிய தர்மங்கள் நிறைந்த, ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தில் பொறாமையே உருவாக வந்த துரியோதனன் தனது தாய்மாமனாகிய குடிகேடன் சகுனியைக் கொண்டு பஞ்சபாண்டவர்களில் மூத்தோனாகிய தர்மபுத்திரருடன், அவருடைய ராஜ்யத்தையெல்லாம் பிடுங்கிக்கொண்டு அவரையும் அவரது சகோதரர்களையும் அவர்களது தர்மபத்தினியாகிய திரௌபதியையும் ஓட்டாண்டிகளாக்கிக் காட்டுக்குத் துரத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், சூதாடும்படி செய்விக்கின்ற பாகத்தை பிரஹ்ம ஸ்ரீ பாரதியவர்கள் செய்யுள் நடையில் எழுதியுள்ளார்.

பாரதியவர்களுடைய தமிழ் நடையைப் பற்றியும் செய்யுள் விசேஷத்தைப் பற்றியும் தமிழ் நாட்டினரில் பெரும்பான்மையோரும் அறிவர் என நம்புகிறோம். ஆசிரியர் இப்புஸ்தகத்தில் ஒரு பிரதியைச் சென்னை கவர்னரவர்களுக்கு அனுப்பியிருந்ததாகவும் அவர் தாம் அதை வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டதாக ஆசிரியர்க்குக் கடிதம் எழுதியதாகவும் கேள்விப்படுகிறோம். பாஷாபிமானிகளும் தேசாபிமானிகளும் அவசியம் படிக்க வேண்டிய புஸ்தகம் இது. இதன் விலை அணா எட்டு. தபாற் செலவுவேறு. வேண்டியவர்கள் நமது ஆபீசுக்கேனும் அல்லது பிரஹ்மஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியவர்கள் புதுச்சேரியென்ற விலாசத்திற்கேனும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆதாரம் :** ஞானபாநு (நவம்பர் 1913)

**தகவல் :** செல்வி வி. ராஜேஸ்வரி •





# நூல்கள் 100 பக்கங்கள் 36,000

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின்100வது நூல்வெளியீட்டு விழா 3.9.84 அன்று, சென்னை அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர். மாவட்ட மைய நூலகக் கட்டடத்தில் சிறப்பாக நடந்தது.

பேரறிஞர் அமரர் அண்ணா அவர்களின் சிந்தனையின் விளைவாலும் விழைவாலும்தான், சென்னையில் நடத்திய இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது உயர் நிலைத் தமிழாய்வை மேற்கொள்ளப் பிரெஞ்சு அகாதெமி போன்று ஒரு தனி நிறுவனம் தேவை என்று கூறி அப்போது உருவாக்கம் பெற்று அக்டோபர்த் திங்கள் 1970இல் இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

அமரர் அண்ணா அவர்களால் நிறுவப்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இன்று மிகச் சிறப்பாக, சென்னையிலே இயங்கி வருகிறது.

தமிழ்க் கல்விப்புலம் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளிலும், அனைத்து நிலைகளிலுமான ஆராய்ச்சிகளைச் சாத்தியமான எல்லா வழிகளிலும் இத்தகைய ஆய்வுகளில் ஆர்வம்கொண்டுள்ள உலக அறிஞர்களின் சீரிய ஒத்துழைப்புடன் ஊக்குவித்தல் வேண்டும் என்பதே இந்நிறுவனத்தின் முதன்மையான நோக்கமாகும்.

இந்த இனிய விழாவுக்குத் தமிழ்நாடு சட்ட மேலவைத் தலைவர் மாண்புமிகு சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் சில சுவையான தகவல்களைத் தெரிவித்தார்:

"உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பெறும் ஒவ்வொரு நூலும் மிகுந்த திறனாய்வுக்குப் பிறகே வெளியிடப் பெறுகின்றது.

"வாரந்தோறும் கருத்தரங்குகள், மாதந்தோறும் இலக்கியக் கொள்கைக் கூட்டங்கள் நடத்தப் படுகின்றன. பிற நாட்டினரும் தமிழ் பற்றி உணர்ந்து கொள்ளவும் அறிந்து கொள்ளவும் ஆங்கிலத்தில் ஏழு நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன.

"கடந்த மூன்று ஆண்டுகளாக சுவடிப் பயிற்சி, மொழி பெயர்ப்புப் பயிற்சி நடந்து வருகின்றது. இதுவரை கிடைக்காத அரிய நூல்களை மட்டுமே வெளியிடுகின்றோம். கண் மருத்துவம் பற்றிய ஒரு நூல், இது ஆயிரம் பக்கங்கள் கொண்டது. இது 13 சுவடிகளிலிருந்து தொகுக்கப்பெற்றது.

இந்தச் சுவடிகள் 7,14,17ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவைகளாகும். சுவடிகள் தொடர்பான கூவ நூல் என்பது ஒன்று. இது கிணறு தோண்டுவது பற்றிய சாஸ்திரம். கேரளப் பல்கலைக் கழகத்தில் இந்தச் சுவடி கிடைத்தது. இப்பல்கலைக் கழகத்தில் தான் சுவடிகள் நிறைய கிடைக்கின்றன.

"மறைமலையடிகள் நூலகத்தில் உலகெங்கும் காண முடியாத நூல்கள் உள்ளன. இதற்கு அடுத்தபடியாக டாக்டர் உ. வே. சா. நூலகத்தைக் குறிப்பிடலாம்.



எங்கள் நூலகத்தில் தற்போது 22,000 நூல்கள் உள்ளன. பைபிள் மட்டும் 47 மொழிகளில் உள்ளது. திருக்குறளும் பலமொழிகளில் உள்ளது.

''வாரத்திற்கு ஒரு நூல், ஏன் நாளுக்கு ஒரு நூல் வெளியிட வேண்டும் என்பது தான் என் ஆசை! நாங்கள் வெளியிடும் நூல்களுக்கு நாட்டில் நல்ல வரவேற்பு உள்ளது. கடந்த ஆண்டு ரூ. 5 இலட்சத்துக்கு நூல்கள் விற்பனையாகியுள்ளன. கடந்த 9 ஆண்டுகளில் 100 நூல்களை வெளியிட்டுள்ளோம்".

தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் தொடக்கவுரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில்:

''நூல் என்றால் திரிப்பது, உருட்டுவது அல்ல; நுவல்வது, உலக மக்களால் நவில்வது, நவிலப்படுவதுதான் நூலாகும். நூறு என்பது மனித வாழ்வுக்குப் பெரும் காலமாகும். அதுபோல நூறு நூல்களை வெளியிட்டுள்ள டாக்டர் ச.வே.சு. அவர்களைச் சாதனைச் செம்மல் என்று பாராட்டலாம்" என்றார்.

இலயோலா தன்னாட்சிக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் க.ப.அறவாணன், நிறுவன வெளியீடுகள் பற்றி மதிப்பீடு செய்தார்: அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''நூறு நூல்களின் பெயர்ப் பட்டியலை அல்ல, பொருள் பட்டியலை நாம் நோக்க வேண்டும். இந்நிறுவனம் தனக்கே உரிய முத்திரையுடன் தமிழ்ப் பணியாற்றி வருகின்றது. 9 ஆண்டுகளில் இது வரை வெளியிடப்பெற்றுள்ள நூல்களின் மொத்தப் பக்கங்கள் 36,000 ஆகும். படிப்பது, சிந்திப்பதைவிடப் பல மடங்கு சிரமமான காரியம் எழுதுவதாகும். 9 ஆண்டுகளில் 100 நூல்கள் வெளியிடுவதென்பது, இந்திய அதிசயங்களில் ஒன்றாகும்.''

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் 100 வது வெளியீடான ''இளங்கோவின் இலக்கிய உத்திகள்'' எனும் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

''நிறைய அகராதிகள் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கின்றன. அதுபோல தமிழிலும் அகராதிகள் வெளி வர வேண்டும். அதே சமயத்தில் பாமர மக்களுடைய முன்னேற்றத்துக்கான—எல்லா மக்களும் பயன்படுத்துகிற சொற்களுக்கு அகராதிகள் வரவேண்டும். தயாரிக்க வேண்டும்.

''தமிழ் வளர்ச்சி என்பது, 'தமிழ் வாழ்க' என்பதால் மட்டும் வளர்ந்து விடாது. எங்கெல்லாம் தமிழ் பயன்படுத்தப்படவில்லையோ, அங்கெல்லாம் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் படிப்படியாகத் தமிழ் வளரும்.''

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் 'இளங்கோவின் இலக்கிய உத்திகள்' என்னும் நூலை அறிமுகம் செய்து வைத்தார்.

மாண்புமிகு சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தினை அயல் நாட்டில் தான் நிறுவ வேண்டும் என்று அப்போது தலைவராய் இருந்த பிலியோசா என்ற அயல் நாட்டுக்காரர் பெரு முயற்சி எடுத்தார். ஆனால் பல தமிழ் அறிஞர்களின் கருத்துக்களின் அடிப்படையிலும் தமிழர் மரபுகளைத் தமிழ் மொழி மூலம் தெரிந்து கொள்வதிலே தமிழனை விட இன்னொருவன் அதிகமாகத் திறமை பெற்றிருக்க எவ்விதத்திலும் சாட்சியமில்லை, என்ற நிலையிலும் இதுபற்றிச் சட்டமன்றத்திலே குறுகிய வினா தொடுத்து அரசின் ஒப்புதலோடு இந்நிறுவனம் சென்னையிலே நிறுவப்பட்டது.

''இதன் விளைவாக, இன்று தமிழ் இலக்கிய இலக்கணங்களை நூல் வடிவிலும் இன்று வரை வெளிவராத ஓலைச் சுவடிகளில் உள்ளவற்றை நூல் வடிவிலும் ஆங்கிலத்திலிருந்து தமிழிலும், தமிழிலிருந்து ஆங்கிலத்திலுமாக இன்றைய நிலையில் 100 நூல்கள் வெளியிட்டு 100வது நூல் வெளியீட்டு விழாவினை நடத்துகின்ற நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களை எப்படிப் பாராட்டிப் போற்றினாலும் பொருந்தும்.''

அன்றைய விழா, தமிழ் ஆர்வலருக்கு இன்பத்தேனாய் இனித்தது என்றால் அது மிகையல்ல!

**பி. வி. கிரி.**



# தானத்தில் சிறந்த இரத்த தானம்

'**பொ**து மருத்துவமனையில் இதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டிய நோயாளி ஒருவருக்கு 'ஓ பாசிட்டிவ்' வகை இரத்தம் தேவைப்படுகிறது. அந்தப் பிரிவு இரத்தம் உள்ளவர்கள் மனமுவந்து இரத்த தானம் செய்யலாம்' என்று பத்திரிகையில் சில நேரங்களில் நாம் விளம்பரங்களைக் காண்கிறோம். தொலைக்காட்சியிலும் வானொலியிலும் இத்தகைய அறிவிப்புகளை நாம் கேட்கிறோம். உடனே சமூக சேவையில் ஈடுபட்டுள்ள சிலர் பொது மருத்துவ மனையின் இரத்த சேமிப்பு வங்கியை நோக்கிச் செல்கிறார்கள்.-இரத்த தானம் செய்வதற்கு!

விபத்துக்களில் அகப்பட்டு ஏராளமான இரத்தத்தை இழந்தவர்களுக்கும் உடனடியாக இரத்தம் தேவைப்படுகிறது. ஆகவே ஒருவர் தானமாக வழங்கிய இரத்தம், விபத்தில் சிக்கிய உயிரைக் காப்பாற்ற உதவுகிறது. நமது நாட்டில் கோதானம், கன்யா தானம், வஸ்திரதானம் என்றெல்லாம் 32 வகையான தானங்கள் உள்ளதாக முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தப் பட்டியலில் இரத்த தானத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.




பொதுவாக அரசு மருத்துவ மனைகளில்தான் இரத்தசேமிப்பு வங்கிகள் உள்ளன. ஆனால் அவை ஞாயிற்றுக் கிழமைகளில் இயங்குவதில்லை.

விடுமுறை நாட்களில் இரத்த தானம் பெறுவதற்கும்-இரத்த தானம் தருவது ஆபத்தில் இருக்கும் ஒருவரின் உயிரைக் காக்க உதவும் என்பதை எடுத்துரைப்பதற்கும் சென்னை அரிமா சங்கத்தினர் 'தாமே முன் வந்து இரத்த தானம் செய்வோர் சங்கம்' ஒன்றை உருவாக்கி அதன் மூலம் இரத்த சேமிப்பு வங்கியைத் தொடங்கியுள்ளனர்.

பொதுவாக அரிமா சங்கத்தினர் ஆடம்பரமான காரியங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று தான் சாதாரணப் பொது மக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். அரிமா சங்கத்தினரும் சமூக சேவைகளை - சமுதாயத்திற்கு நற்பணிகளை ஆற்றி வருகிறார்கள் என்பது பலருக்குத் தெரிந்திருக்க முடியாது.

உடல் ஊனமுற்றவர்களுக்குச் சக்கர வண்டிகள்போன்றவற்றை வாங்கித் தருவதுடன் - இலவச கண் சிகிச்சை முகாம்கள்போன்ற பற்பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி வரும் அரிமா சங்கத்தினர், தற்போது இரத்தசேமிப்பு வங்கியைத் தொடங்கி, சமூக சேவையில் மேலும் ஒரு புதிய வரலாற்றை உருவாக்கியுள்ளனர். தனியார் துறையில் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ள முதல் இரத்த சேமிப்பு வங்கி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட - 45 கிலோ எடையுள்ள எவரும் இரத்த தானம் செய்யலாம். இங்கு வந்து இரத்த தானம் செய்பவர்கள் உண்மையிலேயே தானம் செய்பவர்கள் தான். அவர்களுக்கு அரசு இரத்த சேமிப்பு வங்கியில் வழங்கப்படுவது போன்று, பணம் ஏதும் வழங்கப்படுவதில்லை. மேலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் இந்த வங்கிக்கு வந்து இரத்த தானம் செய்யலாம். வேலை நாட்களில் காலை 8 மணி முதல் 12 மணி வரை இந்த வங்கி இயங்குவதால் ஒருவர் இரத்த தானம் செய்து விட்டுத் தனது பணிக்குச் செல்லலாம்.

ஒருவர் மூன்று மாதத்திற்கு ஒரு முறை 250 சி.சி.யிலிருந்து 300சி.சி வரை தமது இரத்தத்தைத் தானமாக வழங்கலாம். ஒரு மனிதனின் உடலில் கிலிட்டர்

**தமிழ்ப்பித்தன்**

இரத்தம் இருக்கிறது. இரத்தம் வழங்கிய மறுதினமே, அருந்தும் நீர், பால் போன்றவற்றின் மூலம் 90 சதவிகிதம் இரத்தம் ஊறி விடுகிறது. 10 அல்லது 15 நாட்களில் உப்புச் சத்து, கார்போஹைடிரேட் போன்ற சத்துக்கள் முழுவதும் ஊறிவிடும்.

இங்கு வந்து இரத்த தானம் செய்பவர்கள் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்களாகி விடுகின்றனர். அவர்களிடம் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அதில் அந்த நபரின் பெயர், முகவரி-இரத்த தானம் செய்த தேதி - அவரது இரத்த வகை ஆகியவை பற்றிய விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கும். அந்த அடையாள அட்டை அவரது சட்டைப் பையில் எப்போதும் இருக்க வேண்டும். எதிர்பாராத விதத்தில் அவரே சாலை விபத்தில் சிக்கி, அதன் காரணமாக ஏராளமான இரத்தத்தை இழந்து மயக்கமுற நேர்ந்தால் அவருக்குத் தேவையான இரத்த வகை எது என்பதை அடையாள அட்டை தெரிவித்துவிடும்.

நமது நாட்டில் பலர் தம்முடைய இரத்தம் எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்றுகூடத் தெரிந்து கொள்வதில் அக்கறை காட்டுவது கிடையாது. தான் யார் என்பதைத் தெரிந்து கொள்வது போல தனது உடலில் ஓடும்



இரத்தம் என்ன வகையைச் சேர்ந்தது என்று ஒவ்வொருவரும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு தாயின் முகத்தைப் போல, நடவடிக்கையைப் போல மகனின் முகமும் நடவடிக்கையும் அமையலாம். தந்தையைப் போலவே மகனின் குணமும் அமைந்திருக்கலாம். தந்தையின் இரத்த வகைதான் மகனுக்கும் இருக்கும்-தாயின் இரத்த வகைதான் மகளுக்கும் இருக்கும் என்று கருதிவிட முடியாது. தந்தையின் இரத்த வகை 'ஏ' பிரிவாக இருந்தால், மகனின் இரத்தம் 'பி' பிரிவைச் சேர்ந்ததாக இருக்கக் கூடும்.



ஒரு பெரிய மனிதரின்குழந்தை மிகவும் அபாயகரமான கட்டத்துக்கு ஆளாகி இருக்கிறது. அதற்கு இரத்தம் தேவைப்பட்டிருக்கிறது. அதற்குத் தேவையான இரத்த வகையைத் தேடிச் சென்னை நகரம் முழுதும் அலைந்து திரிந்து பார்த்து விட்டார் அந்தப் பெரிய மனிதர்; கிடைக்கவில்லை! பாவம், மனம் உடைந்து போய்விட்டார். பிறகு திடீரென்று டாக்டர், ''உங்கள் இரத்தம் என்ன குரூப் என்று தெரியுமா?'' எனக் கேட்க, ''தெரியாது சார்'' என்று அவர் சொல்ல, உடனே அவரது இரத்தத்தைச் சோதித்துப் பார்த்ததில் - அவரது குழந்தையின் இரத்த வகையே அவரிடமும் இருக்கிறது என்பது தெரிந்தது. கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்தது போல் என்று சொல்வார்களே, அதே போல், தன் குழந்தைக்குத் தேவையான வகை இரத்தம் தன்னிடமே இருக்க, அதை அறிந்து கொள்ளாமல் எங்கெங்கோ அலைந்து நேரத்தை வீணாக்கியிருக்கிறார் அந்த மனிதர்; இதற்குக் காரணம் அறியாமை என்பதா, அசட்டை என்பதா?

இன்னொருவர் இரத்த தானம் வழங்குவதை மிகவும் பலமாக எதிர்த்து வந்தார். பல நண்பர்கள் வலியுறுத்தியும் இரத்த




தானம் வழங்குவதற்கு மறுத்து வந்தார். ஆனால் அவரது பிடிவாதம் நிலைக்கவில்லை! அவரது தந்தையார் விபத்தில் சிக்க நேர்ந்ததால் அவருக்கு இரத்தம் தேவைப்பட்டது. அப்போது சிலர் வழங்க முன் வந்தனர். அந்த நிகழ்ச்சி அவரது பிடிவாதத்தைத்தளர்த்தியதுடன் தொடர்ந்து இரத்த தானம் வழங்குவதற்கு அவரை முன் வரச் செய்தது. அது மட்டுமல்ல அதன் பின்னர் இரத்த தானம் வழங்குவதன் அவசியம் குறித்து அவரே, பலரிடம் எடுத்துரைக்கத் தொடங்கிவிட்டார்.

1984 மார்ச் திங்கள் 3ஆம் நாளன்று இந்த இரத்த சேமிப்பு வங்கியைத் தொடங்கிவைத்த அன்னை தெரசா அவர்கள், "ஒருவர் தம் இரத்தத்தைத் தானமளிப்பதன் மூலம் அடுத்தவருக்கு வாழ்வையும் மகிழ்வையும் அளிக்கிறார். இரத்த தானம் செய்பவர்கள் உண்மையிலேயே கடவுளின் அன்பை எடுத்துச் செல்லும் தூதுவர்கள் ஆவர்!'' என்று குறிப்பிட்டார்.

இயந்திரங்களை இயக்கி வைத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள், "இரத்த தானம் தானங்களில் எல்லாம் மிகச் சிறந்த தானம் ஆகும். இரத்த தானத்தின் மூலம் ஆபத்திற்கு ஆட்பட்ட ஒருவர் பிழைத்து எழுகிறார் என்பதை எண்ணும் போது — இதைவிட உயர்ந்த தானம் உலகில் வேறு எதுவும் இருக்கமுடியாது என்று சொல்லத் தோன்றுகிறது" எனத் தெரிவித்தார்.

அரிமா சங்கத்தின் இரத்த சேமிப்பு வங்கி சென்னை நுங்கம்பாக்கம் ரட்லண்ட் கேட் ஐந்தாவது தெருவில் 8ஆம் எண் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆகஸ்ட் 12ஆம்நாளன்று திரைப்பட நடிகர் திரு கமலஹாசன் முதன் முதலாக இரத்த தானம்செய்தார். அவரைத் தொடர்ந்து அவரது ரசிகர் நற்பணி மன்றத்தவர் 300 பேர் அதே நாளில் இரத்த தானம் செய்தனர்.

''இரத்த தானம் செய்வதன் மூலம் பலகீனம் ஏற்பட்டு விடும் என்று பொதுமக்கள் அச்சப்படுகிறார்கள். அவர்களது அச்சம் தேவையில்லாதது - தவறானது என்பதை மக்கள் உணரும்படிச் செய்ய வேண்டும்'' என்று வலியுறுத்திக் கூறுகிறார். சங்கத்தின் தலைவர் டாக்டர் ஆர் ரபீந்திரநாத்.

''ஒரு கல்லூரியின் மூலமோ- ஓர் அமைப்பின் மூலமோ - ஒரு நிறுவனத்தின் மூலமோ - ஒரு சங்கத்தின் மூலமோ அதிகமான நபர்கள் இரத்த தானம் வழங்கினால் ஆண்டு இறுதியில், அவர்களுக்குக் கேடயங்கள் பரிசளிக்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் இரத்த தானம் செய்வதற்குப் பொதுமக்களை எளிதில் ஊக்குவிக்க முடியும் என்று கருதுகிறோம்'' என நம்பிக்கையுடன் கூறுகிறார் இதன் உதவித் தலைவர் திரு எஸ். கிருஷ்ணசாமி.

''மாணவர் சிலர் மனமுவந்து இரத்த தானம் செய்ய முன் வருகிறார்கள். அரசுப் பணி அல்லது வேறு ஏதேனும் பணிகளுக்காக நேர்முகத் தேர்வுக்குச் செல்லும்போது - விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை தரப்படுகிறதல்லவா, அது போன்ற முன்னுரிமை - அதிகமான தடவைகளில் இரத்த தானம் செய்த மாணவருக்குத் தரப்படுதல் நல்லது. இரத்த தானம் செய்வோரை ஊக்குவிக்க உதவும் டானிக்காக இந்தச் செயல் விளங்கும்'' என்கிறார் சங்கத்தின் செயலர் திரு டி. ஜே. ஜார்ஜ்.

ஒருவர், மற்றொருவருக்கு நூறு ரூபாய்; அல்லது ஆயிர ரூபாயைக் கூட இனாமாக எளிதில் வழங்கி விடுவார், ஆனால் தனது உடலில் ஓடும் இரத்தத்தை வழங்க எளிதில் முன் வரமாட்டார். ஒருவர் வழங்கும் இரத்தம் மற்றொருவரின் உயிரைக் காப்பாற்ற உதவும் சஞ்சீவி என்பதை எடுத்துரைக்க - வலியுறுத்த - அரசு இரத்த சேமிப்பு வங்கிகள் மட்டுமின்றி - அரிமா சங்கத்தினர் போன்ற சமூகநல நிறுவனத்தவர் நடத்தும் தனியார் இரத்த சேமிப்பு வங்கிகளும் நாடு முழுதும் அமைந்தால் மக்கட் சமுதாயத்திற்குப் பெருத்த நன்மை கிடைப்பது [illegible]!



# திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டட கால்கோள் விழா

பி. சுப்பையா,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர்.

கோவை மாவட்டம், கோவை, பொள்ளாச்சி, வருவாய்க் கோட்டங்களையும், கோவை, மேட்டுப்பாளையம், அவிநாசி, பல்லடம், பொள்ளாச்சி, வால்பாறை, உடுமலை ஆகிய வருவாய் வட்டங்களைக் கொண்டதாக இருந்து வந்தது. பல்லடம் வட்டம் பொள்ளாச்சிக் கோட்டத்துடனும், அவிநாசி வட்டம் கோவைக் கோட்டத்துடனும் இணைக்கப்பட்டுச் செயல்பட்டு வந்தது.

அவிநாசி வட்டத்தைச் சார்ந்த மக்களும், பல்லடம் வட்டத்தைச் சார்ந்த மக்களும் வருவாய்க் கோட்டாட்சியரைக் காணுதற்கு கோவைக்கும், பொள்ளாச்சிக்கும் செல்ல வேண்டும் என்கின்ற நிலைமை இருந்து வந்தது. மக்களுக்கு நிர்வாக வசதியைத் தரவேண்டும் என்கின்ற வகையில் அவிநாசி, பல்லடம் வருவாய் வட்டங்களை உள்ளடக்கிய திருப்பூர் வருவாய்க் கோட்டம் உருவாக்கப்பட்டு 20.5.83 முதல் திருப்பூரில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



திருப்பூர் வருவாய்க் கோட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் ரூ. 18 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா திருப்பூரில் 11.9.84 அன்று நடைபெற்றது.

வருவாய்க் கோட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை வகித்தார்.

அரசின் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய்த்துறை ஆணையர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் முன்னிலை வகித்தார்.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு நா. ஆதிமூலம் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புதிதாகக் கட்டப்பட இருக்கும் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டியும் பல்வேறு நலத்திட்டங்களுக்கு உதவிகள் வழங்கியும் உரையாற்றினார்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 1,100 பேருக்கு ரூ.27 இலட்சம் கடனையும், மானியத்தையும் வழங்கியதோடு, 320 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், 50க்கு மேற்பட்டவர்கட்குத் தொழிற் கருவிகளையும் மற்றும் பல உதவிப் பொருட்களையும் வழங்கி உரையாற்றும் போது, கடந்த 4,5 ஆண்டுகளில் தமிழக அரசு ரூ. 13.5 கோடி செலவிட்டு வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் கோட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கும் புதிதாகக் கட்டடங்களையும், பிற வசதிகளையும் உருவாக்கித் தந்துள்ளது. தமிழகத்திலுள்ள 1,097 வருவாய் ஆய்வாளர்களுக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலேயே 967 வீடுகள் கட்டித் தரப்பட்டு இருக்கின்றன. எஞ்சியுள்ள 130 வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டி முடிக்கப்படும். வருவாய் ஆய்வாளர்களுக்கு அவர்கள் பணி புரியும் கிராமப்புறத்திலேயே அலுவலக அறையுடன் கூடிய வீடுகள் கட்டித் தரப்பட உள்ளது என்றார்.

தமிழ்நாடு சட்டமன்றக் கொறடா திரு ஆர். மணிமாறன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு து. இராசேந்திரன் அவர்கள் நன்றியுரை கூறினார்.




# சோழர்கால ஊராட்சி

"சோழர் காலத்தில் சிற்றூர்களே அரசியல் வாழ்வின் உண்மையான மையங்களாயும், சமூக அரசியல் பண்புகளின் முதன்மையான வளர்ப்புப் பண்ணைகளாகவும் திகழ்ந்தன" என்று பேராசிரியர் ஏ. கிருட்டிணசாமி குறிப்பிடுகிறார். சோழர் காலத்திய உள்ளாட்சி நிறுவனங்களைப் பற்றி முதன் முதலாக நெல்லை மாவட்ட மானூர்க் கல்வெட்டில் கூறப்பெறுகின்றது. இந்தச் செய்திகளைப் பற்றிய சோழர்காலச் சின்னங்கள், உத்திரமேரூர், சீனிவாசநல்லூர், திருப்பனந்தாள் (செங்கற்பட்டு மாவட்டம்) தழையனூர் (தஞ்சை மாவட்டம்) அய்யம்பேட்டை, செங்கனூர் முதலிய இடங்களில் காணப் பெறுகின்றன.

சோழப் பெருமன்னர்கள் தம் ஆணையின் கீழ் வாழும் மக்கள் ஆட்சித்துறையில் நன்கு தேர்ச்சி பெறவும் தத்தம் ஊரின் நல்லவை, கெட்டவைகளை ஆராய்ந்து அதில் அக்கறை செலுத்தி அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவும், ஊர்கள் தோறும் சபைகளை ஏற்படுத்தியிருந்தனர். இந்தக் கிராம ஆட்சி முறை சோழர் கால ஆட்சி முறையின் போற்றத் தகுந்த கூறுபாடாகும். சோழர் காலக் கிராம ஆட்சியில் மக்களாட்சியின் மாண்புமிகு கூறுகளைக் காண்கிறோம்.

உள்ளாட்சி நிறுவனங்கள் வேறு எக்காலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில் சோழர் காலத்தில் செழித்தோங்கின.

சோழர் காலம் மகா சபையின் பொற்காலம் என்பர். சிற்றூர்களில் சபைகள் இயங்கி வந்ததைக் கூறும் 646 கல்வெட்டுக்கள் சித்தூரிலிருந்து திருவாங்கூர் வரையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## குடும்பு:—

சோழர் காலத்தில் ஒவ்வொரு ஊரும் பல பகுதிகளாகப் பகுக்கப்பெற்றிருந்தது. ஒவ்வொரு பகுதியையும் குடும்பு என அழைத்தனர். ஒவ்வொரு குடும்பிற்கும் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். ஊர்ச் சபை உறுப்பினர் எண்ணிக்கை அந்தந்த ஊரின் அளவிற்கு ஏற்ப அமைந்திருந்தது. சில ஊர்களில் எண்ணிக்கை மிகுந்தும், குறைந்தும் காணப்பெற்றது. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் முப்பது குடும்புகளைக் கொண்டதாகவும், தஞ்சை மாவட்டத்திலுள்ள செந்தலை (சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம்) ஏறக்குறைய அறுபது குடும்புகள் உடையதாகவும் விளங்கின. எனவே இதன் வாயிலாகப் பெரிய ஊர்களில் அதிக உறுப்பினர்களும் சிறிய ஊர்களில் குறைந்த உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர் எனக் கருதலாம்.

சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெறத் தகுதிகளை வரையறை செய்து வைத்திருந்தனர். "காணிக்கடன் செலுத்துதற்கேற்ற கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையவராய், மறைகளையும் ஆகமங்களையும் நன்கு கற்று அவற்றைப் பிறர்க்குணர்த்தவும் வல்லவராய், கருமம் ஆற்றுவதில் திறமை பெற்றவராய், முப்பத்னைந்து வயதுக்கு மேற்பட்டு எழுபத்தைந்து வயதுக்குட்பட்டோராய், நல்வழியில் ஈட்டிய பொருளினைப் பெற்றுத் தூய வாழ்க்கையினைப் பின்பற்றுவோராய், மூன்றாண்டுகட்கு உட்பட்டு நிறைவேற்றுக் கழகத்திலும் உறுப்பினராக இருந்திராதவராய் இருப்பவரே ஊர்ச் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்



டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
தமிழ்மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

பெறும் உரிமையுடையோராவர்,' அரைக் கால்வேலி நிலமே உடையவராய், ஒரு மறையைக் கற்றுணர்ந்தவராய், நான்கு பாடியங்களுள் ஒரு பாடியத்தைப் பிறர்க்குணர்த்தும் திறமை படைத்தவர்களும் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பெறும் உரிமை உடையோராவர். இந்த விதி முறைகளை நோக்குமிடத்துச் சோழர் காலச் சமுதாயம் சொத்துடைமைச் சமுதாயம் என்பது வெளிப்படுகிறது. செல்வர் நீது வழிச் செல்லார் என்ற எண்ணம் வலுப்பெற்றிருந்தது என்றும் தோன்றுகிறது.

**தகுதியற்றோர்:**

தகுதிகள் வரையறுக்கப் பெற்றது போன்றே தகுதியற்றோர் யார் என்றும் தெளிவாக வரையறுத்துக் கூறப் பெற்றிருந்தது. பொது வாழ்வில் ஒழுக்க நெறி எத்துணை இன்றியமையாதது எனக் கருதினர் என்பதனை இதன் வாயிலாக அறிகிறோம். சமுதாய ஒழுக்கத்திற்கு இத்தகைய வரையறைகள் தேவைப்பட்டன எனலாம். எந்தச் சபையிலாவது உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதிருந்தவரும் அவருக்குச் சிற்றவ்வை, பேரவ்வை, அத்தை, மாமன் என்ற இவர்தம் மக்களும், அவர்தம் தந்தையும், தாயுடன் பிறந்தவன், தந்தையுடன் பிறந்தவன், தம்முடன் பிறந்தவன், மனைவியோடு பிறந்தவன், பெண் கொடுத்த மாமன், உடன் பிறந்தாள் கணவன், மகளை மணந்தவன் என்றிவர்களும், இவர்களின் சுற்றத்தார்களும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கத் தகாதவராவர். இவர்களைத் தவிர, நெருங்கிய உறவினர்களாகிய பெண்ணை வன்புணர்ச்சி செய்தவரும், பார்ப்பனக் கொலைஞரும், கள்ளுண்பவரும், களவாடுபவரும் ஆசிரியர் மனைவியைக் கூடியவரும், ஊர்க்குற்றப் பதிவு நூலில் பதிவு செய்யப் பெற்றவரும், அவருக்கு உறவினரும் ஆராய்ந்தறியாது செயல்படத் துணியும் இயல்பினரும், பிறர் பொருளைக் கவர்ந்தவரும், கள்ளக் கையெழுத்திட்டவரும், தீச்செயல் புரிந்தமையால் கழுதை மீது ஏற்றப் பெற்றோரும், இழிகுலத்தவருடன் தொடர்பு கொண்டதன் வாயிலாகச் சாதியிலிருந்து தள்ளப் பெற்றுக் கழுவாய் செய்யப் பெறாதவரும், ஊர்ச்சபையின் உறுப்பினராதலுக்குத் தகுதியற்றவர்கள் ஆயினர். இவர்கள் மட்டும் தானா? கையூட்டுப் பெற்றோரும் கிராமத் துரோகி என ஒதுக்கப் பெற்றோரும், பொருள் வழிப் பெண்டிரைக் கூடினோரும் கழுவாய் செய்த போதிலும் வாழ்நாள் முழுமையும் உறுப்பினராகும் வாய்ப்பினை இழந்தவர்.

தகுதி, தகுதியின்மை என்று வகுத்திருப்பது சோழர் ஆட்சியின் மாட்சிமைக்கு ஓர் எடுத்துக் காட்டு எனலாம். தவறு செய்தவர் மட்டுமின்றி அவரைச் சார்ந்தோர்களும் வாய்ப்பிழந்தனர் என்பதனால் சமுதாய வரை இறுகலாகப் பின்பைப் பெற்றிருந்தது என்பதனை உணர்கிறோம். உற்றார் உறவினரும் தவறு நடத்திடாது கவனித்து வரும் வாய்ப்பு இருந்து வந்தது எனலாம்.



**தேர்தல் முறை :**

உத்திரமேரூர்க் கல்வெட்டு, சபைக்கு நடத்தும் தேர்தலைப் பற்றிய குறிப்பினைத் தருகிறது. ஊர்ப்பதவிகட்குரிய வெற்றிடங்கள் குடவோலை முறையால் நிரப்பப் பட்டன. மேற்குறித்த தகுதிகள் படைத்தவர்கள் காரிய நிறைவேற்றுக் கழக உறுப்பினராகக் குடவோலை முறைப்படியே ஆண்டு தோறும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் படுவர்.

தேர்ந்தெடுத்தற்குக் குறிக்கப் பெற்ற நாளில், அரசு அலுவலர் ஒருவர் சபை கூடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள மாளிகையில் அவ்வூரின் அனைத்து மக்களும்கூடுவர். அங்கு மக்கள் முன்னிலையில் குடம் ஒன்று வைக்கப்பெறும். அங்குக் குழுமியுள்ளோரில் வயது முதிர்ந்தார் ஒருவர், அக்குடத்தையெடுத்து அதனுள் ஒன்றுமில்லை என்பதை எல்லோரும் அறியக் காட்டிக் கீழேவைப்பார்.

அதன் பின்னர் ஒவ்வோர் ஊரையும் முப்பது குடும்புகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலுள்ள ஒவ்வொருவரும் தமக்குத் தகுதியுடையார் என்று தோன்றுவோரின் பெயரினை ஓலையில் எழுதி அவ்வோலைகளை ஒன்று சேர்த்து, இன்ன பகுதியின் ஓலை என்பது தெரியும் வகையில் அப்பகுதியின் வாயோலை ஒன்றைச் சேர்த்துக் கட்டிக் குடத்தில் இடுவர். இவ்வாறாக முப்பது குடும்பினரும் தமது ஓலையைக் குடத்திலிடுவர்.

பின்னர் அறியாச் சிறுவன் ஒருவனை அழைத்து, ஒரு குடும்பின் கட்டினை அவிழ்த்து, வேறொரு குடத்திலிட்டுக் குலுக்கி, அதிலிருந்து ஓர் ஓலையை மட்டும் சிறுவனை எடுக்கச் செய்து கரணத்தான் என்ற அரசு அலுவலன் கையில் கொடுப்பார் முதியவர்.

கரணத்தான் தன் ஐந்து விரல்களையும் அகல விரித்துப் பலரும் அறிய அதில் ஒன்றுமில்லை என்று காட்டிப் பின் அகங்கையால் ஓலையினை வாங்கி, அவ்வோலையில் உள்ள பெயரினை உரக்க ஊரார் அறியப் படிப்பார். அங்குக் குழுமியுள்ள நம்பிமார் அனைவரும் அதனைச் சரிபார்த்த பின்னர் அப்பெயர் ஓர் ஓலையின் கண் குறிக்கப்பெறும். அவ்வாறு குறிக்கப்பெற்ற பெயருடையவரே கிராம அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றவராவார்.





**பண்டைய முறை :**

இக்குடவோலை முறை பண்டையத் தமிழ்ச் சமுதாயமுறையே என்பதனை அகநானூற்றுப் (77) பாடல் காட்டுகிறது.

கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண் டழிக்கும் ஆவண மாக்களின்
உயிர்த்திறம் பெயர நல்லமர்க் கடந்த
தறுகணாளர்குடர் தரீஇத் தெறுவரச்
செஞ்செவி எருவை யஞ்சுவர இருக்கும்

பெரிய புராணப் பாடலும் இம்முறைக்குச் சான்றாகிறது.

இருள்மறை மிடற்றோன் கையில்
ஓலைகண் டவையோர் ஏவ
அருள்பெறு கரணத் தானும்
ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி
விரித்ததன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப
வாசகம் செப்பு கின்றான்.

**வாரியங்கள் :**

ஊரிலுள்ள எல்லாக் குடும்புகளுக்கும் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பெற்ற பின்னர் வாரியங்கள் அமைக்கப் பெற்றன. குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப் பெற்ற முப்பதின்மருள் வயதிலும் கல்வியிலும், அறிவிலும் முதிர்ந்தோர் பன்னிருவரைச் சம்வத்சர வாரியராகத் தேர்வர். மற்றையோருள் பன்னிருவர் தோட்ட வாரியராகவும், அறுவர் ஏரி வாரியராகவும் தேர்ந்தெடுக்கப்பெறுவர். பின்னரும் இம்முறையே முப்பது ஓலைகளைத் தேர்ந்தெடுத்துக் குடத்திலிட்டுக் குலுக்கி அவற்றுள் பன்னிரண்டினை எடுக்கச் செய்து அறுவரைப் பொன் வாரியராகவும், அறுவரைப் பஞ்சவார வாரியராகவும் அமர்த்துவர். எனவே சம்வத்சரவாரியர், தோட்ட வாரியர், பொன் வாரியர், ஏரி வாரியர் என ஐவகை வாரியர் இருந்தனர் என அறிகிறோம். மேற்கூறிய வாரியங்களேயன்றிக் கழனி வாரியம், கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், தடிவழி வாரியம், ஆட்டை வாரியம், உதாசின வாரியம் முதலிய வாரியங்களும் சில ஊர்களில் இருந்தன.

**பதவிக்காலம் :**

சபையின் உறுப்பினர் தேர்நதெடுக்கப் பெற்ற நாளிலிருந்து முந்நூற்றறுபது நாள் வரையிலும் எவ்வித ஊதியமும் பெறாது கடமையாற்றினர். இவர்கள் ஆளுங்கணத்தார் எனவும், கணப் பெருமக்கள் என்றும் அழைக்கப்பெறறனர். குற்றம் ஏதேனும் புரிந்தனர் எனின் உடன் பதவி நீக்கம் செய்யப் பெற்றனர்

**பணிகள் :**

நீதி விசாரணை செய்து குற்றங்களுக்கேற்பத் தண்டனை வழங்குதலும், கோயிற் பணிகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்று கண்காணித்தலும் சம்வத்சர வாரியர் கடமையாகும்

ஏரி, குளம், ஊருணி வாய்க்கால் முதலிய நீர் நிலைகளைப் பழுதுறாமல் பாதுகாத்தலும், நீர்ப்பாசன வசதிகளைக் கவனித்தலும் ஏரி வாரியர் கடமையாகும். புஞ்சை, புறம்போக்கு நிலங்களைப் பற்றிய எல்லாவற்றையும் கண்காணிப்பது தோட்ட வாரியர் கடமையாகும். பொன்னை உரை காண்பதும் அரசரால் வெளியிடப்பெறும் பொற்காசுகள், செப்புக் காசுகள் ஆகியவற்றைக் கண்காணிப்பதும்பொன்வாரியத்தார் பணியாகும். நஞ்சைநிலங்களைப்பற்றிய யாவற்றையும் கண்காணித்து வரும் பொறுப்புக் கழனி வாரியத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆறு, ஏரிகளிலுள்ள மதகுகளை மேற்பார்வையிட்டுத் தேவைக் கேற்பத் தண்ணீரை வடித்தும், பெருக்கியும் கண்காணிப்பவர் கலிங்கு வாரியத்தார் எனப்பட்டனர். வயல்களிலும் ஊர்ப்புறங்களிலும் உள்ள பாதைகளையும், சாலைகளையும் கண்காணித்துப் பணிபுரிவோர் தடிவழி வாரியத்தாராகும்.

**சபை கூடுமிடம்:**

சபை உறுப்பினர்கள் கூடுவதற்கு ஊர்தோறும் மாளிகை அமைக்கப் பெற்றிருந்தது. இராசராசன் காலத்தில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் பெருமக்கள் கூடுவதற்கெனச் செம்பியன் மாதேவிப் பெருமண்டபம் அமைக்கப் பெற்றதாகக் கல்வெட்டு வாயிலாக அறிகிறோம். தனியிடம் ஏதும் இல்லையெனில் கோயில் மண்டபத்திலோ மரத்தடியிலோ சபை கூடியது.

**அறிவிப்புகள் :**

ஊர்ச்சபை கூடும் நாளைக் காளம் ஊதுவித்து உணர்த்தினர். இரவிலும், பகலிலும் அது கூடியது.

சோழர் கால ஊராட்சி முறை சீராட்சி முறை. இன்றைய ஊராட்சி முறையின் சிறந்த கூறுகள் என்று நாம் கருதுவனவற்றை அன்றைய நாளில் நடைமுறையில் அவர்கள் கொண்டிருந்ததை எண்ணி வியந்து பாராட்டிப் பெருமை கொள்ளாமல் இருக்கமுடியாது.



# நான் அறிந்த முதல் மனிதன்



**நாமக்கல் கவிஞர்**

சிதம்பரம் பிள்ளையவர்களுடைய அருமை பெருமைகளைப் பற்றி அலுப்பில்லாமல் அடிக்கடி பேசி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்த நானறிந்த முதல் மனிதன் காலஞ்சென்ற சுப்ரமண்ய சிவா அவர்கள். சிவா அவர்கள் சிதம்பரம் பிள்ளையின் அந்தரங்கங்களை யெல்லாம் நன்றாக அறிந்தவர். சிதம்பரம் பிள்ளையவர்களுடைய உண்மையான வரலாறுகளைத் தெரிந்திருந்தவர் சிவாதான். பிள்ளையவர்களுடைய சரித்திரத்தைத் தாமே எழுதப் போவதாகச் சிவா அவர்கள் சேலத்தில் என்னிடம் சொன்னார். அதற்குச் சில பாட்டுகளையும் அதை அச்சேற்ற வேண்டிய அனுகூலங்களையும் நான் செய்யவேண்டும் என்று சிவா என்னைக் கோரியிருந்தார். அது கைகூடுமுன் அவர் காலமாகிவிட்டார்.

சிவாவின் சிம்ம கர்ஜனை போன்ற பிரசங்கங்களில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய தேச பக்தியைப் பற்றியும் தியாகங்களைப் பற்றியும் அவர் உள்ளம் உருகி கண்ணீர் ததும்பப் பேசிய கட்டுரைகள் இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. சிவாவின் மூச்சுப் போகிற வரையில் சிதம்பரம் பிள்ளையின் சிறப்புகளைப் பாடிக்கொண்டே பல ஊர்களிலும் அலைந்து திரிந்து கிடைசியாக சேலம் ஜில்லாவிலுள்ள பாப்பாரப்பட்டியில் பரகதியடைந்தார். பாப்பாரப்பட்டியில் பாரதமாதாவின் கோவில் கட்ட சிவா அவர்கள் செய்த முயற்சிகளில் அந்த ஆலயத்தில் பல தேசபக்தர்களின் சிலைகளைப் பிரதிஷ்டை செய்ய நினைத்திருந்ததையும் அந்தத் தேச பக்தர்களுக்குள் சிதம்பரம் பிள்ளை முதல் ஸ்தானம் பெற்றிருந்தார் என்பதையும் நான் அறிவேன்.

பாப்பாரப் பட்டிக்கு நான் ஒரு முறை போயிருந்தபோது அங்கே சுப்ரமண்ய சிவா பாரதமாதா கோவிலைக் கட்டக் குறிப்பிட்டிருந்த இடத்தையும் அந்தக் கோயிலைக் கட்டி முடிக்க வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு, அதற்காக வாக்களித்திருந்த அன்பர்களையும் கண்டேன். பாரதமாதா கோயிலுக்காகச் சிவா வகுத்திருந்த திட்டங்களையும் அதில் சிதம்பரம்பிள்ளையவர்களுக்கு எவ்வளவு சிறந்த பீடம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதையும் அறிந்தேன். அந்த முயற்சி அவரோடு முடிந்தது.

**ஆதாரம் :** கப்பல் ஒட்டிய தமிழனுக்கு அளித்த முன்னுரையிலிருந்து

**தகவல் :** டி. வி. எஸ். மணி

## நூல் நயம்

### சிவாவின் கடிதங்கள்

ஆசிரியர் : சுப்பிரமணிய சிவா

தொகுப்பு: ச.இரா. இராமாநந்தன்

வெளியீடு: இந்திய — சோவியத் கலாச்சாரக் கழகம், அரூர், தருமபுரி மாவட்டம்.

பக்கம்: 56 விலை குறிப்பிடப் படவில்லை.

சுப்பிரமணிய சிவாவின் நூற்றாண்டு வெளியீடான இந்நூலில், அவர் தமது நண்பர் தியாகி சின்னமுத்து முதலியார் அவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் எழுதிய கடிதங்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு கடிதமும் நாட்குறிப்புப் போல—சிவா அவர்களின் வரலாற்றைச் சொல்ல உதவுகிறது. 'எனது பிரார்த்தனை' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள சிவாவின் கவிதை—அவரது கவி உள்ளத்தையும் கவித் திறனையும் தெளிவாக்குகின்றது.

சிவாவைக் குறித்துப் பல்வேறு தகவல்கள் — சிவா படைத்த நூல்களின் பட்டியல், சிவா எழுதிய 'நூல் மதிப்புரை', சிவாவைக் குறித்து மகாகவி பாரதியின் புகழுரை ஆகியவையும் சிவாவின் வாழ்க்கைக் குறிப்பும் இந்நூலை அணி செய்கின்றன. மாபெரும் விடுதலைப் போர்த் தியாகியின் வரலாற்றை இந்நூலின் மூலம்—ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது.

சிவாவின் புகைப்படங்களுடன்—அவர் வழிபட்ட பாரதமாதா படம், பாரதமாதா சிலையின் படம்—அவர் கைப்பட எழுதிய கடிதத்தின் படம் ஆகியவை இந்நூலில் இடம் பெற்றிருப்பது நூலின் பெருமையை உயர்த்துகிறது. இந்நூல் அளவில் சிறிதாயினும் பயன்பாட்டில் பெரிதாக விளங்குகிறது.





# ஆளுக்கு ஒரு வீடு

தமிழக அரசு ஆண்டுதோறும் காவல் துறையினருக்கு தாராளமாக அள்ளிக் கொடுத்த சலுகைகள் ஏராளம். அவ்வாறு அரசு வழங்கிய பல சலுகைகளில் ஒன்றுதான். ''ஓய்வுக்குப் பின் காவலருக்கு ஆளுக்கு ஒரு வீடு'' என்ற திட்டம்.

**மூலகாரணம் முதல்வரே**

1979-ஆம் ஆண்டு; காவல் துறைப் பணியாளர்களுக்கு அளிக்கவிருக்கும் பல்வேறு திட்டங்களைப் பற்றி விவாதிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சில மூத்த காவல் துறை அதிகாரிகள் சந்தித்தபோது; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, ஓய்வு ஒழிச்சலின்றிப் பாடுபடும் காவல் துறையினருக்கு, ஓய்வு பெற்றபிறகு ஒதுங்க ஒரு வீடாவது இருக்க

**வெ. வைகுந்த் இ.கா.ப.**
**காவல்துறைத் துணைத் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதிக் கழகம்**



வேண்டும் என்ற தன் உள்ளக் கிடக்கையை வெளியிட்டார்கள். அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டபோது, எந்த அடிப்படையில் வெளியிட்டார்கள் என்பதையும் விளக்கினார்கள்.

கண்ணியம் தவறாமல் கட்டுப்பாட்டோடுகடமையாற்றுவதுதான் காவல் துறையினரின் தாரக மந்திரம். இவ்வாறு முழு நேரமும் பணியில் மூழ்கிக் கிடக்கும் காவல் துறைப் பணியாளர்கள் தங்கள் சொந்த நலன்களைக் கவனிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு பாடுபடும் அவர்கள், தங்களுக்காகச் சொந்தமாக ஒரு வீடு கூட இல்லாத நிலையில் ஓய்வு பெறுகின்றனர். வீடு கட்டித் தருவதிலுள்ள சிரமங்களை நன்கு உணர்ந்த

நம் முன்னோர்கள், ''வீட்டைக் கட்டிப் பார். கல்யாணம் பண்ணிப் பார்'' என்று கூறி உள்ளார்கள். கருமமே கண்ணா யிருக்கும் காவல் துறைப் பணியாளர்கள் குறைந்த வருவாயைக் கொண்டு வீடு கட்டிக் கொள்வது என்பது இந்தக் காலத் தில் இயலாத காரியம்.

''நீங்கள் உங்கள் கடமைகளை ஒழுங் காகச் செய்யுங்கள். உங்கள் குடும்ப நலன் களை நாங்கள் பேணிப் பாதுகாக்கிறோம்'' என்று துறைப் பணியாளர்களுக்கு உறுதி அளிக்கும் வகையில் இந்தச் சீரிய திட் டத்தைப் பற்றிய தனது கருத்தை வெளியிட்டார்கள் நமது மாண்புமிகு முதலமைச்சர்.

இதன் விளைவாக, காவல் துறைக் கான ஒரு தனி வீட்டு வசதிக் கழகம் தொடங்கப்படும் என்ற அறிவிப்பை, 8-11-1979 அன்று சட்டமன்றத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அதன் பின்னர், கம் பெனிச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ஒரு கழகமாக, தமிழ்நாடு காவல் துறை வீட்டு வசதிக் கழகம் தொடங்கப்பட்டது. அந்த வகையில் முதலமைச்சர் அவர் களின் எண்ணத்திற்கு நிருவாக ரீதியாக உருக்கொடுக்க, தமிழக அரசின் இன் றைய தலைமைச் செயலாளர் அன்று உள் துறைச் செயலாளராகப் பணியாற்றிய போது பெரு முயற்சிகள் மேற்கொண் டார்.

**இந்தியாவிலேயே முன்னோடித் திட்டம்**

சாதனைகள் பல புரிந்துள்ள தமிழக அரசின் மற்றுமொரு சாதனையாக இத் திட்டம், இந்தியத் துணைக் கண்டத்தி லேயே முதன்மையான முன்னோடித் திட்டமாக உருவாகியது. இதற்கு முன்பு இம்மாநிலத்திலோ, மற்ற மாநிலங்களி களிலோ, பணியிலிருக்கும் காவல் துறை யினருக்கு வாடகையின்றிக் குடியிருப்பு அல்லது வாடகை வீடு அளிக்கும் திட்டங் களைச்செயலாக்கத் தனியாக அமைப்புகள் இருந்தன. ஆனால், அதன்படி, ஒரு காவலர், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்பட்டாலோ ஓய்வு பெற்றாலோ, அவர்கள் தங்கி இருக்கும் வாடகைக் குடியிருப்பைக் காலிசெய்துவிட வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில் மட் டும்தான்; ''ஆளுக்கு ஒரு வீடு'' என்ற கருத்தின் அடிப்படையில் காவல் துறை யினருக்காக வீடுகளைக் கட்டி அவர் களுக்கே அவற்றைச் சொந்தமாக்கும் திட் டத்தை நிறைவேற்றத் தனி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இத்திட்டம் ஒரு முன்னோடித் திட்டம். ஆக, இத்திட்டத்தினைத் தாங்களும் பின் பற்றும் நோக்குடனும், இத்திட்டத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நோக்குடனும்



இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல் வேறு மாநிலங்களிலிருந்தும் காவல் துறை யின் மூத்த அதிகாரிகள் இங்கு வந்த வண்ணம் உள்ளனர்.

**திட்டம் செயல்படும் விதம்:**

இத்திட்டத்தைச் செயல்படுத்தும் போது, தரம் குறையாமலும், அதே நேரத் தில் மலிவாகவும் வீடு கட்டித் தரவேண் டிய அவசியம் ஏற்படுகிறது. இதனை உணர்ந்து, தமிழக அரசு, புறம்போக்கு நிலங்களையும் மற்றும் பிற வகையிலான நிலங்களையும் குறைந்த விலையில் வாங் கித் தந்து உதவியுள்ளதன் மூலம் 'இக் குடியிருப்புகளின் விலைகளைக் குறைக்க முடிந்துள்ளது. மேலும், புதுடெல்லி யிலுள்ள 'ஹட்கோ' நிதி நிறுவனம் நிதி உதவி அளிக்கின்றது. தமிழக அரசு, நிலங்களை வாங்கித் தருவதுடன் குறைந்த வட்டி விகிதத்தில் நிறையக் கடன் உதவி யும் வீடு கட்டத் தேவைப்படும் சிமெண்டை



வரிவிலக்கு அளித்தும் பெற்றுத் தருகிறது. இவை யாவும், குடியிருப்பின் கட்டுமானச் செலவையும், வீட்டின் விலையையும் கணிசமான அளவுக்குக் குறைக்க உதவி புரிகின்றன.

இவற்றினூடே, கடந்த சில மாத காலமாகபுதியவழி வகைகளையும் அணுகு முறைகளையும் பின்பற்றி, நடைமுறை களை ஒழுங்குபடுத்தி, கண்காணிப்புகளை தீவிரப்படுத்தி இருப்பதன் மூலம் தேவை யற்ற செலவினங்களைத் தவிர்த்து, வீட் டின் விலையைக் குறைத்திருக்கிறோம்.

**குறைந்த விலை—உயர்ந்த தரம்:**

இவை தவிர, கடந்த சில மாதங் களாக எந்தக் காலதாமதமும் நேர்ந்து அதனால் விலைகள்கூடாதவாறுபார்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் விரிவான சில நடைமுறைகளைப் பின்பற்றி, அந் தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறை அதி காரிகள் ஆகியோர் ஒருங்கிணைந்து அவ் வப்போது கலந்தாலோசிக்கிறோம். இவை காரணமாக இத்திட்டத்தின் கீழ், கட்டப் பட்டுள்ள வீடுகளின் விலை மிகக் குறை வாக உள்ளது. மேலும், காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தால் கட்டப்பட் டுள்ள வீடுகள், தரத்தில் சிறந்தவை எனக் கட்டடக் கலை வல்லுநர்கள் பரிந்துரைத் துள்ளார்கள்.

இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகளின் மற்றொரு சிறப்பு எது வெனில், இக்குடியிருப்புகளுக்குச் சாலை வசதி, குடிநீர் வசதி, வடிகால் வசதி மருத்துவ வசதி, தொடக்கப் பள்ளி வசதி, சிறப்பங்காடி வசதி போன்ற அனைத்தும் ஒருங்கிணைந்த வகையில், இக்குடி யிருப்புகள் கட்டப்படும் தறுவாயிலேயே ஏற்படுத்தப்பட்டு விடுகின்றன என்ப தாகும். இதனால், பல்வேறு நகரங்களின் புறப்பகுதியில் கட்டப்படும் இக்குடியிருப்பு களில் குடியேற யாரும் எந்தத் தயக்கமும் காட்டுவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

**சமையலுக்கு எரிவாயு:**

இக் குடியிருப்புகளில் கிடைக்கும் மற் றொரு சிறப்பான வசதி, மலிவான 'கோபர் கேஸ்' எனப்படும் எரிவாயுவாகும். ஒருங் கிணைந்த வடிகால் வசதி கிடைப்பதன் மூலம், கோபர் கேஸ் இயந்திரங்களைப் பொருத்துவது ஏதுவாகிறது. திருச்சி மாவட்டத்திலுள்ள நாவல்பட்டு வீட்டு வசதித் திட்டக் குடியிருப்பில் இத்தகைய இயந்திரங்கள் 41 பொருத்தப்பட்டுள்ளன. இக்குடியிருப்பில் வசிப்போருக்கு எரி வாயுப் பிரச்சினை அறவே இல்லை என்ற நிலையை உருவாக்கி உள்ளோம். இதனால் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரி யம், எங்களுக்கு மேற்படி இயந்திரங் களின் விலையில் 25 சதவிகிதம் தள்ளுபடி செய்து சலுகை அளித்துள்ளது.

**'நாவல்பட்டில்' திட்டத்தின் அரங்கேற்றம்:**

தமிழக அரசின் சாதனை என்ற மணி மகுடத்தின் ஒரு வைரக்கல்லாக, திருச்சி மாவட்டத்தில் நாவல்பட்டில், காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தினால் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு திகழ்கிறது. இது அரிய சாதனையின் துவக்கம்தான். வரவிருக்கும் ஆண்டுகளில் மேலும் பல அரிய திட்டங்களைச் செயற்படுத்த இருக் கிறோம். இக்கழகத்தின் கன்னி முயற்சி யாக அமைந்துள்ள திட்டம்தான் நாவல் பட்டுக் குடியிருப்பு. திருச்சி - புதுக் கோட்டை நெடுஞ்சாலையிலிருந்து நான்கு கிலோ மீட்டர் வடக்கே உள்ள நாவல் பட்டில் வெவ்வேறு வகையான 682 குடி யிருப்புகளை ரூ. 164 இலட்சம் செலவில் கட்டி முடித்திருக்கிறோம்.

513 சதுர அடி பரப்பளவு கொண்ட நடுத்தர வருவாய் உள்ளோருக்கான முதல் நிலை வீடுகள் ரூ. 45,450 விலையிலும், 420 சதுர அடி பரப்பளவு கொண்ட நடுத்தர வருவாய் உள்ளோருக்கான இரண்டாம் நிலை வீடுகள் ரூபாய் 36,960 விலையிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதேபோல், குறைந்த வருவாய் உள்ளோருக்கான முதல் நிலை வீடுகள் ரூ. 27,640 விலையில் 383 சதுர அடி பரப்பளவு கொண்டதாயும், குறைந்த வருவாய் உள்ளோருக்கான இரண்டாம் நிலை வீடுகள் ரூ. 25,670 விலையில் 350 சதுர அடி பரப்பளவு கொண்டதாயும் கட்டப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15-9-1984 அன்று திறந்து வைத்தார்.

வீடுகளின் விலைகளைப் பார்க்கும் போது, காவல் துறை வீட்டு வசதிக்கழகம் மேலே கூறிய பல்வேறு வகை வீடுகளைத் தரம் குறையாமலும், ஆனால் அதே சமயம் விலைகள் கூடாமலும், அரசின் உறுதுணையோடு கட்டி முடித்துள்ளது என்பதை உணரலாம்.

**ஒளிமயமான எதிர்காலம் :**

நாவல்பட்டுக் குடியிருப்புகளைத் தவிர, தமிழ்நாடு காவல் துறை வீட்டு வசதிக் கழகம், கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலம் சாலையில் கணபதி என்ற புறநகர்ப் பகுதியில் 432 வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கின்றது. இன்னும் சில மாநகரங்களில் இங்கே வீடுகள் கட்டி முடிக்கப்பட உள்ளன. இவை தவிர, மதுரை மாவட்டம் வடபழஞ்சியிலும், நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை அருகில் திம்மராஜபுரம் போன்ற இடங்களிலும் வீடுகளைக் கட்டுவதற்காக நிலங்களை, தமிழக அரசின் அனுமதியோடு அரசு வழங்கியுள்ள பல்வேறு சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு விலைக்கு வாங்கிக் கையகப்படுத்தியுள்ளோம்.

காவல் துறையினரின் கவலைகளை மனதிற்கொண்டு, காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தின் திட்டத்தின் மூலம், காவல் துறையினருக்கு உறுதுணை புரிந்த தமிழக அரசுக்கும், ஏனைய பிற துறை அதிகாரிகளுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, இத்திட்டத்தை, தானே சிந்தித்து செயலாக்க ஆணை செய்த மாண்புமிகு முதலமைச்சருக்கும் காவல் துறையினர் என்றென்றும் நன்றி உள்ளவர்களாக இருப்பர்.

**காட்டு யானையால் மரணமடைந்தவரின் மனைவிக்கு உதவித் தொகை**

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் வட்டம், மாசினகுடி கிராமத்தைச் சேர்ந்த திரு அப்பு சாமி என்பவர் காட்டு யானையால் தாக்கப்பட்டு மரணமடைந்தார். அவர்தம் மனைவியார் திருமதி பார்வதிக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2,500 உதவித் தொகையாக வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



சென்னையில் காவலர் வீட்டு வசதித் திட்டத்தை மேதகு குடியரசுத் தலைவர் ஜெயில் சிங் அவர்கள் 23.8.1982–ல் தொடங்கி வைத்தார்.





# அடிமை விலங்கொடித்த அண்ணலைப் பின் பற்றுவோம்!

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழா தமிழக அரசின் சார்பில் கிண்டி - காந்தி மண்டபத்தில் 2-10-84-ல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திரு கொத்தமங்கலம் விசு அவர்களின் 'காந்தி மகான் கதை' வில்லுப் பாட்டு நிகழ்ச்சியுடன் விழா தொடக்கமாகியது.

அண்ணல் காந்தியடிகள் எழுதிய நூல்களும் அவரைக் குறித்து மற்றவர்கள் எழுதிய நூல்களும் இடம் பெற்றுள்ள நூலகத்தை மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு ரேயான் வரவேற்றார்.

அண்ணலின் திருஉருவப் படத்தை மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார். அண்ணலைத் தரிசிக்கவும் அவருடன் பழகவும் வாய்ப்புப்பெற்றிருந்த அவர், தமது அனுபவங்களை எடுத்துரைத்தது சுவையாக இருந்தது. அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இந்தியாவில் பிறந்தவர்கள் எல்லாரும் இந்தியர் ஆக மாட்டார்கள். காந்தியடிகளைப் புரிந்துகொண்டால்தான் அவனை இந்தியன் என்று சொல்ல முடியும்.

''இந்திய நாட்டுக்கு ஒரு பெருமை உண்டு. இங்கு இட்லர் பிறக்கவில்லை; முசோலினி பிறக்கவில்லை; காந்தி பிறந்திருக்கிறார். இந்திய மண்ணுக்கு யார் தேவையோ, அவர் பிறந்திருக்கிறார்.

''உலகத்தவர்க்கு காந்தியடிகளை இனந்தெரிந்து பாடினான் ஒரு கவிஞன். 'வாழ்க நீ எம்மான்' என்று தொடங்கி 'மகாத்மா வாழ்க' என்று முடித்தான் அவன். எதிர்காலத்தில் அவரை எல்லாரும் மகாத்மா என்று அழைக்கப் போகிறார்கள் என்பதை முன் கூட்டியே தெரிந்து பாடினான் அவன்.

''ஏசு நாதர் சிலுவையில் அறையப்பட்ட ஒரு படத்தை வைத்தே கிறிஸ்துவ சமுதாயம் வளர்ச்சியடைந்து உலகமெல்லாம் பரவியது. காந்தியடிகள் குண்டடிபட்டு இறந்த படத்தை மக்கள் மன்றத்தில் காண்பித்து காந்திய மார்க்கத்தை வளர்க்க நாம் தவறிவிட்டோம்.

''காந்தியடிகள் கற்றுக் கொடுத்த தத்துவங்களை நாம் கடைப்பிடிக்கவில்லையென்றால் நாடு கெட்டுப் போய் விடும். தலைமுறைக்குக் கிடைத்த தண்டனையாகிவிடும்.''

அடுத்து உரையாற்றிய மேதகு ஆளுநர் அவர்கள் தெரிவித்தார்:

''அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய துறைகளில் இணையில்லாத தொண்டு செய்தவர் காந்தி அடிகள். அவர், சிறந்த சமூக சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். லட்சோப லட்ச மக்களை வசியப்படுத்தும் ஆற்றல் பெற்றிருந்தார். நலிந்த பிரிவினருக்காகப் பெரும்பாடு பட்டார். அவரது தத்துவங்கள் மிக உன்னதமானவை - உயர்ந்தவை. அவரது கொள்கைகளை நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.''





மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் உரையாற்றுகையில், குறிப்பிட்டதாவது:

''காந்தியடிகள் கத்தியின்றி ரத்தமின்றிப் போராட்டங்களை நடத்தினார். தன்னைத் தானே துன்பத்துக்கு ஆளாக்கிக்கொண்டார்.

'காந்தியடிகள் மற்ற தலைவர்களிலிருந்து வேறுபட்டவர்; மாறுபட்டவர். இந்திய நாட்டில் சாதிப் பிரிவுகளும் சமயப்பிரிவுகளும் ஏராளம். வாழ்கின்றார் முப்பது கோடி மக்களெனல் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும் என்று பாவேந்தர் சொல்லியது போல - மொழி பேதம் - சாதிபேதம் என்று பல்வேறு பேதங்கள் கொண்ட மக்களை ஒன்று திரட்டுவது என்பது கடினமான காரியம் ஆகும். அதனை அற்புதமாகச் செய்து வெற்றிபெற்றார் காந்தியடிகள்,''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்:

''வாராது போல் வந்த மாமணியாகத் திகழ்ந்தவர் காந்தியடிகள். அடிமைகளாகக் கிடந்தவர்களைத் தட்டி எழுப்பி சுதந்திர வீரர்களாக உருவாக்கி, தன்மானம் உள்ளவர்களாக் ஆக்கியுள்ளார்.

''எல்லா நாடுகளிலும் தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள் அவர்கள் எல்லாம் தங்களது வீரர்களுக்கு ஆயுதங்களைத் தந்திருக்கிறார்கள். வன்முறையைக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். எதிரிகளை வீழ்த்துவதற்கு வழி சொல்லித் தந்திருக்கிறார்கள். ஆனால் உத்தமர் காந்தியடிகள் வன்முறை அல்லாத போராட்டங்களையே சொல்லித் தந்திருக்கிறார்கள். போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்த வேளையில் நாடு நலம் பெறுவதற்குரிய நிர்மாணத் திட்டங்களையும் அவர் உருவாக்கினார்; அவ்வாறு செய்யாதிருந்திருந்தால் அவர் மறைந்து 37 ஆண்டுகளுக்குப் பிறகும் உலகத்தில் ஜனநாயக நாடு என்ற பெயரை இந்தியா பெற்றிருக்க முடியாது.

''கிராமத்தொழில்கள் இல்லாமல் சமுதாயம் வளர்ச்சியடைய முடியாது என்று காந்தியடிகள் முன்பே சொல்லித் தந்திருக்கிறார்.

''அண்ணாவின் இதயக்கனியான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், உத்தமர் காந்தியடிகளின் மிகப் பெரும் சீடர் என்பதை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறார். காந்தியடிகளின் நூல்கள் கொண்ட நூலகம் ஒன்றை அமைத்துத் தந்திருக்கிறார்.

''நமது நாட்டின் பத்திரிகைகள் 'இன்று காந்தியடிகளன் பிறந்த நாள்' என்று செய்தி போடவில்லை. அவரது உருவப் படத்தைப் போட்டு அஞ்சலி செய்ய மறந்து விட்டன. நம்மை எல்லாம் மானமுள்ள மனிதர்களாக மாற்றிய தலைவரை— சுதந்தர புருஷராக நடமாட விட்ட தூயவரை நினைத்துப் பார்க்க வேண்டாமா?

''காந்தியடிகளின் நினைவைப் போற்றுவோம்; வளர்ப்போம்; பாதுகாப்போம்''.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் கூறியதாவது:

''காந்தியடிகள் மூன்று நோக்கங்களுக்காகப் பாடுபட்டார். நாடு வெள்ளையரிடமிருந்து பூரண விடுதலை பெற வேண்டும் விடுதலை பெற்ற பின்னர் இந்திய நாடு ஒன்றாகவே இருக்க வேண்டும். இந்தியாவில் ஏழ்மையில் உள்ள கோடானு கோடி மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெற வேண்டும் என்பவைதான் அந்த நோக்கங்கள்.

"இந்த நோக்கங்களுக்காகவே அவர் வாழ்ந்தார். எழுதினார்- பேசினார். நாட்டுக்கு விடுதலை கிடைத்துவிட்டது என்ற வகையில் அவரது முதலாவது நோக்கம் பூரணமாக நிறைவேறியது. ஆனால் இரண்டாவது மூன்றாவது நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்குள் அவர் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். அவற்றை நிறைவேற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

''என்ன பாடுபட்டாவது இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாப்பேன். எதிர்க்கும் சக்தியை எதிர்ப்பேன் என்று இளைஞர்கள் சூளுரைக்க முன்வர வேண்டும்.''

அடுத்து உரையாற்றிய திருக்குறளார் வீ. முனிசாமி தெரிவித்தார்:

"அறியாமையில் ஆழ்ந்துகிடந்த மக்களுக்கு சுதந்தரம் வாங்கித் தந்தார் காந்தியடிகள். உலகத்தில் உள்ள நாடுகளில் எல்லாம் நமக்கு மரியாதையைத் தேடித் தந்தார்.

''இப்பவும் எங்களுக்குச் சுதந்தரம் தேவைப்படுகிறது. மறு தபாலில் அனுப்பி வைக்கவும்'' என்று வெள்ளைக்காரர்களுக்குக் கடிதம் எழுதியா சுதந்தரத்தை வாங்கித் தந்தார்? கஷ்டப் பட்டு வாங்கித் தந்தார். நாட்டில் உள்ள மக்கள் சமுதாயம் வாழ வேண்டிய வகையினைச் சொல்லிக் கொடுத்தார் மகாத்மா.''

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர். திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. நன்றி நவில, பின்னர் திரு கே. வீரமணி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

— சண்முகசுந்தரம்





# சேலத்தில் இரு பெரும் விழா

சேலம் நேரு கலையரங்கில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழாவும், அரசுப் பொருட்காட்சியின் நிறைவு விழாவும் 26.9.84 அன்று நடைபெற்றன

சென்னை டி.கே.எஸ். கலைவாணன் குழுவினரின் கலை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது.

விழாவிற்கு வந்திருந்தோரை செய்தித்துறை துணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், பெரியார் மகளிருக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடுபட்டார் என்று குறிப்பிட்டார்.

செய்தித்துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., விழாவினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், ஆண்களுக்கு என்ன உரிமைகள் உள்ளனவோ அந்த உரிமைகள் அனைத்தும் பெண்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று பாடுபட்டார் பெரியார் என்றார்.

தந்தை பெரியார்பற்றி மகளிர் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கில் புதிய சகாப்தத்தின் விடிவெள்ளி என்ற தலைப்பில் திருமதி மண்டோதரி கணேசன், பகுத்தறிவுப் பகலவன்என்ற தலைப்பில் திருமதி தங்க அன்புவல்லி, பண்புகளின் பாசறை என்ற தலைப்பில் செல்வி குருவம்மாள், தொண்டில் பழுத்த பழம் என்ற தலைப்பில் திருமதி கஸ்தூரி முதலியோரும் பங்கு பெற்றார்கள்

மகளிர் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள் பேசுகையில், தந்தை பெரியார் எளிமையான தோற்றத்தைக் கொண்டு இருந்தார். எந்த செயலையும் துணிச்சலுடன் செய்தார். கதர் அணிந்து தெருத் தெருவாக விற்றார் தந்தை பெரியார். காதி போர்டுக்கும் பெரியாருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழர் என்ற இனத்தை வெளிவுலகுக்குக்கொண்டுவந்தவர் தந்தைபெரியார் ஆவார் என்றார்.

விழா இறுதியில்சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு எஸ். நடேசன் நன்றி கூறினார்.

பின்னர் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர்.வரதராஜுலு இ.ஆ.ப. வரவேற்றார்.

தந்தை பெரியார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு சட்டமன்ற பேரவை தலைவர் திரு க.இராசாராம் அவர்கள் உரையாற்றுகையில், சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதலுக்குப் பெரியார்தான் காரணம். கல்வி வளர்ச்சிக்கும் கலப்புமணத்திற்கும் காரணம் பெரியார் என்றார்.

''இதே இடத்தில் தந்தை பெரியார் மாநாடு நடத்தினார். அந்த மாநாட்டில்தான் 'திராவிடக் கழகம்' என்று பெயரிட்டார். அவ்வளவு சிறப்புவாய்ந்த இந்த இடத்தில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருப் படத்தைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தியத் துணைக் கண்டத்தில் பெரியார் பழகாத தலைவர்கள் இல்லை

''ஜாதிப்பட்டங்களை நீக்க வேண்டுமென்று பாடுபட்டார் பெரியார். தமிழகத்திற்கு டாக்டர் அம்பேத்காரை அறிமுகப் படுத்தி வைத்தார். ஜாதிகள் இன்னமும் நீங்கவில்லை. தொலைக் காட்சி வரும் என்று பெரியார் சொன்னதை அன்றே 'இந்து'ப் பத்திரிகை செய்தி வெளியிட்டது. நல்ல காரியங்கள் யார் செய்தாலும் பாராட்டுவார் பெரியார்.

''சேலம் மக்கள் இந்தப் பொருட்காட்சியைப் பெரும் அளவில்-மற்ற நகர மக்கள் கண்டு களிக்காத அளவிற்கு பத்து இலட்சம் பேர் கண்டு களித்துள்ளனர். சேலம் மக்களைப் பெரிதும் பாராட்டுகின்றேன். சுற்றுலாத் துறை அரங்கம் சிறப்பான முறையில் அமைந்துள்ளது. நான் கண்ட காட்சிகள் இன்னமும் என்மனதில் அகலவில்லை.''

சிறுசேமிப்புப் பரிசுகள் வழங்கியும், விழாவிற்குத் தலைமை வகித்தும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ஆர்.சவுந்தரராசன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ''முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் பொருட்காட்சிகளை அரசு ஏற்று நடத்துகிறது. சிலர் இதை நடத்தவிடாமல் தடுத்தார்கள். அது முறியடிக்கப்பட்டு இன்று அரசு சார்பில் பொருட்காட்சி நடத்தப்பட்டு அதன் வருமானம் மக்களது திட்டங்களுக்கும், சேலம் நகரத்திற்கும் செலவிடப் படுகிறது.''

டார்பிடோ ஏ.பி. சனார்த்தனம் அவர்கள் பேசுகையில்,

பெரியாரின் கைத்தடியாக நான் செயல்பட்டு வருகிறேன். எதிர் நீச்சல் போட்ட தலைவர் பெரியார் என்று குறிப்பிடடார்.

திருவாரூா திரு கே.தங்கராசு அவர்கள், தந்தை பெரியார் பற்றிக் கருத்துரைகள் வழங்கிப் பேசுகையில், பெண் அடிமையாக இருக்கக்கூடாது. தன்னுடைய கருத்துக்களை யார் ஏற்றுக் கொண்டார்களோ அவர்களை வரவேற்றார் பெரியார். வண்ணப்படங்களும், வரலாறும் பெரியார் பற்றி விரைவில் வெளியிடப் படும் என்றார்

பொருட்காட்சியில் சிறப்புப் பரிசு பெற்ற அரங்குகளுக்குப் பரிசுகளை வழங்கி விழா நிறைவுப் பேருரையாற்றி மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:''சேலம் நகரத்தில் ஏழாவது ஆண்டாக சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கும் இந்தப் பொருட்காட்சியை 10 இலட்சம் பேருக்கு மேல் கண்டுகளித்திருக்கிறார்கள். 56 ஆயிரம் குழந்தைகளும் கண்டு களித்திருக்கிறார்கள்.

''இதில் அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாய் ரூ.12 இலட்சத்து 77 ஆயிரம் ஆகும். செலவு ரூ. 7 இலட்சத்து 62 ஆயிரம் ஆகும். ஆக, சேலம் பொருட்காட்சியில் மூலம் அரசுக்குக் கிடைத்த மொத்த லாபம் 5 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் ஆகும்.

''இதுவரை சேலத்தில் நடத்திய பொருட்காட்சியில் இருந்து லாபமாக ரூ. 72 இலட்சத்து 81 ஆயிரம் கிடைத்துள்ளது. அதில் ரூ. 22 இலட்சம், அரசு, அரங்குகள் அமைக்கச் செலவழித்திருக்கிறது. மீதமுள்ள ரூ. 50 இலட்சத்தில் ரூ. 25 இலட்சத்தைச் சேலம் நகராட்சிக்கு வழங்கி இருக்கிறது. நகரசபை எந்தவித முதலீடும் இல்லாமல் இதைப் பெற்றிருக்கிறது.

''பொருட்காட்சி நிறைவு விழாவோடு, பெரியார் பிறந்த நாள் விழாவும் இணைத்துக்கொண்டாடுகிறோம். காரணம் இது மாதிரி நிகழ்ச்சிகள் வெறும் பொழுபோககு நிகழ்ச்சியாக அமைந்துவிடக் கூடாது. பொது மக்கள் சில கருத்துக்களைப் பெற்றுச் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சேர்த்து நடத்துகிறோம். மதுரையிலும், கோவையிலும் அண்ணா, பாரதிதாசன் விழாக்கள் சேர்த்து நடத்தப்பட்டன

''பெரியாரின் இதயத்தில் இடம் பெற்ற ஊர்கள் சிலஉண்டு. அவைகளில் திருச்சி ஒன்றாகும். தலைநகராகத் திருச்சி அமைந்தால் அது பெரியாருக்குச் செய்யும் நல்ல காரியமாக இருக்கும். என மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் கருதுகிறார்.

''விடுதலை வீரர் ஒருவருக்காக ஆந்திராவில் ஒரு மாவட்டம் ஏற்படுத்திப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பெரியார் பெயரை ஒரு மாவட்டத்துக்கே வைத்திருக்கிறார். பெரியார் திட்டங்களுக்கு அண்ணா வடிவம் கொடுத்தார் அதைப் புரட்சித்தலைவர் செயல் படுத்தி வருகிறார்''

விழா இறுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. நன்றி கூறினார்.

அரசுக் கலைஞர்கள் செல்வன் ஆர்.குமரேஷ், செல்வன் ஆர். கணேஷ் ஆகியோரின் வயலின் இசைக்கச்சேரி நடைபெற்றது.

—அ. மருது


அண்ணாவின் கனவுகள் நனவாகும்
செயல் வடிவக் காட்சிகளுக்கு
தமிழக அரசு ஒரு சாட்சி...!

கோடித் தமிழர் கூடி மகிழ்ந்திடும்
சிங்கார மாமதுரையின் சிறப்புக்கு
எங்கள் நிறுவனமும் ஒரு சாட்சி...!





அம்சவல்லி உணவகம்,
40-41, கீழ வெளி வீதி, மதுரை.
போன்: 24117.
—ஜீவா & கோ—
சேவையும், சுவையும் உவகை தரும்




# வளர்ச்சியை நோக்கி 'ஆவின்'

தமிழ் நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான விலையில் கொள்முதல் செய்யவும் நகரத்தில் இருக்கும் பொது மக்களுக்கு நியாயமான விலையில் தரமான பாலை கொடுக்கவும் பால் பெருக்குத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,சென்னை மாநகர மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 1982- இல் 3.2 இலட்சம் லிட்டரும், 1983-ல் 3.63 இலட்சம் லிட்டரும், மற்றும் 1984-ல் (ஆகஸ்டு வரை) 4.11 இலட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்தது.

இவ்வாறு வழங்கப்படும் பால் 496 சாவடிகள், 26 தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் மற்றும் 12 ஃபைபர் கண்ணாடித் தொட்டிகள் மூலமாக சென்னை நகரில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சுமாராக 20,000 லிட்டர்கள் பாலை 26 தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் மற்றும் 12 ஃபைபர் தொட்டிகள் மூலமாக வழங்கப்படுகிறது.

தினமும் ஏறத்தாழ 5 இலட்ச விவசாய உறுப்பினர்களிடமிருந்து 3 ஆயிரத்து 539 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பால் கொள்முதல் செய்யப் படுகிறது.

தற்போது வழங்கப்படும் பாலின் அளவினை நாளொன்றுக்கு 6.8 இலட்சம் லிட்டர்களாக திட்ட காலத்திற்குள்(மார்ச் 1988)உயர்த்த திட்டமிடப்பட்டு உள்ளது. மேலும் 7 தானியங்கி பால் வழங்கு நிலையங்களை மார்ச் 1985-க்குள் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் திட்ட காலத்தின் முடிவிற்குள் தானியங்கி பால் வழங்கு நிலையத்தை 100 ஆகவும் ஃபைபர் கண்ணாடித் தொட்டிகளை 50 ஆகவும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் சென்னையில் பால் பதப்படுத்தும் மற்றும் பால் சமநிலைப்படுத்தும் இயந்திரங்களின் கொள்திறன் அம்பத்தூரில் 2 இலட்சம் லிட்டர்களிலிருந்து 4 இலட்சம் லிட்டர்களாகவும், மாதவரத்தில் 1.25 இலட்சம் லிட்டர்களிலிருந்து 1.75 இலட்சம் லிட்டர்களாகவும் உயர்த்தியும் திட்ட காலத்திற்குள் உயர்த்தப்படவிருக்கும் பால் விநியோகத்தின் பதப்படுத்தும் செயல் திறன் தற்போதுள்ள பால் பதப்படுத்தும் ஆலைகளின் கொள்திறன் போதாதால் ரூ. 5.6 கோடி செலவில் மூன்றாவது பால் பண்ணை ஒன்றினை நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர்கள் கொள்திறன உள்ள பால் பதப்படுத்தும் மற்றும் சமநிலைப்படுத்தும் ஆலை ஒன்றினை தென் சென்னையில் மகாபலிபுரம் சாலையில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையைத் தவிர தமிழ் நாட்டில் தற்போது நாளொன்றுக்கு ரூ. 2.4 இலட்சம் லிட்டர்கள் பால் வழங்கப்படுகிறது.

இதைத் தவிர பிரிவு 'அ' (ஜனத்தொகை இலட்சத்திற்கு மேல்) 'ஆ' (50,000—1,00,000 இடையேயுள்ள) நகரங்களை இரண்டாவது பால் பெருக்கு திட்டத்தின் கீழ் கொண்டு வர திட்டம் திட்டப்பட்டு, இப்போது பிரிவு 'அ' கீழுள்ள 20 நகரங்களில் வால்பாறையைத் தவிர மற்ற நகரங்களில் பால் விநியோகம் செய்யப்படுகிறது. வால்பாறையில் இந்த ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் பால்வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் பிரிவு 'அ'வ் கீழுள்ள 37 நகரங்களில் இது வரை 20 நகரங்களில் பால் வழங்கப்படுகிறது. மற்ற 17 நகரங்களில் வரும் மார்ச் திங்கள் 1985-ஆம் ஆண்டுக்குள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த இரு பிரிவுகளைத் தவிரமற்றும் 18 தொழிற்சாலை நகரங்கள் மற்றும் சுற்றுலா மைய நகரங்களில் பால் வழங்கப் பட்டு வருகிறது.

ஒன்றியங்கள் செய்யும் பால் கொள்முதலை பதப்படுத்த ரூ.9.62 கோடி செலவில் நாளொன்றுக்கு திருநெல்வேலியில்



50,000 லிட்டர், காரைக்குடியில் 50,000 லிட்டர், கோயம்புத்தூரில் 1,00,000 லிட்டர் மற்றும் உதகமண்டலத்தில் 50,000 லிட்டர் உடன் 20,000 லிட்டர் பாலாடைக்கட்டி உற்பத்தி செய்யும் புதிய ஆலைகள் அமைக்கப்படவிருக்கிறது.



ஊட்டியில் 50 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தித்திறன் கொண்ட பால் பண்ணையில் 25,000 லிட்டர் பாலாடைக் கட்டி தயாரிக்கும் தொழிற் பிரிவு அமைக்கப்படும்.



பசும்பாலைப் பயன்படுத்திப் பாலாடை இங்குதான் தயாரிக்கப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் திருநெல்வேலி பால் பதப்படுத்தும் நிலையத்தை மே 1985, காரைக்குடி பால் பதப்படுத்தும் நிலையத்தை டிசம்பர் 1985, கோயம்புத்தூர் பால் பதப்படுத்தும் ஆலைகளை அக்டோபர் 1986 மற்றும் உதகமண்டலம் பால் பதப்படுத்தும் ஆலையை மார்ச் 1985க்குள் முடிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனைத்தவிர தற்போது பால் குளிரூட்டும் கொள்முதல் அளவினை உயர்த்த திட்டமிடப்பட்டு புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் ரூ. 2.18 கோடி செலவில் மொத்தம் நாளொன்றுக்கு 1.6 இலட்சம் கொள்திறன் உள்ள பால் குளிரூட்டும் ஆலையை திருவள்ளூர்-50,000 லிட்டர், அனகாபுத்தூர்-30,000 லிட்டர், அரக்கோணம்-30,000 லிட்டர்,பட்டுக்கோட்டை-10,000லிட்டர் புதுக்கோட்டை-10,000 லிட்டர், கமுதி, 10,000 லிட்டர், மற்றும் வள்ளியூர்-20,000 லிட்டர் ஆகிய இடங்களில் அமைக்க முடிவு எடுக்கப்பட்டு தற்போது அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கீழே கண்ட இடங்களில் தானியங்கி இயந்திர மூலம் டிசம்பர் திங்களுக்குள் பால் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1. அண்ணா நகர், டி. ஏ.கிருஷ்ணா நகர் அருகில்.
2. மேற்கு அண்ணா நகர் பஸ் டிப்போ பின்புறம் பாடிஅருகில்.
3. அண்ணா நகர், நாலாவது அவின்யு சவுந்தர்ய காலனி அருகில்.
4. ராமசந்திரா தெரு லஸ் நாகேஸ் வரராவ் பூங்கா அருகில்.
5. தோட்டூர்புரம் விட்டு வசதி வாரிய குடியிருப்பு.

சென்னை நகரத்தைப் பொறுத்த வரை 'ஆவின்' நிறுவனம் நாள் ஒன்றுக்கு 4 இலட்சத்து 11 ஆயிரம் லிட்டர் பால் விநியோகம் செய்து வருகிறது.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ, கிருஷ்ணசாமி அவர்களும் 'ஆவின்' நிர்வாக இயக்குநர் திரு வி. சங்கரசுப்பையன் இ.ஆ.ப. அவர்களும், பத்திரிகையாளர்கட்கு 22-9 84ல் அளித்த பேட்டி.





# வத்தலகுண்டில் 'சிவா' நூற்றாண்டு விழா




தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் பிறந்த ஊரான மதுரை மாவட்டம் வத்தலகுண்டில் அவரது நூற்றாண்டு விழாவையொட்டி 4-10-1984 அன்று அஞ்சல் தந்தித் துறையின் சார்பில் சிவா அவர்களின் உருவம் பொறித்த சிறப்பு அஞ்சல் உறையையும், சிறப்பு முத்திரையையும் மதுரை அஞ்சலகத்துறை இயக்குநர் திரு எஸ். செயராமன் வெளியிட்டார். காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு குமரி அனந்தன், எம்.எல்.ஏ. நிலக்கோட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள், சிவா அவர்களின் பேரன் மதுரை சுப்பிரமணிய சிவா ஆகியோர் அதனைப்பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

விழாவின்போது தமிழக அரசின் சார்பில் சுப்பிரமணிய சிவா அவர்களின் பெரிய திருவுருவப்படம் திறந்து வைக்கப் பட்டது.

விழாவில் வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலர் திரு சேவுகன், வத்தலகுண்டு அஞ்சலக மேலாளர் திரு வி. பி. சுப்பையா, நிலக்கோட்டை தாசில்தார் திரு. சங்கரநாராயணன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு எம். அண்ணாமலை மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**அ. மாலா**













# பாப்பாரப் பட்டியில் 'சிவா'

**ஆர். பரதன்**

தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் 4-10-1984 அன்று தேசபந்து ஆஸ்ரமத்திலிருந்து திரு ஆர். சுப்பாராவ் அவர்கள் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் சமாதியில் மலர்வளையம் வைத்து வணங்கினார்கள். ஊர்வலத்தில் தேசிய மாணவர்படை, சாரணர் படையினர், மாணவ மாணவிகள், அனைத்துக் கட்சியினர், பெண்கள் உள்பட சுமார் 3,000க்கும் மேற்பட்டோர் சலந்து கொண்டனர்.

அத்துடன் அன்று தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நூற்றாண்டு விழா பாப்பாரப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வி. மணிவண்ணன், இ.ஆ.ப., தலைமையில் கொண்டாடப்பட்டது. அஞ்சல் தந்தி துறையினரால் உருவாக்கப்பட்ட சிறப்பு அஞ்சல் உறையை, தருமபுரி மாவட்ட அஞ்சல் கண்காணிப்பாளர் திரு சி. செல்வராஜ் வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவரும், தியாகி சுப்பிரமணிய சிவாவின் சகோதரர் மகன் திரு எம். வி. சபாபதி சர்மாவும் பெற்றுக்கொண்டனர். பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் திரு பி. தீத்தாராமன், காவேரிப் பட்டணம் சட்டமன்ற உறுப்பினர் திரு கோ. சமரசம், மாவட்டப் பால்வள ஒன்றியத்தலைவர் திரு எம். சி. சேகர் மற்றும் மத்திய, மாநில அரசு அலுவலர்கள், திரு சாதுசாரங்கபாணி, தியாகி சுப்பாராவ் ஆகியோர் தியாகிசுப்பிரமணிய சிவாஅவர்களைப் பற்றிச்சிறப்புரை ஆற்றினர்.

## 4-வது அட்டை சொல்லும் செய்தி

26.9.1984 அன்று சேலம் பொருட்காட்சியில் நடைபெற்ற நிறைவு விழாவில் சிறந்த அரங்குகள் அமைத்ததற்கான பரிசுகளை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வழங்குகிறார். அதே விழாவில் தந்தை பெரியார் பிறந்த நாளையொட்டி பெரியாரின் திருவுருவப்படத்தை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் திறந்து வைத்தார். படத்தில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்திரராசன் அவர்கள், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி ஆகியோர் உள்ளனர்.

## முதல் அட்டைச் செய்தி

தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயிலில் நடைபெற்ற (16.9.84) சோழப் பேரரசன் இராசராச சோழன் ஆயிரமாவது முடிசூட்டு விழா நாளன்று, இராசராச சோழன் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்அவர்கள் மாலை அணிவிக்கும் காட்சி.




# ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் கண்மாய் சீரமைப்புத் திட்டம்

85350

ஜோ.டி. மோகன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை.

புதுக்கோட்டை மாவட்டத்தின் அம்புலியாற்றின் குறுக்கே செந்தங்குடி அணை அடிக்கல் நாட்டு தல், அம்புலியாற்றின் குறுக்கே பள்ளத்து விடுதி அணை புதுப்பித்தல், வில்லுனியாற்றின் குறுக்கே பள்ளத்து விடுதி அணை தலை மதகு, கால்வாய் அமைத்தல் ஆகியவற்றிற்கான அடிக்கல் நாட்டுதல் விழா கொத்தமங்கலத்தை அடுத்த நகரம் கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. கற்பூரசுந்தர பாண்டியன், இ.ஆ.ப. தலைமையில் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ஒய்.எஸ். எம். யூசுப் அவர்கள் 4-9-1984 அன்று அடிக்கல் நாட்டினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டதாவது:

புதுக்கோட்டை மாவட்டம் தொடர்ந்து வறட்சி அல்லது வெள்ளத்தினால் பாதிப்புக்கு இலக்காகும் பகுதியாகும். இதனை தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு இம்மாவட்டத்தில் பாசன வசதிகளை விவசாயிக்குச் செய்து கொடுக்கும் வகையில் சிறு பாசனத் திட்டங்களைத் தீட்டி அமல்படுத்தி வருகிறது.

அம்புலியாற்றின் குறுக்கே செந்தங்குடி புதிய அணைத் திட்டம் ரூ. 11.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள 353 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். பள்ளத்து விடுதி அணை ரூ. 5.5 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படவுள்ளது. வில்லுனியாற்றின் குறுக்கே பனங்குளம் அணைக்கட்டில் தலை மதகு, கால்வாய் அமைத்தல் வேலைகள் ரூ. 4.2 இலட்சம் செலவில் செய்யப்படும். இதனால் 106 ஏக்கர் பாசன வசதி பெறும் என்றார்.

புதிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் ஒய்.எஸ்.எம். யூசுப் அவர்கள் கூறியதாவது :

"பணிகள் செய்யப்பட்டதையும், செயல்படுத்தப் போவதையும் இதுபோன்ற விழா மூலம் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். இன்று அடிக்கல் நாட்டப்படுகின்ற இத்திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ. 20.7 இலட்சம் ரூபாயாகும்.

"தமிழ் நாட்டிலுள்ள புதுக்கோட்டை, இராமநாதபுரம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள கண்மாய்களைச் சீர் அமைக்கும் திட்டம் ரூ.28 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

இதன்மூலம் அறந்தாங்கி பகுதியிலுள்ள கண்மாய்கள் ரூ. 38 இலட்சம் செலவிலும், குளத்தூர் பகுதியிலுள்ள கண்மாய்கள் ரூ.36 இலட்சம் செலவிலும் ஆலங்குடி பகுதியிலுள்ள கண்மாய்கள் ரூ. 24.3 இலட்சம் செலவிலும் சீரமைக்கப்படும் என்றார்.

விழாவில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் 12 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாவும், 10 பேர்களுக்கு ஆடுகள் வாங்கக் கடனாக ரூ. 50 ஆயிரமும் வழங்கினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



